# அகஸ்திய மாமுனிவர் அருளிய
# இலக்க சௌமிய சாகரம்

தேர்ந்தெடுத்த பாடல்களும் தெளிபொருள் விளக்கவுரையும்


எழுதியவர் :

ஹக்கீம் பா.மு. அப்துல்லா சாய்பு அவர்கள்



பதிப்பாசிரியர்

எஸ். பி. ராமச்சந்திரன்

லோட்டஸ் பப்ளிஷிங்ஹௌவுஸ்

7, N.G.O. காலனி வடபழனி,

சென்னை-26

தொலைபேசி எண் : 420249

தாமரை வெளியீடு எண் : 141

முதல் பதிப்பு 1907

மறு பதிப்பு ஏப்ரல், 1995

உரிமை பதிவு செய்யப் பட்டது (C)

## நூலைப்பற்றி


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | இலக்க சௌமிய சாகரம் தேர்ந்தெடுத்த பாடல்களும் தெளிபொருள் விளக்க வுரையும். |
| உரையாசிரியர் | : | ஹக்கீம், பா.மு. அப்துல்லா சாயபு அவர்கள் |
| பதிப்பாசிரியர் | : | எஸ். பி. ராமச்சந்திரன் |
| வெளியிட்டோர் | : | லோட்டஸ் பப்ளிஷிங் ஹௌவுஸ் 7, என்.ஜி.ஓ. காலனி, வடபழனி, சென்னை-26. |
| பதிப்பு ஆண்டு | : | ஏப்ரல் 1995 |
| உரிமை | : | பதிப்பகத்திற்கு (மறுபதிப்பு மட்டும்) |
| நூல் வடிவம் | : | 18செ.மீ. X 12.5 செ.மீ. |
| அச்சுத்தாள் | : | 10.7 வெள்ளைத்தாள் |
| அட்டை | : | 13.8 சேஷசாயி |
| எழுத்துக்கள் | : | 10 புள்ளி |
| மொத்த பக்கங்கள் | : | 678 |
| பிரதிகள் | : | 1200 |
| பைண்டிங் | : | செக்ஷன் |
| **விலை** | : | **ரூ. 100.00** |

அச்சிட்டோர் : எஸ். ஆர். பிரிண்டர்ஸ், சென்னை-26


192431

மு. பரமசிவம்
இ.அ.ப.
சிறப்பு ஆணையர்
மற்றும்
ஆவணக் காப்பக
வரலாற்று
ஆராய்ச்சி ஆணை
யர்

தமிழ் நாடு
ஆவணக்காப்பகம்
எழும்பூர்
சென்னை—8.

## அனுமதிக்கடிதம்

பொருள் : தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்—அகஸ்திய மாமுனிவர் அருளிய "இலக்க சௌமிய சாகரம்" மறுபதிப்பு செய்தல் அனுமதி வழங்கப்படுகிறது.

பழைய அரிய தமிழ் நூல்களைக் காப்பாற்றி மக்கள் படிக்க வகை செய்யும் வண்ணம் அவைகளை மறுபதிப்புச் செய்யும் திட்டம் ஒன்றினைத் தமிழக அரசு கல்வித் துறை அரசாணை (நிலை) எண். 372 (கல்வி) நாள் 20.4.'92-ல் வெளியிடப்பட்டுள்ளது. அத்திட்டத்தின் படி ஹக்கீம் பா.மு. அப்துல்லா சாயபு அவர்கள் உரையெழுதிய அகஸ்திய மாமுனிவர் அருளிய 'இலக்க சௌமிய சாகரம்'' என்னும் நூலை மறுபதிப்பு செய்வதற்காகத் தாங்கள் செய்து கொண்ட மனு ஏற்றுக் கொள்ளப்பட்டு அனுமதி வழங்கப்படுகிறது.

மேலும் மறுபதிப்பு செய்யப்படும் இந்நூலில் தங்களுடைய வேண்டுகோளுக்கு இணங்கவும், அரசின் தமிழ் எழுத்துக் கொள்கை, பொது மக்கள் படிக்கவும், புரிந்து கொள்ளவும் வசதி ஏற்படுத்துதல் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு கீழ்க்காணும் மாற்றங்களைச் செய்து கொள்ள தங்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

1. நான்கு சிறு நூல்களையும் ஒருங்கிணைத்து ஒரே நூலாக வெளியிட.

2. நான்கு பாகங்களுக்கும் பொருளடக்கம்முதலில் இணைக்க

3. பழைய தமிழ் எழுத்துக்களுக்கு பதிலாகச் சீர்திருத்த எழுத்துக்களைப் பயன்படுத்த.

4. பழைய பலம், கழஞ்சி. விராகனிடை எடைகளுக்குப் பதிலாக புழக்கத்தில் இருக்கும் மெட்ரிக் எடைகளை உபயோகிக்க.

5, தமிழ் எண்களுக்குப் பதிலாக இந்தோ—அரபி எண்களை உபயோகிக்க.

மேற்குறிப்பிட்டுள்ள மாறுதல்களைத் தவிர, மூல நூலினின்றும் வேறு எவ்விதமான மாற்றமும் செய்ய அனுமதி இல்லை என்பதும் பதிப்பாளருக்குத் தெரிவிக்கப்படுகிறது.

தங்கள் நம்பிக்கையுள்ள,
(ஒப்) பரமசிவம்
சிறப்பு ஆணையர் (ம)
ஆணையர்

பெறுநர்
லோட்டஸ் பப்ளிஷிங்ஹஸவுஸ்,
7, என்.ஜி.ஓ. காலனி,
வடபழனி—600 026,

# மறுபதிப்பின் முன்னுரை

அகஸ்திய மாமுனிவர் பாடியுள்ள நூல்கள் அளவிலடங்கா. அவர் பாடல்களிலே செஞ்சொற்கவி வண்ணம் சிறக்கப் பாடியவையும் உண்டு. பாமர மொழியில் ''பாரப்பா புலஸ்தியனே மச்சகேந்திரா'' என்று ஆரம்பிக்கும் பாடல்களும் உண்டு.

மொழி, நடை, கவிதையமைப்பு முதலியவற்றைக் கொண்டு பார்ப்பவர்கள் பாடியவர் ஒரு அகஸ்தியர் அல்ல அறுபதுக்கு மேற்பட்ட அகஸ்தியர்கள் இருந்திருக்க வேண்டும் என்று கூறுவதோடு, அதற்கான வரலாற்றுச் சான்றுகளையும் காட்டுவார்கள்.

ஆனால் இந்தப் பாடல்களிலே நூலிழைபோல் நடுவில் ஓடிக் கோண்டிருக்கும் கருத்தைக் கொண்டு ஆராய்பவர்கள் ''பகவான் பத்து அவதாரம் எடுத்தாலும் ஒருவரே'' என்று சொல்வதைப் போல் எவ்விதத்திலும் மாறுபடாத ஒரு ஒருமைப்பாடு நிலவுவதைக் காண்பார்கள்.

''இலக்க சௌமிய சாகரம்'' என்ற இந்த நூலில் முற்றிலும் ஒரு புதிய அகஸ்தியரைக் காண்கிறோம். ஒரு பாடலில் கூட அவர் ஒரு பொருளின் பெயரை நேரடியாகக் கூறவில்லை. துருசு என்ற பொருளின் பெயரைச் சொல்ல வேண்டுமானால் செவி என்னும் பெயருக்கும் பிரதி பதமாயுள்ள பெயரின் கடைசி எழுத்தையும் ரகரவரிசையில் ஐந்தாமெழுத்தையும் இந்தப் பாட்டின் முதலடியில் எட்டாவது எழுத்தையும் சேர்த்தால் எந்தப் பெயர் அமையுமோ அந்தப் பெயருள்ள சரக்கில் ஒரு பலம் எடுத்துக் கொள்ளலாம் என்பது போல் கூறுகிறார்.

செவி — காது கடைசி எழுத்து 'து'
ரகர வரிசை ர, ரா, ரி, ரீ, ரு —ஐந்தாவது எழுத்து ரு
பாடலில் எட்டாவது எழுத்து —சு

அவ்வளவு அற்புதமான மருந்துகளையும், அவற்றை செய்யும் முறைகளையும் அகஸ்தியர் பெருமான் இந்த நூலில் கூறியிருக்கிறார். இந்த நூல் கிடைக்காத காரணத்தாலும், கிடைத்தாலும பொருளைச் சரியாக உணர்ந்து கொள்ள முடியாத காரணத்தாலும்தான்சித்த வைத்தியத்தின் தரம் குறைந்து விட்டது என்றே கூறலாம்.

இந்த நூலின் அருமை பெருமைகளை உணர்ந்து அது எல்லோருக்கும் பயன்பட வேண்டும் என்ற எண்ணத்தாலேயே மேதை ஹக்கீம் பா. மு. அப்துல்லா சாயபு அவர்கள் இதற்கு விரிவான விளக்க உரை எழுதியிருக்க வேண்டும். இருட்டில் நடப்பவனுக்கு ஆற்றல் மிக்க ஒளி விளக்கைக் கொடுத்தது போல் அப்துல்லா அவர்கள் தமது உரையின் மூலம் உதவி செய்திருக்கிறார்.

உரையோடு ஐந்து பாகங்களாக அப்துல்லா அவர்கள் இந்த நூலை வெளியிட்டிருக்கிறார். அவற்றில் நான்கு பாகங்களே ஆவணக் காப்பகத்தின் மூலம் நமக்குக் கிடைத்தன. இந்த நான்கு பாகங்களும் சேர்ந்து ஒரே நூலாக வெளிவருவது மறைந்து கொண்டுள்ள ஐந்தாம் பாகத்தையும் வெளிக் கொண்டு வந்துவிடும் என்ற நம்பிக்கையில் நூலை வெளியிடுகிறோம். உரையுடன் கூடிய ஐந்தாம் பாகம் யாரிடமாவது இருந்தால் அவர்கள் தமிழ்நாட்டுக்கும் தமிழ் மக்களுக்கும் செய்யும் பேருபகாரமாகக் கருதி அதைக் கொடுத்து உதவ வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

சித்த மருத்துவ உலகத்திற்கு கோடிச் செம்பொன் கொடுத்து உதவியதைப் போன்று பேருதவி செய்த



தாகும் இந்த நூல் வெளி வருவது. இதை சித்த வைத்தியர்கள் அனைவரும் பயன்படுத்திக் கொள்வார்கள் என்று நம்புகிறோம். நுட்பமான பல ஆராய்ச்சிகளைச் செய்வதற்குத் தூண்டுகோலாக விளங்கும் இந்த நூலை சித்த மருத்துவக் கல்லூரிகளின் பாடத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளவேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறோம்.

இந்த நூலைப் பாதுகாத்து வைத்திருந்து மறு பதிப்புச் செய்ய அனுமதி கொடுத்த ஆவணப் பாது காப்பகத்தின் அரும்பணிகளை நினைக்கும் போது பெருமிதம் அடைகிறோம். மறுபதிப்புச் செய்ய அனுமதி தந்த சிறப்பு ஆணையர் திரு. மு.பரமசிவம் ஐ.ஏ.எஸ். அவர்களைப் பாராட்டுவதற்குச் சொல்லே கிடையாது. அன்னாருக்கு நன்றி கலந்த வணக்கங்களைத் தெரிவித்துக் கொண்டு இந்த நூலைத் தமிழ்மக்களின் பாதகமலங்களில் சமர்ப்பிக்கிறோம்.

பதிப்பாசிரியர்,

**எஸ். பி. ராமச்சந்திரன்**

## முதல் காண்டம்

## பொருளடக்கம்


| | பக்க எண் |
|---|---|
| காப்பு | 31 |
| குருமுலி | 31 |
| முதல் சரக்கின் பெயர் | 35 |
| 2—வது சரக்கின் பெயர் | 38 |
| 3—வது சரக்கின் பெயர் | 40 |
| இந்திர கோபம் | 41 |
| 4—வது சரக்கின் பெயரும் உண்டாகும் விதமும் | 45 |
| 5—வது சரக்கின் பிறப்பிடம் | 48 |
| 6—வது சரக்கு உண்டாகும் இடம் | 51 |
| 7—வது சரக்கின் லட்சணம் | 54 |
| 8—வது சரக்கு உண்டாகும் இடம் | 57 |
| சரக்குகளின் பஞ்ச பூதக்குறி | 61 |
| சரக்குகளின் பஞ்ச பூத விபரம் | 64 |
| அந்த செந்தூரம் | 65 |
| சரக்குகளின் அளவு | 69 |
| பூ நீரின் அளவு | 69 |
| அயத்தொட்டி | 70 |
| கருவளையல் | 73 |
| எவச்சாரம் | 74 |
| லிங்கம் | 75 |
| எல்லா சரக்குகளின் விபரம் | 76 |
| அரைப்பு விபரம் | 77 |
| கருப்பு கிலுகிலுப்பை | 90 |
| மருந்தின் வேதைமுறை | 107 |
| மருத்துவ பலன் | 108 |
| அநுபானங்கள் | 109 |
| புறநடை | 116 |


---



## இரண்டாம் காண்டம்

## பொருளடக்கம்


| | பக்க எண் |
|---|---|
| முகவுரை | 125 |
| காப்பு | 127 |
| தாளகச் சுன்னம் | 129 |
| தாளகச் சுத்தி | 131 |
| தாளக கட்டியை செந்தூரம் செய்யும் முறை | 134 |
| தாளக சுன்னத்தின் வேதை | 140 |
| கெந்தக தைலம் | 142 |
| கெந்தக தைலத்தின் வேதை | 147 |
| நாகக்கட்டு | 150 |
| வீர மெழுகு | 155 |
| வீரக் கட்டியை ஆடுதின்னா பாளைச்சாற்றில் ஊரவைத்தல் | 159 |
| கறிதகரை சாற்றில் அரைத்தல் | 163 |
| கோடச்சாலை சாற்றில் தோய்த்தல் | 166 |
| கற்பூரவல்லி இலைச் சாற்றில் அரைத்தல் | 167 |
| கெந்தக தைலம் விட்ட மருந்து செய்தல் | 169 |
| மருந்தின் பெருமை | 170 |
| வீரமெழுகின் வேதை | 172 |
| நகத்தின் அழுக்கால் தங்கம் செய்தல் | 175 |
| இலை சாற்றால் தங்கம் ஆகுதல் | 176 |
| துருசுச் சுன்னம் | 178 |
| செம்பரத்தம் பூ | 180 |
| கெந்தக தைலம், வீர மெழுகு சேர்த்தல் | 183 |

| | |
|---|---|
| கிளஞ்சலினால் மூசை செய்தல் | 185 |
| துருசுச் சுன்னத்தினால் தீரும் நோய்கள் | 190 |
| செத்தவனும் பிழைப்பான் | 192 |
| வலிப்பு, பிடிப்பு, வாதம் தீரும் | 197 |
| இரச பற்பம் | 198 |
| திருகு கள்ளி சாற்றில் தோய்த்தல் | 204 |
| புறநடை | 207 |


## மூன்றாவது காண்டம்

## பொருளடக்கம்


| | பக்க எண் |
|---|---|
| முகவுரை | 218 |
| காப்பு | 220 |
| காந்தக் களங்க செந்தூரம் | 221 |
| ஜெய நீர் தயாரித்தல் | 223 |
| காந்தம் மணி மணியாக உருகி விழும் | 228 |
| காந்தக் களங்கை பொற்றலை கையந்தகரை சாற்றால் அரைத்தல் | 235 |
| செந்தூரம் சாப்பிட பத்தியம் | 238 |
| செந்தூரம் காயசித்தி பெறல் | 240 |
| சீந்தில் சர்க்கரை தயாரிக்கும் முறை | 241 |
| சீந்தில் சர்க்கரையுடன் செந்தூரம் உண்பதின் பலன் | 248 |
| இதற்கு பத்தியம் | 249 |
| செந்தூரத்தினால் கிடைக்கும் சிறந்த பலன் | 254 |
| அயக் களங்கு | 259 |





| | |
|---|---|
| வெடியுப்பு தன்மை | 260 |
| நவச்சாரம் அரப்பொடி சேர்த்தல் | 265 |
| நாளகம், வீரம் சேர்த்தல் | 267 |
| மருந்தின் வேதை | 268 |
| அயச் செம்பு | 271 |
| அயச் செம்பின் வேதை | 280 |
| அயச் செம்பு செந்தூரம் | 282 |


## நான்காவது காண்டம்

## பொருளடக்கம்


| | பக்க எண் |
|---|---|
| காப்பு | 290 |
| ரச பற்பத்தின் வேதை | 292 |
| ரச பற்பத்தின் மருந்து குணம் | 294 |
| நரை, திரை மாறும் | 294 |
| நவமணி காக்கை | 297 |
| பவளச் சொறி | 299 |
| கருந்தேவாங்கு | 303 |
| உடும்பு | 305 |
| வெள்ளெலி | 307 |
| கரடி | 309 |
| அன்றில் | 310 |
| அஸ்தி ஓடு | 312 |
| கீரி | 313 |
| வெள்ளைப் புனுகு | 315 |
| இந்திர கோபம் | 316 |

| | |
|---|---|
| கருடன் விழி | 317 |
| காண்டா மிருகம் | 319 |
| ராஜாளி | 321 |
| கூகை | 322 |
| புலி | 324 |
| கருங்குரங்கு | 326 |
| கஸ்தூரி | 327 |
| கோரோசனை | 329 |
| கல்மதம் | 330 |
| சூடன் | 334 |
| மேற்கூறிய சரக்குகளை திருநீற்று பச்ச இலை சாற்றில் அரைக்க வேண்டும் என்பது | 335 |
| கையந்தகரை சாற்றில் அரைப்பது | 336 |
| குப்பைமேனி சாற்றில் அரைப்பது | 337 |
| கொடிவேலி இலை சாற்றில் அரைப்பது | 339 |
| பேய் பீர்க்கன் சாற்றில் அரைப்பது | 340 |
| தொட்டால் சுருங்கி இலை சாற்றில் அரைப்பது | 342 |
| நன்னாரிஇலை சாற்றில் அரைப்பது | 343 |
| கருநாய் | 345 |
| கழுதை | 347 |
| பொற்றலை கையந்தகரைச் சாறு | 348 |
| செம்பருத்தி இலை சாற்றில் அரைப்பது | 349 |
| தூதுவளை சாற்றில் அரைப்பது | 350 |
| வேப்ப எண்ணெயில் அரைப்பது | 351 |
| சிற்றமணக்கு எண்ணெய்யில் அரைப்பது | 352 |
| கருங்கோழி எண்ணெய் | 353 |
| தேங்காய் எண்ணெய் | 354 |
| காரம் பசு நெய் | 355 |
| புதையல்களை பூதம் காப்பது | 356 |
| பூதங்களை விரட்ட பூஜை | 357 |
| அஞ்சனம் பார்க்கும் விதம் | 360 |
| புறநடை | 362 |




## ஐந்தாங் காண்டம்


| | |
|---|---|
| காப்பு | 377 |
| தாளகச் சுண்ண வேதை | 378 |
| இரசிதக் குரு | 385 |
| இந்திர கோபம் பங்கு | 387 |
| பரஷாணக் கட்டு | 396 |
| தாளகக் கட்டின் மெழுகு | 413 |
| வேங்கை ஜெயநீர் | 418 |
| வேறு தாளக வீரக்கட்டு | 425 |
| வெடியுப்புக் கட்டு | 433 |


## ஆறாவது காண்டம்


| | | |
|---|---|---|
| காப்பு | | 441 |
| இலிங்கக்கட்டு | | 442 |
| முப்புக் குரு | | 479 |
| இந்திர கோபம் நிறை | 1 | 480 |
| துருசு நிறை | 2 | 481 |
| பூநிறு நிறை | 11 | 485 |
| கடல் நுரை நிறை | 5 | 487 |
| எவட்சாரம் நிறை | 1 | 491 |
| வெள்ளி நிமிளை | 18 | 493 |
| இந்துப்பு நிறை | 2 | 493 |
| வெடியுப்பு | 3 | 495 |
| தாளகம் நிறை | 3 | 495 |
| கல்நார் நிறை | 1 | 496 |
| குருவண்டு நிறை | 1 | 497 |
| பொன்னம்பர் நிறை | 5 | 499 |
| புறநடை | | 519 |

## ஏழாவது காண்டம்


| | |
|---|---|
| காப்பு | 533 |
| மனோசிலைச் சுண்ணம் | 547 |
| மிருதார்சிங்கிச் சுண்ணம் | 554 |
| கல்நார் பஸ்பம் | 562 |
| ஐம்பத்தோரஷரம் | 568 |
| துருசுச் செயநீர் | 572 |
| நாகசெந்தூரம் | 579 |
| ஞானம் | 591 |
| வங்க செந்தூரம் | 591 |


## எட்டாவது காண்டம்


| | |
|---|---|
| காப்பு | 597 |
| இரச செந்தூரம் | 598 |
| கலி விருத்தம் | 609 |
| ஜால மை | 615 |
| திருப்புகழ் சந்த விருத்தம் | 616 |
| செந்தொடை | 617 |
| கொச்சகக் கலிப்பா | 619 |
| புலிக் கொழுப்பு | 626 |
| காடைக் கொழுப்பு | 627 |
| யானைவாற் கண்ணி | 629 |
| குங்குமம் | 629 |
| வில்வப்பிசின் கழஞ்சு | 629 |
| வெள்ளைச் சாம்பராணி | 630 |
| குக்கில் கழஞ்சி 1 | 631 |
| எண்சீர்கழிநெடிலடியாசிரிய விருத்தம் | 633 |


கடவுள் துணை

# இலக்க சௌமிய சாகரம்

தேர்ந்தெடுக்கப்பட்ட செய்யுட்களும்
தெளிபொருள் விளக்கவுரையும்

## முதற் காண்டம்

இஃது
யூநானி வைத்திய
தாருட்டியவிருத்திபோதினி முதலிய
வைத்திய சாஸ்திர கிரந்தகர்த்தாவாகிய

ஹக்கீம்

பா. முகம்மது அப்துல்லாசாஹிப்

அவர்களால்


முஸ்லிம் அபிமானி அச்சியந்திர சாலையில்
பதிப்பிக்கப்பட்டது

FIRST EDITION

1907



Register Copyrights



கைவிலை ரூ 1.00

| | | |
|---|---|---|
| துருசு நிறை | 3 | 638 |
| காந்தம் நிறை | 9 | 640 |
| பூநிறு நிறை | 2 | 640 |
| கும்பிடு கிளிஞ்சில் நிறை | 1 | 641 |
| கடல்நுரை அளவு | 2 | 642 |
| லிங்கம் நிறை | 12 | 643 |
| கெந்தி நிறை | 12 | 644 |
| பொன்னிமிளை நிறை | 1½ | 644 |
| பள்ளுச்சந்த விருத்தம் | | 660 |
| பொச்சகக் கலிப்பா | | 664 |
| புறநடை | | 668 |
| மனோசிலைச் சுண்ணம் | | 669 |
| மிருதார்சிங்கிச் சுண்ணம் | | 670 |
| துருசுச் செய நீர் | | 671 |
| வங்கசெந்தூரம் | | 672 |
| இரசச் செந்தூரம் | | 673 |
| ஜாலமை | | 675 |
| தனிமுறைச் செந்தூரம் | | 676 |

——O...—

கடவுள் துணை

காப்பு

வெண்பா

மலரும் பரிமளமும் வன்னியுஞ்சூ டும்போல்
உலகெங்க ணுங்கலந்த வொப்பில்—நலமார்
கருத்தனே மெய்மாற் கருதுசெய லியாவுந்
திருத்திபெறு மாறருளைச் செய்.

# முகவுரை

செந்தமிழ் நாட்டிற் சிறப்புற்றோங்கிய பண்டித சிகாமணிகாள்! இந்த இலக்க செளமிய சாகர மென்னும் ஒப்பில்லாத அரிய நூலினது பெருமை யிவ்வளவின தென எம்மாலெடுத்துச் செல்லுந் தரமன்று. இது முனி புங்கவருள் முதன்மை பெற்றவரும், தமிழை வளர்த்த தரும சீலரும், பொதிகை வாசியுமாகிய அகத்திய மகா முனிவரால் எப்பொருட்கு மிறைவனாகிய கடவுள் கட்டளைப் படியே இயற்றப்பட்டது. இதில் வாதம், வைத்தியம், மாந்திரீகம், ஞானம் முதலியவைகளை எட்டுணையுஞ் சந்தேகமின்றி எளிதி லுணருமாறு முறைப்படியே தகுதியாகப் பலவித ஹேதுக்களோடு பக்குவமாகப் பார்க்கப் பார்க்கப் பேரானந்தத்தை விளைவிக்கும் படியான பல சித்திரப் பாக்களாற் கூறப் பட்டிருக்கின்றன.

இதிலுள்ள ஒவ்வொரு செய்யுட்களும் மேலாகிய இலக்கண வமைதிகளோடும், சித்திரகவிக் கிரமமாயும் ஆழ்ந்த பொருள்களை யகத்துள்ளடக்கி வெளிக்கு விருத்தமாகவும், பிரித்தால் உன்னத முறைப் பொருத்த மாகவு மிருப்பதோடு வைத்தியத்திற் றேர்ச்சியடைந்த மகான்களுக்கு உதவுவதன்றி மற்றைய வித்வ சிரோமணிகட்குந் தமிழ் திறத்தாற் றக்கபடி பிரயோசனத்தைத் தரத்தக்கவைகளா யிருக்கின்றன.

மேலும் இது வைத்தியர்களைத் தவிர மற்றயை தமிழ் கற்கு மாணாக்கர்கட்கும் பாடங் கேட்க வேண்டிய இன்றியமையாத வோர் சிறந்த நூலாகும். இதைப் படிக்கப் படிக்க அளவற்ற ஆச்சரியத்தையும், ஆனந்தத்தையும், அறிவு விருத்தியையும், மனோற்சாகத்தையும், ஊக்கத்தையும் அதிகரிக்கச் செய்து கொண்டு வருமே தவிர சிறிதும் வெறுப்பிற் கிடந்தராது. தமிழ் வல்லமையை விரும்புகின்றவர்கள் இதிற் பல பாக்களைப் பாடஞ் செய்து கொள்வார்களேயானால் அவர்களுக்கு எவ்விடத்தும் வெற்றியையே கொடுக்குமென்பது திண்ணம்.

இது நிற்க, வைத்திய முதலிய மற்ற விஷயங்களைப் பற்றிச் சற்று ஆராய்வோமானால், வைத்தியம் மாந்திரீகம், வாதம், ஞான முதலியவைகளை விரும்பத்தக்கவர்களுக்கு இந்த நூல் ஒன்றே போதுமென விளங்குகின்றது. இந்த நூலை ஆதி தொடங்கி அந்தம்வரை பார்த்துத் தெரிந்தவர்களிடமும் கேட்டு இதிலடங்கியிருக்கின்ற விஷயங்களைச் சந்தேகமறத் தெளிந்து கொள்ளப்பட்டவர்களுக்கு எவ்விஷயத்தை முன்னிட்டும் எந்த நூலையும் பார்க்கவேண்டிய அவசியமே யிராது. இதிலுள்ள ஒரு முறையைச் செய்து முடித்துக்கொண்டால் அப்படி முடித்துக் கொண்டவர் இந்த முறையினாலேயே சிறந்த வைத்தியராவரென்பது திண்ணம்.

இது மற்ற சித்தர் நூற்களைப் போல எடுத்தவையெல்லா மெண்ணிலாச் சந்தேகமாயும், பார்ப்பவையெல்லாம் பரம ரகசியமாயும், ஓரிடத்தி லெடுத்த விஷயம் மற்றோரிடத்தில் முடிவு பெற்றதாயும், ஓர் நூலிற் சொல்லிய முறைக்கு வேறோர் நூலில் மர்மங் கண்டு பிடிக்க வேண்டியதாயு முள்ள பலவித மயக்கங்களுக்கு ஏதுவானதல்ல, இதின் பாக்களின் அருத்தங்களை மட்டும் உணர்ந்து கொண்டால் மற்ற எவ்விஷயங்களிலும் எத்தகைய சத்தேகங்களும் ஏற்படாது.

இதில் ஒரு சரக்கை யெடுத்துக் கொண்டால் அதன் பிறப்பிடம், ரூபம், இலக்ஷணம், குணம், பெயர் முதலிய



வைகளை அநேகவித ஹேதுக்களைக் கொண்டு அதைத் தெளிவு படுத்துகின்றார். இப்படியே ஒவ்வொரு விஷயங்களையும் பல விதத்தாலும் சந்தேகமின்றியே விளக்குகின்றார். இக்காரணத்தினால் இந்நூல் ஒரே முறைக்காக ஒரு காண்டமும் ஆகியிருக்கின்றது. இதிலுள்ள முறைகளை மட்டும் தெரிந்து கொண்டால் உலகத்தில் எவ்விஷயத்தையும் சாதிக்கலாமென்ற நம்பிக்கையிருப்பதினாலேயே அநேக முறைகளைச்சொல்லி மனதை அங்குமிங்கு மலையச் செய்யாமல் இதில் பத்துக் காண்டங்களிலும் சில முறைகளையே அடக்கி இருக்கின்றார்.

இதை நூறு பாட்டுக்களாலான பத்துக் காண்டங்களாலமைத்திருக்கின்றார். இது சில முறைகளுக்காக ஆயிரம் பாட்டுகளைக் கொண்ட பத்துக் காண்டமாக விரிந்தது. ஒவ்வொன்றையும் சந்தேகமற விளக்கற் பொருட்டே யென்பது யாவருக்குஞ் சொல்லாமலே விளங்கும்.

இதில் இரசவாத விஷயத்தை மற்ற நூற்களில் ஆகாத காரியத்தை ஆவதுபோற் காட்டி அதிலுஞ் சந்தேகத்தை மூட்டிப் பலருக்கும் பொருள் விரயத்தையும், மனச்சடைவையும், தேக சிரமத்தையுமுண்டாக்குவது போலல்லாது ஒவ்வொரு விஷயத்தையும் மெய்யாகவும், சந்தேகத்திற் கிடமின்றியும், அந்தந்த அளவின் கிரமப்படியும் வெகு நுட்பமாகச் சொல்லியிருக்கின்றார். இது விஷயத்தை இந்நூலைப் பார்த்தே யெளிதில் முடித்துக் கொள்ளலாம். அதிலும் ஒருவாறு சிலவற்றிற் சந்தேக மேற்படுமேயானால் அனுபவசாலிகளிடம் சற்று வினாவித் தெரிந்து கொண்டால் தங்கள் மனோ முயற்சியானது இடையூறின்றி இனிது முடியுமென்பது திண்ணம். இதில் லோகங்களைப் பேதிக்கச் செய்வதாகிய வாதத்தை இதிலுள்ள முறைப்படி செய்த மருந்துகளின் பரிக்ஷைக்காகவே சொல்லப்பட்டிருப்பதால் இதிற் சொல்லிய வாதம்

மெய்யாக நிறைவேறு மென்பது நிச்சயமாகப் புலப்படு கின்றது. இதை இந்நூலாசிரியர் இந்நூலின் மத்தியில் மத்தியில் இந்த லோகங்களைப் பேதிக்கச் செய்யும் விஷயங்களைப் பற்றிச் சொல்லிக்கொண்டு வருகின்ற இடங்களில் இது மருந்தின் பரிக்ஷைக்காகவே இதனால் பணங்களைச் சேகரித்து மயக்க வழியிற் சேர்ந்துகெட்டுப் போவதற் கல்லவென்று அடுத்தடுத்துக் கூறி வருவதி னாலுங் காணலாம்.

மற்ற மாந்திரீகம், ஞான முதலாகிய விஷயங் களையும் இவ்வாறே சந்தேகமின்றிக் கூறி வரு கின்றார்.

இந்நூலில் யாவற்றையுஞ் சந்தேகமறச் சொல்லி இவற்றை யெல்லாஞ் செய்துமுடித்துத் தேகத்தைப் பலப் படுத்தி ஞானமார்க்கத்தை யடைவாயென்று சொல்லிக் கொண்டு வருவதினால் இதிற் சொல்லிய விஷயமெல் லாம் நிச்சயமாக முடியுமென்றும் அப்படி முடியினும் ஞானவழியை விட்டு உலகமயக்கிற் சிக்கிக் கெட்டு விடக் கூடாதென்றும் நன்கு புலப்படுகின்றது. இவ்விஷயங் களெல்லாம் இந்நூலை ஆதிதொடங்கி அந்தம் வரை யிலும் பார்ப்பவர்களுக்குத் தானே நன்கு விளங்குமா கையால் இங்கு இவைகளைப்பற்றி அதிகமா யெடுத் தெழுத வேண்டியது அனாவசியமா யிருக்கின்றது.

இத்தகைய நூலை இம்மகான் பாடியுதவியதற்கு காரணமாவது அடியில் எழுதியிருக்கும் நூல் வரலாற்றிற் சொல்லப்பட்டிருப்பவைகளேயாம்.

## நூல்வரலாறு

நெடுங்கடல் சூழ்ந்த பூவுலகத்தின் கண்தோன்றி அரிய சாதனங்களைச் செய்து சித்திபெற்ற வராகிய பதினெண் சித்தர்களும் வாத வைத்திய மாந்திரீக முதலியவற்றைப்பற்றிய பல நூற்களையியற்றி ஆதி யில் வெளியிட்டனர். ஆனால் அவைகளிலுள்ள பல



மர்மங்களையும் மறைப்பாகவும், பரிபாஷையாகவும் அவைகளிலும் ஒருவர் தொடங்கிக்கொண்ட விஷயத் தைத் தம் நூலில் அரைகுறையாய் வைத்தும் அந்தக் குறைவான பாகத்தை மற்றொருவர் நூலில் எடுத் துரைத்துப் பூர்த்திபண்ணியும் எத்தகையினரும் எவ் விதத்தாலுங் கண்டுபிடிக்க் கூடாதவிதமாக பலவித வஞ்சனைகளாகவே ஏற்படுத்தி யிருந்தனர்.

இதனால் மேற்கண்ட சித்தர் நூற்களில் கூறியிருக் கப்பட்ட ஒவ்வொரு விஷயங்களும் இக்காலத்தினும் எத்தகையருக்கும் பிரயோசனப்படா திருப்பதுபோலவே அக்காலத்திலும் பிரயோசனப் படாதிருந்தன. ஏனென் றால் மேற்கண்ட சித்தர் நூற்களில் கூறியிருக்கப்பட்ட எந்த விஷயத்தை முடிவு பெறக் காணவேண்டுமென்றா லும் எல்லாச் சித்தர்களுடைய நூற்களையும் சேகரிக்க் வேண்டியதா யிருக்கின்றன. அப்படி எல்லாருடைய நூலும் ஏக காலத்திற் கிடைப்பதரிது. அப்படிக் கிடைப் பினும் அவைகளிலுள்ள பரிபாஷை முதலியவைகளை நிவர்த்தித்துக் கொள்வது அரிதினுமரிதாகும். அப்படி நிவர்த்தித்துக் கொண்டாலும் அவைகளிலுள்ள சில உள்மர்மங்கள் வெளியாவது மகாகஷ்டம். அம்மர்மங் களைத் தெரிந்த மகான்கள் மூலமாக விளக்கிக் கொண்டாலும் சந்தேகம் சந்தேகமே. இதைத் தவிர இக்காலத்திலோ அச்சித்தர் நூற்களிற் பல இறந்து மறைந்து விட்டபடியால் அவைகள் முழுதுங் கிடைக்கவே மாட்டாது. இத்தகைய காரணங்களினாலேயே மேற் கூறியபடி அவைகள் பிரயோசனப்படா தொழிந்தன.

இந்தவிதமாகச் சித்தர்கள் உலகத்தாருக்குச் செய்த வஞ்சனைகளை நிவர்த்தித்துப் பேரருள் புரிய வேண்டு மென்பதாக எப்பொருட்கு மிறைவராகிய பரமசிவக் கடவுள் திருவுளத்தெண்ணி ஓர் காலத்தில் முனிபுங் கவருட் சிறந்த அகத்திய மகாமுனிவர் பொதிகை மலையின் கண்ணேயுள்ள சோதிவிருட்சத்தினடியில்

சதாசிவத்தைப் பூசித்து நிற்கும்போது அப் பரமசிவக் கடவுள் பிரசன்னமாகி அகஸ்தியரைப் பார்த்து அகஸ்தியனே உலகத்தில் பலா சித்தர்கள் மறைத்துச் சொன்ன வஞ்சகநூற்களின் மர்மங்களையுணர வசமற்றவராகி அவற்றை யொருவாறு நம்பி வாதம், வைத்திய முதலாகிய விஷயங்களிற் பிரவேசித்து ஒன்றுங்கைகூடப் பெறாமல் தமது வாழ்நாளை வீணாளாக்கி யலைச்சற்படுகின்றார்கள். ஆதலால் அக்குறைபாடானது நீங்கி அவர்கள் நித்தியசுகத்தை யடைவதற்கான ஓர் நூலை வாத தைத்திய முதலியவைகளை யடக்கி பொவருமெளிதி லுணர்ந்து கொள்ளும் விதமாகச் சிறப்புடன் திருவென்று தொடங்கிச் செய்யுமென்று கட்டளையிட்டருளினார்.

இதைக் கேட்டவுடன் அகஸ்தியர் நடுக்கமுற்றுக் கலங்கி எம்பெருமானே இந்த அரியநூலை யெவ்விதஞ் செய்து முடிப்பேன். இது சித்தர்களாலும் மறைக்கப்பட்ட விஷயமாச்சுதே. இதை உலக நலத்தைக்கருதி வெளிப்படையாகச் சொல்வதென்றால் இதற்கு இடையூறு ஏற்படாது போய்விடுமா? ஆனால் உன்னுடைய திருவாக்கினாலேயே திருவென்று தொடங்கு என முதலெடுத்துக் கொடுத்திருப்பதால் இனிது முடியுமெனக் கருதினும் பின்னையும்சற்று அதைரியப்படுகின்றேனென்று, வேண்டப் பழையபடியும் அக்கடவுளினுடைய அனுக்கிரகத்தால் எல்லாவற்றிற்குங் காரணமாயுள்ள அகரத்தை முதலாகவுடைய (அணு) வென்ற நிசப்தமானது தமது செவிப்புறத்தேயுண்டானது.

அந்தச் சப்தத்தைக்கேட்டவுனே அகஸ்தியர் மிகவுந் திடசித்தராகி எவ்வாவற்றிற்கும் ஆதி காரணமாயுள்ள (அணு) வென்ற சப்தம் தன்னிச்சையாகவே நமது காதினிடமாக உண்டாகியிருப்பதால் இனி யெட்டுணையுஞ் சந்தேகமின்றி இந்நூல் நிறைவேறுமென்று கருதி இந்நூல் இனிது முடியும் பொருட்டாகத் தெய்வ



தீனமாயுண்டான அந்த அணுவென்ற வாக்கியத்தினாலேயே தொடங்கி அக்கடவுள் மீதே காப்புச் செய்யுளாகக் கூறிவிட்டுப் பின் கடவுள்நேரில் எடுத்துக் கொடுத்த திருத்துணையா யென்ற வாக்கியத்தினாலேயே நூலை முதலிற்றொடங்கி மாணாக்கர் முதலிய யாவரும் எளிதிலுணரும் படியாக ஒவ்வொரு பதங்களின் முதலெழுத்து நடுவெழுத்து கடையெழுத்து முதலியவைகளை யெடுத்துச் சேர்த்து ஒவ்வொரு விஷயங்களைக்கண்டு பிடிக்குங் கிரமமாய் பாக்களை ஏற்படுத்தி வாத முதலில் எல்லாவற்றையுஞ் சந்தேகமற ஆயிரம்பாட்டுகளாகப்பாடி அவற்றைப் பத்துக் காண்டங்களாக வகுத்து ஒவ்வொரு காண்டத்திற்கும் நூறு நூறு பாட்டுக்களாகப்பிரித்து அதற்கு இலக்க சௌமிய சாகரமென்னும் பெயரிட்டு முடித்தார்.

அகஸ்தியருக்குக் கடவுள் முதலில் திருத்துணையாயெனத் தொடங்கு என்று சொன்னது நூலின் முதலுக் காதலால் அவ்வாக்கியத்தை நூலின் முதலிலும், பின்பு இவர் மயக்கத்தைத் தெளியவைக்கும் பொருட்டாய் (அணு) வென்ற சப்தம் தன்னிச்சையாகவுண்டானதனால் அதை தன்னைத் தைரியப்படுத்திய கடவுள்மீது சென்ன முதற்காப்புச்செய்யுள் முதலிலும் வைத்தார். இவற்றில் இவருக்கு ஆதியில் கிடைத்தது நூலிற்றொடங்குவதற்கான திருத்துணையாயென்ற சப்தமே. அதையே நூல் முதலிலும் தொடங்கியிருக்கின்றார். இதைஇதின் மூல நூலின் பாயிரத்தின் ஐந்தாவது செய்யுளின் ஈற்றடியிலுள்ள ''திருவாக்காற் பகர்ந்திட்டானே'' யென்பதனாலுங் காணலாம். இது பற்றியே நாம் இக்காண்டத்தின் புறநடையிலும் திருத்துணையானென்று அடியெடுத்துக் கொடுத்தாரெனவெழுதியிருக்கின்றோம். சிலர் இதன் பாயிரத்தையே நூலெனக் கருதி (அணு) வென்ற காப்புச் செய்யுள் மாட்டுந்தானேயிருக்கின்றது. இரண்டாவது பாடியதான (திருத்துணை) யென்றசெய்யுளைக் காணவில்லையே

யென மயங்கக் கூடும். இவற்றில் நூலே முந்தியது பாயிரம் பின்னோர் காலத்தில் நூலினது விருத்தாந்தத்தைப்பற்றி யெழுதப்பட்டது. அதற்கு [அகண்டவெளி] யென்பதே முதற் செய்யுளாகும். நூலின் முதலிலிருந்த (அனுவிலெழு) என்ற காப்புச் செய்யுளைச் சிறப்பின் பொருட்டு (அதாவது புஸ்தகத்திற்கு முதலிலிருக்க வேண்டுமெனக் கருதி) இந்தப் பாயிரத்தின் முதலில் பிற்காலத்திலச்சிட்டவர்கள் கொண்டு வந்து சேர்த்திருக்கின்றார்கள். அல்லது ஏட்டுப் பிரதியிலேயே அவ்விதம் மாற்றியெழுதியிருந்திருக்கலாம். இஃதன்றிப் பாயிரமே நூலிற் சொல்லப்பட்ட தெனச் சொல்வோமாயின் இப்பாயிரத்தில் இந்நூலைச் சித்தர்கள் பிடுங்கிக் கொண்டுபோனார்களென்ற மற்ற விவரங்களை யெல்லாஞ்சொல்லப்பட்டிருப்பதால் அப்படி முதலெனக் கொள்வது காலத்தால் முரணாகும். ஏனென்றால் முன்னடந்ததைச் சொல்வது கிரமமே தவிர பின்வரப் போவதைச் சொல்வது கிரமமாகாது. அகஸ்தியர் முக்காலமுந் தெரிந்தவராதலால் பின்வரப் போவதையும் சொன்னாரென்று சிலர் சொல்லக் கூடும். அப்படியானால் இவர் சித்தர்களிடம் இந்த நூலைக் கொடுக்கவே மாட்டார். இவர் கொடுத்ததாகவும் பின்பு அச்சித்தர்களிடமிருந்து ஒரு விதத்தாற் பெற்றுக் கொண்டதாகவும் சொல்லப்பட்டிருப்பதால் நூலே முந்தினது பாயிரம் பிந்தினது. நூலினது விருத்தாந்தத்தைப் பற்றிச் சொல்வதே பாயிர மாகையால் நூல் முடிந்தபின் பாயிரம் சொல்லவேண்டியதே கிரமமாம். அவ்வாறே இம்மகானும் கூறியிருக்கின்றார்.

ஆதனால் இதை வாசிக்கும் ஒவ்வொருவரும் (திருத்துணையா:) (அனு) என்ற இரண்டு வார்த்தைகளில் அகஸ்தியருக்கு எது முந்திக்கிடைத்த தென்பதை மேற்கண்ட ஹேதுக்களைக் கொண்டு தமக்குத் தாமே தெரிந்து கொள்வார்களாக. எமது ஆசானிடம் கேட்டுத் தெரிந்து கொண்டவாறே இவ்விஷயத்தை யிங்கெழுதியிருக்கின்றோம்.



இதுநிற்க மேற்கண்டவாறே இந்த இலக்கசௌமியசாகரத்தைப் பாடிமுடித்து அதை அந்த அகஸ்தியர் தமது சீஷர்கையிற்கொடுத்து அவர் கேட்கும் படியாகத்தம்முடைய வாக்கினாலே சொல்லிக்கொண்டு வரும்போது இதை நாரதரறிந்து அகஸ்தியரே இந்த இலக்க சௌமியத்தை யானுந் தெரிந்து கொள்கின்றேனென்று கேட்க அவ்வாறே அகத்தியருமிசைய நாரதர் பக்கத்திலிருந்து இந்நூல் முழுதுங் கேட்டபின்னெழுந்து அவரைப் புகழ்ந்து நமஸ்கரித்துச் சென்றார்.

இவ்வாறுசென்ற நாரதர் உடனே சித்தர்களிடம் போய் இலக்க சௌமியத்தினுடைய விருத்தாந்தத்தைச் சொல்ல அவர்கள் கோபமதிகரித்தவர்களாய் இப்படி இரகசியத்தை வெளிப்படுத்திய இந்த நூலையெப்படியாவது கைப்பற்றி நெருப்பிலிட்டுக் கொளுத்திவிட வேண்டுமென்றாலோசிக்க அவர்களில் கொங்கணர் அகஸ்தியரிடத்திலிருந்து நூலை கைப்பற்றுவதற்கான உபாயஞ் சொல்ல மற்ற சித்தர்களும் அதற்கிணங்கி யாவரு மொன்றுகூடி அகஸ்தியரிடம் வந்து சோதி விருட்சத்தினடியிலிருந்து அகஸ்தியரே நீர் பாடிய சௌமியத்தை யாங்கள் கண்ணாற் பார்த்தானந்திக்க விரும்புகின்றோம். ஆனதால் அதைத் தாருமெனத் தந்திரமாகக்கேட்க அதற்கவர் இவர்கள் மீது சந்தேகித்துக் கொடுக்கமாட்டே னென்றுசொல்ல இதைக்கேட்டு அச்சித்தர்களில், கருவூரானும், கொங்கணனும் அகஸ்தியரே இது பரமசிவத்தின் கட்டளையினாற் செய்யப்பட்ட நூலாகையால் ஒருகாலத்தும் இதை அழியச்செய்ய மாட்டோமென்று பல உறுதிவார்த்தைகள்கூற அவர் அவ்வார்த்தைகளை மெய்யெனக் கருதிக் கருவூரானிடத்திற் சௌமியத்தைக் கொடுக்க அவன் அதை வாங்கினதும் கெவுனவுண்டையை வாயிற் போட்டுக்கொண்டு ஆகாயத்திற் பறந்துவிட்டான்.

இப்படிப் பறக்கவே இதைப் பிண்ணாக்கன்கண்டு ஆகா இவன் நூலைக் கைப்பற்றினவுடன் எங்கேயோ

கொண்டோடுகின்றானே இதை இவன் கையில் விடக் கூடாது. ஆதால் அதை அவனிடமிருந்து நாம் கைப் பற்ற வேண்டுமென்று கருதி இவனும் ஆகாயத்திற் பலவித ரூபங்களையெடுத்துக் கருவூரானோடு சண்டை தொடுக்க முடிவில் பிண்ணாக்கன் ஆற்றாது கீழே விழுந்து விட்டான்.

அவ்விதம் விழுந்தவன் பழையபடியு மிகுந்த கோப மூண்டு கருவூரானை மயக்கும்படியாக ஒருபுகையைப் போட்டான். அந்தப் புகையானது உலகெங்கு நிறைந்து அந்தகாரத்தால் மூடிக்கொள்ளவே கருவூரான் புகைக் கஞ்சிக் கைலாயத்தையடைந்தான். அங்கும் இந்தப் புகையானது சென்று பரவிற்று.

அந்தக்காலத்தில் அங்கிருந்த வதிஷ்டமகாமுனி இதென்ன விபரீதம் என் இப்படிப் புகைபரவிற்றென்று மற்றைத் தேவர்களை வினாவுஞ் சமயத்தில் பிண்ணாக்கன் அவர் முன்பாகப்போய் வணங்கிச் சித்தர்கள் கூடிச் சௌமியத்தை நெருப்பிலிட ஆலோசித்ததையும், பின் அதைக் கருவூரான் கைப்பற்றிப் பறந்ததையும், அதனால் தனக்கும் அவனுக்கும் நடந்தயுத்தத்தையும், அதற்காகத் தான் புகைப்போட்ட விபரத்தையும் சவிஸ்தாரமாய்ச் சொன்னான்.

இதைக்கேட்டவுடன் வதிஷ்டர் அதிகக் கோபத்தையடைந்து கருவூரானை யழைத்து பரமசிவக்கடவுள் கட்டளைப்படியே பாடப்பட்ட இந்தநூலை நீ நெருப்பிலிடக் கருதுவது தகாதெனக் கண்டித்து இலக்க சௌமியத்தை அவன் கையிலிருந்து வாங்கி அங்கு மற்ற தேவர்களோடு தாமும் இதற்குவேண்டிய பூசனை முதலியது செய்து ஒவ்வொருவருங் கண்ணிலொற்றிக் கொண்டபின் வசிட்டரே இதை யெடுத்துக்கொண்டு வந்து அகஸ்தியர் கரத்திற் பழையபடியுஞ் சேர்த்தார்.



இவ்விருத்தாந்தமானது இந்த மூலநூலின் பாயிரத்திற் கூறப்பட்டுள்ளது. இங்குநாம் விரிவஞ்சிச் சுருக்கியெழுதியிருக்கின்றோம். இதனை விரிவாகப் பார்க்க விரும்புவோர் இதன் மூலநூலின் பாயிரத்தைப் பார்த்துணர்ந்து கொள்வார்களாக.

இந்நூல் வரலாற்றில் சொல்லியிருக்கும் விஷயங்கள் வெளிப்படையாயிருப்பினும் இதன் அந்தரங்க அருத்தத்தைச் சிலர் வேறுவிதமாகச் சொல்கின்றார்கள் அதாவது முப்பூவின் மார்க்கமேயாம். ஆகையால் இதனந்தரங்க அருத்தத்தைத் தெரிந்து கொள்ளப் பிரியமானவர்கள் இதனுண்மை தெரிந்தவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்க.

இந்தவிதமாக தெய்வசபை பேறிவந்த இந்த அருமையான நூலானது அகஸ்தியர் காலத்திருந்து வழிவழியாக உலகத்திற் பரவிச் சிறந்த மகான்களால் பல ஏட்டுப்பிரதிகளில் எழுதிவைக்கப்பட்டிருந்ததோடு அத்தகையினர்களால் அதிற்சொல்லிய முறைகளையும் கையாளப்பட்டுவந்தன.

இவ்விதமிருந்ததை உலக நலத்தைக் கருதிக் கொஞ்ச காலத்திற்கு முன்பு கனம் தங்கிய திருநெல்வேலிப் பேட்டை கா. காசிமுகைதீன் ராவுத்தர் அவர்கள் பலவாறு ஏட்டுப் பிரதிகளிற் சிதைந்து கிடந்தவைகளை ஒன்று படத் திரட்டி இராமநாதபுரம் சமஸ்தான வித்வான் மகா-௱-௱-ஸ்ரீ சதாவதானம் சரவணப்பெருமாள் கவிராய ரவர்களைக் கொண்டு செய்யுட்களைப் பரிசோதிப்பித்துக் காரைக்கால் முகம்மது ஸமதானி அச்சுக்கூடத்தில் இதன் மூலத்தையச்சிட்டு வெளிப்படுத்தி முன் ஏட்டுப் பிரதிகளாய்ச் சிதைவுண்டு சிலரிடத்து மட்டுமிருந்ததைப் புஸ்தக ரூபமாய்ப் பலரிடத்தும் பரவச் செய்தார்கள். இது விஷயத்தில் இவர்கள் எடுத்துக் கொண்ட பிரயாசைக்கும் பேருதவிக்

கும் தமிழறிவிற் சிறந்த ஒவ்வொருவரும் நன்றி செலுத்தக் கடமைபட்டே யிருக்கின்றோம்.

அப்படியிவர்களாலச் சிட்டு வெளியாக்கிய இந்த நூலானது ஏட்டுப் பிரதிகளைப் போன்ற சந்தேக மற்றதாயும், பிழையற்றதாயும், பார்ப்பதற்கு யோக்கிய மாகவு மிருப்பினும் இதை முறையாகப் பாடங்கேட்டுக் கொண்டவர்களுக்கல்லாமல் மற்றையர்க்கு இதிலுள்ள சில அரியபாக்கள் அருத்தமாவது அரிதாகையால் உலகிற் பெருமபான்மையோருக்கு இந்த நூல் பிரயோசனத்தைத் தராததா யிருந்தது.

ஆதலால் இந்த ஒரு குறையையும் நீக்கி இந்த அற்புதமாகிய நூலை முன்னிருந்ததைக் காட்டிலும் அதிகமாகப் பிரகாசிக்கச் செய்து உலகத்தாருக்கு பேருதவி புரியவேண்டுமென நெடுங்காலந் தொடங்கி எம்முள்ளத்தே ஓர் பெரிய அவாவானது ஏற்பட்டிருப் பினும் இந்த மகா அருமைதங்கிய மகான்களாற் கொண் டாடத்தக்க தெய்வத் தன்மையுள்ள நூலில் நாம் எவ்விதம் பிரவேசித்து மேற்கண்ட குறையை நிவர்த்திக்கப் போகின்றோமென்ற அச்சமானது எம்மை இவ்வேலையில் இதுவரையிற் பிரவேசிக்க வொட்டாமற் றடுத்துவந்தது.

ஆயினும் இதைப்பலபெரிய மகான்களிடம் முறையே பலதடவை பாடம் கேட்டிருப்பதினாலும் இதற்கு ஒரு வாறு உரையெழுதி வெளிப்படுத்த வேண்டுமென நமது நண்பர்களுட் பலர் அடிக்கடி வற்புறுத்திவந்தமை யாலும் அன்னோர் நோக்கத்தை வீணாக்க வசமற்ற வனாகி முன்னேற்பட்டிருந்த அதைரியத்தைச் சற்று நீக்கி இன்னூலில் இந்த முதற்கண்டத்தில் சாமானிய மான பாக்களை தள்ளிவிட்டு அவசியமானவைகளும், பொருள் காண்பதற்கு அரிதாயுள்ளவைகளுமான பல பாக்களை மட்டும் எடுத்துக் கொண்டு அவற்றிற்கு எமக்குத் தெரிந்த வரையில் ஒருவாறு சந்தேகமற



உரையெழுதியும், இதிற் சேர்க்காமற் றள்ளியபாக் களுக்குப் பொழிப்புரை மட்டும் எழுதிச் சேர்த்தும், முறைக்கிரமந் தவறாது முடித்துக் கடேசியில் இதி லுள்ள முறையைச் சந்தேகமற யாவரும் எளிதிலுணரும் படி வசன ரூபமாக எழுதிச் சேர்த்தும் இலக்க சௌமிய சாகரம் தேர்ந்தெடுத்த செய்யுட்களும், தெளிபொருள் விளக்கவுரையும் எனப்பெயரிட்டு அச்சிட்டு வெளிப்படுத்தி யுள்ளோம். மற்ற காண்டங்களையும் இவ்வாறே வெளிப் படுத்துவதற்குக் கடவுள் அருள்தர வேண்டுமென யாம் பிரார்த்திப்பது போலவே நமது நண்பர்கள் ஒவ்வொரு வரும் பிரார்த்திக்குமாறு வேண்டுகின்றேன்.

இந்த நூலுக்கு உரையெழுதுவதற்குப் பிரதான மாயுதவி செய்த ஸ்ரீல-ஸ்ரீ-தே. வே. சாமியார் என்று வழங்குகிற பாலாம்பிகை தாச சாமியாரவர்கட்கும் ஸ்ரீமத் வைத்தியம் சுப்பராய சுவாமிகட்கும் நாம் இருதய பூர்வமாக நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக் கின்றோம். இவ்வாறே இந்நூலால் பிரயோசனத்தை யடையு மொவ்வொருவரும் மேற்கண்ட மகான்களிரு வருக்கும் முழு மனதோடு நன்றி செலுத்துவார்களென நம்புகின்றோம்.

இதற்காக நாமெடுத்துக் கொண்ட பிரயாசமும் தேகசிரமமும், பொருட்செலவு முதலியவைகளும் இதை வாசிக்கு மொவ்வொருவருக்கும் நாமெடுத்துச் சொல்லா மலே விளங்கும்.

நாம் உலக நலத்தைக் கருதிச் செய்யப்பட்டதா கையால் இது விஷயத்தில் நமக்கு நேர்ந்திருக்கின்ற பிரயாசமுதலியவைகளை யெதிர்ப்பாராமலே ஏழை களுக்கும் உதவும் பொருட்டாக இப்புத்தகத்திற்கு மிகவும் குறைந்தவிலையே ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இன்னூல் முழுவதையும் உரையெழுதி ஒரே புத்தக மாயச் சிட்டால் அதற்குத் தக்கபடி விலையும் அதிக

மாகும். ஆதலால் எவரும் வாங்கிப் படிக்கச் சற்று தடையேற்படுமெனக் கருதியே இதனைத் தனித் தனி காண்டமாகவே வெளியிட உத்தேசித்தோம்.

இந்த நூலானது வைத்தியர் வைத்தியரல்லாதவர் முதலிய யாவரிடத்து மிருக்கவேண்டியது அவசிய மானதே. இதன் முழுக் காண்டங்களும் உரையுடன் ஒருவர் கையில் இருக்குமேயானால் அவர்கள் வைத்திய முதலிய விஷயங்களுக்காக வேறு நூல் பார்க்கவேண்டிய அவசியமேயிராது.

ஆனதால் நமது நண்பர்கள் பலரும் இதற்கு முன் நம்மால் அச்சிட்டு வெளிப்படுத்தியிருக்கின்ற பல நூற்களையும் நன்கு மதித்து வாங்கி நம்மை பலவிதத் தாலுங் கனப்படுத்தி வருவது போலவே இதனையும் வாங்கி எம்மை மேன்மைப் படுத்துவீர்களென நம்பு கின்றேன்.

இதன் பிரதி 1க்குக் கை விலை ரூபா 0—8—0
வி.பி. யுள்பட ரூபா 0—10—0
ஹக்கீம்—பா—முகம்மது அப்துல்லா

———

கடவுள் துணை

# இலக்க சௌமிய சாகரம்

## தேர்ந்தெடுத்த செய்யுட்களும் தெளிபொருள் விளக்க வுரையும்

## முதலாவது காண்டம்

### காப்பு

எண்சீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

திருத்துணையா யகம்புகுந்த பத்து நூற்றுத்
திறத்தாதி யனந்தமந்த மெட்டே பச்சை
முருத்துணையாய முதற்றொடையிற் பதினா றற்று
மூன்றினமு மக்கடையி லம்மூன் றோடு
குருத்துணையாங் குருமூலி மூன்ரெண் டுற்றார்
குவலையத்திற் பேர்விளங்குந் தான தனால்
கருத்துணையர் யவையவைக்கு மருந்து சொல்லக்
கண்ணோக்கு மிடமெங்குங் கத்தன் காப்பு.

இப்பாட்டினால் தெய்வ வணக்கமுங் குருமூலியுங் கூறுகின்றார்

(இ-ன்) எவ்விடத்து நிறைந்து இன்பந்தருஞ் செல்வியாகிய பராசத்தியினது துணையினாலே எனது மனத்தின் கண்ணே நுழைந்து வெளிப்பட்டதாகிய ஆயிரமென்னுங் கணக்குள்ள பாட்டுக்களாலான இலக்க சௌமிய சாகரத்தினது உண்மையாவது;—முதலி லுள்ளவொரு பொருளே எவ்விடத்துமாம். அந்தமென் னும் பெயரினையுடைய செந்தூரத்தினது சூக்ஷமானது எட்டேயாகும். இதில் எல்லாவற்றிற்கும் உயிர்கொடுப்ப தாகிய தண்மையுடைய வொருவஸ்துவானது:—முருகக் கடவுளினது துணையைக்கொண்டு இச்செய்யுளின் முத லடியில் ஆதியில்நின்று பதினாறெழுத்துக்களைத்தள்ளி நின்ற மூன்றெத்துழுக்களையும், அவ்வடியின் கடையி

மூன்றெழுத்துக்களையும், அவ்வடியின் முதலிலுள்ள இரண்டெழுத்துக்களையும் சேர்த்தால் தனக்குத்தானே பெயர் விளங்கும். இதுவே குருவென்னும் வண்டிற்குத் துணையாகுங் குருமூலியெனப்படும். இக்கருவின் துணையைக் கொண்டு அந்தந்த நோய்களுக்கு மருந்தைச் சொல்லும் பொருட்டுக் கண்ணொளிபடுமிடமெலா நிறைந்த பரம்பொருளாகிய கடவுளே காப்பானாக. எ—று.

சூக்ஷமவிளக்கம்:—முதலடியில் பதினாறெழுத்துக்களைத் தள்ளிநின்ற மூன்றெழுத்துக்களாவன (நூற்று)

அந்த அடியின் கடையில் நின்ற மூன்றெழுத்துக்களாவன (பச்சை)

மேற்கண்ட அடியின் முதலில் நின்ற இரண்டெழுத்துக்களாவன (திரு)

ஆக இம்மூன்றுபதங்களையும் முறையே சேர்க்க (திருநூற்றுப்பச்சையென) ஆனது. இதுவே அக்குருமூலியின் பெயராம். இதுவே யெவற்றிற்கும் ஆதாரமாயுள்ளதாம். ஆதலால், புத்திமான்கள் கண்டறிந்து கொள்வார்களாக. இந்தத் (திருநூற்றுப் பச்சை)யே இதிலுள்ள எல்லாமுறைகளுக்கும் ஆதாரமாயிருப்பதால் இதைக் காப்புச் செய்யுளில் முதன்மை பெறக் கூறினாரென்க. இதிற் சூக்ஷமம் எட்டேயென்றதனால் கீழ்ச் சொல்லப்போகும் அந்த செந்தூரத்துக்கு எட்டுச் சரக்குகளே பிரதானமென்றும் இம்முறையே எல்லாவற்றிற்கும் ஆதாரமென்றும் புலப்படுகிறது.

இதற்கு அரபிபாஷையில் ஷாஹஸ்பரம்) ரைஹான் என்றும் பார்ஸியில், ஷாஹஸ்பரம் நாஜ்போ தபான்ஷா என்றும், ஹிந்திபாஷையில் ஜப்ஜா என்றும், தமிழில், திருநீற்றுப்பச்சை, திருநீற்றுப்பத்திரி என்றும், தெலுங்கில் விபூதிபத்திரி, த்ரஜடா, வேபுடுபச் ச என்றும்,



மலையாளத்தில் திருநீதருபச்சை, பச்சபுஷ்பம் என்றும், கன்னடத்தில் காம் கஸ்தூரி என்றும், சமஸ்கிருதத்தில், விஷ்வதுளசி என்றும் பெயராம்.

அந்தக் குறிப்பு
வண்ணச் சந்த விருத்தம்

அந்தர மும்விட வந்தொளி வாயது
சிந்திட வும்பொரி திந்திரி யாயது
சிறுசிறு சிறுசிறு-சீ
சொறுசொறு சொறுசொறு-சோ
கந்தர மும்முறை மின்றிக முமொளி
சுந்தர மும்முயர் தந்திர முஞ்செயுங்
கடகட கடகட-டொப்
படபட படபட-டப்

சித்துர முங்களி றும்பரி யும்படை
வந்தவர் மூந்துயி ரந்தர மேசெயுங்
கரிகரி கரிகரி - கண்
டறியறி யறியறி - பண்

எந்திர மும்மிது கண்டறி பெண்கள
வின்பெய ரின்கரி தன்றரு வின்மிசை
யிருமிரு மிருமிரு - மேர்
பொறுபொறு பொறுபொறு-பேர், புகல்வனே

1—வது சரக்கு

இப்பாட்டினால் 1-வது சரக்குண்டாகு
மிடத்தை வருணிப்பதோடு இதுமுதல் அந்த
செந்தூரத்தின் எட்டுச் சரக்குகளையுஞ் சொல்
லத் தொடங்குகின்றார்.

(இ.ன்.) அண்டமுகடும் வெடி படும்படி சந்திரனது பிரகாசத்தைப் பெற்றதும், பொரியானது சிந்திடும்

போது திரிதிரியாய்த் தோற்றப்படுவதும், சிறுசிறு சிறு சிறு சீயென்றும் சொறுசொறு, சொறு சொறு சோவென்றுஞ் சப்தத்தை யுண்டாக்குவதும், மேகத்தினிடமாக மூன்றுதரம் விட்டு விட்டுப் பிரகாசிக்கும் படியான மின்னலொளியினது அழகையும்மேன்மையான பலவுபாயங்களையும் செய்வதும், கடகட கட கட டொப், பட பட படபட டப் என்று வெடிக்கத் தக்கதும், இரத கஜதுரக பதாதிகளோடு போர்க்கெழுஞ் சுத்த வீரர்களினுயிரையும் ஆகாயத்திற் செல்லும்படி செய்வதுமான ஓர்தரி. அதைக் கண்டறி, செய்யத்தக்க சூஸ்திரமுமிது தெரிந்துணர்வாய். இது திருடும் சுபாவத்தையுடைய ஓர் பெண்ணினது காரணப் பெயரின் கரி, அப்பெயர் பூண்ட ஓர் மரத்தின் மீதுள்ள இனி வரப்போகின்ற ஒரு பொருளை உலகீர் இரும் இரும் சற்றுபொறும் பொறும் சொல்கின்றேன்.

சூக்ஷும விளக்கம் : திருட்டுச் சுபாவமுடைய பெண்ணினது பெயரானது:— (கள்ளி) இப்பெயர் பூண்டதுவே அம்மரமென்றறிக. கள்ளியி லநேகபேதங்களிருப்பினும் இது மடற்கள்ளியென்பதையு மறிக.

இதற்கு அரபி பாஷையில் ஜக்கூமுஹிந்தீ என்றும் தெலுங்கில் ஜெமுடு என்றும், சமஸ்கிருதத்தில் வஜ்ரகண்டக என்றும், தமிழில் கள்ளி என்றும் பெயர்.

(வேறு)

குருவாமிகு வேள லுற்றிடுங்
கொதியாமறல் தான முற்றிடுங்
குழைபாசடை யாயுதித்த வெழின்

மாருமாமலர் மீதிலுற்றவண்
வருமாமது வாயுமிழ்ந்தவன்
வளரோசை மெய் வான் மீனது பேரன்

கருவாந்துணை யாந்தொடைகளில்
கழறும்பதி மூன்றில் ரண்டினங்
கதியாமுத லானபத்தொடு பின்



பொருவாயுறு பேருமாகினன்
பொன்னின்மழை பெய்யும்சாகரம்
புகலந்தமி லொன்றுகண்டிதை நீ அறிவாயே

இப்பாட்டினால் முதற்சரக்கின் பெயர் கூறுகின்றார்.

(இ-ள்) முற்பாட்டிற் குறித்த மரமானது சிவப்பு நிறம் பொருந்திய வெப்பமானது அதிகரித்து அதனால் கொதித்துக் கொண்டிருக்கின்ற பெருமணற்களால் நிறைந்துள்ளதான பாலைநிலத்திலிருக்கும். அப்படி அக்கினி மிகுந்த விடத்திலிருப்பினும் நன்றாய்த் தழைத்து இதழ்களானது பசுமை நிறத்தைப் பொருந்தி உண்டான அழகினையுடைய அம்மரத்தினது வாசனையுள்ள சிறந்த புஷ்பங்களினிடத்துப் பொருந்தி அதனிடமாக ஒழுகப்பட்ட மேன்மையான தேனையுண்டு தேக்கியுமிழ்ந்தது வளரப்பெற்ற இனிதான சப்தத்தையுடையது. வான்மீன் போன்ற தேகத்தையுடையது. மூலமான இப்பாட்டினது இரண்டாமடியில் பதிமூன்றாமெழுத்தும் அதற்கு முன்னுள்ளதான எழுத்துமாகிய இரண்டெழுத்துக்களையும், முதலடியின் பத்தாமெழுத்துக்குப் பின்னுள்ள வெழுத்தையும் மேற்படி அடியின் முதல் இரண்டெழுத்துக்களையும் கூட்டினால் என்ன வருமோ அப்பெயர் கொண்டது பொன்னாகிய மழையைப் பெய்வதான இலக்க சௌமிய சாகரமென்னும்இந் நூலில் முதன்மையாகச் சொல்வதான அந்த செந்தூரத்தின் சரக்குகளில் இது ஒன்றெனக் கண்டறியக்கடவாய். எ—று

சூக்ஷும விளக்கம்—இரண்டாமடியில் பதிமூன்றாமெழுத்தும் அதற்கு முன்னுள்ள வெழுத்தும் (வண்)

முதலடியின் பத்தாமெழுத்துக்கு பின்னுள்ள வெழுத்து (டு).

மேற்கண்ட முதலடியின் முதலிரண்டெழுத்துக்கள் (குரு).

ஆக இம்மூன்றையும் முறையே கூட்ட (குருவண்டு) ஆனது. இதுவே முதற்பாட்டிற் சொல்லுவேன் கேள் என்ற பொருளாம். இது இந்த இலக்க சௌமிய சாகரத்திற் சொல்லப்பட்ட முதன்மை பெற்றதான அந்த செந்தூரத்தின் முக்கிய சரக்குகள் எட்டிலொன்றாம் இக் (குருவண்டை)ச் சந்தேகமற நிச்சயமாய் இன்னதெனக் கண்டறிந்து கொள்ளும் பொருட்டு அது தங்குமிடம், உண்ணுமுணவு, ரூபம், குணம், நிறம் முதலியவற்றை இரண்டு பாட்டுகளில் அடக்கி விளக்கமாகக் காட்டினாரெனவறிக. இவ்வாறே இந்நூல் முழுதும் ஒவ்வொன்றிற்கும் விவரங்கள் தரப்பட்டுள்ளது

இதற்கு அரபி பாஷையில் ஜரா ரீஹாவல் ஹிந்த் என்றும், பார்ஸியில் தபானேஹிந்தீ என்றும், ஹிந்துஸ்தானியில் தேல்னீ, தேல்னீமக்கி என்றும், தமிழில் குருவண்டு, எரிவண்டு என்றும் பெயர். இது பலவகைப்படும். இது எருக்கு, கள்ளி, துவரை முதலியவைகளிலுண்டாகின்றன, ஆகையால், இங்கு கள்ளியில் உண்டாவதே சிரேஷ்டமென அறிவிக்கின்றார். (2)

(வேறு)

மிகுரண மொழுகிய வேக மீறிய
வெடிகொள் புலான்முடை வீச்சை மாற்றுவன்
விபுலையில் விழுகினு மெய் யழிந்திடா
விறல் செய்வோன்
தொகையுடன் வேதியர் சூழு சன்னதி
சுடரொளித் தூபமாயத் துங்கவாடையன்
சட்டியுற் றீயினிற் சூழு சுண்ணமுந்
தோன்றாதே



அகமதி லறிவிலா னாமந் தன்னுட
னடவுடன் தலைக்குறை யான தோடுநீ
யழகிய சகரமில் லைந்து நீக்கியா
றதிற்சேரு
தகுதளை ரெண்டினில் மூன் றினத்தின்பின்
றனிலுறு ரெண்டினந் தான மத்தொடை
சடுதியிலொன்பது தள்ளி யொன்றெடு
தனிநாமம்

2-வது சரக்கு

இந்தப் பாட்டினா லிரண்டாவது சரக்கின் பெயர் கூறுகின்றார்.

(இ-ள்,) இரணமானது மிகுந்து சீழ் முதலியவையொழுகி வேதனையானது அதிகரித்து வெடிப்பு முதலியவையுண்டாகி அதனால் உண்டான கெட்ட புலால் நாற்றத்தை மாற்றத்தக்கது. மண்ணில் விழுந்தாலும் தன்னுடைய ரூபமானது மாசடைந்து நிலைமை கெடாத வீரத்தன்மையுடையது. கூட்டங் கூட்டமாக வேதியர்கள் சூழ்ந்து போற்றத்தக்கதான தெய்வ சன்னதிகடோறும் கதிர்கள் விரிந்த பிரயோசனமான தூபமாயமைந்து உயர்ந்த வாசனையைச் செய்வது. நெருப்பிட்டுச் சுடினும் சாம்பல் முதலிய ஒன்றுந் தோற்றப்படாத அருமைச் செயல்வாய்ந்தது; அறிவில்லாத ஒருவனுடைய பெயரில் தலைக்குறையானதை யெடுத்து அதனோடு குறைந்த வெழுத்திற்குப் பதிலாகச் சகரவரியில் ஆறாவதெழுத்தைக் கூட்டினால் எது அமையுமோ அதுவும், தகுதியுள்ள இரண்டாவதடியில் மூன்றெழுத்துக்களுக்குப் பின்னுள்ள இரண்டெழுத்துக்களையும், அந்த அடியின் பத்தாவது எழுத்தையும் கூட்டினால் என்ன அமையுமோ அதையும் தன் பெயராகவுடையது. இதுவே அந்த செந்தூரத்தின் இரண்டாவதான சரக்காம். ஏ—று

சூக்ஷும விளக்கம்:—அறிவில்லாதவ னுடைய பெயர் (மூடன்.) இதில் தலைக்குறையாய் நின்றது (டன்.) இதனுடன் தலைக்குறைக்குப் பதிலாகச் சகர வரியில் ஆறாவதெழுத்தான (சூ) வைச் சேர்க்க (சூடன்) என்றானது.

இதைத் தவிர மேற்கண்ட பாட்டின் இரண்டாவதடியில் மூன்றெழுத்துக்களுக்குப் பின்னின்ற இரண்டெழுத்துக்கள் (டன்.) அந்த அடியின் பத்தாவதெழுத்து (சூ) ஆக அவ்விரண்டையும் முறையே கூட்ட (சூடன்) என்றானது.

மேற்கண்ட இரு வகைகளாலும் அமைந்தது (சூடன்.) ஆகையால் இதுவே அந்த இரண்டாவது சரக்கின் பெயரென நிச்சயிக்க வேண்டியது. இதனோடு மேற்கூறிய ரூப, குண லக்ஷணங்களாலும் இதுதானென உறுதியாய் கண்டுக் கொள்க.

இதற்கு அரபி, பார்ஸி, ஹிந்தி ஆகிய இம்மூன்று பாஷைகளிலும் காபூர் என்றும் தமிழில் கர்ப்பூரம், சூடன், தீபகர்ப்பூரம் என்றும், சமஸ்கிருதத்தில் கர்ப்பூர்ஹ என்றும் பெயர். இது எல்லாப் பாஷைகளிலும் சற்றேறக்குறைய உச்சரிப்பு பேதத்துடன் ஒரே பெயராக இருக்கிறது. (3)

(வேறு)

இவனுறைகுறியும் பெயரினிலுறையு- மியல்பான
சௌமியவிரிவி லுறுகருமானந்- தனிற்சேருந்
தவமுறுசரக்கின் றலைமையினெட்டின்- றனியான
உவமையிலடங்கா வொளிதிகழந்தமி-லொன்றாமே.

(இ-ள்.) முன் பாட்டினிடமாகத் தங்கிய குணங்குறிகளையும், பெயரினையு முடைய இயல்பான இந்தச் (சூடனென்னுஞ்) சரக்கானது இலக்கசௌமியசாகரமென்னும் நூலினது பரப்பிலுற்ற (கருமான) மென்று சொல்லப்பட்ட மூலகாரணமான அந்த செந்தூரத்திற்



சேரும் தவமகிமை பெற்ற எட்டுச் சரக்குகளில்உவமையிலடங்கா துயர்ந்த ஒளி பிரகாசிக்கும்படியானஒன்றாகும். எ—று. 4

இது வெளிப்படை.

(வேறு)

படனெழு நெளியக் கிழியப்
  பணியுடல் பதறப் பதறப்
படிகிடு கிடெனக் கிடெனப்
  பருவத முடைவுற் றிடைய-மிகுவேகம்

கடமுடு கடெனக் கடெனத்
  திடுதிடு திடெனத் திடெனக்
கருமுகில் வெளிறக் குளறச்
  சுடரொளி சுழலச்-சொரிசோனை

யிடையினி லுதிறச் சிதற
  வதனொளி பளெனப் பளென
ரணகள மறியக் குறிபோ
  லிடமதில் விழுகச் சுருளு-மெழிலாகக்

கடவுள ரனையத் திறமான
  கதிதனை திரியிற் றறியேழ்
சுழறிரு வினமும் பகரக்
  கருவினி லயலைந் தொடுரே-ரதனாமம்.

3-வது சரக்கு

இப்பாட்டில் 3-வது சரக்கின் பெயர் முதலியன கூறுகின்றார்.

(இ-ள்.) உலகத்தைத் தாங்கும்படியான ஆதீசேடன் முதலாகிய பாம்புளும் தங்களுடைய படத்தினது எழுச்சியானது குறைவுபட்டு நெளிந்து கிழிய பதறி ஹிம்சை யுறும்படியாகவும் அஷ்டகுல பர்வதங்களும் உடைந்து பின்னிடும் படியாகவும் கிடுகிடுகிடுகிடு கடமுடு கடகட திடுதிடுதிடுதிடு வென்று மோதியிடிக்

கின்ற பேரிடிகளோடு பொருந்திய கருப்பு நிறத்தையுடைய மேகங்களானவை பின் வெளிறும்படியாக மழைச்சொற் போன்ற சளசள வென்னும் சப்தத்தோடு கிரணங்களையுடைய பிரகாசமானது சுற்றிச் சுற்றிப் பிரகாசிக்க பொழிகின்ற சோனைமாரியின் மத்தியில் அம்மழைத் துளிகளோடு உதிர்ந்து சிதற அதனுடைய பிரகாசமானது பளபளவென்று ஜொலித்துச்சுத்த வீரர்களது போர்க்களத்தைத் தெரிவிக்கும்படியான அந்த இரத்த பிரவாகத்தைப்போல் சிவப்பு நிறத்தையுடையதாகி பல இடங்களிலும் விழுந்து அழகினோடு சுருண்டு கொண்டிருக்கும். தேவர்களுக்கு அன்னை போன்றவனாகிய அத்திறம் பொருந்திய அமரேசனது சினத்தையும், மூன்றாமடியில் ஏழெழுத்துக்களை நீக்கி நின்ற இரண்டெழுத்துக்களையும் மூலமாகிய பகரத்திற்கு ஐந்தா மெழுத்திற்குப் பக்கத்திலுள்ள ஆறாமெழுத்தையுங் கூட்ட எப்பத மமையுதோ அப்பதத்தையே தன் பெயராக வுடையதாம் இதுவே மூன்றாவது சரக்காம்.எ—று,

சூக்ஷம விளக்கம்: இதில் அமரேசன் (இந்திரன்) அவனுடைய சினமாவது (கோபம்) இப்பாட்டின் மூன்றாமடியில் ஏழெழுத்துக்களை நீக்கி நின்ற இரண்டெழுத்துக்கள் (ச்சி) பகரத்தின் ஐந்தாமெழுத்திற்குப் பக்கத்திலுள்ள ஆறாமெழுத்தாவது (பூ) ஆக இந்நான்கையும் முறையே கூட்டிப் பார்க்க (இந்திர கோபப்பூச்சி) யென்றானது. இதில் இந்திரன் கோபமென்னு மிரண்டிற்கு மத்தியினுள்ள (னகர) மெய் கெட்டதும், கோபம், பூச்சி யென்னு மிரண்டிற்கு மத்தியிலுள்ள (மகர) மெய் கெட்டு (பகர) மெய்யானதும் இலக்கண விதிபற்றி யென வறிக. மேற்கண்ட (இந்திர கோபப்பூச்சி) யென்னும் பெயரே இப்பாட்டிற் குறித்த வஸ்துவினது பெயராம்.

எண் சீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

நாமென்ற விந்தமருந் ததனாலிந்த
நானிலத்திற் சதாருப மிகுக்க லாச்சு



தாமந்த சரக்கறிந்து செய்யானாகிற்
சடுதியிலே வாதம்விட் டோடலாச்சு
காமென்ற கமுகுவெள் ளிலையை யுண்டு
கக்குகின்ற பெயருமிந்தக் கருவுமாச்சு
சாமென்ற சாகரத்தி னந்தமெட்டின்
சரக்கொன்றாற் றங்கமகா மேரு வாச்சே.

இதில் மேற்குறித்த சரக்கிற்கு இன்னுமொரு பெயர் கூறுகின்றார்

(இ-ள்.) நாம் சொன்ன இந்த மருந்தினாலேயே இப்பூமண்டலத்தில் பொன்னானது அதிகரிக்கலானது. ஒருவன் தானாக அந்தச் சரக்கை யறிந்து செய்யானேயாகில் வெகு சீக்கிரத்தில் வாதமென்ற தொழிலானது அவனை விட்டு நீங்குதலாகும். இன்னும் அச்சரக்கை ஆராயுமிடத்து விரும்பத்தக்க பாக்கு வெற்றிலையை மென்று கக்குகின்ற பொருளினது பெயரையும் இந்தக் கருவானது பொருந்தும். மனோவியாகூல மனைத்தையும் ஒழிக்கத்தக்க இந்த இலக்க சௌமிய சாகரமென்னும் நூலிற் சொல்லப்பட்டிருக்கின்ற அந்த செந்தூரத்தின் முதன்மை பெற்ற சரக்குகள் எட்டில் இதுவுமென்றாம். இதனால் தங்கமானது மகா மேருபோல குவியலாச்சு தென அறிக, எ—று.

சூக்ஷம விளக்கம் = பாக்கு வெற்றிலையை மென்று துப்புகின்ற பொருளுக்குச் சாதாரணமாய் உலகத்தில் வழங்கப்படும் பெயராவது (தம்பலம்.) இதைமேற் பாட்டிலேயே ரூபலக்ஷணம் பெயர்முதலியவைகளாலும் நிச்சயமாகப் பூச்சியென்று குறிப்பிட்டிருப்பதால் அந்தப் (பூச்சி) யென்ற பெயரையும் இந்தத் (தம்பலத்தினோடு) கூட்டினால் (தம்பலப் பூச்சு) யென்றானது. இவ்விரண்டும் புணர்ந்தவிதமாவது: தம்பலம் பூச்சி- தம்பலப்பூச்சி. இவைகளில் தம்பலம் என்னும் பதத்தின் ஈற்றில் நின்ற (மகர) மெய்கெட்டுப் (பகர) மெய்யானது'' மவ்வீனொற்றொழிந்து,. என்னும் நன்னூற்

சூத்திரவிதியா லெனவறிக இச்சரக்கிற்கு முற்பாட்டில் (இந்திர கோப) மெனப் பெயர் கூறப்பட்டிருப்பினும் சந்தேகமறத் தெளிந்து கொள்ளும் பொருட்டு இச்செய் யுளிலும் அதற் கேற்பட்ட (தம்பலப்பூச்சி) யென்னும் வேறுமொரு பெயரையுங் கூறினரர். இது இந்நூலா சிரியர்க் கேற்பட்ட ஜீவகாருண்யமே யாம்.

இதற்கு அரபியில் காங்னா என்றும், அருஸ் என்றும், பார்ஸியில் கிச்மே அருஸக் என்றும், இந்துஸ் தானில் பீர்பஹூடி என்றும், தமிழில் தம்பலப் பூச்சி, பட்டுப்பூச்சி. இந்திரக் கோபப்பூச்சி என்றும் கூறுவர்.

இதனைத் தூள் செய்து, மணலைப் பரப்பி ஜலத் தைத் தெளித்து ஈரமுண்டாக்கி அதன்மேல் தெளித்து வரகுவைக்கோலைப் போட்டு மூடிவைக்க வேண்டும். பிரதி தினமும் அதன்மேல் ஜலத்தைத் தெளித்து வரவும் வேண்டும். இவ்விதம் ஒரு வாரம் செய்து வந்தால் அந்தப் பூச்சி பலமாக ஜனித்துப் போம். இது எப்போ தும் கிடைக்கா தாகையால், அவசியமான காலங்களில் இவவிதம் உற்பத்தியாக்கிக் கொள்ளலாம். 6

வண்ணச் சந்த விருத்தம்

புடவியுயர் நாப்பணுறப்
பொக்குப் பொகுட்டெனவே
புரளகட கடெனவனந்
தொக்குத் தொகுத்தெனவும்
பொங்கிக் கொதிப்பமுறத்
திக்குத் திகுத்தெனவே—யறலேக

தடவிதனி தத்தித்
தகுத்துத் திகுத்தெனவுஞ்
சஞ்சலமுங் கத்தித்
ததும்பிந் திரக்ஷிபெறத்
தாராதரக் குலமும்
வீறா யுழன்றொளிரு—மதனூடே



அடவினுரை யளவினுரை
சுற்றிச் சுழிக்கநுரை
யரிதரிதி தரிதரிது
சுத்தத் துகிற்குலமு
மமையுமுயிர் வகைவகைகள்
மொய்த்துக் கிடக்குமதில்—வெகுகோடி

திடலையொரு குழியெனவே
திட்டிக் கொழிக்குமது
சிறியவொரு குழியதனை
கட்டிக் கனக்கவுறுஞ்
செல்வமுற வெந்நாளுங்
கும்மென் றடிப்பவனாம் பகர்வேனே.

4வது சரக்கு

இப்பாட்டினால் மேற்கண்ட சரக்கு உண்டாகு மிடத்தை வருணிக்கின்றார்.

(இ-ள்) கீழ்ச் சொல்லப்புகும் ஒன்று :—இப் பூமியானது தன்மத்தியிற் பொருந்தும்படியாகக் குமிழிக ளானவை தாமரை யரும்பைப் போல புரளவும் ஜலமா னது கடகடவென்றும் தொக்குத் தொக்குத் தென்றுஞ் சப்தத்தை யுண்டாக்கிப் பொங்கிக் கொதிக்கவும், கருமணல்களானவை திக்குத்திகுத்தென்று கரைகளி னிடமாகப் போய்ச்சேரவும், அலைகளாகிய கரங்களி னால் தரையைத் தடவி ஒப்பற்றுத் தாவித் தகுத்துத் திகுத்து என்று குதித்து ஆடுவதினால் சங்குக் கூட்டங்க ளெல்லாம் சூலினால் ஏற்பட்ட வருத்தஞ் சகிக்காது கத்தித் தள்ளாடிக் கூட்டங் கூட்டமாகத் திரியவும், மேகக் கூட்டங்களெல்லாம் விறாப்போடு தன் மத்தியிற் சுற்றிச் சுற்றித் திரியவும், வரிசைக் கிரமமாகவும், அளவில்லாததாகவும் ஏற்படுவதாயுள்ள நுரைகள் சுழன்று சுழன்று சுழிக்கவும், உயர்ந்த இது கிடைப்பது அரிதரிதென்று சொல்லத்தக்க பரிசுத்தமாகிய பவளக்

கூட்டங்கள் பொருந்தியுள்ளதும், கோடிக்கணக்கான பலவகையாயுள்ள ஜீவராசிகள் நெருங்கித் திரியத் தக்கதுமாகும். இது திட்டாயிருக்கு மோரிடத்தை மோதிக் குழியாகச் செய்து அம்மண்ணைத் தெள்ளிக் கொழிக்கும். சிறிதாகிய ஒரு குழியை மண்ணைக் கொண்டுபோய்ச் சேர்த்துக் கெட்டிப்படுத்தி மேடாக்கி விடும். செல்வம் பொருந்தும்படியாக எந்தக்காலத்தும் கும்மென்னும் ஓசையோடு கரைகளில் மோதிக்கொண் டிருக்கும். இதுவே மேற்படி சரக்கு உண்டாகுமிடமாம், இன்னும் கூறுவேன். எ—று.

சூக்ஷூம விளக்கம்—இப்பாட்டிற் குறித்த குணங் குறிகளால் தீர்க்கமாகச் சமுத்திரமென்று நிச்சயப் படுகிறது. இதுவே கீழ்ச் சொல்லப்போகிற 4வது சரக்கு உண்டாகும் இடமெனத் தீர்மானிக்க வேண் டியது. மேற்கண்ட இலட்சணங்களால் சமுத்திர மெனத் தானே வெளிப்படையாக விளங்குதலால் இதற் குப் பெயர் கூறாது விட்டாரென்க. (7)

ஷை வேறு

மிகுவாய் விகுவாய் வீரமுறு வங்குழும்
விரண்டே சுழன்றே சேர்த்தடிக்கும்
போதையில் வியனாகித்

துகுவாய் நுகுவாய் வெண்டிரைக ளோங்கியே
துகையா யிறுகச் சூரியனின்
சுடரினாற் றகடாகி

சகுமாச் சலிலந் தன்னிலை நிற்கவே
சருகாக் காலின் றத்தித்தத்
தித்திசை தனிற்சாரும்

கொகுவாக் ககரும் டகரொடு லகர்கடை
நூனா சகரினிலெட் டின நீக்கியொன்
றதனாமம்.

---



இப்பாட்டில் மேற்குறித்த சமுத்திரத்தில்
அந்தச் சரக்கு உண்டாகிற விதத்தையும்
அதன் பெயரையும் கூறுகின்றார்.

(இ-ன்.) மேற்குறித்த கடலின் ஜலப் பிரளய மானது மிகுந்த வேகத்தோடு பொருந்திச் சுற்றிச்சுற் றிக் குதித்தடிக்கும்போது ஆச்சரியப் படத் தக்கதாகிய வெள்ளிய அலைகளானது கூட்டங் கூட்டமாய் ஓங்கி அடிப்பதினா லுண்டாகி அளவற்றதாய்க் கெட்டிப்பட்டு அதன்மேல் சூரியனுடைய வெப்பமானது பட அதனாலே தகட்டின் ரூபமாகி உயர்ந்த தன்மையை யுடைய அந்தச் சமுத்திர ஜலத்தி னிடமாகக் காற்றில்லாத விடங்களில் நிலையாய் நிலைத்து நிற்க பின் அதன் மேல் அளவற்ற காற்றானது ஒரு காலத்தில் மோத அந்த வேகத்தினால் தாவித் தாவி நான்கு திக்குகளிலு முள்ள கரைகளில் வந்தடையும். குறையாத ககரமும் டகரமும், லகரத்தின் கடையும், நூனாவென்று உலக வழக்கிற் சொல்வதாகிய நுகரமும், ரகத்தின் எட்டா மெழுத்தை நீக்கிய வொன்பதா மெழுத்தும், கூடினால் எப்பதங்களமைகின்றனவோ அப் பதங்களே இப் பொருளின் பெயராகும். எ-று.

சூக்ஷூம விளக்கம்:—முதலிற் சொல்லிய ககர மாவது (க.) இரண்டாவது சொல்லிய டகரமாவது (ட.) மூன்றாவது சொல்லிய லகரத்தின் கடையாவது(ல்.) நான்காவது சொல்லிய நுகரமாவது (நு.) ஐந்தாவது சொல்லிய ரகரத்தின் ஒன்பதா மெழுத்தாவது (ரை.) ஆக இவ்வைந் தெழுத்துக்களையும் முறையே கூட்ட (கடல் நுரை) என்றானது. இதுவே மேற்குறித்த 4வது சரக்கின் பெயராம். எ—று.

இதற்கு அரபி பாஷையில் ஜூப்ஜல்பஹர் என்றும், பார்ஸியில் கபேதர்யா என்றும், ஹிந்தியில் சமுந்தர் பைன் என்றும், தமிழில் கடல்நுரை என்றும் பெயர் இது இரண்டு வகைப்படும். ஒன்று நீண்டுசப்பட்டை,

ரூபமாக இருப்பது. இது வண்டி முதலியவைகளைத் தேய்த்துக் கழுவ உபயோகமாம். மற்றொன்று கட்டிக ளாக இருக்கும். இங்கு வேண்டியது அந்த வகைதான்.

(8)

எழுநீர்க்கழி நெடில்

விண்ட மாப்புகழ் குறிதனைச் செயலினை
விரைவினில் வகை வகை யாய்க்
கண்ட றிந்துநீ கருவது மாமிதிற்
கணக்குடன் சேர்ப்பாயால்
கொண்டு செய்திடும் வாதமு முன்றனைத்
துடர்ந் துட னுடன் றிரி யும்
அண்டர் போற்றிய செளமிய சூக்ஷத்தி
னந்தமி லொன்றாமே.

---

இப்பாட்டில் மேற்குறித்த சரக்கினது
பெருமையைப் புகழ்ந்து சொல்கின்றார்.

(இ-ள்.) மேற்பாட்டிற் சொன்னபடியே சிறந்த குணங்குறி செய்கை முதலியவைகளை வகை விபர மாகக் கண்டு கருவென்று சொல்லுகின்ற எட்டுச் சரக்கு களு ளொன்றாகிய இந்தக் (கடல்நுரை)யை இந்த முறையிற் கணக்குப்படி சேர்ப்பாயானால், வாதமென்று சொல்லப்பட்ட வித்தையானது உனக்குத் தொண்டு புரிந்து நீ போகுமிடங்களுக்கெல்லாம் கூடவே வரும். இந்தக் (கடல்நுரை)யானது தேவர்களும் கொண்டாடத் தக்க இலக்க செளமிய சாகரத்தின் சூக்ஷுமமாகிய அந்த செந்தூரத்தின் முக்கிய சரக்குகளிலொன்றாகும், எ—று.

சூக்ஷமவிளக்கம்:—வெளிப்படை (9)

வண்ணச் சந்த விருத்தம்

நலந்தி கழ்ந்துசிறந்துவி ளங்கிய
தலங்க ளென்றுபு கழ்ந்திடு தஞ்சையில்
நடிந்த தென்மது ரைப்புர முற்றிடு-மடையள்ளல்



அலர்ந்த வம்புய மேரடுறை வாவியி
லுலர்ந்து யர்ந்து கலந்தவ ணூரியே
அமிழ்ந்து சேதக மீதிலு றைந்திடு-மதனெல்லை
கலந்த பச்சை சிறந்திடுமேல்வயின்
சலஞ்ச லத்துறு சத்தமு முற்றது
கருமை யானது மேனியி லுற்றிடுங்-கதிர்போல
பலந்த ரும்மிது பண்புடன் கண்டறி
யலர்ந்திடுஞ்சகர் நாலகலை யைந்தெடு
பகர்ந்தி டேன்பக ரக்கடை யும்மலப்-பேராமே.

5-வது சரக்கு

இப்பாட்டினால் -5-வது சரக்கின் பிறப்பிட
மும் பெயருஞ்சொல்கின்றார்.

(இ-ன்) இச்சரக்கானது பல வளங்களாலும் சிறப் புற்று விளங்குவதாகிய இம்பூமண்டலத்தின் கண்உள்ள புண்ணியக்ஷேத்திரங்களிலெல்லாம் மேன்மைபெற்றவை களெனச் சொல்கின்ற தஞ்சைமாநகரம், திருவாலவாய் என்னும் மதுரை ஆகிய இத்தலப்பக்கங்களிலுள்ள மடைகள் பொருந்தினவைகளாயும், சேதுகள் நிறைந்த வைகளாயும், விரிந்த செந்தாமரைப் புஷ்பங்கள் நிறைந் தவைகளாயும் பிரகாசிக்கின்ற தடாகம், குளம், ஏரி முதலியவைகளில் ஜலம் வற்றிய காலத்தில் அவைகளி லுள்ள அச்சேற்றினுடனே காய்ந்தும், ஜலம் நிறைந்த காலத்திற் பழையபடி தானுமுண்டாகி அவைகளோடு கலந்து ஊர்ந்து ஜலத்திற் குள்ளாழ்ந்து சேற்றின் மேலிடத்தில் தங்கியு மிருக்கும். அதன் மேற்பக்கங்களில் பச்சைகலந்த கருப்பு நிறம் பொருந்தியிருக்கும். சங்கு களினுடைய சப்தத்தையுடையு தாயிருக்கும். கதிர் கதிராக அதன் உடம்பில் கருப்புவருணமானது பிரகா சித்துக் கொண்டிருக்கும். வெற்றியைக் கொடுப்பதாகிய இச்சரக்கைப் பிரியத்தோடு கண்டு தேர்வாய். விரிந்த சகரத்தினது நாலாவதெழுத்திற் கினமாகிய ஐந்தாவ

தெழுத்தையும். பகரத்தினது கடையெழுத்தையும், மலத்தினுடைய பெயரையும் எடுத்துச் சேர்ப்பாயானால் அதனுடைய பெயர் விளங்கும். எ—று.

குக்ஷுமவிளக்கம்:—சகரத்தின் நான்கா மெழுத்திற் கினமாகிய ஐந்தாமெழுத்து (சு,) பகரத்தின்கடையெழுத்தாவது (ப்) மலத்தினுடைய பெயராவது (பி) ஆகஇம் மூன்றையுங் கூட்ட (சுப்பி) யென்றானது. இதுவே மேற்குறித்த -5-வது சரக்கின் பெயராம். இப் பெயர் (சிப்பி) யென்றிருக்க வேண்டியது (சுப்பி) யென்றானது மரூஉமொழி யெனக் கொள்ளலாம். அல்லது வைத்தியப்பரிபாஷைச் சம்பிரதாயமெனவுங் கொள்ளலாம். இவைகளைத் தவிர (சுப்பி) யென்னும் பெயரானது சமுத்திரத்திலுள்ள முத்துச்சிப்பி முதலியவைகளுக்கும் ஆகுமானதால் அவைகளல்ல. இது தஞ்சாவூர் மதுரை முதலிய விடங்களிலுள்ள குளங்களிலுண்டாகும் குப்பிடுகிளிஞ்சியேயெனத் தாபித்துச் சந்தேகமொழிக்கும் பொருட்டு அவ்விதம் (சுப்பி) யெனப்பெயர் சொன்னாரெனவும் ஊகிக்கலாம். இது கும்பிடுகிளிஞ்சிதா னென்றதை அடுத்த பாட்டினாலும் விளக்குகின்றார். அதினாலுந் தெளிக மேற்குறித்த தான முதலியவைகளால் இன்னது தானென விளங்கினும் எள்ளத்தனையுஞ் சந்தேக மில்லாதிருந்தற் பொருட்டு இவ்விதப் பெயரையுங் கூறிக்காட்டினாரென வறிக. 10

(வேறு) விருத்தம்

மானிலமி துற்றவய மாக்களுரை கேண்மோ
கோனிலைமை யானவெழிற் கோவிலுறு கோவாய்த்
தானிலைமை யானதுரை சாகரத்தின் சூக்ஷம்
ஆனிலைமை யந்தமதி லொன்றுமிது கண்டாய்.

இப்பாட்டினால் முற்குறித்த சரக்கைத்
தெளிவுப்படுத்துகின்றார்.



(இ-ள்) இன்னமும் அதன் நிலைமையைச் சொல்வேன். கேட்பாயாக பூலோகத்திலுள்ள சிறந்தமனிதர்களெல்லாம் சிரேஷ்டமான தன்மையையுடைய அழகுபொருந்திய தெய்வாலயத்தில் எச்செயலைச் செய்வார்களோ அச்செயலின் குறிப்பையுடையது. இதுவே இலக்க சௌமிய சாகாரத்தினது சூக்ஷம். உண்டான பெரிய நிலைமையையுடைய அந்த செந்தூரத்திற் சேர்க்குஞ் சரக்குகளில் இதுவும் ஒன்றென அறியக்கடவாய். எ—று.

சூக்ஷுமவிளக்கம்:—தெய்வாலயத்திற் பக்தியிற் சிறந்த ஜனங்கள் செய்யும் செயலாவது (கும்பிடல்) கும்பிடலாவது:- இரண்டுகைகளையுஞ் சேர்த்துக்குவிக்கும்போது என்ன ரூபந்தோற்றுமோ அதே ரூபத்தை இந்தச் (சுப்பி)யும் அடைந்திருப்பதால், அதற்குக் கும்பிடுகிளிஞ்சில் எனக் காரணப் பெயர் ஏற்பட்டது. இந்தப் பாட்டினால் மேற்குறித்த (சுப்பி) கும்பிடுகிளிஞ்சில் தானென்பதை விளக்கமாகக் காட்டினார்.

இதற்கு இந்துஸ்தானியில் கூங்கா என்றும், தமிழில் ஊமச்சி, கும்பிடு கிளிஞ்சில் என்றும் பெயர். 11

வண்ணச்சந்த விருத்தம்

ஆலைய மீதிலு றைந்த வண்ணிரு
வாதர மானசு வாமி தன்சிர
மாலையினூடு மிலாட மீதினும்-வடிவானோன்

வேலையு றும்புவி கோவிலாளொளிர்
வீரமு றும் நுதன் மீதிலுற்றவன்
சாலவு மேமிகு வாடை பெற்றவன்-வனம்
வெள்ளை

நூலிடை மங்கையர் பூசு மஞ்சளி
னொய்வொடு சேர்கினு மேசிவப்பவன்
பஃலடு வாய்ச்சவ றற்சு ருங்கிய தகைபோல

சோலையு றும்புக ழான பாசடை
தூரினி னற்றுளை தானமுற்றிடு
வாலுட னேமுக நீளமுற்றவன்-வடிவண்டம்.

6-வது சரக்கு

இப்பாட்டினால் சரக்கினது தன்மையும் அது உண்டாகு மிடத்தின் பெருமையிற் சிறிது முறைக்கின்றார்.

(இ-ள்) தெய்வாலயங்கள் தோறும் தங்கிச் சிறந்தது. அத்தலங்களிலுள்ள தெய்வங்களினது சிரத்திற் றரிப்பதாகிய புட்பமாலைகளின் நடுவிலும் அத்தெய்வங்களினது நெற்றியிலும் பொருந்தி மிகுந்த அழகைப் பெற்றது. சமுத்திரஞ் சூழ்ந்த பூமண்டலத்தை அரசாளும் இராஜாக்களினது மனையரின் பிரகாசிக்கும்படியான நெற்றியிலும் விளங்கிக் கொண்டிருப்பது. மிருதியாகிய நல்ல சுகந்தவாசனையை யுடையது. இதன் நிறம் வெள்ளையாயிருக்கும், நூலிழைபோன்ற இடுப்பினையுடைய ஸ்திரீகள் உரைத்துப் பூசுவதாகிய மஞ்சளோடு சேர்ந்தால் பாலில் உரைக்குத்தினால் எப்படிச் சுருங்கிக் கட்டிவருமோ அது போல மிக விரைவில் அந்த மஞ்சளையுஞ் சிவக்கும்படி செய்வது. இப்பேர்ப்பட்ட சரக்கு உண்டாகுமிட மெதுவென்றால், சிறந்த சோலைகளிலேயுள்ள பச்சிலை பொருந்திய மரங்களினது தூரிலே துளைசெய்து அதை வாசஸ்தானமாக வுடையதும், வாலும் முகமும் நீண்டு முகமானது கோழிமுட்டை வடிவமாக வுடையதும். எ—று. (12)

சூக்ஷ்ம விளக்கம்:— இதுமுதல் மூன்றுபாட்டுகளும் குளகமாகையால் மற்றவை பின்பு கூறுவார்.

கலிவிருத்தம்

கானி லோடிய குக்குடங் காலியும்
மீனி னங்கண் மிகுநண்டு நத்தையும்



ஊனொ ழுகு முயிர்வகை யுண்பவன்
மானி னத்தை மருட்டும் விழியினன்

இப்பாட்டிலும் மேற்கண்ட சரக்கு உண்டாகு மிடத்தையே வருணிக்கின்றார்.

(இ-ள்) காடுகளில் ஓடுவதான கோழி, நண்டு, மீன்கள், நத்தைகள் முதலான நிணமொழுகுவதான உயிர்ப்பிராணிகளை யுண்பதும், மான்கூட்டங்களையும் மயக்கும்படியான இரண்டுகண்களை யுடையதுமான வோர் பிராணியாம். எ—று.

சூக்ஷ்ம விளக்கம்: இந்தப் பிராணியி னிடமாகவே மேற்குறித்த 6 வது சரக்கு உண்டாகுமென வறிக. இந்தப் பிராணியின் பெயர் முதலியன பின் கூறுவார்.

எண்சீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

புகலுவேன் வானுனியில் வெள்ளை யாகும்
பூரியமாக் கந்தரமு முனையாய் நீளும்
தகையுடனே முதலெழுத்து மதனுள் ளூறுஞ்
சார்பான வத்தொடையிற் பதினைந் தோடு
மகிமையுறு மவ்வடியிற் பதினே ழோரு
மகத்தான வத்தொடையி லிருபத் தெட்டாந்
தொகை பெருக்கிப் பார்க்கிலதன் பெயருமாகுஞ்
சொல்லுகிறேன் கருமையுற்றாற் சேர்த்திடாதே.

இந்தப் பாட்டில் மேற்கண்ட பொருள் உண்டாகும் இடமாகிய பிராணியினது இலட்சணங்களையும் பெயரையுங் கூறுகின்றார்

(இ-ள்) மேற்பாட்டிற்கு குறித்த பிராணிக்கு வால் நுனியானது வெள்ளையாயிருக்கும். கழுத்தானது முனையாய் நீண்டிருக்கும். தகுதியுடனே இப்பாட்டின் முதலடியில் முதலெழுத்தும், அவ்வெழுத்து நீங்கிய ஆறாவதெழுத்தும், அந்த அடியின் பதினைந்தாமெழுத்தும், அவ்வடியின் பதினேழா மெழுத்தும், அந்த

அடியின் இருபத்தெட்டா மெழுத்தும் சேர்த்துக் கணக்கிட்டுப் பார்த்தால் அந்தப் பிராணியின் பெயராகும். இப்பிராணியி னிடத்தோ 12ம் பாட்டில் வருணித்த சரக்கானது உண்டாகும். அந்தச் சரக்கானது வெள்ளை நிறமின்றிக் கறுப்பு நிறமா யிருக்குமேயானால் அதை இம்முறையிற் சேர்க்கத் தகாவாம்.

சூக்ஷும விளக்கம்:— இப்பாட்டில் முதலடியில் முதலெழுத்தாவது (பு.) அந்த எழுத்து நீங்கிய ஆறாவதெழுத்தாவது (னு.) அந்த அடியிள் பதினைந்தாமெழுத்தாவது (கு.) அந்த அடியின் பதினேழாமெழுத்தானது (பூ.) அந்த அடியின் இருபத்தெட்டாமெழுத்தாவது (னை.) ஆக இந்த ஐந்தெழுத்துக்களையுங் கூட்டிப்பார்க்க (புனுகுபூனை) யென்றானது. இதுவே மேற்குறித்த 6வது சரக்கு உண்டாகுமிடமாம். இந்தப் (புனுகுபூனை) யினிடத்திலுண்டாகுஞ் சரக்குகள் பலவாயினும் 12ம் பாட்டிற் குறித்த லக்ஷணங்களினாற் (புனுகென்பது) நிச்சயப்பட்டது. அதிலும் இது வெள்ளைப் புனுகாயிருக்க வேண்டுமென்பதை அந்தப் பாட்டிற் குறிப்பிட்டிருப்பதைத் தவிர இந்தப் பாட்டின் ஈற்றிலும் கருமையுற்றாற் சேர்த்திடாதே எனவுங் குறித்தார். இந்த வெள்ளைப் புனுகிற்குப் பரீக்ஷையாவது:—மஞ்சளிற் சேர்த்தால் உடனேசிவந்து விடுவதேயாம். இது மேற்கண்ட படி வெள்ளையாயினும் இந்த விதமாகவும் பரீக்ஷித்துக் கொள்ளவேண்டியது. 14

15ம் பாட்டு: இந்தப் பாட்டில் நானுரைத்த இலக்கிய சௌமிய சாகரத்தின் முறைப்படி ஒருவன் கண்டறிந்து செய்வானேயாகில் அவனுக்கு எல்லாச்சிறப்பு முண்டாகுமென்றும் மேற்குறித்த சரக்கானதும் அந்த செந்தூரத்தின் எட்டுச் சரக்குகளிலொன்றென்றும் சொல்கின்றார். வேறு விஷயமில்லை. ஆதலால் அப்பாட்டை யிங்கு சேர்க்காது விடுத்தோம்: வேண்டியவர்கள் மூலத்தைப் பார்த்துக்கொள்க.



வண்ணச் சந்த விருத்தம்

படியின்மக ளேயுழன்று பணியின்படமேயகன்று
   பதறிவிழுவோ மென்றெண்ணி பருமார்ப்பாய்க்
கடலமிக வாக்ரமித்துக் ககனவெளியே நிரம்பிக்
   கதிர்தவழ வேயுயர்ந்த—கனபார
முடியின்முகி லேகிடந்து முதிரமுற வேகமத்தின்
   முகிடுகிடு வென்றவோசைத்—தொகையார்ப்பத்
தொடுவலரின் மேலுறைந்து சுரதமொழி பாடும்வண்டு
   தொகையினமு மேகிகுந்து—துதிபாடும் (15)

7-வது சரக்கு

இந்தப் பாட்டில் மேற்குறித்த சரக்கானது உண்டாகுமிடத்தை வருணிக்கின்றார்.

(இ.ள்) மேற்கண்ட சரக்கு உண்டாகுமிடமாவது:- பூமிதேவியும் வருந்தும்படியாகவும், அவளைத் தாங்கும் ஆதிசேடனும் தன்னுடைய படமானது சுமை பொறுக்காத காரணத்தினால் விசாலமாகி விழுந்து விடுமோவென்ற பயத்தைக் கொண்டு பெருமுச்செறிந்து மயங்கத் தன்னுடைய தேகமானது பூவுலகமெங்கும் சென்று மூடும்படி யாகப் பெருத்து உயரத்தினால் ஆகாய வெளி முழுவதையும் நிறைத்து சூரியன் தவழும்படியான மேன்மையுற்றதும்; தன்னுடைய சிகரத்தில் மேகங்களானவை தங்கி உதிர் தலையுடையனவாய் அண்டமுகடானது கிடுகிடு வென்றதிரும்படியான இடிகளைச் செய்து மழைபொழிவதாலுண்டான ஓசைகளை யுடைத்தானதும், புஷ்ப விதழ்களின் மேலேயிருந்து இனிமையான கீதங்களை வண்டுக் கூட்டங்கள் பாடிக்கொண் டிருப்பதுமான சிறப்பினையுடையதாம்.

சூக்ஷும விளக்கம்:—மேற்குறித்த இலக்ஷணங்களாலும் சிறப்புகளாலும் இந்தத் தானமானது உன்னத மலைகளென்றும் அதனிடத்திற்றான் பின்வரும் சரக்கு உண்டாமென்பதும் பெறப்பட்டது. (16)

### சந்த விருத்தம்

இங்குரைத் தான மிடைக்கிடை சூழ்மணன்
    மாதிர மின்னிடையில்
தங்கி யகீழ்நல் சதாரூபமோடுறை
    தனிபள பளபளெனப்
பொங்கியே மின்னிமு ளைப்பல னாந்திரி
    தளைமுத லோடுபுகழ்
தங்கிய வைந்தின நீக்கிடு ரெண்டொடு
    சார்ந்திடு மீரினமே.

இந்தப் பாட்டில் அந்தச் சரக்கானது உண்டாகும் விதத்தையும் அதன் இலக்ஷண முதலியவற்றையும் கூறுகின்றார்.

(இ-ள்) மேற்குறித்த பாட்டிற் சொன்னது போன்ற மலைகளின் இடையிடையே தங்கிக் கிடக்கின்ற மணற்களானவை மேகத்தினிடமாக விருந்துண்டாகும்மின்னலினிடத்துள்ள பிரகாசமானது மத்தியில்-மத்தியில் தங்கித் தங்கத்திற்குச் சமானமாகி ஒப்பற்றுப் பளபள வென்னும் ஒளியினை யுடையதாய் அதிகரித்து உண்டாகத் தக்கதாம். இப்பாட்டின் மூன்றாவ தடியின் முதலெழுத்தும், மேற்படி அடியில் ஐந்தெழுத்தை நீக்கிப் பின்னால் நின்ற இரண்டெழுத்துக்களும் அதற்குப் பின்னாலுள்ள மற்றை யிரண்டெழுத்துக்களும் அதன் பெயராகும்.

சூக்ஷ்ம விளக்கம்:— மூன்றாமடியின் முதலெழுத்தாவது (பொ) மேற்படி அடியின் ஐந்தெழுத்துக்களுக்கு பின்னின்ற இரண்டெழுத்துக் களாவன (ன்னி.) அவைகளுக்குப் பின்னின்ற இரண்டெழுந்துக்களாவன (முளை.) ஆக இம்மூன்றையும் முறையே கூட்டப் (பொன்னிமுளை) என்றானது. இதுவே மேற்குறித்த 7வது சரக்காம். மேற்குறித்த இரண்டு பாட்டுகளாலும் இந்தச் சரக்கானது அதிக உன்னதமும் பல வளங்களும் நிறைந்துள்ளதான பெரிய மலைகளில் இடைக்கிடையே யுண்டாகி மின்னலைப்போல பிரகாசமுடைய



தாகியும் தங்கத்துக்குச் சமானமாயும் விளங்கா நின்ற ஒருவகைத் தங்கமண்ணென்பது நிச்சயமாய் விளங்குகின்றது. 16-வது பாட்டினால் அத்தகைய சிறப்புள்ள மலைகளில் மட்டும் உண்டாகுமே தவிர மற்றைச் சாமானிய மலைகளில் உண்டாகாதென்பதும், இது சாமானியமாகக் கிடைப்பது அரிதென்பதும், வைத்தியத் திற்றேர்ச்சி பெற்ற அனுபவசாலிகளுக்கே பிரயாசையின்றி எளிதிற் கிடைக்குமென்பதும் தானே புலப்படுகின்றது. இதன் பெருமையை அடுத்த பாட்டில் விளக்குகின்றார். (17)

(ஷை வேறு)

வயதது வொன்பது முரைதனில் வந்திடும்
    வளரடி தூளாகு
நயமிகு சுந்தர மாழையி லுந்திற
    நடிபொடி தூள்விழுகுஞ்
சுயமுறு விந்தினு தனிமுறை யொன்றினந்
    தனிலுறு தந்திரமாந்
தயவுறு சௌமிய தலைமையி னந்த
    சரக்கினி லொன்றாமே.

இந்தச் செய்யுளில் மேற்குறித்த சரக்கினது பெருமையையும் சில குணங்களையும் கூறுகின்றார்.

(இ-ள்) இந்தப் பொன்னிமிளையானது ஒன்பது. மாற்றுள்ளதாகும், அடித்தால் தூளாகுஞ் சுபாவமுடையது, அடிக்கும்போது இதனூடு அழகு மிகுந்த தங்கத்திலும் மேலான பொடிகளானது உதிரும். வெற்றி மிகுந்த இந்தக் கருவானது இந்நூலிற் சொல்லப்பட்ட தலைமை பெற்ற முறையில் ஓரினமாகப் பொருந்தும் மேற்படி முறையாகிய அந்த செந்தூரத்தின் எட்டு வகைச் சரக்குகளில் இதுவுமொன்றாகும் (18)

சூக்ஷ்மம்;— வெளிப்படை

எண்சீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

பாரப்பா தரளமுயர் மாலைசூடிப்
பாங்கொளிவாய் வெண்டுகு தனை யணிந்து
சீரப்பா தவளமுறு கமல மேலாய்ச்
சிம்மாத னக்கொலுவில் வீற் றிருப்பாள்
பேரப்பா செய்யாளென் றுரைப்பார் கண்டீர்
பீடுடையா ளிருக்குமந்தப் பெருமைதன்னால்
தாரப்பா படியின்வனம் வெண்மை யாகுஞ்
சார்ந்திருந்த சராசரமும் வெண்மை யாமே.

8வது சரக்கு

இதில் மேற்கண்ட சரக்குண்டாகுமிடத்தின் பெருமை கூறுகின்றார்.

(இ-ள்) முத்துக்களாலே தொடுக்கப்பெற்ற உயர்ந்த மாலையைத் தரித்து அழகும் பிரகாசமும் பொருந்திய வெள்ளை நிறமான வஸ்திரத்தை யுடுத்தி சிறப்புற்று பொருந்திய வெண்டாமரைப் புஷ்பத்தையே மேலான சிம்மாதனமாக்கிக் கொலுவீற்றிருந்து அரசு செய்பவளாகிய வித்வான்களுக்குச் செல்வந் தருபவ ளென்று சொல்லத்தக்க பெருமை தங்கிய சரஸ்வதி யானவள் இத்தலத்திற்கு வாசஞ் செய்து கொண்டிருப்பாள். அந்தச் சீர்கதியினால் மேற்கண்ட பூமியானது வெள்ளை நிறமாகவே யிருக்கும். அவ்விடத்துள்ள ஸ்தாவரசங்கம முதலிய எல்லாப் பொருள்களும் வெண்மையாகவே யிருக்கும். இத்தன்மை யுடைய தானமே மேற்குறித்த சரக்கானது உண்டாகுமிடமாம்.

சூக்ஷம விளக்கம்:—இந்தப் பாட்டினால் பின் கூறப்போகும் சரக்கானது வெள்ளை நிறமான ஓர் பூமியில் உண்டாகுமென விளங்குகிறது. இதைத் தவிர அந்தப் பூமியில் உள்ள சகல பொருள்களும்வெளுத்து மண்ணும் வெளுத்திருப்பதால் சிறப்புப்பற்றியதைச் சரஸ்வதி வாசஞ் செய்யுமிட மெனக் குறிப்பித்தார். இதனால் மேற்குறித்த சகல இலக்ஷணங்களும் பொருந்தியுள்ள இடத்தில் தான் இந்தச் சரக்கு விளையுமே



யன்றி மற்ற விடங்களில் உண்டாகா தென்னும் விஷயம்
நிச்சயப்படுகின்றது. 19

இதுவுமது

அங்குறைந்து வெண்ணீர்கட் சுண்டச் சுண்ட
வளறெழும்பிச் சுணங்கதுபோற் சலத்தி னிற்கும்
பொங்குமழைத் திவலையுற்றான் மீதிற்றோய்ந்து
புகழான வுள்ளமுந்திப் புடவி தோயுந்
தங்குமதி லுற்றிருந்த வண்ட லோடு
தத்தியே யுள்ளுழையிற் சார்பு செய்யுந்
துங்கமுறு வண்டலுற்ற கழியின் சேற்றை
தூய்மையென வுண்குமது சொல்லக் கேண்மோ

இப்பாட்டில் மேற்கண்ட தானத்தில் அந்தச்சரக்கு உண்டாகும் விதத்தைக் கூறுகின்றார்.

(இ-ள்.) அந்த வெள்ளை நிறமான பூமியிற்பொருந்திய ஏரி தடாகங்களிலுள்ள வெண்மையான ஜலமானது வெப்பத்தினாற் சுவறிப்போக அதனடியிற் படிந்திருந்த சேறானது மனிதர்களுடைய தேகத்தின் மத்தியில் உண்டாகும் ஓர் வகை வெள்ளை நிறமான தே மலைப்போல அத்தலங்களின் மத்தியில் ஓர் வகைச் சத்தானது மேலே படர்ந்திருந்து பழையபடி அக்குளங்களில் நீர் நிறைந்தவுடன் அந்தச் சத்துக்களானவை மேலே யெழும்பி ஜலத்தின்மேல் பலவித மாகப் பிரகாசித்துக் கொண்டிருக்கும். அவைகளின் மேல் ஓங்கிய மழைத்துளிகளானவை விழுந்த மாத்திரத்தில் அவைகள் ஒரு விதமாகக் கெட்டிப்பட்டு ஜலத்திற்குள்ளேயமுந்திப் பழையபடி பூமியிற் படியும். அப்படிப் படிந்தபின் அங்குள்ள சேற்றின் வண்டலில் தாவித் தாவி யுள்ளே நுழைந்து அடியிலுள்ள சேற்றில் தங்கி யிருந்து உயர்வுபெற்ற அந்தச் சேற்றின் வண்டலை உண்டு கொண்டிருக்கும் இன்னும் சொல்வேன் கேட்பாயாக.

சூக்ஷ்மவிளக்கம்,—இதனால் மேற்குறித்த பூமியிலிருக்கும் குளங்களில் ஜலம்வறண்ட காலத்தில் ஒருவித வெள்ளை நிறச்சத்து சேற்றின்மேல் தேமலைப் போற் படர்ந்து பழையபடி ஜலம் நிறைந்த காலத்தில் அது ஜலத்தின் மேலெழுந்து படர்ந்திருக்க, அதன்மேல் மழைத்துளி விழுந்தவுடன் கெட்டிப்பட்டு ஜலத்திற் குள்ளழுந்தி அங்குள்ள சேற்றிற்குள் நுழைந்து அந்தச் சேற்றையே கிரகித்துக் கொண்டிருக்குமென்றும், அதுவே பின்சொல்லப்படும் சரக் கென்றும் புலப்படுகிறது. மற்றவிபரங்களை அடுத்த பாக்களிற் கூறுவரென்றறிக. 20

### இதுவுமது

வெண்மையுற்ற வளறதுவுஞ் சேத கத்தை
விழுங்கியதால் முன்னிருந்த வெண்மை யற்றுத்
திண்மையுற்றுக் கருமையெய்தி மேனியெல்லாந்
தீயிலிட்ட கரியதுபோற் றிறமு மாகி
வண்மையுற்ற விரசிதத்தின் றிவலை போலும்
வந்திருக்குந் தளதளப்பாய்ச் சடல மெங்கும்
கண்மையின்றி யுள்ளுடைக்கி லதுபோற் காணும்
கதிர்தோய்ந்தாற் கண்கூசுங் கழறக் கேண்மோ.

இந்தப் பாட்டினால் அச்சரக்கின் ரூபலக்ஷணங் கூறுகின்றார்

(இ-ள்.) அந்தவிதமாகச் சேற்றிற்குள் படிந்திருந்த வெள்ளை நிறம்பொருந்திய அளறுரூபமான வஸ்துவானது அங்கேயுள்ள சேற்றை விழுங்கின காரணத்தால் முன்னிருந்த வெள்ளைரூபமானது மாறிக் கெட்டிப்பட்டு மேற்புறமெல்லாம் நெருப்பிலிட்ட மரக்கட்டையைப்போல் திறமான கறுப்பு நிறமாகி வளப்பம் பொருந்திய வெள்ளியின் துளியைப்போல புள்ளி புள்ளியாய்த் தேகமெங்கும் பிரகாசமாக உண்டாகியிருக்கும். அதை மயக்கமின்றி உடைத்துப் பார்த்தால்



மேலே கிளம்பியிருக்கும் வெள்ளிநிறமான புள்ளிகளைப் போலவே முழுதும் பிரகாசமாகக் காணும். சூரியப் பிரகாசமானது அதிற் படுமேயானால் பார்ப்பதற்கு அதிகமாகக் கண்கள் கூச்சமுறு வலவாகும். எ—று.

சூக்ஷ்மவிளக்கம்:—இதனால் அப்பொருளின் ரூபத்தைச் சந்தேகமறக்கூறினார். 21

### இதுவுமது

வெற்றியுடனிரதமது சிதறி னாப்போல்
மெய்யெங்குங் குறும்புள்ளி கலந்து நிற்குஞ்
சித்ரமுறும் வயிரத்தின் றளுக்கைப் போலே
சிலுசிலுப்பு மெத்தவுண்டு செப்பக் கேண்மோ
முத்தியுறு முதலடியில் முதலெழுத்தும்
மூதண்ட வவ்வரியி லிருபத் தேழைத்
தத்தியுட னீக்கியெடு விரண் டினத்தைச்
சார்பான லகர்கடையும் பேரு மாச்சே.

இந்தப் பாட்டில் அச்சரக்கினது பெருமையையும் பெயரையுங் கூறுகின்றார்.

(இ-ள்.) மேற்கண்ட சரக்கானது வெள்ளிப்பொடிகள் பூமியிற் சிந்தினாற்போல தேகமெங்கும் சிறிய புள்ளிகள் கலந்து தோன்றும், அழகுபொருந்திய வயிரத்தினது தளுக்கைப்போல சிலுசிலுவென்னும் அதிகப் பிரகாசத்தை யுடையதாயிருக்கும். இந்தப் பாட்டின் முதலடியின் முதலெழுத்தும், மேற்படி அடியில் இருபத்தேழு எழுத்துகளைத் தள்ளி நின்ற இரண்டெழுத்துக்களும், லகரத்தினது கடையும் அதனுடைய பெயராம் (எ—று)

சூக்ஷ்மவிளக்கம்:—முதலடியில் முதலெழுத்தாவது (வெ.) அவ்வடியில் இருபத்தேழெழுத்துகளை நீக்கி நின்ற இரண்டெழுத்துக்களாவன (ள்ளி.) லகரத்தின் கடையெழுத்தாவது (ல்.) ஆக இம்மூன்றையும் கூட்டிப்

பார்க்க (வெள்ளில்) என்றானது. இதுவே அந்த எட்டாவது சரக்கின் பெயராம். இதாவது (வெள்ளிநிமிளை) யெனப்படும். இதை வைத்திய சாஸ்திரங்களிற் பெரும் பான்மையும் (வெள்ளில்) எனவழங்கங்கட்டு வருவதால் அப்பெயரையே யிங்கு சூட்டினாரென்க, சரக்குகளின் பெயர்களைக் குறைத்தும் கூட்டியும் வழங்குவது வைத்தியப் பரிபாஷையின் சம்பிரதாயமாம். 22

இதுவுமது

முன்னுரைத்த வேழந்தம் பொன்னின்வித்து
    மூடிவைத்த கபாடமதைத் திறந்துவிட்டேன்
பின்னுரைத்த சரக்கொன்று வெள்ளிவித்து
    பேசாதே கசடருக்குப் புவியின்மீது
பொன்னுரைக்கும் பெருமையிதின் பெருமையல்லாற்
    புவிதனிலே வேறுமுண்டோ புகலக்கேண்மோ
பன்னுரைத்து சவுமியத்தி னந்தமெட்டின்
    பகருநல்லசரக்குகளு ளிதொன்றாமே.

இச்செய்யுளில் இந்தச சரக்கின் பெருமையையும் ஏழாவது சரக்கின் பெருமையையும் சேர்த்துக் கூறுகின்றார்.

(இள்.) இந்தச் சரக்கிற்கு முன்சொல்லப்பட்ட அந்த செந்தூரத்தின் ஏழாவது சரக்கானது பொன் விளைவதற்கு வினைதயாம், அதற்குப் பின்னுரைத்த இந்த எட்டாவது சரக்கானது வெள்ளிவிளைவதற்கான விதையாகும். ஆதலால் சித்தர்களால் மறைத்து வைத்திருந்து அந்தரங்கத்தை வெளியாக்கிவிட்டேன். இந்த உலகில் வீணாகிய மூடர்களுக்கு இந்த இரகசியத்தை வெளிவிடாதே. பொன் முதலிய உயர்ந்த வுலோகங்களை உரை கல்லில் உரைத்து மாற்றுப்பார்க்கும் பெருமை இந்தச் சரக்குகளினாலுண்டானதேயல்லாமல் வேறல்ல, இந்த எட்டாவது சாக்கும் இலக்க சௌமிய சாகரமென்னும் இந்நூலிற் கூறப்படும் அந்த



செந்தூரத்திற் சேர்க்கப்படும் ஒன்றாமென அறிவாய். எ—று.

சூக்ஷமம்—வெளிப்படை இது வரையிற் கூறப்பட்டுள்ள எட்டுச் சாக்குமே அந்த செந்தூரத்தின் தாய்ச் சரக்குகளாகும். (23)

24-ம் பாட்டு:—இந்தப் பாட்டில் மேற்கூறியுள்ள எட்டுவகைச் சரக்குகளையும் அறிந்தவர்களுடைய பெருமையைக் கூறுகின்றார். இது வெளிப்படையாகையால் உரை யெழுதாது நிறுத்தினோம். வேண்டினோர் அந்த மூல நூலைத்தருவித்து அப்பாட்டைப் பார்த்துக்கொள்க.

பஞ்சபூதக்குறி

எண்சீர்க் கழிநெடிலடி யாசிரியவிருத்தம்

மண்ணோடு தண்ணீருஞ் சடமு மாகி
    மனுவென்ற பெயருனக்கு வழுத்த லாச்சு
மண்ணோடு தண்ணீரின் மாசையுண்டா
    மெனுவசன மானிலத்திற் கேட்டிடாயோ
பெண்ணோடு மாணோடும் வகைய தாகப்
    பேசுதற்கு மரிதான பிராண னோடு
பண்ணோடு பண்ணானோ னமைத்த வாறு
    படிவத்திற் ருகள்வரைவ ருண்டுகண்டாய்

இது முதல் நான்கு பாட்டுகளால் கூறியுள்ள சரக்குகளுக்குப் பஞ்சபூதக்குறி சொல்கின்றார்.

(இ-ள்.) பிருதிவாகிய மண்ணின் கூறும், அப்புவாகிய ஜலத்தின் கூறுமே மிதந்து மானிட தேகமாகி மனிதனென்ற பெயர் சொல்லும்படியாக நின்றன. அதைப் போலவே மண்ணுந் தண்ணீரும் அதிகரித்துச் சேர்ந்து பொன்னுண்டா மென்னும் வாக்கியத்தை நீ இவ்வுலகத்திற் கேட்டதில்லையோ? ஆண் பெண் ணென்று பேசுவதாகிய இருவகைப் பேதமாகிற ஜீவன்

களிடத்தும், இராகங்களினிடத்தும், மற்றெவ்வகைப் பொருள்களிடத்தும் அந்தந்த ரூபமாய்க் கடந்து நின்ற பரஞ்சோதியின் கட்டளைப்படி இந்தப் பிரகாசம் பொருந்திய தங்கத்தினிடத்து மறைத்து நின்ற ஐந்து வகைப் பூதங்களுண்டென்பதை அறிவாயாக. எ—று.

சூக்ஷ்ம விளக்கம் : இந்தத் தேகமானது எவ்வாறு பஞ்ச பூதங்களாலும் தோற்றப்பட்டிருக்கின்றதோ அவ்வாறே மேற்குறித்த ஐந்து வகைப் பூதங்களாலும் பொன்னுண்டாமென்றும், அந்தப் பஞ்சபூதங்களும் முற்குறித்த எட்டுச் சரக்குகளாலும் அமைந்திருக்கின்றன வென்றும், ஆகவே இந்த எட்டுஞ் சேர்ந்தால் பொன்னாவது சத்தியமென்றும் பாட்டினாற் குறித்தார். உலகத்தில் எவ்விதமான பொருள்களுக்கும் பஞ்ச பூதங்களே காரணமென அறியவேண்டியது. (25)

—

26வது பாட்டு; இந்தப் பாட்டில் மாதர் கருப்பையிற் றங்கும் புருஷர்களினது விந்து நாதத்தைப்போல இரகசியமாகத் தங்கத்திலும் ஐந்துவகை பூதங்களுண்டென்பதாகக் குறிக்கின்றார். இது வெளிப்படையாதலால் இப்பாட்டை யிங்கு சேர்க்காது விடுத்தோம். வேண்டியவர்கள் மூலத்தைப் பார்க்க.

எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

முன்புரைத்த சரக்கினத்தி லந்த மைந்து
முக்கியமுறு சரக்கினத்தி லந்த நான்குந்
தென்புரைக்கும் வீரமுறச் செய்யு மந்தச்
செம்பொன்னி லைந்திலொன்று தண்ணீராகும்
என்புரைக்குஞ் சரக்கினத்தி லந்த மெட்டு
மெழிலான சரக்கினத்தி லந்த மேழுந்
துன்பகற்றும் பொன்னிலைந்து சூக்ஷந்தன்னிற்
சூதறவே மண்ணொன்று சொல்லி னேனே.

———



இது முதல் இரண்டு பாட்டுகளிலும் மேற்குறித்த எட்டுவகைச் சரக்குகளிலும் பஞ்சபூதங்கள் நிறைந்திருக்கும் வகையைச் சொல்கின்றார்.

(இ . ள். ) முன்னாலே சொன்ன அந்த செந்தூரச் சரக்குகள் எட்டில் ஐந்தாவதும் நான்காவதும் இதே அந்த செந்தூரத்தினா லுண்டாவதான பொன்னிலிருப்பதாகச் சொன்ன ஐம்பூதங்களி லொன்றாகிய தண்ணீரின் கூறாகும். எட்டாவது சரக்கும் ஏழாவது சரக்கும் மண்ணின் கூறாகும் எ—று.

சூக்ஷ்ம விளக்கம் :—இதில் ஐந்தாவதாகிய கும்பிடு கிளிஞ்சியும், நான்காவதாகிய கடல்நுரையும் ஜலத்தின் கூறாம். எட்டாவதாகிய வெள்ளி நிமிளையும், ஏழாவதாகிய பொன் னிமிளையும் மண்ணின் கூறாம். (27)

இதுவுமது

சொல்லுவே னென்மகனே மகிழ்ந்து கேளு
துங்கமுறு முதலந்த நெருப்பு மாகும்
வெல்லுகின்ற சரக்கினத்தி லந்த மூன்று
மேன்மையுறு மாசைக்குக் காற்று மாச்சு
நல்லதொரு சரக்கினத்தி லந்த மாறு
நடுவான சரக்கினத்தி லந்தம் ரெண்டும்
மல்லலாம் புவியிலுறு மாணாக்கா கேள்
மாமழைக்கே யாகாசம் வழுத்திட் டேனே.

———

(இ . ள். ) எனது குமாரனே மகிழ்ந்து கேட்பாயாக, மேற்குறித்த சரக்குகளில் முதற் சரக்கானது நெருப்பின் கூறாகும். மூன்றாவது சரக்கு காற்றின் கூறாகும். ஆறாவது சரக்கும், இரண்டாவது சரக்கும், ஆகாயக் கூறாகும். எ—று.

சூக்ஷும விளக்கம் :—இதில் முதல் சரக்கான குருவண்டானது நெருப்பின் 'கூறாம். மூன்றாவது சரக்காகிய இந்திர கோபம் காற்றின் கூறாம். ஆறாவது சரக்காகிய வெள்ளைப் புனுகும் இரண்டாவது சரக்காகிய சூடனும் ஆகாயக் கூறாம். இந்த விபரங்கள் இவற்றில் பஞ்ச பூதங்களும் அடங்கியிருப்பதைக்காண்க. இவ்விதப் பூதங்களால் நிறைந்து இம்மருந்து நடைபெறுவதால் உயர்ந்த குணத்தைத் தருமென்பது நிச்சயப்படுகின்றது. (28)

சரக்குகளின் பஞ்சபூத விபரம்

| நெ. | சரக்குகளின் பெயர் | பூகங்களின் பெயர் | பூதங்களுக்கும் பிரதிகாமம் |
|---|---|---|---|
| 1. | குருவண்டு | தேயு | நெருப்பு |
| 2. | சூடன் | ஆகாயம் | வெளி |
| 3. | இந்திர கோபம் | வாயு | காற்று |
| 4.<br>5. | கடல் நுரை<br>கும்பிடு கிளிஞ்சி | அப்பு | தண்ணீர் |
| 6. | வெள்ளைப் புனுகு | ஆகாயம் | வெளி |
| 7.<br>8. | பொன்னிமிளை<br>வெள்ளி நிமிளை | பிருதிவு | மண் |

(வேறு) ஞானம்

26 30 31 32 33-ம் பாட்டுகள் :—இது முதல் ஐந்து பாட்டுகளால் கடவுளினது சிறப்பையும், அவனை யறிய வேண்டிய விதத்தையும், அப்படி யறிந்தவனுக்கே, இந்த இலக்க சௌமிய சாகரத்தின் சூக்ஷும் புலப்பட்டுக் காரிய சித்தியாகு மென்றும் கூறுகின்றார். இதனால் இந்நூலிற் சொல்லப்பட்ட முறைகளைச் செய்து தேகத்தைப் பலப்படுத்திக் காயசித்தி யடைந்து ஞான



வழியிற் சேர்ந்து பரம்பொருளை யின்னதென வுணர்ந்து அதனுடன் கலந்து பேரானந்த வாழ்வை யடையும் பொருட்டே மேற்கண்ட முறைகள் ஏற்பட்டுள்ளதே தவிர நிலவரமற்றதாகிய இவ்வுலக வாழ்க்கைக் குரிய தங்கம் பொன் முதலியவைகளைச்செய்து மயக்கவழியிற் சேர்ந்து பல ஜென்மங்கட் கேதுவாய்த் திரிந்துழல்லதற்கலல வென்பது புலப்படுகின்றது. தங்கமாகும் பொன்னொரு மென்றதெல்லாம் அம்மருந்துகளின் பரீட்சைக்காக வேயாம். மேற்கண்டபடி லோகங்களை பேதிக்குமே யானால் சரியான பக்குவத்தில் முடிந்ததென நிதானிக்கவேண்டியது. இப்பாட்டுகளில் சொல்லிய ஞான விஷமானதுதெரிந்த அனுபவசாலிகட்கே புலப்படுமாதலானும் அத்தகையினர் தாமே செய்யுட்களைப் பார்த்துணர்ந்து கொள்வார்களாகையாலும் மற்றையர்க்கு இவைகட்கு உரையெழுதிலும் புலப்படா தாகையாலும் இச்செய்யுட்களைச் சேர்க்காதும் உரையொழுதாதும் நீக்கினோம். வேண்டினோர் மூலத்தைப் பார்த்துக் கொள்க.

அந்த செந்தூரம்,

எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

அந்தமென்ற செந்தூரந் தன்னைக் கேண்மோ
வரகரா வரிதரிதே யவனி மீது
சுந்தரமாங் கீதமுறுஞ் சுழல்வோன் றன்னிற்
றுங்கமுறப் பூதநிறை நீ யெடுத்துக்
கந்தரத்தி லுற்றிருந்த கல்நார் தன்னிற்
கணக்குடனே திசைபாதி கழறக் கேளு
தந்திரமா யக்கசாலை தன்னி லுற்ற
தயங்குகிட்டந் தன்னினிறை மூன்றுமாமே.

இதுமுதல் மேற்கண்ட எட்டுச் சரக்குகளினிறையும் உபசரக்குகளும் அவற்றினளவும் செய்முறையுஞ் சொல்கின்றார்.

(இ - ள்.) மிகவும் ஒப்புவமை யற்றுயர்ந்த அந்த செந்தூரத்தின் வகையைச் சொல்வேன் கேட்பாயாக. அரகரா இந்தப் பூவுலகத்திற் செய்வது மிகவும் அரிதேயாகும். அழகிய கீதத்தைப் பொருந்திச் சுற்றுவதாகிய

வோர் வஸ்துவில் உயர்வாக ஐம்பூதங்களினை வெடுத்து மலை முதலிய விடங்களிற் பொருந்தியதாயுள்ள கல்நாரின் திசைகளிற் பாதியளவும், தந்திரத்தோடு பொருந்திய கொல்லர்கள் வேலை செய்யுமிடத்தில் விளங்குகின்ற திட்டத்தில் மூன்றாகிய அளவும் எடுத்துக் கொள்வாயாக. எ—று.

சூக்ஷ்ம விளக்கம் : கீதத்தைப் பொருந்திச் சுற்று வதாகிய ஓர் வஸ்து முன் சொல்லிய (குருவண்டு.) ஐம்பூதங்களினளவாவது (ஐந்து.) திசைகளிற்பாதியள வாஃது (இரண்டு.) இதனாற் குருவண்டினளவு ஐந் தென்றும், கல்நாரினளவு இரண்டென்றும், கிட்டத்தி னளவு மூன்றென்றும் ஏற்பட்டது. (34)

விபரம்

| | |
|---|---|
| குருவண்டு | 5 |
| கல்நார் | 2 |
| கிட்டம் | 3 |

இவைகளினளவு விராகனெடையோ பலமோ என் னும் சந்தேகத்தைப் பின்பு நீக்கிச் சொல்வார். அங்குக் கண்டுகொள்க.

சந்த விருத்தம்

கனமுறு சுத்தவன் கரும்பொ னிழுத்தவன்
காண்மலை யுற்றவனாம்
அனலடி பட்டிட வடவு பிளப்பவ
னந்த மடுத்தவனாம்
முனமுரை முன்றொடை யிருபதி லொன்றெடு
முயலிரு தொடைபதினேழ்
தனைமரு முன்றினந் தனினிறை கதிர்மதி
தாக்கிடு வாயதிலே.

இதில் ஓர் உபசரக்கையும் அதன் தன்மையையும் அளவையுஞ்சொல்கின்றார்.

(இ-ள்) அதிகக்கனமுஞ் சுத்தமுமுள்ள இரும்பை யிழுத்துக் கொள்ளத்தக்கது, காட்டுகளிலேயுள்ள மலைகளிற்பிறப்பது, நெருப்பினிடமாகச் சேர்ந்தால்



இரண்டிரண்டாகப் பிளக்கத்தக்கதாம், இத்தகைய விலக்ஷணமுடைய சரக்கானது இந்த அந்த செந்தூரத் திற் சேரும் உபசரக்குகளுள் ஒன்றாகும். இந்தப் பாட்டின் முதலடியில் இருபதா மெழுத்துக்குப்பின்னுள்ள வோரெழுத்தும், இரண்டாவதடியின் பதினேழா மெழுத்துக்குப் பின்னுள்ள மூன்றெழுத்துக்களும் இதன் பெயராகும். இதனுடைய அளவானது சூரிய சந்திரர் களின் அளவாம். இதையும் மேற்கண்ட சரக்குகளோடு கூட்டுவாயாக.

சூக்ஷ்மவிளக்கம்:—இந்தப் பாட்டின் முதலடியின் இருபதா மெழுத்துக்கும் பின்னுள்ள வோரெழுத்தாவது (கா) இரண்டாவதடியின் பதினேழாமெழுத்திற்குப் பின்னுள்ள மூன்றெழுத்துக்களாவன (ந்தம்). ஆக இவ்விரண்டையுங்கூட்ட (காந்தம்) என்றாயின. சூரிய சந்திரர்களின் அளவானது சூரியன் ஒன்று, சந்திரன் ஒன்று ஆக இரண்டாகையால் இரண்டெனக் கொள்ள வேண்டியது. ஆகவே இப்பாட்டிற்குறித்த சரக்கானது (காந்தம்) என்றும் அதன் அளவு (இரண்டு) என்றும் ஏற்படுகிறது. 35

விபரம்

காந்தம்

எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

பாரப்மா சீனநிறை திரியே யாகும்
பளபளெனப் படிவிழுவோன் றன்னின் மூன்று
சேரப்பா வரசநுதல் வெள்ளை தன்னிற்
நிறமாகக் கிளியினிறஞ் செப்பக் கேளுமோ
நீரப்பா சுண்டியதோர் வண்டற் கல்லில்
நிறைகேளு நிறைந்தகடல் விபரந் தானே
தேரப்பா திரையில்வெள்ளைச் சுண்ட றன்னிற்
சேர்த்திடுவாம்திரியாகுஞ் செப்பக் கேண்மோ

இந்தப் பாட்டில் சில தாய்ச் சரக்குகளையும் உப சரக்குகளையுஞ் சொல்லி அவைகளின் அளவுஞ் சொல்கின்றார்.

(இ-ள்) மைந்தனே தெரிந்துகொள்வாய். சீனக்காரத்தின் அளவு மூன்றாகும், பளபளவென்னும் பிரகாசத்தோடு பூமியில்விழப் பட்டதாகிய வொருசரக்கின் அளவு மூன்று, இராஜாக்களுடைய நெற்றியில் தரிக்கப்படுவதாகிய வோர் வெள்ளை வஸ்துவில் கிளியினது நிறத்தின் அளவு சேர்க்கக்கடவாய், நீர்சுண்டியதான வோர்சேற்றினது வண்டலிலிருந் துண்டான கல்லில் குறைவின்றி நிறைந்த கடலினது அளவு சேர்ப்பாய், சமுத்திரத்தினது அலையினாலுண்டாகப்பட்ட வெள்ளைநிறமாகிய சுவறலின் அளவு மூன்று சேர்ப்பாய் எ—று.

சூக்ஷ்மவிளக்கம்:-பளபளவென்னும் பிரகாசத்தோடு பூமியில் விழப்பட்டதாகிய சரக்கு (இந்திர கோபம்) இதை இந்திர கோபத்தைப்பற்றி முன் சொல்லப்பட்டிருக்கும் பாட்டிற் காண்க. இராஜாக்களுடைய நெற்றியில் தரிக்கப்படுவதாகிய வெள்ளை வஸ்துவானது (வெள்ளைப்புனுகு), இந்த வெள்ளைப்புனுகைப் பற்றி முன் சொல்லப்பட்டிருக்கும் பாட்டிற்காண்க. கிளியினுடைய நிறமாவது(பஞ்சவருணம்) அதன் அளவானது ஐந்து. நீர்சுண்டியதானவோர் சேற்றினது வண்டலிலிருந்துண்டான கல்லானது (வெள்ளி நிமிளை). இதனது விபரத்தை வெள்ளி நிமிளையைப் பற்றிச் சொல்லி யிருக்கப்பட்ட முன் பாக்களிற் கண்டுகொள்க. கடலினது அளவானது (ஏழு)' இதைச் சத்த சமுத்திர மென்னும் வாக்கியத்தாற் காண்க. சமுத்திரத்தினது அலையினாலுண்டாகப்பட்ட வெள்ளை நிறமாகிய சுவறலாவது (கடல்நுரை) இதைக் கடல் நுரையைப் பற்றிய முன் பாட்டிற்சொல்லப்பட்டிருக்கும் இலக்ஷங்களினாற் கண்டுகொள்க.

ஆகவே இவற்றால் (சீனக்காரம் அளவு மூன்று என்றும், (இந்திர கோபம் அளவு மூன்று) என்றும் வெள்ளைப் புனுகு அளவு ஐந்து என்றும், (வெள்ளி நிமிளை அளவு ஏழு] என்றும், (கடல் நுரை அளவு மூன்று) என்றும் ஏற்படுகிறது.





### விபரம்

| | |
|---|---|
| சீனக்காரம் | 3 |
| இந்திரகோபம் | 3 |
| வெள்ளைப் புனுகு | 5 |
| வெள்ளை நிமிளை | 7 |
| கடல்நுரை | 3 |

### சந்த விருத்தம்

மணிகாலமா மா சிதை மாதமதிற்
பனியோடு நிலத்திற் படர்ந் துயரும்
நனிமா மருவாடையி னாமமதாந்
தனிலே நிறை யாண்பெண்ணுந் தாக்கிடுவாய்.

இச்செய்யுளில் ஓர் உபசரக்கும் பெயரும் அதனளவுஞ் சொல்கின்றார்.

(இ—ள்) பொருந்தும்படியான மாசி, தைமாதமென்னுங் காலங்களில் பனியினோடு சேர்ந்து நிலத்திற் படர்ந்து பிரகாசிக்கும். அதன் பெயர் மணம்,பொருந்திய மலரினது தன்மையாகும். இப்பெயர் பூண்ட சரக்கில் ஆண் பெண் என்ற அளவு எடுத்துக் கொள்வாயாக. எ—று.

சூக்ஷ்ம விளக்கம்; மலரினது தன்மையானது:—மலர் என்பதற்குப் பிரதி பதம் (பூ) தன்மையென்பதற்குப் பிரதிபதமாவது (நீரு). இவ்விரண்டையுங் கூட்டப் (பூநீரு) என்றானது. இதுவே அச்சரக்கின் பெயராம். ஆண் பெண் அளவானது: ஆண் (ஒன்று) பெண் (ஒன்று) ஆக இரண்டு எனக் கொள்க. இவையெல்லாம் வைத்திய சம்பந்தமான ஒரு குறிப்புப் பெயர்களாம்.

ஆகவே இப்பாட்டினால் பூநீரு அளவு இரண்டு என ஏற்பட்டது.

விபரம்

பூநீரு 2

கொச்சகக் கலிப்பா

சுட்டே யுழன்று சோகமுற வேபுலம்பு
மட்டி மனுவோர் கெட்டலைவா வழியறியார்
பொட்ட வெளியிற்போட்டுவிட்டேனயத்தொட்டியை
திட்ட முறவே சேர்த்திடு நீ திரிநிறையே.

இப்பாட்டினால் ஒரு உபசரக்கும் அதன் பெயரும் நிரையுஞ் சொல்கின்றார்.

[இ-ள்.] இப்பூவுலகத்திலுள்ள பேராசைப் பிடித்த சோம்பேறிகள் தங்கள் செய்யவேண்டிப் பலவிதமான சரக்குகளையும் நெருப்பிட்டுச் சுட்டுச் சுட்டு ஒன்றும் பிரயோசனப்படாததால் அதனால் மிகுந்த துன்பங்களானவை தம்மை வந்தடைய அதைச் சகிக்கவேலாது புலம்பிக்கொண்டு தமது வாழ்நாட்களெல்லாம் வீணாகி அலைவார்கள். உண்மையான வழி கண்டறிய மாட்டார்கள். நான் இதனுடைய இரகசியத்தைப் பொட்டலாகிய வெளியிடத்தில் யாவருமறியும்படியாகப் போட்டு விட்டேன். [வெளிப்படுத்தி விட்டேன் என்றபடி] மேற்சொல்லிய சரக்குகளோடு [அயத்தொட்டி யென்னும்] சரக்கையும் மூன்று அளவாய் சேர்த்துக் கொள்வாய்.

சூக்ஷ்ம விளக்கம்:—வெளிப்படை 38

விபரம்

அயத்தொட்டி

எண்சீர்க் கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

வெற்றியுறு தடினிதனி லூர்ந் திருந்த
வெண்மை கருமை பசுமை யோராத்தன்னிற்
பற்றியுற நீயெடுப்பாய் நிறையைந் தாகும்
பகரக்கே ளென்மகனே பகர்ந் திடாதே



பற்றியெரிந் திட்டாலுஞ் சுண்ணந் தோன்றாப்
பரிமளித்தோன் றன்னிறை பகர்வே னான்கு
முற்றியுடன் வெற்பிலுற்ற முளையா மாழை
முக்யமுற நிறையைந்து முயலக் கேண்மோ.

இப்பாட்டில் மூன்று தாய்ச் சரக்குகளின் நிறை சொல்கின்றார்.

[இ-ள்] வல்லமை பொருந்திய சேறுள்ள நிலத்தில் ஊர்ந்து திரிவதாகிய கும்பிடு கிளிஞ்சியில் அளவு ஐந்து எடுத்துக் கொள்வாய். நெருப்புப் பிடித்தெரியினும் அது எரிந்து முடிந்தவுடன் யாதொரு விதமான பற்பமாவது சாம்பலானது தோன்றததான வாசனையுள்ள வோர் சரக்கின் அளவு நான்கும், மலையினிடங்களில் தோன்றிப் பிரகாசிப்பதாகிய பொன்மண்ணிற் சிரேஷ்டமான அளவு ஐந்தும் எடுத்துக்கொள்வாயாக.

சூக்ஷ்ம விளக்கம்:— நெருப்புப் பிடித்தெரியினும் யாதொரு விதமான பற்பமுந் தோன்றாது பரிமளிக்கும்படியான சரக்காவது [சூடன்] இதனது விபரத்தை, முன் சூடனைப் பற்றிச் சொல்லியிருக்கும் பாட்டினாற் காண்க. மலையினிடங்களிற் றோன்றி பிரகாசிப்பதாகிய பொன் மண்ணாவது [பொன் னிமளை] இதனது விபரத்தை பொன்னிமிளையைப் பற்றிச் சொல்லி யிருக்கும் பாட்டினாற் காண்க.

ஆகவே [கும்பிடு கிளிஞ்சி அளவு [ஐந்து] என்றும் [சூடன் அளவு நான்கு] என்றும், பொன்னிமிளை அளவு [ஐந்து] என்றும் ஏற்படுகிறது. [39]

விபரம்

| | |
|---|---|
| கும்பிடு கிளிஞ்சி | 5 |
| சூடன் | 4 |
| பொன் னிமினை | 5 |

சந்த விருத்தம்

மாதர்கர மீதிலுறு மானெழிற் சிறந்த
பூதலமீ துற்றவுவர் தானதி லுதித்த
சாதிநிற மானதுவுஞ் சாற்றுவன் கறுப்பு
பாதியுறவே தகர்க்கிற் பச்சைவண மாமே.

இதுமுதல் இரண்டு பாட்டுகளால் ஒருப சரக்கின் பெயர், நிறை முதலியவைகளையுஞ் சொல்கின்றார்.

[இ-ள்] பூவுலகத்திற் சிறந்த ஸ்திரீகளின் கைகளிற் சேர்ந்து பிரகாசிக்கும், அழகினால் மிகவும் சிறந்தது, உவர் பொருந்தியதாயுள்ள நிலத்திலிருக்கும். இதனுடைய நிறமானது கறுப்பாகும், இதை உடைக்கும் பக்ஷத்தில் உள்ளே பச்சை நிறமானது பிரகாசித்துக் கொண்டிருக்கும். இதுவே பின்சொல்லும் சரக்காம். இன்னுஞ் சொல்வேன் கேட்பாயாக.

சூக்ஷ்ம விளக்கம்:— வெளிப்படை, இப்பாட்டினால் அந்த சரக்கினுடைய ரூபலட்சணங்களை வருணித்தார்.

இதுவுமது

பச்சைவண மென்றுமுன் பகர்ந்தது கேள் சரனை
மூச்சற முதற்றொடையில் மூன்றவல் கடையும்
உச்சிதமா யத்தொடையி லொன்பதயல் ரெண்டும்
நிச்சயமாய் நீண் முரசதுவகையை நீ தாக்கு.

[இ-ள்] நான் முன்னே பச்சைவருணமென்று சொன்னதைக் கேட்பாய் மைந்தனே. இந்தப் பாட்டின் முதலடியில் முதல் மூன்றெழுத்துக்களுக்குப் பக்கத்திலுள்ள வோரெழுத்தும், அவ்வடியின் கடையிலுள்ள வோரெழுத்தும், சிரேஷ்டம் பொருந்திய அந்த அடியின் ஒன்பதாமெழுத்துக்கும், பக்கத்திலுள்ள இரண்டெழுத்துக்களும் அதன் பெயராகும். இதில் முரசைத் தலைமையாகவுடைய வாத்தியங்களினது அளவு எடுத்துச் சேர்ப்பாய்.



சூக்ஷ்ம விளக்கம்:— இந்தப் பாட்டின் முதலடியில் முதல் மூன்றெழுத்துக்களுக்குப் பக்கத்தினுள்ளவோரெழுத்தாவது [வ] அவ்வடியின் கடையிலுள்ளவோரெழுத்தாவது [ளை.] அந்த அடியின் ஒன்பதாமெழுத்துக்குப் பக்கத்தினுள்ள இரண்டெழுத்துக்களாவன [யல்.] ஆக இம்மூன்றையுஞ் சேர்க்க [வளையல்] என்றானது. இது முன்பாட்டிற் குறித்த லட்சணங்களால் கறுப்பென்றாகிறது. இந்தக் கறுமையையும் அப்பதத்தோடு கூட்ட [கறுவளையல்] என்றானது. இதுவே மேற்குறித்த சரக்கின் பெயராம். முரசைத் தலைமையாகவுடைய வாத்தியங்களினது அளவு என்று சொல்லவே வாத்தியங்களுடைய மொத்தக் கணக்கானது பதினெட்டென்பது நூற்களின்றுணிபு. அதனால் இதனளவு பதினெட்டுத் தானென்பது நிச்சயமா யேற்படுகின்றது. ஆகவே (கருவளையல் அளவு பதினெட்டு) என்பதாயிற்று.

விபரம்

கறுவளையல்

எண்சீர்க் கழிநெடிலடியாசிரிய விருத்தம்

சாற்றக்கே ளவச்சார நிறையே யைந்து
தளதளெனச் சிவந்துசிவ நாம மானோன்
போற்றியுயர் சித்தர்களுங் குலிங்க மென்னப்
புகலுவார் குவலயத்திற் புகலக் கேண்மோ
மாற்றமுதற் றுணைத்தொடையில் பதிநால் தள்ளி
மகத்தான நான்கினமுந் தொடைமத் தானத்
தோன்றிடவே மூன்றுபத்துத் தன்னைத் தள்ளிச்
சுகமுறவே யொன்றந்தச் சரக்கின் சூக்ஷம்

இப்பாட்டினால் இரண்டு உபசரக்குகளின் விபரஞ் சொல்கின்றார்.

(இ-ன்) சொல்லக் கேட்பாயாக. எவச்சாரத்தின் அளவு ஐந்து, இதைத் தவிரக் கீழே சொல்லப்போகுஞ் சரக்கானது தளதளவென்று சிவந்து சிவனுடைய பெயரானது, (அதை) சித்தர்களெல்லாம் துதிக்குங் குலிங்கமெனவுஞ் சொல்வார்கள். சொல்லுகின்ற இப்பாட்டில் இரண்டாவதடியின் பதினான்கு எழுத்துக்களைத் தள்ளி நின்ற நான்கெழுத்துக்களும், பொருந்தும்படி மூன்றாவதடியின் பத்தாமெழுத்தைத் தள்ளி நின்ற பதத்தையுங் கூட்டிச் சேர்ந்த பெயருள்ள சரக்குகளில் ஒன்றாகும். இதன் அந்தரங்க மிதுவாம் மற்றவை பின்வரும்.

சூட்க்ஷும விளக்கம்:......—......இரண்டாவதடியின் பதினான் கெழுத்துககளைத் தள்ளிநின்ற நான்கெழுத்துக்களாவன (லிங்கம்) மூன்றாவதடியின் பத்தாமெழுத்தைத் தள்ளிநின்ற பதமாவது (இல்) இவ்விரண்டையுங் கூட்ட (லிங்கமில்) என்று புணர்ந்தாலும் அதை (லிங்கத்தில்) எனக் கூட்டவேண்டியது. இப்பெயருள்ள சரக்குகளில் ஒன்றெனவே [லிங்கவகை] களுள்) ஒன்றென்றனது. இதனால் லிங்க(ம) பலபேதமென ஏற்படுகின்றது. இங்கே நாம் எந்த லிங்கத்தையெடுத்துக் கொள்ள வேண்டுமென ஆராயுமிடத்தில், மேலே தளதளவெனச் சிவந்து எனச் சொல்லப்பட்டிருப்பதால் சிவப்பு நிறமுள்ள லிங்கத்தையே யெடுத்துக் கொள்ளவேண்டுமெனப் புலப்படுகின்றது. இப்பாட்டில் எவச்சாரத்துக்கு மட்டும் அளவை குறித்தார். லிங்கத்திற்கு அளவு அடுத்த பாட்டிற் கூறுவரெனவறிக. (42)

## விபரம்

## எவச்சாரம் 5

## கலிவிருத்தம்

இன்றுரைத்த வெழிற்சரக் கானதில்
வென்றியாய்நிறை விபுலை விபரமே



கண்டறிந்திடுயேக விராகனாம்
மண்டலத்தில் வழுத்தக்கேள் மாக்களே.

இப்பாட்டினால் லிங்கத்திற்கு அளவையும் எல்லாச் சரக்குகளுக்கும் அளவு இன்னதென்பதையும் குறிப்பிடுகின்றார்.

[இ-ள்] இப்போதுரைத்த இந்த அழகு பொருந்திய லிங்கமென்ற சரக்கில் வெற்றியோடு பொருந்திய அளவு பூமியினது கணக்காகும். இதிற் கூறிவந்த சரக்குகளெல்லாம் அளவு அளவு என விபரமில்லாது கூறிவந்தபோதிலும் யாவும் விராகனெடைக் கணக்கென்றறியக்கடவாய். இப்பூவுலகத்திலுள்ள மனிதர்களே நான் சொல்வதைக் கேளுங்கள்.

சூட்க்ஷும விளக்கம்:—அளவு பூமியினது கணக்கெனவே பூமியானது: மருதம், குறிஞ்சி, முல்லை, நெய்தல், பாலையென ஐந்து வகையுள்ள தாகையால் அந்தக் கணக்கின்படியே லிங்கத்தின் அளவு [ஐந்து] எனக்கொள்ள வேண்டியது. மேற்பாட்டுகளினால் சரக்குகளினது அளவுக்கு விபரஞ் சொல்லாது வந்தாலும் இப்பாட்டினால் அவைகளெல்லாம் விராகனெடைக் கணகென்பதைத் தெளிவாக விளக்கினார். இதனால் முன்பு ஒன்று இரண்டு நான்கு ஐந்து என்பதாய்ப் பல தொகைகளாகச் சொல்லிவந்ததை யெல்லாம் விராகனெடையாக்கிக் கொள்ள வேண்டியது.

## விபரம்

## லிங்கம்

இதுவரையில் முதற்சரக்குகள் எட்டும், அவைகளின் ரூபலட்சணங்களும், அவைகள் உண்டாகுமிடங்களும், உபசரக்குகளின் ரூபலட்சணங்கள் முதலியவைகளும், அவைகளினுடைய தனித்தனி அளவும் சொல்லி வந்தார். இத்தோடு சரக்கு

கள் தீர்ந்துவிட்டபடியால் இனிமேல் அந்த செந்தூரத்தின் செய்முறை முதலியவைகளை விவரமாகச் சொல்கின்றார். முன்பு ஒவ்வொரு பாக்களின் அடியிலும் சரக்குகளின் பெயர்களையும் அளவையும் எழுதிக்காட்டி வந்திருப்பினும் இங்கு சந்தேகமில்லாமல் யாவரும் எளிதில் உணர்ந்து கொள்ளும் பொருட்டுக் கீழே ஒரே இடத்தில் எல்லாச் சரக்குகளின் பெயர்களையும், அளவு விவரத்தையும் துலக்கமாக எழுதிக் காட்டுகின்றோம்.

### இதுவரையிற் சொல்லிவந்த எல்லாச் சரக்குகளின் விவரம்

| | | | |
|---|---|---|---|
| *1 | குருவண்டு விராகனெடை | 5 | 17.5 கிராம் |
| 2 | கல்நார் விராகனெடை | 2 | 7 கிராம் |
| 3 | கிட்டம் விராகனெடை | 3 | 10.5 கிராம் |
| 4 | காந்தம் விராகனெடை | 2 | 7 கிராம் |
| 5 | சீனக்காரம் விராகனெடை | 6 | 21 கிராம் |
| *6 | இந்திரகோபம் விராகனெடை | 3 | 10.5 கிராம் |
| *7 | வெள்ளைப் புனுகு விராகனெடை | 5 | 17.5 கிராம் |
| *8 | வெள்ளிநிமிளை விராகனெடை | 7 | 24.5 கிராம் |
| *9 | கடல் நுரை விராகனெடை | 3 | 10.5 கிராம் |
| 10. | பூநீர் விராகனெடை | 2- | 7 கிராம் |
| 11. | அயத் தொட்டி விராகனெடை | 6- | 21 கிராம் |
| * 12. | கும்பிடு கிளிஞ்சி விராகனெடை | 5- | 17.5 கிராம் |
| * 13. | சூடன் விராகனெடை | 4- | 14 கிராம் |
| * 14. | பொன் னிமிளை விராகனெடை | 5- | 17.5 கிராம் |
| 15. | கறுவளையல் விராகனெடை | 12- | 42 கிராம் |
| 16. | எவச்சாரம் விராகனெடை | 5- | 17.5 கிராம் |
| 17. | லிங்கம் விராகனெடை | 5- | 17.5 கிராம் |
| | ஆகச் சரக்குகள் 17-க்கு விராகனெடை | 80/- | 280 கிராம் |

*இவைகளில் முக்கியமாகிய தாய்ச் சரக்குகள் எட்டிக்கும் இந்தப் புள்ளி கொடுக்கப்பட்டிருக்கின்றது.



### இதுவுமது

வழுத்துவேன்முன் வழுத்துஞ் சரக்கெல்லாம்
கழறுவேன் கல்வத்துள்ளே கலந்துநீ
குவலையத்திற் குருமூலிச் சாற்றினால்
துவளவேயரை சாமந் தொகைரண்டே,

இந்தப் பாட்டுமுதல் அந்த செந்தூரத்தின் செய்முறை சொல்கின்றார்.

(இ-ள்.) மைந்தனே நான் சொல்வேன் கேட்பாயாக, முன் கூறிய சரக்குகளெல்லாவற்றையும் கல்லாகிய கல்வத்தினுள்ளே போட்டு ஒன்றாகக் கலந்து பூமியிலுண்டாகும் படியான குரு மூலிகையினது சாற்றினாலே 6 மணிநேரம் வரை துவளும்படியாக அரைக்கக் கடவாய் எ—று.

சூக்ஷும விளக்கம்:-குரு மூலியாவது இக்காண்டத்தின் முதற் காப்பு பாட்டிற் சொல்லியிருக்கின்றது.

(திருநூற்றுப் பச்சை) யேயரம் இந்தத்திருநூற்றுப் பச்சைச் சாற்றை விட்டு மேற்படி சரக்குகளை யிரண்டு சாமம் அரைக்கவேண்டியது. (44)

### இதுவுமது

இரண்டுசாம மரைத்தே யிறுகவே
உருண்டையாக வழித்தொரு வோட்டினில்
சுருண்டிடத் தகடாயதைத் துங்கமாய்
முரண்டிடுஞ்சூரி முன்னில்வை மூன்றுநாள்.

[இ-ள்] மேற்சொன்னபடி யிரண்டு சாமமரைத்து அவைகள் அரைபட்டுக் கெட்டிப் பதமாக வரும்போது வழித்தெடுத்து உருண்டை வடிவமாகச் செய்து அதைத் தகடுபோல தட்டி ஒரு ஓட்டில் உயர்வு பொருந்தும்படியாக மூன்று நாள் வரையில் வெயிலில் வைக்கக் கடவாய், எ—று.

குக்ஷுமம விளக்கம்:—வெளிப்படை. [45]

விவரம்

அரைப்பு 1

எண்சீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

கேளப்பா மூன்றுநாள் வெயிலில் வைத்துக்
கெடியான வில்லைதனைக் கல்வத் திட்டுக்
கோளப்பா குருவண்டு மலர்மே னின்று
குடிக்குநறாத் தருவிலுற்ற குழையாம் பாலில்
நாளப்பா வரைத்திடுவாய் சாமம் மூன்று
நலமாக வழித்தெடுத்து வில்லை தட்டித்
தாளப்பா பனியில் வைப்பாய் மூன்று நாளாந்
தங்கமுறச் செய்யும்வகை வேறு முண்டோ.

[இ-ள்,] மைந்தனே கேட்பாயாக முன் சொன்ன படியே மேற்கண்ட பில்லையை மூன்று நாள் மட்டும் வெயிலில் வைத்துக் காய்ந்த பின்பு அதனை யெடுத்துப் பழையபடியும் கல்வத்திலிட்டு மேலேசொல்லியிருக்கின்ற குருவண்டானது புஷ்பத்தினிடமாயிருந்து தேனைக் குடிக்கும்படியான ஓர் மரத்திலிருந்துண்டான செழிப்புற்ற பாலில் மூன்று சாமம் வரையில ரைக்கக் கடவாய். பின்பு அதனைவழித்து முன்போல பில்லையாகச்செய்து மூன்று நாள் வரையில பனியில் வைக்கக் கடவாய். தங்கஞ் செய்யும் படியான முறைகளில் இதைப் பார்க்கிலும் சிறந்த வேறொன்று உலகத்தி லிருக்கின்றதோ [இல்லையென்றபடி) எ—று.

குக்ஷுமம விளக்கம்:— குருவண்டானது புஷ்பத்தினிடமா யிருந்து தேனைக் குடிக்கும்படியான மரமனது ஆதியிற் குறிப்பிட்ட [மடற்கள்ளி] மரமேயாம். மேற்குறித்த பில்லையை யெடுத்துக் கல்வத்திற் போட்டு இந்த மடற்கள்ளி, மரப்பாலை விட்டு மூன்று சாம மரைத்து மூன்றுநாள் பனியில் வைக்க வேண்டியது.



இவர் இவ்விதம் வெயிலிலும் பனியிலும் வைக்கச் சொல்வதினால் இம்மருந்து செய்தவற்கு வெயிலும் பனியும் மிகுத்துள்ளதான தை மாசி மாதங்களே உத்தமமெனத் தோற்றப்படுகிறது. [46]

விபரம்

அரைப்பு 2

இதுவுமது

பனியில்வைத்த வில்லைதனைக் கல்வத் திட்டுப்
பாங்கான வேம்பினெண்ணெ யதிலே யூற்றி
நனிபெறவே யரைத்திடுவாய் சாமம் மூன்று
நாடியதோர் வில்லைதட்டி நடன முற்ற
பனிப்பகைமுன் வைத்திடுவாய் நாளே யைந்து
பாங்காக வில்லைதனை யோடு ரைத்து
தனிலைவைத்துக் குளவிபஞ்சரத்தின் மண்ணால்
தயவுடனே சீலையுறக் கவசம் பண்ணே.

[இ-ள்'] முன் சொன்னபடியே பனியில் வைத்த அந்த பில்லையை யெடுத்துப் பழையபடி கல்வத்திலிட்டு அழகான வேப்பெண்ணெயை யதில் விட்டு மிகுதியாக மூன்று சாமம் அரைக்கக் கடவாய். அப்படி யரைத்த பின்புமுன் சொல்லியபடியே பில்லை தட்டி ஐந்துநாள் வரையில் பிரகாசிக்கும் படியான வெயிலில் வைக்கக் கடவாய். அப்படி ஐந்துநாள் மட்டும் காயவைத்து மேற்படி பில்லையை யெடுத்து அது கொள்ளுபடியான இரண்டோடுகளை யெடுத்து வாய்பொருந்தும் படியாகத் தேய்த்து அதில் ஒரு ஓட்டில்இந்தப் பில்லையைவைத்து மேலோடு மூடிக் குளவிக் கூண்டினது மண்ணினாலே நேயத்தோடு சீலைமண் செய்யக்கடவாய். எ—று.

குக்ஷுமம்:—வெளிப்படை [47]

விவரம்

அரைப்பு 3

இதுவுமது

பண்ணுகின்ற கவசத்தின் மேலே யன்பாய்ப்
    பாங்கான குடவளையைக் கல்வத் திட்டு
மண்ணிலுற்ற குக்குடத்தி னண்ட நீரால்
    வண்மையுட னரைத்துநீ வருத் தெடுத்துப்
பண்ணுடனே சீலைதனைக் கிழித்துத் தோய்த்துப்
    பகருகிறேன் வழித்ததுவே மேலே பூசி
திண்ணமுற விரலைந்து வுயர மாகத்
    தீவிரமாய் வில்லைதனைக் கவசம் பண்ணு.

[இ-ள்.] முன் சொன்னபடியே குளவிக் கூண்டு மண்ணினாற் சீலைமண்செய்த அந்தக் கவசத்துக்கு மேலே, குடத்தைப்போன்ற ரூபமுடைய சங்கை கல்வத்திற்போட்டு கோழி முட்டையினது வெள்ளைக் கருவை விட்டு வளப்பம் பொருந்தும்படியாக அரைத்து அதை வழித்தெடுத்துக் சீலையைக் கிழித்து அதில் தேய்த்து அந்தக் குழம்பையே முன் கவசத்தின் மேல்பூசி ஐந்து விரல் உயரம் பலமான கவசஞ் செய்க எ--று,

சூக்ஷுமம்:—வெளிப்படை. 48

சந்த விருத்தம்

வானமீனது போன்றிடுந்திற
    வண்டுறைந்திடுந் தருவிலை
பானமறந்துமிக வேகுலைந்துபடி
    மீதினைந்து படுத்ததைத்
தானெடுத்துவோர் சாண்பரப்பியதில்
    தயங்குவில்லையைத் தாட்டியே
ஏனமின்றியெரி மேலுங்கீழுமுற
    வேகமாகமுழ மொன்றரை.

இ-ள். ஆகாயத்திலேயுள்ள நட்சத்திரங்களைப்போல பிரகாசிக்கும்படியான வண்டானது தங்குகின்ற மரத்தினுடைய பாலற்றுக்காய்ந்து முற்றி தானேயிறுப் பூமியில்



விழுந்திருப்பதான போத்துக்களினின் துண்டுகளை எடுத்து இக்கவசத்திற்கு மேலுங் கீழுஞ்சேர்ந்து மொத்தம் ஒன்றரை முழமாகும்படியான புடம் போடு வாய் எ—று.

சூக்ஷும விளக்கம்.—நக்ஷத்திரங்களைப் போற்பிரகாசிக்கும்படியான வண்டானது [குருவண்டு.] அது தங்குகின்ற-மரமாவாது [கள்ளிமரம்] இந்தமரத்தினது காய்ந்த துண்டுகளையே கவசத்திற்கு மேலுங் கீழும் பரப்ப வேண்டியது.

மேலே கள்ளிச் சக்கைகளை மேலுங்கீழும் ஒரு சாண் பரப்பச்சொல்லி விட்டுக் கீழே மொத்தம் ஒன்றரை முழப் புடம்போட வேண்டுமென்று சொல்லப்பட்டிருப்பதை ஆராயுமிடத்தில் மேலே சொன்ன கணக்கின்படி பார்த்தால் புடத்தினுயரம் ஒருமுழந்தானாகிறது. மற்ற அரை முழம் எங்கிருந்து வருமென்று யூகிக்கில் கள்ளிக் கட்டையை மேலுங்கீழும் பரப்பின வுயரம்போக மீதியிருக்கும் அரைமுழத்திற்கு அந்தக் கள்ளிக்கட்டைக்கு அடியில் அரைச்சாண் அளவும் கள்ளிக் கட்டைக்குமேல் அரைச்சாண் அளவும் விராட்டியைச் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்பது புலப்படுகின்றது.

ஆகவே பூமியின்மேல் அரைச்சாண் உயரம் விராட்டியை யடுக்கி அதற்குமேல் ஒருசாண் உயரம் கள்ளிக் கட்டைகளைப் பரப்பி அதன்மேற் கவசத்தை வைத்து அதன்மேல் ஒருசாண் கள்ளிக்கட்டைகளைப் பரப்பி அதன்மேல் அரைச்சாண் விராட்டி யடுக்கிப் புடம் போடவேண்டுமென அறியவேண்டியது.

விபரம்

அரைப்பு 3 புடம் 1

ஷை (வேறு)

ஒன்றுமோரரை யுற்றிடும்புட
    முள்ளிற்றீதனை மாட்டிடு

வென்றியாகவே வெந்து நீறிடும்
வேளையிற்புடந் தான்பிரி
துன்றுமேலுறு கவசம்வாங்கிடு
துங்கவோட்டிளி லுந்நிடு
மன்றுபோனிற மாகிநின் றிடு
மாழைவித்தெனப் பேசுவாம்.

இப்பாட்டினால் மேற்கண்டபடி புடம் போட்டுப் பிரித்தெடுத்த பின் அம்மருந்திருக்கும் நிலைமையைக் கூறுகின்றார்.

(இ—ள்) மேற்கண்ட வாறே ஒன்றரை முழம் உயரமாகப் போடப்பட்ட புடத்தினுள்ளே நெருப்பை வைத்து விடுவாய். அது ஜெயம் பொருந்தும்படியாக வெந்து நீறுஞ் சமயத்தில் மேற்படி புடத்தைப் பிரித்து மருந்திற்கு மேலே பொருந்தியதாயுள்ள கவசத்தை யெடுத்து விடுவாய். அப்படி யெடுத்துவிட்டுப் பார்த்தால் அம்மருந்தானது நீ அந்த ஓட்டிற் போடுகிற காலத்தில் எந்த நிறமும் எந்தத் தன்மையாகவுமிருந்ததோ அந்த நிறமும் அந்தத் தன்மையுமாகவேயிருக்கும். இம் மருந்தையே பொன்னை யுண்டாக்கும் வித்து என்பதாகச் சொல்வோம். எ—று

சூக்ஷ்ம விளக்கம்:—இதில் கடைசியில் இதுவே பொன்னை யுண்டாக்கும் வித்தெனச் சொன்ன தானது மேலே மருந்தானது வைத்ததுபோ லிருக்கு மென்று சொல்லி யிருப்பதைப் பற்றி மயங்காதே அப்படியிருப்பினும் விசேஷ குணத்தையே தருமென்று நிச்சயப் படுத்தாற் பொருட்டாம். 50

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

எடுத்திடு மருந்து தன்னை
யியல்புட னியம்பக் கேண்மோ
அடுத்ததைக் கல்வத் திட்டே
யரனபேய்ப் பீர்க்கஞ் சாற்றில்



தொடுத்ததை யுரைப்பாய் சாமந்
தொகையுறத் திரிய தாமே
அடுத்ததை வழித்து வில்லை
யழகுறத் தட்டு வாயே.

இப்பாட்டில் முன் சொன்னபடி யெடுத்த மருந்தை பின்யின்னது செய்யவேண்டுமெனக் கூறுகின்றார்.

(இ—ள்) உலகத்தவர்களே கேட்பீர்களாக முன் சொன்னபடி புடம் பிரித்தெடுத்த அந்த மருந்தைப் பழையபடி கல்வத்திற்போட்டுப் பேயப் பீர்க்கினது சாற்றை விட்டு மூன்று சாமம் கணக்காக அரைக்கக் கடவாய். அப்படி யரைத்த பின் அதை வழித்து முன் போலவே நலம் பொருந்தும்படி வில்லைதட்டிக் கொள்வாய். எ—று

சூக்ஷ்மம்;...வெளிப்படை. 51

விபரம்

அரைப்பு 4 புடம் 1

இதுவுமது

தட்டிய மருந்து தன்னைத்
தயவுற வோட்டில் வைத்துக்
கெட்டியாய்ச் சீலை செய்து
கிளறச்சுண் ணாம்பு பூசி
நட்டிய புடமுன் போல
நன்குறப் போட் டெடுத்தே
ஒட்டிய கவசம் வாங்க
வுவரைப்போ னிறமு மாமே

(இ—ன்) அப்படி வில்லை தட்டிய மருந்தை அன்போடு முன் சொன்னதுபோல ஓட்டில் வைத்துக் கெட்டியாகச் சீலைமண் செய்து மேலே பிரகாசிக்கும்படியாகச் சுண்ணாம்பைப் பூசி முன்போலவே புடம் போட்டெடுத்துக் கவசத்தைப்பிரிப்பாய். அப்படிப்பிரித்துப் பார்த்தால்

அந்த மருந்தானது உவர்மண்ணைப் போன்ற நிறம யிருக்கும். எ—று.

சூக்ஷமம்:—வெளிப்படை 52

விபரம்

அரைப்பு 4 புடம் 2

சந்த விருத்தம்

உவர்நிறமான தேதெனமனதி லுன்னாதே
நவமுறுமருந்தா னாநிலமீதி னனிதங்கக்
குவடுகளுன்கை குள்ளினிற்சிக்குங் குறியாகும்
தவமுறுமுறையைத் தரணியின்மிகுந்து சாற்றாயோ

இதுவுமது

இப்பாட்டினால் அந்த் மருந்தின் பெருமைதை சொல்கின்றார்.

[இ—ள்] அப்படி யெடுத்த மருந்தானது முன் சொன்னதுபோல உவர் நிறமா யிருக்கிறதே யென்று நினைத்துக் கலங்காதே. அழகாகிய இந்த மருந்தினாலே இந்தப் பூலோகத்தில் மிகுதியான தங்கமானது மலை போல உன் கைக்குக் கிடைக்கும்படியான சாக்ஷி இதுவாகும். தவமகிமை பொருந்திய இந்த முறையை ஒருவரிடமுஞ் சொல்லாதே. எ—று.

சூக்ஷமம்; வெளிப்படை. 53

இதுவுமது

மருந்ததைக்கல்வ மிசையிற்செலுத்தி மறுபாலுங்
கரிந்திடுமத்தஞ் சாற்றினாலாட்டு கணக்காகப்
பரிந்திடச்சாமங் காலமுன்வகையாப் பரிவாக
விரைந்ததை யோட்டின் மேவியசீலைவியன்செய்யே

இப்பாட்டினால் முன்னெடுத்த மருந்தை இனிச் செய்யவேண்டிய விதத்தைச் சொல்கின்றார்.



[இ...ள்] அவ்வித மெடுத்த மருந்தைப் பழையபடி கல்வத்திற்போட்டு கருவூமத்தைச் சாற்றைவிட்டு கணக்கின்படி முன் சொன்னதுபோல 9 மணி நேரம் அரைக்கக் கடவாய். பின்பு அதையெடுத்து முன்போல ஓட்டிற் போட்டுச் சீலைமண் செய்வாய். எ—று.

சூக்ஷமம்: வெளிப்படை.

விபரம்

அரைப்பு 5 புடம் 2

எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

கேளப்பா சீலைசெய்த வில்லை தன்னைக்
கெட்டியா முன்போலே புடத்தைப் போடு
தாளப்பா தீயெழும்பி யமர்ந்த பிற்றைத்
தயவாக வில்லைதனை யெடுத்துப் பாரு
தூளப்பா செங்கழிபோல் வணமே யாருந்
துட்டர்கடான் கண்டறியத் துலக்கி டாதே
வாளப்பா வில்லைதனைக் கல்வத் திட்டு
மகத்தான மேனிச்சாறதனா லாட்டே.

இப்பாட்டினால் அப்படிச் சீலைசெய்த மருந்தைப் புடம்போட்டுப் பழையபடி செய்யவேண்டிய மார்க்கஞ் சொல்கின்றார்.

[இ—ள்] மைந்தனே கேட்பாயாக. முன்சொன்ன படியே சீலைமண் செய்த அந்த வில்லையைப் பலமாக முன்போலவே புடத்தைப் போடக் கடவாய். அப்படிப் போட்டுத் தீயானது பற்றி யமர்ந்தபின்பு அதையெடுத்துப் பிரித்துப்பார்க்கக் கடவாய். அப்போது அது சிவந்த நிறமா யிருக்கும். துன்மார்க்கர்களறியும் படியாக இந்த இரகசியத்தைச் சொல்லிவிடாதே பின்பு அந்த வில்லையைப் பழையபடி கல்வத்திற் போட்டு மகத்துவம் பொருந்திய குப்பைமேனிச் சாற்றை விட்டு அரைக்கக் கடவாய். எ...று.

குக்ஷுமவிளக்கம்;:—வெளிப்படை.

விபரம்
அரைப்பு 6 புடம் 3

சந்த விருத்தம்

திடமாகவே திரிசாமமாய்ச்
சேர்த்தேயரைத் திடுவாய்
உடனேவழி வில்லையுற
வோட்டிற் பொதிந் திடவே
படிமேலுறு கழிசேர்த்துநீ
கவசம்பரி முன்போல்
புடம்போடுநீ யிதுவன்றியும்
பொன்னின்வகை யுண்டே.

இப்பாட்டினால் மேற்கண்டபடி யரைத்த மருந்தைப் புடம்போடும் விதங் கூறுகின்றார்.

(இ - ள்.) முன்சொன்ன படியே குப்பைமேனிச் சாற்றைவிட்டு பலமாக 9 மணி நேரம் அரைத்திடுவாய் அப்படியரைத்த பின்பு அதனை வழித்துப் பில்லை செய்து முன்போலவே புடம்போடக் கடவாய். பொன் செய்வதற்கு வேறு மார்க்கம் இதைத் தவிர உண்டோ. எ—று.

விபரம்
அரைப்பு 6 புடம் 4

எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

ஆறவிட்டு நீயெடுத்துப் பார்ப்பா யானால்
அலறடித்த மஞ்சண்மணற் போலே காணும்
பாறைவிட்ட வில்லைதனைக் கல்வத் துற்றிப்
பகரத்தின் பத்தினத்தின் பேரி னோடு
ஈறைவிட்ட விருதொடையிற் பதினா றற்ற
விரண்டனமு மத்தொடையி லேழு மாகும்



சாறைவிட்டு நீயரைப்பாய் சாம மூன்று
சாற்றுகிறே னென்மகனே தயவாய்க்கேண்மோ

---

இப்பாட்டில் மேற்சொன்னபடி புடம்போட்ட மருந்தையெடுத்துப் பின்பு செய்யவேண்டிய வகையைக் கூறுகின்றார்.

(இ- ள்.) மேற்கண்டபடி போட்ட புடமானதுஆறின பிற்பாடு அதை யெடுத்துப் பார்த்தால் சேறடிப்பட்ட மஞ்சள் நிறமுள்ள மணலைப்போல அந்தமருந்தானது இருக்கும். பின்பு அதையெடுத்துப் பாசுரத்தின் பத்தாமெழுத்தின் பெயரினோடு இப்பாட்டின் இரண்டாவதடியின் பதினோறெழுத்துக்களைத் தள்ளி நின்ற இரண்டெழுத்துக்களையும் அந்த அடியின் ஏழாமிரண்டெழுத்துக்களையும் சேர்த்தால் எப்பெயராமையுமோ அப்பெயருள்ள பச்சிலையின் காற்றைவிட்டு மூன்று சாமமரைக்கக் கடவாய்: மைந்தனே இன்னமுஞ் சொல்வேன் தயவுடன் கேட்பாயாக. எ—று.

குக்ஷும விளக்கம் :—பகரத்தின் பத்தாமெழுத்தின் பெயராவது (பொ) இப்பாட்டின் இரண்டாவதடியின் பதினோறெழுத்துக்களைத் தள்ளிநின்ற இரண்டெழுத்துக்களாவன (ற்றி.) அந்த அடியின் ஏழாமிரண்டெழுத்துக்களாவன (ல்லை) ஆக இம்மூன்றையும் சேர்க்க (பொற்றில்லை) யென்றானது. இதைப் பொற்றலைக்கையாந்தகரையென அறியவேண்டியது. இதற்குப் பெயர் பொற்றலைக் கையாந்தகரையென்றிருக்க (பொற்றிலை) யென்று சொன்னது வைத்தியப் பரிபாஷையின் கிரமநோக்கியென்க. இவைகளிளெல்லாம் நுழைந்து ஆராயுஞ் சக்தியுள்ளவர்களே இதைக் கண்டறிந்து செய்து முடிக்க வேண்டுமென்பது இந்நூலாசிரியர் கருத்தாகையால் சரக்குகளுக்கு இயல்பாக ஏற்பட்டிருக்கும் பெயர்களை மருஉமொழி போன்று வேறொன்றாக

மாற்றியும், அப்படி மாற்றியிருக்கும் பெயர்களையும் பலவித ஹேதுக்களைக் கொண்டு கண்டுபிடிக்கும் படியாகவும் அமைத்திருக்கின்றார். இவ்விதஞ் சொல்லா விடில் அடக்க மற்றவரும் இம் முறையைக் கைக்கொள்ள நேரிடும். (57)

இதனால் பொற்றலைக் கையாந்ததகரைச் சாற்றை விட்டு அரைக்க வேண்டுமென்பது ஏற்பட்டது.

விபரம்

அரைப்பு 7 புடம் 4

இதுவுமது

அரைத்ததொரு மருந்துதன்னை வில்லை தட்டி
யடைவுடனே வோட்டில்வைத்துச் சீலைசெய்தே
எரித்துவிரு முழமாகப் புடத்தைப் போட்டு
யெரியமர்ந்து தணிந்ததற்பின் வில்லைவாங்கிக்
கரித்திடவே கல்வத்தி னுள்ளே யிட்டுந்
கழறுமந்தச் சாற்றினா லரைப்பாய் முன்போல்
பாத்தினுரை சௌமியத்தின் மருந்து தன்னைப்
பாங்காக வில்லைதட்டி யோட்டில் வையே.

.........

இப்பாட்டினாய் முன்னுரைத்த மருந்தைப் புடம் போட்டெடுத்துப் பின்செய்யும் விதத்தையுஞ் சொல்கின்றார்.

(இ - ள்.) முன்சொன்னபடியே பொற்றலைக்கையாந்தகரைச் சாற்றினாலரைத்த மருந்தை எடுத்து முன்போல் பில்லைதட்டிப் பாங்காக ஓட்டில் வைத்துச் சீலைமண் செய்து இரண்டு முழ உயரம் புடம்போட்டு நெருப்பானது அமர்ந்து குளிர்ந்த பின்பு எடுத்துக்கவசத்தைப் பிரித்து அதனுள்ளிருக்கும் வில்லையை யெடுத்துக் கரிக்கும்படியாகக் கல்வத்திற்போட்டுப்



பழையபடியும் முன்சொன்ன பொற்றலைக் கையாக் தகரைச் சாற்றையே விட்டு முன்போலவே 9 மணி நேரமது இந்தச் சிரேஷ்டம் பொருந்திய மருந்தை எடுத்து அழகு பெறும்படியாகக் வில்லை தட்டி ஓட்டில் வைக்கக் கடவாய். எ...று.

சூக்ஷ்ம விளக்கம் : வெளிப்படை. (58)

விபரம்

அரைப்பு 8 புடம் 5

கலி விருத்தம்

வைத்து முன்முழ மாகவே நீபுட
மெத்த வேயெரி மீதிற் பரப்பியே
தத்தி யாகத் தணிந்தபின் நீயெடு
சுத்த மாகத் துலங்கு மருந்துமே.

இப்பாட்டினால் முன் ஓட்டில் வைத்த மருந்தைப் புடம்போடு மார்க்கஞ் சொல்கின்றார்.

(இ - ள்.) முன்சொன்ன மருந்தை அந்தவிதமாக ஓட்டில் வைத்து முந்தினபடியே இரண்டுமுழ உயரமாகப் புடத்தைப்போட்டு அக்கினியைமேலேயிட்டு எரித்திடுவாய். அப்படியெரித்து நெருப்பு அவிந்த பிற்பாடு புடத்தைப் பிரித்து மருந்தை யெடுக்கக் கடவாய். அந்தக் காலத்தில் அந்த மருந்தானது பரிசுத்தமாகப் பிரகாசிக்கும். எ...று.

சூக்ஷ்ம விளக்கம் :...வெளிப்படை. (59)

விபரம்

அரைப்பு. 8 புடம் 6

எழுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

துலக்கிடு மருந் ததனையே கல்வத்திற்
றுகையுட னுள் ளாக்கிப்
பொலன் கொடி யுயர் பொற்பத மீதினில்
புரண்டிடச் சிறந்தி லுப்பை

இலங்கியே கல கலக்கல வெனத்தொனி
 யியல்பொடு முழங்கிய போல்
தலங்க ளெங்கிலும் முளையுறச் செழித்தெழுஞ்
 சண்டை யுள்ளான் பொல்லான்.

.........

இப் பாட்டினால் முன்மருந்தை இனிச்செய்ய வேண்டிய விதஞ் சொல்கின்றார்.

(இ. ள்.) பிரகாசிக்கும்படியான முன்சொன்ன மருந்தை யெடுத்துக் கிரமப்படி கல்வத்திற்போட்டு அடியிற் சொல்லும் இலைச்சாற்றினால் இரண்டு சாமம் அரைக்கக்கடவாய்.

அந்த இலையாவது: பொன் கொடிபோலும் இடையினையுடைய மாதர்களது அழகிய பாதத்தில் புரண்டிட அதனாற் சிறப்புற்றுப் பிரகாசித்துக் கலகலவென்னுஞ் சப்தத்தை யுண்டாக்குகின்ற பாதகிண்கிணிபோல் இந்தப் பூமண்டலமெல்லாம் தெரியும்படியாகச் செழிப்புற்றோங்கும் அது மகா சண்டையுள்ளது பொல்லாதது. எ...று.

சூக்ஷ்ம விளக்கம்: ஸ்திரீகளினுடைய பாத கிண்கிணிபோல் ஒலிக்கத்தக்கது மகா சண்டையுள்ளது பொல்லாதது எனவே. அந்தச் செடியினது காயோ எதுவோ இப்படி யொலித்துக் கொண்டிருக்கப்பட்டதெனவும் விதைகளோ எதுவோ ஒன்றோடொன்று தாக்குவதால் இவ்வித சப்தமுண்டாகுமென்றும் ஏற்படுகிறது. செடியினது பெயர் முதலியவற்றை அடுத்த பாட்டாற் றுலக்குவார், இதனால் அச்செடியின் இலட்சணங் கூறினார்.

இதுயுமது

பதித்திடுங் கடைத் தொடைதனி லாறினம்
 வம்பரைப் போக்கி ரண்டு



துதித்திடுங் ககரர் ரெண்டின நீக்கிடு
 துணைதொடை கடை திரியாங்
கதித்திடு மலர் கறுத் திடுங் கரிவணங்
 கண்டறிந் துணர் வாக
தித்திடுந் தழைச் சாற்றினா லாட்டிடு
 வொளிரிரு சாமமு மே.

.........

இப்பாட்டினால் மேற்குறித்த செடியினது பெயர் முதலியவற்றைக் கூறுகின்றார்.

(இ. ள்.) மதிக்கும் படியான முந்தின பாட்டின் கடைசி யடியில் ஆறெழுத்துக்களையும், வருமெழுத்திற்கினமாக நின்ற வெழுத்தையும் தள்ளி நின்ற இரண்டெழுத்துக்களும், ககரவரியில் இரண்டாமெழுத்து நீங்கிய மூன்றா மெழுத்தும், அந்தப் பாட்டின் இரண்டாவதடியின் கடையிலுள்ள மூன்றெழுத்துக்களும் அந்த செடியின் பெயராகும். அதன் மலரோ கருத்திருக்கும் செடியும் கருப்பு வருணமாக இருக்கும் அந்த இலைச் சாற்றில் 6 மணி நேரம் அரைக்கக் கடவாய். எ...று.

சூக்ஷ்ம விளக்கம்:—முந்தின பாட்டின் கடைசி யடியில் ஆறெழுத்துக்களையும் வருமெழுத்திற்கினமாக நின்ற ங் என்ற எழுத்தையுக் தள்ளி நின்ற இரண்டெழுத்துக்களாவன சிலு ககரவரியில் இரண்டாமெழுத்து நீங்கிய மூன்றாமெழுத்தாவது கி. அந்தப் பாட்டின் இரண்டாவதடியின் கடையிலுள்ளமூன்றெழுத்துக்களாவன அப்பை. ஆக இம்மூன்றையுஞ் சேர்க்க கிலு கிலுப்பை என்றானது இதைத் தவிர இதன் புஷ்பமும் செடியுங் கருத்திருக்கு மெனவே கருப்புக் கிலு கிலுப்பை என்று நிச்சயிக்க வேண்டியது.

முன் கல்வத்திற் போட்ட மருந்தை இந்தக் (கருப்புக் கிலுகிலுப்பைச்) சாற்றை விட்டே இரண்டு சாமமரைக்க வேண்டியது.

விவரம்

அரைப்பு 6

புடம் 5

அறுசீர்க்கழிநெடிலடி விருத்தம்

இவ்வா றரைத்துமருந்து தனை
　　வியல்பா வழித்து வில்லை தட்டிக்
கவ்வா யோட்டி னுட்பொதித்து
　　கலையிற் கழிச்சேற் றினைப்பு
தெவ்வா யோட்டிற் கவச முறச்
　　செறியும் விரல்முன் றுயரமதாச்
செவ்வா யனலிற் புடம் போடு
　　செப்பு முயர முன்முமுமே.

இந்தப் பாட்டினால் மேற்கண்டபடியரைத்து மருந்தைப் புடம்பொடும் விதம் சொல்கின்றார்.

(இ-ள்.) மேற்கண்ட விதமாக அரைத்த மருந்தைப் பொருத்தத்தோடு வழித்து வில்லையாகத் தட்டி ஓட்டில் நிறைத்து வஸ்திரத்தில் கழிமண்ணைப் பூசி அந்த ஓட்டைமூன்று விரல் உயரம் செவந்த நெருப்பை யிட்டுப் புடம் போடக் கடவாய், எ—று.

சூக்ஷும விளக்கம்:—வெளிப்படை. 62

விபரம்

அரைப்பு 6

புடம் 4

சந்த விருத்தம்

அனலதுமமர்ந்த பிற்றை யடைவுடனேயெ
　　யந்தமி லுறைந்த விந்தையே
அனமது சிவந்துமேனி வடிவுற் றுயர்வாகி
　　வரிசைக ணிறைந்து நீடிடும்



மனமது மயங்கிடாமல் மருந்தைக் கல்வமீதில்
　　வளரும்பழச் சாற்றி னாலரை
தினமுபய மானயிற்றைச் சீலைகழி யாற்கவசஞ்
　　செய்விபரந் திரிய தாகுமே.

இப்பாட்டில் முன் புடம்போட்ட மருந்தையெடுத் தின்னது செய்கவெனச் சொல்கின்றார்.

இ-ள், மேற்சொன்னபடியே புடம்போட்டு நெருப்பு ஆறினபின்பு பொருத்தத்துடனே யெடுப்பாய், இனி, அந்த செந்தூரத்திலுள்ள வேடிக்கையைப்பார். அப்படி யெடுத்த மருந்தானது நிறஞ் சிவப்பாய் அழகு மிகுந்ததாகிப் பலவித மரியாதைகளு மோங்கிஉயரும். நீ மனமருளாமல் அப்படிச் சிவந்த மருந்தைப் பழையபடியுங் கல்வத்திற்போட்டு எலுமிச்சம் பழச்சாற்றைவிட்டு விட்டு இரண்டுநாள் மட்டும் அரைக்கக் கடவாய்: அப்படி யிரண்டு நாள்வரை யரைத்துப் பின்பு அந்தமருந்தை யெடுத்து ஓட்டில்போட்டு மூன்று விரற்கனம் கழிமண் சீலைசெய்யக் கடவாய்; எ—று.

சூக்ஷுமவிளக்கம்:—வெளிப்படை. 63

விவரம்

அரைப்பு 10

புடம் 6

கொச்சகக் கலிப்பா

ஆகுமெனவே யரைத்திடு மருந்து தனை
வாகையுடனே வன்னிபுடம் முழமொன் றரை
பூகமுடனே போட்டெடுப்பாய் பொற்புடனே
ஏகமயமா யெழிலுறச் சிவக்கு மன்றே.

இப்பாட்டினால் மேற்குறித்த மருந்தைப் புடம்போடு மார்க்கஞ் சொல்கின்றார்.

(இ-ள்.) முன்சொன்னபடி யரைத்த மருந்தை யெடுத்து முந்தின கிரமங்களின்படியே செய்து அழகாக

வன்னிபுடம் ஒன்றரைமுழ அளவாகப் போட்டெடுக்கக் கடவாய் அவ்விதம் போட்டெடுப்பாயானால் மேற்கண்ட மருந்தானது முற்றிலும் நல்ல அழகாகச் சிவந்துவிடும்' எ—று.

சூட்சும விளக்கம்:—வெளிப்படை. 64

விபரம்.

அரைப்பு 10

புடம் 7

சந்த விருத்தம்

மயமான மருந்தைத் தானெடுத்துக்
கயமய நிறக் கல்வத்தி னுட்படுத்திப்
பயமாய்ப்பழச் சாற்றினா லாட்டிடுவாய்
நயமாகமுன் னாட்டிய வாறதுபோல்.

இப்பாட்டில் முந்தினபடி புடம்போட்டெடுத்த மருந்தைப் பழையபடி செய்யு மார்க்கங் கூறுகின்றார்.

(இ-ள்) அழகான அந்த மருந்தை யெடுத்து யானையினது கருப்பு நிறத்தையுடைய கல்வத்திற் போட்டு முன்போல எலுமிச்சம் பழச்சாற்றைவிட்டு முன்குறித்தபடியே இரண்டுநாள்வரை அரைக்கக் கடவாய். எ - று.

சூட்சுமவிளக்கம்:—யானைபோன்ற கருப்பு நிறத்தையுடையகல்வமென்றதனால் இம்மருந்தை யறைக்கும்படியான கல்வம் நல்லகெட்டியாகவும், கருப்பாகவுமுள்ள நன்னிக்கல்வமா யிருக்க வேண்டுமென்பதுதானே யேற்படுகின்றது. ஆனால்மேற்கண்ட இலட்சணங்களமைந்த கல்வம் இந்த ஒரு அரைப்புக்குமட்டுந்தான் இருக்கவேண்டுமென்பதல்ல. எல்லா அரைப்புகளுக்குமே யிருக்கவேண்டுமென்பதாயிற்று ஆகவே இந்தமருந்தினது முறையின் ஆதிதொடங்கி அந்தம் வரையினும் மேற்கண்ட இலட்சணங்களுள்ள கல்வத்தில் அரைக்க வேண்டும். இவர்கடைசியில்வந்து கல்வத்தின் இலட்ச



ணத்தைச் சொல்லிவைத்தது பிறர் மயங்கும் பொருட்டேயாம். ஆதலால் புத்திமான்கள் கண்டு தெளிய வேண்டியது. 65

விபரம்

அரைப்பு 11

புடம் 1

(வேறு) விருத்தம்

மருந்தை வழித்து நீ வளரும் பில்லையாய்ப்
பொருந்திட வோட்டினிற் பொதிந்து பொற்புற
அருந்தவக் கவசமு மாடை யுங்கழி
விரைந்திடும் புடமது விபர முன்னமே.

இந்தப் பாட்டில் மேற்கண்டபடி அரைத்த மருந்தை யின்னது செய்யவேண்டுமெனச் சொல்கின்றார்.

(இ-ள்.) மேற்கண்டபடி யரைத்த மருந்தையெடுத்து வில்லைசெய்து ஓட்டில்வைத்து முன்போலவே மூன்று விறற்கனம் சீலைமண் செய்து ஒன்றரைமுழப் புடம் போடக் கடவாய். எ—று.

சூட்சும விளக்கம்:—வெளிபடை 66

விபரம்

அரைப்பு 11

புடம் 8

சந்தவிருத்தம்

பிரித்ததை யெடுத்தபின் பிணிக்கவச நீக்கு
முருத்துடன் மருந்தது முயங்கியே சிவக்கும்
உருத்துக்க ரத்திலே நீ யொன்றாலு மொன்று
கருத்தவக ரத்தலையுங் கடைலக்க மாமே.

இப்பாட்டில் முன் மருந்தை யெடுத்துப் பின்செய்யும் விதத்தைச் சொல்கின்றார்.

இது முதல்-4-பாட்டுகள் குளகம்

(இ-ள்.) மேற்குறித்தபடி போட்ட புடத்தையெடுத்துச் செய்திருக்கும் படியான கவசத்தைப் பிரித்துப் பார்க்கக் கடவாய், அப்படிப் பார்க்கும்போது அந்த மருந்தானது நன்றாய்ச் சிவந்திருக்கும். இதையெடுத்து நகர வரியில் முதலெழுத்துக் கடுத்து நின்ற இரண்டாமெழுத்தையும், வகரவரியின் முதலெழுத்தையும், லகரவரியின் கடையெழுத்தையும் கூட்டினால் எப்பெயர் வருமோ அப்பெயருள்ள வோர்மரத்தின். எ—று.

சூட்சும விளக்கம்:— நகரவரியில் முதலெத்துக் கடுத்து நின்ற இரண்டாமெழுத்தாவது [நா] வகரவரியின் முதலெழுத்தாவது [வ.] லகர வரியின் கடையெழுத்தாவது [ல்.] ஆக இம்முறையுங் கூட்ட நாவல்; என்றானது. இதுவே அந்த மரமாம் மற்றவை பின் சொல்லுவார். 67

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

இட்டமா யிவணிற்சொன்ன
வெழிலுறு தருவிலுற்ற
பட்டையின் சாற்றினாலே
பரிவுடனரைப்பாய் சாமம்
திட்டமா மூன்ற தாகத்
தீதற வழித்து வில்லை
தட்டியே யோட்டில்வைத்துச்
சமைத்திடுங் கவசங்கேண்மோ.

இப்பாட்டில் முன் மருந்தையினிச்செய்ய வேண்டிய விதஞ் சொல்கின்றார்.

[இ-ள்.] பிரியத்தோடு மேலே சொல்லிய அழகு பொருந்திய மரத்தினுள்ள பட்டையினது சாற்றினாலே மேற்குறித்த மருந்தைக் கல்வத்திலிட்டுமூன்று சாமம் அரைக்கக் கடவாய். அப்படி யரைத்த பின்பு அதை வழித்து முன்போல பில்லைதட்டி ஓட்டில் வைத்துப் பின் கவசஞ் செய்யு மார்க்கங் கூறுவோம் கேட்பாயாக. எ—று



சூக்ஷும விளக்கம்:—மேற்கண்ட மருந்தையெடுத்து முந்தின பாட்டிற்சொன்ன நாவல் மரத்தினது பட்டைச் சாற்றைவிட்டு மூன்று சாமமரைத்துப் பில்லைதட்ட வேண்டியது. மற்றவை அடுத்தபாட்டிற் சொல்கின்றார். 68

விபரம்

| | |
|---|---|
| அரைப்பு | 12 |
| புடம் | 8 |

[வேறு]

கோழிக் காரமிற் கூட்டிடு வெண்கரு
தாழவே யரைப் பாய்நீ தயவுடன்
சூழவே சீலை மேலை துவைத்ததை
ஏழு சீலை கவச மிறுக்குவாய்.

[இ-ள்] அப்படி வில்லைதட்டிய பின்பு வேண்டிய அளவு கோழிக்காரத்தை பெடுத்து அதில் கோழிமுட்டை வெள்ளைக் கருவைச் சேர்த்துப் பலமாயரைக்கக் கடவாய். அப்படி யரைத்தபின் அதில் சீலையைத்தோய்த்து முன் ஓட்டில் வைத்த மருந்திற்கு ஏழுசீலைமண் செய்வாய் எ—று.

சூக்ஷும விளக்கம்:—வெளிப்படை. (69)

ஆசிரிய விருத்தம்.

சீலைசெய்திடும் வில்லையைச் செறிமுழ மிரண்டாய்த்
தாலமீதினிற் புடமுறத் தழலெரி பரப்பி
ஓலமின்றியே யுலர்ந்தபின் கவசத்தை யுடைக்கிற்
சீலமொன்றிய மருந்ததுஞ் செக்கர்போ லாமே.

இப்பாட்டில் மேற்குறித்த மருந்தைப் புடம் போடும் மார்க்கஞ் சொல்கின்றார்.

[இ-ள்.] முற்குறித்தபடி சீலைமண்செய்த மேற்படி மருந்தைப் பூமியின்மேல் நெருங்கிய இரண்டுமுழ முள்ள புடம்போட்டு நெருப்பிட்டு எரிந்தாறினபின் கவசத்தைப் பிரித்தால் சீலம் பெருந்திய அந்த மருந் தானது செவ்வானத்தைப் போன்று மிகவுஞ் சிவந் திருக்கும். எ—று.

சூட்சும விளக்கம்:—வெளிப்படை. 70

விபரம்

அரைப்பு 12
புடம் 6

[வேறு.]

செக்கர்போனிற மானதோர் மருந்தைத் திருப்பி
அக்கணத்தினி லடைவுடன் கல்வமிற் செலுத்திப்
பக்குவத்தொடு பகர்ந்தமுன் பட்டையின் சாற்றில்
மிக்கவேயரை முன்விளம் பியவிப ரமதாய்.

இப்பாட்டில் முன்னெடுத்த மருந்தைப் பின் செய்ய வேண்டிய முறை சொல்கின்றார்.

(இ-ள்.) முன்பெடுத்த செவ்வானத்தைப் போன்ற நிறத்தினை யுடைய அந்த மருந்தைத் திரும்பவும் அந்தச் சமயத்திலேயே கல்வத்திற் போட்டுப் பக்குவ மாக முன்பு கூறிய நாவல் மரப்பட்டைச் சாற்றை விட்டு முன்போலவே மூன்று சாமம் அரைக்கக் கடவாய். எ-று.

சூக்ஷும விளக்கம்:— வெளிப்படை. (71)

விபரம்

அரைப்பு 16
புடம் 6



நொண்டிச் சிந்து

அரைத்திடு மருந்து தன்னை யம்மிவிட்டு
அடைவுடன் வழித்துநி வில்லையைத் தட்டி
யுரைத்திடு மோட்டி னுள்ளே வில்லைதனை
யுச்சிதமாய் வைத்ததிலே உச்சிடுங்கழி
கரைத்துநி சீலை தனைக் கவசங்
கணக்குற விரல்மூன் றெனக்குறியாய்
எரித்திடு புட முயர மியம்பக்கே
ளெல்லோரு மறியமுன் சொல்லினேனே.

இப்பாட்டில் முன்னரைத்த மருந்தைப் புடம்போடும் மார்க்கஞ் சொல்கின்றார்.

(இ-ள்) மேற்சொல்லியபடி யரைத்த மருந்தைக் கல்வத்திலிருந்து கிரமமாக வழித்தெடுத்து வில்லை தட்டி முன் சொன்னபடியே ஓட்டில் வைத்துக் நைப்பான கழிமண்ணைக் கரைத்து அதனால் மூன்று விரற்கனம் சீலைமண் கணக்குப்படி செய்து முன் சொன்னபடியே இரண்டுமுழ உயரம் புடம்போட்டு எரிக்கக்கடவாய். எ—று.

சூக்ஷும விளக்கம்:—வெளிப்படை. (72)

விபரம்

அரைப்பு 16
புடம 10

பஞ்சசந்த விருத்தம்

சொல்லிய மருந்தை மூசை விடுத்துநீ
துரித மாகவே யெடுத் திட
நல்லிய லாகவே சிவந்து நீறியே
நாத னொளிவந்து மீறிடும்

மெல்லியர் குழலில் விரை கமழ்ந்திடும்
மேன்மையும் வணமும் வெண்மையாம்
மல்லிகை யிலையின் சாற்றினா லரை
வழுத்துவேன் சாம மூன்று மே.

இப்பாட்டில் முன்னெடுத்த மருந்தைப் பின்பு செய்யவேண்டிய மார்க்கஞ் சொல்கின்றார்.

(இ-ள்) அப்படிப் புடம் போட்டெரித்த மருந்தை யெடுத்துக் கவசத்தை நீக்கிப்பார்க்க அது நன்றாய்ப் பொருத்தமாகச் சிவந்து நீறிச் சிவனைப் போன்ற சிவந்த நிறமானது வந்திருக்கும். பின்பு அதைக் கல்வத்திலிட்டு ஸ்திரீகளினுடைய கூந்தலிலிருந்து வாசனையைச் செய்யும்படியானதும், மேன்மையும் வெள்ளிய நிறத்தையுடையதுமான புஷ்பங்களுள்ள மல்லிகைச் சாற்றைவிட்டு மூன்று சாமம் அரைக்கக்கடவாய். எ—று.

சூக்ஷுமம்:—வெளிப்படை

விபரம்

| | |
|---|---|
| அரைப்பு | 14 |
| புடம் | 10 |

எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

வழுத்துகின்ற மருந்ததனை வழித் தெடுத்து
வகையாக வில்லைதட்டி யோட்டில் வைத்து நீ
கழறுகின்ற கழிச்சீலை கவசம் பண்ணிக்
கத்தாவை மனத்திலுன்னி கதிக்கத் தீயாற்
புகலுவேன் புடம்போடு முழம் ரெண்டாகப்
புகையெழும்பி நீறியபின் புடம் பிரித்துத்
தவமுடனே யெடுத்திடுவாய் மருந்து தன்னைத்
தப்பாமற் சாற்றும்வகை தன்னைக் கேண்மோ.

இப்பாட்டில் மேற்குறித்த மருந்தைப் புடம்போடும் விதஞ் சொல்கின்றார்.



(இ-ள்) முன் சொன்னபடி யரைத்த மருந்தை வழித்தெடுத்து வில்லையாகத் தட்டி ஓட்டில் வைத்து சொல்லும்படியான கழிமண்ணினாற் சீலைமண் செய்து கடவுளை மனதில் நினைத்துக் கொண்டு இரண்டுமுழ உயரம் புடம்போட்டு வேகமாகத் தீயை மூட்டுவாய். அது புகை யெழும்பிப் பிடித்து நீறியாறியபின் அதிக பக்தியோடு அந்த மருந்தை யெடுத்துக் கவசத்தைப் பிரிப்பாய். அப்படி யெடுத்துப் பிரித்து மருந்தை யெடுத்துக் கொண்ட ன் செய்யு மார்க்கத்தைக் கூறுவேன் கேட்பாயாக எ—று,

சூக்ஷும விளக்கம்:—வெளிப்படை (74)

விபரம்

| | |
|---|---|
| அரைப்பு | 14 |
| புடம் | 11 |

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

அருவாக மருந்து தன்னைக் கல்வத் திட்டே
யாயிரத்தி னாதியந்தச் சூக்ஷமாகிக்
கருவான குருமூலிச் சாற்றி னாலே
கனக்கவே யரைத்திடுவாய் சாமம் மூன்று
மருவாக வழித்தெடுத்து வில்லை தட்டி
வட்ட முற வோடுரைத்தே யுட் பொதிந்து
மருவாகு மாசுணத்தின் கண்ணா னென்ற
மலைமண்ணிற் சீலையுறக் கவசம் பண்ணு.

இப்பாட்டினால் முன்னெடுத்த மருந்தைப் பின்பு செய்ய வேண்டிய மார்க்கஞ் சொல்கின்றார்.

(இ-ள்) முன்சொன்னபடி யெடுத்த மருந்தைக் கல்வத்திற் போட்டு இந்த ஆயிரம் பு[illegible] நூலின் முதலில் யாவுக்கும் இர[illegible]மாகவும், மூ[illegible]வும் சொல்லப்பட்ட குரு மூ[illegible]யென்ற (திருநாற்றுப் பச்சை)ச் சாற்றைவிட்டு மிகவு[illegible] பலமாக மூன்று சாமம்

19283 1
சென்னை-600 008

அரைக்கக் கடவாய். அப்படியரைத்தபின் அதனை வழித்தெடுத்து வில்லைதட்டி வட்டம் பொருந்தும் படியாக ஓடுகளைத் தேய்த்துச் சேர்த்து அதனுள் இந்த மருந்தை வைத்துப் பாம்பினது கண்ணைப் போன்ற ஓர் ஜீவனது வீட்டின் மண்ணினால் சீலைமண் செய்யக் கடவாய். எ—று.

சூக்ஷும விளக்கம்:—பாம்பின் கண்ணைப் போன்ற ஜீவனானது (கறையான்) அதனுடைய வீடாவது (புற்று) ஆகவே கறையான் தங்கும்படியான (புற்று மண்) என ஏற்படுகின்றது. இந்தப் புற்று மண்ணில் கவசஞ் செய்ய வேண்டியது. (75)

விபரம்

| | |
|---|---|
| அரைப்பு | 15 |
| புடம் | 11 |

வேறு விருத்தம்

பண்ணிய மருந்தைப் பகரக் கேணலம்
நண்ணிய முழமுயர் நடி ரண்டாகவே
புண்ணிய மாய்ப் புடம் போட்டெடுத்திடு
மண்ணினின் மாழையு மலிவ தாகுமே.

இப்பாட்டின் முன்கவசம் செய்த மருந்தைப் புடம் போடு மார்க்கங் கூறுகின்றார்.

(இ-ள்) மகனே சொல்லக் கேட்பாயாக. அப்படிக் கவசம் பண்ணிய மருந்தை இரண்டுமுழ உயரமான புடம் போட்டெடுக்கக் கடவாய். இதனால் இப் பூமண்டலத்தில் தங்கம் மிகுவதாகும். எ—று.

சூக்ஷும விளக்கம்:—வெளிப்படை (76)

விபரம்

| | |
|---|---|
| அரைப்பு | 15 |
| புடம் | 12 |



எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

ஆனதொரு மருந்து தன்னைக் கவசம் வாங்கு
வரகரா வதன் பெருமை யறை யொண் ணாதே
ஞானமுறு யோகிகளா யாக்கு விக்கும்
நாதாந்த வேதாந்த நரலை தங்கும்
கானமலை யாய்ப்பொருளை யேற்றி வைக்குங்
கசடருக்கு மருத்துவத்தைக் காட்டி வைக்கும்
பானமிர்த மானமொழி பகர வைக்கும்
பறையனறிந் தாற்பல்லக் கேற்றி வைக்கும்.

இப்பாட்டில் இம்மருந்தினது பெருமை கூறுகின்றார்.

(இ-ள்) அப்படி யெடுத்த மருந்தைக் கவசத்தைப் பிரிக்கக்கடவாய். அப்படிப் பிரிப்பாயேயானால் சிவ சிவா அதனுடைய பெருமையைச் சொல்லி முடியாது. இந்த மருந்தை முடித்தவர்கள் எப்பேர்ப்பட்டவர்களானாலும் ஞானமிகுந்த யோகிகளாகச் செய்விக்கும். வேத முடிவிற்பிரகாசிப்பதாகிய பரம்பொருளினதுதெரிசனைக் கிட்டும். இன்னும் இது காட்டிலுள்ள மலைகளைப் போன்ற பல திரவியங்களை யடைச் செய்யும். மூடத் தன்மையை யுடையவர்களுக்கும் அநேகமாகிய மகத்துவங்களைக் காண்பிக்கும். பாலைப் போலவும், அமுதத்தைப் போலவும் சொற்களைச் சொல்ல வைக்கும் ஜாதியிற்றாழ்ந்த பறையனுங்கூட இம்முறையை யறிவானேயாகில் அவனைப் பல்லக்கேறும்படி செய்விக்கும். எ—று.

சூட்சும விளக்கம்:—வெளிப்படை (77)

இதுவுமது

அந்தமென்ற செந்தூரப் பெருமை தன்னை
யாதியறி வானவலா லவனி மீதில்
மைந்தர்களி லறிபவர்க ளரிது கண்டீர்
மகத்தான செந்தூரம் வாச்சு தானாற்

செந்திருவு முன்முகத்திற் குடியிருப்பாள்
செப்புமொழி தவறாது ஜெயமே பொங்குங்
கந்தரத்தி லுறுமழைபோ லுந்த னில்லிற்
கனகமழை பெய்யுமே கழறக் கேண்மோ.

இப்பாட்டிலும் மருந்தினது பெருமை கூறுகின்றார்.

(இ-ள்) அந்த செந்தூரமென்னும் பெயரினை யுடைய இந்த மருந்தினது பெருமையைக் கடவுளே அறிவானல்லாமல் இப்பூவுலகிலுள்ள மனிதர்கள் அறிவது அரிதாகும். இந்த மகத்துவந்தங்கிய செந்தூரமானது உனக்குக் கைகூடுமேயானால் உன்னுடைய முகத்தில் மகாலட்சுமி வாசஞ் செய்வாள். நீ யெந்த வார்த்தை சொன்னாலும் உலகத்தில் நிறைவேறும். உனக்கு எவ்விடத்திற் சென்றாலும் ஜெயமே அதிகரிக்கும். மேகத்தினிடமா இருந்து சொரியப்பட்ட மழையைப் போல உன் வீட்டிற் பொன்மழை பெய்யும். இன்னுஞ் சொல்லக் கேட்பாயாக. எ—று.

சூக்ஷும விளக்கம்:—வெளிப்படை. (78)

இதுவுமது

வாச்சுதென்று மகத்துவங்கள் பேசி டாதே
வம்பருக்குந் துன்பருக்கும் வழுத்தி டாதே
பேச்சுமுதற் கண்டெனெனப் பேசி டாதே
பெரியோர்கள் சொற்றட்டிப் பிதற்றி டாதே
மாசை செய்வே னென்றெவர்க்கும் வழுத் திடாதே
மாதவத்தி னங்குருவை மறந் திடாதே
ஊசியது காதற்ற வாறு போலே
வோகோகோ யுதவாதே யுலக வாழ்வே.

இப்பாட்டில் இம்மருந்து முடித்தவன் இருக்க வேண்டிய முறை கூறுகின்றார்.

(இ-ள்) மைந்தனே இந்த மருந்தானது தெய்வாதீனத்தால் உனக்கு முடிந்து விட்டாலும் நமக்குக் 



கிடைத்துவிட்ட தென்னுஞ் செருக்குக் கொண்டு எவரிடத்துந் தன் பெருமை கூறாதே. வம்பு செய்வோருக்கும், உலகத்தாருக்குத் துன்பஞ் செய்வோருக்கும் இதைச் சொல்லி விடாதே. நான் இதை அறிந்திருக்கின்றேனென்று பேச்சினாலாவது ஒருவரிடமும் பேசாதே. மகான்களுடைய உறுதி வாக்கியத்தைத் தட்டிக் கண்டபடி உளறிவிடாதே. நான் பொன் செய்வேனென்றும் ஒருவரிடமுஞ் சொல்லாதே. மகா தவத்திற் சிறந்த நமது குருவை அகங்காரத்தினால் மறந்து விடாமல் மனதில் வைக்கக் கடவாய். இவைகளில் எதையேனும் தவறுவாயேயானால் இம்மருந்துஉன் கையிலிருந்தாலும் காதற்ற வூசியைப் போல ஒன்றுக்கும் உதவாமற் போய் விடும். எ—று.

சூக்ஷுமவிளக்கம்:—வெளிப்படை. (79)

கவி விருத்தம்

கவசம்வாங்கு மருந்ததைக் கண்டறி
தவள தாமரைத் தண்மல ராம்வணம்
பவுசுமேயுயர் பாக்கிய மும்முற
அவசரத்தி லடக்கஞ்செய் வாயதை.

———

இது முதல் மூன்று பாட்டுகளால் மருந்தினது வல்லபஞ் சொல்கின்றார்.

(இ-ன்.) முன்னே சொன்னபடி கவசம் நீக்கி அந்த மருந்தைப் பார்ப்பாய். அது குளிர்ச்சி பொருந்திய வெண்டாமரைப் புஷ்பம் போன்ற நிறத்தினையுடையதா யிருக்கும். பல மேன்மைகளையும், மிகுந்த செல்வத்தையுமடைய வேண்டுமானால் இதை மிக விரைவில் பதனப் படுத்துவாய். எ—று.

சூக்ஷும விளக்கம் :...வெளிப்படை. (80

இதுவுமது.

ஆயிரத்தி லறைந்த முறைதோறும்
பாயும்பல்லுகம் போலே பதுங்கிய
தீயினீறிடச் செய்வதுஞ் செம்பொனரங்
காயசித்திக் கருமது கண்டறி

இதுவுமது

(இ - ள்.) ஆயிரம் பாட்டுக்களாலாகிய இந்த இலக்க சௌமிய சாகரத்திற் சொல்லி யிருக்கின்ற முறைகள் தோறும் பாயத்தக்க புலியைப்போல பதுங்கி யிருந்து மற்றவைகளைத் தீயில் நீறும்படியாகச் செய்வதும், சிவந்த பொன்களைச் செய்வதும் காயசித்தியைச் செய்வதுமாகிய இது யாவற்றிற்கும் ஒரு மூலமாகும் கண்டறிவாய். எ—று. (81)

இதுவுமது

கெவுனவுண்டை கெடியுறச் செய்வதும்
மவுனமான மறைப்புமை செய்வதும்
புவனமாய்கைப் புரியிந்திர ஜாலமுங்
கவருமந்தக் கருமிது கண்டறி,

இதுவுமது

(இ - ள்.) ஆகாயத்திலுஞ் சஞ்சரிக்கும் படியாகச் செய்கின்ற கமன குளிகை முதலியவற்றைச் சிரேஷ்டம் பொருந்தும்படியாகச் செய்வதும், மிகவும் இரகசியமான மறைப்பு மை முதலியவற்றைச் செய்வதும், பூவுலகத்தார் மயங்கும் படியாகச் செய்யத்தக்க இந்திர ஜால முதலியவற்றைச் செய்வதும் இந்த மருந்தேயாம். இதுவே எல்லாவற்றிற்குங் கருவாகும். அறியக்கடவாய். எ—று.

சூக்ஷம விளக்கம் :...வெளிப்படை. (82)

எண்சீர்க் கழிநெடில யாசிரிய விருத்தம்.

அடக்கமது செயதிருந்த செந்தூ ரத்தி
லப்பனே யிரசிதத்தி னூற்றி லொன்று



கொடுக்கவதின் வெளுப்புற்று மஞ்ச ணித்துக்
குவலையத்தில் வர்ணமுறக் கொதி கொதித்து
அடிக்கவள வாய்நீளும் பசுமை யாகும்
அற்பழுக்கு யாதொன்று மில்லை யப்பா
வடுக்களின்றி யாணியுரை யெட்ட தாகும்
மறுத்துமொரு வேதைதனை வழுத்தக்
கேண்மோ.

.........

இது முதல் இரண்டு பாட்டுகளால் இம்மருந்தின் வேதை சொல்கின்வார்.

(இ - ள்.) மைந்தனே முன் சொன்னபடி பத்திரப் படுத்தி வைத்திருக்கிற இந்த அந்த செந்தூரத்தில் வெள்ளிக்கு நூற்றிலொரு பங்கு சேர்த்தால் அவ் வெள்ளியானது வெளுப்பு நிறமானது மாறி மஞ்சள் நிறத்தை யடைந்து நல்ல அழகுடையதாக பிரகாசித்து சுத்தியல் கொண்டடித்தால் தங்கத்தைப்போல் இளக்க மாகி வளைவுற்று நீளும். பொன் போன்ற பசுமையை யடையும். இதல் யாதொரு தோஷமுமில்லை. இது குற்றமற்ற பொன்னினது எட்டு மாற்றாகும். இன்னு மொரு வேதை சொல்வேன். அதையுங் கேட்பாயாக. எ...று.

சூக்ஷம விளக்கம் :...வெளிப்படை. (83)

இதுவுமது

களும்புற்ற செம்புதனி னூற்றி லொன்று.
காட்டிடவே கண்விட்டுக் கதிக்க வாடிக்
குழம்புற்ற பெயரொழிந்து மஞ்ச ணித்துக்
குலத்திலுள்ள துற்சனங்க டன்னை விட்டுத்
தழும்பற்றே யாணியுரை யைந்தே யாகுந்
தடிதடிந்து புடம்போடத் தங்க மாகும்

தொழும்புற்ற செந்தூர வேதை யின்னஞ்
சொல்லுகிறேனென்மகனே துலங்கக்
கேண்மோ.

.........

இப்பாட்டினால் மேற்படி செந்தூரத்தினது வேறு வேறு வேதை சொல்கின்றார்.

(இ - ள்.) மேற்கண்ட அந்த செந்தூரத்தைக் களிம்பு நிறைந்த செம்பில் நூற்றுக்கொரு பங்கு சேர்த்தால் அதனுடைய நிலைமை கெட்டு மிகவும் வாடி மிகவும் குற்றமுடைய செம்பென்ற தனது பழைய பெயர் மாறி மஞ்கள் நிறத்தை யடைந்து தனக்கேற்பட்ட துர்க்குணங்கள் நீங்கிக் களங்கமற்ற பொன்னினது மாற்று ஐந்தாகும். இதை மறுத்து மறுத்துப் புடம் போட்டால் உயர்ந்த தங்கமாகும். யாவரையும் அடிமை கொள்ளும்படியான இந்தச் செந்தூரத்தினதுவேதையை யின்னஞ் சொல்லுகிறேன் மைந்தனே கேட்பாயாக. எ...று.

சூக்ஷும விளக்கம் :...வெளிப்படை. (84)

இதுவுமது

அரிசியிடை செந்தூ ரந்தன்னையள்ளி
யப்பனே யிஞ்சிச்சா றதனிற்போட்டு
வரிசையுடன் கொடுத்திடவே சன்னியென்ற
மகத்தான பதின்மூன்று தோஷமோடும்
பரிசனத்திற் பறந்துவிடுஞ் சுரங்களெல்லாம்
பானுகண்ட பனிபோலே வாடு மிக்க
விரசுடனே தீருமடா மாதர் போக
விடாயதனால் வந்துதித்த பிரமை யெல்லாம்.

.........

வைத்தியம்

இது முதல் மேற்படி செந்தூரத்தை வைத்தியத்திற்குபயோகிக்கும் விதமும் அதனால் தீரும் வியாதிகளுஞ் சொல்கின்றார்,



(இ - ள்.) மைந்தனே இந்த அந்த செந்தூரத்தில் அரிசியெடை யெடுத்து இஞ்சிச்சாற்றிற் போட்டுக் கிரமமாகக் கொடுத்தால் அதை யுண்டவனுக்கு அரிதென்று சொல்வதான பதின்மூன்று சன்னி தோஷங்களுந் தீரும். சுரங்களெல்லாம் ஆகாயத்திற் பறந்தோடிவிடும். மேற்கண்ட வியாதிகளெல்லாம் இம் மருந்தைக் கண்டால் சூரியனுக்கு எதிரான பனியைப் போல விலகி யோடிப்போகும். மாதர்களுடைய மிகுந்த போகத்தினால் வந்து தோன்றிய பிரமிய முதலான ரோகங்களெல்லாம் மிகவும் விரைவில் தீரும். எ...று.

சூக்ஷும விளக்கம் :...வெளிப்படை. (85)

இதுவுமது

கழறக்கேள் கருமகாண் டத்திற் சொன்ன
கதியான வமுர்தசஞ் சீவி தன்னின்
வழுத்தினே னரிசியிடை வைத்தே யுண்டால்
மாசைமலை போற்புயமு மகிழ்ந்து விம்மித்
தவமுடனே சரீரமது மிறுகிச் சேர்ந்து
தளதளப்பாய்ச் சந்திரனொளி போ லிலங்கி
நவமுடனே நரைமாறி யகத்தி னுள்ளே
நாதாந்த வேதாந்த நரலை பொங்கும்.

இதுவுமது

(இ - ள்.) மைந்தனே சொல்வேன் கேட்பாயாக. இந்த அந்த செந்தூரத்தில் அரிசியெடை யெடுத்து இந்நூலினது கரும காண்டத்திற் சொல்லி யிருக்கப் பட்ட அமுத சஞ்சீவியில் வைத்து உண்டால், உண்டவனது புயங்கள் மேரு மலையைப்போற் பெருத்து விம்மி தங் கொண்டு தேகமானது இறுகிப் பலப்படுத்தி சந்திரனொளிபோல் மினுமினுத்து பிரகாசித்து அழகாக நரை திரை மாறி மனதினிடமாகச் சுயம்பிரகாசமாகிய சொரூபத்தினது தோற்றமுண்டாகும். எ...று.

சூக்ஷுமம விளக்கம் :...மேற்சொல்லிய படியிம் மருந்தையுண்டவன் காய சித்தியடைந்து முத்தி சாதனத்தைப் பெறுவானென்பது இதன் கருத்து. (86)

கலி விருத்தம்

கண்டங் கத்தரிச் சாற்றிற் கதிக்கவே
அன்ற றைந்த வரிசி யிடையுற
உண்டி டக்கொடு வுண்டவன் றன்னுடன்
அண்டி நின்ற வியாதி யகலக்கேள்.

இதுவுமது

(இ - ள்.) மேற்படி செந்தூரத்தில் அரிசி யெடை யெடுத்துக் கண்டங் கத்திரி சாற்றிற் கலந்து சாப்பிட அப்படி சாப்பிட்ட வனது தேகத்திற் பொருந்தியிருந்த வியாதிகள் நீங்கும் விதத்தைச் சொல்வேன்கேட்பாயாக. எ...று.

சூக்ஷுமம விளக்கம் ;...வெளிப்படை (87)

இதுவுமது

சேட்டு மங்களுந் தீயிற் றளிரென
ஓட்ட மாக வொழித்துட னோடிடும்
ஈட்ட மாக விதிர்த்திடு விக்கலும்
நாட்டை விட்டு நடக்குஞ் க்ஷயமெலாம்.

இதுவுமது

(இ - ள்.) இந்த மருந்தினால் சேட்டுமங்களெல்லாம் நெருப்பிலிடப்பட்ட தளிரைப்போல இயல்பு கெட்டு ஓடியொழிக்கும். நெருங்கிந் தேகத்தை விதிக்கச் செய்வதாகிய விக்கலும் ஓடிப்போம். க்ஷயரோக மெல்லாம் நீங்கும். எ—று.

இதுவுமது

சூட்சும விளக்கம்;—வெளிப்படை. 88



ஈளை யோடு மிளைப்பு மிருமலும்
மூளை யோடு முயங்கிய பீனிசம்
காளை மாரைக் கசக்குஞ் க்ஷயமெலாம்
சாளை யத்துடன் சாற்றுமுன் னோடுமே.

இதுவுமது

(இ-ள்) இன்னுமிதனால் ஈழையென்ற வியாதியும் நீங்கும். இளைப்பு, இருமல், மூளையோடு சம்பந்தப்பட்ட பீனிசரோகம், மனிதர்களை வருத்துவதான பல வித க்ஷயங்கள் யாவும் நீங்குதலாகும்.எ—று.

சூட்சுமவிளக்கம்:—வெளிப்படை. 89

மேக மோடு மிகுத்திடும் பாண்டுகள்
சோகை யென்றிடுந் துன்ப மிரண்டிடும்
ஆகு மந்த மமர்ந்த மருந்தினால்
வாகை யாகிய வாலிப மாகுமாம்.

இதுவுமது.

(இ-ள்) இவைகளைத்தவிர மேகரோகங்களுமோடிப்போகும். மிகுந்த பாண்டு; சோகை யென்னப்பட்ட துன்பகரமான வியாதிகளும் பயந்து நீங்கும். இன்னும் இந்நூலிற் சொல்லப்பட்ட இம்மருந்தினால் தேகச் சோர்வு நீங்கி அழகு பொருந்திய யௌவன திசையுமுண்டாகும். எ—று.

சூட்சும விளக்கம்;...வெளிப்படை. 90

கலி விருத்தம்

இயம்பு வேனீரின் முள்ளிலைச் சாற்றினில்
நயம்பெ றவரிசியிடை நன்குறச்
செயமு டன்றிரி நாளதைத் தின்றிடிற்
பயந்தே யோடும் வியாதி பகரக்கேள்.

வேறுவிதம்.

(இ-ள்) மைந்தனே சொல்வேன் கேட்பாயாக. இன்னும் இந்தச் செந்தூரத்தை அரிசியெடை யெடுத்து நீர்முள்ளியிலைச் சாற்றிற்கலந்து வீரத்தோடு மூன்று நாள் சாப்பிட்டால் அதனாற்றீரும் வியாதிகளையுஞ் சொல்வேன். கேட்பாயாக. எ—று.

சூட்சுமவிளக்கம்:—வெளிப்படை 91

இதுவுமது

தத்து வங்கள் வலுக்க டனக்குறை
நித்த மோடிடு நீரழி வானதும்
மெத்த மேனி மெலிந்துவெளுப்பதும்
பித்த லாகிரி பின்பாராதோடுமே.

இதுவுமது

(இ-ள்) இப்படிச் சாப்பிடுவதனால் தேகதத்துவங் களினது வலுவானது குறையும்படியாக நிதம் ஓடப்பட்ட நீரிழிவும், தேகமிகவு மெலிந்து வெளுத்துப்போவ தாகிய குணமும், பித்தலாகிரியென்ற நோயும் நீங்கி யோடிப்போகும்.

சூட்சமவிளக்கம்:—வெளிப்படை. 92

இதுவுமது

மேனி மீதில் வெடிபுரை புண்ணொடு
சூனி யங்களிற் சூழ்ந்திடு தோஷமும்
யோனி தின்னிக் கரப்ப னொடுவகை
பானு கண்ட பனிபோ லகலுமே.

இதுவுமது

[இ-ள்] இன்னும் இதனால் தேகத்திலுண்டாகும் வெடிப்பு, புரை, புண், மந்திர சூனியங்களாற் சேர்ந்த தோஷங்கள், யோனிதின்னிக் கரப்பான் முதலான வியாதிகளெல்லாம் சூரியனைக் கண்ட பனிப்போல நீங்கிப்போகும். எ-று.



சூட்சும விளக்கம்:-வெளிப்படை. 93

இதுவுமது

குன்ம மென்ற குலங்க ளனைத்துமே
தன்மை யாகித் தடிதடிந் தோடிடும்
வன்மை யான வலிப்பும் பிரட்டலும்
துன்மந் துன்மமென் றேசொலி யோடுமே.

இதுவுமிது

[இ-ள்] இதைத் தவிரக் குன்மமென்ற வியாதிகள் யாவும் நீங்கிப் பதறிக்கொண்டோடிப் போகும். வலி பொருந்திய வலிப்பு; புரட்டல் முதலியன வெல்லாம் நாம் இங்கிருப்பது துன்பம் துன்பமென்று சொல்லிக் கொண்டே யோடும். எ-று.

சூட்சும விளக்கம்:வெளிப்படை 94

வேறு விருத்தம்

முசுறெனு மூலக முட்டையின் றையில முள்ளாக
விசையுட னரிசி யிடையது தனையேவிழுங்கிடுவாய்.
திசையுறு மகனே செப்புவன் றிரியின் பொழுதாகத்
தசையுட றன்னிற் றானறும் வியாதி தனைக்
கேண்மோ.

வேறுவிதம்

[இ—ள்] மேற்கண்ட மருந்தை முசுறுமுட்டையின் தயிலத்தில் அரிசியெடை வைத்து மூன்றுநாள் சாப் பிடக் கடவாய். அப்படிச் சாப்பிட்டால் அதனால் உட லிலிருந்து நீங்கும் வியாதிகளைச் சொல்வேன் கேட் பாயாக. எ—று.

சூட்சுமவிளக்கம்:—வெளிப்படை. 95

கொச்சகக் கலிப்பா

சதிரந் தனையே சன்னல்பின்ன லாக்கிவைக்கும்
குதிரை வலியுங் குஞ்சரத்தின் றன்வலியும்

எதிர்காண் பவரை யேகிப்பயந் தோடச்செய்யும்
மதியா வலிகண் மாட்டேனென்று காட்டைநாடும்

இதுவுமது

(இ—ள்) முன்சொன்ன கிரமப்படி யிந்தமருந்தைச் சாப்பிடுவாயானால் உடம்பைச் சின்னா பின்னலாக்கி வைப்பதாகிய குதிரைவலிப்பும், யானைவலிப்பும், இன்னும் பார்க்கின்றவர்களைப் பயந்தோடச் செய்வதாகிய அளவற்றதான வலிப்புகளும் நீங்கும். எ—று.

சூட்சுமவிளக்கம்:—வெளிப்படை. 96

காக்கை வலியுங் கடும்பூனை தன்வலியும்
நாக்குவிழி நுடங்கிடவே நன்றாய்ச் சுருட்டும்வலி
மாக்கடனையே வல்லோர்கை வில்லெனவே
சேர்க்கும் வலியுஞ் செந்தூரத் தாலகலும்.

இதுவுமது

(இ-ள்) இன்னும் இதனால் காக்கைவலிப்பும் பூனை வலிப்பும், நாக்கையும் விழிகளையும் மடக்கிச் சுருட்டுகின்ற வலிப்புகளும், மனிதர்களைச் சுத்த வீரர்களுடைய கையிலிருக்கின்ற வில்லைப்போல வளையச் செய்வதாகிய வலிப்புகளும் நீங்கும். எ—று.

சூட்சுமவிளக்கம்:—வெளிப்படை. 97

இதுவுமது

இழுக்கு மிகவு மெலிவலியு முயல்வலியும்
கழுத்தைத் திருக்கிக் காலிலிடை யிடும்வலியும்
கொழுத்த குமரக் கண்டன்வலி கொடுவலியும்
வெளுத்தே யுலர்ந்தே வெட்கியுட னோடுமன்றே.

(இ—ள்) இவைகளைத் தவிரவும் இந்தச் செந்தூரத்தினால் பலவிதமா யிழுப்பதாகிய இசிவும், எலிவலிப்பும், முயல்வலிப்பும், கழுத்தைப் பலவிதமாக முறுக்கி இரண்டு கால்களுக்கு மத்தியில் கொண்டு



போய்ச் சேர்ப்பதாகிய அகோரமான வலிப்பும், மிகுந்த குமரக்கண்டன் வலிப்பும், கொடுவலிப்பும் நாணியோடிப் போய்விடும். எ—று.

சூக்ஷமம்:—வெளிப்படை. 98

சந்த விருத்தம்

மைந்தர்க ளிளைப் பொருகளைப்பதை மறுக்கும்
விந்தைவலி யின் வகைகள் வெறுத்துட னடக்கும்
அந்தமுறு செந்தூர மதன் பெருமை கண்டாய்
கந்தமுறு முன்னின்முதற் காண்டமது முற்றே.

(இ—ள்) இன்னுமிது மனிதர்களுக் கேற்படும் இளைப்புகளோடு களைப்பையுமாற்றும். ஆச்சரியப்படும் படியான வலிப்புவகைகளெல்லாம் உடனே நீங்கிப் போகும்படிச் செய்யவும் இவைகளெல்லாம் மேற்கண்ட அந்த செந்தூரத்தினது பெருமையாம். இதனோடு முதற்காண்டம் முற்றுப் பெற்றது. எ—று.

சூட்சுமவிளக்கம்;—வெளிப்படை. 99

இலக்க சௌமிய சக்கரம், முதற்காண்டம்
தேர்ந்தெடுத்த செய்யுட்களும்,
தெளிபொருள் விளக்க உரையும்

முற்றிற்று.

## புறநடை

**செந்தமிழ்ச் செல்வர்காள்!**

இந்த இலக்க செளமிய சாகரமென்னும் அரிய நூலினது பெருமையையும், அதனாலேற்படும பிரயோசனத்தையும் இவ்வளவின தென எம்மா லெடுத்துச் சொல்லுந்தரமன்று. உலகத்தில் வாதம், வைத்தியம், மாந்திரீகமென்னு மூவகையைச் சம்பந்தித்த கணக்கிலடங்காத பல நூற்கள் சித்தர்களாற் செய்யப்பட்டிருப்பினும் அவைகள் பதினெண்சித்தர்களும் ஒன்றுகூடி ஒவ்வொரு விஷயங்களில் என்னுடைய நூலிற் சிலவற்றைச் சொல்லி வைக்கின்றேன். உம்முடைய நூலிற் சிலவற்றைச் சொல்லி வையுமென்று பேசித் தீர்மானித்துக் கொண்டு அந்தப்படியே செய்யப்பட்டவைகளாதலால் ஒரு முறையைக் கண்டறிய வேண்டு மென்றால் இந்தப் பதினெட்டுப் பேருடைய நூற்களையும் பார்த்தாக வேண்டியதா யிருக்கின்றன. அப்படிப் பார்ப்பதென்றாலும் அப்பதினெண் மருடைய நூல்களும் ஏககாலத்திற் கிடைப்பது இக்காலத்திலரிதாகும் அவ்விதம் கிடைப்பினும் அவைகள் பலவிதமான பரிபாஷைகளாகவும், கஷ்டப்பட்டறியத்தக்க மறைப்புகளாகவும் அவ்விதம் கஷ்டப்பட்டறியினும் சந்தேக நீங்காதவைகளாகவு மிருக்கின்றன. இக்காரணங்களினால் மேற்படி சித்தர் நூற்களிற்சொல்லி யிருக்கப்பட்ட சிரேஷ்டமான விஷயங்களெல்லாம் அச்சித்தர்களைப் போன்ற நிலைமை யுடையவர்களுக்கன்றி மற்றையர்க்கு நிர்ப்பிரயோசனமாய்விட்டன. ஆதலால் இச்சித்தர்கள் செய்த வஞ்சத்தைக் கருதி உலகத்தவர் கண்மீது பேரருள் சுரந்து எங்கும் நிறைந்த பரம்பொருளாகிய பரமசிவக் கடவுள் முன் ஓர் காலத்தில் தமிழ்க் குரிசிலாகிய அகத்திய மகாமுனிவரை நோக்கி மேற்கண்டபடி உலகத்தாருக் கேற்பட்ட குறைபாடானது நீங்கும் பொருட்டாக வாதம், வைத்தியம்: மாந்திரீகம் சம்பந்தமாயுள்ள ஓர் நூலைச் சந்தேகமற எளிதிலுணரும்படி



யாகச் செய்யுமென்று கட்டளையிட அம்முனிவர் அக்கட்டளையைச் சிரமேற் கொண்டவராகி எம்பெருமானே தம் கட்டளைப்படியே நிறைவேற்றுகின்றேன். ஆனால் இந்த அருமையான விஷயத்தை யெவ்விதம் பாடி முடிப்ப தென்று என் மனமானது மலைக்கின்ற தென விண்ணப்பிக்க அதற்குப் பரமசிவக் கடவுள் மயங்க வேண்டாம். இந்த விதமாகப் பாடுமென்று திருத் துணையா பென்னுமடி யெடுத்துக்கொடுக்க அந்தப் படியே மேற்படி முனிவர் தொடங்கிப் பாடிமுடித்து இலக்க செளமிய சாகர மெனும் பெயரிடப்பட்டு இந் நூலை உதவினார். இந்நூலைப் பற்றிய விருத்தாந்தங் களை இதன் முகவுரையிற் றெளிவாகக் காணலாம்,

இந்நூலிற் சொல்லி யிருக்கப்பட்ட முறைகள் ஒவ்வொன்றும் மிக உன்னதத்தை யடைந்தவைகளும், இவைகளில் ஒருமுறை தெரிந்தாற் போதுமென்று கருதத்தக்கவைகளுமாம். இவைகளைத் தவிர இதை ஒவ்வொரு சரக்குகளையும் சந்தேகமின்றியறிந்து கொள்ளும் பொருட்டாகப் பல திருஷ்டாந்தங்களை யெடுத்துக் காட்டியும், அவைகளின் பிறப்பிடம், ரூபம், குணம், முதலியவைகளைத் தமிழ் அலங்காரப்படி வருணித்தும், செய்யுட்களைச் சித்திர கவிமுறையாகப் பாடி அவைகளின் பொருள்களை இலகுவாகவும் வேடிக்கையாகவும் சந்தோஷத்தோடு கண்டு ஆச்சரியப்படும் படியாக அமைத்தும் பத்துக் காண்டங்களாக பிரித்து ஏற்படுத்தி யிருக்கின்றார்.

இந்நூலின் செய்யுட்களில் விஷயங்களை ஒருவாறு மறைத்திருப்பினும் தெரிந்தவர்கள் மூலம் இலகுவில் அர்த்தங்களை விளக்கிக் கொள்ளலாம். அதன்படி விளக்கிக் கொண்டால் பின்பு முறைகளிலோ, சரக்குகளிலோ, மற்றெவ் விஷயத்திலோ எட்டுணையுஞ் சந்தேகமேற்படாது. மற்ற நூற்களிலோ அனுபவசாலிகளிடத்திற் தெரிந்து கொண்டாலும் அந்தரங்கமான விஷயங்களில் எந்தக் காலத்தும் சந்தேகம்

சந்தேகமே. அச்சந்தேகங்கள் நீங்குங்காலம் ஏற்படுவது அரிதாகும். இந்நூல்படி யன்று பாட்டினருத்தங்களை மட்டுந் தெரிந்து கொண்டால் மற்றவை மிகவுஞ் சுலபமாகும்.

இந்நூலைப் பத்துக் காண்டங்களாகப் பிரிக்கப் பட்டிருப்பதில் இந்த முதற் காண்டத்தில் எல்லா முறைகளுக்கும் கருத்தாகவும், மூல காரணமாயு முள்ள அந்த செந்தூர மென்ற ஒரு முறையை மட்டும், நூறு பாட்டுகளாற் சொல்லி முடித்தார். இந்த நூலின் மற்ற காண்டங்களிற் சொல்லி யிருக்கப்பட்ட மற்ற முறைகளெல்லாம் இந்த அந்த செந்தூரத்தின் உதவியின்றி நடைபெறா தாகையால் இதைப் பிரதமத்திற் றெரிந்து கொள்ள வேண்டியதும் இது ஆதியிலிருக்க வேண்டுமென்பதும் ஆவசியகமெனக் கருதியே இச்செந்தூரத்தை யெவற்றிற்கு முதன்மை பெறும்படியாக இந்த முதற்காண்டத்தில் ஏற்படுத்தினார்.

ஆதலால் இந்நூலைக் கற்றுணர்ந்து இதன்படி அவுடதங்களைச் செய்து முடிக்க முயற்சிக்கும் ஒவ்வொருவரும் இந்த அந்த செந்தூரத்தையே முதலிற்றெரிந்து கொள்ள வேண்டியதெனக் கருதி அது சம்பந்தமாயுள்ள இம் முதற்காண்டத்திற்கு நாம் ஆசானிடத்திற் கேட்டுத் தெரிந்தபடியே எமது சிற்றறிவிற் கெட்டிய மட்டும் எவரும் இலகுவி லறிந்து கொள்ளும் விதமாக ஒருவாறு உரையெழுதி முடித்தோம். அப்படி யெழுதி யிருப்பினும் இதிலுள்ள ஒவ்வொரு செய்யுட்களி னருத்தம் நெடுந்தூரம் வளர்ந்திருக்கின்ற படியாலும், பல விஷயங்கள் முன்னும் பின்னும் பின்னிக்கொண்டு வருவதினாலும், பல பாட்டுகள் சேர்ந்து குளகமாக ஒவ்வோ ரிடங்களில் முடிந்திருப்பதினாலும் பார்ப்பவர்களைச் சிறிதுமயங்கச் செய்யுமாகையால் அந்த மயக்கமும் இல்லாதிருக்கும் பொருட்டாக மேற்படி அந்த செந்தூரத்தின் முறையை அடியில் வசன ரூபமாகச் சந்தேகமற எழுதுவாம்.



இவ்வுரையினாலேயே அநேகருக்குச் சுலபமாகப் புலப்படுமாயினும் சிலருக்கு இவ்வுரையும் கஷ்டமாயிருக்குமென்று நினைத்தே இவ்வாறு அம்முறையை அடியிலுமெழுத விரும்பினோம். இதை எவரும் எளிதிலுணர வேண்டு மென்பதே எமது கருத்தாதலால் இது கூறியது கூறிலாயினும் தெரிந்த மகான்கள் மன்னிப்பார்களாக.

### அந்த செந்தூரம்

குருவண்டு 17.5 கிராம், கல்நார் 7 கிராம், கிட்டம் 10.5 கிராம், காந்தம் 10.5 கிராம்சீனக்காரம் 21 கிராம், வெள்ளைப் புனுகு 17.5 கிராம்வெள்ளி நிமிளை 24.15 கிராம் கடல்நுரை 10.5, பூநீறு 7 அயத்தொட்டி 10.5 கிளிஞ்சி 17.5, சூடன்-4. பொன்னிமிளை 17.5 கருவனை 42 கிராம், எவச்சாரம் விராகனெடை இலிங்கம் 17.5.

*திருநூற்றுப் பச்சை யிலைச்சாறு, கள்ளிப்பால், வேப்பெண்ணெய், பேய்ப் பீர்க்கஞ்சாறு, கறு ஊமத்தைச் சாறு, குப்பைமேனிச்சாறு, பொற்றலைக் கையாந்தகரைச் சாறு, கருப்பு கிலுகிலுப்பைச் சாறு, எலுமிச்சம் பழச்சாறு, நாவல் மரப்பட்டைச்சாறு, மல்லிகையிலைச் சாறு ஆகியவை செல்லத்தக்க அளவு.

செய்முறை:—முற் சொன்ன சரக்குகளையெல்லாம் ஒன்றாகக் கலந்து கல்வத்திற் போட்டுப் பொடித்து சொன்ன திருநூற்றுப் பச்சையிலைச் சாற்றைச் சிறுக சிறுகச் சிறுகவிட்டு 6 மணி நேரம் சரக்குகளெல்லாம் அரைபட்டுக் கெட்டிப் பதமாக வருந் தருணத்தில் அம்மருந்தை யெடுத்து ஒரே பில்லையாகத் தட்டி ஒரு ஓட்டில் வைத்து மூன்று நாள்வரை வெய்யிலிற் காய

---

*இந்தத் திருநூற்றுப்பச்சையில் ஒரு சூக்ஷுமமிருக்கிறது அதைத் தெரிந்த மகான்களிடத்திற் சேர்ந்தறிந்து கொள்ளவேண்டும்.

வைத்தெடுத்துப் பழையபடியும், அந்த பில்லையைக் கல்வத்திலிட்டு மடற்கள்ளிப்பாலைச் சிறுகச் சிறுகவிட்டு 9 மணிநேரம் அரைத்துப் பின்பு அதனை வழித்தெடுத்து முன்போற் பில்லை செய்து மூன்றுநாள்வரை பனியில் வைக்கவேண்டும். அதன்பின் அந்தப் பில்லையை யெடுத்து வேப்பெண்ணெயைச் சிறுகச் சிறுக விட்டு 9மணி நேரம் அரைத்துப் பில்லைதட்டி ஐந்துநாள் வரை வெயிலிற் காயவைத் தெடுத்து பின்பு அந்த பில்லை கொள்ளும்படியான இரண்டு ஓடுகளையெடுத்து வாய் பொருந்தும் படியாகத் தேய்த்து அவைகளிற் ஒரு ஓட்டில் இந்த பில்லையை வைத்து மற்றொரு ஓட்டை மேலே மூடி அதன்மேல் குளவிக்கூண்டு மண்ணினாலே பலமாய்ச் சீலைமண் செய்யவேண்டும். பின்பு வேண்டிய அளவு சங்கைப் பொடித்துக் கல்வத்திற்போட்டுக் கோழிமுட்டை வெள்ளைக்கருவை விட்டு நன்றா யரைத்து அதில் துணிகளைக் கிழித்துத் தோய்த்து முன் குளவிக்கூண்டு மண்ணினாற் சீலைச் செய்திருக்கிற கவசத்திற்குமேல் இந்தச் சங்குக் குழம்பையும் பூசி மேற்சொல்லியபடி இக்குழம்பிற் றோய்த்த துணிகளி னால் ஐந்து விரல் உயரம் பலமான கவசஞ்செய்து வைத்துக்கொள்ள வேண்டும்.

பின்பு பூமியில் அரைச்சாண் உயரம் விராட்டியை யடுக்கி அதற்குமேல் ஒருசாண் உயரம் காய்ந்த மடற் கள்ளிக் கட்டைகளைப் பரப்பி அதன்மேல் முன் சித்தப் படுத்தின கவசத்தை வைத்து அதன்மேல் ஒரு சாண் மேற்படி கள்ளிக் கட்டைகளைப் பரப்பி அதன்மேல் அரைச்சாண் விராட்டியை யடுக்கி மொத்தம் ஒன்றரை முழ உயரமாகும்படியான புடம்போட்டு ஆறினபின் னெடுத்துக் கவசத்தைப் பிரித்துப் பார்க்க மருந்தானது முன்பு ஓட்டில் வைக்கும்போது எந்தநிறமா யிருந்ததோ அந்த நிறமாகவே யிருக்கும்.

பின் அந்த மருந்தைப் பழையபடியுங் கல்வத்திற் போட்டுப் பேய்ப்பீர்க்கஞ் சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு



9 மணிநேரம் அரைத்து முன்போற் பில்லை செய்து ஓட்டில் வைத்து மேலோடு மூடிச் சீலைமண் செய்து கவசத்திற்குமேல் சுண்ணாம்பைப் பூசி முன்போற் புடம்போட் டெடுக்க வேண்டும். அப்போது அந்த மருந் தானது உவர்மண்ணைப் போன்றிருக்கும் பின் மேல்படி மருந்தைக் கருவூமத்தைச் சாற்றினால் 9 மணி நேரம் அரைத்து முன்போற் கவனித்து முன்போற் புடம்போட்டெடுக்க அந்த மருந்தானது சிவந்த கழி நிறமாயிருக்கும். பின்பு அதைக்குப்பைமேனிச் சாற்றால் 9 மணிநேர அரைத்துப் பில்லை செய்து கழிமண்ணி னாற் கவசித்து முன்போல புடம்போட்டெடுக்க மேற் படி மருந்தானது நேறடி பட்ட மஞ்சள் நிறமுள்ள மணலைப்போன்ற நிறமுடையதா யிருக்கும். அதற்குப் பின்பு அதைப் பெற்றலைக் கையாந்தகரைக் சாற்னால் 9 மணிநேரம் மரைத்துப் பில்லைசெய்து முன்போற் கவசித்து இரண்டு முழ உயரம் புடம்போட வேண்டும். பின்பு அதை யெடுத்துப் பழையபடியும் பொற்றலைக் கையாந்தகரைசாற்றையே விட்டு 9 மணிநேரம் மாரைத்துப் பில்லை செய்து கவசித்து முன்போல இரண்டுமுழ உயரம் புடம்போட வேண்டும் பின்பு அந்த மருந்தை யெடுத்துக் கருப்புக் கிலுகிலுப்பைச் சாற்றை விட்டு 9 மணிநேரம் அரைத்துப் பில்லைதட்டி ஒட்டி லிட்டுக் கழிமண் சீலையால் மூன்று விரல் உயரம் கவ சித்து முன்சொன்ன அளவே புடம்போட்டு எடுத்துப் பார்க்க அந்த மருந்து சிவப்பு நிறமாயிருக்கும். பின்பு அப்படிச் சிவந்த மருந்தை எலுமிச்சம் பழச்சாற்றை விட்டு இரண்டு நாள்வரை அரைத்துப் பில்லைசெய்து ஒட்டிலிட்டுக் கழிமண் சீலையால் மூன்று விரற்கனம் கவசித்து ஒன்றரைமுழ அளவான வன்னிப் புடம்போட் டெடுத்துப் பழையபடியும் எலுமிச்சம் பழச்சாற்றையே விட்டு முன்போலவே 6 மணி நேரம் அரைத்துப் பில்லை செய்து ஓட்டிலிட்டுக் கவசித்து முன்போலவே சீலை மண் செய்து முன்போலவே புடமிடவேண்டும்.

பின்பு அதை யெடுத்து நாவல் மரப்பட்டைச் சாற்றால் 9 மணி நேரம் அரைத்துப் பில்லை தட்டி ஒட்டில் வைத்து வேண்டிய அளவு கோழிக் காரத்தில் முட்டை வெள்ளைக்கரு விட்டு நன்றாயரைத்துஅதனால் ஏழு சீலைமண் செய்து இரண்டுமுழ உயரம் புடம்போட் டெடுக்க அந்த மருந்து செவ்வானத்தைப் போன்ற நிறமாயிருக்கும் அதைப் பழையபடியும் மேற்படி நாவல் பட்டைச் சாற்றினாலேயே முன்சொன்ன அளவுபடி யரைத்துப் பில்லைதட்டி ஓட்டில் வைத்துக் கைப்பான கழிமண்ணைக் கரைத்து அதனால் மூன்று விரற்கனம் சீலை செய்து முன் சொன்ன உயரமே புடம்போடவேண் டும். அப்போது அது சிவந்த நிறமாகவே யிருக்கும்.

பின்பு அதை மல்லிகை யிலைச்சாற்றை விட்டு 9 மணிநேரம் அரைத்து முன்சொன்னபடியே பில்லை தட்டி ஒட்டில் வைத்துக் கழிமண் சீலை செய்து இரண்டு முழ உயரம் புடம் போட்டெடுத்துக் கொள்ளவும்.

பின்பு அதைத்திருநூற்றுப்பச்சை யிலைச்சாற்றி னால் 9 மணிநேரம் அரைத்துப் பில்லைதட்டி ஓட்டிலிட் டுப் புற்று மண்ணினாற் கவசஞ்செய்து இரண்டுமுழ உயரம் புடம்போட்டுத்துப் பார்க்க அது திவ்யமான வெண் சிவப்பான நிறத்தினையுடைய செந்நூர மாகி யிருக்கும். இதை யெடுத்துப் பத்திரப்படுத்திக் கொள்ள வேண்டியது.

உபயோகம்—உலகத்திற் றீராதென்ற சகலவியாதி களும் தீரும். இம்முறையைக் கைபாகந் தவறாமற் செய்து முடித்தால் உலகத்திற் கண்டறியாத அபூர்வச் செய்கைகளை யெல்லாம் செய்யலாமென இந்நூலிற் சொல்கின்றார் இவ்விபரங்க ளெல்லாம் உரையில் விரிவாயெழுதி யிருப்பதால் அதைப் பார்த்துத் தெரிந்து கொள்க.



## விண்ணப்பம்

கனவான்களே! தெய்வானுக் கிரகத்தினாலும் பெரி யோர்களினது ஆசீர்வாதத்தாலும் சில மகான்களுடைய துணையைக் கொண்டு நாம் ஆசானிடத்தில் கேட்டுக் கொண்டபடியே இம்முதற் காண்டத்திற்கு உரையெழுதி யச்சிட்டு முடித்தோம். இவ்வாறே மற்ற காண்டங்களை யும் வெளிப்படுத்தும் அவாவினோடிருக்கின்றோம். இவ் விஷயத்திற்குக் கடவுள் ஒத்தாசை பரிபூரணமாய்க் கிடைக்கவேண்டுமென ஒவ்வொருவரும் பிரார்த்திப் பதோடு முன்னியற்றி யுள்ள எமது புத்தகங்களை நன்கு மதித்து வாங்கி யாதரித்து வந்ததுபோவே மிகவும் பிரயாசத்தோடு முடிந்த இந்நூலையும் நன்கு மதித்துக் கையாண்டு எம்மைக் களிப்படுத்துவீர்க ளென நம்பு கிறேன் சுபம்! சுபம்!! சுபம்!!!

———

கடவுள் துணை.

# இலக்க சௌமியசாகரம்

தேர்ந்தெடுத்த செய்யுட்களும்,
தெளிபொருள் விளக்க வுரையும்.
இரண்டாங்காண்டம்.

---

இஃது

யூநாநி வைத்திய
தாருட்யவிர்த்திபோதினி முதலிய
பல வைத்திய சாஸ்திர கிரந்தகர்த்தாவாகிய
ஹக்கீம்
பா முஹம்மது அப்துல்லா சாஹிபு
அவர்களால்

---

சென்னை
முஸ்லிம் அபிமானி அச்சியந்திரசாலையிற்
பதிப்பிக்கப் பட்டது.
FIRST EDITION
1907 ௵
Regisatered Copyright.
கைவிலை 0-8-0. வி.பி. 0-10-0

# முகவுரை

---

இப்பூவுலகில் தமிழிற்சிறந்த பண்டித சிகாமணிகாள் இந்த இலக்க சௌமிய சாகர மென்னும் நூலினது பெருமை, வரலாது முதலியவற்றை முதற்காண்டத்தின் முகவுரையில் நன்கு விளக்கி யிருக்கின்றோம். அதனால் இதின் உயர்ச்சியை ஒவ்வொருவரும் தெரிந்தே யிருக்கலாம்.

இதற்குமுன் அச்சிட்டு வெளிப்படுத்திய முதற்காண்டத்திலோ எல்லாவற்றிற்குங் காரணமாயுங் குருவாயுமுள்ள அந்த செந்தூரம் ஒன்றையே நூறு பாக்களாற் கூறிமுடித்தார். ஏனெனில் அந்த அந்தசெந்தூரத்தை முடிக்காவிடில் இந்த நூலிலுள்ள மற்ற எல்லாமுறைகளையுமே செய்துகொள்ள முடியாதாகையால் இந்த நூலிற் பிரவேசிக்கும் ஒவ்வொருவரும் அந்த அந்தசெந்தூரத்தையே முதலிற் றெரிந்துகொள்ள வேண்டியது ஆவசியகமாகையால் அதை முதற்காண்டமாகிய தொடக்கத்திற் கூறினார். இனி இந்த இரண்டாங் காண்டந்தொடங்கி முடிவுவரை அந்த அந்தசெந்தூரத்தின் சம்பந்தத்தாலுண்டாகும் பல முறைகளையும் சில தனிமுறைகளையும் கூறி முடிக்கின்றார்.

அவைகளுள் இந்த இரண்டாங் காண்டத்தில் மேற்படி அந்த செந்தூரத்தின் சம்பந்தமாக முடிவு பெறும் தாளகச்சுண்ணம், கெந்தகத்தைலம், நாகக்கட்டு, வீரமெழுகு, துருசுச்சுண்ணம், இரசபற்பம் ஆகிய ஆறுமுறைகளை மிகவும் விளக்கமாக எவ்வித சந்தேகமின்றிச் செய்துமுடித்துக் கொள்ளும் விதமாய்ச் சொல்லியிருக்கின்றார்.

இந்த ஆறு முறைகளினுடைய பெருமையைப் பற்றி யெழுதுவதென்றால் எம்மாற்சாத்தியப்படாது. இவைகளைக் கிரமமாகத் தவறாதுசெய்து முடிப்பவர்

களுக்கே அவைகளின் பிரயோசனம் நன்கு விளங்கு . இந்த ஆறுமுறைகளினாலும் அநேகவிதமான லோகங்களைப் பேதிக்கச் செய்யலாம். உலகத்தில் தீராதென்று கைவிடப்பட்ட பல அரிய வியாதிகளெல்லாம் வெகு சுலபமாகத் தீரும். இவைகளில் துருசுச் சுண்ணமானது இறந்துபோன பிணத்தையும் எழுந்து மூன்றே முக்கால் நாழிகைவரை பேசச்செய்யுமெனச் சொல்லப்பட்டிருக்கின்றது. அதைக் கிரமப்படி முடித்துக்கொண்டால் நிச்சயமாக அந்த வேலைசெய்யுமென்பதில் எள்ளளவுந் தடையேயில்லை. வைத்தியத்தையும், இரசவாதத்தையும் விரும்பும் ஒவ்வொருவருக்கும் இந்த ஆறுமுறைகள் மட்டும் தெரிந்தாற் போதுமானது.

ஆதலால் மேற்சொல்லிய முறைகளடங்கிய இந்த இரண்டாங்காண்டத்தை உலகநலத்தைக் கருதியே முதற்காண்டத்தை வெளிப்படுத்திய சில தினங்களுக்குள்ளேயே மிகவும் விரைவில் அச்சிட்டு வெளிப்படுத்தினோம். இது வைத்தியத்தையும், இரச வாதத்தையும் விரும்பும் ஒவ்வொருவர் கையிலும் அவசியமிருக்கத்தகுந்தது. ஆனதால் ஒவ்வொருவர் கையிலும் இதனைத் தருவித்து எமக்கு ஊக்கத்தையுண்டாக்கி மற்ற காண்டங்களையும் கூடிய சீக்கிரம் வெளிப்படுத்துவதற்கான மார்க்கத்தைத் தேடுவீர்களென நம்புகின்றோம். எமது நோக்கந் தடையின்றி நிறைவேறுமாறு நமது நண்பர்கள் யாவரும் கடவுளை பிரார்த்திக்க வேண்டுகின்றேன்.

ஹக்கீம்;பா-முகம்மது அப்துல்லா

கடவுள் துணை

# இலக்க சௌமிய சாகரம்

### தேர்ந்தெடுத்த செய்யுட்களும் தெளிபொருள் விளக்க வுரையும்.

## இரண்டாம் காண்டம்

## காப்பு

எண்சீர்க் கழிநெடிலடி யாசிரியவிருத்தம்

இரவுபகலாய் நிகரின்றித் தானே தானா
 யெழுலோக மமைக்கமுன்ன மிகுந்த சூட்சம்
மருவுதலாய் மயமாகி யொளிவு மாகி
 வடிவாகித் தெளிவாகி யடங்கா வின்பப்
பரவுதலாய்ப் பகலொளியாய் நின்ற வெங்கோன்
 பராபரத்தி னுரைப்படியே பகர்கீழ் மேலாய்க்
கரவுதலா யிருநூற்றின் மருந்து சொல்லக்
 கண்ணோர்க்கு மிடமெங்குங் கர்த்தன் காப்பு.

இப்பாட்டில் எடுத்த காரிய மிடையூறின்றி யினிது முடியுமாறு எல்லாம் வல்ல பரம்பொருளைத் துதிக்கின்றார்.

(இ—ள்) சிறந்த மகான்களால் இச்சிக்கத் தக்கதாய் ஒப்புவமை யின்றித் தானே தானாகி ஏழுவிதங்களாகிய வுலகங்களை உண்டாக்குதற் கேதுவாகத் தங்கிய அந்தரங்கமாகிய சத்தியினால் மருவப்பெற்றதாய்ச் சகலவித ரூபங்களுமுடையதாய், அகவிருளொழிக்கும் பிரகாசமாய், உயர்ந்த அழகினையுடையதாய் ஞானவான்களுக்குப் பிரத்தியச்சமாகி அளவிடற்கரிய பேரானந்தத் தலத்திலே மலர்ச்சியோடு தங்கிச் சுயம் பிரகாசமாய் நின்ற வெங்களது பராபரனாகிய கடவுளின் கட்டளைப் பிரகாரமே சொல்லத்தக்க கீழானது மேலாக அதன் மார்க்கத்தை மறைப்பாய். இந்த இரண்டாங் காண்டத்தின் இரண்டாவது நூறு பாட்டுக்களினால் பலவித

மருந்துகளாகச் சொல்ல நாம் கண்ணினால் பார்க்கு மிடங்களிலெல்லாம் நிறைந்த மேற்சொல்லிய கடவுளே காப்பானாக. எ—று.

சூக்ஷம விளக்கம் :—இதில் கீழ்மேலாக வென்றது. கீழான லோகங்களை மேலான வுலோகங்களாக மாற்று வதற்கு எனக்கொள்க. இக்காண்டத்திற் பெரும்பான் மையும் லோகங்களை பேதிக்கும் முறைகளையே கூறுவ தினால் அப்படிச் சொன்னாரென்க.

இதற்கு முன்னுள்ள முதற் காண்டத்தில் எல்லா வற்றிற்கும் ஆதாரமாயும், சிரேஷ்டமாயு மிருப்பதா யுள்ள (அந்த செந்தூர) மென்ற ஓர் சிறந்தமுறையைச் சொல்லி அதனாலுண்டாகும் பெருமை முதலியவற்றை யும் பேதமறச் சொன்னார். இனி இக்காண்டத்தின் அந்தப் பெருமை தங்கிய (அந்த செந்தூரம்)சம்பந்தமா யுண்டாகும் பலவித உபமுறைகளையும் அவற்றா லுண்டாகும் வேதை முதலியனவற்றையுஞ் சவித்தாரமா யுரைக்கின்றார்.

கலிவிருத்தம்

இரண்டு நூற்றி லியம்புங் கருமானம்
விரைந்து கேளும் விபுலையின் மாக்களே
அருந்த வந்தமி லுற்ற மருந்தினால்
விரைந்து பற்பல வேதை விளம்புவேன்.

இப்பாட்டில் இக்காண்டத்திற் சொல்லப்புகும் விஷ யங்களை விளக்குகின்றார்.

(இ - ள்.) இப் பூவுலகிலுள்ள மனிதர்களே! இந்த இரண்டாவது காண்டம் இரண்டாவது நூறு பாட்டு களிலும் சொல்லப்பட்ட கருமானத்தைக் கேட்பீர்களாக. அரிய தவத்தினாலேயே சித்தி யடையத் தக்க முன் காண்டத்திற் குறித்த அந்தசெந்தூரமென்னும் மருந்தினாலேயே ஆகத்தக்க பலபல விதங்களான வேதைகளைச் சொல்லுகின்றேன். எ—று.



சூக்ஷம விளக்கம் :—வெளிப்படை (1)

இதுவுமது

தகரமென்ற பயலைநீ தள்ளியே
ளகரமென்ற பயலைநீ நாட்டிடு
பகரபூவை வளைந்தவன் பேர்முனம்
மகர மீற்றிற் கடையினந் தன்னையே.

---

தாளகச் சுன்னம்

இப்பாடல் முதல் மருந்தின் வகைகள் சொல் கின்றார்.

(இ-ள்.) தகரமென்ற ஒரு எழுத்தைத் தள்ளி அந்த கடுத்துள்ள வெழுத்தோடு ளகரமென்ற வெழுத்தை நிறுத்தக் கடவாய். அப்படி நிறுத்திய பின் இப்பூமண் டலத்தை வளைத்தவனுடைய ஒரு பெயரில் முன் னெழுத்தையும், மகர வரியின் கடையெழுத்தையும் அதனோடு சேர்க்கக் கடவாய். அப்படிச் சேர்த்தால் ஓர் பெயர் அமையும். அப்பெயருள்ள வஸ்துவை. எ—று.

சூக்ஷம விளக்கம் :—தகரத்தைத் தள்ளி நின்ற அதற்கடுத்துள்ள ஓரெழுத்து (தா) ளகரமென்ற வெழுத்து (ள). பூமண்டலத்தை வளைந்தவன் சமுத் திரம். அதனுடைய ஒரு பெயர், கடல். இந்தக்கடலில் முன்னெழுத்து (க.) மகரவரியின் கடையெழுத்து (ம்.) ஆக இந்நான்கையுங் கூட்ட (தாளகம்) என்றானது. இதுவே மேற்குறித்த பொருளாம்.

சமுத்திரத்தைப் பூவை வளைத்தவன் என்று உயர் திணையாக்கிச் சொன்னது வைத்திய சம்பிரதாயம் மற்றவை பின் கூறுவார்.

இதுவுமது

வாங்கி டுவலப் பேரின் றலைக்குறை
பாங்கு றும்பக ரத்தோடு நீயுநான்
தீங்க கற்றிடச் செய்யும்வகை சொல்வேன்
தூங்கி டாதேநீ சூட்ச மறிந்திடு.

———

இப்பாட்டில் மேற்குறித்த சரக்கின் நிறை சொல்கின்றார்.

(இ - ள்.) மேற்குறித்த தாளகமென்ற சரக்கில வலம் என்ற பெயரின் தலைக்குறையோடு பகரஞ்சேர்த்தது நீ நான் என்று சொல்லும்படியான அளவுவாங்கக் கடவாய். இதனுடைய குற்றத்தை நீக்கும்படியான வகையைச்சொல்லுகின்றேன் அந்தச் சூட்சத்தையறிவாயாக.

சூக்ஷுமு விளக்கம் .—(வலம்) என்ற பெயரில் தலைக்குறை (லம்)இதனுடைய நீங்கிய எழுத்திற்குப்பதிலாகப் பகரம் சேர்ந்த பதம் (பலம்.) நீயுநான் என்ற அளவானது:—நீ யென்பது ஒன்று, நான் என்பது ஒன்று, ஆக இரண்டாகையால் அளவு இரண்டெனக் கொள்ள வேண்டியது. ஆகவே இதன் கருத்தானது (தாளகம் 70 கிராம்) வாங்கக் கடவாய் என்றானது. முந்தின காண்டத்திலுள்ள முறையிலே அளவைக் கடைசியிற் சொன்னாராயினும் இங்கு முதலிலேயே சொல்லிவிட்டார். இப்படியே ஒவ்வொரு காண்டங்களிலும் ஒவ்வொரு விதமான இட்சணங்களாகச்சொல்லிக்கொண்டு போகின்றார். இப்படியெல்லாஞ் சொன்னதானது இந்நூலினது அருமை கருதியே. இப்பாட்டில் இதன் குற்றத்தை நீக்கும் வகையென்றதைத் தாளக சுத்தியெனக்கொள்ள வேண்டியது.

(3)



விபரம்

தாளக பலம் (2) 70 கிராம்

செந்தொடை

ஒன்றானசுந்தர் ழகருய வுடநான்கு நீக்கிடு
நன்றாகப்பூ நீறுபுகல் நனிகாலமா தமிலொன்று
உண்டாக நீர்தனிலே வுயரந்தக் கட்டிதனையே
பொன்றாகப்போட் டெடுத்திடு பொற்புடனேநா
டிரியாமே.

இப்பாட்டில் மேற்குறித்த தாளகத்தினது சுத்திக் கிரமஞ் சொல்கின்றார்.

[இ - ள்.] ஒன்றாகிய அழகிய எழுத்தினோடு ழகரவரியில் நான்காமெழுத்து நீங்கிய ஐந்த மெழுத்தையும், நல்லதான பூநீறு எடுக்கும் படியான காலமாகிய மாதங்களில் ஒன்றையும் சேர்க்க உண்டான பெயருள்ள ஜீவனது நீரில் மேற்குறித்த தாளகக் கட்டியைப்போட்டு மூன்று நாள் மட்டும் ஊறவைத்து எடுக்கக் கடவாய். எ...று.

சூட்சும விளக்கம் :...ஒன்றாகிய அழகிய எழுத்தாவது [க.] ழகரவரியில் நான்காமெழுத்து நீங்கிய ஐந்தாமெழுத்தானது [.ழு] பூநீறு எடுக்கும்படியான காலங்களாகிய மாதங்களில் முதல் மாதமாவது [தை] ஆக இம்மூன்றையும் சேர்க்கக் [கழுதை] யென்றானது. இதனுடைய நீரெனவே [கழுதை மூத்திரம்] என்றானது. ஆகவே [கழுதை மூத்திரத்தில்] மூன்று நாள் ஊறவைத்திருக்க வேண்டுமென்பதாக ஏற்படுகிறது. இப்படி (கழுதை மூத்திரத்தில்) மூன்று நாள் ஊறவைத்தெடுத்தால் தாளகம் சுத்தியாகிவிடும். இப் பாட்டில் தாளகக் கட்டியை போட்டு என்றதனால் மேற்குறித்த 70 கிராம் தாளகம் ஒரே கட்டியாக இருக்கவேண்டுமென்பது தானேயேற்படுகிறது. இதில் பூநீறெடுக்க வேண்டிய காலம் தை மாசி பங்குனி மாதங்களாகையால் அதில் முதல் மாதமென்ற வுடனே தைமாதமென்பதுந் தானே விளங்கிற்று.

வேறு (விருத்தம்)

போட் டெடுத்த மருந்து தன்னைப்
பொற்பாய்ப் பீங்கானில் வைத்து
மோட்டை விட் டெழுந்து வந்தோன்
முன்னாலே வைத்து நாண் மூன்று
கோட்டை தலைப் பேரை விட்டோன்
குறி தகர் நான்கு நீக்கிடு
கூட்டிடு வாய் மகர் கடையுங்
கோதி யள்ளு நீற் றின்பை யுமே

இப்பாட்டினால் முன்சுத்தி செய்ததாளகத்தை யெடுத்துப் பின்னுஞ் சுத்திசெய்ய வேண்டியதைக் கூறுகின்றார்.

இது முதல் (2) பாட்டுகளும் குளகம்

[இ-ள்.] முன்சொன்ன கிரமப்படியே கழுதை மூத்திரத்திற் போட்டு எடுத்த தாளகக் கட்டியை அழகு பொருந்தும்படியாக ஒரு பீங்கான் பாத்திரத்தில் வைத்து உதயகிரியின் உச்சியை விட்டெழுந்து வந்தவனாகிய சூரியனுக்கு முன்பாக [அதாவது வெயிலில்] மூன்று நாள்வைக்கக் கடவாய். அதன்பின்பு கோட்டையென்ற வார்த்தையின் முதற்பெயராகிய [கோ] வைவிட்டு நீங்கிய ஓரெழுத்தோடு குறித்த தகரவரியின் நான்கினத்தை நீக்கி நின்ற ஐந்தாவதெழுத்தையும், மகரவரியினது கடையெழுத்தையும், கையினாற்கோதி யள்ளும்படியான விபூதி நிறைந்த பையையுங் கூட்டிடுவாய். அப்படிக் கூட்டினால் ஒரு பெயரமையும், அப்பெயருள்ள பொருளினது. எ...று.

சூட்சும விளக்கம் ;—கோவென்ற எழுத்தைவிட்டு நீங்கிய ஓரெழுத்தாவது அதற்கடுத்திருப்பதான [கௌ.] தகாவரியில் நான்கினத்தை நீக்குகின்ற ஐந்தாவதெழுத்தாவது [து.] மகரவரியினது கடையெழுத்தாவது [ம்.] விபூதி நிறைந்த பையின் பெயரா



வது[பை.] ஆக இந் நான்கையும் சேர்க்க[கௌதும்பை] யென்றானது. இது ஒரு பச்சிலை. இதுவே மேலே பெயரமையு மென்ற பொருளாம். மற்றவை அடுத்த பாட்டிற் கூறுவார்.

கலி விருத்தம்

இங்கு ரைத்திடுஞ் சாற்றி லெழிலுறத்
துங்க மாகவே தோய்த்தெடு மூன்றுநாள்
சங்கை யாக மருந்தது தன்னையே
செங்கதிர் முன்வைப் பாய்திரி நாளன்றே.

இப்பாட்டினால் மேற்கண்ட பச்சிலையால் இந்தத் தாளகத்தைச் செய்யவேண்டிய மார்க்கத்தைக் குறிப்பிடுகின்றார்.

(இ-ள்) மேற்சொல்லிய (கௌதும்பை)ச் சாற்றில் அழகு பொருந்தும்படியாக அந்தத் தாளகத்தை மூன்று நாள் தோய்த்து எடுக்கக் கடவாய். அப்படி யெடுத்த பின்பு அந்தத் தாளகக் கட்டியைச் சிவந்த சூரியனுக்கு முன்பாக மூன்றுநாள் வரை வைக்கக்கடவாய். எ—று.

சூட்க்ஷும விளக்கம்:—இதனால் முன்பு கழுதை மூத்திரத்தில் ஊறவைத்தெடுத்துக் காயவைத்த தாளகக் கட்டியை (கௌதும்பைச்) சாற்றில் மூன்று நாள் தோய்த்து மூன்றுநாள் வெயிலில் வைத்தெடுக்க வேண்டுமென்பது ஏற்படுகிறது. இதில் தோய்த்து எடு என்றதனால் தாளகம் கரைந்து போகும் சுபாவமுடைய தாகையால் மூன்றுநாள் மட்டும் சாற்றிற்போட்டு விடாமல் மூன்றுநாள் மட்டும் அதில் நனைத்து நனைத்துக் காயவைத்தெடுத்துச் சாறெல்லாஞ் சென்றபின்பு அதன் பேரில் மூன்றுநாள் வரை வெயிலில் வைக்க வேண்டுமென்பதாகவும் ஒரு கருத்து ஏற்படுகிறது. கழுதை மூத்திரத்திலும் இவ்வாறே செய்யவேண்டுமென்று கருதவும் இடந்தருகின்றது. புத்திசாலிகளாயிருக்கப்பட்டவர்கள் இவ்விஷயங்களைத் தேர்ந்து

தங்கள் அனுபவத்திற்கொத்தபடி செய்து கொள்வார்களாக. (6)

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

வைத்திடு மருந்து தன்னை
    வகையுட னியம்பக் கேண்மோ
குத்திர முன்னோன் றானுங்
    குறித்திடும் ரகரைந் தாகும்
முத்திசேர் மூலிச் சாற்றின்
    முயலந்த செந் தூரத்தில்
அக்கிர மரிசியைந்தி
    னளவது கலந்துளக்கி.

இந்தப் பாட்டுமுதல் மேற்படி தாளகக்கட்டியைச் செய்யவேண்டிய வேறு மார்க்கஞ் சொல்கின்றார்.

(இ-ள்) முன்சொன்னபடி வெயிலில் வைத்த தாளகக் கட்டியைப் பின்செய்யும் விதஞ் சொல்வேன். கேட்பாயாக. குத்திரம் என்ற பதத்தின் முன்னேயிருக்குமெழுத்தும், குறிக்கப்பட்ட ரகரத்தின் ஐந்தாமெழுத்தும் சேர்ந்ததாகிய பெயரை முதலாகவுடைய மூலியினது சாற்றில் முதற்காண்டத்திற் சொன்னதாகிய பிரயாசத்தோடு முடித்த அந்த செந்தூரத்தில் ஐந்து அரிசி எடை யெடுத்துச் சேர்த்துக் கலக்குவாய். எ—று.

சூட்சும விளக்கம்:— குத்திரமென்ற பதத்தின் முன்னேயிருக்குமெழுத்தாவது (கு) ரகரத்தின் ஐந்தாமெழுத்தாவது (ரு) ஆக இவ்விரண்டையுஞ் சேர்க்கக் (குரு) வென்றானது. இதை முதலாவதாகவுடைய மூலியாவது (குருமூலி). இந்தக் குருமூலியை முதற்காண்டத்திற் சொன்னபடி (திருநூற்றுப்பச்சை)ச் சாற்றில் முந்திய அந்த செந்தூரத்தில் ஐந்தரிசியெடை யெடுத்துப் போட்டுக் கலக்கி வைத்துக் கொள்ள வேண்டியது. மற்றவை அடுத்தப் பாட்டில் கூறுவார். (7)



நொண்டிச் சித்து

கலக்கிய மருந்துதனை யெழிலுறக்
    கையினாற் புரட்டியே வையமுறவே
நலத்துடன் முன்பு நவின்ற - கட்டியின்மே
    னன்றாகப் பூசியெழிற் றென்பாகவே
சலத்தினி லுறைகமல ந் - தன்னையெழிற்
    றத்தியிதழ் பரப்பிட முத்தியமுகிழ்
அலர்ந்திடவருபவன் முன் - சாமமிரண்
    டடைவுடன் வைத்தெடுப்பாய் கைத்தலத்திலே

இப்பாட்டில் முன்சித்தப்படுத்திய சாற்றில் பின் செய்யவேண்டிய மார்க்கஞ் சொல்கின்றார்.

(இ-ள்) முன் சொன்னபடி செந்தூரம் போட்டுக் கலக்கிய சாற்றை அழகுபொருந்தும்படியாகக் கையினால் நன்றாகக்குழப்பி முன்பு சொல்லியிருக்கின்ற (அதாவது கௌதும்பைச் சாற்றில் தோய்த்துக் காயவைத்தெடுத்திருக்கின்ற தாளகக்கட்டியின் மேல் நன்றாய்ப் பூசி அழகு பொருந்திய ஜலத்திலிருக்கின்ற தாமரைப் புஷ்பங்கள் இதழ் விரிந்து மலரும்படியாக மேலே யெழுந்து வருபவனாகிய சூரியனுக்கு முன்பாக இரண்டு சாமம் கிரமமாக வைத்தெடுக்கக் கடவாய். எ—று.

சூட்சும விளக்கம்:—அழகு பொருந்திய ஜலத்திலிருக்கின்ற தாமரைப் புஷ்பங்கள் விரிந்து மலரும்படியாக மேலே எழுந்து வருபவன் முன் என்றது சூரியனைச் சிறப்பிக்கும் பொருட்டாம். மற்றவை வெளிப்படை. (8)

சந்த விருத்தம்

எடுத்திடு மருந்ததை யியற்றும்வகை கேண்மோ
வடுத்தலை யி லையுற நீ மாட்டியது தன்னைக்
கடுத்திடவே கல்வமிடு கழலுறுங் குருவண்டு
குடிக்குமெருக் கின்னமுது குத்தியதை யாட்டு.

இப்பாட்டு முதற்கூறிய மருந்தைப் பின் செய்ய வேண்டிய விதஞ் சொல்கின்றார்.

(இ ள்) முன் சொன்னபடி யெடுத்த மருந்தைப் பின்பு செய்யவேண்டிய விதத்தைச் சொல்வேன் கேட்பாயாக. அடுத்த (தலை) யென்ற சொல்லோடு (ஐ) யென்ற சொல்லோடு (ஐ) காரத்தைச் சேர்த்து நின்ற பதப்பொருள் விளங்கும்படியான வஸ்துவை வேகமாகக் கலவத்திலிட்டுச் சொல்லப்பட்டதாகிய குருவண்டு இருந்து தேனைக் குடிக்கும்படியாகிய எருக்கினது பாலை விட்டு அரைக்கக்கடவாய். எ—று.

சூட்சும விளக்கம்:—(தலை) யென்ற பதத்தினோடு (ஐ) யைச் சேர்த்தால (தலையை) யென்றானது (தலையை) யென்பதற்கு (முதலை) யென்பது அருத்தம் இந்த முதலைக் கல்வத்தி விட்டரைக்கச் சொன்னதனால் இக்காண்டத்தின் முதலிற் சொல்லிய தானமேற்படி தாளகத்தையே அரைக்கவேண்டுமென ஊகிக்க வேண்டியது. ஆனால் முன் சுத்திசெய்து வைத்திருக்கிற தாளகக் கட்டியை வைத்தரைத்து லிடக் கூடாது. இப்படி யரைக்கவேண்டியது பின் சொல்லப் படும் குகைசெய்ய வேண்டியதற்காதலால் அதுபோன்ற வேறு தாளகத்தை யெடுத் தரைக்க வேண்டியது. இதில் குருவண்டு தேன் குடிக்கும் எருக்கின் பாலென்றதனால் எருக்கிலும் குருவண்டு இருக்கு மென்பதாயிற்று.

கலிவிருத்தம்

ஆட்டி டுதிரி நாளதை யங்ஙனம்
நாட்டின் நாரி நான்மின் மையெனத்
தாட்டி யேயது தன்னை வழித்துமேற்
கூட்டிடும்வகை கூறுவேன் கேளுமோ.

இப்பாட்டின் முன் அரைத்ததைப் பின் செய்ய வேண்டிய விதஞ் சொல்கின்றார்,



[இ-ன்] முன் சொன்னபடி தாளகத்தைக் கல்வத்திலிட்டு எருக்கின்பாலை விட்டு மூன்றுநாள் வரை அரைக்கக்கடவாய். அது இப்பூதலத்தில் மாதர்களது கண்ணிலிடுவதாலாகிய மையைப்போல ஆன பின்பு அதனை வழித்தெடுத்து இனிமேற் செய்யவேண்டிய விதத்தைச் சொல்வேன் கேட்பாயாக. எ—று.

சூட்சும விளக்கம்:—வெளிப்படை. (10)

வேறு விருத்தம்

மையெனக் குழன்றிடு மருந்து தன்னையே
கையினா லுபசரங் கதிக்கப் பண்ணியே
செய்யவா வில்லையுஞ் செறி மருந்தினாற்
றுய்யதாய்த் தட்டி நீ துலங்க மேலிடு.

இப்பாட்டிலும் முன் மருந்தைச் செய்யவேண்டிய விதமே சொல்கின்றார்.

[இ-ன்] முன்பாட்டிற் குறித்தபடி மைப்போலான அந்த மருந்தைக் கையினாலெடுத்துப் பலமான குகை செய்து அதினாலேயே அழகு பொருந்திய வில்லையுஞ் செய்து அக்குகை மேற் சேர்க்கக் கடவாய். எ—று.

சூட்சும விளக்கம்:—இங்கே வில்லை யென்றது. குகைக்குமேல் மூடி. [11]

இதுவுமது

மேலிடு மூடியும் விளம்பும் வில்லையும்
காலையிற் சூரியன் கண்ணிற் காயவைத்
தோலமா வெடுத்ததை யுள்ளின் முன்சொன்ன
மாலுறு மருந்ததை வைத்து வாயினில்

இப்பாட்டில் முன்குறித்த குகையைப்பின் செய்யும் விதஞ் சொல்கின்றார்.

[இ-ன்] முன்சொன்ன கிரமப்படி செய்த மேல் மூடியையும் குகையையும் காலை நேரத்தில் வெயில்

முகத்திற் காயவைத்து அதை அழகாக எடுத்து அந்தக் குகைக்குள்ளாக முன் சொன்னபடி சுத்தி செய்து வைத் திருக்கிற தாளகக் கட்டியை வைத்து அந்தக் குகையின் வாயில். எ—று.

சூக்ஷம விளக்கம்:—வெளிப்படை. இப்பாட்டும் அடுத்தபாட்டுங் குளகமாகையால் மற்றவைபின் கூறுவார். (12)

இதுவுமது

வில்லையை யுபசரமீதில் வைத்து முன்
சொல்லிய சங்கதைத் துவட்டிச் சீலையின்
நல்லிய லாகவே நாட்டுமூ வைந்து
கல்லியற் கவசமாய்க் கலந்து பூசிடு.

இப்பாட்டில் மேற்குகையில் மருந்தை வைத்துப் பின் செய்யவேண்டிய விதஞ் சொல்கின்றார்.

(இ-ள்.) மேற்சொன்னபடி தாளகக் கட்டியை குகைக் குள் வைத்தபின்பு அதன் மேல்மூடியை வைத்து முதற் காண்டத்திற் சொல்லியிருக்கிற சங்கு சீலை பதினைந்து செய்து கல்லைப்போன்ற கவசமாக சங்குக் குழம்பையும் நன்றாய்க் கலந்து மேலேயும் பூசக்கடவாய்.எ—று.

சூக்ஷம விளக்கம்:-சங்கினால் சீலைசெய்வது முதற் காண்டத்திற் சொல்லப்பட்டிருக்கிறது அதை பார்த்துக் கொள்ளவும். இந்தக் கவசம் செய்யவேண்டியதை நல்ல அனுபவசாலி களிடத்திற் கேட்டுத்தெரிந்து கொள்ள வேண்டிய தாவசியம்.

இதுவுமது

மூசையைக் கரத்தினி லேந்தி முத்தொழிற்
பூசையை மனத்தினிற் பொருந்திப் பொய்ரசம்
மாசையா காதென வழுத்து மோன் முனம்
வீசையை முறுக்கியே வீறு கூறிடு.



இப்பாட்டில் மேற்கண்டபடி மூசையுட் செலுத்திய மருந்தின் பெருமை சொல்கின்றார்.

(இ-ள்.) முற்குறித்தபடி மருந்தை வைத்துச் சித்தப் படுத்திய மூசையைக் கையிலே வைத்துக் கொண்டு மனோவாக்குக் காயமென்ற மூன்றினாலும் ஒத்துச் செய்வதாகிய பூசையையும் மனம் பொருந்திச் செய்து இரசவாதமானது பொய் ஒருகாலுந் தங்கமாக மாட் டாது என்று சொல்கின்றவன் முன்பாகச் சென்று அப்பா நீ கொண்டிருப்பது தப்பண்ணம் நிச்சயமாகத் தங்கம் ஆகும் என்பதாகச் சொல்மீலிசையை முறுக்கி உன்னுடைய வெற்றிப் பிரதாபத்தைக் கூறுவாய். எ—று.

சூக்ஷமவிளக்கம்:-வெளிப்படை. (14)

எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

கேளப்பா முழமுமொன் றரையே யாகுங்
  கெடியாகப் புடம்போடு புடத்தி னுள்ளே
தாளப்பா மத்திதனிற் குகையை வைத்துத்
  தயவாகத் தீமூட்டித் தணியு மட்டும்
காளப்பா காத்திருந்து குகையெ டுத்துக்
  கவசமெல்லாங் கையாலே நீக்கி விட்டுச்
சூளப்பா வில்லைதனைத் திறந்துபார்க்கிற்
  சோதியொளிச் சுண்ணமது துலங்குந்தானே.

இப்பாட்டில் மேற்குறித்த மூசையைப்புடம் போடு மார்க்கஞ் சொல்கின்றார்.

(இ-ள்.) அப்பனே கேட்கக் கடவாய். ஒன்றரை முழ உயரமான புடத்தைக் கணக்கோடு ஏற்படுத்தி அந்தப் புடத்தினுள்ளே நடு மத்தியில் மேற்சொன்ன குகையை வைத்துச் சிநேகத்தோடு நெருப்பை மூட்டி அது எரிந்து தணியு மட்டும் சமீபத்திலேயே காத் திருந்து அது தணிந்தபின் குகையை யெடுத்துக்

கவசத்தை நீக்கிவிட்டுக் குகையின் மேல்முடியைத்தி றந்து பார்த்தால் அதில் முன் வைத்த தாளகமாளது நீறிமிகுந்த பிரகாசமுள்ள சுண்ணமாகத் தோன்றுமாம். எ—று.

சூட்சும விளக்கம்:—இது எரிந்து தணியுயும் வரை காத்திருக்கவேண்டும் என்றதனால் இந்த மருந்தின் பெருமை விளங்குகின்றது. (15)

இதுவுமது

துலங்குகின்ற சுண்ணத்தைப் பதனம் பண்ணிக்
சோதிதனைத் தியானித்துதொழுது நன்றாக
நலந்திகழ்ந்த செம்பதனி னூற்றிலொன்று
நாட்டிடவே யாணியுரை யெட்டதாகும்
உலந்தவிர சிதத்தினிரு நூற்றி லொன்றை
யுயர்வுடனே யீயவத னொளிவு பொத்தி
மலர்ந்தநிற மஞ்சணித்துப் பசுமையாகி
மகத்தான வயததுவும் பத்து மாமே.

இப்பாட்டுமுதல் மேற்கண்ட சுண்ணத்தினாலுண் டாகும் வேதை உறுதின்றார்.

(இ-ள்,) முற்பாட்டில்குறித்தபடி விளங்காநின்ற அந்தத் தாளகச் சுண்ணத்தை யெடுத்துப் பத்திரப் படுத்தி பரஞ்சோதியாகிய கடவுளை மனதிற்றியானித் துத் துதித்து மிகவும் நலமாக பிரகாசிக்கின்ற செம்பில் நூற்றுக்கொன்று இந்தச் சுண்ணத்தைச் சேர்த்தால் எட்டுமாற்றுள்ள பொன்னாகும். விளங்குகின்ற வெள் ளியிலே இருநூற்றுக் கொன்று இந்தச்சுண்ணத்தைக் சேர்த்தால் அந்த வெள்ளியினுடைய பிரகாசமானது அதிகரித்து விரிந்த அதன் நிறமானது மஞ்சள் நிற மாகிப் பசும்பொன்னாய்ப் பத்து மாற்றுடையதாகும் எ—று.

சூக்ஷ்ம விளக்கம்:—வெளிப்படை. (16)



இதுவுமது

பத்தாகு மென்றுரைத்த மருந்தின் வேதை
பகரரிது பகாரது பாருள் ளோரே
முத்தாகு மைந்நூறு தன்னிலிந்த
முக்யமுறு வேதையெல்லா முயலுகின்றேன்
உத்தான மாகநீ யறிந்து நண்பா
யுள்ளடங்கி யாவருக்கு முரைத்தி டாதே
எத்தாக வின்னமொரு வேதை சொல்வே
னின்னதென வறியும்வகை யியம்பக்கேண்மோ.

இந்தப்பாட்டில் முன்வேதை செய்தமருந்தின் பெருமை கூறுகின்றார்.

(இ-ள்,) மேற்சொன்னபடி வெள்ளியானது பத்து மாற்றுள்ளதாகுமென்று சொல்லிய மருந்தினது வேதை யின் பெருமைகளைச் சொல்வதற்கரிதாகும். பூவுலகி லுள்ளவர்களே! இந்தவேதை விபரங்களையெல்லாம் மிக்க அழகுபொருந்திய ஐந்தாம் நூறுபாட்டுக்களடங்கி யுள்ள ஐந்தாம் காண்டத்தில் விரிவாகச் சொல்லுகின் றேன். அவைகளை நன்றாயுற்றுணர்ந்து சிநேகத் தோடு அவைகளை மனதினுள்யேடக்கி ஒருவரிடமுஞ் சொல்லா திருக்கக்கடவாய். மிகவும் தந்திரமாக இங்கே யொருவேதை சொல்லுகின்றேன். அதையின்னதென அறிந்துகொள்ளு மார்க்கத்தைச் சொல்வேன் கேட்பீர் களாக.

சூக்ஷ்ம விளக்கம்:—வெளிப்படை. (17)

கலி விருத்தம்

கூவை விட்ட குடிகேடன் றன்னுடன்
நாவை விட்டப் பதினொன்றை நாட்டிடு
தாவை விட்ட தமைய னொடுக்கர்
மாவைவிட்ட மடையன் பதினொன்றே

கெந்தகத்தைலம்

இந்தப்பாட்டு முதல் வேறு வேதை சொல்கின்றார்.

(இ-ள்.) கூவென்ற வெழுத்தைவிட்டு நீங்கிய குடிகேடனென்று சொல்லப்படுவதாகிய ஒரெழுத்துடன் நகரவரியில் இரண்டாமெழுத்ததாகிய (நா) வென்ற எழுத்தைந்தள்ளி அதற்கடுத்ததாகிய (நீ) என்ற எழுத்திலிருந்தெண்ணி அக்கிரமப்படியேவந்தபதிலோா மெழுத்தையும், தகரவரியில்(நா)என்ற எழுத்தை விட்டு நீங்கிய அவ்வெழுத்தின் தமையனாகிய ஒரெழுத்தை யும், அதனோடு கசுரத்தையும் மகரவரியில் இரண்டா மெழுத்தாகிய (மா) என்ற எழுத்தை நீக்கி அவ்வரியின் மூன்றாமெழுத்தி லிருந்தெண்ணி அதின் கிரமப்படி வந்தமடையனென்று சொல்லப்பட்ட பதினோரா மெழுத்தையும் சேர்க்கக்கடவாய். அப்படிச் சேர்த்தால் ஒருபெயரைமையும். அப்பெயருள்ள சரக்கை அடியிற் சேர்க்கக்கடாய் எ—று.

சூட்சும விளக்கம்:—கூவென்ற வெழுத்தை விட்டு நீங்கிய குடிகேடனென்று சொல்லப் படுவதாகிய வோரெழுத்து அந்தக் கூவுக்கு அடுத்துள்ள (கெ) என்ற எழுத்துதாம். நகரவரியில் இரண்டா மெழுத்தாகிய நாவைத் தள்ளி அதற்கடுத்ததாகி நின்ற எழுத்திலிருந் தெண்ணி அக்கிரமப்படியே வந்த பதினொரமெழுத் தாவது (ந்) தகரவரியில் தா-வென்ற எழுத்தை விட்டு நீங்கிய அவ்வெழுத்தின் தமையனாகிய ஒரெழுத்தாவது (த) ககரமாகவது [க] மகரவரியில் இரண்டா மெழுத் தாகிய-மா- வென்ற எழுத்தை நீக்கி அவ்வரியின் மூன்றாமெழுத்தி லிருந்தெண்ணி அதன் கிரமப்படி வந்த மடையனென்று சொல்லப்பட்ட பதினோரா மெழுத்தாவது (ம்) ஆக இந்த ஐந்தையுங் கூட்ட [கெந்தகம்] என்றானது. இதுவே கீழ்ச்சொல்லப் போகிற சரக்காம்.

இதில் [கெ] என்ற எழுத்தைக் குடிகேடனென்றது அந்த எழுத்துக் [கெடுதல்] என்ற சொல்லுக்கு முன்



னிற்குங் காரணத்தினாலென வறிக. [த] என்ற எழுத் தைத் [தா] வென்ற எழுத்துக்குத் தமையன் என்றது தகரம் அந்தத்-தா-வுக்கு முன்னிற் பதாலென்க. [ம்] என்ற எழுத்தை மடையனென்றது அது மெய்யெழுத்தா யிருப்பதாலும் உயிரெழுத் தேறியல்லது இயங்கும் வன்மையில்லாத காரணத்தாலுமாம். [18]

இதுவுமது

வாங்கு வாய்பலம் பத்து வகையுடன்
காங்க மாகவே கல்வத்தி லிட்டுப்பின்
றூங்கு தொட்டாற் சுருங்குமிலைச் சாற்றால்
பாங்கு டன்றின மைந்து பரிவுடன்.

இந்தப் பாட்டினால் மேற்குறித்த சரக்கினளவும் செய்முறையுஞ் சொல்கின்றார்.

(இ-ள்) மேற்குறித்த கெந்தகத்தில் 35 கிராம் வாங்கக் கடவாய். அதைக் கிரமப்படியே கல்வத்திற் போட்டுப் பின்பு மானிடர்கள் தொட்டவுடனே தூங்கிச் சுருங்குவதாகிய செடியினது இலைச்சாற்றை விட்டு அழகாக ஐந்துநாளும். எ—று.

சூட்சும விளக்கம்!—தொட்டவுடன் தூங்கிச்சுருங்கும் செடியாவது (தொட்டாற் சுருங்கி) இதுவும் அடுத்த பாட்டும் குளகம். [19]

விபரம்

கெந்தகம் பலம்

பள்ளுச்சந்த விருத்தம்

வெண்மையு றுங்குன்றி யிலையின் சாற்றினின்
மேவி யரைதின மைந்துடனே
திண்மையு றமுதற் றளைமுதலொடு
தீங்கறு மைவரைத் தள்ளியே
வண்மையு றுங்கானப் பேர்மு தலொடு
வரிசை யாய்பகர் மகரகடை

தண்மையு றுமந்தச் சாற்றி னாலரை
கதித்திடும் வாரமீ ரைந்துமே.

இப்பாட்டினால் மேற்கண்ட சரக்கின் அரைப்புமுறை சொல்கின்றார்.

(இ—ள்) மேற்கண்ட கெந்தகத்தை வெள்ளை நிறம் பொருந்திய குன்றிமணி யிலையின் சாற்றில் ஐந்துநாளும் அரைக்கக் கடவாய். பின்பு பலமான இந்தப் பாட்டின் முதலடியின் முதலெழுத்தோடு அவ் வடியின் ஐந்தெழுத்துக்களைத் தள்ளிநின்ற ஆறாவதெழுத்தையும், வளப்பம் பொருந்திய (கான)மென்ற பெயரிலுள்ள முதலெழுத்தையும் கிரமப்படியே யகரத்தையும், மகரத்தின் கடையெழுத்தையும் கூட்டி அமைந்து நின்ற பெயருள்ள ஓர் வஸ்துவினது சாற்றினாலே வாரம்பத்து அரைக்கக் கடவாய். எ—று.

சூட்சும விளக்கம்:—இப்பாட்டின் முதலடியின் முதலெழுத்தாவது (வெ.) அவவடியில் ஐந்தெழுத்துக்களைத் தள்ளிநின்ற ஆறாவதெழுத்தாவது (ங்.) கானம் என்ற பெயரிலுள்ள முதலெழுத்தாவது கா-யகரமானது (ய) மகரத்தின் கடையெழுத்தானது (ம்) ஆக இவ்வைந் தெழுத்துக்களைங் கூட்ட (வெங்காயம்) என்றானது. இதுவே மேற்குறித்த சரக்காம். இந்த வெங்காயச்சாற்றை விட்டே அரைக்கவேண்டியது.

இதில் வாரம் பத்து என்றிருப்பதில் வாரம்என்ற பதத்திற்கு நாள் என்ற பொருளைக் கொண்டுஅரைக்க வேண்டியது. பத்து நாளென்றே அறியவேண்டியது வாரமென்பதை ஏழுநாள் கொண்டவாரமென்பதாகக் கருதி பத்து வாரமும் எழுபது நாளென நினைத்து அந்தப்படி அரைக்கவேண்டு மென்றால் அது முடியாத விஷயம், இதைத் தவிர இந்நூலாசிரியர் இம்மருந்தை யரைப்பதற்கு எழுபது நாட்கள் வேண்டுமென்பதாகச் சொல்லவே மாட்டார். ஏனென்றால் முக்கியமான அந்த செந்தூர முறையிற் கூட இவ்வளவு அதிக நாளரைப்புச் சொல்லாததால் அதனுட் பிரிவாய் வரும் இம்முறைக்கு



இவ்வளவு அதிகநாள் ஏற்படாதென்பது நிச்சயம். ஆதலால் இதை இதற்கு முந்தின இரண்டொருஅரைப்புகளுக்குச் சொல்லப்பட்டிருக்கிற கிரமப்படியே நாட்கணக்காகவே கொள்ளவேண்டும்.

மேற்கண்ட கெந்தகத்தை 16வது பாட்டிற்குறித்தபடி (தொட்டாற் சுருங்கி) யிலைச்சாற்றில் ஐந்துநாளும் இப்பாட்டிற் குறித்தபடி [வெண் குன்றிமணி)யிலைச் சாற்றில் ஐந்து நாளும், (வெங்காயச் சாற்றில்)பத்து நாளும் அரைக்கவேண்டியது.

விபரம்

அரைப்பு 3

விட்டரைக்க வேண்டிய சாறுகள்

தொட்டாற் சுருங்கி யிலைச்சாறு
வெண்குன்றிமணி யிலைச்சாறு
வெங்காயச்சாறு.

கொச்சகக் கலிப்பா

அந்தமென்ற செந்தூரத்தி லடவுடனே
விந்தை யுறவே யோர்களஞ்சி மேற்றூவிச்
சந்த முறவே யாட்டிடுவாய் சாமமொன்று
வந்த மருந்தை வழித்துநீ வில்லைதட்டி.

இப்பாட்டில் மேற்படி மருந்திற்கு இன்னுமொரு அரைப்புச் சொல்கின்றார்.

(இ...ள்) மேற்கண்ட மருந்தை முன்பு சொன்ன கிரமப்படி யரைந்தவுடன் பின்பு முதற்காண்டத்திற் சொல்லி யிருக்கப்பட்ட அந்த செந்தூரத்தில் கிரமப்படி அழகாக ஒரு களஞ்சி யெடுத்து அம்மருந்தின் மேற்தூவி 3 மணி நேரம் அரைக்கக் கடவாய். அப்படி யரைத்து அந்த மருந்தை வழித்தெடுத்து வில்லையாகத் தட்டிக் கொள்வாய். எ-று.

சூட்சும விளக்கம்:-செந்தூரத்தை மேலே தூவி யென்றதனால் அரைத்த மருந்தானது கல்வத்துடனேயே யிருக்கவேண்டு மென்பதாயிற்று. 3 ɪ

விபரம்

அரைப்பு 4

இதுவுமது

தட்டு மருந்தைத் தயவுடன்குப் பியிலிட்டுப்
பொட்ட வமைத்துப் பொற்புடனே புடத்தைலம்
திட்ட முறவே செம்மையுடன் வாங்கிடு வாய்
கெட்டி யுறவே கிளர்த்துவேன் வேதை யொன்றே.

இப்பாட்டினால் முன் பில்லை தட்டிய மருந்தைப் பின் செய்யவேண்டிய விதங் கூறுகின்றார்.

(இ - ள்.) முன் சொன்னபடியே வில்லை தட்டின மருந்தைச் சிநேகத்தோடு குப்பியிற் போட்டுப் பொட்டென்று விழுகும்படியான மார்க்கஞ் செய்து அழகாகப் புடத்தைலம், செம்மை பொருந்தும்படியாக வாங்கக் கடவாய். அப்படி வாங்கியபின் அதனாலுண்டாகும் வேதையைச் சொல்வேன் கேட்பாயாக. எ—று.

சூக்ஷும விளக்கம் :...புடத்தைலம் இறக்கும் மார்க்கம் வைத்தியத்திற் றேர்ச்சியடைந்த மகாத் மாக்களுக்குத்தெரியுமாகையால் அவர்கள்மூலம் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். அல்லது, புத்திமான்கள் தாமேயுஞ் செய்து கொள்ளலாம். (22)

எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

வேதையென்ன வெள்ளிபண விடையே நூற்றில்
விளக்குகின்ற தைலமரைப் பணமே தோய்ந்தால்
சாதிநிறம் பேதலித்துத் தங்க மாகுந்
தராதலத்தி னிதன் பெருமை சாற்றொண்ணாதே



ஆதியுரை சௌமியத்தி னாண்மை தன்னை
யரகரா வுரைக்கரிதா மவனி மீதில்
பாதையின்னம் வேறுசொல்வேன் மாணாக்காளே
பண்புடனே கண்டறிந்து பாரு பாரு.

———

இப் பாட்டு முதல் மேற்படி கெந்தகத்தைல த்தாலுண்டாகும் வேதை கூறுகின்றார்.

(இ-ள்.) மைந்தனே இத்தைலத்தினுடைய வேதையை நான் என்னவென்று சொல்லுவேன். நூறு பணவெடை வெள்ளியில் பிரகாசிக்கும்படியான இந்தத் தைலத்தில் (244 மி. கிராம்) சேர்த்தால் அவ்வெள்ளியானது தன் சுயஜாதி நிறம் மாறுபட்டு உயர்ந்த தங்கமாகும். பூலோகத்தினிடமாக இதனுடைய பெருமையைச் சொல்லிமுடியாது. கடவுளினுடைய சொல்லாகிய இந்த இலக்க சௌமிய சாகரத்தின் வல்லமையைச் சிவ சிவா சொல்வதற்கு மிகவுமரிதாகும். இன்னும் இத்தைலத்தினாலுண்டாகும் வேதையைச் சொல்வேன். கண்டறிந்து கொண்டு செய்து பார்ப்பாயாக. எ—று;

சூக்ஷும விளக்கம் :—வெளிப்படை. (23)

இதுவுமது

பாரப்பா தங்கமொரு பலமே வாங்கிப்
பரிவுடனே தைலமரைப் பணமே தோய்த்துச்
சேரப்பா செம்பாகுந் தங்கச் செம்பு
செகதலத்திற் கிடையாது செப்பக் கேண்மோ
நேரப்பா செம்புதனி னூற்றி லொன்று
சேர்த்திடவே சிவனாணை செம்பொன் னாகும்
பேரப்பா நவலோகந் தன்னி யிந்தப்
பெருமையா யீயவது பழுக்குந் தானே,

.........

இப்பாட்டில் வேறு வேதை சொல்கின்றார்.

(இ - ள்) மைந்தனே பார்க்கக் கடவாய். 35 கிராம் தங்கத்தை வாங்கி அதில் மேற்குறித்த கெந்தகத் தைலத்தில் (246 மி. கிராம்) சேர்க்க அத் தங்கமானது செம்பாகிப் போகும். அப்பேர்ப்பட்ட செம்பிற்குத் தங்கச் செம்பென்று பெயராகும். அந்தத் தங்கச் செம்பானது இப்பூமண்டலத்திற் கிடைப்பது அரிதாகும். இன்னுஞ் சொல்லக் கேட்பாயாக. மேற்சொன்ன தங்கச் செம்பைச் சாதாரணச் செம்பில் நூற்றுக்கொன்று சேர்த்தால் சிவன் மேலாணையாக அச் செம்பானது செவந்த பொன்னாகும். இதைத் தவிர மற்ற நவலோகங்களில் எதிலேனும் இந்தக் கணக்கின்படி மேற்படி தங்கச் செம்பைச் சேர்த்தால் அவைகளும் நிறம் பேதப்பட்டுத் தங்கத்தைப் போல பழுக்கும்.

சூட்சும விளக்கம் ;...இந்த வேதைகளில் இத்தனைக் கொன்று இந்த மருந்தைச் சேர்த்தால் இன்னவாறா கும் எனச் சொல்லப்படுவதில் அதைச் சேர்த்துச்செய்யும் முறையை யின்னவித மென்று சொல்லாமல் மறைத்தே யிருக்கின்றார். அப்படி அவைகளைச் சேர்த்துச் செய்யு முறை அனுபவசாலிகளுக்குச் சுலபமாகத் தெரியுமாகை யால் அவர்களை யடுத்துக் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டியது. இது சாதாரணமான விஷயந்தான். அவ்வளவு கஷ்டமானதுமல்ல. இவ்விஷயத்தை மட்டும் இவர் மறைத்திருப்பது இந்த இலக்க சௌமிய சாகரத்தின் முறைகளைத் தெரிந்திருப்பவர்களுக்குச் சிறப்பை யுண்டாக்கும் பொருட்டேயாம். இவர் இப்படி மறைக்காவிட்டால் ஒவ்வொருவரும் தெரிந்து தாம் தாமே செய்துகொள்வார்களாகையால் இதனால் தெரிந்த மகான்களுக்கு சிறப்பில்லை. அவர்களுக்கு சிஷ்ருஷை செய்யவும் மனிதர் அகப்படார். உலகமுங் கெட்டு விடும். இவைகளையெல்லாம் பொதுவாய் நோக்குங்கால் ஸ்திரப்பயிற்சியும், ஞானமும் ஊக்கமும், குருவிச்வாசமுமுடைய சிலருக்கே இது தெரியவேண்டு மென இந்நூலாசிரியர் கருதியிருப்பதாகத் தெரிகிறது.



இவ்விஷயத்தில் மேற்படி மகானுடைய கருத்திற்கு நாமும் இணங்குகின்றோம்.

(35)

இதுவுமது

பழுக்குமடா வயதுமீ ரைந்துமாகும்
பரனுரைத்த சௌமியத்தின் றைலந் தன்னைத்
தளுக்குடைய பெருநோவு தனக்கு நண்பாய்ச்
சாகத்தின் பாலிலோர் துள்ளி குத்தி

இழுக்கறவே கொடுத்திடவே பெருநோ யெல்லா
மெமன்கையிற் றனுப்போலே யேகுந் தானே
புழுக்களுறு புண்புரைகள் வெடிப்பு வேகம்
பொருந்தியது பொற்புடனே சாகுந் தானே,

.........

இப்பாட்டினால் மேற்படி தைலத்தைக் கொண்டு செய்யும் வைத்திய முறை சொல்கின்றார்.

(இ - ள்). மேற்குறித்தபடி தங்க நிறமாகப் பழுத்த வுலோகங்கள் பத்து மாற்றுள்ள தங்கமாகும். இன்னும் ஈசனாலேயே சொல்லப்பட்ட இந்த இலக்க சௌமிய சாகரத்தின் முறையாகிய மேற்மடிகெந்தகத் தைலத்தை பலம் பொருந்திய பெருநோவுக்கு வேண்டிய அளவு வெள்ளாட்டுப் பாலில் ஒரு துளிவிட்டுக் குற்ற மறும்படி கொடுத்தால் மேற்கண்ட பெருநோய் வகை களெல்லாம் இந்தத் தைலத்தை எமனுடைய கையி லிருக்கப்பட்ட வில்லைப்போன்ற கொடுமையுடையதென நினைத்து ஓடிப்போம். அப்பெருநோயினாலேற் பட்ட புழுக்கள் நிறைந்த புண்கள், வெடிப்புகள், வேகங் கள், இவைகளெல்லாம் நீங்கி நல்ல அழகை செய்யும். எ—று.

கலி விருத்தம்.

தைலந் தன்னைநீ சாப்பிடு மூன்றுநாள்
அயனி யோடு வமுது கலந்துண்ணு

செயமு டன்றிரேகஞ் செம்பொ னிறமதாம்
மொழிகு வேன்வேறு வேதையை முக்கியமாய்

இப்பாட்டில் மேற்படி தைலத்தின் வேறுவைத்திய ங் கூறுகின்றார்,

(இ-ள்.) அப்பா மேற்கண்ட தைலத்தை மூன்று நாட் சாப்பிடக் கடவாய். அப்படிச் சாப்பிடுங் காலத்தில் சாதத்தோடு பாலைச்சேர்த்தும் சாப்பிடுவாய். இப்படிச் செய்வாயானால் உன்னுடைய தேகமானது அதிகவீரத் தைப் பொருந்திச் செவந்த பொன்னை போன்ற அழகி னையுடையதாகும். இனி வேறு வேதைசொல்கின்றேன் கேட்பாயாக. எ—று.

சூக்ஷ்ம விளக்கம்:—இதிற்சாப்பிடும் அளவு அனு பான முதலியவைகளை விபரமாகச் சொல்லவில்லை. முன் பெருநோய்க்குச் சொன்ன கிரமப்படிதான் சாப்பிட வேண்டுமென ஊகிக்கவேண்டியிக்கிறது ஆயினும் தெரிந்த மாகான்களிடத்திற்கேட்டுச் செய்வதே நலம்.

சந்த விருத்தம்

இரசித மாசையு மிளகிட வுபசர
 மதிலெழில் தந்துசெய் வோன்
விரைசெறி வெண்மையன் மிகுவலி காரணன்
 விலகிடு மிருதொடை கால்
இருவின மத்தொடை யகல்பதின் மூன்றின
 மெடுமின மிரண்டொடு மிம்
இருவினை யகற்றிடு மோசையன் சினத்தொலி
 யெடுவியல் பலமதொன் றே.

நாகக்கட்டு

இப்பாட்டு முதல்வேறு வேதை யாகும் முறை சொல் கின்றார்.

[இ-ள்,] வெள்ளி தங்க முதலானவைகளையும் குகையில் உருகும்படியான அழகு கொடுப்பதானது,



மணம்பொருந்திய வெண்மை நிறத்தை யுடையது, மிகுந்த வல்லமை பெற்றது, அச்சரக்கு இப்பாட்டின் இரண்டாமடியின் நான்கெழுத்துக்களைத் தள்ளிநின்ற இரண் டெழுத்துக்களும், அந்த அடியின் பதின் மூன் றெழுத்துக்களைத் தள்ளி நின்ற இரண்டெழுத்துக் களும் இவ்வகையாலான எழுத்துக்களோடு இம் மும் சேர்ந்தால் விளங்கும். இந்தச் சரக்கினோடு பந்த பாசங்களை யறுப்பதாகிய கீர்த்தியையுடைய சத்தி யென்றும், சினத்தொலி யென்றுஞ்சொல்லப்படுவதாகிய ஒரு சரக்கும் வகை-ஒன்றுக்கு 35 கிராம் எடுக்கக் கடவாய். எ—று.

சூக்ஷ்ம விளக்கம்:—இப்பாட்டின் இரண்டாமடியின் நான்கெழுத்துக்களைத் தள்ளி நின்ற இரண்டெழுத் துகளாவன (வெண்). அந்த அடியின் பதின் மூன்றெழுத்துக்களைத் தள்ளிநின்ற இரண்டெழுத் துக்களாவன (கார) அவைகளோடு (இம்) மாவது (ம்) ஆக இம்மூன்றையுஞ் சேர்க்க (வெண்காரம்) என்றா னது. இதுவே முதலிற் சொன்ன சரக்காம். சத்தியென் றும், சினத்தொலி யென்றுஞ் சொல்லப்படுஞ் சரக் கானது (நவச்சாரம்). இதுவே இரண்டாவது சொன்ன சரக்காம். நவச்சாரத்திற்குச் சத்தியென்றும். சினத் தொலி யென்றும் வைத்திய நூற்களின் சம்பிரதாயமாக பெயர்வழங்கி வருவது பண்டிதர்களாயுள்ள அனைவருக் குத் தெரிந்த விஷயமே.

ஆகவே; இதிற் சொன்னபடி (வெண்காரம்) 35 கிராம், (நவச்சாரம்] 35 கிராம் எடுத்துக்கொள்ள வேண்டியது.

விபரம்

| | | |
|---|---|---|
| வெண்காரம் | பலம் 1 | (35 கிராம்] |
| நவச்சாரம் | பலம் 1 | [35 கிராம்] |

எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

பாரப்பா விருசரக்கும் பலமே ரெண்டு
 புகர்சதுரக் கன்னிப்பா றன்னாலரட்டிப்

பேரப்பா நாகமது பலந்தான் ரெண்டிற்
பிரியமுடன் பூசி வெயிலில் வையே
சேரப்பா தைமாதந் தன்னிலுற்ற
செய்யவரும் பின்னாமம் பலந்தரனொன்று
தாரப்பா சாரமது பலந்தா னொன்று
தயவுடனே யிரண்டு மொன்றாய்க் கல்வத்திட்டு

இப்பாட்டினால் மேற்கண்ட சரக்குகளைப் பின் செய்யவேண்டிய மார்க்க முதலானவை சொல்கின்றார்.

(இ-ள்) மைந்தனே கவனித்துப் பார்க்கக் கடவாய். மேற்சொல்லிய இரண்டு சரக்கும் வகைக்கு 35 கிராம் வீதம் மொத்தம் எடை பலம் இரண்டையும் கல்வத்திற்போட்டுச் சொல்லும் படியான சதுரக் கள்ளிப்பாலை விட்டு நன்றாயரைத்து 70 கிராம் நாகத்தையெடுத்து அதன்மேல் முன்னரைத்த குழம்பைப் பூசிச் சிநேகத்தோடு வெயிலில் வைக்கக் கடவாய். அதன் பின்பு தை மாதத்திலுண்டாவதான செவ்வித கிய புட்பத்தின் பெயரைப் பெற்றவோர் சரக்கில் 35 கிராமும் சாரத்தில் 35 கிராமும் எடுத்துச் சிநேகத்தோடு இரண்டு சரக்குகளும் ஒன்றாகும்படி கல்வத்திலே போட்டு.எ—று.

சூக்ஷ்ம விளக்கம்:—புட்பத்தின் பெயராவது [பூ] இதைத் தை மாதத்திலுண்டாவதான என்ற குறிப்பினால் [பூநீறு] எனக் கொள்ளவேண்டியது. [பூநீற்றுக்கு [பூ] வென்றும் குறிப்பாகப் பெயர் சொல்வது வைத்திய நூற்களின் சம்பிரதாயமாம். ஆகவே [பூநீறு] 35 கிராம் [சாரம்] 35 கிராம், எடுத்துக் கல்வத்திற்போட வேண்டியது. இப்பாட்டும் அடுத்த பாட்டும் குளகமாதலால் மற்றவைகளை அடுத்த பாட்டிற் கூறுவார். 28

விபரம்

இம்முறையின் மூலச்சரக்காகிய நாகம்பலம் 2
இதைக் கவசிப்பதற்காகச் சொன்ன



பூநீறு பலம் 1 (35 கிராம்)
சாரம் பலம் 1 (35 கிராம்)

இதுவுமது

செப்பிடுவே னந்தமென்ற செந்தூ ரத்திற்
றிறமாகப் பணவெடைதான் சேர்த்தரைக்க
மூப்படவே மெழுகாகும் மெழுகு தன்னை
முயங்குமந்த நாகத்தின் மேலே பூசி
ஒப்பிடவே சுண்ணாம்புச் சீலை தன்னை
யுயர்வான நாகத்தின் மேலே பூசிச்
செப்பிடவே புடம்போடு சாம மிரண்டு
திறமாக நாகமது கட்டுந் தானே.

இப்பாட்டினால் மேற்குறித்த நாகத்தை அதற்குக் கீழேசொன்ன இரண்டு சரக்குகளையும் இன்னுஞ் சிலவற்றையுஞ் சேர்த்தரைத்துக் கவசிக்கும் மார்க்கங் கூறுகின்றார்.

[இ—ள்] மேற்குறித்த பூநீறு 35 கிராம் சாரம் 35 கிராம் ஆக இவ்விரண்டு சரக்குகளையும் கல்வத்திற் போட்டு அவற்றோடு முதற்காண்டத்திற் சொல்லியுள்ள அந்த செந்தூரத்தில் ஒரு பணவெடை 488 மி. கிராம் சேர்த்து அரைப்பாய், அப்படி யரைத்தால் அது மெழுகு போலாகும் அந்தமெழுகை யெடுத்து முன் சித்தப்படுத்தி வைத்திருக்கிற நாகக்கட்டியின் மேலே பூசி அதன்மேல் அழகாகச் சுண்ணாம்புச் சீலைசெய்து அதை யிரண்டு சாமநேரம் எரிந்தடங்கும்படியான புடம்போட்டெடுக்க நாகங் கட்டிப்போம். எ—று.

சூட்சுமவிளக்கம்:—வெளிப்படை. 29

இதுவுமது

தானென்ற களிப்பற்றுப் புகையு மற்றுத்
தாரான கண்ணடைத்துத் தயங்குந் தானே

வானென்ற வித்தையெடுத்து வேதை சொல்வேன்
வயங்குவெள்ளி தன்னிலே னூற்றி லொன்றே
ஈனென்றே யீந்திடவே தங்க மாகு
மியம்பக்கேள் செம்புபத்தி லொன்றி னீந்தால்
தீனென்ற வயததுவு மெட்டு மாகுஞ்
செப்பாதே யென்மகனே தேசத் தோர்க்கே.

இப்பாட்டினால் மேற்குறித்தபடி கட்டிய நாகத்தின் பெருமை கூறுகின்றார்.

[இ—ள்] அப்படிக் கட்டுப்பட்ட நாகமானது தனக் கேற்பட்ட களிம்பும் நீங்கி, புகையுஞ் சுபாவமும் நீங்கி, அதனூடே துவாரம் துவாரமாயிருக்கப்பட்ட கண்களும் அடைபட்டுப் பிரகாசிக்கும். சிறப்புற்றதாகிய விந்த நாகக்கட்டை யெடுத்துஅதனாற் செய்யும்படியான பல வேதைகளைச் சொல்வேன் கேட்பாயாக. இந்த நாகக் கட்டைப் பிரகாசிக்கும் படியான வெள்ளியில் நூற்றிற் கொருபங்கு சேர்த்தால் அவ்வெள்ளியானது தங்கமாய் விடும். இன்னும் மேற்படி நாகத்தைச் செம்பில் பத்துக் கொரு பங்கு சேர்த்தால் அந்தச் செம்பானது எட்டு மாற்றுள்ள தங்கமாகும். மைந்தனே இதை எவருக்குஞ் சொல்லி விடாதே. எ—று.

சூட்சும விளக்கம்:— வெளிப்படை 30

ஞானம்

31, 32, 33, 34 பாட்டுகள்:—இந்த நான்கு பாட்டு களால் ஞானத்தைப்பற்றிக் கூறுகின்றார். இதில் வஸ்து நிச்சயஞ் செய்யவேண்டிய மார்க்கம் முதலியவை யடங்கியிருக்கின்றன. இவர் இதனிடைக்கிடையே ஞானத்தைப் பற்றிச் சொல்லிவருவதால் இதிற் சொல லப்பட்ட முறைகளினால் இரசவாதஞ்செய்து மயக்க வழியிற் சேர்ந்து பாழடையாமல் தேகத்தைத் திடப் படுத்தி நல்ல வழியிற் சேரவேண்டு மென்பதாக வற் புறுத்துவதாயிற்று. நாமிங்கு எடுத்துக் கொண்டது வைத்திய விஷயமாகையாலும் இந்த ஞானமார்க்கத்தை அனுபவசாலிகள் மூலங் கேட்டுத் தெரிந்து கொள்ள



வேண்டிய தாகையாலும் இப்பாடல்களுக்குத் தெளிவா யுரை யெழுதாதும், அப்பாக்களை யிங்கு சேர்க்காதும் விடுத்தோம். வேண்டியவர்கள் இதன் மூலத்தைப் பார்த்துக் கொள்க.

மவறு விருத்தம்

மகர மென்றிடு மன்ன னுறன்முறை
மடையன் மூவரைத் தள்ளிநீ மாட்டுவாய்
புகர வென்றிடு நாமக் கடையுடன்
புண்ணியன் நகரத்தின் முறை கடை
பகரக் கேட்டிடு மாக்களே யிம்முறை
பாரிற் றங்கப் பயம்பும் பயந்தெழும்
சிகர மேருவுஞ் செய்யாளு முன்வயின்
சேவிப் பாளிது திறமென் றறிந்திடு

—

வீரமெழுகு

இப்பாட்டு முதல் வேறு முறை கூறுகின்றார்.

(இ-ள்) மகரமென்று சொல்வதாகிய சிறந்த வோரெழுத்தினது மோனையினமாகிய மடத்தன்மை யுடைய ஓரெழுத்தின் வரியில் மூன்றெழுத்துக்களைத் தள்ளி நான்காவதெழுத்தினோடு, புகரவென்னும் பதத்தின் கடை யெழுத்தையும், புண்ணியமுள்ள மெல் லினமாகிய நகரத்தோடு சேர்ந்தஇனமாகியவோரெழுத் தினது கடையெழுத்தையும் சேர்ப்பாய். இப்படிச் சேர்த்தால் அதில் ஒரு சரக்கினையுடைய பெயரானது அமையும், அச்சரக்கின் பெயரைக் கூறுவேன் கேட் பாயாக. இச்சரக்கைச் சேர்த்துச் செய்யப்படுவதாகிய கீழ்க்கண்ட முறையினால் இப்பூவுலகத்தில் தங்க மலை யும்உனக்குப் பயந்து நீ சொன்னபடி ஆடும். பல சிகரங் களையுடைய மகாமேருவும் உன் கை வசப்படும். இலட்சுமி உன்னிடத்தே குடி கொண்டிருப்பாள். இது நிச்சயமென்றறிவாய். எ—று.

சூக்ஷமம்:—மகரமென்று சொல்வதாகிய சிறந்த வோரெழுத்தினது மோனையினமாகிய வெழுத்து (வகரம்). அதன் வரியில மூன்றெழுத்துக்களைத் தள்ளி நின்ற நான்காவதெழுத்து (வீ.) (புகர) என்னும் பதத்தின் கடையெழுத்தாவது (ர.) மெல்லினமாகிய நகரத்தோடு சேர்ந்த இனமாகிய வோரெழுத்துக்குறிப்பினாற் கண்ட (மகரம்) இதன் கடையெழுத்தாவது (ம்) ஆக இம்மூன்றையும் சேர்க்க (வீரம்) என்றானது. இதுவே மேற்குறித்த சரக்காம்.

மகரத்துக்கு வகரம் மோனைத் தொடை வழியினால் இனமானது இலக்கணக் கோட்பாடு. மேற்குறித்த வகரத்தை மடத்தன்மையுள்ள வெழுத்தென்றது அது (வம்பு) என்ற பதத்திற்கு முன்னிற்கின்ற காரணத்தினாலென்க. நகரத்தைப் புண்ணியமுள்ள வெழுத்தென்றது அது மெல்லினமென்று சொல்லப்படுவதாகிய மிருதுவான தன்மையுடையதா யிருப்பதினா லெனக் காண்க. நகரத்தோடு சேர்ந்த மெல்லெழுத்துக்கள் பலவிருப்பதால் அதினுடைய இனமாகிய வோரெழுத்தென்று சொல்லியிருப்பதில் அந்த எழுத்து மகராந்தானென்று நிச்சயிப்பதற்கு ஏதுவில்லாதிருந்தாலும் முந்தின இரண்டு வகையால் (வீர) என்று வந்திருப்பதால்அந்தச் சரக்கு வீரந்தானெனப்புலப்பட்டது அதைச் சரியாய் வழங்கவேண்டுமானால் அதனோடு[ம்] சேர வேண்டியிருக்கின்றது. ஆனதால் இவ்விதக் குறிப்பைக் கொண்டு மெல்லெழுத்தும் பலவாயிருந்தாலும் அது (மகரந்) தானென்று கொள்ளப்பட்டது. இதனாலேயே மேலே குறிப்பாய் கண்ட [மகர] மெனவெழுதி யிருக்கின்றோம்.

இந்நூலின் உட்கருத்தை சாமானியரும் அறிந்து கொள்ளக்கூடாதென்பதை யுத்தேசித்தே இப்படி ஏகதேசஞாயங்களைக் கொண்டும் கண்டுபிடிக்கும்படியாயமைத்திருக்கின்றார்.



மேற்கண்ட காரணங்களால் மேற்குறித்த சரக்கானது (வீரந்) தானென நிச்சயிக்கப்பட்டது. இனி மற்ற விபரங்களை அடுத்த பாட்டிற் கூறுவார். 35

வேறு விருத்தம்

சலத்தினிற் தலைக்குறை தாக்கு வாய்பகர்
தலத்தினிற் கணக்கெடு தந்தை தாய்பிள்ளை
நலத்தெதி ராகவே நவிலக் கேண்மினே
பிலத்துடன் கூறுவேன் பிரிய மாகவே.

இப்பாட்டினால் மேற்குறித்த சரக்கின் எடை முதலிய விபரங் கூறுகின்றார்.

(இ-ள்) மேற்குறித்த வீரத்தில் (சலம்) என்ற பதத்தைத் தலைக்குறையாக்கி அப்படித் தலைக்குறையானதற்குப் பதிலாக (பகரத்தைச்) சேர்த்து அந்தப்பத பொருளில் இப்பூமண்டலத்தில் தாய், தந்தை, பிள்ளை யென்று சொல்லும்படியாக கணக்கறிந்து எடுக்கக் கடவாய். பின் செய்ய வேண்டிய விதத்தைத் தைரியத்தோடு சொல்வேன் கேட்பாயாக.

சூக்ஷம விளக்கம்.— சலம் என்ற பதத்தில் தலைக்குறை (லம்) இதனோடு பகரத்தைச் சேர்க்க (பலம்) என்றானது. தாய், தந்தை, பிள்ளை யென்ற கணக்காவது தாய் ஒன்று, தந்தை ஒன்று, பிள்ளை ஒன்று ஆக மூன்றாகையால் அதன்படி மூன்றெனக் கொள்ள வேண்டியது. ஆகவே இப்பாட்டினால் (பலம் மூன்று) எடுக்கக்கடவாய் என்றானது. அதன்படி வீரத்தில் (பலம் மூன்று) எடுத்துக்கொள்ள வேண்டியது. (36)

விபரம்

வீரம் பலம் 3—105 கிராம்

இதுவுமது

அகரமே யடுத்தவன் டுவு மன் புடன்
சகரமின் னுறமுறை தனித்தனி ரெண்டினம்

னகரமின் றம்பிமுன் னாட்டி டக்கடை
பகரமிற் கடையுடன் பாவு ளையுமே.

இப்பாட்டினால் மேற்படி வீரத்தைப் பின் செய்ய வேண்டிய மார்க்கங் கூறுகின்றார்.

(இ-ள்) மேற்குறித்தபடி முன்கண்ட அளவு வீரத்தை எடுத்து அகரத்துக்குப் பிந்தியிருப்பதாகிய வதனடுத்த வெழுத்தையும், டுவென்ற எழுத்தையும், சகரத்துக்கு மோனைத்தொடையினால் இனமாகியவோ ரெழுத்து வரியில் இரண்டைத்தள்ளி நின்ற மூன்றா மெழுத்தையும், னகரத்துக்குத் தம்பியாகிய வோரெழுத் தையும், அந்தனகரத்தின் கடையெழுத்தையும். பகரத் தின் கடையெழுத்தையும், பாலென்ற எழுத்தையும், ளையென்ற எழுத்தையும் சேர்க்கக் கடவாய். அப்படிச் சேர்த்தால் ஒரு செடியினது பெயர் அதையும் அதனால் செய்யவேண்டிய கிரமம் பின் சொல்லப்படும் எ...று.

சூக்ஷும விளக்கம்:—அகரத்துக்குப் பிந்தியிருப்பதாகிய வதனடுத்த வெழுத்தாவது [ஆ] வென்ற எழுத்தாவது [டு] சகரத்துக்கு மோனைத் தொடையினாலினமாகிய வோரெழுத்தாவது தகரம். அதன் வரியில் இரண்டெழுத் துக்களைத் தள்ளி நின்ற மூன்றா மெழுத்தாவது [தி]. னகரத்திற்குத் தம்பியாகிய வோரெழுத்தாவது (னா,) னகரத்தின் கடையெழுத்தானது (ன்) பகரத்தின் கடை யெழுத்தாவது (ப்.) பாவென்ற எழுத்தாவது (பா.). ளையென்ற எழுத்தாவது (ளை.) இவைகளை முறையே சேர்க்க (ஆடு தின்னாப்பாளை) யென்று அமைந்தது இதுவே அந்தச் செடியாம்.

னாவென்ற எழுத்தை னகரத்துக்குத் தம்பியென்றது அதற்குப் பின்னிற்கு முறைபற்றி யென்க. இந்தச் சூட்சுமத்தினால் தெரிந்தெடுக்கப்பட்ட எழுத்துக்கள் வரிசை தப்பி முன்னும் பின்னுமா யிருப்பினும் செடியின் பெயரை நோக்கி அதற்குத் தக்கபடி கிரமப்படுத்திச் சேர்த்து வாசிக்கவேண்டியது.



இந்தப் பாட்டும் அடுத்தபாட்டும் குளக மாதலால் மற்றவைகளை அடுத்த பாட்டிற் கூறுவார். 37

### இதுவுமது

சாற்றதைப் பிழிந்துநீ தடிப்பீங் கானதில்
தோற்றிடப் போட்டிடு சொல்மருந்தையும்
மாற்றிட விருடனை மடிக்குங் கங்குலைக்
காற்றிட வருபவன் கண்முன் வைத்திடு.

இப்பாட்டில் முற்குறித்த வீரத்தை மேலே சொன்ன ஆடு தின்னப்பாளையினாற் செய்ய வேண்டிய விபரத் தைச் சொல்கின்றார்,

[இ—ள்] மேலே சொன்ன (ஆடுதின்னாப்பாளை) யைச் சாறுபிழிந்து ஒரு கனத்த பீங்கானில் விட்டு அதில் முன்னே சொல்லி யிருக்கிற வீரக்கட்டியைப் போடக் கடவாய். அப்படிப் போட்டபின் அதையெடுத்து கங்கு லென்று சொல்வதாகிய இருட்டைமடித்து நீக்கும் பொருட்டாக வருகின்ற ஒருவனுடைய கண்ணுக்கு முன்பாக வைக்கக்கடவாய்.

சூக்ஷும விளக்கம் :—இருட்டை மடித்து நீக்கவரு பவன் (சூரியன்) இவன் கண் முன் வைத்திடு என்றதை வெய்யிலில் வைக்க வேண்டுமென அறியவேண் டியது. (38)

### இதுவுமது

வைத்திடு காய்ந்திடும் வகைபோ லூற்றியே
அத்தினந் தன்னிலே யமிழ்ந்தி யுண்டிடும்
சுத்தமா மருந்ததைத் தூக்கிச் சாற்றினில்
குத்திநீ கொடுங்கதிர் குறித்து முன்னில்வை.

.........

இப்பாட்டினால் முன்கூறியவற்றைப் பின்செய்ய வேண்டிய மார்க்கஞ் சொல்கின்றார்.

(இ - ள்.) மூன் சொன்னபடியே வீரக் கட்டியைப் பீங்கானில் போட்டு ஒரு தினத்திற்குள் மேற்படி கட்டி யிழுத்துக்காய்த்து போகும்படியான அளவு முன்சொன்ன ஆடுதின்னா பாளைச் சாற்றை விட்டு வைப்பாய். அது அத்தினத்திலேயே சாற்றையெல்லாம் உண்டுவிட வேண்டும். அப்படியுண்ட அந்தக் கட்டியை எடுத்துப் பழையபடி முன் சாற்றிலேயே தோய்த்துப் பழையபடி யும் வெயிலில் வைக்கக் கடவாய்.

சூக்ஷம விளக்கம்:...இதனால் வேண்டிய அளவு ஆடு தின்னாப்பாளைச் சாற்றை எடுத்து அதில் வீரக் கட்டியைப் போட்டுக் காய்ந்தவுடன் மறுபடியும் மேற் கண்ட சாற்றையெடுத்து வீரக்கட்டியைத் தோய்த்து துத் தோய்த்து அடுத்தபாட்டிற் சொல்லுகிறபடி மூன்று நாள்வரை காயவைத் தெடுத்துக் கொள்ள வேண்டுமென் பதாக ஏற்படுகிறது, ஆயினும் தக்க அனுபவசாலிகளிடத் தில் இம்முறையைக் கேட்டுத் தெரிந்து கொண்டால் நலமாயிருக்கும். (39)

வேறு விருத்தம்

இத்தகை யாகவே யியற்று மூன்றுநாள்
மெத்தவு மிறுகியே வேக மீறிடும்
உத்தமமாகவே யுயர்ந்து நின்றிடும்
மற்றொரு விபரமும் வழுத்துவா மன்றோ.

.........

இப்பாட்டில் முன்சொல்லிய வீரக்கட்டியைப் பின் செய்யவேண்டிய மார்க்கங் கூறுகின்றார்.

(இ - ள்.) முந்தினபாட்டிற் குறித்தபடியே மேற்படி வீரக்கட்டியை ஆடு தின்னாப்பாளைச் சாற்றில் தோய்த் துத் தோய்த்து மூன்று நாள் மட்டும் காயவைத்தெடு



மூன்று நாள் மட்டும் காயவைத்தெடுக்கக் கடவாய். அப்படி யெடுப்பாயானால் மேற்படி வீரக்கட்டியானது இறுகிக் கட்டி வேகமானது அதிகரிக்கும். இது மிகவும் உத்தமமானதாகி எல்லாவற்றினுஞ் சிறந்து விளங்கும், இதை இனிச் செய்யவேண்டிய மற்றொரு விபரத்தையுங் கூறுவேன் கேட்பாயாக. எ—று,

சூக்ஷம விளக்கம் ,...வெளிப்படை 40

இதுவுமது

படையொடு மனுக்களும் பம்பிப் பூசலின்
இடையினி னின்றிடி யென வதிர்த்திடுங்
கடமுறு வலுமையிற் கருமையானது
சடமுறு சீவனின் முதன்மை சாற்றுவன்.

இப்பாட்டு முதற் பின் செய்யவேண்டிய முறைக் காம், ஓர் பச்சிலை சொல்கின்றார்.

(இ-ள்) பூமண்டலத்திலுற்ற மானிடர்கள் சகல படைகளோடுங் கூடிச்செய்யப்பட்ட சண்டைகளின் மத்தியில்நின்று இடிபோற்சப்திக்கும் மதத்தினையும், வலிமையையுமுடையது. கருப்பு நிறத்தைப் பொருள தினது, தேகத்தைப்பெற்ற ஜீவராசிகளி லெல்லாம் முதன்மைபெற்றது. இன்னமுஞ் சொல்லுவேன். கேட் பாயாக. எ—று.

சூக்ஷம விளக்கம்:-இப்பாட்டினாற் பின்சொல்ல போகும் ஒரு ஜீவனை வருணித்தார். இந்தப் பாட்டும் அடுத்தபாட்டுங் குளகமாகையால் மற்ற விஷயங்களைந் யடுத்த பாட்டிற் கூறுவார். 41

இதுவுமது

ஐயரிவி ளிச்சி களடி நடைபயில்
அய்யவே யலைகிளி லண்ட முற்றிடும்

கையினில் மூக்குறுங் கழறும்பே ரோடும்
தையினைத் தள்ளி நாலெடு தாரையே.

இப்பாட்டினாலும் மேற்குறித்த ஜீவனைவருணிக்க அதனாலேற்படப் போவதாகிய பச்சிலையின் பெயருங் கூறுகின்றார்.

[இ-ள்] இன்னும் மேற்கண்ட ஜீவனானது அழகிய செவ்வரி படர்ந்த விழிகளையுடைய மாதர்களைப் போன்ற நடையினையுடையது. அண்டத்தையும் தொடும்படியாக வளர்ந்திருப்பது கையில் மூக்கையுடையதாயிருக்கும். இப்பேர்ப்பட்ட ஜீவனுக்கு சொல்லும் பெயரினோடு தகரவரியில் தையென்ற வெழுத்தைத் தள்ளி அதற்கடுத்த வெழுத்திலிருந்தெண்ணி வந்த நான்காமெழுத்தையும், தகரையென்ற பெயரையுங் கூட்டிப்பார்ப்பாய். அப்படிக் கூட்டிப் பார்த்தால் ஒரு பெயரமையும். அப்பெயருடையதே கீழ்க்கண்ட முறைக்காம். பச்சிலையாம். எ—று.

சூட்சும விளக்கம்;— இந்தப்பாட்டினாலும் முன் நாற்பத்தொன்றாம் பாட்டினாலும் வருணித்த இலட்சணங்களினால் மேற்குறித்த ஜீவனானது (யானை) யென்பது தானே விளங்கிற்று அந்த யானையின் பல பெயர்களுள் இங்கெடுக்க வேண்டிய பெயரானது (கரி). தகரவரியில் தையென்ற வெழுத்தைத்தள்ளி அதற்கடுத்தவெழுத்திலிருந்தெண்ணி வந்த நான்காமெழுத்தாவது (த்) தகரையென்ற பெயராவது [தகரை] ஆக இம்மூன்றையுஞ் சேர்க்க (கரித்தகரை) என்றானது. இதுவே அந்தப் பச்சிலையின் பெயராம். அடுத்த பாட்டும் இதுவும் குளகமாகையால் மற்ற விபரம் பின் கூறுகின்றார்.

எண்சீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

பிடுங்கிடுவா யிங்குரைத்த மூலி தன்னைப்
பேசாதே யென்மகனே பிரிய முற்று



நுடங்கிடவே சாறுபிழி பீங்கான் றன்னி
னுண்மையுட னிருக்குமந்த மருந்தின் மீதில்
அடங்கிடவே யூற்றிநீ வெய்யில் முன்னி.
லன்புடனே வைத்திடுவாய் நாள்மூன் றாகச்
சடங்கனது நீரிழுக்கும் வாறு போலச்
சாற்றையெல்லா மருந்துண்டு தங்குந்தானே.

இப்பாட்டினால் மேற்கண்ட பச்சிலையின் சாற்றினாலே செய்யவேண்டியமுறை சொல்கின்றார்.

[இ-ள்] மைந்தனே நீ பிரியத்தோடு மறுபேச்சுப் பேசாமல் மேலே சொன்னதாகிய [கரித்தகரை] யென்னும் மூலிகையைப் பிடுங்குவாய். அப்படிப் பிடுங்கிச் சாறு பிழிந்து முன் பீங்கானில் ஆடுதின்னாப்பாளைச் சாற்றைச் செலுத்திக் காயவைத்திருக்கிற வீரக்கட்டியின் மேல் அப்பீங்கான் கொள்ளும்படியாக ஊற்றி மூன்று நாள் மட்டும் வெயிலில் வைக்கக்கடவாய். அப்படி வைத்தால் அந்த வீரக்கட்டியானது இத்தேகமானது நீரை யெப்படி யுட்கொள்ளுமே! அப்படியே அந்தச் சாற்றை யெல்லாம் இழுத்துக் கொண்டு பிரகாசிக்கும். எ—று.

சூக்ஷும விளக்கம்:—வெளிப்படை. 43

இதுவுமது

தங்குகின்ற மருந்து தன்னை மறுத்தெடுத்துச்
சாற்றக்கே ளின்னமொரு சூக்ஷந் தன்னைப்
பொங்குகின்ற திரையின்பேர் முன்னி னத்திற்
பொற்புளபத் தோரொன்று புகலக் கேண்மோ
அங்குவிண்ட வந்தம்ரெண்டின் பேரி னப்பா
யடைவுடனே தலைக்கடையு மழித் துவிட்டுக்
கெங்கையுறுங் கலப்பேரின் முன்னோன் றானுங்
கெடியான சாகரத்தின் தம்பி லையே.

இப்பாட்டில் இனிச் செய்ய வேண்டிய முறைக்காம் பச்சிலை கூறுகின்றார்.

(இ-ள்) முன்சொன்னபடியே [கரித்தகரைச்சாற்றில் நனைத்த வீரக்கட்டியை எடுத்துத் திரும்பவுஞ் செய்வதாகிய ஓர் தந்திரத்தைச் சொல்வேன் கேட்பாயாக. பொங்குகின்றதாகிய கடல் என்ற பெயரின் முதல் எழுத்தின் வரியிற் பதினோராமெழுத்தையும், மேற்குறித்தபடி இந்தப் பாட்டின் இரண்டாமடியிற் சொன்னதாகிய அந்தக் கடல் என்ற பெயரில் முதலெழுத்தையும் கடையெழுத்தையு மடித்துவிட்டு நின்ற வெழுத்தையும் உயர்வு பொருந்திய கலம் என்ற பெயரிலுள்ள முதலெழுத்தையும், முக்கியமான சகரத்தின் தம்பியாகிய வெழுத்தையும், லை யென்ற வெழுத்தையுங் கூட்டக் கடவாய். அப்படிக் கூட்டினால் ஒரு பெயரமையும். அப்பெயருள்ள ஓர் பச்சிலையே பின் சொல்லப் போகும் முறைக் குரியதாம். எ—று.

சூக்ஷ்ம விளக்கம்:—கடல் என்ற பெயரின் முதலெழுந்தாவது ககரம். இதன்வரியிற் பதினோராமெழுத்து [கோ). மேற்குறித்தபடி இந்தப் பாட்டின் இரண்டாமடியிற் சொன்னதாகிய அந்தக்கடல் என்ற பெயரில் முதலெழுத்தையுங் கடையெழுத்தையும் அடித்துவிட நின்ற வெழுத்தாவது(ட.) உயர்வுபொருந்திய கலம் என்ற பெயரிலுள்ள முதலெழுத்தாவது. (க] முக்கியமான சகரத்தின் தம்பியாகிய வெழுத்தாவது (சா)லையென்ற வெழுத்தாவது(லை]. ஆகஇவ்வைந்து எழுத்துக் களையுங்கூட்ட நின்றபெயர் (கோடகசாலை] இதுவே அப்பச்சிலையின் பெயராம். இதையே பின் சொல்லப்படும் முறையிற் சேர்க்க வேண்டியது. இதுவும் அடுத்த பாட்டும் குளகமாகையால் மற்றவை பின் கூறுவார். 44



கலி விருத்தம்

சாற தைப்பிழி சங்கை யறவேநீ
மீறி நின்ற மருந்தை விரைந்தெடு
தேற லாகச் செறிந்திடக் குற்றிடு
சூறை யாகவே சூரியன் முன்னில்வை.

இப்பாட்டில் மேற்குறித்த பச்சிலையின் சாற்றையெடுத்துப் பின்செய்யவேண்டிய விதங் கூறுகின்றார்.

(இ—ள்) முன்சொன்னதாகிய (கோடகசாலை)யைச் சாறுபிழியக் கடவாய். அப்படிப் பிழிந்தவுடன் ஐயமின்றி முன் சித்தப்படுத்தி யிருக்கிற வீரக்கட்டியை விரைவா யெடுத்து மிகத்தெளிவோடு அந்தச் சாற்றில் தோய்க்கக் கடவாய். அப்படித் தோய்த்துப் பின்பு சூரியனுக்கு முன்பாக வைக்கக் கடவாய். எ—று.

சூட்சுமவிளக்கம்;—வெளிப்படை. 45

இதுவுமது

கீன்றி கீன்றிக் கெடியுற வேயதைத்
தோன்றுஞ் சாறுஞ் சுருங்கவே தோய்த்திடு
மூன்று நாளும் முகுர்த்த முடிந்தபின்
ஈன்ற மாக மருந்தை யெடுத்திடு.

இப்பாட்டில் முன்சொன்னபடி தோய்த்தெடுத்த வீரக்கட்டியைப் பின்செய்ய வேண்டியமுறை சொல்கின்றார்.

[இ-ள்) மூன்சாற்றில் தோய்த்துக் காயவைத்த கட்டியை யெடுத்துத்திருப்பித் திருப்பிக் கெட்டியாகும் படியாகப் பழையபடியும் அந்தக் கோடகசாலைச்] சாற்றில் அந்தச் சாறு தீருமட்டும் மூன்றுநாள் மட்டும் தோய்த்துத் தோய்த்துக் காயவைத்தெடுக்கக் கடவாய். அந்த மூன்றுநாளுந் தீர்ந்தபின்பு அந்தக் கட்டியை யெடுக்கக் கடவாய். எ—று.

சூட்சுமவிளக்கம்:—வெளிப்படை. 46

### இதுவுமது

எடுத்தி ருந்த மருந்தது தன்னையே
படுத்தி டுங்கல்வத் துள்ளிற் படுத்திடு
விடுத் திடாதே வெளியுரை வீணர்க்குத்
தொடுத்தி டுமது வேறொன்று சூக்ஷமே.

(இ-ள்)முன்சொன்னபடி (கோடகசாலை] சாற்றில் நனைத்துக் காயவைத்தெடுத்த மருந்தைக் கிடக்கின்ற கல்வத்திற்போட்டுப் பின்செய்யும் விதத்தைச் சொல்வேன். கேட்பாயாக. இதில் வேறொரு சூட்சம் சேரும். வீணர்களுக்கு இதை வெளிபடச் சொல்லாதே. எ—று.

சூட்சுமவிளக்கம்:—வெளிப்படை. 47

### வண்ணச் சந்த விருத்தம்

ககரினி லைந்தும் நான்கினந் தனையே கையில்வாங்கு
பகரினிற் கடையும் பகர்கிறே னின்னும் பரிவாக
புகர்முன மடுத்தோன் றன்னுடன் புனை நீ ரகராமே
மகருற முறையு ளகரமிக் கடையு வடினீயும்.

இப்பாட்டில் முன்கல்வத்திற் போட்ட மருந்தைப பின் செய்ய வேண்டியவிதஞ் சொல்கின்றார்.

(இ-ள்) ககரவரியில் ஒன்று முதல் ஐந்தெழுத்துக்களை யெடுத்து அதில் முதலெழுத்துக்குப் பின்னிற்பதாகிய நான்கெழுத்துக்களையும் நீக்கிவிட்டு நின்றதாகிய வோரெழுத்தையும், பகரத்தின் கடையெழுத்தையும். இன்னும் சொல்லப்படுவதாகிய [புகர்] என்ற பதத்திற்கு முன்னிற்பதாகிய வோரெழுத்திற்கடுத்த வெழுத்தையும், ரகரத்தையும். மகரத்தின் இனமாகிய வோரெழுத்தையும், ளகரத்தின் கடையெழுத்தையும், ளிகரத்தையும் சேர்க்கக் கடவாய். அப்படிச் சேர்த்தால் ஒரு பெயரமையும். அப்பெயரே பின்சொல்லப்படும்



சாறுபிழியத்தக்க பச்சிலையின் பெயராம், இன்னும் சொல்லுவேன். கேட்பாயாக. எ—று.

சூக்ஷம விளக்கம்:—ககரவரியில் ஒன்று முதல் ஐந்தெழுத்துக்களை யெடுத்து அதில்முதலெழுத்துக்குப் பின்னிற்பதாகிய நான்கெழுத்துக்களையும் நீக்கிவிட்டு நின்றதாகிய வோரெழுத்து (க) பகரத்தின் கடையெழுத்தாவது (ப்). புகர் என்ற பதத்திற்கு முன்னிற்பதாகிய வெழுத்து (பு) அதற்கடுத்த வெழுத்தாவது (பூ) ரகரமாவது (ர.) மகரத்தின் இனமாகிய வொரெழுத்தாவது (வ,) ளகரத்தின் கடையெழுத்தாவது (ள்) ளகரமாவது (ளி) ஆக இவ்வெழுத்துக்களைச் சேர்க்க (கப்பூரவள்ளி) என்றானது. இதைக்குறிப்பினால் (கப்பூரவள்ளி) யென மாற்றிக்கொள்ளவேண்டியது. பரிபாஷைக்கிரமம் நோக்கி அவ்விதம் (கப்பூரவல்லி) யெனச் சொன்னாரெனவறிக மகரத்திற்கு யகரம் மோனைத் தொடையால் இனமென்பதை முன்னமேயே விளக்கியிருக்கின்றோம்.

ஆகவே இந்தக் (கர்ப்பூரவள்ளி]யே சாறெடுக்க வேண்டிய மூலிகையென வறியவேண்டியது. 48

### இதுவுமது

இங்குரை மூலிச் சாற்றினா லரைப்பா யியல்பாகச்
சங்கையா யிருநா ளரைத்ததை த்தபனன் தன்முன்னில்
துங்கமாஞ் சாம மொன்றுடன் வை நீ துதியாக
இங்கதை யெடுப்பா யியற்றிடும் வகைவே றினிச்
சொல்வேன்.

இந்தப் பாட்டில் மேற்குறித்த மூலிகையினாற் பின் செய்யவேண்டிய மார்க்கங்கூறுகின்றார்.

(இ-ள்] முன் 47 ம் பாட்டிற்சொன்னபடி கல்வத்திற்போட்ட வீரக்கட்டியை மேற்சொல்லிய (கர்ப்பூரவள்ளி) யிலைச்சாற்றினாலே இயல்பாக அரைக்கக் கடவாய். அப்படியே யிரண்டு நாள்வரையில் அரைத்து

அதையெடுத்துச் சிரேஷ்டம் பொருந்திய வெயிலில் ஒரு சாமம் வைக்க கடவாய். அப்படி வைத்து அதை யெடுப்பாய். எடுத்த பின் செய்ய வேண்டிய மார்க்கஞ் சொல்வேன். கேட்பாயாக.

சூட்சும விளக்கம்:—வெளிப்படை. 49

இதுவுமது

கரந்தையி னிலைச்சா றதனையே பிழிந்து கதியாக
விரைந்ததை விடுத்து மேவிய மருந்தை மிகவிட்டுப்
பொருந்திடும் போது கெந்தகத் தைலம் பொற்பாக
மருந்தினில் விடுவாய் வழுத்துவன் விராகன் மதி
யொன்றே.

இப்பாட்டினால் முதற்பாட்டில் சொன்னபடியரைத் தெடுத்த மருந்தைப் பின்செய்யவேண்டிய விதங் கூறுகின்றார்.

(இ—ள்) முன்சொன்னபடி காயவைத்ததெடுத்த மருந்தைக் கரந்தையிலைச் சாற்றைப்பிழிந்து கணக்கோடு விரைவாக விட்டு அதில் முன்மருந்தையிட்டு அரைத்து இரண்டு மொன்றாய் மிஸ்ரமிக்குஞ்சமயத்தில் இந்த இரண்டாவது காண்டம் 18 வது பாட்டு முதற் சொல்லப்பட்டிருக்கும் [கெந்தகத்தைலத்தில் ஒரு 3.5 கிராம்) அதில் விடக்கடவாய்.

சூக்ஷமம்:—வெளிப்படை. 50

எண்சீர்க் கழிநெடிலடி யாசிரியவிருத்தம்

விராகனிடை கெந்தகத்தின் றைலந் தன்னை
விட்டுநீ யரைத்திடவே மெழுகுகாகும்
பராபரத்தி னுரைப்படியேபகரின் நூலிற்
பதுங்கிநின்ற சூட்சமிது பகரக் கேண்மோ
கராவுடனே கல்வமதி லூற்றி ருந்த
கனகமுறச் செயுமருந்திற் கடுவிடாமற்
தராதரமாய் வழித்து நீ மேதிக் கோடு
தனிற்கடைந்த செப்பதனிற் பதனம் பண்ணு



இப்பாட்டின்முன் கெந்தகத்தைலம் விட்ட மருந்தை பின் செய்ய வேண்டிய விதஞ் சொல்கின்றார்

(இ-ள்,) முன்சொன்னபடியே ஒரு (3.5 கிராம்) கெந்தகத் தைலத்தைவிட்டு நீ அரைப் பாயேயானால் அது மெழுகாகும். சர்வவியாபகனான பரமசிவனதுகட்டளையின்படியே சொல்லப்பட்ட இந்த இலக்க சௌமிய சாகர மென்னும் நூலில் மறைவாயிருந்த சூட்சும மிதுவாகும். இன்னஞ் சொல்லக்கேட்பாயாக. கருப்பு நிறமாகக் கல்வத்திற்பொருந்தியிருக்கின்ற பொன்னைப் பெறும்படி செய்வதாகிய அந்த மெழுகில் கடுகளவுங் கல்வத்தில் விட்டுவிடாமல் அதனுடைய தன்மையை யறிந்து வழித்தெடுத்து எருமையினது கொம்பினாலே கடைந் தெடுத்த ஒரு சிமிழில் பத்திரப்படுத்துவாய்.எ...று.

சூக்ஷமவிளக்கம்:—வெளிப்படை. (51)

இதுவுவது

பண்ணுகின்ற வயமருந்ததின் பெருமை தன்னைப்
பகரரிது பகரரிது பாருள் ளோரே
மண்ணுகின்ற பொன்னாகும் வேதை கோடி
வகுத்திடவே நாவரிது வல்லே னானை
எண்ணுகின்ற வெண்ணமிது வேறொன் றில்லை
யெத்தருக்கு மிக்கருவை யீந்தி டாதே
கண்ணுகொண்டு வழிநடக்கும் வாறு போலே
காட்டிவைக்குங் கனகமுறும் வழிக டன்னை,

இப்பாட்டு முதல் முற்குறித்த மெழுகினது பெருமையைச் சொல்கின்றார்.

[இ-ள்-] முற்குறித்தபடி செய்த மெழுகாகிய மருந்தினது பெருமையைப் பூலோகத்திலுள்ளவர்களே!

சொல்வது மகா அருமையாகும் இதனால் அழகையுடைய பொன் செய்யப்பட்ட கோடிக்கணக்கான பலவேதைகளைச் சொல்லவென்றால் நாவினாலும் முடியாது. இது சத்தியம், உலகத்தில் இஷ்டசித்திகளையெல்லாம் அடையச் செய்வது இதைத்தவிர வேறொன்றில்லை. ஏமாற்றுத் தொழிலையுடைய பாதகர்களுக்கு இந்தக் கருவாகிய மருந்தைக் கொடுத்து விடாதே. கண்ணைக் கொண்டு பார்த்து வழியின்னதென வறிந்து நடக்கும் தன்மையைப்போல இது பொன்னைப் பெறுவதற்கான வழிகளைக் காட்டி வைக்கும், எ...று.

சூக்ஷும விளக்கம் :—வெளிப்படை. 52

இதுவுமது

வழியறிந்து கண்டவனே வாதி யாவான்
வண்டலுறு வெள்ளிக்கவ் வாறு போலே
மொழிமாறிக் குருவின்சொற்றட்டி டாதே
மோனமுறு ஞானவழி விட்டிடாதே
யழியாத பரம்பொருளை யகத்தி லுன்னி
யன்பாகத் தொழுதேற்றிப் பூசை செய்து
மெழுகதனைக் கையெடுத்து வேதை செய்து
வீரமுறத் தொட்டதெல்லா மாடுந் தானே.

———

இப்பாட்டில் மருந்தின் பெருமை சொல்கின்றார்.

(இ - ள்.) சரியான மார்க்கத்தை யறிந்து தெரிந்தவனே வாதவித்தைக்குரியவனாவான். வாதம்புரிவற்குறியதாயிருந்தும் சேற்றிற்பேய்ப்புதைந்து கொண்டிருக்கிற வெள்ளி நிமிளையைப்போல நான் சொன்ன பேச்சுக்கு மாறாக குருவினுடைய ஆணையைத் தாண்டாதே. பேரானந்தமாகிய மௌன நிலையாக முந்தினதானத்தை யடையும்படியான ஞான மார்க்கத்தையுங்கை விடாதே. எக்காலத்து நிலை பெற்றாகிய பரமென்று சொல்லப்பட்ட ஒப்பிலாப் பொருளை மனதிடமாக நினைத்துப் பிரியத்தோடு வணங்கித் துதித்துப் பூசனை முதலியவைகளுஞ் செய்து. மேற்சொல்லிய (வீர



மெழுகை)க் கையிலெடுத்து வேதைகளைச் செய்யத் தொடங்குவாயானால் ஜெயம் பொருந்தும்படியாகத் தொட்டதெல்லாம் ஆடும்.

சூட்சும விளக்கம் : சேற்றிற் படிந்து கிடக்கும் வெள்ளி நிமிளையைப்போல் வென்றது. வெள்ளி நிமிளையானது தங்க முதலியவைகளைச் செய்வதற்கு ஒரு முக்கிய சரக்காயிருந்தும் அது தாழ்மையான சேற்றிற் படிந்து கிடப்பதுபோல நீ இந்த மருந்துகளை முடித்ததினால் முத்தியாகிய பேரானந்தத் தவத்திற் குரியவனாயிருந்தும் தங்கம் பொன் செய்ய வேண்டுமென்று நினைத்து மயக்க வழியிற் சேர்ந்து பல ஜென்மங்களுக்கு ஆளாகிவிடாதே என்ற அபிப்பிராயமாம். ஆகவே அந்த வெள்ளி நிமிளை சேற்றிற் படிந்திருந்தாலும் அதை அந்த செந்தூரத்திற்கென்று மனிதர்கள் கையிலெடுத்தவுடனே எவ்விதம் பிரகாசத்தையடைந்து பின்பு சிரேஷ்ட குணத்தை யடையுதோ அதைப் போலவே நீயும் இந்த உலகமாயையிற் சிக்கிப் பல ஜென்மங்களெடுத் துழன்றிருந்தாலும் இந்த இலக்க சௌமிய சாகரத்தின் முறைகள் உன் கைவசப்பட்டவுடனே நீ இந்த உலக மாயையை யொழித்துத் தேகத்தைப் பலப்படுத்தி அதனால் உயர்ந்த சாதனங்களைச் செய்து முத்தித்தலத்திற் குரியவனாகிய பரஞ்சோதியுடன் இரண்டறக் கலந்து எப்பொழுதும் பிரகாசித்திருப்பாயென்ற கருத்து இவ்வாக்கியத்தாற் புலப்படுகின்றது.

இதனால் இம்முறைகள் பொன் செய்வதற்கல்ல, பிறவிக்காளாகாம லுன்னத பதவியையடைவதற்கே என்னுங் கருத்துத் தானே விளங்கின, இதைச் செய்யப் புகு மகான்கள் கவனித்துக் கொள்க. (54)

இதுவுமது

மாட்டிடுவாய் செம் லிரு நூற்றி லொன்று
வடுவான களிம்பற்று வாடை யற்று

நாட்டிலுறு மாசைகட்கு மேன்மை யாகி
    நனிவயது பத்தரையாம் நவிலக் கேண்மோ
தேட்டமுட னிவணிலுற்ற மாசை தன்னைச்
    செம்புதனிற் சமனுருக்கத் தெளிவுதானாம்
பூட்டமுட னாணியுரை யெட்ட தாகும்
    பொற்புடனே வேதை பின்னாற் பாடுவேனே.

---

இப்பாட்டு முதல் முற்குறித்த வீரமெழுகை இகு படும் வேதைகளைச் சொல்கின்றார்,

(இ - ள்.) மேற்குறித்த வீரமுதம் சேர்மின் இரு நூற்றுக்கொரு பங்கு சேர்ப்பாய். அப்படிச் சேர்த்தால், அந்தச் செம்பானது தங்கள் தங்கள் பண்புமாறி துர்நாற்றமு நீங்கி,இப் பூமண்டலத்திலுள்ள தங்கங்களி லெல்லாம் மேன்மை பெற்றதாகிப் பத்தரை மாற்றுமு டையதாகும். இன்னும் சொல்வேன் கேட்பாயாக. தெளி வான மேற்கண்டபடி தங்கத்தை செம்பினோடு சேர்த்து உருக்கினால் அந்தச் செம்புக் கூட்டும் தெளிவாக நிச்ச யத்தோடு எட்டுமாற்றுள்ள தங்கமாகும். மிகவும் அழகுடனே இன்னும் இதனாலுண்டாக்கப்பட்ட அநேக வேதைகளையும் விபரமாகச் சொல்வேன். கேட்கக் கடவாய். எ—று.

சூக்ஷும விளக்கம் :—இங்கு இவ்வாறு தங்கமாகு மெனச் சொல்லியிருந்த போதிலும் இவைகளெல்லாம் மருந்தின் பரீக்ஷைக்கென அறியவேண்டியது.

இதுவுமது

புகலுவே னாற்றதனி னின்று னன்ற
    புன்மையிர சிதத்தினைஞ் ஞூற்றி லொன்று
மகிமையுட னீயவது மஞ்ச ணித்து
    மகத்தான வயதுபனி ரெண்டே யாகும்



தகுமான வயதுபனி ரெண்டி லொன்று
    தாம்பூர மிதுரெண்டுஞ் சேர்த்து ருக்க
வகமாக வாணியுரை யெட்ட தாகு
    மரனாணை யன்னியர்க்கே யறைந்தி டாதே.

---

இம்பாட்டில் வேறு வேதை சொல்கின்றார்.

(இ - ள்,) மைந்தனே சொல்வேன் கேட்பாயாக. முதல் நூறு பாட்டுகளாலமைந்துள்ள முதற்காண்டத்தில். 83-ம் பாட்டிற் சொல்லியிருக்கின்ற தங்கமாற்று எட்டாகிய வெள்ளியில் ஐந்நூற்றிற் கொருபங்கு மேற் குறித்த எட்டு மாற்றுத் தங்கத்தைச் சேர்த்தால் அந்த வெள்ளியானது மஞ்சள் நிறத்தை யடைத்து சிரேஷ்ட மான பனிரெண்டு மாற்றுள்ள தங்கமாகும். அப்படிப் பனிரெண்டு மாற்றான ஒரு பங்கில் இரண்டு பங்கு தாம் பிரத்தைச் சேர்த்துருக்கினால் அது எட்டு மாற்றுள்ள தங்கமாகும். சிவன்மேலாணையாக இந்த மர்மத்தைப் பிறத்தியார்களுக்குச் சொல்லாதே. எ—று.

சூட்சும விளக்கம்:—வெளிப்படை. (55)

இதுவுமது

ஆட்டிவைக்குங் கோடான கோடி வித்தை
    யரகரா விதன்பெருமை யறையொண்ணாது
நாட்டிலுறு மாசையிதன் பெருமை தானே
    நவலோகந் தன்னிலிரு நூற்றி லொன்று
மாட்டிடவே தன்னிறங்க ளனைத்தும் போக்கி
    வடிவான வயது பதினாறே யாகுஞ்
சாட்டிடுவாய் சாதிசமன் சேர்த்து ருக்கி
    றயங்கியுரை யாணிதனி லெட்டே யாகும்.

இப்பாட்டில் வேறு வேதை சொல்கின்றார்.

(இ-ள்) சிவசிவா இந்த மருந்தினுடைய பெருமை யைச் சொல்லமுடியாது. இது கோடா கோடி வித்தை

களை ஆடச்செய்யும் உலகத்தில் தங்கமென்று சொல்லப் படுவதெல்லாம் இதனுடைய பெருமையேயாகும். மற்ற ஒன்பது வகை உலோகங்களிலும் இருநூற்றிற்கொரு பங்கு மேற்பாட்டிற் குறித்த தங்கத்தைச் சேர்த்தால் அந்த லோகங்களினுடைய சுபாவநிறங்களெல்லாம் போய்ப் பதினாறு மாற்றுள்ள தங்கமாகும். இந்தத் தங்கத்தோடு முன் எந்த லோகத்தைச் சேர்த்துச் செய்யப்பட்டதோ அந்த லோகத்தைச் சமனாகச் சேர்த்துருக்கினால் அது எட்டு மாற்றுள்ள தங்கமாகும்.

சூக்ஷம விளக்கம்:—வெளிப்படை (56)

இதுவுமது

எட்டென்றே பெண்ணாதே யின்னங் கேண்மோ
வெழிலாகத் தங்கமைந் நூற்றி லொன்று
சொட்டொன்று சேர்ந்துருக்கச் செம்புபோலே
தோற்றிவைக்கு மாணியுரை யாயி ரந்தான்
சுட்டலைந்த மாந்தர்களே கேளுங் கேளுஞ்
சோதியுரை சௌமியத்தின் சூக்ஷஞ் செம்பிற்
பட்டிடவே காணிக்குக் கோடி யாகும்
பரனாணை படிறில்லைப் பாரு பாரே.

இப்பாட்டினால் வேறு வேதை கூறுகின்றார்.

(இ-ள்) முன்பாட்டில் சொன்ன தங்கமானது எட்டு மாற்றுள்ளதென்று சாமானியமானதாக நினைக்காதே. இன்னமுஞ் சொல்வேன் கேட்பாய். அழகோடு இந்த எட்டு மாற்றுள்ள தங்கத்தை சுயமான தங்கம் ஐநூற்றிற்கொருபங்கு சேர்த்துருக்கினால் அந்தத் தங்கத்தை செம்பு போலாகச் செய்யும். அந்தத் தங்கச் செம்பானது தங்கத்தின் மாற்று ஆயிரமாகும். தங்கம் செய்கிறேனென்று வழிதெரியாமல் சுட்டுச் சுட்டு அலைந்து கெட்ட மனிதர்களே! கேளுங்கள். பரஞ்சோதியாகிய கடவுளாற் சொல்லப்பட்ட இந்த இலக்க சௌமிய சாகரத்தின் சூட்சுமமானது இந்தத் தங்கச் செம்பில்



எந்த லோகங்கள் பட்டாலுஞ் சரியே பட்டமாத்திரத்தில் அவைகள் காணிக்குக் கோடி பலன் உண்டாகும். சிவன் மேலாணைப்படி இதில் எள்ளளவும் பொய் இல்லை. நன்றாய்ச் செய்து அறிந்து பாருங்கள். எ—று.

சூக்ஷம விளக்கம்:—வெளிப்படை. (57)

இதுவுமது

பாரப்பா மெழுகுதன்னைக் கையி லுற்ற
பாங்கான விரனகத்திற் கோதிக் கொண்டு
சேரப்பா வெகுகும்ப விடையில் வந்து
செம்புதனை யுலையுறவே யுருக்கி நன்றாய்த்
தேரப்பா திரேகத்தி லூற்றை போலே
திறமுடைய நகத்திலுற்ற மருந்து தன்னைத்
தாரப்பா செம்பிலிடத் தங்க மாருஞ்
சாற்றுகிறேன் வேதையின்னந் தயவாய்க்
கேண்மோ

இப்பாட்டில் இந்தவித மெழுகாற் செய்யும் இன்னும் பலவிதமான அதிசயங்களைச் சொல்கின்றார்.

(இ-ள்) இன்னும் இந்தவித மெழுகினால் கிடைக்கக்கூடிய விசேஷங்களைச் சொல்வேன். கேட்பாயாக. இந்த மெழுகையெடுத்து அழகு பொருந்திய கைகளிலேயுள்ள விரல் நகத்தில் வைத்துக்கொண்டு ஜனங்கள் கூடியிருப்பதற்கான வோரிடத்தில் செம்பையெடுத்து நன்றாய் உலையில் வைத்துருக்கி தேகத்திலிருந்த அழுக்கை உருட்டி யெடுப்பதுபோல் பாவனை செய்து இந்த நகத்திலிருக்கும்படியான மருந்தை அந்த உருக்கிய செம்பிற் போடுவாயானால் அது தங்கமாகி விடும். இன்னும் இதனால் ஏற்படும் வேலைகளை சொல்வேன் கேட்பாயாக. எ—று.

சூட்சும விளக்கம்:— தேகத்திலிருந்து அழுக்கை உருட்டி யெடுத்து அந்தச் செம்பில் போடுவதுபோல் நகத்திலிருக்கும் மருந்தைப் போட்டுவிட்டால் அது

தங்கமாகிப் போகுமாகையால் கூடியிருக்கப்பட்ட ஜனங்கள் பிரமித்து இந்த மகான் அழுக்கை யுருட்டிப் போட்டார் தங்கமாகிவிட்டதெனக் கொண்டாடுவார்களென்பதாம். (58)

இதுவுமது

நண்ணிடவே யுள்ளங்கை தன்னி லிந்த
நாதாந்த மெழுகுதனைப் பூசிக் கொண்டு
மண்ணிலுற்ற மூலிவகை யெவையானாலும்
வாகுடனே பிடிங்கிக்கை தன்னில் வைத்துத்
திண்ணமுறக் கசக்கியோர் துள்ளி தன்னைச்
செம்புநவ லோகமதிற் சேர்ப்பா யாகிற்
பண்ணரிய பசுமையுள்ள செம்பொன் னாகும்
பார்த்தவர்க்குத் தோற்றாது பாரு பாரு.

இந்தப் பாட்டில் இந்த மெழுகினாற் செய்யும் வேறு தந்திரங் கூறுகின்றார்.

(இ-ள்) இந்த விசேஷம் பொருந்திய மெழுகைப் பொருந்தும்படியாக உள்ளங் கையிற் பூசிக் கொண்டு இப்பூமியிலுள்ள மூலிகைகள் எதுவானாலும் சரியே. அதைப்பிடுங்கிக் கையில் வைத்துக் கொண்டு பலம் பொருந்தும்படியாகக் கசக்கி ஒரு துளியைச் செம்பு முதலாகிய நவலோகங்களிற் சேர்ப்பாயானால் அது பண்ணுதற்கு அரிதாகிய சிவந்த நிறமான தங்கமாகும். பக்கத்திலிருப்பவர்களுக்கு இந்த சூட்சுமம் தெரியாது. கண்டறிந்து கொள்வாய்.

சூட்சும விளக்கம்:—இதனால் யாரோ ஒரு மகான் வந்து ஒரு பச்சிலையைப் பிடுங்கிக் கசக்கிப் பிழிந்தார். தங்கமானது என்னும் புகழ்வருமென்பதாம். 59

இதுவுமது

சித்தர் சிலபேர் தனக்குத் தெரியுமீது
சீடர்கள் பேரறிந்து தெரிந்து கொண்டார்



கத்தவரா லியானறிந்த தல்லால் வேறோர்
காசினியின் மாந்தர்களே கழறக் கேண்மோ
எத்துதலா யாமுரைத்த வார்த்தை யல்ல
யேகாந்த தெய்வசபை யேறி வந்த
நற்றவஞ்சேர் சௌமியத்தின் முறைகளின்ன
நவிலுகிறேன் நரர்குழுகா ணாடிக் கேண்மோ.

இந்தப் பாட்டில் இம்முறையினது பெருமை சொல்கின்றார்.

(இ-ள்) அப்பா இந்த முறையானது சில சித்தர்களுக்குத்தான் தெரியும். அவர்களிடமிருந்து வழி வழியே சில சீஷர்களும் தெரிந்து கொண்டார்கள். நான் இந்த சூட்சுமங்களைக் கடவுளினாலறிந்துகொண்டதல்லாமல் என்புத்தியினாலே நானாக சொன்னதல்ல. இந்தப் பூமண்டலத்திலுள்ள மானிடர்களே கேளுங்கள். ஏகமாகவும், எல்லாவற்றிற்கும் மேலானதாகவும் உள்ள தெய்வத்தினது சபையேறி வந்த நல்ல தவ மகிமைஉடைய இந்த இலக்க சௌமியத்தின் முறைகளை இன்னும் சொல்வேன் கேட்பீர்களாக. எ...று.

சூட்சும விளக்கம்:- வெளிப்படை.

நொண்டிச் சிந்து

புவியுறு மாந்தர்களே—மருந்தொன்று
புகலுகி றேன்வெகு புதுமையுடன்
செவியெனும் பேரிற்கடை—முதற்றளை
தீங்குறும் பதின்மர்க ளொடுபின்னொன்றுந்
தவிசக ரைந்தினமுந் —தன்னையேமுன்
சாற்றுமெழில் வீரநிறை போற்றியே வாங்கிக்
கவினுறச் செய்யும் விவரம்—தென்பாகக்
கழறுகி றேன்வெகு நவநீதமாய்.

துருசுச் சுண்ணம்

இப்பாட்டுமுதல் வேறுமுறை கூறுகின்றார்.

(இ-ள்.) பூவுலகத்திள்ள மனிதர்களே புதுமையாக இன்னும் ஒருவித மருந்தைச் சொல்வேன் கேட்பீர்களாக. செவியென்னும் பெயருக்குப் பிரதிபதமாயுள்ள ஓர் சொல்லினுடைய கடையெழுத்தையும், இப்பாட்டின் முதலடியிலேயுள்ள பத்தெழுத்துக்களுக்குப் பின்னிற்பதாகிய வோரெழுத்திற் கடுத்தவோரெழுத்தையும், சகரவரியில் ஐந்தாமெழுத்தையும் சேர்த்தால் ஒருபெயரமையும். அப்பெயருள்ள சரக்கை இதற்கு முந்தின முறையிற் சொல்லியிருக்கின்ற வீரத்தினது அளவே வாங்கக்கடவாய். அப்படிவாங்கினபின் செய்யவேண்டிய விபரத்தைத் தெளிவாகச் சொல்வேன் கேட்பாயாக. எ-று.

சூக்ஷமவிளக்கம்:-செவி யென்ற பெயருக்குப் பிரதிபதமாயுள்ள வோர்சொல்லாவது காது. இதன் கடையெழுத்தாவது [து.] இந்தப்பாட்டின் முதலடியிலேயுள்ள பத்தெழுத்துக்களுக்குப் பின்னிற்பதாகிய வோரெழுத்திற் கடுத்த வெழுத்தாவது (ரு) சகரவரியில் ஐந்தாமெழுத்தாவது [சு.] ஆக இம்மூன் றெழுத்துக்களையும் சேர்க்க (துருசு) என்றானது இதுவே அந்தச்சரக்காம். இதற்கு முந்தின முறையிற் சொல்லியிருக்கிற வீரத்தினளவாவது [10.5 கிராம்] பலம் மூன்றாகையால் அந்த அளவுஎடுத்துக்கொள்ளவேண்டியது.

ஆகவே [10.5 கிராம்] எடுத்துக்கொள்ள வேண்டுமெனத் தெரிந்துகொள்க

விபரம்

துருசு பலம் (3) 105 கிராம்

இதுவுமது

செக்கர்நிற மானதது—திருநாட்
டேன்கம ழாலையத்திற் றூக்கியே நீற்கும்



முக்கியமு றவே சிவக்கும்—முதற்றொடை
மொழியலுற் றேன்வெகு புதுமையுடன்
பக்குவமா வகர் முறையின்—கடையொடு
பாங்கான நிறையின்பேர் தனி முதலும்
ஒக்கவோ ரகரினமுந்—தகர்தனிற்
தடைதலை மகர்கடை வொன்றெடுபூ,

இப்பாட்டுமுதல் முன்னெடுத் தருணம் பின் செய்ய வேண்டிய விதஞ் சொல்கின்றார்.

(இ-ள்) கீழ்ச் சொல்லப்போகும் பொருளானது சிவந்த நிறத்தையுடையது. இது திருநாட்காலங்களில் வாசனையானதுமிகுந்து வீசும்படியாக ஆலயங்களிற் கட்டித் தொங்கிக் கொண்டிருக்கும். இது பட்டவிடங்களெல்லாம் மிகச்சிரேஷ்டமாகச் சிவக்கும். இன்னும் சொல்வேன் கேட்பாயாக: இந்தப்பாட்டின் முதலெழுத்தையும், வகரத்தின் இனமாகிய வோரெழுத்தின் கடையெழுத்தையும், அழகாகிய நிறையென்ற சொல்லுக்குப் பிரதிபதமாகிய வோர் சொல்லின் முதலெழுத்தையும். இவைகளோடு ரகரத்தையும், தகர வரியில் கடையெழுத்தையும் முதலெழுத்தையும், மகரவரியின் கடையெழுத்தையும் பூவென்ற எழுத்தையும் எடுத்துச் சேர்ப்பாய். அப்படிச் சேர்த்தால் ஒரு பெயரமையும். அப்பெயருள்ள பொருளைச் செய்யவேண்டிய விவரம் பின் கூறுவாம். எ—று

சூக்ஷ்ம விளக்க:— இந்தப் பாட்டின் முதலடி முதலெழுத்தாவது (செ.) வகரத்தின் இனமாகிய ரெழுத்து மகரம். அதன் கடையெழுத்தாவது (ம்.) அழகாகிய நிறை யென்ற சொல்லுக்குப் பிரதிபதமாகிய வோர்சொல் அளவு. இதைப்பலமென இந்த முறையிற் சொல்லியிருக்கிற கிரமப்படி கொள்ள அந்தப் பலமென்ற சொல்லின் முதலெழுத் தாவது (ப.) ரகரமாவது (ர.) தகரவரியிற் கடையெழுத்தாவது (த்.) அதில் முததாவது (த.) மகரவரியின் கடையெழுத்தாவது (ம்.) பூவென்ற எழுத்தாவது (பூ.) ஆக இவ்வெட் டெழுத்துக்

களையுங் கூட்ட முறைப்படியே (செம்பரத்தம்பூ) என்றானது. இதுவே அந்தப் பொருளாம்.

ஆகவே முதலில் (துருசு 105 கிராம்) வாங்கிக் கொண்டு இரண்டாவது (செம்பரத்தம்பூவை)ச் சேகரிக்க வேண்டு மென்பதாயிற்று மற்ற விபரம் பின்பு கூறுவார். (63)

### வேறுவிருத்தம்

இவணியி லெழிலுற வியம்பு மேடலர்
சுவமுறப் பரித்ததின் சூட்சங் கேட்டிடு
தவமுறு பழத்தின்சா றதனிற் போட்டிடு
குவலையப் பத்திரு கடிகை கூறுவேன்.

இப்பாட்டில் மேற்கண்ட பூவைப் பின் செய்யவேண்டிய விதஞ் சொல்கிறார்.

[இ-ள்.) மேற்குறித்த பாட்டில் அழகு பொருந்தும் படியாகச் சொன்ன இதழ்களை யுடைய அந்தச் [செம்பரத்தம் பூவை) பிடுங்கிப் பின்பு அதைச் செய்யவேண்டிய மர்மத்தைக் கூறுவேன் கேட்பாயாக. அந்தப் பூவை தேவையான அளவு உயர்ச்சி பொருந்திய எலுமிச்சம் பழச்சாற்றில் இருபது நாழிகைபோடக் கடவாய். எ...று.

சூக்ஷ்ம விளக்கம்:— மேற்கண்ட செம்பரத்தம் பூவைப் பிடுங்கி எலுமிச்சம் பழச்சாற்றில் பன்னிரண்டு சாமம் 36 மணிநேரம் ஊறப்போட வேண்டும்.

### இதுவுமது

போட்டிடு பூவதைப் புகழ்ந்து பொற்புற
நாட் டு முன்னமே நவின் மருந்தினிற்
போட்டிடு புரட்டியே பொழுதின் முன்பினிற்
நாட்டி நீ வைத்தெடு நாண்முன் றாகவே



இப்பாட்டில் முன்செய்த செம்பரத்தம் பூப்பக்குவத்தைப் பின் செய்யவேண்டிய விதஞ் சொல்கின்றார்.

[இ-ள்.] மேற்சொன்னபடி செம்பரத்தம் பூவை எலுமிச்சம் பழச்சாற்றிற் (36 மணிநேரம்)ஊறப்போட்ட பின் அதில் முன் 61-ம் பாட்டிற் சொன்ன துருசைப் புரட்டிப் புரட்டிப் போட்டுத் தோய்த்துச் சூரியனுக்கு முன்பாக [அதாவது வெயிலில்] மூன்றுநாள் மட்டும் வைத்து வைத்தெடுக்கக் கடவாய். எ...று.

சூக்ஷ்ம விளக்கம்:...மேற்படி துருசை ஒரே முட்டாய் மேற்படி சாற்றிற் போட்டு மூன்று நாள் மட்டும் ஊறவைத்தாற் கரைந்துவிடு மாகையால் அதைத் தோய்த்துத் தோய்த்து மூன்றுநாள் மட்டும் காயவைத் தெடுத்துக் கொள்ள வேண்டும். (64)

### இதுவுமது

வெய்யிலில் வைத்தெடு வேதை தன்னையே
கையினா லெடுத்துநீ கதிக்கப் பூவினீ
செய்யவே குத்திநீ தினகரனின்முன்
வையகந் தன்னிலே வைமுன் வாறுபோல்.

இப்பாட்டில் முன் பாட்டிற் சொன்னபடி செய்த துருசைப்பின் செய்யவேண்டிய கிரமஞ் சொல்கின்றார்.

(இ-ள்.) முன் சொன்னபடியே வெயிலில்வைத்தெடுக்கக் கடவாய் அப்படி யெடுத்த. மருந்தைப் பழைய படியும் முன்போலவே செம்பரத்தம்பூச் சாற்றைச் சித்தப்படுத்தி அதிற் றோய்த்துத் தோய்த்து முன் சொன்னது போலவே மூன்றுநாள் மட்டும் வெயிலில் வைத்து வைத்தெடுக்கக் கடவாய் எ...து.

சூக்ஷம விளக்கம்;...வெளிப்படை. [65]

இதுவுமது

இப்படி மூன்றுநா ளியற்றி வேதையை
மெய்ப்புடனெடுத்திடு வேக மீறிடும்
தப்பு ளாகவே சாடை போக்கிடில்
செப்பிய முறையதுந் தீங்க தாகுமே.

இப்பாட்டினால் முன்சொன்னபடி காயவைத்தெடுத்த மருந்தின் குணத்தைச் சொல்கின்றார்.

[இ-ள்.] முன் சொன்னபடியே அந்த மூன்று நாள் மட்டும் செய்து மெய்யோடு அந்த மருந்தை யெடுக்கக் கடவாய், அப்போது அந்த மருந்தானது வேகம் அதிகரித்து விடும். இப்படிச் செய்வதில் அந்தத் துருசினது அடையாளம் போய்விட்டடால் இந்தமுறையே கெட்டுப் போய்விடும். எ—று;

சூக்ஷும விளக்கம்:-இப்படிச் செய்வதினால் துருசுச் சாடை யென்று சொல்வதான துருசுக்கு சிவப்பு நிறமானது போய்விடக் கூடாது. அப்படிச் சிவப்பு நிறம் மாறுமே யானல் இந்த முறையே கொட்டுப்போய் விடும்.

கொச்சகக் கலிப்பா

தூங்காதேமைந்தனே சொல்லுவேன் சூட்சமின்னம்
பாங்காக முன நவின்ற பண்பாங்கெந்தகத்தைலம்
ஓங்காக வேயதிலே யுயர்வுடனீ யெடுவிபரம்
வீங்காவி ராகனிடை விளம்புவன ரெண்டாமே.

இந்தப் பாட்டில் மேற்கண்ட துருசைப்பின் செய்ய வேண்டிய விதஞ் சொல்கின்றார்.

(இ-ள்) மைந்தேனே தூங்கிவிடாதே, இன்னும் இதனுள்ளிருக்கும் சூக்ஷத்தைச்சொல்லிவிடுகிறேன் கேட்பாயாகஇந்தஇரண்டாங்காண்டத்தின் 18ம் பாட்டுமுதல்



சொல்லப்பட்டிருக்கின்ற [கெந்தகத் தைலத்தில்] 7 கிராம் அளவு உயர்வாக எடுக்கக் கடவாய். எ...று.

சூக்ஷும விளக்கம்:—வெளிப்படை. (67)

இதுவுமது

இரண்டாங்கெந் தகத்தைலந் தன்னில்நே ராகமுன்பு
விண்டாக மாசையுறும் வென்றிசையு மெழுகதனில்
துண்டாகப் பணமிரண்டு சூட்சமுடன் போட்டுழக்கி
இரண்டாகு மருந்துதனி லெழிலாகப் பூசிடுவாய்.

இப்பாட்டில் மேற்குறித்த கெந்தகத் தைலத்தோடு இன்னும் சேர்க்கவேண்டிய மற்றொன்றையுஞ் சொல்கின்றார்.

(இ-ள்) முன் சொன்னபடி யெடுத்த 7 கிராம் கெந்தகத் தைலத்தில் நேர்மையோடு இதற்கு முன் இந்தக் காண்டத்தின் 65 பாட்டு முதற்சொல்லியிருக்கின்ற பொன் விளையும்படியாகச் செய்யப்பட்ட (வீர மெழுகில்) இரண்டு பணவெடை பிரத்தியேகமா யெடுத்து மிகவுந் தந்திரமாகப் போட்டுக் கலக்கி அந்தக் கலவையை முன்னே இரண்டுமுறை செம்பரத்தம் பூவுடன் எலுமிச்சம்பழச் சாறு கலந்து பக்குவப்படுத்தின (துருசில்) அழகு பொருந்தும்படியாகப் பூசக் கடவாய் எ—று.

சூட்சும விளக்கம்:—வெளிப்படை. (68)

இதுவுமது

பூசி மருந்தைப் பொற்புடனே வெயிலில் வைத்து
நேச முறவே நேர்ந்துடனே யிறுகி நின்றால்
மாவை மலையை வரவழைப்பாய் மருந்துதனைப்
பாச முறநீ பண் பாகப் பதனம்பண்ணு.

இப்பாட்டில் முன் கலவை பூசிவைத்த துருசைப் பின் செய்ய வேண்டிய விதஞ்சொல்கின்றார்,

(இ-ள்) மேற்கண்டபடி கெந்தகத் தைலம் வீர மெழுகுக் கலவையைப் பூசிய மருந்தை அழகு பொருந் தும்படியாக வெயிலில் வைத்து நேசம் பொருந்தும்படி யாக அது சேர்ந்து கெட்டியாகுமே யானால் அதனால் உடனே பொன் மலையை வரவழைக்கக் கடவாய். பின்பு அதனைப் பக்குவமாகப் பத்திரப்படுத்துவாய். எ—று.

சூக்ஷுமம விளக்கம்:—இந்தப்படி துருசுக்கட்டியைப் பக்குவப்படுத்தி யெடுத்து வைத்துக் கொண்டால் பொன்னை மலைமலையாய்க் குவிக்கலாமென்ற நிச்சய மிருக்கின்றபடியால், அப்படிச் செய்தபின்பு மாஷை மலையை வரவழை யென்று உறுதியாகச் சொன்னார்.
69

பள்ளுச்சந்தவிருத்தம்

ஊந்துலவிய மூங்கைதன்னையே
யொளிர வேகொண்டு வந்துநீ
காந்த மாகவே கல்வமீதினிற்
கதிக்க வேயிடு சுருக்குடன்
மாந்தர் சதிரந் தனிற்கடைக்குறை
வழுத்துவேன் ககர்கடையுடன்
ஆந்தமுறவே முதல்முன் னவின்ற
வந்த மிகுந்த தவிருன்பேர்.

இதுமுதல் இரண்டு பாட்டுகளால் மேற்படி மருந் திற்கு மூசைசெய்யும் விதஞ் சொல்கின்றார்.

(இ-ள்) இவ்விதம் மேற்கண்டபடி துருசைப்பக்குவப் படுத்திக் கொண்டபின்பு ஜலத்தில் ஊர்ந்து திரிவதாகிய மூங்கை யென்று சொல்லப்பட்ட (கும்பிடு கிளிஞ்சல் களை) மேலேயிருக்கும் கருப்பு நிறத்தைப்போக்கி வெள்ளையாகப் பிரகாசிக்கும்படி சேகரித்துக் கொண்டு வந்து நீ சிநேகத்தோடு கல்வத்திற் போட்டு மாந்தர் களுடைய தேகத்துக்குச் சொல்லப்படுவதாகிய (சதிரம்)



என்ற பெயரைக் கடைக்குறையாக்கி அதனோடு ககரத் தின் கடையெழுத்தைச் சேர்த்துஅமைந்த அரை குறைப் பெயரோடு குறைந்து நின்ற இறுதிப் பாகத்தையும் குறிப்பாற்கண்டு சேர்த்து அதை விரைவுடன் எடுத்துப் பார்ப்பாய். அப்படியெடுத்துப் பார்ப்பாயே யானால் முன் முதற் காண்டத்தில் அந்த செந்தூர முறையிற் சொல்லப்பட்டஒரு மரத்தின் பெயரமையும். அந்த மரத்தினாலாக வேண்டிய விஷயத்தைப் பின் கூறுவாம். எ—று.

சூட்சும விளக்கம்:—கும்பிடு கிளிஞ்சல்கள் வாயை மூடிக் கொண்டிருக்குங் காரணத்தால் அதற்கு ஊமை யென்று பொருள் படத்தக்க மூங்கை யென்று சொன் னார். தேகத்திற்குச் சொல்லப் படுவதாகிய சதுரம் என்ற பெயரைக் குறையாக்க நின்றது (சதுர). இத னோடு ககரத்தின் கடையெழுத்தைக் கூட்ட சதுரக்] என நின்றது. இதிற் குறைந்த இறுதிப்பாகமாவது அந்த செந்தூரத்திற் சொல்லப்பட்ட மரத்தின் பெயர மையும் என்று சொன்ன குறிப்பினாலுணர்ந்த [கள்ளி] இதை முன் இறுதிக் குறைவாய் நின்ற பதத்தோடு கூட்ட [சதுரக் கள்ளி) என்றானது. இந்த மரமே பின் சொல்லப்போகும் விஷயத்திற் கானதாம்.

பாட்டில் சதிர எனச் சொல்லி யிருந்த போதிலுங் குறிப்பு நோக்கிச் சதுர என்றாக்கப்பட்டது. (70

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

தனிலே யுதித்த வமுதனையே
தங்கு மூங்கை தன்னிற்குத்தி
நனியா யரைப்பாய் நாரிநயன
நாட்டு மைபோ லாட்டியுடன்
தனியே வழித்து மூசைசெய்து
தட்டு வாயின் வில்லையுமே
பனியை யகற்றுங் கதிரவன்முன்
பாங்காய வைப்பா யுலர்ந்திடவே

இந்தப் பாட்டினால் முன் சொல்லிய மருந்திற்கு மூசை செய்யும் விபரங் கூறுகின்றார்.

(இ-ள்] முந்தின பாட்டிற்குறித்த அந்தச் சதுரக் கள்ளிமரத்திலே தோன்றிய பாலை யெடுத்து முன் கல்வத்திற்போட்டிருக்கிற கும்பிடுகிளிஞ்சில்களில்விட்டு மிகவும் பலமாயரைக்கக் கடவாய். அந்தப்படியே அதைப் பெண்களினது கண்களிலிடும் மைப்போலாகும் வரையில் அரைத்து அதை வழித்தெடுத்து அதினால் மூசைசெய்து மேல்மூடியுந் தட்டி பனியை நீக்கப்பட்டவனாகிய சூரியனுக்கு முன்பாக [அதாவது வெயிலில்] காயும்படியாய் அழகாகக் வைக்கக்கடவாய்,எ—று.

சூட்சும விளக்கம்:—வெளிப்படை. 71

சந்தவிருத்தம்

உலர்ந்திடு மூசையைக் கரமதி லெடுத்துநீ
யுலர்ந்தமுன் மருந்துதன்னை
நலம்பெறு மூசையினுள்ளினில் நாட்டிடு
நவின்றிடு மேலோட்டில்
பலந்தரு கலையினி லிருபது மேலிடு
பகர்ந்தமுன் கல்வமதில்
கலந்திடு மருந்தை வழித்துநீ யேகமாய்க்
கதித்திடப் பூசுவையே.

இந்தப் பாட்டினால் காயவைத்த மூசையையெடுத்துப் பின் செய்ய வேண்டியவிதங் கூறுகின்றார்.

(இ-ள்) முன்சொன்னபடி காயவைத்துக் காய்ந்த மூசையையெடுத்து முன்னே கெந்தகத்தைலம், வீரமெழுகுக் கலவையைப் பூசிக் காயவைத்திருக்கின்ற மருந்தை அதற்குள் வைத்து மேல்பில்லையால் மூடி அதன்மேல் முன்கல்வத்தில் மூசைக்காக அரைத்த கிளிஞ்சிற்குழம்பினால் இருபது சீலை செய்து அதன்



மேலும் மேற்படி குழம்பை வழித்து ஏகமாய் நன்றாகப் பூசக்கடவாய்: எ—று.

சூட்சும விளக்கம் :—வெளிப்படை. (72)

கலிவிருத்தம்

பூசிய மூசையைக் கையிற் பொருந்தவே
ஆசைவைத் தாதியை யகத்தி லுன்னியே
பேசிய குருமொழி பிசகி டாமலே
வாசமா நின்றுநீ வகுக்கக் கேளுமோ.

இந்தப் பாட்டு முதல் மேற்கண்டபடி மருந்தை வைத்துச் சித்தப்படுத்திய மூசையைப் பின்செய்ய வேண்டிய விதங் கூறுகின்றார்.

(இ-ள்.) மேற்கண்டபடி பூசிச் சித்தப்படுத்திய மூசையைப் பிரியத்தோடு கையிற் பொருந்தும்படியாக வைத்து ஆதிபரனாகிய கடவுளை மனதினாலே தியானித்துச் சொல்லிய குருவினது வாக்கியத்தைத் தவற விடாமல் கிரமமாக நிற்கக்கடவாய். பின்செய்யும் மார்க்கத்தை சொல்லுவேன். நீ கேட்பாயாக.

சூட்சும விளக்கம் :—வெளிப்படை (73)

எண்சீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

கேளப்பா வெருக்கடன்னைச் சேக ரித்துக்
கெடியாகப் புடமுயர மிரண்ட தாகத்
தாளப்பா மத்தியிலே மூசை தன்னைத்
தயவுடனே தாட்டிவைத்துச் சாற்றக் கேளு
சூளப்பா யிடுக்கில்லி விட்டி டாமற்
சூழவே யெருவதனாற் றுங்க மாக்கிச்
சாளப்பா தீமூட்டித் தணிந்த பின்பு
தங்குகின்ற மருந்துதனை யெடுத்துப் பாரு

இப்பாட்டினால் மேற்குறித்த மூசையைப் புடம் போடு மார்க்கஞ் சொல்கின்றார்.

(இ-ள்.) அப்பனே கேட்கக்கடவாய். முன்சொன்ன படியே மூசையைக் கையில் வைத்துக் கொண்ட பின் வேண்டிய விராட்டிகளைச் சேகரித்து இரண்டு முழம் உயரமான புடத்தைப் போட்டு மேற்கண்ட மூசையை அதன் மத்தியில் வைத்து அந்தப் புடத்தின் பக்கங்களில் இடுக்கு, வெளி முதலியவை இல்லாதபடி எருவினால் திடப்படுத்தி நெருப்பிடக்கடவாய். அந்த நெருப்பானது பிடித்து தணிந்த பிற்பாடு அதிலுள்ள மருந்தை எடுத்துப் பார்க்கக்கடவாய். எ—று.

சூட்சும விளக்கம் :—இதில் புடத்தை உயரமிரண்டதாக என விபரமற்றுச் சொல்லியிருந்தபோதிலும் இந்நூலின் முறைக் கிரமங்களை நோக்கி அதை இரண்டு முழமென நிச்சயிக்கப்பட்டது. அறிவுள்ள கனவான்கள் அவரவர்கள் யுக்திப் பிரமாணத்திற்குத் தகுந்தவாறு நிதானித்துக் கொள்வார்களாக. (74)

இதுவுமது

பார்த்திடுவாய் வில்லைதனைக் கையால்நீக்கு
பண்புடனே வெள்ளைவன மாகித்தோற்று
மாற்றேது கணக்கேது தொகைதா னேது
வையகத்தி லிதன்பெருமை வகுக்கொ ணாது
நேர்த்தியது மயப்பிரண்ட மதனி லந்த
நேர்மையுறு மருந்துதனைப் பதனம் பண்ணிப்
போற்றிடுவா யுன்குருவை மனதி லுன்னிப்
பொற்புடனே வேதையின்னம் புகலக்
கேண்மோ.

———

இப்பாட்டில் முன்சொன்னபடி புடமிட்டெடுத்த மருந்தின் பெருமை முதலியவற்றைச் சொல்கின்றார்.



(இ-ள்) முன்சொன்னபடி மேற்படி மூசையைக் கையாலெடுத்துப் பார்க்கக் கடவாய். அப்படி யெடுத்துப் பார்த்த பின்பு அந்த மூசையின் மேல்மூடியைக் கையினாலெடுத்து நீக்கிவிட்டுப் பார்த்தால் அதற்குள்ளிருக்கு மருந்து வெள்ளை நிறமான சுண்ணமாயிருக்கும். இத்தன்மையுடைய இந்தச் சுண்ணத்திற்கு மாற்று, கணக்கு, விலை முதலானவைகள் இன்னவென்று சொல்லமுடியாது. இப்பூவுலகத்தில் இதன் பெருமையையும் அளவிட்டுச் சொல்லமுடியாது. இந்த அழகான மருந்தைப் பார்க்கத் தகுந்த இரும்பினாற் செய்த ஓர் சிமிழில் பத்திரப்பத்தித் காத்தருள்வாய். உன் குருவைவும் மறந்துவிடாதே. இம்மருந்தினலாக்கப்பட்ட பல வேதைகளை இன்னும் சொல்லுவேன் கேட்பாயாக. எ—று.

சூட்சும விளக்கம் :—வெளிப்படை. (75)

கலி விருத்தம்

இங்கு ரைத்த மருந்தினை யிஞ்சிச்சா
றங்க மாக வரிசியி டையுறத்
துங்க மாகவே தோய்த்ததை யுண்டிடில்
அங்க மீதி லகலும் வியாதிகேள்

இப்பாட்டு முதல் இந்த மருந்தினாற் றீரும்வியாதிகளின் விபரஞ் சொல்கின்றார்.

(இ-ள்.) இவ்விடத்தில் மேலே சொன்ன துருசுச் சுண்ணமாகிய மருந்தை இஞ்சிச்சாற்றில் ஒரு அரிசியெடை போட்டு உயர்வு பொருந்தும்படியாக இரண்டையுங் கலந்து சாப்பிட்டால் அதினால்தேகத்திலிருந்து நீங்கும்படியான வியாதிகளைச் சொல்வேன் கேட்பாயாக. எ—று.

சூட்சும விளக்கம் :—வெளிப்படை (76)

இதுவுமது

சன்னி யென்ற பதின்மூன்று தானதும்
மன்னி மன்னிய தோஷவ றட்சியுங்
குன்னிக் குன்னிக் குலைத்திடு விக்கலுஞ்
சன்ன மாகச் சணத்தி லகலுமே.

.........

இப்பாட்டினாலும் தீரும் வியாதி சொல்கின்றார்.

(இ-ள்.) மேற்கண்டபடி யுண்ணச் சன்னியென்று சொல்லப்படுவதாகிய பதின்மூன்று வகைகளும், நெருங்கி வருவதாகிய தோஷவறட்சிகளும், கூனிக் கூனித் தேகத்தைவளையும்படி செய்து வருத்தப்படுத்துகின்ற விக்கல் வகைகளும், தம்முடைய பலங் குறைந்து மிகவும் விரைவாக நீக்கிப்போகும். எ...று.

சூட்சும விளக்கம் :...வெளிப்படை. (77)

மோகத் தால்வரு மோகச யித்தியம்
போகத் தால்வரு பூவைபு ணர்ச்சியுஞ்
சோகத்தால்வரு தோஷமு மிம்முறைப்
பாகத்தாலே படபடத் தோடுமே.

——

இதனாலும் தீரும் வியாதி சொல்கின்றார்.

(இ-ள்) இன்னும் மேற்படி மருந்தினால் மோகங்களினாலே வந்த மோக சயித்தியமும், ஸ்திரீ போகங்களினாலேற்பட்ட பல வியாதிகளின் சம்பந்தமும், அச்சம் போகத்தினாலேயே வரப்பட்ட அநேகவித தோஷங்களும் தம் வலி குறைந்து படபடத்துக்கொண்டு ஓடிவிடும்.

சூக்ஷ்ம விளக்கம்:- வெளிப்படை. (78)



இதுவுமது

குட்ட மோடு குறைநோவு சூனியம்
திட்டமாகத் திரேகம் விட்டோடிடும்
மட்டி வாத மயக்கம் வலிப்புகள்
துட்ட னென்று சொலிச்சொலி யேகுமே.

O

இப்பாட்டினாலும் தீரும் வியாதி சொல்கின்றார்.

(இ-ள்) இன்னும் இம்மருந்தினால் குட்டம் முதலான நோய்களோடு குறைநோவும், சூனியமும் நிச்சயமாகத் தேகத்தை விட்டு நீங்கிப்போகும். அளவிடக்கூடாத மயக்கம், வலிப்பு முதலியவை எல்லாம் அப்பா இவன் பொல்லாதவனென்று சொல்லிக்கொண்டே ஓடிவிடும். எ...று.

சூக்ஷ்ம விளக்கம்:- வெளிப்படை (79)

இதுவுமது

மூச்சு மீளை முயங்கிய காசமும்
கீச்சுக் கீச்சென்று கிண்டுமி ளைப்பொடு
போச்சு சீவ னெனப்புகல் மாந்தரும்
வாச்ச விம்மருந் தால்வய மாவரால்

......

இப்பாட்டிலும் தீரும் வியாதி சொல்கின்றார்.

(இ-ள்) இன்னும் இதனால் மூச்சென்ற வியாதியும் ஈழை நோவும், காச வகைகளும், கீச்சுக் கீச்சென்று நெஞ்சிற்குள்ளேயே கிளருகின்ற இளைப்பு முதலான வியாதிகளும் தீரும். சீவன் போய்விட்டதென்று சொல்லத்தகுந்த நிலைமையிலிருக்கின்ற மனிதர்களும் பொருந்திய இந்த மருந்தினால் உயிர் பெற்று வாழ்வார்கள். எ...று.

சூக்ஷ்ம விளக்கம்:- வெளிப்படை. (80)

வேறு விருத்தம்

கூற்றன்வந் துயிரினைக் கொண்டு போயபின்
ஊத்தைசூழ் கட்டையி னொளிகொள் பற்கவ்வி
யாத்திடும் வேளையி லரைய ரிசியைப்
பாத்திர முறமுலைப் பாலிற் பண்புடன்.

.........

இதுமுதல் இந்த மருந்தினால் இறந்துபோன பிணத்தையும் எழுப்பிக்கு மார்க்கம் சொல்கின்றார்.

(இ-ள்) எமன் வந்து ஒரு தேகத்திலுள்ள உயிரைக் கொண்டுபோன பிற்பாடு தசையினால் நிறைந்த கட்டையென்று சொல்லப்படுவதாகிய சடலமானது பிரகாசம் பொருந்திய பற்கள் கிட்டிப்போய் விடும். அந்தச் சமயத்தில் இந்த மருந்தில் அரையரிசி யெடை யெடுத்து ஒரு பாத்திரத்தில் முலைப்பாலை கறந்து அதில் இந்த மருந்தை நேசத்தோடு போட்டுக் கலக்கி. எ...று.

சூக்ஷ்ம விளக்கம்:- வெளிப்படை. (81)

இதுவுமது

கலக்கி நீ மருந்தைக் கையிலெடுத்துடன்
தலத்தின்வீழ் சவத்தின்வாய் தன்னி லூற்றிடு
உலுத்தமா யெமன்கையி லூற்றி டுமுயிர்
வலத்தவன் சடத்தினில் வருமவ் வாறுகேள்.

......

இப்பாட்டால் பிணத்திற்கு மருந்து கொடுக்க விபரஞ் சொல்கின்றார்.

(இ-ள்) முன் சொன்னபடியே முலைப்பாலில் அந்த மருந்தைப் போட்டு கலக்கிக் கையெடுத்துப் பூமியில் விழுந்து கிடக்கிற அந்தப் பிணத்தினுடைய வாயில் ஊற்றக்கடவாய். அப்படி ஊற்றினவுடன் முன்சொன்ன படியே எமன் கொண்டுபோன உயிரானது பழையபடியும் தேகத்தில் வரும்படியான விபரத்தைச் சொல்லுகின்றேன் கேட்பாயாக. எ—று.



சூக்ஷ்ம விளக்கம்:—வெளிப்படை. (82)

இதுவுமது

வலதுகாற் பெருவிரல் வடிந்த சைத்திடுஞ்
சிலுசிலுப் பாகவே ரோமஞ் சீறிடுந்
தலையினில் வெதுவெதுப் பங்கு தானுறும்
சலமுறச் சடமெலாந் தடிந்து பொங்குமே.

O

இப்பாட்டு முதல் அப்படியிருந்து கொடுத்த பிணத்திற்கு உயிர் வருமார்க்கஞ் சொல்கின்றார்.

(இ-ள்) மேற்சொன்னபடி மருந்தை வாயில் ஊற்றினவுடன் முதலில் அப்பிணத்தின் வலதுகாற் பெருவிரலானது மெதுவாகத் துடிக்கும். பின்பு தேசத்திலுள்ள மயிர்களெல்லாம் சிலிர்ப்புறும், அதன் பின் தலையில் வெப்பங்காணும். அதன் பின்பு தேகமெங்கும் வியர்வை யதிகரித்துண்டாகும். எ...று.

சூட்சும விளக்கம்:- வெளிப்படை. [83]

இதுவுமது

பொங்கியக் கடைவிழி புரண்டு நின்றிடுந்
துக்கமா விழித்தது துலங்கித் தோன்றிடுஞ்
சங்கையாய்த் தனுவெல்லாந் தளத ளப்புறுந்
துச்சமாகச் சுவாசமுந் துலங்கித் தோற்றுமாம்.

......

இதிலும் மேற்கண்ட விதத்தையே சொல்கின்றார்.

(இ-ள்) முன்சொன்னபடி வியர்வை யுண்டானபின் மிருதியாக உள்ளே நுழைந்து கொண்ட கடை விழியான எதாப் பிரகாரம் நேரே திரும்பிநிற்கும். அதன் பின்பு அவ்விழிகள் உயிரிருக்கும் காலத்தில் எப்படியிருந்ததோ அப்படியே பிரகாசித்துத் தோற்றும். பார்ப்பவர்கள் உடனே சந்தேகிக்கும்படியாக வெளுத்துப் போயிருந்த உடம்பெல்லாம் இரத்த ஓட்டமாகித் தளதளப் புண்டாகும். அதன்பின்பு மெதுவாகச் சுவாசமும் நடக்க ஆரம்பிக்கும். எ...று.

சூட்சும விளக்கம்:- வெளிப்படை. 84

இதுவுமது

பூண்டிடும் பற்கடைப் பூட்டு விட்டிடும்
காண்பவர் தன்னையுங் களித்து நோக்குவன்
தேன்றிதழ் வாய்மொழி செப்ப நாவுறும்
கூண்டிடு மாக்களே கூறக் கேண்மினே.

......

இப்பாட்டிலும் மேற்கண்ட குணமே சொல்கின்றார்

(இ-ள்) அதன் பின்பு நெருங்கியிருந்த பற்களினது பூட்டும் விலகி விடும். அது விட்டவுடன் அப்படிப் பிணமா இருந்தவனுக்குத் தன்னறிவு வந்து சுற்றியிருக்கப்பட்ட ஜனங்களைப் பிரியத்தோடு பார்ப்பான். தேன்போன்ற சொற்களைப் பேசுவதற்கு அவனுடைய நாவானது இசையும். அப்போது கூட்டமிடும் மனிதர்களே இன்னும் சொல்வேன் கேட்பீர்களாக. எ...று.

சூட்சும விளக்கம்:- வெளிப்படை. 85

எண்சீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

அற்றையி லவணி லுற்ற
வவனுறன் முறையின் மாக்கள்



பெற்றிடும் பிள்ளை பெண்டிர்
பீடுறுந் தந்தை தாயர்
சுற்றினி லுறைந்தோ ரெல்லாஞ்
சுருக்குட னவனைப் பார்த்து
முற்றுலுங் கேட்குங் கேள்வி
மொழிகுவீ ரவனை யன்றே.

......

இப்பாட்டில் எழுப்பிய பிணத்தினிடமாக உறவின் முறையார் சம்பாஷிக்க வேண்டிய முறைமை கூறுகின்றார்.

(இ-ள்) அப்படி அவன் உயிர்பெற் றெழுந்த அந்தச் சமயத்தில் அவனைச் சூழக் கூடியிருந்த அவனுடைய உறவின்முறையார்கள், அவன் பெற்ற பிள்ளை பெண்டிர், பெருமையுடன் அவனைப் பெற்ற தாய் தந்தையர், இன்னும் பக்கத்திலுள்ள மற்றவர்களனைவரும் ஒன்று கூடி மிகவும் விரைவில் அவனைப் பார்த்து கேட்கவேண்டிய கேள்விகளை யெல்லாம் கேட்டுக் கொள்வார்களாக. எ...று.

சூட்சும விளக்கம்:- விரைவிற் கேட்கவேண்டியவைகளை யெல்லாங் கேட்டுக் கொள்க வென்றதனால் அப்படிப் பிணமாயிருந்து உயிர் பெற்றெழுந்தவன் சிறிது நேரந்தானிருப்பா னென்றும் பின்பு பழையபடி யிறந்து விடுவானென்றும் ஏற்படுகிறது. 86

இதுவுமது

மொழியுமம் மொழிகட் கெல்லா
மறுத்தவன் மொழிவா னின்னம்
நயமுற விண்ட தெல்லா
நன்குற வறிந்து கொள்ளு

தயவுடன் சரீரத் துற்ற
    தனுவெலாங் குறைந்து குன்றி
மொழிகுவன் கடிதை மூன்றே
    முக்காலின் மரண மாவான்.

இப்பாட்டில் முன்சொள்னபடி உயிர்பெற்றெழுந் தவன் பின்னடையும் நிலைமையைச் சொல்கின்றார்.

[இ-ள்]'முற்பாட்டிற்குறித்தபடி கேட்டகேள்விகளுக் கெல்லாம் திருப்பி அவன் மறுமொழி கூறுவான். இன்னும் அவன் தனக்குப் பிற்காலம் நடக்கவேண்டிய விஷயங்களைப்பற்றி]நன்மையாகச் சொன்னதை யெல் லாம் தெளிவாக அறிந்து கொள்ளக்கடவீர்களாக, இந்தப்படியே அவன் உடம்பிலுள்ள ஆயாசமெல்லாம் நீங்கி மூன்றேமுக்கால் நாழிகைவரை பேசிக்கொண் டிருந்து பின்பு பழையபடியே மரணமாகிவிடுவான். எ...று.

சூட்சுமவிளக்கம்: இந்த மருந்தினுடைய வல்லபத் தினாலே யிறந்தவனும் எழுந்து (90) நிமிடம் பேசிக் கொண்டிருப்பானென் றதனால் இம்மருந்தின் பெருமை நன்கு விளங்கிற்று.

சந்த விருத்தம்

அடவான மருந்தி னரும்பெருமை
கடவுளறி வானெவர் காண்பவ ரோ
சடனோய்பிணி தத்துவ மிற்று விழத்
திடமாயெம னென்றிதைச் செப்பிடுவார்.

இப்பாட்டில் மருந்தின் பெருமை கூறுகின்றார்.

[இ-ள்]'கணக்கின்படியே செய்த இந்த மருந்தி னுடைய அரிய பெருமைகளைக் கடவுளே யறிவானல் லது மற்றியாவர் காண்பார். இன்னும் இந்த மருந்தைத்



தேகத்திலுள்ள பிணிகளெல்லாவற்றையும் பலமிழந்து இற்றுப்போகச் செய்வதாகிய பலம் பொருந்திய எம னென்று சொல்வார்கள் .எ—று.

சூக்ஷுமம விளக்கம்:—வெளிப்பமை.

இதுவுமது

கையோடிரு காலுந டுங்கிட வே
மெய்யோடு மிகைத்திடு மேவலி யுந்
தையாகவே வாய்மொழி தான்குழ றும்
வையாவிளம் பிள்ளையின் வாத மரோ.

இப்பாட்டினால் இன்னும் இம்மருந்தாற்றீரும் பல வியாதிகளையுங் கூறுகின்றார்.

[இ-ள்] இன்னும் இம்மருந்தால் கைகளோடு இரண்டு காலும் நடுக்க முறத் தேகமெங்கும் அதிகரிப்ப தாகிய வலிப்பும், பிடிப்பாக வாய்ப்பேச்சைக் குறையச் செய்கின்ற இளம்பிள்ளை வாதமுதலியதுகளும்.எ—று.

சூட்சும விளக்கம்:—வெளிப்படை. 89

இதுவுமது

காலின்கை பிடிப்பொடு கண்டவலி
மேலிற்குடை மீறிய மெய்வலி யுந்
தாலத்தி னடைகெடத் தான்குடை யுஞ்
சூலைக்குல குட்சம கன்றிடுமே.

இப்பாட்டினாலும் மேற்குறித்த விஷயமே கூறு கின்றார்.

[இ-ள்] மேற்சொல்லியதுகளைத் தவிர கால்பிடிப்பு, கைப்பிடிப்பு, தொண்டைவலிப்பு, தேகத்தில் மிகுதி யான குடைச்சலைச் செய்வதாகிய மெய்வலிப்பு, பூமி யில் நடக்கும்படியான நடை கெட்டுப் போகும்படி யாகக் குடைச்சலைச் செய்யும் சூலை வகைகள் ஆகிய

வியாதிகளெல்லாம் வெகு தந்திரமாக நீங்கிப்போயோடி விடும்.

சூட்சும விளக்கம்: வெளிப்படை.

சந்த விருத்தம்

மிகுதுந்துமி டிகுதிண்டிம விரசாயதிர் முரசஞ்
திகுசேகன திகுதாகென வெறியர்குடை நெரிய
நகுமாமணி திகழக்கதிர் நனிசேரெழின் மவுலி
துகையாகிய படைநான்கினிற் றுருசாகிய மூன்றே.

இரசபற்பம்

இப்பாட்டு முதல் வேறு முறை கூறுகின்றார்.

[இ-ள்] மிகுந்த துந்துமி டிகுதிண்டிம வென்பதாக வேகத்தோடு சப்திக்கின்ற முரசும் திருசே, திகுதா வென ஆர்ப்பரிக்கக் குடைகளானவை ஒன்றோடொன்று தாக்கி நெரிபடப் பிரகாசிக்கும்படியான இரத்தினங்கள் விளங்கக் கிரணங்களினது அழகு மிகுதியாகச் சேர்ந் திருக்கும்படியான கிரீடத்தைத் தரித்த அரசர்கள் போர்க்கெழும்போது நெருங்குவதாகியகணக்கையுடைய நால்வகைச் சேனைகளில் வேகமாகிய பின் மூன்றையும். எ—று.

சூட்சும விளக்கம்—எழில் மௌலி யென்பதை அன்மொழித் தொகையாக்கி அரசனெனக் கொள்ளப்பட்டது. இதுவும் அடுத்த பாட்டும் குளகமாகையால் மற்றவை பின் கூறுவார்.

சந்தவிருத்தம்

பலம்வாங்கிடு நிறைமாதர்கண் பதராதேநீ பொறுமின்
பலபேரறிய வறவின்றிய நரரோன்பெயர் தன்னில்
கழறுந்திசை முன்பேர் தம்பி கதியாந்தகர் முறையின்
பிலமாகிய வைந்தோடதைப் பிரியத்தொடு கல்வம்.



இப்பாட்டினால் இம்முறைக்குச் சேர்க்க வேண்டிய சரக்குகளும் நிறையுஞ் சொல்கின்றார்.

[இ-ள்] முன்பாட்டிற் குறித்தபடி நால்வகைச் சேனைகளில் வேகமாகிய பின் மூன்றையும் பலத்தை வாங்கிவிடுவாய். அப்படிப் பலத்தை வாங்கினபின் நின்ற ஒருவகைச் சேனையின் பெயருள்ள ஒரு சரக்கில் நிறைந்த அழகு பொருந்திய கண்களின் அளவு பலமாக வாங்கக் கடவாய். இதன் பின்பு சேர்க்கவேண்டிய சரக்கையும் சொல்வேன். சற்றும் பதராமல் பொறுத்திருப்பாய். நலமும் அறிவுமில்லாத ஒரு மனிதனுடைய பெயரைக் கொண்ட சரக்கில் சொல்லப்பட்ட சமுத்திரத்தின் ஒரு பெயரிலுள்ள முதலெழுத்துக்குத் தம்பியாகிய எழுத்தையும். தகரத்தினது இனமாகிய வெழுத்தின் பலம் பொருந்திய ஐந்தாமெழுத்தையுங் கூட்டி நின்ற பெயரளவு வாங்கி மேற்கண்ட இரண்டு சரக்குகளையுங் கல்வத்திற் போட்டு,எ-று.

சூக்ஷமவிளக்கம்:- இரத, கஜ, துரக,பதாதியென்ற நால்வகைச், சேனைகளில் வேகமாகிய பின் மூன்றையும் பலத்தை வாங்கிவிட நின்ற ஒரு வகைச் சேனையின் பெயராவது முதலிலுள்ள (இரதம் .) இது (இரசம்:) சகரத்துக்குத் தகரம் போலியாக வந்தது. இந்த(இரசம்) என்ற சரக்கில் நிறைந்த அழகு பொருந்திய கண்களினளவு பலமாக வாங்கிகொள்ளவாய். அளவிலே கண்களினளவாவது வலக்கண், இடக்கண் என இரண்டாகையால் அந்த அளவு (இரண்டு) எனறு கொள்ள வேண்டியது. இதைப் பலமாக வென்றதனா (இரண்டு) பலம் எனக் கொள்ளவேண்டியது. பின்பு நலமும் அறிவுமில்லாத ஒரு மனிதனுடைய பெயராவது (மடையன்) இப்பெயருள்ள சரக்கு (வெடியுப்பு.) இந்தப்படி வெடியுப்புக்கு மடையனென்று வழங்குவது வைத்திய நூற்களின் சம்பரதாயம் பின் சமுத்திரத்தின் ஒரு பெயராவது கடல் இதிலுள்ள முதலெழுத்தாவது ககரம். இதற்குத் தம்பியாகிய வெழுத்தாவது ஙா. தகரத்தின் இனமாகிய

எழுத்தாதுவ சகரம். இதிற் பலம் பொருந்திய ஐந்தாமெழுத்தாவது [சு.] ஆக இவ்விரண்டெழுத்துக் களையுங் கூட்ட (காசு.) என்றானது இதனால் (வெடியுப்பு காசிடை] யென் றேற்பட்டது.

ஆகவே இரசம் இரண்டு பலமும் (70 கிராம்) வெடியுப்பு காசிடையும் 4·4 கிராம் வாங்கிக்கொள்ள வேண்டுமென அறியவேண்டியது.

இவற்றுள் நால்வகைச் சேனையென்று பொதுப்படக் கூறியிருப்பினும் மற்ற மூன்றும் சரக்குப்பெயரமையாததாலும் முதலிலுள்ளது ஓர் சரக்கின் பெயர் அமைந்திருப்பதினாலும் முதலினுள்ள இரதந்தானெனக் குறிப்பாற் கண்டு பிடிக்கப்பட்டது. இப்பாட்டின் முதலிலுள்ள பலம் வரீங்கிடு என்ற பதத்தைக் தீபகமாக்கி நிறைக்கும், வலிமைக்கு மாகக்கூட்டிக் கொள்க. சமுந்திரத்திற்குப் பல பெயர்களுள்ளதாயினும் விஷயத்தின் குறிப்பு நோக்கிக் கடலெனக் கொள்ளப்பட்டது. இந்தப் பாட்டின் கடையில் இச்சாக்குகளை வாங்கிப் பிரியத்தோடு கல்வம் என்ற மட்டில் நிறுத்தி யிருப்பதில் மற்றவைகளை யடுத்த பாட்டிற் கூறுவாரென வறிக. இப்பாட்டினால் பின் சொல்லப்போகும் முறைக் குரிய சரக்குகளின் பெயரும் அளவும் இன்ன தெனப் புலப்பட்டது.

விபரம்

| | | |
|---|---|---|
| இரசம் பலம் | (2) | 70 கிராம் |
| வெடியுப்பு காசிடை | | 4.4 கிராம் |

இதுவுமது

மிசைவிட்டுடன் றிரிசாமமாய் விரைவாயரைத்திடுவாய்
தசை விட்டிட வகைவேறினிவில்வேன்மிகப் பொறுமின்
திசையெங்கினு முளையாகவே செறியாக்கறு மலரின்
விசைபெற்றிடு விறலுற்றவன் வியன்சேரிலைச்சாற்றில்

இப்பாட்டில் மேற்குறித்த சரக்குகளிரண்டையும் பின் செய்யவேண்டிய விதஞ் சொல்கின்றார்.



[இ-ள்.] முன் பாட்டிற் குறித்த இரண்டு சரக்குகளையும் அவ்விடத்திற் சொல்லியபடியே கல்லத்திற் போட்டு 9 மணிநேரம் வேகமாய் இரண்டும் மிஸ்ரமிக்கும்படியாக அரைக்கக் கடவாய். அப்படியரைத்த பின்பு செய்ய வேண்டிய மாக்கத்தையும் சொல்வேன் சற்று பொறுப்பாய், பல திக்குகளிலும் முளைத்து நெருங்கிக் கிடப்பதாகிய கருப்பு மலரையுடைய வேகமும். வீரமும், பொருந்திய ஓர்செடியினது இலைச்சாற்றால் எ—று.

சூக்ஷ்ம விளக்கம்:—பல திக்குகளிலும் முளைத்து நெருங்கிக் கருப்புப் பூவையும், வேகத்தையும், வீரத்தையு முடைய செடி யென்றதில் ரூபம், குணம் முதலியவைகளினாலும், முந்தின முறைதனிற் சேர்த்திருக்குங் கிரமத்தாலும் இது (கருப்புவட்டக் கிலுகிலுப்பை) யென நிதானித்தறிய வேண்டியது. இந்த இலைச்சாற்றை யெடுத்துக்கொள்ள வேண்டியது. இதனாற் செய்ய வேண்டிய விதத்தைப் பின் கூறுவார்.

சலிவிருத்தம்

ஆட்டு வாய்தின மொன்றே யடவுடனே
நாட்டம் வேறொன்று நாடா மனத்தினில்
காட்டி வைத்த குருவைக் கருத்தினில்
பூட்டி யேதின மொன்றரை பொற்புடன்.

இப்பாட்டில் முந்திச்சொன்ன சரக்கையெடுத்துச் செய்ய வேண்டிய விபரஞ் சொல்கின்றார்.

(இ-ள்.) முன் சொல்லியேபடி யரைத்த மருந்தில் இந்த வட்டக் கிலுகிலுப்பைச் சாற்றை விட்டுச் சிநேகத்தோடு ஒரு நாள் அரைக்கக் கடவாய். பழையபடியும் வேறொரு எண்ணமு மில்லாமல் இந்த முறைகளை யின்னதெனக் காட்டிக்கொடுத்த குருவை மனதில் நினைத்து ஒன்றரை நாளரைக்கக் கடவாய்.

இதுவுமது

குவலை யத்திற் குருமூலிச் சாற்றினால்
நவம தாக வரைத்திடு நாளொன்று
சவமு ரைத்திடத் தத்துவஞ் செய்கின்ற
பவன மேசெய் மருந்து பணமொன்றே.

[இ-ள்] முன் சொன்னபடி அரைத்த மருந்தைப் பின் செய்ய வேண்டிய விதஞ் சொல்கின்றார்.

[இ-ள்.] முன் சொன்னபடி யரைத்த பின்புக் [குருமூலி] யென்ற திருநூற்றுப் பச்சையிலைச் சாற்றினால் அழகாக ஒருநாள் மட்டும் அரைக்கக் கடவாய். அப்படி யரைத்தபின் இந்தக் காண்டத்தில் 91-ம் பாட்டு முதல் சொல்லி யிருக்கப்பட்ட பிணத்தைப்பேசும் படியாகச் செய்கின்ற மருந்தாகிய துருசுச்சுண்ணத்தை ஒரு பணவெடை யெடுத்துக் கொள்வாய் எ-று.

சூட்சும விளக்கம்:—வெளிப்படை. (95)

கொச்சகக் கலிப்பா.

ஒன்றானமருந்துதன்னையுயர்வாகப்போட்டரைத்து
வன்றாக முன்னவின்றவளையுறு மூசை தன்னில்
நன்றாக வழித்தெடுத்து நவிலக்கேண் மாணாக்கா
தின்றின்பேர்முதலினொடு திகழ்ரகர் ககரினைந்தும்.

இந்தப் பாட்டில் துருசுச் சுண்ணத்தை யெடுத்துப் பின் செய்யவேண்டிய விபரஞ் சொல்கின்றார்.

(இ-ள்.) முன்சொன்னபடி யெடுத்த ஒரு (பண வெடையுள்ள] 483 மி. கிராம் துருசுச் சுண்ணத்தை முன்னுரைத்து வைத்திருக்கிற மருந்தோடெ போட்டு நன்றாயரைத்து இதற்கு முன் முறையிற் சொல்லி யிருக்கப்பட்ட கிளிஞ்சியினாற் செய்யப்பட்ட குகையில் முன் மருந்தை வழித்துப் போட்டுப் பின்செய்ய வேண்டிய விதமுஞ் சொல்வேன். மாணாக்கனே கேட்பாயாக.



தின்று என்ற பேரின் முதலெழுத்தோடு பிரகாசிக்கும் படியான ரகரத்தின் ஐந்தா மெழுத்தையும், ககரத்தின் ஐந்தா மெழுத்தையுங் கூட்டக் கடவாய். அப்படிக் கூட்டினால் ஒரு பெயரமையும் அப்பெயரால் செய்ய வேண்டியதைப் பின் கூறப்படும். எ...று.

சூக்ஷ்ம விளக்கம்:...தின்று என்ற பேரின் முத லெழுத்தாவது (தி.) ரகரத்தின் ஐந்தாமெழுத்தாவது (ரு.) ககரத்தின் ஐந்தாமெழுத்தாவது (கு) ஆக இம் மூன்றையுங் கூட்ட (திருகு) என்றானது. இப் பாட்டும் அடுத்த பாட்டும் குளகமாதலால் இந்த (திருகு.) என்ற பெயரை அடுத்த பாட்டில் பெயரோடு கூட்டி முடித்துக் கொள்க.

இதுவரையில் மேற்கண்டபடி மூசையிற் போட்ட மருந்தைக் கவசிக்க வேண்டியதற்குள்ள ஒரு சரக்குண் டாகும் வஸ்துவின் பாதிப்பெயர் கூறியிருக்கின் றார். (96)

வேறு விருத்தம்

ஏத்திய முதலந்த மிருந்த பேரின்பால்
தோய்த்துச் சீலையிற் றுரித மாகவே
வரய்த்திடு மருந்தின்மேல் வலுமை மற்றொன்று
காய்ந்திடக் கழியினாற் கனக்கப் பூரியே.

.........

இப்பாட்டினால் முன் மருந்தைக் கவசிக்கும் விதங் கூறுகின்றார்.

(இ-ள்.) முன்பாட்டிற் சொன்ன (திருகு) என்ற பெயரோடு உயர்வாகச் சொல்லப்பட்ட முதற்காண்டத் தின் அத்த செந்நூரத்தில் முதலிலுள்ள ஒருதருவினு டைய பெயரைக் கூட்டி எந்தப் பெயரமையுமோ அந்தப் பெயருள்ள பாலில் சீலையைத் தோய்த்து அந்த மூசை யின்மேல் வலுவாகச் சீலைசெய்யக் கடவாய். அதற்கு

மேல் காய்ந்திடும்படியாகக் கழிமண்ணினால் பூசலாய். எ...று.

சூக்ஷம விளக்கம் ;—அந்த செந்தூரத்தின் முதலிலுள்ள ஒரு தருவென்றதை இடக்கிரமத்தாலும் முன்பாதிப் பெயரமைந்திருக்கின்ற குறிப்பாலும், பின்னாலேயால் என்று வருகிறபடியினாலும் அதைக் கள்ளியெனக் கொள்ளப்பட்டது. இதனோடு முந்தின (திருகு) என்றதையுங் கூட்ட (திருகுகள்ளி) யென்றானது. இந்தப் பாலையெ யெடுத்து துணியிற்றோய்த்து மேற்கண்டபடி சிலை செய்யவேண்டியது. (97)

கொரீசகக் கலிப்பா

எருவாம் புடநீ யியற்றுமுழ மொன்றரையே
மருவாமருந்தை மத்தியில்வை சுத்தமுற
எரிதீபரப்பி பேகமுற நீற்றபின்னர்க்
குருவா மருந்தைக் கொம்மையுறக் கையிலெடு.

இப்பாட்டில் மேற்படி மருந்தை புடம் போடும் விதஞ் சொல்கின்றார்.

(இ-ள்.) மேற்கண்டபடி சித்தப்படுத்திய மருந்தை ஒன்றரை முழமாக ஏற்படுத்திய புடந்தயார் செய்து அதற்கு மத்தியில் வைத்துப் பரிசுத்தம் பொருந்தும்படியாக நெருப்பையிட்டு அப்புடம் ஏகமாய்ப் பிடித்து நீற்றுப்போனபின் குருவுக்கு சமானமாகிய மருந்தை அழகு பொருந்தும்படியாகக் கையிலெடுப்பாய்....எ...று.

சூக்ஷம விளக்கம் :...இந்த மருந்து அநேக நன்மைகளைக் கொடுக்கின்ற காரணத்தாற் குருவுக்குச் சமானமென்றார். (98)

எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

கையினா லெடுத்து நன்றாய்க் கவசம் வாங்கக்
கழற வொண்ணா வெள்ளைவண மாகித் தோன்றும்



வையகத்தி லிதன் பெருமை யறியொண் ணாது
மாற்றேது கணக்கேது தொகைதா னேது
ஐயமறச் சூதத் தின் வித்தை தன்னை
யரனாணை யாவருக்கு முரைத்தி டாதே
மெய்யெல்லாஞ் செம்பொன்னின் வணம தாகும்
வேதாந்த ஞான வெளி காட்டி நிற்கும்.

.........

இப்பாட்டில் மேற்கண்டபடி யெடுத்த மருந்தின் பெருமை கூறுகின்றார்.

(இ-ள்.) முன்சொன்னபடி அந்த மருத்தை யெடுத்துக் கையினாலே கவசத்தை நீக்குவாய். அப்படிக் கவசத்தை நீக்கிவிடுவாயானால் அம்மருந்தானது சொல்வதற்கு முடியாத உயர்ந்த வெள்ளை நிறத்தையுடையதாகிப் பிரகாசிக்கும். இப்பூமண்டலத்தில் இதனுடைய பெருமையை யாவராலும் அறியமுடியாது. இம் மருந்திற்கு மாற்றுமில்லை, அளவுமில்லை, விலையுமில்லை. சந்தேகம் நீங்கும்படியாகஇதனாலேற்படும் இரசவாதத் தொழிலை சிவன் மேலாணையாக ஒருவருக்குஞ் சொல்லாதே. இதனால் தேகமெல்லாம் செவந்த தங்கத்தைப்போல அழகுண்டாகும். வேதாந்தத்தின் முடிவாகிய ஞானநிலையையும் இது காட்டும்.

சூட்சும விளக்கம் : இந்த மருந்தையுண்டவுடனே தேகமெல்லாம் பொன்னிறமாகித் திடப்பட்டு ஞான நிலையை யடைவதற்கான யோக்கியதையை யுண்டாக்குமாகையால் ஞான வெளிகாட்டி நிற்குமென்றுங் கூறினார். (99)

கொரச்சகக் கலிப்பா

காட்டிவைக்கும் பரகதியைக்
கத்தாவின் றிருவருளால்

நாட்டிலுள மருந்தையெலா
நடுநடுங்க வாட்டிவிக்கும்
ஏட்டிலிதன் பெருமைதனை
யியற்றிடவே நாவரிதே
மூட்டுபிதன் வேதைசொல்வேன்
மொழியிரு காண்டமுமுற்றே.

---

இப்பாட்டினாலும் மருந்தின் பெருமையே கூறுகின்றார்.

(இ-ள்.) இன்னும் இம்மருந்தானது எல்லாம் வல்ல கடவுளினது திருக்கிருபையால் முத்தித்தலத்தை யடைவதற்கான மார்க்கத்தையுங் காட்டிவைக்கும். நாட்டிலுள்ள மார்க்கத்தையுங் காட்டிவைக்கும். நாட்டிலுள்ள மற்ற எவ்வகைப்பட்ட மருந்துகளையும் இது ஆதாரமாக நின்று ஆடச்செய்யும். இதன் பெருமையை யேட்டிலெழுதவும் முடியாது. நாவினாற் சொல்லவுமரிதாகும். இதனால் செய்யப்பட்ட வேதைகளைச் சொல்வேன். ஆனால் இக்காண்டம் முற்றுப் பெற்றுவிட்டது (அதனால் சொல்லமுடியவில்லை யென்றபடி.) எ—று.

சூக்ஷ்ம விளக்கம் :...இதன் வேதைகளைச் சொல்வேன் காண்டமுடிந்துவிட்டது அதனால் சொல்லமுடியவில்லையென்றதனால் இதைப்பற்றி இந்நூலில் மற்றோரிடத்திற் கூறுவாரென்றறிக. (100)

இக்காண்டத்தி லடங்கிய முறைகள்

தாளகச் சுண்ணம்
கெந்தகத் தைலம்
நாகக்கட்டு.
வீரமெழுகு



துருசுக் கண்ணம்
இரச பற்பம்,

.........

இலக்க சௌமிய சாகரம், முதற்காண்டம்
தேர்ந்தெடுத்த செய்யுட்களும்
தெளிபொருள் விளக்க உரையும்

முற்றிற்று.

கடவுள் துணை

இ-சௌ-சா-இரண்டாங் காண்டம்

## புறநடை

.........

நண்பர்கள்! கடவுள் கிருபையினாலும், பெரியோர்களினது ஆசீர்வாதத்தாலும், நமது அபிமானிகளுட் பலர் செய்து வந்த இடையிடாத் தூண்டுதலாலும் வெகு சீக்கிரமாகவே இந்த இரண்டாங் காண்டமும் பல மகான்களுடைய துணையைக் கொண்டு பூர்த்தி பெற்றது.

இதன் முதற் காண்டத்தில் இந்நூலாசிரியர் எல்லாவற்றிற்கும் காரணமும் குருவுமாயுள்ள அந்த செந்தூரமென்னும் ஒரு முறையை மட்டும் சொல்லி முடித்திருக்கின்றார். இந்த இரண்டாம் காண்டத்திலோ அந்த அந்த செந்தூரத்தின் துணையைக் கொண்டு முடிவ

தாகிய ஆறு முறைகளைக் கூறியிருக்கின்றார். இவைகளும் உலகில் மிகவும் வியக்கற்பாலதே. இவைகளைக் கையாள்பவர்களுக்கே இந்த முறைகளின் அருமையும், பெருமையும் தெரியும். இவைகளை யாரேனுமொருவர் செய்து முடித்துக் கொண்டால் அவரே உலகத்தில் மகா பண்டித ராவார். அம்முறைகளாவன :—

1. தாளகச் சுண்ணம்,
2. கெந்தகத் தைலம்.
3. நாகக் கட்டு.
4. வீர மெழுகு.
5. துருசுச் சுண்ணம்.
6. இரச பற்பம்.

ஆகிய இந்த ஆறு முறைகளுமேயாம். இவைகளை உரையில் விளக்கமாக எழுதி யிருப்பினும் பல விஷயங்களும் சம்பந்தித்திருக்கின்ற காரணத்தால் ஒருவாறு சிலரை மயங்கச்செய்யக் கூடுமாகையால் அவைகளை அந்த மயக்கமு மின்றி யெளிதி லுணர்ந்து கொள்ளுமாறு இங்கு தனித்தனியே ஒவ்வொரு முறையும் விளக்கமாக வசன ரூபமாமெழுதுகின்றோம்.

### தாளகச் சுண்ணம்

தாளகம் (70 கிராம்) (இது ஒரே கட்டியாக இருக்க வேண்டும்.) அந்த செந்தூரம் அரிசியெடை (5) கழுதை மூத்திரம், கௌதும்பைச் சாறு, திருநூற்றுப் பச்சை யிலைச்சாறு, செல்லத்தக்க அளவு.

தாளகக்கட்டி வேண்டிய அளவு, எருக்கின் பால் செல்லத்தக்க அளவு.

செய்முறை :—()யிற் சொல்லிய மேற்கண்ட தாளகக் கட்டியைக் கழுதை மூத்திரத்தில் போட்டு மூன்று நாள் ஊறவைத்துச் சுத்திசெய்து கொள்ளவேண்டும். பின்பு



அக்கட்டியைக் கௌதும்பைச் சாற்றில் மூன்றுநாள் வரைத் தோய்த்துத் தோய்த்துக் காயவைத்து சாறு முழுமையாக தாளகக்கிக் கட்டியிற் செல்லும்படியாக செய்து எடுத்துக் கொள்ளவேண்டும். அதற்குப்பின் திருநூற்றுப் பச்சை யிலைச் சாற்றில் மேற்கூறிய ஐந்து அரிசி யெடை அந்த செந்தூரத்தைச் சேர்த்துக் கலக்கிக் குழம்பு பதமாகச் செய்துகொண்டு முன் தாளகக் கட்டியின்மேல் நன்றாய்ப் பூசி வெயிலிற் காயவைக்க வேண்டும்.

பின் (b) யிற் சொல்லியிருக்கிற தாளகத்தைக் கல்வத்திற் போட்டு எருக்கின் பாலை விட்டு மூன்றுநாள் வரை யரைத்து நன்றாய் மைப்போலானவுடன் அதை யெடுத்துக் குகையும், அதனாலேயே மேல் மூடியும் செய்து அவற்றைக் காலை வெயிலிற் காயவைத்து எடுத்து அந்தக் குகையில் முன் சித்தப்படுத்தி வைத்திருக்கிற தாளகக் கட்டியை வைத்து முதற் காண்டத்தில் அந்த செந்தூரத்திற் சொல்லியிருக்கப்பட்ட சங்குச் சீலையால் பதினைந்து சீலை செய்து கவசமாக்கிக் கொள்ள வேண்டும். இவ்விதம் செய்து கொண்டபின் ஒன்றரை முழப் புடமமைத்து அதன் மத்தியில் இந்தக் கவசத்தை வைத்து நெருப்பிட்டு எரிந்தாறினபின் எடுத்துப் பிரித்துப் பார்க்கப் பிரகாசமான சுண்ணமாகியிருக்கும்.

உபயோகம்:- இது பெரும்பான்மையும் இரசாயனத் திற்கே உதவும். வைத்தியத்திலும் பெரிய குணத்தையே செய்யும். இந்தச் சுண்ணத்தா லாகும் பிரயோசனத்தை யெல்லாம் ஐந்தாங் காண்டத்தின் ஆரம்பத்தில் விளக்கமாகச் சொல்லியிருப்பதால் அங்கு பார்த்துக் கொள்ள வேண்டியது.

14

கெந்தகத் தைலம்

கெந்தகம் (350 கிராம்) தொட்டாற் சுருங்கி யிலைச் சாறு, வெண்குன்றிமணி யிலைச்சாறு, வெங்காயச் சாறு இவை செல்லத்தக்க அளவு, அந்த செந்தூரம் ஒரு களஞ்சி.

செய்முறை:—மேற்படி கெந்தகத்தைக் கல்வத்திற் போட்டு தொட்டாற் சுருங்கி யிலைச்சாற்றை விட்டு ஐந்து நாள் அரைக்க வேண்டும் பின்பு அதை யெடுத்து வெண்குன்றிமணி யிலைச் சாற்றால் ஐந்து நாள் வரை அரைக்கவேண்டும். அதற்குப் பின் அதில் வெங்காயச் சாற்றைவிட்டு பத்து நாள் அரைக்க வேண்டும். அப்படி யரைத்தபின் அதற்கு மேல் முதற்காண்டத்திற் சொல்லி யிருக்கப்பட்ட மேற்கண்ட அந்த செந்தூரம் ஒரு களஞ்சியை 4.4 கிராம். அம்மருந்தின் மீது தூவி ஒரு சாமம் (மூன்று மணி நேரம்)அரைக்கவேண்டும். பின்பு அதனை யெடுத்துப் பில்லை தட்டிக்குப்பியிற் போட்டுப் புடத் தைல மிறக்கிப் பத்திரப்படுத்திக் கொள்ள வேண்டும்.

உபயோகம்:...... இதை மூன்று நாள் சாப்பிட்டால் சகல வியாதியும் தீர்ந்து தேகம் பொன்னைப் போலாகும் அநேக லோகங்களைப் பேதிக்கவுஞ் செய்யும். இவற் றையெல்லாம் உரையில் விபரமா யெழுதியிருப்பதால் அங்குப் பார்த்துக் கொள்ளவும்.

நாகக் கட்டு

(a) நாகம் 70 கிராம் இது ஒரே கட்டியாயிருக்க வேண்டும். வெண்காரம், நவச்சாரம் இவை வகைக்குப் 35 கிராம் சதுரக் கள்ளிப்பால் செல்லத்தக்க அளவு. b) பூநீறு, சாரம் இவை வகைக்கு 35 கிராம் அந்த செந்தூரம் ஒரு பண எடை 488 கிராம்.

செய்முறை:— இவைகளில் a) யிற் சொல்லிய வெண்காரத்தையும், நவச்சாரத்தையும் கல்வத்திற் போட்டுச் சதுரக் கள்ளிப்பாலை விட்டு நன்றாக



அரைத்து மேற்கண்ட நாகக் கட்டியின்மேல்பூசி வெயிலி லுலர்த்தி யெடுத்துக் கொள்ள வேண்டும்.

பின்பு b) யிற் சொன்னபடி பூநீற்றையும், சாரத்தை யும் கல்வத்திற் போட்டு அந்த செந்தூரத்தையும் சேர்த்து அரைக்க வேண்டும். அப்படி யரைத்தால் அது மெழுகு போலாகும். அந்த மெழுகை யெடுத்து முன் சித்தப்படுத்தி வைத்திருக்கிற நாகக் கட்டியின் மேற்பூசி அதன்மேல் சுண்ணாம்புச் சீலை செய்து அதை 6 மணி நேரம் எரிந்தடங்கும்படியான புடம் போட் டெடுக்க நாகங் கட்டிப்போம். இதை யெடுத்துப் பத்திரப் படுத்திக் கொள்ள வேண்டியது.

உபயோகம்:- இது வெள்ளி, செம்பு முதலிய லோகங்களைப் பேதிக்கச் செய்யுமெனச் சொல்லப்பட்டி ருக்கிறது. இதன் விபரத்தை உரையிற் கண்டுகொள்க.

வீரமெழுகு

வீரம் 10.5 கிராம், ஆ தின்னாப் பாளைச்சாறு கரித்தகரைச் சாறு, கோடக சாலைச்சாறு, கர்ப்பூரவள்ளி யிலைச்சாறு, கரந்தையிலைச் சாறு இவை செல்லத்தக்க அளவு இக்காண்டத்திற் சொல்லியிருக்கும் கெந்தகத் தைலம் விராகனெடை (3.5 கிராம்.)

செய்முறை:- ஆடுதின்னாப்பாளைச் சாற்றை ஒரு பீங்கான் பாத்திரத்தில் இட்டு வீரக்கட்டியை அதில் போட்டு வெயிலில் வைக்கவேண்டும். அந்தச் சாறெல் லாஞ் சுண்டிக் காய்ந்தபின் பழையபடியும் ஒரு நாளைக்குள் மேற்படி வீரக்கட்டியிழுத்துக் காய்ந்து விடும்படியான அளவு ஆடுதின்னாப்பாளைச் சாற்றை விட்டு வெயிலில் காயவைத்துக் காய்ந்த பின்னெடுத்து பழையபடியும் மேற்படி வீரக்கட்டியை மேற்படி ஆடு தின்னாப்பாளைச் சாற்றிலேயே தோய்த்துத் தோய்த் துக் காயவைத்தெடுக்க வேண்டும். (அதாவது வேண்டிய

அளவு மேற்படி சாற்றை ஒரு பீங்கானில் வைத்துக் துக்கொண்டு வீரக்கட்டியை அதில் நனைத்தெடுத்து வேறு பீங்கானிலிட்டு வெயிலில் வைத்துக் காய்ந்தபின் பழையபடியும் நனைத்துக் காயவைக்கவேண்டும். இந்த விதமாகவே மூன்றுநாள் வரை செய்யவேண்டும்.)

பின்பு அந்த வீரக்கட்டியை யெடுத்து ஒரு பீங்கான் பாத்திரத்திற்போட்டு அது நிறைய கரித்தகரைசாற்றை விட்டு மூன்றுநாள் மட்டும் வெயிலில் காயவைக்க வேண்டும். அப்படி வைத்தால் மேற்படி வீரக்கட்டி மேற்படி சாற்றை யெல்லா மிழுத்துக் கொள்ளும். பின்பு அந்த வீரக்கட்டியை ஒரு பீங்கான் நிறையக் கோடக சாலைச் சாற்றைப் பிழிந்து வைத்துக்கொண்டு அந்தச் சாறு தீருமட்டும் அதில் நனைத்து நனைத்து மூன்று நாள்வரை காயவைத்தெடுத்துக் கொள்ளவேண்டும்.

பின்பு அதனை யெடுத்துக் கல்வத்திற் போட்டு கற்பூரவள்ளி யிலைச் சாற்றைச் சாற்றை சிறுகச் சிறுக விட்டு இரண்டு நாள்வரை யரைத்து அதை யெடுத்து வெயிலில் 3 மணி நேரமோ ஒரு சாமமோ வைக்க வேண்டும். பின் அதையெடுத்துக் கரந்தையிலைச் சாறு சிறுகச் சிறுகவிட்டு அரைத்து சாறும் மருந்தும் ஒன்றாய் மிஸ்ர மிக்கும் சமயத்தில் கெந்தகத் தைலத்தை அதில் விட்டு அரைக்கவேண்டும். அப்படி யரைத்தால் அது மெழு காகும். அதை யெடுத்து எருமைக் கொம்புச் சிமிழிற் பத்திரப்படுத்தவேண்டும்.

உபயோகம்:—அநேக விதமான லோகங்களை இது பேதிக்கச் செய்யும். வாதத்திற்கு இது முக்கியமானது. இதன் விபரங்களை உரையில் தெளிவாகக் கண்டு கொள்க.

### துருசுச் சுண்ணம்

துருசு பலம் 105 கிராம்(இது ஒரே கட்டியாயிருக்க வேண்டும்) செம்பரத்தம்பூ, எலுமிச்சம் பழச்சாறு இவை



செல்லத்தக்க அளவு, இக்காண்டத்தில் இதற்குமுன் சொல்லிய கெந்தகத் தைலம் இரண்டு விராகன் எடை (7 கிராம்) வீரமெழுகு இரண்டு பணவெடை 976கிராம். கும்பிடுகிளிஞ்சி, சதுரக் கள்ளிப்பால் இவை செல்லத் தக்க அளவு.

செய்முறை:—ஒரு பாத்திரத்தில் எலுமிச்சம் பழச் சாற்றை விட்டு அதில் செம்பரத்தம் பூவைப் போட்டு 36 மணி நேரம் ஊறவைக்க வேண்டும். பின்பு அதில் துருசுக்கட்டியை யெடுத்துப் போட்டு நன்றாய்ப் புரட்டி யெடுத்து வேறு பாத்திரத்தில் வைத்து வெயிலிற் காய வைக்கவேண்டும். அந்தக் கட்டிக் காய்ந்தபின் பழைய படியும் சாற்றில் தோய்த்து காயவைக்க வேண்டும். இந்த விதமாகவே மூன்றுநாள்வரை செய்து கொள்ள வேண்டும்.

இப்படிச் செய்த துருசுக் கட்டியைப் பழையபடியும் செம்பரத்தம் பூவை எலுமிச்சம் பழச்சாற்றில் ஊறப் போட்ட கலவையில் முன்சொன்னதுபோலவே மூன்று நாள் வரை செய்து கொள்ள வேண்டும். இப்படி செய்வதினால் துருசிற்கு வேகம் அதிகரித்து விடும். ஆனால் இப்படிச் செய்வதால் துருசிற்குள்ள சிவப்பு நிறமானது மாறிப் போகக் கூடாது. மாறினால் இம்முறை கெட்டுப் போகும்.

பின்பு கெந்தகத்தை தைலத்தையும் வீரமெழுகை யும் எடுத்து இரண்டையும் ஒன்றாகக் கலக்கி முன் சித்தப்படுத்தி வைத்திருக்கிற துருசுக் கட்டியின்மேற் பூசி வெயிலிற் காயவைத்தெடுத்துக் கொள்ளவேண்டும்.

இதற்குப்பின் கும்பிடுகிளிஞ்சில்களை மேலேயி ருக்குங் கறுப்பு நிற முதலியவைகளை நீக்கிச் சுத்தி செய்து கல்வத்திற்போட்டு அதிற் சதுரக்கள்ளிப்பாலை விட்டுப் பலமாயரைத்து அது மைப் போலானவுடன் அதையெடுத்து மூசை செய்து அதனாலேயே மேல் மூடியும் செய்து காயவைத்துப் பின்பு அதை மூசை யில் முன்சித்தப்படுத்தி வைத்திருக்கிற துருசக்கட்டியை

வைத்து மேல்மூடியால் மூடி அதன்மேல் முன் மூசை செய்த இந்தக் கும்பிடுகிளிஞ்சிற் குழம்பினால் இருபது சீலை செய்து அதன் மேலும் மேற்படி குழம்பை நன்றாய்ப் பூசி வைத்துக் கொள்ளவேண்டும்.

பின்பு இந்தக் கவசத்தை இரண்டுமுழ உயரம் விராட்டிகளை யடுக்கி அதன் மத்தியில் வைத்துப்புடத்தில் இடைவெளி முதலியவையில்லாதபடி செய்துநெருப்பிட்டு எரிந்தடங்கினபின் எடுத்துக் கலசத்தைப் பித்துப் பார்க்கத் திவ்யமான வெள்ளை நிறமாகிய சுண்ணமாகி யிருக்கும், இதை யெடுத்து இரும்பினால் செய்த ஓர் சிமிழிற் பத்திரப்படுத்த வேண்டும்.

உபயோகம்:—உலகத்தில் தீராதென்று கைவிட்ட சகல வியாதிகளும் தீரும். இந்த மருந்தினால் உயிர் நீங்கியபிணத்தையும் எழுந்து 90 நிமிடம் பேசவைக் கலாமெனச் சொல்லியிரு கின்றார். இவ்விபரங்களை யெல்லாம் உரையிற் பார்த்துக் கொள்ளவும்.

### இரச பற்பம்

இரசம் (70 கிராம்) வெடியுப்பு (4.4 கிராம்) கருப்பு வட்டக் கிலுகிலுப்பைச்சாறு, திருநூற்றுப்பச்சையிலைச் சாறு இவை செல்லத்தக்க அளவு, இதற்கு முன் சொல்லி யிருக்கிற துருசுச் சுண்ணம் பணவெடை 488 கிராம் திருகு கள்ளிப் பால் செல்லத்தக்க அளவு.

செய்முறை:—இரசத்தையும், வெடியுப்பையும் ஒன்றாகக் கல்வத்திற்போட்டு இரண்டும் நன்றாய் மிஸ்ரமிக்கும்படியாக 9 மணிநேரம் அரைக்கவேண்டும். அப்படி யரைத்தபின் அதில் கருப்பு வட்டக்கிலுகிலுப்பைச்சாற்றைச் சிறுகச் சிறுகவிட்டு ஒருநாள் அரைக்க வேண்டும். பின்பு அதில் திருநூற்றுப்பச்சை யிலைச் சாற்றைவிட்டு ஒருநாள் மட்டும் அரைக்கவேண்டும்.

அதன்மேல் துருசுச் சுண்ணத்தை அதிற்போட்டு நன்றாய் மிஸ்ரமிக்கும்படி யரைத்து வழித்தெடுத்து



இதற்கு முன்முறையிற் சொல்லியிருக்கப்பட்ட கிளிஞ்சற் குகையிற்போட்டு மேல் மூடியால் மூடி திருகு கள்ளிப் பாலினால் அதற்குமேல் சீலைசெய்து அதன்மேற் கழிமண்ணைப் பூசி உலர்த்திக் கொள்ள வேண்டும்.

பின்பு இந்தக் கவசத்தையெடுத்து ஒன்றரை முழ உயரம் எருவடுக்கிப் புடஞ் சித்தப்படுத்தி அதன் மத்தியில் வைத்து நெருப்பிட்டு எரிந்தடங்கினபின் கவசத்தை எடுத்துப் பிரித்துப் பார்க்க உயர்ந்த வெள்ளை நிறமான பற்பமாகியிருக்கும் பின்பு இதனை யெடுத்தப் பத்திரப் படுத்தவேண்டும்.

உபயோகம் :—இந்த மருந்தால் சகல வியாதிகளும் தீர்ந்து தேகமானது தங்கத்தைப்போல் பிரகாசிக்கும். இன்னும் ஆச்சரியப்படத்தக்க பல சிறந்த குணங்களையுஞ் செய்யுமெனக் கூறியிருக்கின்றார். அவற்றையெல்லாம் உரையிற் பார்த்துக் கண்டுகொள்க. இன்னும் இந்த மருந்தினுடைய வேதைகளை நான்காவது காண்டத்தின் முதலிற்கூறி யிருப்பதினால் அங்கும் பார்த்துத் தெரிந்துகொள்க.

மேற்கண்ட முறைகளை யிங்கு விபரமாக யாவருமறியும் பொருட்டு எழுதியிருப்பினும் செய்யத் தொடங்குவோர் சுலபமாய்ச் செய்துகொள்ளக்கூடும். ஆயினும் வைத்தியத்தில் அனுபவ மில்லாதவர்களுக்குச் சில விஷயங்களில் மயக்கமுண்டாகுமாதலால் அத்தகையினர் அனுபவசாலிகளிடம் கேட்டுத் தெரிந்துகொள்வது நலம்.

இந்நூலாசிரியர் ஒவ்வொரு முறைகளைச் சொல்லி அவற்றின் வேதைகளை ஆங்காங்கே கூறாது சிலவற்றிற்கு வேறுவேறு காண்டங்களிற் கொண்டு போய்ச் சொல்லியிருப்பதானது ஒவ்வொரு காண்டமும் நூறு பாக்களில் முடியவேண்டி யிருப்பதால் ஒருமுறை பாக்கியாயிருக்கும்போதே காண்டம் முடிவு பெற்றுப் போவதால் அங்கு சொல்ல இடமில்லாமையாலும், இதிற்

பிரவேசிப்பவர் இந்நூல் முழுதும் பார்க்க ஆவலுண்டாக வேண்டுமென்னும் எண்ணத்தினாலுமாம்.

விண்ணப்பம்

கனவான்களே! இத்தோடு இந்த இரண்டாங் காண்டமானது முடிவுபெற்றது. உலக நலத்தைக் கருதியும் நமது நண்பர்களுடைய இடைவிடாத் தூண்டு தலுக்கிணங்கியுமே முதற்காண்டத்தை யச்சிட்டு வெளிப் படுத்தியதனாலுண்டாகிய தேகசிரமம், பொருட்செலவு, மாறா முயற்சி யிவைகளாலேற்பட்ட கஷ்டமானது தீருவ தற்கு முன்னரே இந்த இரண்டாங் காண்டத்திலும் பிரவேசித்து மிகவும் பிராயசத்தோடு சில தினங்களுக் குள்ளேயே அச்சிட்டு வெளிப்படுத்தினோம். இவற்றில் நாம் எடுத்துச்கொண்ட சிரமம் இக்காண்டங்களை வாசித்துப் பார்க்கும் ஒவ்வொரு அபிமானிகட்கும் நாம் எடுத்துச் சொல்லாமலே நன்கு விளங்கும்.

ஆதலால் நமது நேயர்களை முன்னிட்டே இவ்வளவு கஷ்டப்பட்டு விரைவிலச்சிட்டு வெளியாக்கிய இப்புத்த கங்களை ஒவ்வொருவரும் வாங்கிப் பார்த்து இதற்குமுன் நம்மால் வெளிப்படுத்தியிருக்கின்ற பல கிரந்தங்களை யும் தருவித்துப் பார்த்து நன்கு மதித்திருப்பதுபோலவே இக்கிரந்தங்களையும் நன்குமதித்து நம்மைக்களிப்படுத்து வதோடு இதன் மற்ற காண்டங்களும் தாமதமில்லாது வெளியாவதற்கான முயற்சியையுங் கைக்கொண்டு அவை இனிது முடியுமாறு நான் பிரார்த்திப்பது போலவே நீங்களும் எல்லாம் வல்ல கடவுளைப் பிரார்த்திக்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன். சுபம்! சுபம்!! சுபம்!!!

புறநடை முற்றுப் பெற்றது

கடவுள் துணை.

# இலக்க சௌமியசாகரம்

தேர்ந்தெடுத்த செய்யுட்களும்,

தெளிபொருள் விளக்க வுரையும்.

மூன்றாவது நான்காவது காண்டம்.

---

இஃது

யூதாநி வைத்தி

தாருட்ய விருத்தி போதின முதலிய

பல வைத்திய சாஸ்திர கிரந்தகர்த்தகர்த்தாவாகிய

ஹக்கீம்

பா. முஹம்மது அப்துல்லா சாஹிபு

அவர்களால்

---

சென்னை:

முஸ்லிம் அபிமானி அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப் பட்டது.

FIRST EDITION.

1907ஸு

Rigistered Copyright

கைவிலை ரூ. 0-14-0 வி-பி ரூ. 1-0-0

# முகவுரை

கனவான்களே

இந்த இலக்க செளமிய சாகரமென்னும் நூலினது பெருமை இதன் முற்காண்டங்களின் முகவுரைகளினாலும் இதற்கு முந்திய இரண்டு காண்டங்களையும் வாசித்துப் பார்த்திருப்பதனாலும் ஒவ்வொருவருக்கும் நன்கு விளங்கியிருக்குமாதலினால் அதைப்பற்றி நாமிங்கு விரிவாயெழுத வேண்டியதனாவசியம்.

இந்த மூன்றாம் நான்காம் காண்டங்களும் முந்தின காண்டங்களுக்குக் குறைவுபட்டதல்ல. அவைகளைக் காட்டிலும் இக்காண்டங்களில் அநேக சிறந்த முறைளடங்கி யிருக்கின்றன. இவைகளிலுள்ளஒவ்வொரு முறைகளும் மிகவும் வியக்கத்தக்கதும் அருமையானதுமாம். இவைகளிற் சொல்லி யிருக்கின்ற முறைகளிற் சில செந்தூர வர்க்கங்கள் அஞ்சனமுதலானவைகள் எவர்க்குங் கிடைக்கத்தக்கனவல்ல. அவைகளாலேற்படும் பிரயோசனங்களோ எழுதிமுடியாது, இன்னும் இவைகளின் பெருமையைப்பற்றி யெழுதுவதென்றால் தற்பெருமையாக முடியும். இக்காண்டங்களை வருத்தி வாசித்துப் பார்ப்பவர்களுக்கு இவைகளின் பெருமை தானே விளங்குமாகையால் இதைப்பற்றி நாம்அதிகமாயெடுத்தெழுத வேண்டியதில்லை.

இத்தகைய இவ்விரண்டு காண்டங்களையும் முற்காண்டங்கள் வெளிப்பட்ட சில தினங்களுக்குள்ளேயே கடவுளினது கிருபையை முன்னிட்டு பெரியோர்களினது ஆசீர்வாதத்தைக்கொண்டும் பல புண்ணியவான்களின் பேருதவியாலும் பலர் செய்தவந்த இடைவிடாத தூண்டுதலாலும் உலோகோபகாரச் சிந்தையாலேற்பட்ட பெரிய ஊக்கத்தாலும் சிரமத்தையெதிர்பாராது பிரயாசத்தோடு விரைவிலச்சிட்டு வெளிப்படுத்தினோம்.



இன்னும் மற்றக் காண்டங்களும் இவ்வாறே வெளிவரும் இவைகளில் நாமெடுத்துக்கொண்டிருக்கிற பிரயாசையும், பணச்செலவும். தேக சிரமமும், மனோவலைச்சலும் இல்வளவினதென இக்காண்டங்களை வாசித்துப் பார்க்கும் நற்குணமுடைய நமது நண்பர்கட்கு நவிலாமலே நன்கு விளங்கும்.

ஆகலினாலே நமது அபிமானிகளாகிய எல்லீரும் நாம் இதற்குமுன் அச்சிட்டு வெளிப்படுத்தி யிருக்கின்ற பல கிரந்தங்களையும் நன்கு மதித்து மனமுவந்து வாங்கி மாறா மகிழ்ச்சியை வளர்வித்துவருவதுபோலவே இக்காண்டங்களையும் இசைந்து வாங்கியெப்பொழுதும் இடைவிடாத இன்பத்தை ஏற்படுத்துவீர்களெனஎண்ணுவதோடு எல்லாம் வல்ல கடவுளை இடைவிடாது இறைஞ்சுகின்றேன். இதற்கு முற்காண்டங்களையும் ஒன்றாகச் சேர்த்துப்பயிண்டுசெய்யப்பட் டிருப்பதோடு உலகநலத்தைக் கருதி சிரமத்தை யெதிர்பாராமல் விலையுஞ் சுலபமாகவே யேற்படுத்தியிருக்கிறது.

கடவுள் துணை.

# இலக்க செளமிய சாகரம்
# தேர்ந்தெடுத்த செய்யுட்களும், தெளிபொருள் விளக்க வுரையும்
## மூன்றாங் காண்டம்.

### காப்பு

எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

வரைபுவியுந் தினகரனு மதிய மோடு
வடிகசியு மிடிநசியும் வயங்கு தேவர்
இரைபுவியுங் காண்டகமுந் துடவை சோகு
மிருளையொடு வெருள்வலியு மிலைந்ததேவுந்
திரைபுவியுங் குடிலமொடு சீவ செந்துஞ்
சணத்திலே படைத்தழிப்போன் சிறப்பி லானக்
கரைபுரள மூந்நூற்றின் மருந்து சொல்லக்
கண்ணோக்கு மிடமெங்குங் கத்தன் காப்பு.

இப்பாட்டில் எடுத்தகாரிய மினிது முடியுமாறு எல்லாம் வல்ல கடவுளைத் துதிக்கின்றார்.

(இ-ள்.) இதற்கு முன் சொல்லிவந்த இந்த இலக்க செளமிய சாகரத்தின் இரண்டு காண்டங்களைப் போலவே இந்த மூன்றாங் காண்டத்தைஞ் சொல்லு தற்குச் சப்த குல பர்வதங்களையும் புவனங்களையும், சூரிய சந்திரர்களையும், அந்த காரத்தையும், இன்ப துன்பங்களையும், இந்திரன் முதலாகிய பல தேவர் களையும், சுவர்க்க முதலாகிய பலலோகங்களையும், சப்த தீவுகளையும், பல வனாந்திரங்களையும், எறும்பு முதல் யானை யீறாகவுள்ள பல ஜீவராசிகளையும், மானிடர்களையும் நிமிஷ நேரத்தில் படைத் தழிக்கத் தக்கவரும், எங்கும் வியாபகராயு முள்ள கடவுளே காப் பாராக எ—று.



சூக்ஷும விளக்கம்:—வெளிப்படை. 1

இதற்கு முந்திய இரண்டாங் காண்டத்தில் வைத் தியத்திற்கும் வாதத்திற்கும் இன்றி யமையாததாகிய சில முறைகளைக் கூறிமுடித்தார். இனி இந்த மூன்றாங் காண்டத்திலும் அவைகள் போன்ற அருமையான சில முறைகளைச் சொல்கின்றார்.

### நூல்

சந்தவிருத்தம்

சகர்தம்பியு நாளின்பெயர் தனிலேதலைக் குறைக்
ககரின்னிறை கருவாகவே கழஞ்சியெடுத் திடுமின்
செகமீதினி லுறுமாக்களே திறமாகவே யறிமின்
புகல்வேல்வகை யிதுவன்றியே பொன்னின்
வகையுண்டோ

—

### காந்தக்களங்க செந்தூரம்

இப்பாட்டில் ஓர் சரக்கின் பெயரும் அளவுங் கூறுகின்றார்.

(இ-ள்) சகரத்துக்குத் தம்பியாகிய வோரெழுத்தி னோடு நாள் என்ற சொல்லுக்குப் பிரதி பதமாயுள்ள வோர் சொல்லைத் தலைக்குறையாக்கி நின்ற பதத்தை சேர்க்க எப்பெயரமையுமோ அந்தப் பெயருள்ள சரக்கில் ககரம் என்று சொல்லப்படுவதாகிய லக்கத்தின் அளவு கழஞ்சியாக எடுக்கக் கடவீர். பூலோகத்திற் பொருந்திய மானிடர்களே! நான் சொல்வதை யுற்றுணர்விர்களாக. இதைக் காட்டிலும் பொன்னைச் செய்யுமார்க்கம் வேறுண்டோ? எ—று.

சூக்ஷும விளக்கம்:— சகரத்துக்குத் தம்பியாகிய வோரெழுத்தாவது (சா) நாள் என்ற சொல்லுக்குப் பிரதிபதமாயுள்ள வோர் சொல்லாவது வாரம். இதைத்

தலைக்குறையாக்க நின்ற பதம் (ரம்). ஆக இவ்விரண்டையுங் கூட்ட (சாரம்) என்றானது. இதை (நவச்சார) மெனக் கொள்க. ககர மென்னும் இலக்கமாவது ககரம் வரி வடிவில் ஒன்றாததால் அதை ஒன்றெனக் கொள்ள வேண்டியது. இதைக் கழஞ்சியாக எடு. எனவே ஒரு கழஞ்சி யென்றானது. ஆகவே இதனால் (நவச்சாரம் கழஞ்சி ஒன்று) எடுக்கவேண்டுமென அறியவேண்டியது.

விபரம்

நவச்சாரம் கழஞ்சி—1

இதுவுமது

மாதம்மது தைமாசியில் வரைந்தேயெழும் பூமி
நாதம்மதைச் சமனாயெடு நவில்வேனினிப்பொறுமின்
போதம்முற விதுரெண்டையும் புகழாகிய கல்வ
மீதிற்றிற முடனாட்டிநீ விகுவாவழித் ததுவை

——

இந்தப் பாட்டில் இம்முறைக்காம் மற்றோர் சரக்குச் சொல்கின்றார்.

(இ-ள்) தை, மாசி, மாதங்களில் அளவாக உண்டாகிப் பிரகாசிக்கப்பட்ட பூமி நாதமென்று சொல்லப்படுவதாகிய ஓர் சரக்கையும் முந்தின பாட்டில் கூறிய சரக்கினளவே சமனாக வெடுத்து இவ்விரண்டையும் அறிவோடு சிறந்த கல்வத்திற் போட்டுப் பலம் பொருந்தும் படியாக அரைக்கக் கடவிர். அப்படி யரைத்தபின் அதை வழித்தெடுத்துக் கொள்வீர்களாக. இனிச் செய்யும் மார்க்கத்தையுஞ் சொல்வேன் சற்றுப் பொறுப்பீர். எ—று.

சூக்ஷ்ம விளக்கம்:—தை, மாசி மாதங்களில் உண்டாகப்பட்ட பூமிநாத மென்று சொல்லப்படுவதாகிய சரக்காவது (பூநீறு) இதைத் தை, மாசியிலுண்டாகு மென்ற குறிப்பினாலறியப்பட்டது. முன்சரக்கினள



எடு என்றதினால் இதுவும் ஒரு கழஞ்சியென அறிய வேண்டியது. ஆகவே முன் பாட்டில் சொன்னபடி (நவச்சாரம் ஒரு கழஞ்சியும், பூநீறு ஒரு கழஞ்சியும்) எடுத்து கல்வத்திற் போட்டு அரைக்கவேண்டுமென வறிக.

விபரம்

பூநீறு கழஞ்சி-1 4.4 கிராம்

அரைப்பு 1

உயிர்பெற்றிட வலுவுற்றிடு முயர்வாகிய மருந்தின்
நயமுற்றிட வரிசியிடை நண்பாயதிற் கலக்கிப்
பயமுற்றிடப் பனிமுன்பினிற் பண்பாகவைத் திடு
செயமாகிய செயநீரிது செய்யும்வகை சொல்வேன்.

——

இப்பாட்டினால் முன்னரைத்த மருந்தை யினிச் செய்யும் விதங் கூறுகின்றார்.

(இ-ள்) முன்சொன்னபடியரைத்து வழித்தெடுத்து வைத்திருக்கிற மருந்தில் இறந்துபோன பிணத்தையும் உயிர் பெற்றெழச் செய்வதாகிய வல்லமை பொருந்திய ஓர் மருந்தில் ஒரு அரிசியெடை யெடுத்துப் போட்டுச் சிநேகத்தோடு கலக்கி மிகுந்த ஜாக்கிரதையோடு பனியில் வைக்கக்கடவாய். அப்படி வைத்தால் அது செயநீராகும். இதை யினிச் செய்யவேண்டிய வகையைப் பின்சொல்வேன் கேட்பாயாக.

சூக்ஷ்ம விளக்கம்:— உயிர்பெறச் செய்வதாகிய மருந்தாவது இரண்டாங் காண்டத்திற் சொன்ன துருசுச் சுண்ணம். இந்தத் துருசுச் சுண்ணத்தையே முன்னரைத்து வைத்திருக்கிற மருந்தோடு சேர்த்துக் கலக்கிப் பனியில் வைக்க வேண்டியது. மற்ற விபரங்கள் பின் கூறுவார்:

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

வீத மெனும்பேர் முதல்ரகரும்
　　வின்வேன் மகரின் கடையினமுங்
கா த மெனும்பேர் முதல்ரகரருங்
　　காட்டு மகரின் கடையின முந்
தாத மெனும்பேர் முதல்ள கருங்
　　ககர மகரத் தனிக்கடையும்
வித முறவே பணவெடைதான்
　　வியன்சேர் கல்வ மிசையாக்கி.

---

இப்பாட்டில் முன்செய்த செயநீரை யெடுத்துக் கொண்டு பின் செய்யவேண்டிய தற்கான சில சரக்கு களும் அவற்றின் பெயர், நிறை முதலிய விபரங்களும் கூறுகின்றார்.

(இ-ள்) வீதமென்னும் பெயரின் முதலெழுத்தோடு ரகரத்தையும், மகரத்தின் கடையெழுத்தையும் சேர்த் தால்எப்பெயரமையுமோ அப்பெயருள்ளஓர் சரக்கும்காத மெனும் பெயரின் முதலெழுத்தோடு ரகரத்தையும், மக ரத்தின் கடையெழுத்தையும் சேர்த்தால் எப்பெயரமை யுமோ அப்பெயருள்ள சரக்கும்,தாதமென்னும் பெயரின் முதலெழுத்தோடு ளகரத்தையும், ககரத்தையும் மகரத் தின் கடையெழுத்தையும் சேர்த்தால் எந்தப் பெயரமை யுமோ அந்தப் பெயருள்ள சரக்கும் வகை ஒன்றுக்கு ஒரு பணவெடை யெடுத்து ஆச்சரியம் பொருந்திய அளவிற் போட்டு. எ...று.

சூக்ஷ்ம விளக்கம்:- 1. வீதமெனும் பெயரின் முதலெழுத்தாவது (வீ) ரகரமாவது (ர) மகரத்தின் கடையெழுத்தாவது (ம்) ஆக இம் மூன்றையுஞ் சேர்க்க (வீரம்) என்றானது. இதுவே முதலிற் கூறியதென வறிக.



2. காதமென்னும் பெயரின் முதலெழுத்தானது. (கா) ரகரமாவது (ர) மகரத்தின் கடையெழுத்தாவது (ம்) ஆக இம்மூன்றையும் சேர்க்க காரம் என்றானது. இதுவே இரண்டாவது சொன்னதெனலறிக.

3. தாதமெனும் பெயரின் முதலெழுத்தாவது(தா). ளகரமாவது (ள) ககராவது (க) மகரத்தினகடை யெழுத் தாவது (ம்) ஆக இந்நான் கையுஞ் சேர்க்க (தாளகம்) என்றானது. இதுவே மூன்றாவது கூறிய தெனவறிக.

இவைகளில் இரண்டாவது சொன்னது (காரம்) என விருப்பினும் அதை (வெண்கார) மெனக் கொள்ள வேண்டியது.

ஆகவே மேற்கூறியபடி (வீரம்) (வெண்காரம்) (தாளகம்) இம்மூன்றிலும் வகை ஒன்றுக்கு ஒரு பண வெடை யெடுத்துக் கல்வத்திற் போடவேண்டுமென ஏற்பட்டது.

விபரம்

| | |
|---|---|
| வீரம் பணவெடை | 488 மி.கி. |
| வெண்காரம் பணவெடை | 488 மி.கி. |
| தாளகம் பணவெடை | 488 மி.கி. |

இதுவுமது

சொல்லுஞ் செயநீர் விடுத்தரைத்துச்
　　சுருக்கில் வழித்துச் சூழ்ச்சியுறக்
கல்லிற் கருவா யுதித்தெழுந்த
　　கனத்தோன் ககரின் றம்பியொடு
வெல்லுந் தலைமைச் சாகரத்தின்
　　விளம்புஞ் சரக்கெட் டதன்பேரு
இல்லை முனம்நீ பலமிரண்டை
　　யியல்பா வாங்கு வயமாக.

---

இப்பாட்டினால் இம்முறையின் மூலச்சரக்கின் பெயரும் நிறையுங் கூறுகின்றார்.

(இ—ள்) முன்பாட்டிற்குறித்த மூன்று சரக்குகளையுங் கல்வத்திற்போட்டு முன் 4-ம் பாட்டிற் சொன்ன செயநீரை விட்டரைத்து விரைவாக வழித்தெடுத்துக் கொண்டு கல்லிலிருந்துண்டாகிப் பிரகாசித்துப் பலம் பொருந்தியதும், ககரத்தின் றம்பியாகிய வோரெழுத்தினோடு எட்டு சரக்கினைக்கொண்ட ஓர் முறையினது பெயரின் முதலெழுத்தை நீக்கிவிட்டு நின்ற பதத்தைச் சேர்த்தால் எப்பெயரமையுமோ அப்பெயருள்ளதுமான ஓர் சரக்கில் இரண்டுபலம் வாங்கக்கடவீர்களாக,எ...று.

சூட்சுமவிளக்கம்:...ககரத்தின் தம்பியாகிய வொரெழுத்தாவது (கா) எட்டுச் சரக்குகளைக் கொண்ட ஓர் முறையாவது இந்த நூலின் முதற்காண்டத்திற்சொன்ன அந்த செந்தூரம். இதை அந்தம் என்று சொல்லப்படும் இந்த அந்தம் என்ற பெயரில் தலைக்குறையாக்க நின்றது [ந்தம்] முன்சொன்ன [கா]வையும் இதையும் சேர்க்கக் (காந்தம்] என்றானது. இதுவே மேற்குறித்த சரக்காம். இதைச் செய்யவேண்டிய விபரம் பின் கூறுவார்.

விபரம்

காந்தம் பலம் 270 கிராம்

இதுவுமது

வாங்கு பலம்ரெண் டதன்மீதில்
வழித்த மருந்தை மேற்பூசி
மூங்கை தனிலே யமர்ந்தவெழின்
மூசை யதனி னுட்படுத்தித்
தீங்கை யகற்றச் செய்விபரந்
திறமாச் சொல்வே னினிக்கேளு



பாங்கா யுலையி னுட்படுத்திப்
பரிவா மருந்தை யூதிடுவாய்.

இப்பாட்டில் முன்பாட்டில் சொன்ன மூலச்சரக்காகிய காந்தத்தைப் பின்செய்ய வேண்டிய விபரங் கூறுகின்றார்.

[இ-ள்[ முன்பாட்டில் குறித்தபடியே இரண்டுபலம் காந்தத்தை வாங்கி அதன்மேல் 6-ம் பாட்டிற் குறித்தபடி அரைத்து வழித்து வைத்திருக்கிற மருந்தை நன்றாய்ப்பூசி இதற்கு முற்காண்டத்திற் கூறியிருக்கப்பட்ட கும்பிடுகிளிஞ்சியினாற் செய்த மூசையிற்போட்டு அழகுபொருந்தும்படியாக உலையில் வைத்து ஊதக்கடவீராக. இனிச் செய்யவேண்டிய விபரத்தைப்பின் கூறுவேன் கேட்கக்கடவீர்.எ—று.

சூக்ஷும விளக்கம் ;—கும்பிடுகிளிஞ்சி மூசைசெய்யும் விபரம் இரண்டாங்காண்டத்திற் சொல்லப்பட்டிருப்பதால் அங்கு பார்த்துத்தெரிந்து கொள்க. இதைப் பற்றி முன்னமேயே சொல்லியிருப்பதால் அதைப்பற்றி விபரமாகச் சொல்லப்படவில்லை. முற்காண்டங்களில் கூறியிருக்கப்பட்ட விஷயங்கள் பின் ஒவ்வொரு முறைக்கு வருமேயானால் அவைகளையெல்லாம் இப்படியே விபரமில்லாது கூறிவருவார். ஏனென்றால் முன்கூறியிருப்பதால் அவ்விபரங்களை ஒவ்வொருவரும் தெரிந்திருப்பார்களென்பது பற்றியேயாம். (7)

சந்த விருத்தம்(வேறு)

ஊதிட வேயொளி வாகிச்சி வந்தது
முருகியே மணிமணி யாய்
நீதமாய் நின்றிடு நீயிது கண்டறி
நெறிதிகழ் மணியதனைக்
கோதற் வேயெடு கூறுவன் வேதைகள்
குவலைய மாந்தர்களே

ஆதியி னாலுறு சௌமிய வலுமையை
யாரறி வாருல கில்.

இப்பாட்டினால் முன் உலையில் வைத்தூதிய மருந்து பின்னாகும் நிமைமை கூறுகின்றார்.

[இ—ள்] முன் சொன்னபடி யுலையில் வைத்து அந்த மருந்தானது உருகிமணிமணியாக அழகு பொருந்தும்படியாக இருக்கும். இதைப் பார்த்தறியக் கடவாய். உயர்ந்த மார்க்கமானது பிரகாசிக்கப்பட்ட இந்த மணியை யெடுக்கக் கடவீர்கள். பூலோகத்திலுள்ள மனிதர்களே! இன்னும் இதன் வேதைகளைச் சொல்வேன். கேட்பீர்களாக. பரமசிவக் கடவுளினது கிருபா கடாட்சத்தினா லுண்டாகிய இந்த இலக்கசௌமிய சாகரத்தினது வலிமையை இந்த வுலகத்தில் யாவர் அறிவார். எ—று.

சூட்சும விளக்கம்:-வெளிப்படை. 8

## வேறு விருத்தம்

மணி யானம ருந்தினி டைக்கிடையே
தணி வின்றிய தங்கமுஞ் சாற்றிடு வேன்
பணி யின்பெய ராப்பகர் பாரிலுள் ளோர்
நணி யா நவ லோகமி லொன்றது வை.

இப்பாட்டினால் முன்குகையில் வைத்தூதிய மருந்தைப்பின் செய்யவேண்டிய விதங் கூறுகின்றார்.

(இ-ள்] முன் பாட்டிற் கூறியபடி குகையில் வைத்தூதி மணிமணியாகிய மருந்திற்குச் சமனெடை தாழ்வில்லாத தங்கத்தையும் பாம்பினது பெயராகக் கூறப்பட்ட நவலோகங்களி லொன்றாகிய வொரு சரக்கையும் எ...று.

சூக்ஷும விளக்கம் :...பாம்பினது பெயராகக் கூறப்பட்ட நவலோகங்களி லொன்றாகிய சரக்காவது [நாகம்]



இதுவே அந்தச்சரக்காம். பாட்டிற் கூறியபடியே தங்கமும் நாகமு முன் மருந்திற்குச் சமனெடையெடுத்துக்கொள்ள வேண்டுமென அறிக. பாட்டில் மருந்தின் இடைக்கிடை யெனச் சொல்லப்பட்டுருப்பதால் தங்கமும், நாகமும் தனித்தனி முன்மருந்தெடை எடுக்க வேண்டுமென ஏற்படுகிறது. இந்தப் பாட்டின் ஈற்றில் நவலோகமி லொன்றதுவை யென்ற மட்டில் நிறுத்திக் கொண்டிருப்பதில் மற்றவைகளை யடுத்தபாட்டிற் கூறுவாரென வறிக. 9

## இதுவுமது

சேர்த் தேதிற மூசையி லுட்செலுத்தி
யூத்தாகவே யூதிட வுட்கலந் து
பார்த்தாற்பரி வாகிடும் பாங்கத னில்
மாத்தாக மருந்தினி வேறுரைப் பேன்.

இப்பாட்டில் முன் பாட்டிற் கூறிய சரக்குகளைப் பின் செய்யவேண்டிய விதங் கூறுகின்றார்.

[இ—ள்] முன்சொன்னபடி யெடுத்த தங்கத்தையும் நாகத்தையும் சேர்த்தெடுத்து முன் மூசையில் மணிமணியாகி யிருக்கு மருந்தினோடு சேர்த்து உலையில் வைத்தூதக் கடவாய். அப்படி யூதினால் இவ்விரண்டும் முன் மருந்தோடு கலந்து பார்க்கும்போது மிகுந்த அழகாகப் பிரகாசித்துக் கொண்டிருக்கும். இது உயர்வாகும்படியான வேறொரு மருந்து சொல்வேன் கேட்பாயாக. எ—று.

சூட்சுமவிளக்கம்—வெளிப்படை. 10

## சந்த விருத்தம்

கெட்டியென் றோன்பெயர் தட்டி முதலொடு
கிளர்த்து வேன் நகர் கடைதகர்
திட்ட முடன்விரற் செறியும் பேர்தனிற்
றீவிர மாய்த்தலை தள்ளி யே

யுட்டின மாகவே யுயிருள் ளான்பொல்லா
னொடுவேன் றன்னை நா டியெடு
கட்டி யிலுருகுஞ் சத்தின் சமனிறை
கதிக்க வேயெடு மதிக்க வே.

இப்பாட்டில் முன் மருந்தோடு சேர்க்கவேண்டிய தான இரண்டு சரக்குகளைக் கூறுகின்றார்.

(இ-ள்) கெட்டியென்று சொல்வதாகிய ஒரு பெயரிலுள்ள மற்ற எழுத்துக்களை யெல்லாந் தள்ளிவிட்டு அதன் முதலெழுத்தையும், நகர வரியிலுள்ள கடையெழுத்தையும், அதனோடு தகரத்தையும், பலம் பொருந்திய கையினுடைய ஓர் பிரதிபதத்தின் முதலினின்ற எழுத்துக்களைத் தள்ளி நின்ற கடையெழுத்தையுங் கூட்ட எப்பெயரமையுமோ அப்தப் பெயருள்ள சரக்கையும், உயிருள்ளதும், அங்கு மிங்கும் ஓடத்தக்கதுமான ஒரு சரக்கையும் முன் மூசையில் வைத்துருக்கியிருக்கிற மருந்திற்குச் சமனெடை எடுக்கக் கடவாய். இன்னுஞ் சொல்வேன்.எ...று.

சூட்சும விளக்கம்:—கெட்டியென்ற ஒரு பெயரில் மற்ற எழுத்துக்களைத் தள்ளிவிட்டு நின்ற முதலெழுத்தாவது (கெ) நகரவரியிலுள்ள கடையெழுத்தாவது (ந்) தகரமாவது (த.) கையினுடைய பிரதிபதமாவது கரம். இதில் முன்னின்ற எழுத்துக்களைத் தள்ளி நின்ற கடையெழுத்தாவது (ம்] ஆக இந்நான்கெழுத்துக்களையுங் கூட்ட [கெந்தம்] என்றானது. இதைக் கெந்தகம் எனக் கொள்ளவேண்டியது. இதுவே முதலிற் சொல்லிய சரக்காம்.

2வது உயிருள்ளதும் அங்குமிங்கும் ஓடத்தக்கதுமான சரக்கானது [இரசம்] இதுவே இரண்டாவது கூறிய சரக்காம். ஆகவே கெந்தகத்தையும் இரசத்தையும் முன் குகையில் உருக்கிவைத்திருக்கிற மருந்திற்குச் சமனெடை யெடுத்துக்கொள்ள வேண்டுமென அறிய வேண்டியது. (11)



விருத்தம் வேறு

நாடிய விங்ஙன நவிலி ருவரை
பாடிய கல்வத்தி னுட்ப டுத்திநீ
ஆடிய குருவிலைச் சாற்றி னாலரை
வாடிய மருந்ததை வழித்து ருட்டியே.

———

இப்பாட்டில் முன்சொன்னபடி யெடுத்த இரண்டு சாக்குகளையும் பின்செய்யவேண்டிய விதங் கூறுகின்றார்.

(இ-ள்.) இம் முன்பாட்டிற் குறித்த எண்ணத்தக்கதாகிய கெந்தகத்தையும் இரசத்தையும் சொல்லப்படுவதாகிய கல்வத்திற் போட்டுத் திருநூற்றுப் பச்சையிலைச் சாற்றை விட்டு நன்றாயரைத்து அதை யுருட்டியெடுத்து. எ—று.

சூக்ஷும விளக்கம் :—வெளிப்படை. (12)

விருத்தம் வேறு

ஒன்றாக வுருக்கிடு மூசைத னில்
நன்றாகவே நாடிய விம்மருந் தை
யுண்டே யொளி வாமத னுட்கலந் து
மண்டே களங் காகும ருந்தது வே.

———

இப்பாட்டினால் முன்னரைத் துருட்டி யெடுத்த மருந்தை பின் செய்யுமார்க்கஞ் சொல்கின்றார்.

(இ-ள்.) மேற்கண்டபடி யரைத்து உருட்டி யெடுத்த மருந்தை முன் மூசையிலிட்டுருக்கி வைத்திருக்கிற மருந்தோடு சேர்த்து உருக்கக் கடவாய். அப்படியுருக்கினால் முன்னிருந்த மருந்தானது இப்போது போட்ட மருந்தையெல்லாம் உண்டு அதனோடு கலந்து நல்ல பிரகாசத்தைப் பொருந்திக் களங்கமாகும். எ—று.

சூட்சும விளக்கம் :—வெளிப்படை (13)

இதுவுமது

களங் கானம ருந்தைக் கையினெடு
நளங் காகவ லோகமி னாட்டிடு வாய்
முழங் காகமுன் னூற்றினி லொன்றிவே
தழங் காகத் தயங்கொளி தங்க மிதே.

———

இப்பாட்டில் மேற்சொன்ன களங்கத்தின் வேதை சொல்கின்றார்.

(இ-ள்.) முன் சொன்னபடி களங்கான மருந்தைக் கையிலெடுப்பாய். அப்படியெடுத்தவுடன் அதைச் சிறந்த நவலோகங்களி லொன்றில் முந்நூற்றுக் கொன்று கொடுப்பாயே யானால் மிகவும் பிரகாசிக்கும்படியான தங்கமாகும்.

சூட்சும விளக்கம் ;—வெளிப்படை. (14)

எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

தங்கமது செய்வதுவும் பெரிதோ பாரில்
சாகரத்தின் மகிமையினாற் கோடா சொடி
அங்கமது அழியாமற் செய்வோன் வாதி
யட்டசித்து முற்றிடுவான் ஞான சோதி
மங்கையர்க ளாசைதன்னை மனத்தி லுன்னா
மாதவத்தி னின்குருவை மனத்தி லுன்னித்
துங்கமுற விவ்வேதை செய்வை யாகிற்
சுடர்பெறவே ஞானவழி தோற்றுந்தாமே.

———

இப்பாட்டு முதல் இந்தக் களங்கினுடைய வேதை சொல்கின்றார்,



(இ-ள்.) இந்தப் பூலோகத்தில் தங்கத்தைச் செய்வது அவ்வளவு பெரிதா; இந்த இலக்க சௌமிய சாரத்தினது பெருமையினால் அளவில்லாத பெரிய காரியங்களையெல்லாஞ் செய்து முடிக்கலாம். தன்னுடைய தேகத்தை யழியாமற் செய்துகொள்ளப்பட்டவ னெவனோ அவனே வாதியாவான். அவனே அட்டமா சித்திகளையும் பெற்றவனாவான். அவனே ஞானத்தினது பிரசாசத்தைக் காண்பான். ஆதலினால் பெண்களுடைய போக விருப்பத்தை மனத்தினிடமாகக் கொஞ்சமும் நினைக்காமல் மகா தவத்திற் சிறந்த உன்னுடைய குருவை மனத்தில் வைத்துச் சிரேஷ்டம் பொருந்தும்படியான அடியிற் சொல்லப்போகின்ற இந்தக் காந்தக் களங்கத்தின் வேதையைச் செய்வாயாகில் பிரகாசம் பொருந்திய ஞான வழியானது சந்தேகமறத் தோற்றும். ஈ—று.

சூக்ஷும விளக்கம்:—வெளிப்படை. (15)

எண்சீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

எடுத்திடு மருந்து தன்னை
யியற்றிட வேதை சொல்வேன்
கடுத்திடு பேர்த லையின்
கதியுட னேமெ டுத்துத்
தடுத்திடு நகர்க டையுங்
தகர் ககர் மகர்க டையுங்
கடுத்திடும் பலமுபெ மான்று
களங்கொடுங் கல்வத் திட்டே.

இப்பாட்டால் முன்களங்கின் வேறு வேதை சொல்கின்றார்.

(இ-ள்.) முன் 14ம் பாட்டிற் சொன்னபடி கையிலெடுத்து இந்தக் காந்தக் களங்கை யினிமேற்செய்யும்படியான வேதையைச் சொல்வேன் கேட்பாய். கடுத்திடு என்ற பெயரின் முதலி லிருக்கப்பட்ட எழுத்

தின் ஏழாவ தெழுத்தையும், நகரத்தின் கடையெழுத்தை யும் தகரத்தையும் ககரத்தையும் மகரத்தின்கடையெழுத் தையும் எடுத்துச்சேர்க்க எப்பெயரமையுமோ அப்பெய ருள்ள சரக்கில் ஒருபல மெடுத்து முன் சொல்லி யிருக் கின்ற களங்கத்தினோடு சேர்த்துக் கல்வத்திற் போடு வாய். எ...று.

சூட்சும விளக்கம் :...கடுத்திடு என்ற பெயரின் முத லெழுத்தாவது ககரம். இதன் ஏழாவதெழுத்தாவது (கெ.) நகரத்தின் கடையெழுத்தாவது (ந்.) தகரமாவது (த.) ககரமாதது (க.) மகரத்தின் கடையெழுத்தாவது (ம்.) ஆக இவ்வைந்தெழுத்துக்களையுஞ் சேர்க்க (கெந்தகம்) என்றானது. இந்தக் கெந்தகத்திலேயே ஒரு பலமெடுத்து மேற்கண்ட களங்கத்தோடு கல்வத்திற் போட வேண்டியது. மற்றவை பின்கூறுவார். (16)

இதுவுமது

இட்டிடு மருந்து தன்னை
யினியபொற் றிலையின் சாற்றில்
திட்டமா யரைப்பாய் சாமந்
திறமுடன் றிரிய தாக
வொட்டியே வழித்து வைநீ
யொழுங்குட னுயரா வில்லை
கட்டுவாய் திறம தாகச்
சாற்றுவேன் விபர மன்றே.

.........

இப்பாட்டில் முன் கல்வத்திற் போட்ட மருந்து களைப் பின் செய்யவேண்டிய விதஞ் சொல்கின்றார்.

(இ-ள்.) முன்சொன்னபடியே கல்வத்திற் போட்ட காந்தக் களங்கையுங் கெந்தகத்தையும் பொற்றலைக் கையாந்தகரைச் சாற்றைவிட்டு மூன்று சாமம் பலம் பொருத்தும்படியாக அரைக்கக்கடவாய். அப்படியரைத்த வுடன் அதை வழித்தெடுத்துச் சிறப்புப் பொருந்தும்



படியாக வில்லைத்தட்டிக் கொள்வாய். பின் செயய வேண்டிய விதத்தைச் சொல்வேன் கேட்பாயாக. எ—று.

சூட்சும விளக்கம் :—வெளிப்படை. (17)

இதுவுமது

ஒட்டதிற் பொருத்தி யிந்த
வொளிதிகழ் மருத்து தன்னை
நாட்டியே கழியுஞ் சீலை
நன்குறக் கவசம் பண்ணிக்
காட்டெரு முழமொன் றேகால்
கதித்திடப் பரப்பி யங்கு
நாட்டமாய் மருந்து தன்னை
யிட்டுநீ யெரிமூட் டங்கே.

.........

இப்பாட்டின் முன் பில்லைதட்டிய மருந்தைப் பின் செய்ய வேண்டிய விதஞ் சொல்கின்றார்.

(இ-ள்.) முன்-17ம்-பாட்டிற்குறித்தபடி வில்லை தட்டிய மருந்தை வட்டோட்டில் வைத்து மேலோடு மூடிக் கழிச்சீலையால் கவசம் பண்ணிக் காட்டெருவி னால் ஒன்றேகால் முழ உயரம் புடம் சித்தப்படுத்தி இந்தக் கவசத்தை அதன் மத்தியில் வைத்து நெருப் பிடக் கடவாய். எ...று.

சூக்ஷும விளக்கம் : வெளிப்படை. (18)

கொச்சகக் கலிப்பா

எரிநீ பரப்பி யமர்ந்ததற்பின் னெழின்மருந்தைத்
துரித முடனே தொட்டெடுப்பாய் கைத்தலத்தில்
பிரிய முடனே கவசம் பிரித்தது வை
அரிசேர் விழியா லடவுடனே நோக்கிடுவாய்.

.........

இப்பாட்டினால் முன்சொன்னபடி புடம் போட்ட பின் செய்யவேண்டிய விதஞ்சொல்கின்றார்.

(இ-ள்.) முன் சொன்னபடியே புடம் போட்டமர்ந்த பிற்பாடு அழகு பொருந்திய இந்த மருந்தை வேகமாகக் கையிலெடுப்பாய். அப்படி யெடுத்துச் சிநேகத்தோடு கவசத்தைப் பிரித்து அதைச் செவ்வரி பரந்தகண்களினால் பார்ப்பாய். எ...று.

சூட்சும விளக்கம் :வெளிப்படை. (19)

எண்சீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

நோக்கிடவே வெண்மைநிறஞ் சிவப்பே யாகும்
நொடிக்குள்ளே யிம்மருந்தைக் கல்வத் திட்டு
பாக்கியமுட னாவலதின் பட்டைச் சாற்றால்
பரிவாக வெடுத்திரண்டு சாம மாட்டி
வாக்கிடவே வழித்துநன் றாய் வில்லை தட்டி
வண்மையுட னோட்டில்வைத்துச் சீலை செய்து
தாக்கிடவே யெருப்புடந்தான் முழமொன்றாகத்
தயவுடனேபோட்டந்த மருந்து தன்னை.

இப்பாட்டில் முன் புடம்போட்டெடுத்த மருந்தைப் பின் செய்ய வேண்டிய விதஞ்சொல்கின்றார்.

[இ-ள்.] முன்பாட்டில் கூறியபடி கவசத்தைப் பிரித்தெடுத்த மருந்தைப் பார்த்தால் வெண்மை கலந்த சிவப்பு நிறமாயிருக்கும். பழையபடியும் வெகு சீக்கிரமாக இந்த மருந்தைக் கல்வத்திலிட்டு நாவல்பட்டைச் சாற்றைவிட்டு பலம்பொருந்துபடியாக இரண்டு சாமமரைத்து வழித்தெடுத்துப் பில்லைதட்டி வளம்பொருந்தும்படியாக ஓட்டில் வைத்து சீலை மண்செய்து எருவினால் ஒருமுழப்புடம் போட்டு அந்தமருந்தை. எ...று.

சூக்ஷுமவிளக்கம்:—வெளிப்படை அந்தமருந்தையென்றமட்டில் நிறுத்தியிருப்பதில் மற்ற விஷயங்களை அடுத்த பாட்டிற் கூறுவாரெனவறிக. (20)



இதுவுமது

மத்தியிலே வைத்து நீ தீயை மூட்டு
வடிவாக வெரிந்தபின்பு புடம் பிரித்து
முத்திதரு மருந்ததனைக் கவசம் வாங்க
முருக்கம்பூப் போலவன மாகித்தோன்றும்
பத்தியுடன் மருந்ததனைப் பதனம் பண்ணிப்
பகலொளியாம் பராபரத்தை மனத்திலுன்னிக்
கற்றுவைத்த வுன்குருவை மனத்தி லெண்ணு
காயசித்தி வேதையினிக் கழறு வேனே

இப்பாட்டினால் மேற்கண்ட மருந்தின் முடிவு சொல்கின்றார்.

(இ-ள்.) முன்பாட்டிற் குறித்தபடி எருவினாற் புடந் தயார் செய்து அதன் மத்தியில் இந்தக்கவசத்தை வைத்துத் தீயைமூட்டக் கடவாய். அது எரிந்தடங்கின பின் புடத்தைப்பிரித்து அந்த மருந்தின் கவசத்தை யெடுத்துக் கவசத்தை நீக்க அதில் மருந்தானது இருக்கம்பூப் போன்ற சிவந்தவண்ணமாகத்தோற்றும். அபூதப் பிரியத்தோடு எடுத்துப் பத்திரப்படுத்தி எங்கும் பிரகாசமா யிருக்கப்பட்ட பராபரத்தை மனதினிடமாக நினைத்து கற்றுக் கொடுத்த குருவையும் தியானித்துக் கொள்வாய். இனி இதனால் நடக்கும் பல காயசித்திக் குரிய வேதைகளைச் சொல்வேன். எ...று.

சூக்ஷுமவிளக்கம்:—வெளிப்படை. [21]

கலி விருத்தம்

கவன மாக் கேண்மின் காசினி மாக்களே
மவுன மாக மருந்தை நீ யுண்குமுன்
கவலை வேறு மனதிற் கலந்திடா
நவம தாகவே நாற்பது நாளன்றே.

இப்பாட்டு முதல் இந்தச் செந்தூரத்தின் வேதை சொல்கின்றார்.

(இ-ள்.) பூவுலகிற் பொருந்திய மனிதர்களே நான் சொல்வதைக் கவனமாகக் கேட்கக்கடவீர்கள் மனதில் வேறு கவலைகளில்லாமல்இந்த மருந்தைஅழகு பொருந்தும்படியாக நாற்பதுநாட் சாப்பிடவேண்டும் அப்படிச் சாப்பிடுவதற்கு முன்பு. எ...று.

சூக்ஷ்ம விளக்கம்:—வெளிப்படை. (22)

இதுவுமது

எள்ளிலாட்டிய செக்குறு மெண்ணெயோர்
துள்ளி சேர்த்திடிற் றுஞ்சிடு வாய்நிசம்
அள்ள லாகிய வார்கலி யுற்றமீன்
உள்ள மேமகிழ்ந் துண்டிடா மாக்களே,

இப்பாட்டுமுதல் இந்த மருந்து சாப்பிடுவதற்குமுன் இருக்க வேண்டிய பத்தியத்தைக் குறித்துச் சொல்கின்றார்.

(இ-ள்:) முன்பாட்டிற்குறித்தபடி இந்த மருந்தைச் சாப்பிடுவதற்குமுன் செக்கில் எள்ளைப்போட்டு ஆட்டப்படுவதாகிய எள்ளெண்ணெய் ஓர்துளி உடம்பிற் சேருமேயானால் கட்டாயம் இறந்துபோய் விடுவாய். இது சத்தியம். இதைத்தவிரச் சேறுபொருந்திய சமுத்திரத்தில் வசிப்பதாகிய மீனையும் மனமகிழ்ந்து சாப்பிடக் கூடாது. மனிதர்களே கவனியுங்கள் எ...று

சூக்ஷ்மவிளக்கம்:—இந்த மருந்தைச் சாப்பிடுவதற்கு முந்தியே இந்தவிதமான பத்தியத்தோடிருக்க வேண்டு மென்றிருப்பதால் இருந்த மருந்தைச் சாப்பிடுவதற்குமுன் மேற்கண்டவிதமாக ஒருமண்டலம் பத்தியமிருக்க வேண்டுமென அறியவேண்டியது. []

இதுவுமது

கங்குல் போன்ற கருங்குழ லாளெழில்
மங்கை போக மனத்தினி லுன்னியே
பங்க மாகப் பரிகிக் கலந்திடிற்
சிங்க மாக்கிடுஞ் சித்தகன் றோடுமே.

(இ-ள்.) மேற்சொன்னவைகளைத் தவிர மேகத்தைப்போன்ற கருத்த கூந்தலை யுடையவளும், அழகு பொருந்தியவளுமான ஒரு ஸ்திரீயினுடைய போகத்தை மனதிற் கருதிக் குற்றம் பொருந்தும்படியாக அவர்களோடு மருவிக் கலந்தால் தன்னைச் சிங்கத்தைப் போல செய்யும் இந்த மருந்தினது சித்தானது நீங்கிப் போய்விடும். எ—று.

சூக்ஷ்ம விளக்கம்— சிங்கத்தைப் போலசித்தென்று கூறியது இந்த மருந்தினது வல்லமையால் திடகாத்திரம் பெற்றிருத்தல் பற்றியென வறிக.

இதுவுதுமது

பாலுஞ் சாதமு பாகுறு வெல்லமும்
ஓல மான பசும்பய றோடுண்ணு
சீல மாகிய தேவி னெய்தனைச்
சால வுந்தய வாகநீ சேர்த்திடு.

இதுவுமது

[இ-ள்] இன்னமும் இந்த மருந்தைச் சாப்பிடுங் காலத்தில் பாற்சாதத்தில் ருசி பொருந்திய வெல்லத்தையும் பச்சைப் பயற்றையும் சேர்த்துப் பொங்கி உண்ணக் கடவாய். சிறப்புப் பொருந்திய தலையீற்று நீங்கிய பசுவின் நெய்யை மிகவுஞ் சிநேகத்தோடு சேர்க்கக் கடவாய். எ...று.

சூக்ஷ்வ விளக்கம்:—வெளிப்படை. [25]

வேறு விருத்தம்.

நேயமாய்ச் சிரசினெய் தேய்த்து நீணதி
சேயமாய் முழுகிடு செப்பு வன்றினம்

நாயமாயநாலுநாள் விடுத்து நாடிய
மாயமாம் வழுத்துவன் மண்டல மொன்றே.

இதுவுமது

[இ.ள்-] இதைத் தவிர இந்த மருந்தைச் சாப்பிடுங் காலத்தில் அந்த ஒரு மண்டலம் வரையிலும் நான்கு நாளைக் கொருதரம் சிரசில் பசுநெய் தேய்த்து ஸ்நாநஞ் செய்யக் கடவாய். எ—று.

சூக்ஷ்ம விளக்கம்:—நீணதி முழுகிடு என்றிருப்பதினால் குளிர்ந்த நீரிலேயே ஸ்நாநஞ் செய்யவேண்டுமென ஏற்படுகின்றது. (26)

இதுவுமது

கற்புறு நேர்மையிற் காய சித்தியாம்
வெற்புறச் செயுமது வீர மாகிடுங்
கற்பகத் தருநிகர் கசப்பு நீங்கிய
பொற்புபெற் சீந்திலாம் புகலு நாமமே.

இதுமுதல் மேற்படி மருந்திற்கு அனுப்பான விதஞ் சொல்கின்றார்.

(இ-ள்.) ஒழுக்கம் பொருந்திய தன்மையினாலே காயசித்தியைப் பலம் பொருந்தும் படியாகச் செய்யத் தக்கது. மகா வீரத் தன்மை பொருந்தியது. கற்பகத் தருவைப்போல கசக்குங் குணம் நீங்கிய மதுரகுணத்தையுடையது. அதுயாதென்றால், அழகு பொருந்திய சீந்திலெனச் சொல்வார்கள். (எ...று)

சூக்ஷ்ம விளக்கம்:— வெளிப்படை. இந்தச்சிந்திலாலாகுங் காரியத்தைப் பின் கூறுவார். (27)

இதுவுமது.

நாமமுற்றிடுமது நனி வயதுடன்
ஏமமுற்றிடும விருக்கு மெல்ல போய்த்



காமமா விரலிரு கதிப்ப மாகிய
கோமமுற் றிடுங் கொடி நறுக்கிக் கொண்டுவா.

இப்பாட்டினால் மேற்கண்ட சீந்திலைச் செய்யும் விதஞ் செல்கின்றார்.

(இ-ள்.) மேற்கண்டபடி சீந்திலென்று சொல்லப்பட்ட செடியானது அதிக முற்றலா யில்லாமலும் இளம் பருவ மில்லாமலும் நடுத்தரமா யிருக்கின்ற சமையத்தில் அந்த செடியிலிருக்கு மிடத்திற்குப் போய்ப் பிரியத்தோடு அதில் இரண்டு விரற் கனமுள்ள கொடிகளை நறுக்கிக்கொண்டு வரக் கடவாய். எ...று.

சூக்ஷ்ம விளக்கம்....வெளிப்படை. [28]

இதுவுமது

கொண்டுநீ வந்திடு கொடியை நால்விரல்
துண்டதாய் நறுக்கிமேற் சுணங்கு போக்கியே
தண்டதைத் தட்டியே சாடி யுள்ளிடு
முண்டதில் நீர்தனை முடிய வார்த்திடு.

இப்பாட்டிற் சீந்திற் கொடிகளைச் செய்யவேண்டிய விதஞ் சொல்கின்றார்.

(இ-ள்) மேற்பாட்டிற் குறித்தபடி அந்த இரண்டு விரற் கனமுள்ள சீந்திற் கொடிகளைக் கொண்டுவந்து நான்குவிரல் நீளமுள்ள துண்டுகளாக நறுக்கி அதன் மேலிருக்கப்பட்ட தேமல் போன்றதான புறணிகளை நீக்கிவிட்டு அவைகளை நன்றாய்த் தட்டி பெரிய சாடியிற் போட்டு அதினிறைய ஜலத்தை விடக் கடவாய். எ...று.

சூக்ஷ்ம விளக்கம்:—வெளிப்படை. 29

இதுவுமது

வார்த்துநீ வைத்திடு வார மொன்றுடன்
ஊற்றிய நீரது வுழன்று பொங்கிடும்

காத்திர மாகவே கசக்கி விட்டதை
நீத்தமாய் வரிநீ நிழ லுலர்த்திடு.

(இ-ள்) முன்சொன்னபடி ஜலத்தை வார்த்து ஒரு வாரம் வரை வைக்கக் கடவாய். அப்படி வைத்தால் அவை நன்றாய் ஊறிப் பொங்கிக் கொண்டிருக்கும் அந்தச் சமயத்தில் அவைகளைப் பலமாகக்கசக்கிவிட்டுச் சக்கைகளை யெடுத்து நிழலி லுலர்த்தக் கடவாய்.

சூட்சும விளக்கம்:- வெளிப்படை. 30

இதுவுமது

சாடியி லுறைந்திடுந் தண்ணீர்த ன்னையே!
நாடியே நடிநடி யாக வூற்றிடு
பீடிய தூரினிற் பிரிய மாகவே
சாடியிற் சர்க்கரை தங்குங் கண்டிடு.

இதுவுது

[இ-ள்] சக்கைகளையெடுத்து நீக்கியபின் ஜாடியி லிருக்கிற தண்ணீரைக் கொஞ்சங் கொஞ்சமாக ஊற்றக் கடவாய். அப்படி மெதுவாக ஊற்றினால் ஜாடியின் அடியில் சிநேகத்தோடு சர்க்கரையானது தங்கியிருக்கும் பார்க்கக் கடவாய்.எ—று.

சூட்சும விளக்கம்:- வெளிப்படை. 31

செந்தொடை

தங்கிய சர்க்கரை தன்னை நீ யெடுத்துச்
சார்புறப் பதனஞ் செய்
துங்கம தாகவே நிழலி லுலர்த்திடு
தூளுறு மருந்து தனைச்
சங்கையா யுரலிற் சேர்த்துத் தாக்குறத்
தாக்கி யேசமு லம்



வங்க மாம்ச்சீ லையில் வடித்தெடு
வண்மையதாக வே,

இப்பாட்டில் சீந்திற் சர்க்கரை யெடுக்கும் விதஞ் சொல்கின்றார்.

[இ-ள்] முன்பாட்டிற் குறித்தபடி ஜாடியினடியிற் றங்கிய சர்க்கரையை யெடுத்துப் பொருத்தமாகப் படுத்தக் கடவாய். அதன்பின் எடுத்துக் காயவைத்திருக்கிற சீந்திற் சக்கைகளை யுரலிற்போட்டு உலக்கையாற் பலங்கொண்டிடித்து அந்தத்தூளை அழகோடு எடுத்துச் சீலையால் வடிக்கட்டிக் கொள்ளக் கடவாய்.எ...று.

சூட்சும விளக்கம்:—இந்தப்பாட்டில் நிழலிலுலர்த்தி யென்றிருப்பதனால் நிழலிலேயே காயவைக்க வேண்டும். 32

அறுசீர்க் கழிநெடி லடி யாசிரிய விருத்தம்

இவ்வா றந்த மருந்தையு மே
யிடித்துத் தூளா யியம்பா கச்
செவ்வாய்ச் சீலை தனி லரிக் கச்
சீந்தில் வலிமைச் சர்க்கரையும்
வவ்வா வெள்ளை வணமாகி
வடியுந் துளையி லுறுமமிர் தம்
ஒவ்வாக்.கழிவு நார்தனை யே
யுறவே தள்ளு வுரவோ னே.

இதுவுமது

[இ-ள்] முன்பாட்டிற் குறித்தபடியே யிடித்தவைகளை அந்தப்படியே அழகு பொருத்திய சீலையால் வடிகட்ட சீந்திற் சர்க்கரையானது அந்தச் சீலையின் இடைவெளிகளில் வெள்ளை நிறமாகி நல்ல தித்திப்போடு வடியும். அதில் சீலைக்கு மேலே தங்கிய நார்களை, நீக்கிவிடக் கடவாய். எ...று.

குட்சும விளக்கம்:...வெளிப்படை. [33]

இதுவுமது

சாடி தனிலே யுறைந்திருந்த
தவள வணத்தின் சர்க்கரை யும்
நாடி வதிந்த சர்க்கரை யும்
நடித்தே புரட்டி யொன்றாக்கிப்
பாடி இறைந்த மாந்தர்களே
பண்ணும் பதனம் பண்பாகக்
கோடி வயது கொடுக்கு மெனக்
குறியை யிவணிற் கூறுவனே.

இப்பாட்டில் மேற்கண்ட சீந்திற் சர்க்கரையின் பெருமை சொல்கின்றார்.

[இ-ள்] முன் சாடிதனிலே தங்கி யிருந்தெடுத்த வெண்மை பொருந்திய சர்க்கரையையும், பின்பு சக்கை களை யிடித்துத் தூளாக்கி வஸ்திரத்தால் வடிகட்டி யெடுத்த சர்க்கரையையும் பிரியத்தோடு புரட்டி ஒன்று கலந்து பதனஞ் செய்வீர்களாக, பூவுலகத்திலுற்ற மனிதர்களே! இனி இந்தப் பாகமானது கோடி வயது கொடுக்குமென்று சொல்வதான இதன் குறிப்பைச் சொல்வேன். கேட்பீர்களாக. எ—று.

சூட்சும விளக்கம் :—வெளிப்படை. 34

எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

முன்புரைத்த வாறதுபோல் மண்ட லந்தான்
முடிவுறவே செய்காளை மொழியக் கேண்மோ
தென்புடனே களங்கத்தின் செந்தூ ரத்திற்
நிறமாக வரிசியெடை தன்னைத் தூக்கி
அன்புடனே சீந்தில்தனி லுற்றெடுத்த
வமிர்தமுறு சர்க்கரையி னிறைதான் கேளு



துன்பகல விராகனெடை யளவெடுத்துத்
துலங்கிடவே செந்தூர மீதில் வைத்தே.

——

இப்பாட்டில் முன் கூறிய காந்தக் களங்க செந்தூரத்தை இந்தச் சீந்திற் சர்க்கரையிலனுபானித்து உண்ணும் விதஞ் சொல்கின்றார்.

(இ-ள்) இதற்குமுன் சொல்லி யிருப்பதுபோல் ஒரு மண்டலம் வரை முடிவு பெறும்படியாக இந்த காந்தக் களங்க செந்தூரத்தில் பலம் பொருந்தும் படியாக ஒரு அரிசியெடை யெடுத்து அன்போடு இந்த சீந்திலி லிருந்தெடுத்த சுவை பொருந்திய சர்க்கரையில் ஒரு விராகனெடை சேர்த்து மேற்சொல்லிய செந்தூரத்தின் மேற்பொதிந்து நாம் முன் சொல்லியபடி ஒரு மண்டலம் பத்தியமிருந்த மனிதர்களே இன்னும் சொல்வேன் கேட்பீர்களாக. எ—று.

சூக்ஷும விளக்கம்:—வெளிப்படை. இதில் நாம் முன்சொல்லியபடி ஒரு மண்டலம் வரை பத்தியமிருந்து வந்த மனிதர்களே யென்றதனால் முன் சொல்லிய பத்தியமெல்லாம் மருந்து சாப்பிடுவதற்கு முன்னரே யிருக்கவேண்டு மென்றதாயிற்று. ஆனால் அந்த மருந்து சாப்பிடுங் காலமாகிய ஒரு மண்டலமும் அதற்குப் பின் ஒரு மண்டலமும் இவ்வாறே யிருக்க வேண்டுமென அறிக. (35)

அரிசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

வைத்திடு மருந்து தன்னை
வடிவுறு மலரி தேரின்
அத்திவிட் டெழும்பும் போதி
லாதியைக் கருத்தி லுன்னி
முத்தியாங் காய சித்தி
மோக்ஷந்தந் தருள்வ யென்னப்

புத்தியாய்த் தொழுது போற்றிப்
புசித்திடு மருந்தைத் தானே.

---

இப்பாட்டில் மருந்து சாப்பிடும் விதத்தைச் சொல்கின்றார்.

(இ-ள்) முன் சொன்னபடியே சீந்திற் சர்க்கரையிற் பொதித்த மருந்தை அழகு பொருந்திய சூரியன் சப்த புரவிகள் பூட்டிய தேறிலேறிச் சமுத்திரத்தை விட்டெழுஞ் சமயத்தில் எல்லாவற்றிற்கும் முதற்காரணமாயுள்ள கடவுளை மனதிற் றியானித்துக் காயசித்தியை யடைந்து முத்தியென்று சொல்லப்படுவதாகிய மோக்ஷ வீட்டை யடையும். வரத்தைக் கொடுக்கக் கடவாயென வேண்டிப் புத்தியோடு வணங்கித் துதித்துச் சாப்பிட்டு விடக்கடவாய். எ...று.

சூக்ஷுமம விளக்கம்:— சூரியன் தேரிலேறி சமுத்திரத்தை விட்டெழுஞ் சமையமாவது விடியற்காலம். இதனால் இந்த மருந்தை உதய காலயத்திற் சாப்பிட வேண்டு மெனவறிக. (36)

இதுவுமது

காய்ச்சிய வாவின் பாலைக
கைத்தல மதனில் வாங்கி
வாய்த்ததே யிதுவென் றெண்ணி
வாயினா லருந்தி நண்பாய்
சூட்சமா யெயிற்றின் வாயிற்
றோன்றிடு மருந்து தன்னை
மூச்சினால் மென்று முக்கி
முக்கியமாய் விழுங்கு வாயே.

இதுவுமது

(இ-ள்) முன் சொன்னபடி மருந்தை சாப்பிட்ட பின்பு காய்ச்சின பசுவின் பாலைக் கையில் வாங்கி



நன்றாய்க் கிடைத்த தென்று சந்தோஷித்து வாயினாலே அருந்திப் பிரியத்தோடு சூட்சுமமாகப் பல்லிடுக்கு முதலியவைகளில் தங்கிக் கொண்டிருக்கு மருந்தானது உள்ளே சொல்லும்படியாக நன்றாய் கொப்பளித்து மென்று கலக்கி விழுங்கிவிடக் கடவாய்.

சூட்சும விளக்கம்:—மருந்து சாப்பிட்டவுடன் மருந்தானது சிறிது பல்லிடுக்கு முதலியவைகளிற் றங்கிக் கொண்டிருக்கு மாகையால் அதற்கு மேல் பசுவின் பாலைச் சாப்பிட்டுக் கொப்பளித்து விழுங்கவேண்டும் அப்படி விழுங்கினால் மருந்து கொஞ்சமும் தாங்காமல் உள்ளே சென்று விடும். இதனால் மருந்து சிறிதும் சேதம்போகக் கூடாதென்பது ஏற்படுகின்றது. (37)

வேறு விருத்தம்

இத்தகை யாகவே யியற்று மாக்களே
ஒற்றையி னாழியா னொளி மழுங்கியே
குத்தியே குடதிசைக் குட்பு குந்திட
வெத்தன மாகிடும் வேளை கேளின்னம்.

இதுவுமது

(இ-ள்) மனிதர்களே! ஒற்றைச் சக்கரத்தையுடைய தேரினனாகிய சூரியன் பிரகாசமானது குன்றி மேற்குக் கடலுட் புகுந்திட யத்தனிக்குஞ் சமயத்திலும் முன் பாட்டிற் சொன்னபடி மேற்கண்ட மருந்தை யருந்தக் கடவாய். இன்னம் சொல்வேன் கேட்பாயாக. எ—று.

சூட்சும விளக்கம்:- சூரியன் மேற்கு கடலுட் புகுஞ் சமையமாவது சாயுங்காலம். ஆகவே இந்த மருந்தைக் காலை மாலை யிரண்டு வேளையுஞ் சாப்பிட வேண்டு மென ஏற்படுகின்றது. (38)

இதுவுமது

முன்னமே யெழிலுற மொழிந்த வாறுபோல்
நன்னெறி மருந்தை நலந் திகழ்ந் திட

வின்னமில் லாமலே விழுங்கு மேதினி
தன்னில்வாழ் மக்களே சாற்றக் கேண்மினோ.

இதுவுமது

(இ-ள்) அழகு பொருந்தும்படியாக முன் சொன்னது போலவே நல்ல மார்க்கத்தைச் செய்யும்படியாகிய இந்த மருந்தை நலம் விளங்கும்படியாகக் கெடுதியில்லாமல் சாப்பிடக்கடவீர். உலகில் வாழுகின்ற மனிதர்களே! இன்னமுஞ் சொல்வேன் கேட்பீர்களாக.

சூட்சும விளக்கம் :...வெளிப்படை. (39)

இதுவுமது

இத்தகை யாகவே யினிய பண்புடன்
சித்திய மண்டலந் திறக்க வேயெழில்
வெற்றிசேர் மருந்ததை விழுங்கு மாக்களே
பைத்தியம் பண்புடன் பகரக் கேண்மினே.

.........

இப்பாட்டில் பத்திய விபரஞ் சொல்கிறார்.

(இ-ள்.) இவ்விதமாகவே மிகவுஞ் சிநேகத்தோடு ஒரு மண்டலம்வரை அழகு பொருந்தும்படியாக வீரம் பொருந்திய இந்த மருந்தைச் சாப்பிடக் கடவீர்கள். மனிதர்களே! இனி பத்தியமிருக்கவேண்டிய விதத்தையும் சிநேகத்தோடு கூறுவேன் கேட்பீர்களாக. எ...று.

சூட்சும விளக்கம் :...வெளிப்படை. (41

அறுசீர்கழி நெடிலடியாசிரிய விருத்தம்

சொல்லிய முறைமை போலுஞ்
சுகிர்தமாய்ச் செய்யும் பாங்கு
நல்லெண்ணெய் தன்னைக் கண்டால்
நாடியே தீண்டி டாதே.
மெல்லியர் போகந் தன்னை
விரும்பியே செய்யிற் றீங்காம்



எல்லையி லுற்ற மீனை
யியல்புடன் புசித்தி டாதே.

.........

இப்பாட்டினால் மருந்து சாப்பிடும்போது இருக்க வேண்டிய பத்திய விபரஞ் சொல்கின்றார்.

(இ-ள்.) மேற்சொல்லிய முறையைபோல மருந்தைச் சாப்பிட்டு அதற்குத்தக்க பொருத்தத்தோடு நடக்கக்கடவாய். எள்ளெண்ணையைக் கண்டால்கையினாலுந் தொடாதே. பெண்களினது சேர்க்கையை விரும்பிப் போகஞ் செய்ய தொடங்கினால் உடனே தீங்குவரும், இப் பூலோகத்திலுள்ள எந்த மீன்களானாலுஞ் சரியே இவைகளை உண்ணாதே. எ...று.

சூட்சும விளக்கம் :...முன்னோரிடத்திற் பத்தியங் கூறும்போது கடல் மீன் மட்டும் ஆகாதென்று கூறினார். இந்தப் பாட்டினால் எல்லா மீன்களுமே ஆகாதென ஏற்படுகின்றது. ஆதலால் எல்லா மீன்களையும் நீக்கி வைக்க வேண்டியது உத்தமம். (41)

இதுவுமது

பசுவின்பால் பால் சாத மோடு
பாகுறு வெல்லஞ் சீனி
பசுமையின் பயறு நெய்யும்
பரிவுட னுண்ப தன்றி
விசையுடன் விபுலை தன்னில்
விரும்பிய பதார்த்தந் தன்னை
நசையுட னுண்கிற் றீங்கா
நன்குற வறிந்து கொண்மின்.

———

இதுவுமது

(இ-ள்.) இந்த மருந்தைச் சாப்பிடுகின்ற காலத்தில் சாதத்தோடு பசுவின் பாலும், தித்திப்பு மிகுந்த வெல்லம் அல்லது, சீனியும், பச்சைப்பயறும், நெய்யும் சேர்த்துப் பொங்கியுண்ண வேண்டுமேயன்றி இந்தப் பூவுலகின் இதைத் தவிர விரும்புகின்ற மற்ற எந்தப் பதார்த்தமானாலுஞ் சரியே அவைகளைப் பிரியத்தோடு உண்டால் தீங்குண்டாகும். இதை நன்றாய் ஆராய்ந்து தெரிந்து கொள்ளுங்கள்.

சூட்சும விளக்கம் := இந்த மருந்தைச் சாப்பிடுகின்ற காலத்தில் மேற்கண்ட சாதத்தைத் தவிர மற்றவைகளைச் சாப்பிடக் கூடாது. அப்படிச் சாப்பிட்டால் உடனே தீங்குவருமென அறியவேண்டியது : (42)

வேறு விருத்தம்

ஆவினெய் தன்னையே பறையும் வாறுபோல்
மேவிநீ தேய்த்துமே மிகுந்த நீருறும்
வாவியில் முழுகிடு வார நான்குமே
பூவினி லுற்றதிற் புரளு மாக்களே.

இதுவுமது

(இ-ள்.) இன்னமும் இம்மருந்தைச் சாப்பிடுங் காலத்தில் பசுவின் நெய்யை முன்கூறியிருப்பது போலவே தேய்த்துக்கொண்டு நிறைந்த ஜலமுள்ள குளம் ஏரி முதலியவைகளில் நான்கு நாட்களுக்கொருதரம் முழுகிவர வெண்டும். பூமண்டலத்திலுற்ற மனிதர்களே இன்னமுங் கேளுங்கள். எ...று.

சூட்சும விளக்கம் :...ஜலம் நிறைந்திருக்கும்படியான குளத்தில் என்றதனால் முழுகுவது முங்கும்படியான ஜலமாயிருக்க வேண்டுமென ஏற்படுகின்றது.



இதுவுமது

விழுங்கிடு நாற்பது நாள்வி டாமலே
வழங்கிய வயின்மறை வாக்கி யத்தொடு
விளங்கிழை மாய்கையை விட்டு நீங்கியே
சுழங்கிய சோதியைத் தொழுது போற்றிடு.

(இ-ள்). இந்தவிதமான பத்தியத்தோடு மேற்கண்ட மருந்தை நாற்பதுநாள் நாட்டும் இடைவிடாம லருந்தக் கடவாய். ஈசுரனாலே சொல்லப்பட்ட வேதவாக்கியமாகிய இந்நூலின் உட்கருத்தைக் கைப்பற்றிப் பிரகாசிக்கும்படியான ஆபரணத்தைத் தரித்த ஸ்திரீ மாய்கையை, யொழித்து விளங்கா நின்ற ஆதி கடவுளை வணங்கித் துதிப்பாய். எ...று.

சூட்சும விளக்கம் :...இந்த நூலின் உட்கருத்து நன்மார்க்கத்தை யடையவேண்டியதாதலில் இந்நூலின் உட்கருத்தைக் கைப்பற்றி யென்றார். (44)

இதுவுமது

இத்தகை யாகவே யியற்று மண்டலந்
தத்துவ மாகவே சரீரம் வேறுறும்
பெற்றிடு மாசையாம் பிறங்கற் போலவே
முற்றிலும் வலுமையின் முடங்கி நின்றிடும்.

இப்பாட்டில் இந்த மருந்தைச் சாப்பிட்ட பின்னுண்டாம் பிரயோசனத்தைக் கூறுகின்றார்.

(இ-ள்) மேற்சொல்லியபடியே ஒரு மண்டலம் வரை இந்த மருந்தை உண்டுவரக் கடவாய். இப்படிச் செய்வையானால் மிகவும் பலமாகச் சரீரமானது முன்னிருந்த நிலைமை போய் வேற்று நிறத்தையடைந்து பொன்மலைபோல பிரகாசிக்கும். எந்தக் காலத்தும் அழியாத வல்லமையைப் பெறும். எ—று.

சூக்ஷும விளக்கம்;— வெளிப்படை, (45)

அறுசீர்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

தோலோடு தோய்ந்து நின்ற
துகிதனை மினுமி னுப்பாய்
மேலொடு பளப ளென்ன
வீராகத் தோன்றி நிற்குங்
காலொடு கரத்தி னூடு
கதித்திடக் கலந்தி ருந்த
நூலோடு பாங்காய் நின்ற
நரம்புக ளுண்மை யாமே.

(இ-ள்) இன்னும் இதனால் தோலோடு பொருந்தியிருந்த ஆடுந்தசையானது இரத்தச் சத்துண்டாகி மினுமினுப்படைந்து தேகம் பளபளப்பாகி வீரத்தோடு பிரகாசிக்கும், கை, கால் முதலியவைகளுக்குக் கூடே பொருந்தி யிருக்கப்பட்ட நூல் போன்ற நரம்புகளெல்லாம் நல்ல பலத்தை யடையும். எ—று.

சூட்சும விளக்கம்:- வெளிப்படை. (46)

இதுவுமது

விற்காமண் சீலையைப் போல
மிகுவளை வாசி நின்ற
பற்கான தந்த பந்தி
பருகியே விறுகி நிற்கும்
சொற்கேளாக் காத டைப்புஞ்
சூழ்பல பிணி யனைத்தும்
நற்பாகத் தீயிற் பற்றும்
பூனைபோல் நலிந்தே யேகும்.

(இ-ள்) கரும்பு வில்லைக் கைக்கொண்ட மன்மதனுடைய வில்லைப்போல மிகுந்தவளைவாகித் தேகமானது கூனுகின்ற விருத்தாப்பிய காலத்திலும் அசைந்து கொண்டிருக்கின்ற வரிசையாகிய பற்களெல்லாம் கெட்டிப்பட்டு நிற்கும். பிறர் பேசும் பேச்சைக் கேட்கா



திருக்கும்படியான காதடைப்பு முதலான பல பிணிகளும் நெருப்பி லகப்பட்ட பூளைப்பூப்போல பறந்தோடிப் போகும். எ...று.

சூட்சும விளக்கம்:- வெளிப்படை, (47)

கொச்சகக் கலிப்பா

சடம தனிலே தங்குகின்ற ரோமந்தன்னில்
திடமாய் நரைகள் செம்பட்டையென் றேயுரைத்த
அடவம் நரைக ளச்சமுட னேகறுக்குந்
திடமா மருந்தின் றத்துவத்தின் செய்கையிதே.

(இ-ள்) மேலும் தேகத்தில் பொருந்திய ரோமங்களிலுள்ள பலமான நரை, செம்பட்டை முதலானவைகளெல்லாம் மிகவும் பயந்தோடிப் போகும். மகா வல்லமை பொருந்திய இந்த மருந்தின் செய்கையிது வாகும். எ...று.

சூட்சும விளக்கம்:- வெளிப்படை. (48)

இதுவுமது

ஏட்டிலெழுதி முடியுமோ விதன்பெருமை
பாட்டிலே பாடிப் படிப்பவர்பா ரிலரிதே
நாட்டி லுறைந்த நரர்காணா முரைத்தகற்பங்
காட்டிலுறை சித்தர்களுங் காணத்தகுமோகாண்

......

இப்பாட்டின் மருந்தின் பெருமை சொல்கின்றார்.

(இ-ள்) மானிடர்களே! இந்த மருந்தின் பெருமையை ஏட்டிலெழுதி முடியுமோ? இதைப் பாட்டாகப் பாடிப் படிப்பதென்றாலும் மிகவும் அருமையாகும் நாம் சொன்னதாகிய இந்தக் கற்பமானது வனங்களிடமாகச் சஞ்சரிக்கின்ற சித்தர்களுக்குங் கிடைப்பதரிதாகும் எ—று.

சூட்சும விளக்கம்:- வெளிப்படை. (49)

கந்த விருத்தம்

காயசித்தி யானதிது கண்டறிநீ காந்த
நாயனரு ளாலேயிது நாமறிவ தாகும்
மாயமன மாதரை மனத்தினிலுன் னாதே
காயநிலை யாவதொரு காரியமோ காணே.

இதுவுமது

(இ-ள்) மனிதர்களே! இந்த மருந்தே காயசித்திக்குரியது. இது கடவுளினுடைய கிருபா கடாக்ஷத்தினாலேயே நாம் அறியப்பட்டது. ஆதலால் இந்த மருந்தை உண்டு சாதிக்கவேண்டுமானால் ஸ்திரீபோகத்தைக் கனவிலுங் கருதாதே. இந்தப்படி செய்வாயானால் காயம் நிலைத்திருப்பது ஒரு பெரிய காரியமல்ல. எ—று.

சூட்சும விளக்கம்:- வெளிப்படை. (50)

இதுவுமது

தூயவழி நீதிநெறி சோதியுரை வாக்குத்
தீயிலுறு பஞ்செனவே செப்புமொழி தப்பா
தூயமுற வேமருந்தை மண்டலநீ யுண்டால்
ஆயுளது மாயிரமா மாதிதிரு வாணை.

இதுவுமது

(இ-ள்) பரிசுத்தமாகிய வேதாந்த மார்க்கத்தினால் கண்டு பிடிக்கத்தக்க பரஞ்சோதியாகிய கடவுளினது வாக்காகிய இந்த நூலினது உறுதி மொழியானது ஒரு காலமுந் தவறமாட்டாது. பஞ்சில் நெருப்பை நீட்டினால் எவ்விதஞ் சுலபமாகப் பிடித்துக் கொள்ளுமோ அவ்விதமே இந்த நூலின் முறைகளைக் கண்டு செய்தால் அவைகள் நிச்சயமாகப் பலிக்கும். களங்க மறும்படியாக இந்த மருந்தை முன் சொல்லியபடி ஒரு மண்டலம் வரை பத்தியத்தோடு உண்பீர்களே யானால் ஆயுளானது ஆயிரம் வருடமாகும். கடவுள் சாக்ஷியாக இது தவறாது. எ...று.



சூட்சம விளக்கம்:- வெளிப்படை. (51)

வேறு விருத்தம்

இவ்விதம் பகரும் வாறது போலேயியல் பாக
ஒவ்விய மருந்தை மண்டல மூன்று முண்பாயாய்
எவ்விய மிகுந்து நகுகதிர் மதியும் நடநாளுஞ்
செவ்விய சீவ னுடனெழிற் செகத்திற் றிரிவாயே.

......

இப்பாட்டிலும் மருந்தின் வல்லபஞ் சொல்கின்றார்

[இ-ள்) மேற்சொல்லிய விதமாகவே பொருத்தத்துடனே அமைந்த இந்த மருந்தை இவ்விதமான பத்தியங்களோடு மூன்று மண்டலம் வரை சாப்பிடுவாய். அப்படிச் சாப்பிட்டால் அழகு மிகுந்து பிரகாசிக்கும்படியான சூரியர் சந்திரர்களிருக்கும் வரையிலும் இறவாமல் செம்மை பொருந்திய ஜீவனோடு நலமிகுந்த இந்தப் பூவுலகத்திற் றிரிவாய்.எ—று.

சூட்சும விளக்கம் :—இந்த மருந்தை ஒரு மண்டலம் சாப்பிட்டால் இதற்குமுன் கூறிவந்த குணங்களெல்லாம் உண்டாகுமென்றும், மூன்று மண்டலம் சாப்பிட்டால் சூரிய சந்திரருள்ள வரையிலும் உயிரோடிருக்கலாமென்றும் அறியவேண்டியது.

இதுவுமது

வயததுபதினா றுவடி வெனவே வலிகூற
நயமுடன் சரீர நடிநடி பலனு நனிசீத
வயமிகு வனச மலர்நிகர் முகமும் வளர்சோதி
சுயகுண தரமுஞ் சுழிமுனை யறிவுந் தொகையாமே.

இதுவுமது

(இ-ள்) இன்னும் இவனுக்கு வயது பதினாறு என்று சொல்லும்படியான ரூபமும், வலிமிகுந்து பிரகாசிக்கும்படியான சரீரமும், மிகவும் குளிர்ச்சியும் அழகுமுடைய தாமரைப் புஷ்பமென்று சொல்லும்படியாகிய முகமும், தீரமும் பொருந்திய மனவலியும் ஞானமார்க்கத்தைத் தெரிந்து கொள்ளும்படியான சிறந்தஅறிவும் உண்டாகும். எ...று.

சூக்ஷும விளக்கம்:—வெளிப்படை. 53

பள்ளுச்சந்தவிருத்தம்

மருந்தி னருமை வழுத்தத் கேட்டு
மாதவத் தினரு டங்கி டும்
பொருந்தி யஞானத் திரட் கடலலை
புரண்டு மேபொங்கி வழிந்திடும்
அருந்த வத்தொடு மவுன தேசிக
ரருமை யாயவ னுறைந்திடுந்
தெரிந்திடும்படி செய்யுஞ் சற்குரு
சீத மலரடி சூடிடு,

இப்பாட்டில் மருந்தின் பெருமை கூறுகின்றார்.

[இ-ள்.) மானிடர்களே! இந்த மருந்தின் பெருமையைச் சொல்வேன் கேட்பீர்களாக. மகா தவத்தினால் எந்தப் பிரயோசனங் கிடைக்குமோ அந்தப் பிரயோசனங் கிடைக்கும். அமைந்த ஞானமாகிய கடலானது அலைபுரண்டு குதித்து வெளிப்படும். [ஞான முண்டாகும் என்றபடி] அருமையாகிய புண்ணியத்தினோடு பொருந்தியவராகிய கடவுள் தானாக விளங்குவார். இவற்றையெல்லாம் தெரியும்படி செய்பவரான நற்குரு பாதத்தைச் சிரத்தின்மீது சூட்டிக் கொள்வீர்களாக. எ...று.



சூட்சும விளக்கம்...வெளிப்படை.

எண்சீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

கேளப்பா சித்தாந்த வேதாந் தங்கள்
கெடியான வறிவுதங்கு பீட மாச்சு
சாளப்பா தன்னைத்தா னறிந்தோ னாகிச்
சதாசிவமே யெப்போதுந் தயங்கக் காண்பாய்
சூளப்பா வுணாவுந்திச் சூட்ச மோடு
சுழிமுனையிற் சுடரெழுந்த சூட்சங்காண்பாய்
தாளப்பா கோடான கோடி காலந்
தாத்திரியிற் சாவில்லை தனுசா கேண்மின்

இதுவுமது

(இ-ள்.) மைந்தரே கேட்கக் கடவீர்கள் இன்னும் இந்த மருந்தினால் சித்தத்தின் முடிவும், வேதத்தின் முடிவுமாகிய பலம் பொருந்திய பிரம்மாவாகிய அறிவானது தங்குமிடத்தைக் காண்பீர்கள். நீங்கள் ஒவ்வொருவரும் தன்னையறிந்தவர்களாகி எப்பொழுதுஞ் சதாசிவமே பிரகாசித்துக் கொண்டிருக்கப் பார்ப்பீர்கள். இன்னும் மூலாதார முதலிய சூட்சங்களையும், சுழிமுனையென்ற நாசிநடுவிலே பிரகாச முண்டாகும் மர்மத்தையும் சுலபமாகத் தெரிந்து கொள்வீர்கள். இவைகளைத் தவிர உங்களுக்கு இந்தப் பூவுலகத்தில் கோடா கோடி காலம் சாவே கிடையாது எ...று.

சூட்சும விளக்கம்:—இந்த மருந்தை முடித்துண்டவன் முத்தியை யடைவானென்பது நிச்சயமாகவிளங்குகின்றது.

இதுவுமது

வெற்றியுறு மருந்துதன்னை யருந்து முன்னம்
விருவான மண்டலந்தான் பத்திய மொன
தத்துவத்தின் மருந்ததுவைப் பருகும் போது
தயவாக மண்டலந்தான் பத்திய மொன்று

சுத்தமுறு மருந்ததனை யுண்ட பின்பு
சொல்லுகின்ற மண்டலந்தான் பத்தியமொன்று
மூற்றுதலு முடிந்தபின்பு மோக பாக
முயலுகின்ற வழமையெலா முயலு வீரே

இப்பாட்டில் பத்தியத்தின் கிரமங் கூறுகின்றார்.

(இ-ள்.) இந்த மருந்தைச் சாப்பிட விரும்புமனிதர்களே! பலம்பொருந்திய இம்மருந்தை உண்குமுன் ஒரு மண்டலம் பத்தியமும், இதை உண்ணுங்காலத்தில் ஒரு மண்டலம் பத்தியமும், இதை உண்ட பின்பு ஒரு மண்டலம் பத்தியமும் ஆக மூன்று மண்டலம்வரையிலும் பத்தியமிருக்கக் கடவிர்கள். இந்த மூன்றுமண்டல முடிந்த பின்பு உங்கள் பிரியம்போல் நீங்கள் செய்யத் தக்கவைகளை யெல்லாஞ் செய்து கொள்ளுங்கள். எ—று.

சூட்சுமவிளக்கம்:... இந்த மருந்ததைச் சாப்பிடும் போது மருந்து சாப்பிடுமுன் ஒருமண்டலமும், மருந்து சாப்பிட்டபின் ஒருமண்டமும் ஆக மூன்று மண்டலம்முன் கூறியிருக்கின்ற கிரமங்களின்படி பத்தியமிருக்க வேண்டும். பின் எப்படியுஞ் செய்து சொள்ளலாம். ()

வேறு விருத்தம்

வையமாக்களே நயமாகவே வகுத்தேனிதைக் கேண்மின்
செயமாகியதிருவாக்கினாற் செப்புமொழிதப்பா
கயந்தூக்கிய வயவேதைகள் கமுறும்வகை காண்பீர்
மயமாகவே மாசைமழை மலிய்க்கலி தொலைய.

இப்பாட்டுமுதல் வேறு வேதை கூறத்தொடங்குகின்றார்.

(இ-ள்.) இந்தமுறையைக்கண்டு பிடித்ததனால், ஜெயம் பொருந்திய மனிதர்களே! உங்களுக்கு நயம் பொருந்தும்படியாக இந்த முறையைச் சொன்னேன். சற்றுகவனித்துக் கேட்பீர்களாக. வெற்றி பொருந்திய கடவுளுடைய திருவாக்கினாலே சொல்லப்பட்ட இந்த உறுதி வாக்கியமானது எவ்வளவுந் தவறாது. இனி பொன்மழையைப் பொழியத்தக்கதும் கலியை நீக்கத் தக்கதுமான வேறொரு வேதையச் சொல்கின்றேன் அறிந்துகொள்வீர்களாக எ...று.



சூட்சுமவிளக்கம்:-வெளிப்படை. [57]

அயக்களங்கு.

நொண்டிச் சிந்து

வசிதையின் மாந்தர்களே—மருந்தொன்று
வழுத்துகிறேன்வெகு திறத்துடனே
பொகவெனக் கிளம்புவனாம்...ரதகச—
துரங்கமும் பொடிபட புரட்டிடு வோன்
விசையுட னெழும்புவனாம்—விண்ணிட
மதிர்ந்திடத் திடுதிடு கடக டெனத்
தசைநெறி படபட ன-டக்குப்புக்கு
படிகிடு கிடுகிடு சடசடத் தோள்.

இப்பாட்டினால் இந்த முறைக்குரிய ஓர் சரக்கை வருணிக்கின்றார்.

(இ-ள்) உலகத்திற் பொருந்திய மனிதர்களே! ஓர்மருந்தைக் கூறுவேன் கேட்பீர்களாக. நெருப்பிலிட்டால் பொசு வென்று கிளம்பத்தக்கது. இரகஜதுரக பதாதிகளாகிய நால்வகைச் சேனைகளையும் வெகு சீக்கிரத்தில் தூளாகும்படி புரட்டி விடத்தக்கது, விரைவு கொண்டு ஆகாயத்திலெழும்புஞ் சுபாவமுடையது. அண்டமெல்லாம் அதிரும்படியாக திடுதிடு கடகட வென்னுஞ் சப்தத்தைச் செய்வது தேகத்திலுள்ள தசையானது தெறிக்கும்படியாக நுழைந்து படபட டக்கு புக்கு என்று வெடிக்கத்தக்கது. பூமியெல்லாங் கிடுகிடு வென்று நடுங்கும்படியாகச் சடசட வென்று இடிக்கத் தக்கது,எ...று.

சூக்ஷ்மவிளக்கம்:— இதனால் ஓர்சரக்கின் குணங்களை விளக்கினார். பெயர் முதலியவற்றைப் பின்கூறுவாரெனவறிக. (58)

இதுவுமது.

விட்டின்தலைப் பெயரைவிட் டோன்-றன்னொடு
விண்ணினின்று விழுபவன் பேர்கடையும்
ஈட்டிதலைப் பெயரைவிட் டோன்—றன்னோடு
இயம்புவேன் பகர்கடை பீயின்றம்பியே
கூட்டியெடு கழஞ்சிரெண்டு—பொறுமின்
கூறுவேன் வேறுமொன்று குறிப்புடனே
நாட்டிலுள்ள மாந்தர்க ளே—யிவ்வேதை
நண்பாக வறிந்திடுந் தென்பாகவே

இப்பாட்டில் முற்குறித்த சரக்கின் பெயர் அளவு முதலியவற்றைக் கூறுகின்றார்.

[இ-ள்.] வீடென்ற பதத்திற்குப்பிரதி பதமாயுள்ள வோர் சொல்லுக்கு முதலிலிருக்கு மோரெழுத்தைவிட்டு நீங்கிய அதற்கடுத்ததாகிய முன்னுள்ள வோரெழுத்தினோடு ஆகாயத்திலிருந்து விழுவதாகிய ஒன்றின் பெயரின் கடையெழுத்தையும், ஈட்டியென்னும் பெயரில் முதலிலிருக்கின்ற எழுத்தைவிட்டு நீங்கிய அதற்கடுத்ததாகிய வோரெழுத்தையும், பகரத்தின் கடையெழுத்தையும் பீயென்ற எழுத்திற்குத்தம்பியாகிய வோரெழுத்தையும், கூட்டி ப்பராக்க எப்பெயரமையுமோ அப்பெயருள்ள ஓர்சரக்கில் இரண்டுகழஞ்சி யெடுக்கக் கடவீர்கள். இத்தமிழ் நாட்டிலுள்ள மனிதர்களே சற்று பொறுப்பீர்கள். மேல்நடக்கவேண்டியவற்றையுங் கூறுகின்றேன். இந்தவேதையை நன்குணர்ந்து கொள்வீர்களாக எ—று.

சூக்ஷ்மவிளக்கம்:— வீடு என்ற பதத்திற்குப்பிரதி பதமாயுள்ள ஓர் சொல்லாவது வேயுள். இதற்கு முதலிலுள்ள ஒரேழுத்தாவதுவே இதைவிட்டுநீங்கிய இதற்கடுத்துள்ள முன்னெழுத்தாவது (வெ.) ஆகாயத்திலிருந்து விழுவதாகிய ஒன்றின் பெயராவது-இடி இப்பதத்தின் கடையெழுத்தாவது (டி) ஈட்டியென்னும் பெயரில் முதலிலிருக்கின்ற எழுத்தாவது-ஈ-இதைவிட்டு நீங்கிய இதற்கடுத்துள்ள வோரெழுத்தாவது [உ] பகரத்தின் கடையெழுத்தாவது (ப்) -பீ-யென்ற எழுத்திற்குத் தம்பியாகிய வோரெழுத்தாவது (பு) ஆக இந்த ஐந்தெழுத்திக்களையுங்கூட்ட [வெடிஉப்பு) என்றானது. இதுவே மேற்கூறிய சரக்காம் இதை (வெடியுப்பு) எனக்கொள்ள வேண்டியது.



இங்கு வீட்டிற்கு வேயுள்ள என்ற ஓர்பிரதிபதம் எடுத்திருப்பதில் வேயுள் என்பது கூரை வீட்டுக்குரிய பெயராதலால் வீடு என்ற பொதுப்பெயருக்கு அது நேரான பிரதிபதமாகாவிடினும் இங்கு மருந்தை யறிய வேண்டிய குறிப்பு நோக்கி இந்த வேயுள் என்ற சிறப்புப் பெயரையும் பொதுப் பெயராக்கப்பட்டது. [59]

விபரம்.

வெடியுப்பு — 8.8 கிராம்

சந்த விருத்தம்

வீரமென் றிடும்பேர்தலை தள்ளிநீ
வெற்றி யாகவே சித்தர் குடியிலைச்
சாரமாகத் தலைரெண்டு போக்கிடு
சாய லான மருந்தது தன்னையும்
ஈரமாக விருகழஞ் சியெடி
ரண்டு மொன்றா யிடுகல்வ மீதினிற்
றூரா மாகத் துருசி லூருசுண்ணந்
தூவு வாயரி சியிடை துங்கமாய்.

இப்பாட்டில் ஒரு சரக்கின் பெயரும் நிறையும் பின் செய்யவேண்டிய முறையுங்கூறுகின்றார்.

(இ-ள்.) வீரம்-என்ற பெயரினது முதலெழுத்தைத் தள்ளிவிட்டு நின்ற வெழுத்துக்களோடு வீரம் பொருந் தும்படியாகச் சித்தர் குடியிலை யென்று சொல்லப்படுவ தாகிய ஓர் பச்சிலையின்பேரில் முதலில் நின்ற இரண் டெழுத்துக்களைத் தள்ளிவிட்டு மீதிநின்ற எழுத்தை முதலிற் சேர்த்தால் எப்பெயரையுமோ அப்பெயருள்ள சரக்கில் அன்போடு இரண்டு கழஞ்சி யெடுத்து முன் பாட்டிற்கூறிய வெடியுப்போடு சேர்த்து ஆக இவ்விரண் டையும் ஒன்றாகக் கல்வத்திற் போட்டு இரண்டாவது காண்டத்திற் சொல்லியிருக்கப்பட்ட துருகச் சுண்ணத் தின் அரிசியெடை யெடுத்து அதன்மேல் உயர்வு பொருந் தும்படியாக தூவக்கடவாய். எ—று.

சூட்சும விளக்கம் :—வீரம் என்ற பெயரின் முத லெழுத்தைத் தள்ளி நின்ற எழுத்துக்களாவன (ரம்.) சித்தர் குடியிலை யென்று சொல்லப்படுவதாகிய ஒரு பச்சிலை யாவது-கஞ்சா. இப்பெயரில் முதலில் நின்ற இரண்டெழுத்துக்களைத் தள்ளி விட்டு நின்ற ஓரெழுத் தாவது (சா.) இதை முன்னின்ற (ரம்.) என்றபதத்திற்கு முதலிற் சேர்க்க (சாரம்.) என்றானது. இதைக் குறிப் பினால் (நவரச்சாரமென) அறிய வேண்டியது. இந்த நவாச்சாரத்தையே யிரண்டு கழஞ்சியெடுத்து முன் வெடியுப்போடு கலந்து, கல்வத்திற் போட்டு இரண்டாங் காண்டத்திற் சொன்ன துருசுச் சுன்னத்தில் அரிசி யெடை யெடுத்துத் தூவவேண்டியது.

கஞ்சாவைச் சித்தர் குடியிலை யெனச் சொல்வது மகான்களுடைய கொள்கையும், வைத்தியப் பரிபாஷை யின் கிரமமு மா மெனக் கொள்க. அல்லது சித்தர்களால் அதிலிருந்துண்டாகும் புகையைக் குடிக்கத்தக்க இலை யெனப் பிரித்து அப்பொருள் கொண்டு அதைக் காரணப் பெயராக்கினும் அமையும். சாரம் என்றதை நவாச்சார மெனக் கொண்டதும் வைத்தியப் பரிபாஷைக் குறிப்பின் கிரமமாம். (60)



விபரம்

நவாச்சாரம் கழஞ்சி 2

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

துங்கமா மருந்து தன்னைத்
தொகையுடன் சாமம் ரெண்டு
தங்கிடா வாட்டு வாட்டு
தளம்பியே கூழ தாகும்
பொங்கெழிற் பீங்கான் றன்னிற்
பொற்புடன் வழித்து வைத்து
மூங்கிய பனியில் வைப்பாய்
மொழிகுவே னாள்மூன் றாக.

.........

இப்பாட்டில் முன் கல்வத்திற் போட்ட மருத்தைப் பின் செய்யவேண்டிய விதஞ் சொல்கின்றார்.

(இ-ள்.) முன் பாட்டிற் சொன்னபடி கல்வத்திற் போட்டுத் துருசுச் சுண்ணத்தைத் தூவி வைத்திருக் கின்ற மருந்தைக் கணக்காக (ஆறு மணி நேரம்) நிற்காமலரைக்கக் கடவாய். அப்படி அரைத்தால் அந்த மருந்தானது தளம்பிக் கூழைப்போலாகும். பின்பு அதனை வழித்தெடுத்து அழகு மிகுந்த ஒரு பீங்கான் பாத்திரத்தில் அப்பி அதனோடு மூன்று நாள்வரை பனியில் வைத்தெடுக்கக் கடவாய். இன்னமுஞ் சொல் வேன் கேள். எ—று.

சூட்சும விளக்கம் :—வெளிப்படை. (61)

கலி விருத்தம்

இங்கு ரைத்த வெழிற்சரக் காணதைக்
கங்குல் போன்றிடு கல்வத்தி லிட்டுநீ
துங்க மாகமுன் சொல்லுஞ் செயநீரை
அங்க மாக விடுத்தே யரைத்திடு

இப்பாட்டில் முன் பனியில் வைத்த மருந்தைப் பின் செய்யு மார்க்கங் கூறுகின்றார்.

(இ-ள்.) மேலே சொல்லியபடி பனியில் வைத்த தாகிய அந்த மருந்தைப் பழையபடியும் கறுப்புநிறம் பொருந்திய கல்வத்திற் போட்டுச் சிரேஷ்டம் பொருந் தும்படியாக இக்காண்டத்தின் முதலிற் சொல்லியிருக்கப் பட்ட ஜெய நீரை இதற்குத் துணையாக விட்டு அரைக்கக் கடவாய். எ—று.

சூட்சும விளக்கம் :—வெளிப்படை (62)

கொச்சகக் கலிப்பா

அரைத்த மருந்தை யன்புடனே வழித்தெடுத்து
உரைத்த முதலும்ரக ரோடே யொளிதிகழும்
யரைத்த பகரப் பத்தினமு மிடிகடையே
இரத்த முடனே வாங்கிடுவாய் பலமிரண்டே

———

இப்பாட்டில் இம்முறைக்குச் சேர்க்கவேண்டிய வேறொரு சரக்கின் பெயரும் நிறையுஞ் சொல்கின்றார்.

(இ-ள்,) முன்பாட்டிற் குறித்தபடி ஜெயநீர் விட்ட ரைத்த மருந்தைப் பிரியத்தோடு வழித்தெடுத்து சொல்லப்பட்ட எல்லாவற்றிற்கு மூதாகிய வெழுத்தும், அதனோடு ரகரமும், பிரகாசிக்கும்படியான பகரத்தின் பத்தாமெழுத்தும், இடியென்ற பதத்தின் கடையெழுத் தும் சேர்ந்தால் எப்பெயரமையுமே அப்பெயருள்ள வேர் சரக்கில் இரண்டு பலம் வாங்கக்கடவாய். எ—று.

சூட்சும விளக்கம் :—எல்லாவற்றிங்கும் முதலாகிய வெழுத்தாவது (அ.) ரகரமாவது (ர.) பகரத்தின் பத்தா மெழுத்தாவது [பொ,] இடியென்ற பதத்தின் கடை யெழுத்தாவது [டி.] ஆக இந்நான்குஞ் சேர [அரபொடி] யென்றானது. இதுவே மேற்குறித்த சரக்காம். இதி லேயே [70 கிராம்] வாங்கவேண்டியது. இதை இன்னது செய்யவேண்டு மென்பதைப் பின் கூறுவார். [63]



விபரம்

அரபொடி பலம் 2 70 கிராம்

இதுவுமது

வாங்கு மருந்தில் வழுத்திடுமுன் மருந்துதனைப்
பாங்காயப் புரட்டிப் பண்புடனே வாரியிடு
மூங்கை தனிலே யமைத்தொரு மூசைதனிற்
றூங்கா மகனே சூட்சமினிச் சொல்லுகின்றேன்.

.........

இப்பாட்டில் முன்வாங்கிய அரபொடியைப் பின் செய்யும் விதங் கூறுகின்றார்.

[இ-ள்.] முன்பாட்டிற் கூறியபடி யிரண்டு பலமாக வாங்கிய அரபொடியில் முன் அரைத்து வைத்திருக்கிற மருந்தைப் போட்டு நன்றாகப் புரட்டி அதையெடுத்துக் கும்பிடு கிளிஞ்சியினாற் செய்திருக்கப்பட்ட மூசையிற் சிநேகத்தோடு போட்டு இனிமேற் செய்யவேண்டிய விதத்தையுஞ் சொல்லுவேன் எனது குமாரனே கேட்பா யாக. எ—று.

சூட்சும விளக்கம் :...வெளி-படை. [64]

இதுவுமது

உலையிலே மூசைதனை வைத்தேதா னூதிடவே
அலர்ந்தே யுருகி யிடுமணியா யணங்காகப்
புலர்ந்தேபொன் போல வண்ணமது புகரமுறுங்
கலந்தேதான் கண்விட் டாடிடுமே கனகமென

.........

இதில் முன் உலையில் வைத்த மருந்து பின்னாகும் விதத்தைக் கூறுகின்றார்.

[இ-ள்.] முன் கூறியபடியே மருந்து பொதிந்த மூசையை உலையில் வைத்தூத அந்த மருந்தானது

மலர்ந்து மணிபோல அழகாக உருகிடும். அது நன்றாய்க் காய்ந்து பொன்னைப் போன்றநிறத்தினைப் பொருந்தியிருக்கும். அந்த அரபொடியும் மருந்துங் கலந்து தங்கத்தைப்போல பிரகாசிக்கும். எ...று.

சூட்சும விளக்கம் :...வெளிப்படை. [65]

சந்த விருத்தம்

கனகம் போலவே கண்விட் டாடிடக்
காணு மாக்களே கழலு வேன்
இனமும் வேறொன் றியம்பு வேனிது
ஏழு வசுதைசு மப்ப வன்
தனது பேர்நவ லோக மொன்றதிற்
சமனி கூறதாக்கு தயவு டன்
தனம தாகவே வீரங் கழஞ்சிநீ
தாக்கு வாயதில் மூர்க்க மாய்.

.........

இப்பாட்டில் பின் சேர்க்க வேண்டிய வேறு மருந்துகளின் பெயரு நிறையுங் கூறுகின்றார்.

[இ-ள்.] முன்சொன்ன மருந்தானது பொன்னைப் போலப் பிரகாசிக்கக் கண்டறிந்த மனிதர்களே! இன்னும் இதிற் செய்யவேண்டிய வேறொரு மார்க்கத்தையும் சொல்வேன் கேட்பீர்களாக. ஏழு விதமான பூமிகளையுஞ் சுமக்கத்தக்க வனாகிய ஒருவனது பெயரை கொண்ட நவலோகங்களி லொன்றாகிய ஓர்சரக்கில் முன் மூசையில் வைத்துருக்கி யிருக்கின்ற மருந்திற்குச் சமனெடையும், வீரம் ஒரு கழஞ்சியும் எடுத்து அந்த மூசையிலிருக்கப்பட்ட மருந்தினோடு பலமாகப்போடக்கடவாய். எ—று.

சூட்சும விளக்கம் :—ஏழு விதமான பூமிகளைச் சுமக்கத் தக்கவன் ஆதிசேடன் அவனுக்கு ஜாதிநாமமாவது [நாகம்] இந்தப் பெயரைக் கொண்ட நவலோகங்களி



லொன்றாகிய சரக்காவது [நாகம்] இதையே முன் மருந்திற்குச் சமனெடை யெடுத்துக் கொள்ள வேண்டியது. [66]

யிபரம்

| | |
|---|---|
| நாகம் | சமனெடை |
| வீரம் | 4.4 கிராம் |

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

தாக்கிட மருந்தை யுண்டு
தளதளப் பாகிப் பொங்கி
நோக்கிய போதி லன்பா
னுடங்கியே களங்க மாகுந்
தீக்குழி தனை விடுத்துத்
திறமுட னெடுப்பாய் கையிற்
பாக்கியம் வளர வேதை
பண்போடு பகரு வேனே.

......

இதில் மருந்தின் முடிவு சொல்கின்றார்.

(இ-ள்) முன்பாட்டிற் குறித்தபடியே நாகத்தையும், வீரத்தையும் முன்குகையிலிருக்கு மருந்தோடு சேர்த்துருக்க அம்மருந்தானது இவைகளையுண்டு தளதளப் பாகக் கொதித்துப் பிரியத்தோடு பார்க்கும்போது மெதுவான கவங்கமாகித் தோற்றும். உடனே அதை அக்கினியினின்று மெடுப்பாய். உன்னிடத்தில் அதிக செல்வமானது வளரும்படியான இதனது வேதைகளை சிநேகத்தோடு கூறுவேன் கேட்கக்கடவாய். எ...று.

சூக்ஷும விளக்கம்:- வெளிப்படை. (67)

(வேறு) விருத்தம்

களங் காணம ருந்தின ருங்கருவை
முழங் காமறை முத்தொழி லோனறிவன்

விளங் காமலே வீணுறச் சுட்டவன்முன்
களங் கானம ருந்தைக் கையெடு நீ

இதுமுதல் இம்மருந்தின் வேதை சொல்கின்றார்.

(இ-ள்) கருவென்று சொல்லப்பட்ட இம்மருந்தாகிய அயக்களங்கினது பெருமையை முழங்கத்தக்க வேத முதல்வனும், முத்தொழில்கட்டு அதிகாரியுமாகிய கடவுளே யறிவானல்லது மற்றுயாரறிவார். இந்தவித மார்க்கத்தை யின்னதென்றறியாமல் வீணாகச் சுட்டலைந்து கெட்ட மனிதர்களுக்கு முன்பாக வெற்றிபேசி இந்தக் களங்கமாகிய மருந்தை நிலையிலெடுக்கக் கடவாய். எ—று.

சூக்ஷும விளக்கம்:— வெளிப்படை. (68)

இதுவுமது

தாம்பூரத்திற் றாக்கிடு வாய்நிறை நீ
வீம்பூ றிட விள்ளுவ னூற்றிலொன்று
தேம்பூ ரிடச் சேர்த்திடத் தீங்ககன்று
தாம்பூ ரண மாகிடுந் தங்கமதே.

—

இதில் மேற்படி களங்கின் வேதை சொல்கின்றார்.

(இ-ள்) மேற்சொல்லிய அயக்களங்கைத் தாம்பூரத்தில் நூற்றுக்கொன்று சேர்த்துருக்கினால் தாம்பூரத்தினது துர்க்குணங்கள் நீங்கி நிறைந்த தங்கமாகும். மயக்க நீக்கும்படியாக இன்னமுஞ் சொல்வேன் கேட்பீர்களாக. எ—று.

சூக்ஷும விளக்கம்:—வெளிப்படை. (69)

சந்த விருத்தம்

மிகுசே ரொளி திகழ்வெண் கதிர்
வியன்சே ரிர சிதத் திற்



றகுமா கவே மூந்நூற்றினி
லொன்றே தய வுடனே
சிகைசேர்த் திட மிகுவெண்மையின்
நிற மற்றது தியங் கித்
தகை யுற் றுமஞ் சணியா முறை
தனின் மாற்றது பத்தே.

இதில் வேறு வேதை சொல்கின்றார்.

[இ-ள்] இன்னும் இதனை மிகுந்த பிரகாசமானது விளங்கா நின்ற வெள்ளிய கிரணங்களையுடைய அழகு பொருந்திய வெள்ளியில் தகுதி பெறும்படியாக முந்நூற்றிலொன்று சிநேகம் பொருந்திச் சேர்த்துருக்கினால் வெள்ளியினது வெள்ளை நிறமானது நீங்கி நல்ல மஞ்சணிறத்தை யடைந்து பத்துமாற்றுள்ள தங்கமாகும். எ—று.

சூக்ஷும விளக்கம்:- வெளிப்படை. [70]

இதுவுமது

பத் தாகிய மருந் தாலுயர்
பணி யின்பெயர் தனி லே
பத் தானது வைக்கா ணவே
பகர் வேனொரு நூற்றிற்
சித் தாகவே வியற் றத்திக
ழொளி யாய்ச்சிவ மய மாய்க்
கத் தாவுரைப் படி யேவெகு
கன முற்றிடுங் கன கம்.

......

இதில் வேறு வேதை சொல்கின்றார்.

[இ-ள்] முன்சொன்னபடி பத்து மாற்றாக்கிய மருந்தினால் பத்து மாற்றாகிய தங்கத்தை பாம்பினது பெயரையுடைய ஓர் சரக்கில் நூற்றிற் கொன்று

சேர்த்துருக்கப் பிரகாசிக்கும் படியான ஒளியினையுடைய தாய்ச் சிவனைப் போன்ற சிவந்த நிறத்தையுடைய தங்கமாகும். கடவுளுரைத்தபடியே நான் சொல்வதால் இது தவறானது. இன்னமுஞ் சொல்வேன் கேட் பாயாக. எ—று.

சூக்ஷுm விளக்கம்:—பரம்பினது பெயரையுடைய ஓர் சரக்காவது [நாகம்]. இந்த நாகத்திலேயே நூற்றிற்க் கொன்று கொடுக்க வேண்டியது. [71]

நொண்டிச் சிந்து

கனகமென் றுரைத்ததுவே—வணிகர்
கடையினி லுரைத்திட கருவயது
வனமுறு பத்தரையா—மெழிலுற
வசரமொடு ரத்தமணி மெச்சிடுமௌலி
தனமாக மேலிடு வோன்—சகத்திற்
றங்கமிது போலுமெழிற் பொங்கிடாது
இனமினி வேறுசொல் வேன்—சூதாக
வெற்றுவேர்க் கிக்கருவை யுற்றிடாதே.

——

இதில் முன் சொல்லிய வேதையின் பெருமை சொல்கின்றார்.

[இ-ள்] முன்பாட்டிற் கூறிய தங்கமானதுசெட்டிகள் கடையிலுரைத்துப் பார்த்தால் பத்தரை மாற்றுள்ளதா கும். இந்தத் தங்கமானது வயிரம், சிவப்பு முதலியவை களை வைத்துப் பதித்துப் பலவிதமான மேலாகிய ஆபர ணங்களையும் கிரீட முதலானவைகளையுஞ்செய்வதற்கு உபயோகமாகும். பூவுலகத்தில் மற்ற தங்கங்களெல்லாம் இதைப்போல் பிரகாசத்தைச் செய்யாது. இனி வேறு முறை கூறுவேன். இதை ஏமாற்றுபவர்களுக்குச் சொல்லாதே.

சூக்ஷுm விளக்கம்:- வெளிப்படை. [72]



அயச்செம்பு

திருப்புகழ் சந்தவிருத்தம்

படிகிடு கிடுவெனப் பாந்தளின் படமுடி
நெறுநெறு நெறுவென வாரி முங்கிடப்
பருதம் போலுயர் தேரு ருண்டிட - வெகுதூளி
படலமை யெழும்பியே பானு வின்சுடர்
பகிரெரி கிரணமும் பண்டொ ழிந்திடப்
பரியொடு குஞ்சரம் பம்பிப் பூசலின்—மிகுமோசை
இடியென முழங்கிட வேந்த லின்றவி
லிகுளையின் வாச்சியம் வாய்ந்து பேசிட
வெரிமணி குடைகொடி சூழுசாமரை—யிருபாலும்
பிடியுற மாக்களுள் ளாக்க மாகவே
பீடுற வேந்துவு மேந்த லோடெதிர்
பின்னிய படைகொடு தாக்கும் போதினிற்—
புரண்டோட

……

இப்பாட்டில் இந்த முறைக்குச் சேரும் ஓர் முக்கிய சரக்கின் வருணனை சொல்கின்றார்.

[இ-ள்] பூமியானது கிடுகிடு வென்றதிரவும் ஆதி சேடனுடைய பணாமுடியானது நெறுநெறு வென்று கிழியவும், சமுத்திரமானது பொங்கிக் குதிக்கவும், மலை போன்ற பல தேர்கள் உருண்டு செல்லவும், பலவிதமான தூளிப்படலங்கள் ஆகாயத்திலெழும்பிச் சூரியனுடைய பிரகாசம் பொருந்திய கிரணங்களும் மறையும்படியாகச் செய்யவும், பல குதிரைக் கூட்டங்களோடு யானைக் கூட்டங்களும் கூடி நெருங்குதலினாலே அதிகரித்த ஓசையானது இடிபோற் சப்திக்கவும், அரச சின்னங் களாகிய முரசு முதலிய பல வாத்தியங்கள் பொருந்தி முழங்கவும், பிரகாசிக்கும் படியான இரத்தினங்கள் பொருந்திய குடைகளும், கொடிகளும் நெருங்கி யிருபுற மும் விளங்குகின்ற சாமான்களும் சூழ்ந்துவரவும், காலாட்

படைகளான மனிதர்கள் மனவூக்கத்தோடு தொடர்ந்து வரவும், ஓரரசனோடரசன் எதிர்த்துச் சுற்றிக்கொண்டிருக்கின்ற படைகளை ஆயுதங்களைக் கொண்டு தாக்குதலாகிய யுத்தத்தைச் செய்யுங் காலத்திற் படைகள் பின்னிட்டோட. எ...று.

சூக்ஷம விளக்கம்:- இதனால் பின்வரப்போகும் ஓர் சரக்கின் குணத்தை வருணித்தார். மற்றவைகளை அடுத்த பாட்டிற் கூறுவார். [73]

வேறு சந்தவிருத்தம

தலைகீழுற வேகமேகிட தசைசிந்திட காகமுண்டிட
சடி லக்குரந் தாலம் வீழ்ந்திட வே
மலைபோலவே மாக்களும்மத சரியோடு மநேகமாய்விழ
மகு டாதிகள் வீக்கி வீழ்ந்திடவே
பிலமாகவே தாக்குமோக்கியன் பிறர் வெற்றியின்
மாற்றமேற்றவன்
பிரி சரவெகு வேதை யுற்றவனாம்
தலைகீதலை கன்னலின் பெயர்க் கருகாக
முன்னாட்டிதனைக்
காணாப் பெயர் தோணக் கண்டறிவாய்.

......

இப்பாட்டில் இம்முறைக்காம் முதற்சரக்கின் பெயர் முதலியவற்றைக் கூறுகின்றார்.

(இ-ள்) முன்பாட்டிற் குறித்தபடியே படைகள் பின்னிட்டோடவும், மனிதர்களது தலைகளானவை கீழே உருளும்படியாகவும், விரைவோடு மாமிசங்கள் பல விடங்களிலும் சிந்தவும், அவற்றைக் காகங்கள் யுண்ணவும், விரைவில் பலமார்புகள் பூமியில் விழும் படியாகவும் மலையைப் போல அநேக மனிதர்களும், மதம் பொருந்திய யானைகளும் உயிரற்று விழுந்து குவியவும், அநேக இராஜாக்களெல்லாம் இறந்து விழும்



படியாகவும் செய்கின்ற ஆயுதமாகி மோதுகின்ற ஆயுதமாகி மோதுகின்ற வலிமை பொருந்தியது. யுத்த வீரர்களாகிய பிறர் நான் வென்றேன் வென்றேன் என்று சொல்லத்தக்க வெற்றுச் சொல்லைக் கொடுப்பது. தைரியம் பொருந்திய வெகு விநோதச் செய்கைகளையுடையது. கன்னல் என்ற பதத்திற்குப் பிரதிபதமாயுள்ளவோர் சொல்லின் முதலெழுத்தை நீக்கிவிட்டு அதற்குப்பதிலாக இகரத்தைச் சேர்த்தால் எப்பெயரமையுமோ அப்பெயருள்ளது.எ...று.

சூட்சும விளக்கம்:...கன்னல் என்ற பதத்திற்குப் பிரதிபதமாவது கரும்பு. இதில் முதலெழுத்தைக் குறைக்கின்றது. (ரும்பு). இதன் முதலில் குறைந்த எழுத்திற்குப்பதிலாக இகரத்தைச்சேர்க்க (இரும்பு) என்றானது. இதுவே மேற்குறித்த இலக்ஷணங்களுடைய சரக்காம்.

இந்த இரும்பானது பலவித ஆயுதங்களாகிச் சுத்த வீரர்கள் செய்யும் யுத்தத்தில் மேற்சொல்லிய செய்கைகளையெல்லாஞ் செய்வதற்குக் காரணமாயிருத்தலால் அவ்விரும்பையே அச்செய்கைகளுக் குரித்தானதெனக் குறித்தார்.

கொச்சகக் கலிப்பா

இவணி லியல்பா யியம்பியநன் மருந்ததனை
நவமாய்ப் பலநீ வாங்கிடுவாய் நான்கதுவைத்
தவமா மருந்தாற் றகவேசெய் விபரமதைச்
சுவமா யிவணிற் சொல்லிடுவேன் கேட்பீரே.

இப்பாட்டில் முற்கூறிய சரக்கின் நிறை முதலியன கூறுகின்றார்.

(இ-ள்) இவ்விடத்திற் பொருத்தத்தோடு நாம் சொன்ன இந்த இரும்பை அழகாக நான்குபலம்

வாங்கச்கடவீர்கள். அப்படி வாங்கியபின் அதனைச் செய்யவேண்டிய விபரத்தைச் சுகம்பொருந்தும்படியாக இங்குசொல்வேன் கேட்பீர்களாக—எ—று.

சூட்சும விளக்கம் :—வெளிப்படை (75)

விபரம்

அயம் 140 கிராம்

வேறுவிருத்தம்

மேதினியுறையு மிருட்குலமனைத்தும் விரைந்தோடச்
சோதிசெய் கிரணக் கலைசுடர் சோமன் சொரிசூரி
வீதியி னடனம் புரியுமவ் வேளை விழுங்குகின்றோரன்
தீதுறு பேரின் றனிநவ லோகந் தனிற்சேரு.

இப்பாட்டில் இதனோடு சேர்க்கவேண்டிய ஓர் சரக்கின்பெயர் கூறுகின்றார்.

(இ-ள்) பூமியில் தங்குகின்ற இருட்கூட்டங்களெல்லாம் வெருண்டு விரைந்தோடும்படியாகப் பிரகாசத்தைச் செய்கின்ற கிரணங்களையடைய சந்திரர் சூரியர்கள் ஆகாயமார்க்கத்தில் செல்லுகின்ற காலத்தில் அவர்களை விழுங்கப்பட்டவனாகிய ஒருவனுடைய கெட்டபெயரைக் கொண்டு நவலோகங்களிலொன்றாகிய ஓர் சரக்கை யெடுத்துச் சேர்க்கக்கடவாய் எ...று.

சூட்சும விளக்கம்:—சூரியர் சந்திரர்களை ஆகாயத்திற் செல்லுகின்ற காலத்தில் விழுங்கப்பட்டவர்கள் இராகு கேது வென்னும் பாம்புகள். இவர்கள் இருவராயினும் ஜாதி ஒற்றுமைபற்றி ஒருவனெனக் கூறினார், இந்தப் பாம்புகளுக்கு மறுபெயர் (நாகம்) இதுவே மேற்கூறிய நவலோகங்களி லொன்றாகிய சரக்காம். 76

இதுவுமது

நிறையது நீதான் முனமுரைத் ததுபோ னினைவாகக்
குறையகல் குத்தந் தனிற்றலை குறை நீ குறியாத



மறைமொழி கேட்குஞ் செவியின்பேர் கடையு மருந்தாகும்
இறையவ னருளா லியற்றிடு நிறைமுன் னியலாக.

இப்பாட்டில் முன்பாட்டிற்கூறிய சரக்கின் நிறையும் வேறொரு சரக்கு நிறையுஞ் சொல்கின்றார்.

(இ-ள்) முன்னுரைத்த நாகமென்ற சரக்கிற்கு அளவு, நீ, நான், முன் என்ற கணக்காகும். இதைத் தவிர இன்னமும் குத்தம் என்ற பதத்தைத் தலைக் குறையாக்கிக் குறையான சொல்லுக்குப்பதிலாக குறிப்பாய். வேதவாக்கியத்தைக் கேட்கும்படியாகிய செவி யென்னும் பெயருக்குப்பிரதிபதமாயுள்ள ஓர் பதத்தின் கடையிலுள்ள எழுத்தைச் சேர்த்துப் பார்த்தால் எப் பெயரமையுமே அப்பெயருள்ள சரக்கில் கடவுளினுடைய கிருபையை முன்னிட்டு முன் சரக்கினளவே யெடுக்கக்கடவாய். எ—று.

சூட்சும விளக்கம்:—முன்னுரைத்த நாகமென்ற சரக்கின் அளவு நீ, நான், முன், என்ற கணக்காகுமென்றதனால் நீ-ஒன்று, நான் ஒன்று, முன் ஒன்று. ஆக மூன்றாகையால் அதன்கணக்கு மூன்றெனக் கொள்ள வேண்டியது. இதை முன்போல் என்றதனால் அயத்துக்கேற்பட்ட பலமேயெனக் கொள்ளவேண்டியது

குத்தம் என்ற பதத்தைத் தலைக்குறையாக்கியது [த்தம்] செவியென்னுஞ் சொல்லுக்குப் பிரதிபதமாவது காது. இதன் கடையெழுத்து (து) இதை முன்குத்தம் என்ற பத்தில் தலைக்குறையாக்கின எழுத்திற்குப் பதிலாகச் சேர்க்க (துத்தம்) என்றானது. இதை முன் சரக்கினளவே யெடுக்கக்கடவா யென்றதனால் இதையும் (105 கிராம்] என நிதானிக்க வேண்டியது.

ஆகவே முன்பாட்டிற்சொன்ன நாகம் (105கிராம்] இப்பாட்டிற்சொன்ன [துத்தம் 105] எடுக்கவேண்டுமென அறிக.

விபரம்

| | |
|---|---|
| நாகம் [பலம்) | 105கிராம் |
| துத்தம் பலம் 3 | 105 கிராம் |

### கொச்சகக் கலிப்பா

ஒன்றானோ ரூறன்முறையி லூற்றாறு நீக்கியெடு
நன்றாக நாவைவிட்டோன் றனினாட்டு பதினொன்றை
தன்றானிற்பேர்முதலுஞ் சாகரத்தின் முதலடுத்தோன்
மன்றான பேர்முதலின் வகையதனிற் கடையாமே.

இப்பாட்டில் இம்முறைக்காம் ஓர் சரக்கின் பெயர் சொல்கின்றார்.

[இ—ள்) வரிவடிவில் ஒன்று என்று சொல்லப்படுவதாகிய ஓரெழுத்தின் வரிசையில் ஆறெழுத்துகளை நீக்கிநின்ற ஏழாவதெழுத்தை யெடுத்து நலம் பொருந்தும்படியாக அதனோடு நகரவரியில் நாவென்ற எழுத்தைத் தள்ளி அதற்கடுத்த வெழுத்திலிருந் தெண்ணிவந்த பதினோரா மெழுத்தையும், தன்று என்ற பதத்தின் முதலெழுத்தையும், சாகரத்திற்குப் பிரதிபதமாயுள்ள வோர்சொல்லின் முதலெழுத்தையும் ஒன்று என்ற பதத்திற்கு முதலிலிருக்கப்பட்ட எழுத்தின் வரியிற் கடையெழுத்தையும் சேர்க்கக்கடவாய். அப்படிச் சேர்த்தால் ஒரு பெயரமையும்.எ—று.

சூட்சும விளக்கம் :—வரிவடிவில் ஒன்றென்று சொல்லப்படுவதாகிய ஓரெழுத்தாவது ககரம். இதன் வரியில் ஆறெழுத்துக்களை நீக்கி நின்ற ஏழாவதெழுத்தாவது (கெ.) நகரவரியில் நாவென்ற எழுத்தைத் தள்ளி அதற்கடுத்த வெழுத்திலிருந் தெண்ணிவந்த பதினோராமெழுத்தாவது (ந்) தன்று என்ற பதத்தின் முதலெழுத்தாவது (த) சாகரத்திற்குப் பிரதிபதமாயுள்ளவோர் சொல்லாவது கடல். இச்சொல்லின் முதலெழுத்தாவது (க) மன்று என்ற பதத்தின் முதலிலிருக்



கப்பட்ட எழுத்தாவது மகரம். இந்த மகரவரியின் கடையெழுத்தாவது (ம்) ஆக இவ்வைந்தெழுத்துக்களையுங் கூட்ட (கெந்தகம்) என்றானது. இதுவே இப்பாட்டிற் குறித்த சரக்காம். இதனிறை முதலியவற்றை அடுத்த பாட்டிற் கூறுவாரென வறிக.

### இதுவுமது

கடையென்னு மருந்துதனிற் கணக்குடனேபலமொன்று‘
கெடியுறமுன் வகையாகக் கிளத்தியதோர்
சரக்கையெல்லாம்,
தடியுறுமா குகைதனிலே தயவுடனே தாக்கிடுமின்’
முடிவுறுநல் வேதையினி மொழிகுவேன் மாந்தர்களே.

இதில் முற்பாட்டிற்குறித்த சரக்கினிறையுஞ் செய்முறையுங் கூறுகின்றார்.

(இ...ள்) முன்பாட்டிற் கெந்தகமென்று சொல்லிய சரக்கில் கணக்காக 35 கிராம் அளவு பொருந்தும்படியாக முன் சொல்லியிருக்கின்ற மூன்று சரக்குகளையுஞ் சேர்த்து பலம்பொருந்திய குகையிற் போடக்கடவாய். இவற்றால் முடிவுபெறும் பல வேதைகளை யினிச்சொல்வேன். மனிதர்களே! கேட்பீர்களாக.

சூட்சும விளக்கம்:—வெளிப்படை. முன் சொல்லிய சரக்குகள் மூன்று இப்போது சொல்லிய கெந்தகம் ஒன்று ஆக நான்கையும் குகையிற் போடவேண்டியது.

எல்லாச் சரக்குகளின் விபரம்

| | |
|---|---|
| அயம் | 140 கிராம் |
| நாகம் | 105 கிராம் |
| துத்தம் | 105 கிராம் |
| கெந்தகம் | 35 கிராம் |

மனுதுஞ்சிட வுயிர்வந்திட வலிசெய்வலியுடையோன்
தனுவந்திடு பிணிநோய்தனைத் தகர்த்தேய
கற்றெமனாம்
நனிவுற்றிடு மருந்தானதி னவில்வேலொரு பணமே
தனைமாட்டியே குகையானதைத் தழல்மூட்டி நீ யூது.

——

இதில் முன் குகையிற்போட்ட மருந்தைப் பின் செய்யவேண்டிய விதஞ் சொல்கின்றார்.

(இ-ள்) மானிடர்கள் இறந்து போகின்ற காலத்தில் உயிர் வரும்படியாகச் செய்யத்தக்க வலிமை பொருந்தியதும், உடலிற் பொருந்தும்படியான பலவிதமாகிய நோய்களை எமன்போற் சின்னாபின்னமாக்குவதுமான ஓர் மருந்தில் ஒரு பணவெடை யெடுத்து முன் நான்கு சரக்குகளைப் போட் வைத்திருக்கிற குகையிற்போட்டு அந்தக் குகையை நெருப்பிலே வைத்து ஊதக்கடவாய். எ—று.

சூட்சும விளக்கம் :— உயிர்பெறச் செய்வதாகிய மருந்தானது இரண்டாங் காண்டத்திற் சொல்லியிருக்கின்ற துருசுச் சுண்ணம். ஆனதால் இந்தத் துருசுச் சுண்ணத்திலேயே ஒருபணவெடை யெடுத்துப் போடவேண்டியது.

இதுவுமது

ஊதச்சுட ரொளியாயது வுருகிக்கலந் தொன்றாய்
வீதிக்கொதித் திடுபோதினில் விள் வேனதை நீ செய்
காதின்பெயர் தலைதன்னிலே ரகரும்மகர் கடையே
போத்துடன் குகையுள் ளினிற் புர வாயொருகழஞ்சி

——

இதில் முன் குகையில் வைத்தூதிய மருந்தைப் பின் செய்யவேண்டியவிதஞ் சொல்கின்றார்.



(இ-ள்) மேலே சொல்லியபடி குகையை நெருப்பில் வைத்தூத அதிலுள்ள மருந்தெல்லாம் பிரகாசம் பொருந்தியதாய் ஒன்றாகக்கலந்து மிகுந்து கொதிக்கும் அந்தச் சமயத்தில் நான் ஒன்று சொல்வேன் அதைச் செய்வாய். அதாவது:—காது என்ற சொல்லின் முதலிலிருக்கின்ற எழுத்தோடு ரகரத்தையும், மகரத்தின் கடையெழுத்தையும் சேர்த்தால் எப்பெயரமையுமோ அப்பெயருள்ள ஓர் சரக்கை ஒரு கழஞ்சி யெடுத்து அதிற் போடுவாய். எ—று

சூட்சுமவிளக்கம்:— காது என்ற சொல்லிற்கு முதலிலிருக்கின்ற எழுத்தாவது (கா) ரகரமாவது (ர) மகரத்தின் கடையெழுத்தாவது (ம்) ஆக இம் மூன்றெழுத்துக்களையுஞ் சேர்க்க (காரம்) என்றானது. இதை (வெண்காரம்) எனக் கொள்ள வேண்டியது. இதுவே மேற்குறித்த சரக்காம். இதையே 4.4 கிராம் எடுத்து முன் குகையில் உருகிக் கொதித்துக் கொண்டிருக்கின்ற மருந்திற் போடவேண்டியது.

கலி விருத்தம்

போட்டி டுமருந் தையிது பொற்புற
ஈட்ட மாக விழுத்ததை யுண்டிடுங்
கூட்ட மாகக் கொதித்தே யுழன்றது
சேட்டி யுற்றிடுஞ் செம்பது கண்டிடு

இப்பாட்டில் முன் வெண்காரம் போட்ட பின்னாகும் விதத்தைக் கூறுகின்றார்.

(இ-ள்) முன்சொன்னபடி போட்ட வெண்காரமாகிய மருந்தைக் குகையிலிருக்கும் மருந்தானது அழகு பொருந்தும் படியாக விழுத்துச் சேரும்படி சாப்பிட்டு விடும். இப்படிச் சாப்பிட்டவுடன் எல்லாஞ் சேர்ந்து உருகிக் கொதித்துக் கலங்கி உயர்வான செம்பாகிவிடும். இதை உற்றுணர்வாயாக. எ—று.

சூக்ஷுமவிளக்கம்:— இதனால் மேற்சொன்னபடி வெண்காரத்தைக் கொடுத்தவுடன் யாவுஞ் சேர்ந்துருகிக் குகையிலுள்ள மருந்தானது செம்பாகிவிடுமென்றார். இதை அயச் செம்பென்று சொல்லப்படும். இதன் வேதைகளைப் பின்கூறுவார். (82)

இதுவுமது

செம்பு தன்னையே செய்திடு வேதைகேள்
தம்ப மாகவே தாம்பூரந் தன்னிலே
ஐம்ப திலொன்றை யன்புடன் சேர்த்திடில்
வம்ப கன்று வடிவுறு மாசையே.

---

இதில் மேற்படி அயச் செம்பின் வேதை சொல்கின்றார்.

(இ-ள்) இந்த அயச் செம்பினாற் செய்யப்பட்ட வேதையைச் சொல்வேன் கேட்பாயாக. நிலை பெறும்படி தாம்பூரத்தில் ஐம்பதிற் கொன்று இந்த அயச் செம்பைப் பிரியத்தோடு சேர்ப்பாயானால் அத்தாம்பிரத்தின் துர்க்குண நீங்கி அழகு பொருந்திய தங்கமாகும். எ—று.

சூக்ஷும விளக்கம்:—வெளிப்படை. (83)

இதுவுமது

மாசை தன்னை வழுத்திடக் கேண்மினோ
வாச மாக வணிகர் கடைதனிற்
பேசு வார்வய தெட்டெனப் பின்னு நீ
வேச மாகவே வேதைகள் விள்ளுவேன்.

---

இதுவுமது

[இ-ள்] மானிடர்களே கேட்கக்கடவீர்கள். முன் பாட்டிற் குறித்தபடி யுண்டாகிய தங்கத்தை நிலையாகச் செட்டிகளுடைய கடையில் எட்டு மாற்றுள்ளதெனச் சொல்வார்கள். பின்னுஞ் செய்யவேண்டிய வேதைகளைச் சொல்வேன் கேட்பீர்களாக. எ—று.



சூட்சும விளக்கம்:—செட்டிகள் கடையில் எட்டு மாற்றெனப் பேசுவார் என்றதனால் இந்தத் தங்கம் எட்டு மாற்றுள்ளதாகு மென்றறிக. [84]

வேறு விருத்தம்

ஊற்றினி னின்றது முழன்று பொங்கியே
மாற்றுய ரிரசிதந் தன்னில் மாட்டுவாய்
நூற்றிலொன் றீய்ந்திட நுடங்கி மஞ்சளாய்
காற்றிற முற்றிடுங் கனக மாகுமே.

இதில் வேறு வேதை கூறுகின்றார்.

(இ...ள்) குகையில் வைத்து நெருப்பிலிட்டு ஊதி உருகிக் கொதித்துப் பொங்கிக் கொண்டிருக்கின்ற மாற்றுமிகுந்த வெள்ளியில் இந்த அயச் செம்பை நூற்றிற்கொரு பங்கு கொடுக்க உடனே அந்த வெள்ளியானது இளக்கமுற்று மஞ்சள் நிறத்தையடைந்து பலமுற்ற தங்கமாகும். எ—று.

சூக்ஷும விளக்கம்:...உருகிக் கொதித்துப் பொங்கிக்கொண்டிருக்கின்ற வெள்ளியில் என்றிருப்பதில் வெள்ளியைக் குகையில் வைத்தூதி உருக்கிக் கொண்டு அதன் மேல் இந்த அயச்செம்பை நூற்றிற் கொருபங்கு கொடுக்கவேண்டுமென அறியவேண்டியது. இதற்கு முன் வாத முறைகளிலெல்லாம் இத்தனைக்கொன்று சேரு தங்கமாய்விடும் என்று சொல்லிக் கொண்டு வந்ததையன்றி அதன் விபரங் கூறவில்லை. ஆயினும் இங்கு கூறினார். மற்றவைகளையும் இதைப் போலவே ஒசய்துகொள்க.

இதுவுமது

கனகமே வணிகரின் கையி னியுரை
தனமுற வொன்பது மாற்று சாற்றக்கேள்
இனமுமே வேறதொற் றியம்பு சின்றனன்
நினைவுட னறி குவீர் நீதி மாக்களே.

இதுவுமது

(இ—ள்) முன் பாட்டிற் குறித்தபடி யுண்டாகிய தங்கத்தைச் செட்டிகளுடைய கையிற்கொடுத்து உரைத்துப் பார்த்தால் ஒன்பதுமாற்றுள்ளதாகும். இதைத்தவிர இந்த அயச்செம்பினா லுண்டாகும் இன்னொரு வேதையைச் சொல்வேன். நீதி பொருந்திய மனிதர்களே ஞாபகத்தோடு கேட்டுணர்வீர்களாக.

சூட்சும விளக்கம் :—வெளிப்படை (86)

அயச்செம்புச் செந்தூரம்

இதுவுமது

இற்றையிற் றாம்பிர மியம்பு வேன்பலம்
ஒற்றை யெடுத்துநீ யொளிதி கழ்ந் திட
வெற்றிசவ் வீரத்தில் விடுக ழஞ்சியே
மற்றொரு மருந்தினி வழுத்தக் கேட்டிடு.

இதுமுதல் வேறு வேதை சொல்கின்றார்.

(இ—ள்) மேற்சொல்லிய இந்த அயச்செம்பில் ஒரு பலமெடுத்து இதனோடு பிரகாசம் பொருந்தும்படியாக வெற்றிமிகுந்த சவ்வீரத்தில் 4:4 கிராம் எடுத்துச்சேர்ப்பாய். இன்னும் இதிற் சேர்க்கவேண்டிய மற்றொரு மருந்தையுஞ் சொல்வேன் கேட்பாயாக —று.

சூக்ஷம விளக்கம்:—வெளிப்படை. (87)



விபரம்

அயச்செம்பு (பலம்) 35 கிராம்
சவ்வீரம் (கழஞ்சி) 4.4 கிராம்

நொண்டிச் சிந்து

கெதியெனும் போர்முதலும்—நகர்கடை
கிளத்துவேன் நகர்ககர் மகர்கடையே
கதியுடனொருகழஞ்சி—யுடனெழிற்
காண்கமழும் பூவின்பெய ருறுமருந்தின்
துதியுட னெடுகளிஞ்சி—தன்னையேமுன்
சொல்லுகின்ற மருந்தையுந் துகைப்படுத்தி
மதியுடன் குகையில்வைத்தே—யூதிடவே
வடிவுடன் சுழன்றெழி லழன்றிடுமே

இதில் இரண்டு சரக்குகளின் பெயரும் நிறையுங் கூறுகிறார்.

(இ-ள்.) கெதி என்று சொல்லப்பட்ட பெயரின் முதலெழுத்தையும், நகரத்தின் கடை யெழுத்தையும், தகரத்தையும், ககரத்தையும், மகரத்தின் கடையெழுத்தையும் சேர்த்தால் எப்பெயரமையுமோ அப்பெயருள்ள ஒரு சரக்கில் 4.4 கிராம் வாசனை வீசும்படியாகிய பூவினது பெயரைக் கொண்ட ஓர்சரக்கில் எடுத்து முன் பாட்டிற் சொல்லிருக்கின்ற இரண்டு சரக்குகளோடுஞ் சேர்த்து இவைகளை புத்தியுடன்குகைக்குள் போட்டு நெருப்பிலிட்டு ஊதக்கடவாய். அப்படி யூதினால் அதுஅழகோடு காய்ந்து கொதிக்குமஎ—று.

சூக்ஷம விளக்கம்—கெதி என்ற பெயரின் முதலெழுத்தாவது (கெ) நகரத்தின்கடையெழுத்தானது (ந்) தகரமாவது (த) ககரமாவது (க) மகரத்தின் கடையெழுத்தாவது (ம்) ஆக இவ்வைந்தெழுத்துக்களையும் சேர்க்க (கெந்தகம்.) என்றானது இதுவே முகலிற்

கூறிய சரக்காம். இதிலேயே (4.4 கிராம்) எடுத்துக் கொள்ள வேண்டியயிது.

வாசனை வீசும்படியாகிய பூவினது பெயரைக் கொண்டஓர் சரக்க வது (பூநீறு.) இதுவே இரண்டாவது சொன்ன சரக்காம் இதிலேயே 4.4 கிராம் எடுத்துத் துக் கொள்ள வேண்டியது. (88)

விபரம்

| | | |
|---|---|---|
| கெந்தகம் கழஞ்சி | 1 | 4.4 கிராம் |
| பூநீறு கழஞ்சி | 1 | 4.4 கிராம் |

(வேறு) விருத்தம்

அழற்கின்ற மருந்ததைத் தானெடுநீ
யழற்கின்றிடு கல்வமி லாட்டிடு வாய்
உழற் கின்றிடு பிள்ளையி னீர்தனிலே
கழற்கின்றிட வாட்டுவை சாமதொன் றே.

இதில் முன் குகையில் வைத்தூதிய மருந்தைப் பின் செய்யும் விபரஞ் சொல்கின்றார்.

(இ-ள்.) முன் சொன்னபடி குகையில் வைத்தூதிக் கொதித்துக் கொண்டிருக்கின்ற மருந்தை யெடுத்து அழகாகிய கல்வத்திற் போட்டு அங்குமிங்கும் ஓடியலைந்து விளையாடுவதாகிய சிறுபிள்ளைகளினது மூத்திரத்தைவிட்டு (3 மணிநேரம்) அரைக்கக் கடவாய். எ...று.

சூக்ஷம விளக்கம்:—வெளிப்படை. (89)

இதுவுமது

மல ரேகரி யின்வல மாமல ருஞ்
சல ராகிய சண்டையின் சாறத னால்



நல மாகவே யாட்டிடு நாளொன் றே
உல மாக வழித்தே யுருட்டுவை யே.

இதில் முன்அரைத்த மருந்தைப் பின்செய்யவேண்டிய விதம் சொல்கின்றார்.

(இ-ள்.) முன்சொன்னபடி யரைத்தபின் அதில் கருப்பு நிறமான புஷ்பங்களை யுடையதும், மோதுவதாற் சலசல வென்னுஞ் சப்தத்தை யுண்டாக்கப்பட்டதுமான ஓர் செடியினது சாற்றை விட்டு ஒரு நாள் வரை அரைக்கக் கடவாய். அப்படி யரைத்த பின் அந்த மருந்தை வழித்து உருட்டக் கடவாய். எ—று.

சூட்சும விளக்கம் :—கருப்பு நிறமான புஷ்பங்களை யுடையதும், மோதுவதாற் சலசல வென்னுஞ் சப்தத்தை யுண்டாக்கப்பட்டதுமான ஓர் செடியாவது (கறுப்புவட்டக் கிலுகிலுப்பை) இதை இதற்குமுன் கூறி யிருக்கப்பட்ட இலட்சணக் கிரமங்களினால் இன்னதென நிச்சயிக்கப் பட்டது. இந்தக் (கறுப்புவட்டக் கிலுகிலுப்பைச் சாற்றை) விட்டே ஒரு நாள்வரை அரைக்கவேண்டியது. (90)

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

உருட்டு மருந்தைத் தகடாக்கி
யோட்டை யுரைத்தே யுட்பொதிந்து
கருட்டுங் கழியிற் றலைதனைக்
கவசமிடுவா யேரைத்தே
சுருட்டு மெருவின் முழமொன்றரை
தொடுத்து நடுவில் மருந்து தன்னை
இருட்ட முடனே வைத்துநெருப்
பேக மாக மூட்டுவையே.

[இ—ள்] முன் சொன்னபடியே வழித்தெடுத்து உருட்டிய மருந்தைத் தகடுபோல செய்துகொண்டு

இரண்டு ஓடுகளை யெடுத்து வாய்பொருந்தும் படியாகத் தேய்த்து அதில் ஒரு ஓட்டில் இந்த மருந்தை வைத்து மேலோட்டை மூடிக் கரியநிறம் பொருந்திய களிமண்ணி னால் ஐந்து சீலை செய்யக் கடவாய். பின்பு அதைச் சேகரித்து எருவினால் ஒன்றரை முழ உயரப்புடம் தயார் செய்து அதன் மத்தியில் பத்திரமாக வைத்து ஏகமும் பிடித்தெரியும்படியாக நெருப்பை வைக்கக் கடவாய். எ—று.

சூக்ஷுமவிளக்கம்: —வெளிப்படை. [91]

இதுவுமது

மூட்டி யெறிந்தே யமர்ந்த பிற்றை
முயங்கு மருந்தைக் கையிலெடுப்பாய்
ஓட்டி லுறைந்த கவசமதை
யுறவே தள்ளு முரவோரே
பூட்டி யுறைந்த மருந்தது வும்
பொன்போல் வனமும் புகழாகும்
நாட்டு வகைக ளினிவேறு
நவிலக் கேண்மோ நரர் குழுவே.

———

இதிற் புடம் பிரிக்கும் விதஞ் சொல்கின்றார்.

(இ-ள்) முன்சொன்னபடியே நெருப்பை மூட்டி அது எரிந்தடங்கினபின் புடத்தை நீக்கிவிட்டு அதில் வைத்த மருந்தையெடுத்து ஓட்டிற் பொருந்தியிருக்கின்ற கவசத்தைப் பிரிப்பீர். பலமுள்ளவரே அப்படிக் கவசத் தைப் பிரித்துப் பார்ப்பீர்களேயானால் ஓட்டில் வைத்த மருந்தானது பொன்போன்ற நிறத்தினையுடையதா யிருக்கும். மானிடர் கூட்டங்களே இனிமேற் செய்ய வேண்டிய விதத்தையும் சொல்வேன் கேட்பீர்களாக எ...று.



சூட்சும விளக்கம்:-வெளிப்படை. [92]

எண்சீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

தாலு வின்பெயர் தன்னில் வகரொடு
தாக்கு வாய்நீ லகர்கடை தன்னையே
ஓல மான சுணங்கதின் சாற்றினா
லொளிர வேயரை சாமந் தொகையொன்று
கில மாக வழித்தது தன்னையே
கெட்டி யாகிய வோட்டினில் வைத்துநீ
சீலை யோடு கழியது தன்னையே
திறமு டன்பத்துச்சேர்த்தே யிறுக்குவாய்.

———

இதில் முன்புடம் போட்டெடுத்த மருந்தைப் பின் செய்யும் விதஞ் சொல்கின்றார்.

(இ-ள்.) முன்புடம் போட்டெடுத்த மருந்தை தாலு என்ற பதத்திற்குப் பிரதிபதமாயுள்ள ஓரெழுத்தையும், அதனோடு வகரத்தையும், லகரத்தின் கடையெழுத்தை யும் கூட்டிப் பார்த்தால் எப்பெயரமையுமோ அப்பெய ருள்ள ஓர் மரத்தினது பட்டைச்சாற்றை விட்டுப் பிரகா சிக்கும்படியாக ஒரு சாமம் அரைக்கக் கடவாய். அப்படி யரைத்தபின் அதை வழித்தெடுத்து முன்சொன்ன கெட்டியாகிய ஓட்டில் வைத்து மேலோடு மூடிக் கழி மண்ணினால் பத்துச் சீலை செய்யக்கடவாய். எ—று.

சூக்ஷுமவிளக்கம் :—தாலு என்ற பதத்திற்குப் பிரதி பதமாயுள்ள ஓரெழுத்தாவது [நா.] வகரமாவது [வ.] லகரத்தின் கடையெழுத்தாவது [ல்.] ஆக மூன்றை யும் சேர்க்க [நாவல்.] என்றானது. இந்த நாவற் பட்டைச் சாற்றையே விட்டு அரைக்க வேண்டியது. [93]

எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

அறுக்கிய மருந்து தன்னை
யெரிப்புட முழமொன் றாகப்
பெருக்கநீ போடு முன்னே
பீடுறு மருந்து தன்னை
இறுக்கமா நடுவில் வைத்தே
யெரிந்தபி னெடுத்து நீபார்
முருக்கம்பூ வண்ண மாக
முயங்கிடுஞ் செந்தூ ரந்தான்.

———

இதில் மேற்படி மருந்தைப் புடம்போடும் விதஞ் சொல்கின்றார்.

[இ-ள்.] முன் ஓட்டில் வைத்துக் கவசஞ்செய்த மருந்தை எருவினால் ஒரு முழ உயரப்புடந் தயார்ச் செய்து அதனடுவில் வைத்து நெருப்பிட்டுப் புடம் போடக் கடவாய். அப்படிப் புடம்போட்டுளரிந்தடங்கின பின் எடுத்துக் கவசத்தைப் பிரித்துப் பார்ப்பாய். அப்போது அந்த மருந்தானது முருக்கம் பூப்போன்ற சிவந்த நிறமுள்ள செந்தூரமாகி யிருக்கும். எ—று.

சூட்சும விளக்கம் :...வெளிப்படை. [94]

கொச்சகக் கலிப்பா

நாட்டினிடை நவலோக நாடிடுமுந் நூற்றிலொன்று
காட்டிடவே தங்கள் குலங் காணா வரிதாக
ஆட்டிடவே யாணியுரை யாகு மதுபத்துக்
காட்டிடுவேன் வேதை யினிக் காளை
குழுகேண்மோ

.........

இதில் மேற்படி செந்தூரத்தினது தேவமை சொல்கின்றார்.



[இ-ள்.] இந்த அயச்செம்புச் செந்தூரத்தை இந்த வுலகத்தில் ஒன்பது வகைப்பட்ட லோகங்களில் எதிலானாலும் முந்நூற்றிற் கொருபங்கு கொடுத்து ஊதினால் அவைகள் பார்ப்பதற்கரிய தங்கமாகிப் பத்து மாற்றுள்ள தாகும். இனி இதனாலுண்டாம். வேறு வேதைகளையுஞ் சொல்வேன் கேட்பீர்களாக. எ...று.

சூக்ஷம விளக்கம்:—வெளிப்படை. (95)

பள்ளுச் சந்த விருத்தம்

வெண்மதி போலவே யொளிதி கழ்ந்திடும்
விரிய மாமிர சிதத்தி னிற்
கண்மை யுடனிடு நூற்றி லொன்றது
காட்டிட வேகன புதுமை யாய்
உண்மை யுடனுயர் மாசை யாகிடு
முத்தம னேமாற்றுப் பத்தரை யாம்
தண்மையு டனறி தாணி தன்னிலே
சாற்றிடா தேயாண்மை நேத்தி யுடன்.

.........

இதில் வேறு வேதை சொல்கின்றார்.

[இ-ள்.] இன்னும் இந்தச் செந்தூரத்தை வெள்ளை நிறமாகிய சந்திரனைப்போற் பிரகாசிக்கின்ற வீரம் பொருந்திய வெள்ளியில் இருநூற்றிற் கொருபங்கு சேர்த்தால் மிகவும் ஆச்சரியமாக மெய்யான உயர்ந்த தங்கமாகிவிடும். இதனுடைய மாற்றும் பத்தரையாகும். சிரேஷ்ட குணத்தையுடையவனே; நீ அன்போடுஅறியக் கடவாய். இந்த வுலகத்தில் இதன் உண்மையை யாருக்குஞ் சொல்லாதே. எ...று.

சூட்சும விளக்கம் :—வெளிப்படை. (96)

97 98 99 100 பாட்டுகள் : இந்த நான்கு பாடல்களிலும் ஞானத்தைப் பற்றித் தெளிவாகச் சொல்கின்

றார். இவைகளினருத்தத்தை அனுபவசாலிகளினிடத்து கேட்டுத் தெரிந்து கொள்ளவேண்டிய தாகையால் இப்பாட்டுகளை யிங்கு சேர்க்காமலும் உரையெழுதாதும் விடுத்தோம். வேண்டியவர்கள் மூலபாடத்தைப் பார்த்துத் தெரிந்து கொள்க.

மூன்றாங் காண்டம்
முற்றுப் பெற்றது.

———

# இலக்க சௌமிய சாகரம் தேர்ந்தெடுத்த செய்யுட்களும், தெளிபொருள் விளக்க வுரையும் நான்காவது காண்டம்.

காப்பு

எண்சீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

திருவுருவா யருவுருவாய்ச் செகவுருவாய்
மகவுருவாய்ச் சிந்தி யாத
மருவுருவாய் மலருருவாய் வடிவுருவாய்த்
தெளியுருவா யடங்கா வின்பப்
பொருவுருவாய்ப் பொருளுருவாய்ப் புகலரிய
புதியவனின் புதுமை யான
கருவுருவாய் நானூற்றின் மருந்து சொல்லக்
கண்ணோக்கு மிடமெங்குங் கத்தன் காப்பு.

.........

இதிற் கடவுள் வணக்கங் கூறுகின்றார்.



(இ-ள்) இலக்க சௌமிய சாகரமென்னும் நான்காவது நூறு பாட்டுகளாலாகிய இந்த நான்காம் காண்டத்திலுள்ள முறைகளைச் சொல்லும் பொருட்டாக எல்லாவற்றிற்கும் ஆதாரமாகிய செல்வ ரூபமாயும், பார்வைக் கெட்டாத அணுவுருவாயும், சகல புவன ரூபமாயும், அளவிடற்கரிய பெரிய ரூபமாயும், நினைவிற் கெட்டாத கந்த வடிவமாயும், பூவின் ரூபமாயும், அநேக பேதங்களாகிய சராசரப் பொருள்களின் ரூபமாயும், பிரகாச ரூபமாயும், கணக்கிட முடியாத இன்ப ரூபமாயும், பர்வதங்களினது வடிவமாகியும், உண்மை ரூபமாகியும், சொல்லுவதற்கரிய ஆச்சரியத்திலும் ஆச்சரியமாகியும், நாம் பார்க்குமெந்த இடங்களிலும் நிறைந்திருப்பவனாகிய கடவுளே காப்பானாக. எ—று.

சூக்ஷ்ம விளக்கம் : வெளிப்படை. (1)

இக்காண்டத்தின் முதலில் இரண்டாங் காண்டத்தின் ஈற்றிற் சொல்லியிருக்கின்ற இரச பற்பத்தின் வேதைகளைச் சொல்கின்றார். இதை அடுத்த காண்டத்தில்கூடச்சொல்லாமல் ஒரு காண்டத்திற்குப்பின் சொன்னது. இந்த முறையைக் கொஞ்சம் கஷ்டப் பட்டறிய வேண்டுமென்பதற்காகவேயாம். இதனாலேயே இந்த முறை மிகவும் உயர்ந்ததென நன்கு விளங்குகின்றது. இதைச் சொல்லி முடித்தவுடன் பாதாள அஞ்சனமென்னும் ஓர் சிறந்த முறையைக் கூறி முடிக்கின்றார்.

கலிவிருத்தம்

இரண்டு நூற்றி லியம்பிய சூதத்தை
விரைந்து கேண்மின் விபுலையின் மாக்களே
கரிந்த மாகவே காட்டிடு செம்பினிற்
றிருந்த மாகிச் சிவந்திடுஞ் செம்பொனே.

———

இப்பாட்டு முதல் இரண்டாங் காண்டத்திற் சொன்ன இரச பற்பத்தின் வேதை சொல்கின்றார்.

(இ-ள்.) இரண்டாவது நூறு பாட்டுக்களாகிய இரண்டாங் காண்டத்தில் சொல்லிய சூத பற்பத்தினது மகிமையைச் சொல்வேன் விரைந்து கேட்பீர்களாக, பூலோகத்திலுள்ள மனிதர்களே! இதைச் செம்பில் சேர்த்துருக்கினால் அச்செம்பானது திருத்தத்தோடு சிவந்து நல்ல செம்பொன்னாகும். எ—று.

சூக்ஷ்ம விளக்கம்:— இப்பாட்டில் இந்த இரசபற்பத்தைச் செம்பில் இத்தனைக்கொன்று சேர்க்கவேண்டுமென விபரஞ் சொல்லப்படவில்லை. முதலில் இரண்டு நூற்றில் என்றிருப்பதால் நூற்றிற் கொன்றென ஊகிக்கலாம், ஆயினும் அது நேரல்ல. இது விஷயத்தைப் பற்றித் தெரிந்தவர்களிடம் கேட்டுணர்ந்து கொள்வது நல்லது. (2)

இதுவுமது

வணிக ரின்கடை காட்டில் வரையுரை
தணிவ தாகவேசாற்றுவர் பத்தொன்று
திணிய னாகிய செம்பிற் சமனுற
அணிபெ றத்தர வெட்டரை யாணியே.

இதில் வேறு வேதை சொல்கின்றார்,

(இ-ள்.) முன் பாட்டிற் சொல்லிய பொன்னைச் செட்டிகள் கடையிற் காட்டினால் அதைப் பதினொன்று மாற்றெனச் சொல்லுவார்கள். இந்தப் பதினொன்று மாற்றான பொன்னைப் பலம் பொருந்திய செம்பில் சமன் சேர்த்துருக்கினால் அது எட்டரை மாற்றுள்ள தங்கமாகும். எ...று.

சூட்சும விளக்கம்:—வெளிப்படை. (3)

இதுவுமது

வெள்ளை தன்னில் விரும்பிமுந் நூற்றிலே
என்னைப் போலவே ஈய்ந்திட வேகமாங்



கொள்ளை யென்று குமுரிப் பழுத்தது
நன்னொ ணாவொளித் தங்கம தாகுமே.

இதில் பின்னொரு வேதை சொல்கின்றார்.

(இ-ள்) இன்னும் இந்தப் பற்பத்தை வெள்ளியில் பிரியத்தோடு முந்நூற்றிற்கொன்று என்ற அளவு கொடுத்தூதினால் மிகவும் வேகத்தோடு அது பழுத்து நீங்குதற்கரிய பிரகாசத்தை யுடைய தங்கமாகும்.

சூக்ஷ்ம விளக்கம்:— வெளிப்படை.. (4)

இதுவுமது

ஆன தங்கமு மாணியு ரையது
பாணி யாப்பதி னாறது கண்டிடும்
தானுந் தானுஞ் சமனது சேர்த்திடில்
ஊன மின்றி யுரையது மொன்பதே.

---

இதில் மற்றொரு வேதை சொல்கின்றார்.

[இ-ள்.) முன்பாட்டிற் சொன்னபடி யுண்டான தங்கமானது பதினாறு மாற்றுக்காணும் இவ்விதம் பதினாறு மாற்றுக் கண்ட தங்கத்தையும் மற்றத் தங்கத்தையுஞ் சேர்த்துருக்கினால் விக்கின மில்லாமல் ஒன்பது மாற்றுடையதாகும். எ...று.

சூக்ஷ்ம விளக்கம்:—வெளிப்படை. (5)

இதுவுமது

அரை யரிசியை யாவின்றன் பாறனில்
விரைவ தாக விழுங்கிடக் கேட்டிடு
தரையு மாறிடு நாதமு முற்றிடும்
பிரிய மாகவே பூரிக்கும் பிண்டமே.

இது முதல் வைத்தியஞ் சொல்கின்றார்,

(இ—ள்) இந்தப் பற்பத்தில் அரையரிசி யெடையை யெடுத்து பசுவின் பாலில் வேகமாகக் கலந்து சாப்பிட்டு விட்டால் தேகத்திலுள்ள நரைதிரை முதலிய வைகளெல்லாம் மாறிப்போகும். பலம் அதிகரிக்கும். அதிகநேயத்தோடு தேகமானது மிகவும் பூரிக்கும். இன்னமுஞ் சொல்வேன் கேட்பாய்.எ—று.

சூட்சும விளக்கம்:...வெளிப்படை.

இதுவுமது

பிண்ட மோடு புளகமும் பிங்கல
அண்டம் போல வடர்ந்தே யெழுந்திடுங்
கண்ட றிந்திடுங் காசினி மாக்களே
மண்டலத்தின் மருந்தி னருமையே.

இதுவுமது

(இ-ள்.) இதைத்தவிர இன்னும் தேகமானது புள காங்கிதமுற்று பொன்னண்டம்போல மினுமினுத்து உறுதியாக வோங்கி யெழுந்திடும். இப்பூமண்டலத்தி லுள்ள மனிதர்களே! இந்த மருந்தினுடைய அருமை யைப் பார்த்தறிவீர்களாக எ...று.

சூட்சும விளக்கம் ;—வெளிப்படை. 7

இதுவுமது

அருமை யாக விழுங்கரை மண்டலந்
திருவு ரைத்த சௌமியச் சித்தது
கருவின் பரகமா வேதை கழறுவேன்
தெரிய வோர்ந்துநின் சித்தத் தடக்குவாய்.

இதில் மேற்சொல்லப்போகும் விஷயத்தைக் குறிப் பிடுகின்றார்.

(இ—ள்) முன்சொன்ன கிரமப்படியே இந்தப் பற்பத்தை அரைமண்டலம் சாப்பிடக்கடவாய். அழகிய கடவுளினாலே சொல்லப்பட்ட இலக்க சௌமிய சாகரத் தின் சித்து இதுவாகும். இனி கருவின் முறையாக ஓர் வேதை கூறுவேன். அதை நன்றாயுணர்ந்து உன் மனதி னிடமாக அடக்கக் கடவாய். எ—று.



சூட்சும விளக்கம்:— இதில் அருமையாக விழுங்கரை மண்டலமென்றதனால் அரைமண்டலம் மேற்படி பற்பத் தைச் சாப்பிட்டால்மட்டும் முன் சொல்லிய குணங்க ளுண்டாகுமென வேற்படுகின்றது. ஆகையினால் இம் மருந்தை அரைமண்டலம் சாப்பிடவேண்டுமெனவறிக கருவின்பாகமாவேதை கழறுவேன் என்றது இனிமேற் சொல்லப்புகும் பாதாள அஞ்சனத்தை யெனக் காண்க. [8]

பாதாள சஞ்சனம்
நொண்டிச்சிந்து

முத்தையிறு பெறுமாதர்...நுதற்கீழ்
முயங்கிய கருமைபோல் மூக்குடையோன்
இத்தனையென் றாயுளது...மனுவோர்க்
கெண்ணிக் கைபி லடங்கிடா வண்ணிக்கமுள
கொத்துகின்ற குடிகேடன்...விழியாற்
கோதெனவே மணியொன்றாற் குறித்தறிவான்
கத்துவோன் ககககெனத்...தூவற்
கடலடு கினிலுறு மறலது போல்.

......

இப்பாட்டினால் இந்த அஞ்சனத்திற் சேர்க்க வேண்டிய ஓர் சரக்குண்டாகு மிடமாகிய ஒரு ஜீவனை வருணிக்கின்றார்.

(இ-ள்) முத்தைப் போன்ற பற்களையுடைய ஸ்திரீகளினது நெற்றிக்குக் கீழிருந்து விழுங்காநின்ற புருவத்தைப் போன்ற கருமை வாய்ந்த மூக்குடையது. வயதினளவை மானிடர்களால் இத்தனை யென்றறிந்து சொல்லக்கூடாத அழகு வாய்ந்தது, எந்த வஸ்துவை யும் கொத்துகின்ற சுபாவமுடையது. இது ஒரு கண்

கெட்டதென்று சொல்லும்படியாக அழகிய ஒற்றைக் கண்ணினாலே அழுத்தமாகப் பார்க்கத்தக்கது. கககவெனக் கதறுகின்ற குணமுடையது, சமுத்திரக் கரையினோரத்திற் பொருந்திய பொடியாகிய கருமணலைப் போன்ற நிறத்தினையுடையது. எ...று.

சூட்சும விளக்கம்:- இதனால் இம்முறையிற் சேர்க்க வேண்டிய ஓர் வஸ்து உண்டாகும் இடமாகிய ஜீவனின் பாதிக் குணங்களை வருணித்தார் மற்றவைகளைப் பின் கூறுவார்.

இதுவுமது

வெட்டுவிழ ரணகளத்தில்...விரைந்து
விடிகுடற் றாலுவை விழுங்கிடு வோன்
சுட்டுளன்ற பிணமதிலே...குந்தி நின்று
துரிதமாய்த் தசைதனைக் கோதியுண் போன்
வட்டமிட் டுலவிடுவோன்...நரிபோல்
வகையுறு தந்திரங்கள் மிகவுடை யோன்
துட்டனெனு நாமசூரனாம்...பெயரினிச்
சொல்லுகின்றேன் றுலங்கிடச் சூட்சமறிவா

......

இதிலும் மேற்படி வருணனை சொல்கின்றார்.

(இ-ள்) இன்னும் இது கத்தி வெட்டுகள் அதிகரித்து நடக்கும்படியாகிய இரணகளத்தில் போய் வேகமாக பிணங்களினது கண்; குடல், நாக்கு முதலியவைகளைப் பிடுங்கி விழுங்கத் தக்கது, மயானத்தில், வைத்து நெருப்பிட்டுச் சுட்டு வெந்து கிடக்கின்ற பிணத்தின் மேலேறிக் கொண்டு விரைவோடு அப்பிணத்தின் மாமிசத்தைக் கோதிக் கோதி யுண்ணத் தகுந்தது, ஆகாயத்தில் வட்டமிட்டுச் சுழன்று பறக்குந் தன்மையுடையது, நரியைப்போல் பலவிதமான தந்திரங்களை மிகவுஞ் செய்யத்தகுந்தது, மகாதுஷ்டச் செய்கையுடையது, அச்சத்தைத் தரும்படியாகிய சூரத்தன்மையையுடையது, இப்பேர்பட்ட இந்த ஜீவனது பெயரை இனிச் சொல்லுவேன் இதன் சூக்ஷத்தை யுணர்ந்து கொள்ளக் கடவாய். எ...று.



சூக்ஷமவிளக்கம்—இந்த ஜீவனானது மானிடர்கள் வைத்திருக்கப்பட்ட எந்த வஸ்துவானாலும் அவசரத்தோடுபோய் விழுந்து தாரதம்மியமின்றி உண்டுகெடுதலைச் செய்யுஞ் சுபாவமுடைய தாகையால் இது துஷ்டனென்றும், இதிலிருந்துண்டாகுஞ் சரக்குச் சேர்ந்துண்டாகும் இந்த அஞ்சனத்தினால் செய்யமுடியாத காரியங்களையுஞ் செய்து முடிக்கலாமாகையால் சூரத்தன்மையுண்டயதென்றுங் கூறினார். பெயர் முதலியவை பின் கூறுவார்.

இதுவுமது

ககர்விட்ட பயல்கடையுங்—கரத்தின்
பேரோடு காவலு மப்பேராகும்
பகரக்கேளு மாந்தர்களே—நவமணி
பண்புடைய பேருமதன் முன்புநாட்டிடு
பிகரமுற் றிடுமீரலில்—நிறைகேள்
பேசுநீயு நானுமொரு பின்னொருத்தனும்
மகிமை யுடனெடுப்பாய்—மருந்தினி
வழுத்துகி றேன்வெகு மகத்துவமாய்

இதில் முன்குறித்த ஜீவனின் பெயர் முதலியன சொல்கின்றார்,

(இ-ள்) ககரமென்னும் எழுத்தை விட்டதாகிய அதற்கடுத்துள்ள வோரெழுத்தையும், அதன்கடையெழுத்தையும்,கரத்தினது பிரதி பதத்தையுங்கூட்டினால் எப்பெயரமையுமோ அப்பெயரும், காவலுக்குப் பிரதிபதமாயுள்ள ஓர்சொல்லும் மேற்குறித்த ஜீவனுடைய பெயராகும் மனிதர்களே இன்னுஞ் சொல்வேன் கேட்பீர்களாக. நவமணியென்னும் ஓர் சிநேகம் பெருந்திய பெயரையும் முன்பெயருக்கு முன் நாட்டக்கடவீர்கள். அப்பொழுது அதன் முழுப் பெயரும் அமையும் இந்தப் பெயரைக் கொண்ட ஜீவஜெந்துவுடைய ஈரலில் நீ நான் பின்னொருத்தன் என்னு மளவுகீர்த்தியோடு எடுக்கக்

கடவராய், இன்னமும் சேர்க்கவேண்டிய மருந்துகளையும் சொல்வேன் கேட்பாயாக, எ—று

சூக்ஷுமம விளக்கம்—ககரமென்னு எழுத்தைவிட்டதாகிய அதற்கடுத்துள்ள வோரெழுத்தாவது [கா] அதன் கடை யெழுத்தாவது (க்) கரத்தினது பிரதிபதமாவது [கை] ஆக இம்மூன்றையுங்கூட்ட [காக்கை] யென்றானது,

காவலுக்குப் பிரதிபதமாவது (காக்கை) இது காத்தல் எனப்பொருள்படும்,

ஆக இவ்விரண்டுவழியினாலும் (காக்கை) யென்றானது. (நவமனி) யென்னுஞ் சொல்லை இந்தக் காக்கை யென்னும் பெயருக்கு முன் சேர்க்க (நவமணிக் காக்கக]யென்றாயிற்று,இதுவே மேற்குறித்த ஜெந்துவினுடைய முழுப்யெராம், இந்த நவமணிக்காக்கையானது பெரும்பான்மையும் ஜனசஞ்சாரமாகிய ஊர்களிலேயே வசிப்பதனால் இதை ஊர்க்காகமெனச் சொல்வது உலகவழக்கு, இந்தக்காக்கையானது தேகமெங்குங் கறுப்பாகவும் கழுத்து சாம்பல்போன்ற வெண்ணிறமாகவு மிருக்கும், இதை இரண்டு ஹேதுக்களாற் பெயரமைத்துக் காட்டியது சந்தேக நீங்கற் பொருட்டாம்.

இதன் ஈரலில் நீநான் பின்னொருத்தன் என்ற அளவு எடு எனவே நீ ஒன்று. நான் ஒன்று, பின்னொருத்தன் ஒன்று ஆக மூன்றென ஏற்பட்டது.

ஆகவே (நவமணிக் காக்கையின் ஈரலில் அளவு மூன்று) எடுக்கவேண்டுமென அறிக. இந்த அளவு விராகனெடையோ பலமோ என்னுஞ் சந்தேகத்தை பின்னால் நீக்குவார். (11)

விபரம்

நவமணி காக்கை யீரல். 3



திருப்புகழ் சந்த விருத்தம்

புடவிவ ளைந்திடும் பேரா ரொன்புகழ்
பொங்கியே வார்த்திடும் வீறா னோராமனு
புகலரி தாகிய நீரா னோன்வெகு—பொதும்பாகக்
கடலின் பேரினில் மீதானோரன் துடி
கைநிகர் சாயல் போலா னோரனெதிர்
கண்டவ ரஞ்சிடப் பேரா னோனட—லுறு சூரன்
நடவிய மேனிசி வப்பா னோன்புவி
நரருடன் மீனினிற் சார்வா கில்வெகு
நட்டம் வருந்திடு முட்டாளம்மிகு—நளியாக
திடமுட னேவெகு தீதா னோனெரி
தீயெனக் காங்கையின் வீறா னோன்சுழி
செறிமிகு வூதையிற் கரையா வோன்பெயர்
புகல்வேனே

—

இப்பாட்டில் இரண்டாவது சேர்க்க வேண்டிய ஓர் சரக்கை வருணிக்கின்றார்.

(இ-ள்.) பூமியைச் சுற்றிக்கொள்ளப்பட்டதென்று சொல்லத்தக்க பெயரினையுடையதும், கீர்த்தியோடு பொங்கி ஆர்ப்பரிக்கும் வெற்றியை யடைவதும்,மானிடர்களால் இன்னவென்று அளவிட்டுச் சொல்வதற்கரியதாகிய விஸ்தீரணத்தை யுடையதும், கணக்கிலடங்காத ஜலத்தால் நிறையப்பட்டதுமான சமுத்திரத்தின்மேலே மிதந்து கொண்டிருக்கத்தக்கது, உடுக்கைப் போன்ற சாயலையுடையது, நேரே பார்ப்பவர்கள் அஞ்சும்படியான செய்கையை யுடையது, மிகவும் வெற்றி பொருந்திய சூரத்தன்மை வாய்ந்தது; உலாவுகின்ற நிறம் சிவப்பானது, இம்மண்டலத்திலுள்ள மானிடர்களது தேகத்திற்படில் வெகு விதமான துன்பத்தை வரச் செய்வது, மிகவும் கெட்ட செய்கையுடையது, மூடத் தன்மையுடையது, நெருப்பைப் போன்ற உஷ்ணம்

பொருந்தியதினா லேற்பட்ட வீரத்தைக் கொண்டது. நீர்ச்சுழிகளானவை நெருங்கிக் காணும்படியான கூதிர் காலத்தில் கரைப்பக்கங்களில் வந்தடையக்கத்தக்கது. இப்பேர்பட்ட ஓர் வஸ்துவின் பெயரைச் சொல்வேன் கேட்பாயாக. எ—று.

சூட்சும விளக்கம்:- இது தேகத்தில் பட்டால் மிகுந்த அரிப்பை யுண்டாக்கிப் பலவிதமான தொந்தரவு களைச் செய்யும் சுபாவமுடைய தாகையால் இதைத் துன்பஞ்செய்வதென்றும் மூடத்தன்மையுடையதென்றும் சொன்னார். இதன் பெயர் முதலியன அடுத்த பாட்டிற் கூறுவார். (12)

சந்த விருத்தம்

பாவண்ணனு மெழிலாகவே
பகர்வேனினிக் கேண்மோ
வாவண்ணனும் ளகரொன்றுடன்
வடிவாஞ்சகர் கடையும்
சாவண்ணனில் பத்தோடுநீ
சார்வாய்றகர் திரியே
நாவிண்டிடப் பெயராகிடும்
நவில்வேனிதைக் கேண்மோ.

---

இதில் மேற்சொல்லிய சரக்கின் பெயர் சொல்கின்றார்,

(இ-ள்) பாவென்ற எழுத்திற்குத் தமையனாகிய வோரெழுத்தையும், வாவென்ற எழுத்திற்குத் தமைய னாகிய வெழுத்தையும், ளகரத்தையும், சகரத்தின் கடை யெழுத்தையும், சாவென்ற எழுத்திற்குத் தலையனாகிய வெழுத்திற்குப் பத்தாமெழுத்தையும், றகரத்தின் மூன்றாமெழுத்தையும் சேர்த்துச் சொன்னால் எப்பெய



ரமையுமோ அப்பெயரே இதன் பெயராகி விடும். இன்னமுஞ் சொல்வேன் கேட்பீர்களாக.

சூக்ஷும விளக்கம்:— பாவென்ற எழுத்திற்குத் தமையனாகிய வோரெழுத்தாவது (ப) வாவென்ற எழுத்திற்குத் தமையனாகிய எழுத்தாவது (வ) ளகர மாவது (ள) சகரத்தின் கடையெழுத்தாவது (ச்) சாவென்ற எழுத்திற்குத் தமையனாகிய வெழுத்தானது ச-இதற்குப் பத்தாமெழுத்தாவது (சொ) றகரத்தின் மூன்றாமெழுத்தாவது (றி) ஆக இவ்வாறெழுத்துக்களை யுங் கூட்டம் (பவளச்சொறி) என்றானது. இதுவே மேற் குறித்த சரக்காம். இதனைப் பவளச்சோரி யெனவும் வழங்குவார்கள். (13)

இதுவுமது

குறைவின்றிய நடுநெஞ்சினிற் குறியாகநீ கேண்மின்
நிறைசேர்த்திடு கடல்போலவும் நினைவாகமுன் வகையா
மிறைவிண்டிடு முறுதந்திர மிடமாரறி குவரே
முறையின்முறை குருதீட்சையால் முயல்வோனறி
குவனே

---

இதில் முன்சரக்கின் அளவு சொல்கின்றார்.

(இ-ள்) குறைவில்லாது நிறைந்த மனதினிடத்திற் குறித்து நான் சொல்வதைக் கேட்கக்கடவாய். மேற் சொல்லிய சரக்கில் முன்சொன்ன கிரமப்படியே கடலைப்போன்ற அளவு சேர்க்கக்கடவாய். கடவுளே சொன்ன இந்த முறையில் இருக்கின்ற சூட்சுமத்தை யாவரறிவர்? கிரமப்படியே குருவினது தீட்சையைப் பெற்று இதைச் செய்யத் தொடங்கு பவனெவனோ அவனே அறிவான்.

சூட்சும விளக்கம்:— கடலின் அளவானது (ஏழு) ஆதலினால் இதன் அளவும் (ஏழெனக்) கொள்ள வேண்டியது. (14)

விபரம்

பவளச்சொறி 7

பள்ளுச்சந்த விருத்தம்

மிகுந்து லவிய தொடுக்கள் சோலைகள்
மேவியு தித்திடுந் தருமிசை
தொகுந்த மாகவே தொங்கும் பலனைச்
சூட்சியு டன்கடிக் கீச்செனவே
சகுந்தம் போல்முக வணங்கு வாய்ந்திடுஞ்
சாற்றிடக் கேள்வெகு நேர்த்தியுடன்
வகுந்து கீன்றிடி லுறுந்த சையெலாம்
வண்மையுடன் கரு மையது வாம்.

——

இதில் இம்முறைக்காம் மற்றொரு சரக்குண்டாகு மிடத்தை வருணிக்கின்றார்.

(இ-ள்) மிகவும் பிரகாசிக்கா நின்ற காடு, சோலை, முதலான விடங்களிற் றோன்றி யிருக்கப்பட்ட மரங்களி னிடமாகக் கூட்டங் கூட்டமாய் முகர்ந்து தொங்குகின்ற பழங்களை வெகு சூட்சமாக கடித்துண்ணப்பட்டது. கீச்சுக் கீச்சென்னுஞ் சப்தத்தை யுடையது, சகுந்த பக்ஷியைப் போன்ற முக அழகினையுடையது. இன்ன முஞ் சொல்வேன் கேட்பாய் அதனுடைய தேகத்தை வளர்த்து கீறினால் அங்குள்ள மாமிச மெல்லாம் வளப்ப மான கறுப்பு நிறத்தைப் பெற்றிருக்கும். எ—று.

சூக்ஷ்ம விளக்கம்:—மேற்சொல்லிய இலட்சணங் களால் ஓர் ஜெந்து வெனக் குறிப்பிட்டார். அதன் பெயர் முதலிய விபரத்தை அடுத்த பாட்டிற்கூறுவாரெனவறிக.

இதுவுமது

கவலு வேன்முதற் றளைமுத லொடு
காட்டிடு வாரக ரைந்து டன்



நவிலு வேன்நாவை விட்ட மடையனாம்
நாட்டிடு வாய்ப்பதி னொன்றை நீ
நவமு றுந்தேனின் பெயர் முதலொடு
நாட்டிடு வாய்வகர் தம்பியே
கவலுவேன் ஙகர் கடையொ டுநகர்
கதியு டனைந்து மதியு டன்.

——

இதில் மேற்குறித்த ஜெந்துவின் பெயரை வருணிக் கின்றார்.

(இ-ள்) சொல்வேன் கேட்பாயாக. இப்பாட்டின் முதலடியின் முதலெழுத்தோடு தெரிவிக்கும் படியான ரகரத்தின் ஐந்தாமெழுத்தையும், நாவென்ற எழுத்தை விட்டு நீங்கிய அதற்குப் பின்னுள்ள வோரெழுத்திற்குப் பதினோராமெழுத்தையும், அழகு பொருந்திய தேன் என்ற சொல்லின் முதலெழுத்தையும், வகரத்தின் தம்பியாகிய வெழுத்தையும், ஙகரத்தின் கடையெழுத் தையும், ககரத்தின் ஐந்தாமெழுத்தையும் புத்தியோடு சேர்க்கக்கடவாய். (அப்படிச் சேர்த்தால் மேற்குறித்த ஜெந்துவின் பெயரமையும்)எ—று.

சூக்ஷ்ம விளக்கம்:— இப்பாட்டின் முதலடியின் முதலெழுத்தாவது (க) ரகரத்தின் ஐந்தாமெழுத்தாவது [ரு] நாவென்ற எழுத்தை விட்டு நீங்கிய அதற்குப் பின்னுள்ள வோரெழுத்தாவது- நீ.இதற்குப் பதினோரா மெழுத்தாவது [ந்] தேன் என்ற சொல்லின் முதலெழுத் தாவது [தே] வகரத்தின் தம்பியாகிய வெழுத்தாவது [வா] ஙகரத்தின் கடையெழுத்தாவது [ங்] ககரத்தின் ஐந்தாமெழுத்தாவது [கு] ஆக இந்த ஏழெழுத்துக்களை யுங் கூட்ட [கருந்தே வாங்கு] என்றானது. இதுவே மேற்குறித்த ஜெந்துவின் பெயராம். இனி இதிலெடுக்க வேண்டிய சரக்கு விபரத்தைப் பின் கூறுவார். 16

வேறு விருத்தம்

இங்குறை சீவனி னீர லின்னிறை
பங்குறு பூதமுன் பரிவு போலவே
சங்கையா யெடுத்திடுஞ் சகத்தின் மாந்தரே
துங்கமா மருந்தினி வேறு சொல்லுவேன்.

இதில் ஷ ஜீவனி லெடுக்கவேண்டிய சரக்கும் நிறையுஞ் சொல்கின்றார்.

(இ-ள்) மேற்சொல்லிய கருந்தேவாங்கின்) ஈரலில் பாகமாகச் சொல்லப்பட்ட பூதங்களின் அளவு முன் கிரமப்படியே அழகோடு எடுக்கக் கடவீர்கள். பூவுலகிலுள்ள மனிதர்களே! இனி வேறு மருந்தைச் சொல்வேன் கேட்பீர்களாக. எ—று.

சூட்சும விளக்கம் :... பூதங்களின் அளவாவது (ஐந்து) ஆதலினால் இந்த ஈரலின் அளவு ஐந்தெனக் கொள்க. 17

விபரம்

கருந்தேவாங்கின் ஈரல் 5

இதுவுமது

கரிதனைச் சலமதிற் கசக்கு கான்வலி
தரியுறு சாதியில் தம்பி யானவன்
திரிகிய நடைதனிற் றிறமை பெற்றவன்
சரிகிய துளிரு போற் றாலுமானவன்.

இதில் சரக்கெடுக்க வேண்டிய ஓர் ஜீவனை வருணிக்கின்றார்.

(இ-ள்) யானை முதலியவைகளையும் தண்ணீரிலே பிடித்துக் கொண்டு வருத்தஞ் செய்யும் படியாகிய காற்றுப்போல பலத்தைக் கொண்டிருக்கின்றதானவோர் ஜெந்துவர்க்கத்தில் இங்கு சொல்லப்போகும் ஜீவன் இரண்டாவதாகக் கருதப்படுவது. வளைந்து



வளைந்து நடப்பதில் மகா திறமையை யுடையது. குளிர்ந்த தளிரைப்போன்ற நாக்கை யுடையது.எ...று.

சூட்சும விளக்கம்:—ஜலத்தில் யானை முதலியவைகளையும் பிடித்து வருத்தஞ் செய்யப்படுவதாகிய ஜெந்துவானது முதலை. இதனுடைய வர்க்கத்தில் இரண்டாவதாகக்கருதப்படும் ஜீவன். எனவேமுதலை, உடும்பு, ஓணான், அரணை, பல்லி இவ்வைந்தையும் ஓர் வர்க்கமெனச்சொல்வதும், முறையே ஒன்றிற்கொன்று கீழானதென்பதும் உலகவழக்கம். ஆதலால்இவைகளுள் இரண்டாவதாகக் கருதப்படுவது (உடும்பு.) என ஏற்பட்டது. இது முதலைக்கு அடுத்த பருவமா யிருத்தலினாலேயே பாட்டில் தரியுறு சாதியில் தம்பியானவன் எனக் குறித்தார். இந்த ஏதுவாலும் மற்ற இலட்சணங்களாலுமே இதனை (உடும்பு) என நிதானித்தோம். ஆயினும் சந்தேகநீங்கும்படி இதன் பெயரையும் அடுத்தபாட்டிற் கூறுவாரென வறிக.

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

உரைத்திடு முதற் றனையு மொளிவுடன் டகரிலைந்தும்
மரைத்திடு மகர்க டையும் வடிவுறு பீயின் றம்பி
தரைத்திடுந் தாலுதம்மிற் சாற்றுவே னிறையின் றன்மை
பரத்தின்வாக் கியத்தைப் போலபரிவுடன் றிரிய தாமே.

இதில் முற்குறித்த சீவனின் பெயரும் அதிலெடுக்க வேண்டிய சரக்கும் நிறையுஞ் சொல்கின்றார்.

[இ-ள்] சொல்லும்படியான இந்தப் பாட்டின் முதலடி முதலெழுத்தும், பிரகாசிக்கும்படியாகிய டகரத்தின் ஐந்தாமெழுத்தும், மகரத்தின் கடையெழுத்தும் அழகு பொருந்திய பீயென்ற எழுத்திற்குத் தம்பியாகிய வெழுத்தும் கூட்டினால் இந்த ஜெந்துவின் பெயராகும்

இதனுடைய நாவில் எடுக்கவேண்டிய அளவு கடவுளின் வாக்கியப் பிரகாரம் மூன்றாகும்.எ—று.

சூட்சும விளக்கம்;...இந்தப் பாட்டின் முதலடியின் முதலெழுத்தாவது (உ]டகரத்தின் ஐந்தாமெழுத்தாவது [டு) மகரத்தின் கடையெழுத்தாவது (ம்) பீ என்ற எழுத்திற்குத் தம்பியாகிய எழுத்தானது [பு]ஆக இந்நான் கெழுத்துக்களையுங் கூட்ட உடும்பு. என்றானது முன் பாட்டிலேயே குணம் முதலியவைகளால் உடும்பு, எனக் காட்டியிருந்த போதிலும் சந்தேகமில்லாதிருத்தற் பொருட்டு இங்கு பெயரையுஞ் சொன்னார்.இந்த [உடும்பினுடைய நாவிலேயே மூன்று நிறை] எடுத்துக் கொள்ள வேண்டியது.

விபரம்

உடும்புநாக்கு 3

வேறு விருத்தம்

வேனலுறு கானல்வெளி மீதினி லடைந்து
ஊனமுறு பாந்தளின்வாயும்புகுந் துறங்கும்
தானமுத லந்தமது முன்புள தருக்கீழ்
ஈனமுறக் கீற்றுளையி லிட்டடை கிடக்கும்.

இதனால் பின்னொரு சரக்கெடுக்கும் ஜீவனை வருணிக்கின்றார்.

(இ-ள்] வெப்பமானது அதிகரித்ததாயுள்ள காடுகளினது வெளியிடங்களிற் பேரய் கெடுதலையுடைய பாம்புகளின் வாய்க்குள் அகப்பட்டு சாகுந்தன்மையையுடையது. இந்த நூலின் முதற்காண்டத்தில் அந்த செந்தூர முறையின் முதலில் சொல்லியிருக்கின்ற ஓர் மரத்தினடியில் பூமியிற்றுளையிட்டு அதில் தங்கி அடை கிடக்கும் சுபாவமுடையது.எ—று.

சூட்சும விளக்கம்:...இந்த நூலின் முதற்காண்டத்தில் அந்த செந்தூர முறையின் முதலிற் கூறியிருக்கப்



பட்ட தருவானது (கள்ளி) இந்த கள்ளிமரத்தினடியில் அந்த ஜீவனானது துளையிட்டுத் தங்குமென அறிய வேண்டியது. பெயர் முதலியன பின் கூறுவார். 20

இதுவுமது

மேனிநிறம் வின்ளுவன் விளங்கிடும்பஞ் சென்ன
பூனைபகை யானது புகன்றிடக்கே ளேழும்
மூனையுடன் லகரினத்தில் மூன்றினமு மாமே
ஈனமறச் செய்வகைக ளின்னமினிக் கேண்மோ.

இதில் மேற்குறித்த இவனின் பெயர் முதலியவை சொல்கின்றர்.

(இ-ள்) மனிதர்களே சொல்வேன் கேட்பீர்களா! மேற்குறித்த இவனுடைய நிறமானது பஞ்சைப்போல மிருதுவான வெண்மையாகத் தோற்றும். இது பூனைக்கு மிகவும் பகையானது. உயிரெழுத்துக்களில் ஏழாமெழுத்தும், பொருந்திய லகரத்தில் மூன்றாமெழுத்தும் அதனுடைய பெயராகும். குற்றம் நீங்கும்படியாக இனிச் செய்ய வேண்டிய விதத்தையுஞ் சொல்வேன் கேட்கக் கடவீர்கள்.எ—று.

சூட்சும விளக்கம்:-உயிரெழுத்துக்களில் ஏழாமெழுத்தாவது (எ) லகரத்தின் மூன்றாமெழுத்தாவது லி, ஆக இவ்விரண்டு எழுத்தையுங் கூட்ட (எலி) என்றானது. இதை வெள்ளெலியெனக் கொள்ளவேண்டும். இதுவே மேற்குறித்த ஜீவனாம். எழுத்துக்களுள் உயிர்வர்க்கமே சிறந்த தாகையால் உயிர்மெய்யில் இன்னதென்று காட்டாது பாட்டில்ஏழும் எனச் சொல்லியிருப்பினும் அதை உயிர் வர்க்கத்தின் ஏழென்றே தீர்மானிக்கப்பட்டது.

வேறு விருத்தம்

இவனுறு சீவன் விழியுடன் மிசையி னிவ்வகையாய்
நவமணி விபரம் நிறையது நடுவீர் நனியாக

தவமுறு மிறைவன் சாகர வகையின் ததிசூட்சி
குவலைய முறையும் நரர்குழு மறியக் குறியாக.

இதில் மேற்குறித்த ஜீவனிலிருந்தெடுக்கவேண்டிய வஸ்து நிறையுஞ் சொல்கின்றார்.

இ—ள்) மேற்சொல்லிய வெள்ளெலியினுடைய கண்ணில் நவமணிகளுடைய அளவு மிகுதியாக எடுத்துக் கொள்வாய். மிகவும் தவமகிமை பொருந்திய கடவுளினுடைய திருவாக்காகிய இந்த இலக்க சௌமிய சாகரத்தினது சூட்சமத்தை இன்னமும் சொல்வேன். பூலோகத்திலுற்ற மனிதர்களே! குறிப்பாக அறிந்து கொள்ளக் கடவீர்கள். எ...று.

சூட்சம விளக்கம்;—நவமணிகளுடைய அளவு என்றதை நவமணி ஒன்பதாகையால் இந்த வெள்ளெலிக் கண் அளவு ஒன்பதெனக் கொள்ளவேண்டியது.

விபரம்

வெள்ளெலிக்கண் அளவு 9

கொச்சகக் கலிப்பா

பிடரின் மயிரும் பீடுவுடைய கரவுகிரும்
கடவாய் அளவாய்ப் பேழவாய் கருமையுறும்
அடமா மெயிறுக ளகத்தியின் மலரதுபோல்
திடமா னுயரஞ் செருவலி சிங்கமன்னான்.

இதில் ஒர் ஜீவனை வருணிக்கின்றார்.

(இ-ள்) கீழ்ச் சொல்லப் போகுஞ் சீவனானது செறிந்த பிடரிமயிரினை யுடையதும், பெருமைதங்கிய நகங்களையுடையதும், யானை வாயைப் போன்ற அளவுள்ள பிளந்தவாயினை யுடையதும், மிகுந்த கருமை நிறத்தை யுடையதும், பலம் பொருந்திய அகத்திமலரை யொத்த பற்களையுடையதும், மிருகங்களிற் சிறந்த சிங்கத்தைப் போன்ற பலம் பொருந்தியதும், எ...று.



சூட்சும விளக்கம்:- இதில் கீழ்ச் சொல்லப் போகும் ஜீவனுடைய ரூபலட்சணங்களை வருணித்தார். அதன் பெயர் முதலியவற்றைப் பின்கூறுவார். (23)

இதுவுமது

கதரோ ரகருங் கழறுவே னிடிகடையே
தகுமாப் பெயராஞ் சாற்றிடக் கேண் மாந்தர்களே
அகமி லுறை வாடுறு பித்ததனில்
சகமினிறைமுன் சாற்றுகின்ற வாறதுபோல்

இதில் மேற்குறித்த ஜீவனின் பெயரும் அதில் எடுக்க வேண்டிய சரக்கு நிறையுஞ் சொல்கின்றார்.

(இ-ள்.) ககரத்தையும், ரகரத்தையும், இடியென்ற பதத்தின் கடையெழுத்தையும் கூட்டினால் எப்பெயரமையுமோ அப்பெயரே மேற்குறித்த ஜீவனின் பெயராம். மனிதர்களே இன்னமுஞ் சொல்வேன் கேட்பீர்களாக. இந்த ஜிவனின் உடம்பிற்குள் ளிருக்கப்பட்ட ளங்கமுற்ற பித்தில் இதற்கு முன் சொல்லிய சரக்கின்நிறை எடுக்கக் கடவாய், எ—று.

சூட்சும விளக்கம்:- ககரமாவது (க) ரகரமாவது (ர) இடியென்ற பதத்தின் கடையெழுத்தாவது (டி.) ஆக இம்மூன்றெழுத்துகளையுங் கூட்ட (கரடி.) யென்றானது. இதுவே மேற்குறித்த ஜீவனாம். முன் சரக்கின் நிறை ஒன்பதாகையால் இதையும் ஒன்பதெனக் கொள்க ஆகவே (கரடிப்பித்தில் நிறை ஒன்பது) எடுக்கவேண்டுமென அறிய வேண்டியது. (24)

விபரம்

கரடிப்பித்து அளவு 9

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

பெண்ணுட னாணுங் கூடிப் பின்னியே கழுத்தொன்
றன்னயமாக நிற்கு நனியுறு பறவை தன்னில் (றாக

வண்ணமு மான தில்லை வடியுறு கண்டந் தன்னிற்
றிண்ணுறஞ் சிவப்ப தான நூலெனச் செறியு மன்றே.

———

இதில் ஓர் சீவனை வருணிக்கின்றார்.

(இ-ள்.) எந்த நேரத்திலும் பெண்ணும் ஆணுங் கூடி கழுத்தைச் சேர்த்துப் பின்னிக்கொண்டு வசிக்கத் தக்கது. பறவை வர்க்கங்களுக்குள்ளே மிக அழகைப் பொருந்தியது, எவ்விதக் குற்றமும் பொருந்தாதது. இதனுடைய கழுத்தில் பலம் பொருந்திய சிவப்பு நிறமுள்ள நூலைப்போன்ற வருணமானது நிறைந்திருக்கும்.

சூட்சும விளக்கம்:—இதனால் ஓர் ஜீவனை வருணித்தார். இந்த இலட்சணங்களால் இது பறவை இனங்களில் ஒன்றாகும். பெயர் முதலியன பின்கூறுவார். (25)

கலி விருத்தம்

மூதலெ ழுத்தோடு முயலவ னகர்கடை
இதம தாய்நகர் மூன்றினி னத்தோடு
விதம தாகவே வின்வன் லகர் கடைக்
கதம தாகிய பேரிது கண்டறி.

.........

இதில் மேற்குறித்த சீவனின் பெயர் கூறுகின்றார்.

(இ-ள்.) எல்லா எழுத்துக்களுக்கும் முதலாகிய வெழுத்தினோடு சொல்லுகின்ற னகரத்தின் கடையெழுத்தையும், றகரத்தின் மூன்றாமெழுத்தையும், லகரத்தின் கடையெழுத்தையும் எடுத்துச் சேர்த்தால் எப்பெயரமையுமோ அப்பெயரே மேற்குறித்த ஜீவனின் பெயராகும். இன்னமுஞ் சொல்வேன் கேட்பாய் எ..று.



சூக்ஷுமம விளக்கம்:— எல்லா வெழுத்துகளுக்கு முதலெழுத்தாகிய வெழுத்தாவது (அ.) னகரத்தின் கடையெழுத்தாவது (ன்.) றகரத்தின் மூன்றாமெழுத்தாவது (றி.) லகரத்தின் கடையெழுத்தாவது (ல்.) ஆக இந்நான்கையுஞ் சேர்க்க (அன்றில்) என்றானது. இதுவே மேற்குறித்த ஜீவனாம். இனிஇதிலிருந்தெடுக்க வேண்டிய சரக்கு விவரத்தைப் பின் கூறுவார்,

இதுவுமது

கண்டறிந்திடுங் காசினி மாக்களே
சொண்டு தன்னிலே சூட்சி யுறுநிறை
விண்டு ரைப்பன் விபுலை விபரமே
மண்டலத்தில் மருந்தினிக் கூறுவேன்.

.........

இதில் மேற்குறித்த சீவனி லெடுக்குஞ் சரக்கும் அதன் முறையும் கூறுகின்றார்.

(இ-ள்.) பூமண்டலத்திலுள்ள மனிதர்களே! இதைப் பார்த்தறிந்து கொள்வீர்களாக. மேற்சொல்லிய அன்றிலென்னும் பறவையின் மூக்கில் சூட்சுமமாக பூமியின் நிறையெடுக்கக் கடவீர்கள். இனி வேறு மருந்தையுஞ் சொல்வேன் கேட்பீர்களாக எ...று,

சூட்சும விளக்கம்:... பூமியினிறை யென்றதைப் பூமி மருதம், முல்லை, குறிஞ்சி, நெய்தல் பாலையென ஐந்துவகை யாதலினால் ஐந்தெனக்கொள்ள வேண்டியது. ஆகவே(அன்றில் மூக்கு நிறை ஐந்து என்றானது.

விபரம்

அன்றில் மூக்கு அளவு—5

இதுவுமது

வருட நூறு வலுமை செலுத்திய
புருட னஸ்கியி னோட்டினிற் பொற்புற

இருடமாக வெடு நிறை நீயுநான்
மகுட மாக மருந்தினிக் கூறுவேன்.

.........

இதில் வேறு மருந்து சொல்கின்றார்.

(இ-ள்) நூறு வயதளவும் பூமியிலிருந்து வெற்றியைக் கைக்கொண்ட ஓர் மனிதனுடைய எலும்பிலும் தலையோட்டிலும் அழகு பொருந்தும்படியாக நீயும், நானும் என்ற அளவு எடுக்கக் கடவாய், இனிவேறு மருந்து சொல்கின்றேன், எ...று,

சூக்ஷ்ம விளக்கம்:... மேற்சொல்லிய எலும்பும் ஓடும் மிகவும் முதிர்ந்த மனிதனுடையதா யிருக்க வேண்டும். நீயும் நானும் என்ற அளவு என்றதையிரண்டெனக் கொள்க, ஆகவே (மனிதன் அஸ்திஓட்டில் அளவு இரண்டு) எடுக்கவேண்டுமென அறிய வேண்டியது. (28)

விபரம்

மனிதன் அஸ்திஓடு அளவு. 2

வேறு விருத்தம்

அரவானதை யக்கண மேயடுத்துக்
கரவாகவே கண்டம தாக்கிடுவோன்
விரைவாகவே குக்குட மேவிரதன்
துரவேறித் துரத்திடு துட்டனதாம்

.........

இதில் ஓர் சீவனை வருணிக்கின்றார்,

(இ-ள்) நாகமென்று சொல்லப்பட்ட பாம்பைக் கண்டால் அந்த க்ஷணத்திலேயே அதற்குச் சமீபத்தில் நெருங்கி ஒளிந்திருந்து அதைக் கண்டங் கண்டமாகக் கடித்துத் துண்டு படுத்திக் கொல்லத் தக்கவன். பூமியில் மிகவும் விரைவாக ஓடத் தக்கது. கோழி முதலியவைகளைக் கண்டால் வெறுத்து விரட்டத்தக்க துட்டத் தன்மை பொருந்தியது.



சூட்சும விளக்கம்:— இதனால் ஓர் ஜீவனின் இயற்கைக் குணங்களை வருணித்தார். பெயர் முதலியன பின் கூறுவார், இப்பாட்டில் குக்குடமென்றதைத் தீபகமாக்கி கோழிக்கும், பூமிக்கும் கூட்டப்பட்டது.

இதுவுமது

ககரிற்கலை நான்கினங் கம்மையுடன்
ரகரிற்றிரி நாட்டிடு நன்குறவே
புகர் பெற்றிடு பேரிது பொற்புற நீ
அகர் முற்று மடக்கடு மாடவரே.

இதில் மேற்கண்ட சீவனின் பெயர் கூறுகின்றார்.

(இ-ள்.) ககரவரியில் நான்காமெழுத்தும்,ரகரத்தின் மூன்றாமெழுத்தும் எடுத்துச் சேர்த்தால் ஓர் பெயரையும், அதுவே மேற்குறித்த ஜீவனுடைய பெயராம், மானிடர்களே அழகு பொருந்தும்படியாக அகங்காரத்தை யெல்லா மடக்கக் கடவீர்கள்.

சூட்சும விளக்கம்:... ககரவரியில் நான்கெழுத்தாவது (கீ) ரகரத்தின் மூன்றாமெழுத்தாவது (ரி,) ஆக இவ்விரண்டையுஞ் சேர்க்க(கீரி.) யென்றானது. இதுவே மேற்குறித்த ஜிவஜெந்து வுடைய பெயராம்.

மானிடர்களே! அகங்காரத்தை யெல்லாம் அழகு பொருந்தும்படியாக அடக்கக் கடவீர்கள் என்றதனால் அகங்காரத்தை யெல்லாம் நீக்கி மிகவும் பொருமையைக் கைக் கொண்டவன் தான் இந்த முறையைச் செய்யத் தொடங்க வேண்டுமெனவும் அவனுக்கே இது பலிக்குமெனவும் மற்றவனுக்குப் பலிக்காதென்பதும் ஏற்படுகின்றது.

இதுவுமது

விழி யானது மேலிடு வாய்நிறை நீ
கிளி யானது கேட்டிடு மாந்தர்களே
வழி வேறு மருந்து வழுத்திடுவேன்
அழி யாப்பர னங்குரை வா றதுபோல்

———

இதில் முன்சொன்ன சீவனில் எடுக்கவேண்டிய சரக்கும் நிறையும் கூறுகிறார்.

(இ-ள்.) மேற்குறித்த கீரியினது விழியில் கிளிநிற மென்று சொல்லப்படுவதாகிய அளவு எடுக்கக்கடவாய். மானிடர்களே எமக்கு எக்காலத்து மழியாத கடவுளி னாலே சோதி விருக்ஷத்தினடியில் சொல்லிய கிரமப் படியே இனிவேறு மார்க்கமாகிய மருந்தையும் சொல்கின் றேன் கேப்பீர்களாக. எ—று,

சூட்சும விளக்கம்.— இதில் கிளியினது நிறத்தின் அளவு எடுக்கக் கடவாயென்றதை கிளியினுடைய நிறம் பஞ்ச வருணமாகையால் ஐந்தெனக் கொள்ளவேண்டி யது. ஆகவே (கீரியின் விழியில் அளவு ஐந்து) எடுக்க வேண்டுமென ஏற்பட்டது.

கிளிகளிற் பல பேதங்களுடவாயினும் இங்குக் குறிப்பும் கணக்கும் நோக்கிப் பஞ்சவருணக்கிளியையே யெடுத்துக் கொள்ளப்பட்டது. இதைத் தவிர''பூவெனப் படுவது தாமரையாமே'' என்ற கிரமப்படி பூவென்பது அநேக வகைப் புஷ்பங்களுக்குப்பொதுப்பெயராயினும் உயர்வு நோக்கி அதற்குச் சிறப்பெடுத்துச் சொல்லா விடினும் அதனைத் தாமரையென்றே கொள்ளப்படு வதுபோல இங்கு கிளியென்றதைப் பஞ்சவருணக் கிளியெனக் கொண்டோ மெனினு மமையும்.

விபரம்

கீரிவிழி அளவு 5



அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

ஏந்தல் தன்னுத விடையினில் வெண்மையா
யிலங்கிடு மருந்தத னில்
சாந்த மாகவே சேர்த்திடு திரிநிறை
தயவுடனினிக் கேளு
கூந்தன் மாவினில் வலதுகால் குரச்சையிற்
கூறுவே னிறைகேண் மின்
மாந்த ரேபெறு மண்டலம் விபரமா
மதியுட னறிவீ ரே.

.........

இதில் இரண்டு சரக்கும் நிறையுஞ் சொல்கின்றார்.

(இ-ள்.) இராஜாக்கள் முதலிய பெருந் தன்மையை யுடையோர்களது நெற்றியினிடமாகத் திலத் முதலிய வைகளாக அமைந்து வெள்ளை நிறமாகப் பிரகாசிக்கப் பட்ட ஓர் மருந்தில் பொறுமையோடு மூன்று என்ற அளவு எடுத்துச் சேர்க்கக்கடவாய். இதைத் தவிர இன்ன முஞ் சொல்வேன் கேட்பாய் குதிரையினது வலது காற்குளம்பில் பூமியென்ற விபரத்தின் அளவு எடுக்கக் கடவாய். மானிடர்களே! இன்னமும் சொல்வேன் கேட் பீர்களாக. எ...று.

சூட்சும விளக்கம்: —இராஜாக்களுடைய நெற்றியில் திலகமுதலியவைகளாகப் பொருந்தி வெள்ளை நிற மாகப் பிரகாசிப்பது முதற்காண்டத்திற் சொல்லியிருக் கின்ற (வெள்ளைப் புனுகு] பூமியென்ற விபரத்தின் அளவாவது ஐந்து:

ஆகவே (வெள்ளைப் புனுகில் அளவு மூன்றும், குதிரை வலது காற்குளம்பில் அளவு ஐந்தும்) எடுக்க வேண்டுமென அறிக.

விபரம்

வெள்ளைப் புனுகு அளவு 3

குதிரை வலதுகாற்குளம்பு அளவு 5

கொச்சகக் கலிப்பா

பரனின் வலியாம் பவளம்போ னிறமுடையோன்
குரமாக் குடிலந் தனை விட்டுக் குவலையத்தில்
சரமா விழுவோன் றங்கமுறு சிங்கமன்னான்
கரமா வெடு நீ கணக்குமினிக் கழறுகிறேன்.

---

இதில் ஓர் சரக்கைச் சொல்கின்றார்.

(இ-ள்,) பரமசிவக் கடவுளுக்குப் பொருந்தியிருக்கப் பட்ட பவளம்போன்ற நிறத்தையுடையது, வேகமாக ஆகாயத்தைவிட்டு மேகங்களோடு சேர்ந்து பூமியில் சரஞ்சரமாக விழுகத்தக்கது, தங்கத்தைச் செய்வதில் சிம்மராஜனைப்போன்ற ஆண்மையை யுடையது. இப் பேர்ப்பட்ட ஓர் ஜெந்துவைத்தெரிந்து உன் கையினா லெடுக்கக்கடவாய் அதனுடைய அளவைப் பின்கூறுகின் றேன்—எ—று.

சூக்ஷம விளக்கம்;...,பவளம்போன்ற நிறத்தினை யுடையதும், ஆகாயத்திலிருந்து விழத்தக்கதும், தங்கத் தைச் செய்வதில் துங்கமுற்றதுமாகிய ஜெந்துவாவது முதற்காண்டத்திற் சொல்லியிருக்கின்ற [இந்திரகோ மாம். இதையே யிங்கெடுக்க வேண்டியது. இதை மேற்குறித்த இலட்சணங்களாலும் இன்னும் பலவிதக் காரணங்களைக்கொண்டும் இந்திரகோபந்தானென நிச்சயித்தறியப்பட்டது. [33]

இதுவுமது

நிறைசேற் விபரம் நீண்முரசின் வகையதுபோன்
மறைசேர் மகவே வகுக்கின்றேன் கெருடன்விழி
உறைசேர் நிறைநீ யொன்றிரண்டுமுடனெடுப்பாய்
குறைசேர் மருந்து கூறிடக்கேள் மாந்தர்களே.



இதில் முன் கூறிய சரக்கினளவும் பின்னே ரர் சரக்கு நிறையுங் கூறுகின்றார்.

(இ-ள்.) முன்சொல்லிய இந்திரகோபத்தில் முரசின் விபரமான அளவு எடுத்துக்கொள்ள வேண்டும், வேத வாக்கியத்தைத் தவறாதமைந்தனே! இன்னமுஞ் சொல் வன் கேட்பாய். கெருடனுடைய கண்ணில் தங்கும்படி யாக மூன்று என்ற அளவு எடுக்கக்கடவாய் மனிதர்களே இன்னமும் நான் சொல்லும் மருந்து களைக் கேட்ட றிந்து கொள்வீர்களாக—எ-று.

சூட்சும விளக்கம் :—முரசின் விபரமாவது (பதி னெட்டு) ஆதலினால் (இந்திரகோபம் நிறை பதி னெட்டு) எனக்கொள்க. இங்கே முரசு என்றதை வாத்தியங்கள் எனக் கொள்ளப்பட்டது கணக்கின் குறிப்பு நோக்கியாம்.

ஆகவே (இந்திர கோபம் அளவு பதினெட்டு, கெருடன் விழி அளவு மூன்று) எடுக்கவேண்டுமென வறிக. (34)

விபரம்

| | |
|---|---|
| இந்திரகோபம் அளவு | 18 |
| கெருடன் விழி அளவு | 3 |

சந்த விருத்தம்

கான மானபெருங் கான மீதினிலே
கண்டி ரீவமொடு முண்டனாம்
ஈன மின்றியடி யீட்டி வாள்கடவ
விரண்டு துண்டெனவே புண் டிடு
மூன மேலிலுறுந் தோலி னால்வலிமை
யுற்றி லங்குமிகு வெற்றி யின்
றான மாஞ்சிரசிற் கோடு கெட்டியுறுஞ்
சத்த மிற்றிடுகு மட்டி யின்

---

இதில் பின் சரக்கெடுக்கும் ஓர் சீவனை வருணிக்கின்றார்.

(இ-ள்.) மரச்செறிவால் அடர்ந்திருக்குமபடியான பெரிய காட்டிடங்களில் சிம்மம் முதலிய பெரிய மிருகங்களோடு எதிர்த்து யுத்தஞ் செய்யும்படியான பலம் பொருந்தியது, குறைவில்லாத பலத்தோடு இடிக்கத்தக்க ஈட்டி, வாள் முதலானவைகளைச் செலுத்தினாலும் அந்த ஆயுதங்களெல்லாம் இரண்டு துண்டாகி வெடித்துப் போகும்படியான உடலின் மேலுற்ற தோலினாலே வலியையடைந்து பிரகாசிக்கும்படியானது, வீரம் பொருந்திய தானமாகிய சிரசில் கெட்டியான தந்தத்தையுற்றது, பெருஞ்சத்தத்தையும் மடத் தன்மையையுமுடையது. எ—று.

சூட்சும விளக்கம் :—இந்த இலக்ஷணங்களால் ஓர் மிருகமெனக் குறிப்பித்தார். இதன் பெயர் முதலியன பின் கூறுவார். ஆயுதங்களினால் இதன்பேரிற் குத்தினாலும் அதிற் பாயாது ஆயுதங்களே முறிந்து போகுமாகையால் தோலினால் வலிமையுற்றதெனவும் பகுத்தறிவில்லாத காரணத்தால் மடத்தன்மையுடையதென்றுஞ் சொன்னார். (35)

இதுவுமது

ககரின் றம்பியோடு ணகரி னக்கடையு
காட்டு வேன் டகர் தம்பியும்
மகரி னிற்மூன்றும் ரகரி லைந்தினமும்
வழுத்த வன்ககர் மகர்கடை
அதமி லுற்றவெழிற் கருமை பித்ததனி
லன்பு டனெடு விபர மாம்
மகிமை பெற்றிடவே யன்றில் போலும்வகை
மருந்து வேறினி வழுத்து வேன்.

———



இதில் முன்சொன்ன மிருகத்தின் பெயரும் அதிலெடுக்க வேண்டிய மருந்தும் நிறையுஞ் சொல்கின்றார்.

[இ-ள்] ககரத்திற்குத் தம்பியாகிய வெழுத்தினோடு ணகரத்தின் கடையெழுத்தையும், டகரத்துக்குத் தம்பியாகிய வெழுத்தையும், மகரத்தின், மூன்றாமெழுத்தையும், ரகரத்தின் ஐந்தாமெழுத்தையும், ககரத்தையும், மகரத்தின் கடையெழுத்தையும், சேர்த்துப் பார்க்க மேற்சொல்லிய மிருகத்தினது பெயரமையும், அத்தகைய மிருகத்தினது வயிற்றிற் குள்ளிருக்கப்பட்ட அழகு பொருந்திய கருமை நிறத்தினையுடைய பித்தில் முன் சொல்லிய அன்றில் மூக்கைப் போன்ற அளவு மகுத்துவம் பொருந்தும்படியாக எடுக்கக்கடவாய். இனி வேறு மருந்தையும் கூறுவேன். எ...று.

சூட்சும விளக்கம்:—ககரத்திற்குத் தம்பியாகிய வெழுத்தாவது [கா] ணகரத்தின் கடையெழுத்தாவது [ண்] டகரத்திற்குத் தம்பியாகிய வெழுத்தாவது [டா]. மகரத்தின் மூன்றாமெழுத்தாவது [மி] ரகரத்தின் ஐந்தாமெழுத்தாவது [ரு] ககரமாவது [க] மகரத்தின் கடையெழுத்தாவது [ம்] ஆக இவ்வெழுத்துக்களையும் சேர்த்துப் பார்க்க. [காண்டாமிருகம்] என்றாயது. இதுவே முன்பாட்டிற் குறித்த மிருகத்தின் பெயராம். அன்றில் மூக்கைப்போன்ற அளவு எடு எனவே முன் சொல்லியிருக்கின்ற அன்றில் மூக்கு அளவு ஐந்தாகையால் இதையும் ஐந்தெனக் கொள்ள வேண்டியது. ஆகவே காண்டா மிருகத்தின் பித்தின் அளவு [ஐந்து] எடுக்க வேண்டுமென ஏற்பட்டது.

விபரம்

காண்டா மிருகத்தின் பித்து அளவு 5

அறுசீர்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

தூவ லுடைய பறவை களிற்
றுங்க முறவே யரசானோன்

சேவ லொடுபெண் பறவை களைத்
    துரத்தி யகற்றித் திரியோ கன்
நாவி லுரைப்ப தரிதரிது
    நறுக்கும் பறவைக் குலமுறுக் கன்
றாவாச் சமர்செய் சண்டாளன்
    றயவரக் கேண்மோ நயமாக.

---

இதில் வேறொரு மருந்தெடுக்க வேண்டிய ஜீவனை வருணிக்கின்றார்.

[இ-ள்] பறக்கும்படியான பறவைக் கூட்டங்களுக்கெல்லாம் மேலான அரசுரிமையைப் பெற்றது. பல ஆண் பறவைகளோடு பெண் பறவைகளையும் கொல்லும் பொருட்டாக விரட்டிக்கொண்டு திரியப்பட்டது. இதனுடைய வல்லமையை நாவினாற் சொல்வதற்கரிதாகும். தன்னினத்தைத் தவிர மற்றப் பறவைக் குலங்களனைத்தையும் பிடித்துத் தன்னுடைய வாயினால் கண்டம் துண்டமாக்கிக்கொல்லத் தக்கது. எப்பேர்பட்ட வீரம் பொருந்திய பறவையினோடும் தாவிப் போர்புரியத்தக்க சண்டாளத் தன்மையுடையது. சிநேகத்தோடு இன்னமுங் கேட்பீர்களாக. எ—று.

சூட்சும விளக்கம்:—இதனால் ஒரு ஜீவனை வருணித்தார். இதன் பெயர் முதலியவற்றைப் பின் கூறுவார். [37]

இதுவுமது

இங்கு வெனும்பேர் முதலெழுத்து
    மிராவென் றறைகி நடுவெழுத்தும்
சங்கை யுடனே சகர் தம்பி
    தயங்கு ளகரிற் றிரியாகும்
பொங்கும் புயத்தின் றசைதனிலே
    புகல்வே னிறையின் விபரமதைத்
திங்க ளரியு முடுவின மூஞ்
    செல்லு மழையுந் திறமையன் றே.

---



இதில் முற்குறித்த ஜீவனின் பெயரும் அதிலெடுக்க வேண்டிய சரக்கும், நிறையுஞ் சொல்கின்றார்.

[இ-ள்] இங்கு என்று சொல்லப்பட்ட பெயரின் முதலெழுத்தையும், இராவு என்ற சொல்லிலிருக்கின்ற நடுவெழுத்தையும், பொருத்தத்தோடு சகரத்தின் தம்பியாகிய வெழுத்தையும், விளங்கா நின்ற ளகரத்தின் மூன்றாமெழுத்தையுங் கூட்டிப்பார்த்தால் முன்கூறிய ஜீவனுடைய பெயராகும். இந்த ஜீவனுடைய புஜமாமிசத்தில் சந்திரன், சூரியன், நட்சத்திரங்கள், மேகங்கள் என்ற அளவு எடுக்கக் கடவாய்.

சூக்ஷமவிளக்கம்:— இங்கு என்று சொல்லப்பட்ட சொல்லின் முதலெழுத்தாவது [இ] இராவு என்ற சொல்லியிருக்கின்ற நடுவெழுத்தாவது (ரா) சகரத்தின் தம்பியாகிய வெழுத்தாவது [சா] ளகரத்தின் மூன்றா மெழுத்தாவது [ளி] ஆக இந்த நான்கெழுத்துக்களையுங் கூட்ட (இராசாளி) என்றானது. இதுவே முற்குறித்த ஜீவனுடைய பெயராகும். சந்திரன், சூரியன், நட்சத்திரங்கள், மேகங்கள் என்று சொன்ன அளவை சந்திரன் ஒன்று, சூரியன் ஒன்று, நட்சத்திரங்கள் இருபத்தேழு, மேகங்கள் ஏழு ஆக முப்பத்தாறெனக் கொள்க. ஆகவே இராஜாளியின் புஜமாமிசத்தில் அளவு முப்பத்தாறு எடுக்கவேண்டுமென ஏற்பட்டது.38

விபரம்

இராஜாளி புஜமாமிசம் அளவு    36

கொச்சகக் கலிப்பா

பார்த்தாலும் பயமுறுத்தும் பஞ்சானம் போன்முக மாங்
கூத்தாடிக்குதிப்பவனாங் கொம்பினின்று கூவிடுவோன்
கீத்தாகக் கீறிடுவோன் கிட்டுகின்ற பறவைகளைப்
பூத்தான மிருதளைமுன் புகலக்கேள் கையெழுத்தே.

இதில் வேறு மருந்தெடுக்க வேண்டிய ஓர் ஜீவனை யும் அதன் பெயரையும் சொல்கின்றார்.

[இ-ள்] பார்க்கின்ற காலத்திற் பயத்தைச் செய்யும் படியானது சிம்மத்தைப் போன்ற முகத்தினையுடையது. கூத்தாடுவது போற்குதித்து நடக்கத்தக்கது. மரக்கினை களிற் றங்கியிருந்து சத்தமிடப்படுவது தன்னிடத்தே நெருங்கிய பறவைகளைப்பிடித்து இரண்டாகப் பிளக்கத் தக்கது. இன்னும் சொல்லக்கேட்பாயாக, உண்டாகிய இந்தப் பாட்டில் இரண்டாவதடியின் முதலெழுத்தும் கையென்ற எழுத்தும் சேர்த்தால் எப்பதமமையுமோ அப்பதமே அதன் பெயராம்.எ—று.

சூட்சும விளக்கம்.— இந்தப் பாட்டின் இரண்டா வதடியின் முதலெழுத்தாவது (கூ) கையென்ற எழுத் தாவது (கை) ஆக இவ்விரண்டையுங் கூட்ட (கூகை) யென்றானது. இதுவே மேற்குறித்த ஜீவனாம் இதில் எடுக்கவேண்டிய மருந்தின் விபரத்தைக் பின் கூறுவார். 39

வேறு விருத்தம்

நோக்கமி னிறையது நுடங்கி டத்திரி
தாக்குவீர் வீக்கடன் றரணி மாந்தரே
தீர்க்கமா வேறொன்று மருந்து செப்புவேன்
பாக்கியம் வளரநீ பார்த்த றிந்திடு

———

முதற்கூறிய ஜீவனிலெடுக்க வேண்டிய மருந்தும் நிறையுஞ் சொல்கின்றார்.

(இ-ள்)மேற்குறித்த கூகையென்ற பக்ஷியின் விழியில் அளவு மூன்ற எடுத்துச் சேர்க்கக்கடவீர் நெருங்கிய பூவு லகத்திற் பொருந்திய மனிதர்களேறுதியாக இனிவே றொரு மருந்தைச் சொல்கின்றேன் செல்வமானது அதி கரிக்கும்படியாகத் தெரிந்துகொள்ளக்கடவீர்கள்.எ...று.



சூக்ஷ்ம விளக்கம்:—வெளிப்படை. (40)

விவபரம்

கூகைக்கண் அளவு 3

வேறு விருத்தம்

சுழல் கின்றவன் சுந்தர முற்றவாம்
அழல் கின்றமெய் வானமின் மீனதுபோல்
தழல் கின்றவன் றன்னிலே நீநிறை கேள்
முழல் கின்றது மொன்றெடு முக்கிய மே.

———

இதில் வேறு மருந்து சொல்கின்றார்.

(இ-ள்) ஆகாயத்திற் பறந்து சுழலும்படியான தன் மையையுடையது, மிகுந்த அழகுபொருந்தியது, பிரகா சிக்கும்படியான ஆகாயத்திலுள்ள நட்சத்திரத்தைப் போன்ற தேகத்தையுடையது. மிகவும் வெப்பத்தைப் பொருந்தியது. இப்பேர்ப்பட்ட குணத்தையுடை ஓர் ஜெந்துவில் அளவு ஒன்று எடுக்கக் கடவாய். இன்னமுஞ் சொல்வேன்கேள். எ—து.

சூட்சுமவிளக்கம்:... மேற்கண் இலட்சணங்களால் இதைக் (குருவண்டென்) நிச்சயிக்கப்பட்டது. ஆகவே (குருவண்டில் அளவு ஒன்று] என அறிய வேண்டியது. (41)

விபரம்

குருவண்டு அளவு. 1

இதுவுமது

வலி யுற்ற விலங்கின வள்ளளலென் பார்
மலி யுற்றிடு மாட்சையில் மீட்சியு றும்
புலி யுற்றிடு மீசையிற் பொற்புட னே
கலி யாநிறை யொன்றெடு நீகரு தி

———

இதில் வேறு சரக்கும் நிறையுஞ் சொல்கின்றார்.

[இ-ள்] மகா வல்லமை பொருந்திய மிருகக் கூட்டங்களிலே மிகச் சிறந்ததென்று சொல்லப்படுவதும். மிகவும் விரைவாகத் தாவித் திரும்பப்படுவதுமாகிய புலியினது மீசையில் அழகாக அளவு ஒன்றைக் கருதியெடுக்கக் கடவாய். எ—று.

சூட்சும விளக்கம் :—வெளிப்படை. [42]

விபரம்

புலிமீசை அளவு 1

இதுவுமது

ஒளி யேதிகழ் வெண்மதி போலு மெழிற்
களி யாக்கட லூற்றிடுங் கங்கையுள் ளோன்
சுளி யாகிய சுப்பியி லூற்றவ னாம்
நளி யாநிறை நாட்டிடு நானொடு நீ.

———

இதில் வேறு சரக்குச் சொல்கின்றார்.

[இ-ள்] பிரகாசமானது விளங்கா நின்ற வெள்ளிய சந்திரனைப்போல அழகு வாய்ந்தது. களிப்பினோடு சமுத்திரத்திலுள்ள ஜலத்திலே யுண்டாகத்தக்க வளைவு பொருந்திய சிப்பியிற் பிறந்தது. இத்தகைய சிறப்புப் பொருந்திய வேறு சரக்கின் சினேகத்தோடு நான், நீயென்ற அளவு எடுக்க கடவாய். எ—று.

சூக்ஷும விளக்கம்:—மேற் குறித்த இலக்ஷணங்களால் இதை [முத்தென] நிச்சியிக்கப்பட்டது. நீ நான் என்ற அளவை நீ ஒன்று, நான் ஒன்று ஆக இரண்டாகையால் இரண்டெனக் கொள்ள வேண்டியது. ஆகவே முத்து அளவு அளவு இரண்டு என ஏற்பட்டது.

விபரம்

முத்து அளவு 2



கலிவிருத்தம்

கூட்டு வீர்லிங்கங் குவலைய மாந்தரே
நாட்டி லேநிறை நன்குற வேதிரி
தாட்டி யுற்றிடுந் தாளகந் தன்னிலே
கூட்டு வாய்நிறை கூறுமுன் வாறுபோல்.

———

இதில் இரண்டு சரக்கு நிறையுஞ் சொல்கின்றார்.

[இ-ள்] மண்டலத்திற் பொருந்திய மானிடர்களே [இவைகளைத்தவிர] லிங்கமெனுஞ் சரக்கில் மூன்றாகிய அளவு எடுக்கக் கடவீர்கள். மிருதியாகிய தாளகமெனும் சரத்திலும் முன்கூறியபடியே மூன்று அளவு எடுப்பீர்கள். எ—று.

சூக்ஷும விளக்கம்:—வெளிப்படை. [44]

விபரம்

லிங்கம் அளவு 3
தாளகம் அளவு 3

இதுவுமது

கொம்பை விட்டுக் குதித்தே யுளப்புவோன்
தம்ப மாகவே தத்தி யெழும்புவோன்
வம்பு போலும் வதண்ட நடையினன்
வம்பு றக்கடி வண்டன் மகாசண்டன்.

———

இதில் சரக்கெடுக்க வேண்டிய ஓர் சீவனை வருணிக்கின்றார்.

[இ-ள்.] மரக்கிளைகளி லிருந்து அவற்றைவிட்டுக் குதித்து மேற்படி கிளைகளையசைக்கத் தக்கது, பூமியிலிருந்து தம்பித்துத்தாவி யெழும்புஞ் சுபாவமுடையது. ஆச்சரியப்படும்படியான தளர்ந்த நடையை யுடை

யது. வம்பினோடு கடிககப்பட்ட மகா கொடுஞ் செய்கையை யுடையது எ—று.

சூட்சும விளக்கம்:—மேற்குறித்த இலட்சணங்களால் ஓர் மிருக மெனக் குறிப்பித்தார். இதன் பெயர் முதலியன பின் கூறுவார். 45

இதுவுமது

கசுர மோடு ரகரை ந்து காட்டிடு
ஙகர் தனிற்கடை தன்னையு நாட்டுவாய்
ககர் தனிற்கலை யைந்து கருதியே
ரகர மோடு ஙகர்கடை குவுமே.

———

இதில் மேற்குறித்த ஜீவனுடைய பெயர் சொல்கிறார்.

(இ-ள்.) ககரத்தினோடு, கரத்தின் ஐந்தாமெழுத்தையும், ஙகரத்தின் கடையெழுத்தையும், ககரந்தின் ஐந்தாமெழுத்தையும், ரகரமென்ற எழுத்தையும். அதற்குப் பின்னும் ஙகரத்தின் கடையெழுத்தையும், கு வென்ற எழுத்தையும் கூட்டினால் எப்பெயரமையுமோ அப்பெயரே மேற்குறித்த ஜீவனுடையயெராம்.

சூட்சும விளக்கம்:—ககரமாவது (க.) ரகரத்தின் ஐந்தாமெழுத்தாவது (ரு) ஙகரத்தின் கடையெத்தாவது [ங்] ககரத்தின் ஐந்தாமெழுத்தாவது (கு) ரகரமென்ற எழுத்தாவது [ர] பின்னும் ஓர் ஙகரத்தின் கடையெழுத்தாவது [ங்] கு வென்ற எழுத்தாவது [கு] ஆக இந்த ஏழெழுத்துக்களையுங் கூட்ட [கருங்குரங்கு] என்றானது இதுவே மேற்குறித்த மிருகத்தினது பெயராம். (46)

இதுவுமது

இங்கு ரைத்திடு மீரலி னீநிறை
சங்கை யாகவே தாக்கிடு மூன்றென



துங்க மாகிடுஞ் சோதியின் சூக்ஷமே
பொங்க வேயறி யும்புவி மாந்தரே.

.........

இதில் மேற்குறித்த மிருகத்தி லெடுக்கவேண்டிய சரக்கின்னதெனக் குறிப்பிடுகின்றார்.

[இ-ள்] மேற்குறித்த கருங்குரங்கினுடைய ஈரலில் பொருத்தத்தோடு மூன்று என்ற அளவு எடுத்துச் சேர்க்கக் கடவாய். இப்படி யெடுத்துச் சேர்ப்பாயானால் இந்த முறையானது மிகவுஞ் சிரேஷ்டம் பொருந்தும். இது கடவுளினுடைய சூக்ஷ்மசெய்கையாகும். மண்டலத்திற்ற மனிதர்களே இந்த மர்மத்தை மிகுதியாக உய்துணர்வீர்களாக.

சூட்சும விளக்கம்:—வெளிப்படை. [47]

விபரம்

கருங்குரங்கின் ஈரல் அளவு 3

இதுவுமது

வெற்றி யுற்று மிகுந்திடும் வாடையான்
யுற்ற வத்தி னயங்கி யிலங்கு வோன்
கத்து ரிதனிற் காட்டிடு நீநிறை
முத்தி சேரவே முக்கிய மூன்றதை.

——

இதில் மேற்படி சரக்கின் பெயர் சொல்கின்றார்.

(இ-ள்) வீரம் பொருந்திய மிகுந்த வாசனையைச் செய்வதாகியதும்; நல்ல தவத்தினையுடைய மேலானவர்களது நெற்றியில் திலத முதலிய வைகளாகப் பிரகாசிக்கத் தக்கதுமான கஸ்தூரியில் மூன்று என்ற அளவு உறுதி பொருந்தும்படியாக எடுத்துச் சேர்க்கக்கடவாய். எ—று.

சூக்ஷ்ம விளக்கம்:- வெளிப்படை. (48)

விபரம்

கஸ்தூரி அளவு 3

கொச்சகக் கலிப்பா

ஆவி லுறைந்தே யன்புடனே வாடையுறும்
மேவு நிலமரமிருந்திடு மஞ்சளைப்போல்
தாவு மருந்தால் சன்னியென்ற வகையகலும்
பூவி லுறைவீர் புகன்றிடுவேன் கேண்மினோ.

---

இதில் ஓர் சரக்கை வருணிக்கின்றார்.

(இ-ள்) பசுக்களிடத்தி லிருந் துண்டாகி மிகுந்த வாசனையைப் பெற்றது, பொருந்திய அதனுடைய நிறமானது மஞ்சளைப் போன்றிருக்கும். இன்னும் இந்த மருந்தினால் ஜன்னியென்று சொல்லப்பட்ட வியாதிகளெல்லா நீங்கும். மண்டலத்திலுற்ற மனிதர்களே இன்னமும் சொல்வேன் கேட்பீர்களாக.

சூக்ஷுமம விளக்கம்:—இதனால் ஓர் சரக்கை வருணித்தார். இதன் பெயர் முதலியன பின்கூறுவார்.

கலிவிருத்தம்

கையை விட்டுக் கடந்து மிருவினம்
ரையு மத்தகை நாட்டிடு வாயதில்
சையின்முன்னணி தாக்கிடு நான்குடன்
னையைக் கூட்டிடு னாமம் விளங்குமே.

---

இதில் மேற்படி சரக்கின் பெயர் சொல்கின்றார்.

(இ-ள்) கை, என்ற எழுத்தை விட்டு நீங்கிய அதற்குப் பின்னுள்ள வோரெழுத்துக் கிரண்டாமெழுத்தையும், ரை என்ற எழுத்தை விட்டு நீங்கிய அதற்குப் பின்னுள்ள வோரெழுத்துக் கிரண்டாமெழுத்தையும், சை என்ற எழுத்தின் கூட்டத்தில் முதலெழுத்தையும், சேர்த்து அவைகளோடு னை என்ற எழுத்தையும் சேர்ப்பாயானால் மேற்குறித்த சரக்கினுடைய பெயர் விளங்கும். எ—று.



சூட்சும விளக்கம்:—கை என்ற வெழுத்தை விட்டு நீங்கிய அதற்குப் பின்னுள்ள வோரெழுத்திற் கிரண்டாமெழுத்தாவது (கோ) ரை என்ற எழுத்தை விட்டு நீங்கிய அதற்குப் பின்னுள்ள வோரெழுத்திற்கிரண்டாமெழுத்தாவது (ரோ) சை என்ற எழுத்தின் கூட்டத்தில் முதலெழுத்தாவது (ச) னை என்ற எழுத்தாவது (னை) ஆக இந்நான்கெழுத்துக்களையுஞ் சேர்க்கக் (கோரோசனை) என்றானது. இதுவே மேற்குறித்த சரக்காம். இதன் நிறை விபரத்தைப் பின்கூறுவார்.(50)

இதுவுமது

நாமமென்ற மருந்தைநீ நன்குற
வேமமாக வெடுப்பாய்நீ யேகமே
காமநாலு மறிந்ததனுசனே
தூமமாக மருந்தினிச் சொல்லுவேன்.

---

இதில் மேற்குறித்த சரக்கின் அளவு சொல்கின்றார்.

(இ-ள்) முன்பு கோரோசனை யென்று பெயர் சொன்னதாகிய மருந்தை நீ நலம் பொருந்தும்படியாக ஒன்று என்ற அளவு அழகோடு எடுக்கக்கடவாய். உலகின்றன்மையை யறிந்தவனே! இனி வேறு மருந்தைச் சொல்வேன் கேட்பாயாக. எ—று.

சூட்சும விளக்கம்:—வெளிப்படை.

விபரம்

கோரசனை அளவு 1

இதுவுமது

சொல்லக் கேட்டிடுஞ் சூழ்ந்திடு மாக்களே
கல்லி லுற்றிடுங் கன்மதந் தன்னிலே

வெல்ல வேநிறை வென்றி விபுலையே
கல்வ மீதினிற் காட்டிடு விரதில்.

——

இதில் வேறு மருந்தும் நிறையுங் கூறுகின்றார்.

(இ-ள்) பூவுலகிற் பொருந்திய மனிதர்களே இன்னமுஞ் சொல்வேன் கேட்பீர்களாக. கல்லிலே பொருந்தியுண்டாவதான கல்மதத்தில் வெற்றிப் பொருந்தும்படியாக பூமியின் விபரத்தளவு எடுத்துக் கல்வத்திற் போட்டுப் பொடித்தெடுத்துக் கொள்ளக்கடவீர்கள். எ—று.

சூட்சும விளக்கம்:—பூமியின் விவரம் ஐந்தாகையால் இங்கு ஐந்தெனக் கொள்ள வேண்டியது. ஆகவே (கல்மதம் அளவு ஐந்து) எடுத்துக் கல்வத்திற் போட்டுப் பொடித்துக் வைத்துக் கொள்ள வேண்டுமெனவறிக. (52)

விபரம்

கல்மதம் அளவு 5

பள்ளுச்சந்த விருத்தம்

இத்தகைய யிர்பகர்ந் தகரு மானத்தை
மியல்பு டன்கொண்டு வந்து நீ
சுத்தம தாகவே சூரியன் சுடரிற்
றோய்ந்திட மேனிகள் காய்ந்திடவே
உத்தம மாகவே நீயெடுப் பாயுட
னோதுகி றேன்வெகு வேதையினி
சித்த மகிழ்ந்துன்மன சித்தத் தடக்கிடு
செப்பிடா மிதமுறை தப்பிடுமே.

——

இதில் முன்சொல்லி வந்த மருந்துகளை யெல்லாம் இனிச் செய்யும் விபரஞ்சொல்கின்றார்.



(இ-ள்) மேலே சொல்லிவந்த மருந்துகளையெல்லாம் பொருத்தத்துடனே சேகரித்துக் கொண்டு வந்து பரிசுத்தமாக சூரியனுடைய பிரகாசமானது படும்படி (அதாவது வெயிலில் வைத்து) இவைகளையெல்லாம் நன்றாய்க் காயும்படி செய்து நலமாக எடுத்து வைத்துக்கொள்வாய். இனி இதனால் நடக்கும்படியான வேதைகளை சொல்லுகின்றேன். இவற்றை மகிழ்ச்சியோடு கேட்டு உன் மனதிலேயே அடக்கக்கடவாய். பிறருக்கு இதைச் சொல்லாதே. அப்படிச் சொல்வாயானால் இந்த முறை கைகூடமாட்டாது.

சூட்சும விளக்கம்:- வெளிப்படை. [53]

இதுவுமது

உலர்ந் திறுகிய மருந்தி னிறையை
யோதிடக் கேட்டிடு வேதையுடன்
நலந்தி கழ்ந்திடக் கழஞ்சி விபரம்
நண்புட னேயறி தென்புறவே
வலுந்த மாகவே வலுமை பேசிநீ
வண்டப் பெயர்தனைக் கொள்ளாதே
கலந்து நிறைந்த காரணந் தன்னையே
கருத்தி லேநினை பொருத்தாய்.

......

இதில் மேற்கண்ட மருந்துகளின் நிறையின்னதெனக் குறிப்பிடுகின்றார்.

(இ-ள்) மேற்கண்டபடி காயவைத்துக் காய்ந்திறுகிய மருந்து நிறை விபரத்தைச் சொல்வேன் கேட்பாயாக. இவைகளெல்லாம் வேதையோடு கூடி நலம் விளங்கும்படியாகக் கழஞ்சி விபரமாகும். இதைச் சிநேகத்தோடு அறியக்கடவாய். இந்தமுறை உனக்குத் தெரிந்து விட்டதென நினைத்து தன் பெருமை கூறிக்கெட்டவனென்ற பெயரைக் கொள்ளாதே. எங்கும் வியாபித்

திருக்கின்ற காரணமாகிய கடவுளையே மனத்தினிடமாகப் பொருத்தத்தோடு நினைக்கக்கடவாய்.

சூட்சும விளக்கம்:- முன் கூறிவந்த மருந்துகளுக்கெல்லாம் அளவின் விபரஞ் சொல்லாமல் இத்தனையித்தனையெனச் சொல்லிவந்த போதிலும் இப்பாட்டில் அவைகளெல்லாம் [கழஞ்சி] விபரமெனக் குறித்தார். ஆதலினால் மேற்கண்டவைகளை யெல்லாம் கழஞ்சியாகக் கொள்ளவேண்டும்.

யாவரும் எளிதில் தெரிந்துகொள்ளும் பொருட்டு முன் தனித்தனியே கூறிவந்த மருந்துகளை யெல்லாம் இங்கு அளவு விபரத்தோடு ஓரிடத்திலெழுதிக் காட்டுவாம் அவை வருமாறு:-

மருந்துகளின் விபரம்

| | | |
|---|---|---|
| நவமணிக்காக்கை யீரல் கழஞ்சி | 13.2 | கிராம் |
| பவளச்சொறி கழஞ்சி | 30.8 | ,, |
| கருந்தேவாங்கின் ஈரல் கழஞ்சி | 22 | ,, |
| உடும்புநாக்கு கழஞ்சி | 13.2 | ,, |
| வெள்ளெலிக்கண் கழஞ்சி | 26.4 | ,, |
| காடிப்பித்து கழஞ்சி | 26.4 | ,, |
| அன்றில்மூக்குகழஞ்சி | 22 | ,, |
| மனிதன் அஸ்திஓடு கழஞ்சி | 8.8 | ,, |
| கீரிக்கண் கழஞ்சி | 22 | ,, |
| வெள்ளைப்புனுகு கழஞ்சி | 13.2 | ,, |
| குதிரைவலக்காற் குளம்பு கழஞ்சி | 22 | ,, |
| இந்திரகோபம் கழஞ்சி | 79.2 | ,, |
| கெருடன்விழி கழஞ்சி | 132 | ,, |
| காண்டாமிருகப் பித்து கழஞ்சி | 22 | ,, |
| இராஜாளி புபமாமிசம் கழஞ்சி | 158.4 | ,, |



| | | |
|---|---|---|
| கூகைக்கண் கழஞ்சி | 13.2 | ,, |
| குருவண்டு கழஞ்சி | 4.4 | கிராம் |
| புலிமீசை கழஞ்சி | 4.4 | ,, |
| முத்து கழஞ்சி | 8.8 | ,, |
| லிங்கம் கழஞ்சி | 13.2 | ,, |
| தாளகம் கழஞ்சி | 13.2 | ,, |
| கருங்குரங்கின் ஈரல் கழஞ்சி | 13.2 | ,, |
| கஸ்தூரி களஞ் | 13.2 | ,, |
| கோரோசனை கழஞ்சி | 4.4 | ,, |
| பொடித்த கல்பதம் | 22·0 | ,, |

இது முதல் மேற்கண்ட மருந்துகளின் செய்முறை முதலியவை கூறிகின்றார்.

வேறுவிருத்தம்

தொருந் தாமுத லோன்றனை நீதொழுது
பொருந் தாகவே போற்றியே யேத்தியுடன்
திருந் தாகவே சிந்தையிலுன்னியரும்
மருந் தானதைக் கல்வமின் பாட்டிடுவாய்.

---

இதில் மேற்கண்ட மருந்துகளை யினிச் செய்ய வேண்டியவிதஞ் சொல்கின்றார்.

(இ-ள்.) எல்லாவற்றிற்கு முதலாகிய கடவுளைப் பொருத்தத்தோடு போற்றித் தொழுது திருத்தமாக மனத்திற்கொண்டு மேற்சொல்லிய அருமை வாய்ந்த மருந்துகளைக் கல்வத்திற் போடக் கடவாய். எ-று

சூக்ஷுமவிளக்கம்:—வெளிப்படை (55)

இதுவுமது

கழன் மீதுறத் தாட்டி யெரிந்திடவே
சுழ லின்றுறு சுண்ணமுந் தோன்றாத

அழல் கின்ற மருந்தி லரைப்பலமே
மழல் கின்ற மருந்ததின் மேலிடுவாய்.

———

இதில் மேல் மருந்துகளோடு சேர்க்க வேண்டிய ஒருப சரக்குச் சொல்கின்றார்.

[இ-ள்.] முன்சொன்னபடி மருந்துகளை யெல்லாம் கல்வத்திற் போட்டவுடன் அம்மருந்துகளின் மேல் நெருப்பிலிட்டு எரிந்தாலும் அதிலிருந்து எவ்வித சுண்ணமுந் தோற்றாததாகியவோர் சரக்கில் அரைப் பல மெடுத்துப் போடக்கடவாய். எ—து.

சூட்சுமவிளக்கம்: நெருப்பிலிட்டெரிந்தாலுஞ் சுண்ண முதலியவைதோற்றாத சரக்காவது (சூடன்.) இதைப்பற்றி முதற்காண்டத்திலும் வருணித்திருக் கின்றார். அந்த இலட்சணங்களைப் பற்றியே இங்கு பெயர் கூறாதிருந்தாலும் சூடன்தானென்ன நிச்சயிக்கப் பட்டது. ஆகவே சூடன் 17. 5 கிராம் எடுத்து. முன் கல்வத்திற் போட்டிருக்கின்ற மருந்துகளோடு போட வேண்டு மென்றறிக. இதைப்போட்டபின் செய்ய வேண் டிய விபரத்தைப் பின்கூறுவார். (56)

இதுவுமது

குரு வாமிகு கோட்டிகள் காட்டிவிடும்
திரு வாலுறு சௌமியச் சித்ததனில்
பொரு வாகப் புரண்டிடும் பொற்புடனே
சரு வாக்குரு மூலியின் சாறதனில்.

இதில் இம்மருந்துகளோடு சேர்க்கவேண்டிய மற் றொரு சாற்றைக் கூறுகிறார்.

(இ-ள்.) எல்லாமுறைக்குங் குருவாயிருந்து பல விதமான வேடிக்கைகளைக் காட்டி விடுவதாகிய கடவு ளின் திருவாக்காகப் பொருந்திய இந்த இலக்கசௌமிய



சராசரத்தின் சித்துக்குக் காரணமான அந்த செந்தூரத் தில் அழகாகச் சேர்ந்து அதன் மூலமாக எல்லா முறை களோடுங் கூடிப்புரளத்தக்க காயாத குருமூலி யென்ற திருநூற்றுப்பச்சை யிலைச்சாற்றில்.

சூக்ஷ்ம விளக்கம்:—இதுவும் அடுத்த பாட்டும் குளகமாதலால் இங்கு சாற்றில் என்றமட்டில் நிறுத்தி யிருப்பதின் தொடர்ச்சியை அடுத்தபாட்டிற் கூறிமுடிப் பார். 57

இதுவுமது

அடை வாகவே யாட்டிடு நாள்திரியாந்
திட மாகவே செப்பிடு வேனதை நீ
உட னேவழித் தேயொரயே திகழுந்
தடி யானபின் கானதிற் றாட்டியதை.

இப்பாட்டில் அரைப்பு விபரஞ் சொல்கின்றார்.

[இ-ள்] மேற்சொன்னபடி முன்கல்வத்திற்போட்ட மருந்தில் திருநூற்றுப் பச்சையிலைச் சாற்றைவிட்டுக் கிரமமாக மூன்றுநாள் மட்டும் பலத்தோடு அரைக்கக் கடவாய் இன்னமுஞ் சொல்வேன் கேள் இப்படி யரைத்த மருந்தை உடனே வழித்தெடுத்துப் பிரகாசம்விளங்கா நின்ற ஓர் தடிப்பான பீங்கானில் போட்டு எ...று.

சூக்ஷ்மவிளக்கம்;—வெளிப்படை (58)

சந்த விருத்தம்

கங்குல்பகை வன்றனது கண்களை விழித்துப்
பொங்குகிர ணத்தொடு புரண்டெழுமப் போது
சங்கையுற வேமருந்தைச் சார்புறநாண் மூன்று
தங்கிடவே தானெடுத்துத் தாக்கிடுநீ கல்வம்.

———

இதில் முன் பீங்கானிற் போட்ட மருந்தைப் பின் செய்யவேண்டிய விதஞ் செல்கிறார்.

[இ-ள்.] முன் சொன்னபடி பீங்கானிற் போட்ட மருந்தை இருட்டிற்குப் பகைவனாகிய சூரியன் மிகுந்த கிரணங்களோடு பிரகாசித்து எழுகூசமயத்தில் (வெயி லில் என்றபடி) பொருத்தத்தோடு மூன்றுநாள்வரை காயவைத்துப் பின்பு எடுத்துக் கல்வத்திற்போடக் கடவாய். எ—று.

சூக்ஷும விளக்கம்: இந்த மருந்தை முன்சொன்ன படி மூன்றுநாள்வரை யரைத்து மூன்றுநாள் மட்டும் வெயிலில் வைத்து எடுத்துப் பழையபடியுங் கல்வத்திற் போட வேண்டும். (59)

இதுவுமது

வெற்றியுறு மாந்தர்களே வேதையினிக் கேண்மின்
அத்தியுறு வார்த்தலி னலம்பலது கோளா
கத்தியுட னேகையான் றகரையிலைச் சாற்றால்
முத்தியுட னாட்டிடுநாள் முன்னியல்போல் மூன்றே.

.........

இதில் முன் கல்வத்திற் போட்டதைப்பின் செய்யும் விதஞ் சொல்கின்றார்.

[இ-ள்] பலம் பொருந்திய மனிதர்களே! இனிவேறு வேதையைச் சொல்வேன் கேட்பீர்களாக யானையைப் போன்ற கறுப்பு நிறத்தையுடைய கல்வத்திலுள்ள மருந்தில் இசையையுடைய கையன் தகரைச் சாற்றை விட்டு உறுதியோடு முன் கிரமப்படியே மூன்றுநாள் மட்டும் அரைக்கக் கடவாய். எ—று



சூக்ஷும விளக்கம்:—வெளிப்படை. (60)

இதுவுமது

வழித்ததனைப் பீங்கானில் வண்மையுடன் வைத்து
சுழித்துட னெழுந்துலவுஞ் சூரியன்முன் வைப்பாய்
முழுத்தமுற நாளதுமுன் வாறதுபோல் மூன்று
செழுத்தியுற வேமருந்தைச் சேர்த்திடு நீ கல்வம்.

.........

இதில்முன் அரைத்ததைப் பின்செய்ய வேண்டிய விபரஞ் சொல்கின்றார்.

[இ-ள்] முன் சொன்னபடி யரைத்த மருந்தைப் பழையபடியும் வளப்பம் பொருந்தும்படியாக வழித் தெடுத்துப் பீங்கானில் வைத்து கண்கூசும்படியாக மேலே யெழுந்து வருபவனாகிய சூரியனுக்கு முன்பாக (வெயிலில்) முன் கிரமப்படியே மூன்று நாள்மட்டும் வைக்கக் கடவாய். அப்படி வைத்துக் காய்ந்தபின் மீண்டும் அதை யெடுத்துக் கல்வத்திற் போடுவாய் எ-று

சூட்சும விளக்கம்:—வெளிப்டை. (61)

இதுவுமது

பூனையது கண்டவுடன் பொற்புட னுவந்து
முனையுட னேபுரண்டு முங்குமெழில் மூலி
மேனையுடன் மேதினியோர் மேனியெனவின்வர்
தானையுறுஞ் சாறதனிற் றாக்குதிரி நாளே.

.........

இதில் இந்த மருந்தோடு சேர்த்தரைக்கவேண்டிய ஓர் பச்சிலைச்சாறு சொல்கின்றார்.

[இ-ள்] பூனையானது கண்டமாத்திரத்தில் அழகுடனே சந்தோஷித்துப் பிரியத்தோடு விழுந்து புரண்டு

அழுங்கும்படியான ஓர்வகைமூலிகை, பூவுலகிலுள்ளவர்கள் அதை மேன்மையோடு மேனி யென்று சொல்வார்கள். இந்த மூலிகையினது சாற்றைவிட்டு மூன்றுநாள் வரை அரைக்கக்கடவாய். எ—து

சூக்ஷுma விளக்கம்:—இங்கு மேனி யென்றது (குப்பைமேனி) யாகும். இதைப் பூனை வணங்கியெனவுஞ் சொல்வார்கள். இந்தக் குப்பைமேனிச் சாற்றைவிட்டே மூன்றுநாள்வரை அரைக்கவேண்டியது.

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரியவிருத்தம்

திறமா யரைத்த மருந்து தனைச்
செறிய வழித்துச் செயமாகக்
கறையாப் பீங்கா னுட்படுத்திக்
கதிர்முன் வைப்பீர் நாள்மூன்றே
மறையோ னுரைத்த சௌமியத்தின்
வரலா றதனை வகையாகத்
தறையி லுறைந்த மாந்தர்களே
சருகா யறிவீர் தயவாக.

இதில் முன் சொன்னபடி யரைத்த மருந்தைப் பின் செய்ய வேண்டிய விதஞ் சொல்கின்றார்.

(இ-ள்.) முன்சொன்னபடி பலத்தோடு அரைத்த மருந்தைப் பொருத்தமாக வழித்து ஜெயம் பொருந்தும்படியாகக் கெடாத பீங்கானில் வைத்து அதைப் பழையபடி மூன்றுநாள்வரை வெயிலில் வைக்கக் கடவீர் மறைமுதல் வனாகிய கடவுளே சொன்னதாகிய இந்த இலக்க சௌமிய சாகரத்தின் விபரங்களை இன்னமுஞ் சொல்வேன் மண்டலத்திலுள்ள மானிடரே சிநேகத்தோடு அறியக்கடவீர்கள்.

சூக்ஷுma விளக்கம்:-வெளிப்படை. [63]



இதுவுமது

நினவாக் கேண்மோ வசுதைதனி
னிலமைசெலுத்து மாந்தர்களே
கனமாக் கல்வந் தனிலிருந்த
கருவின் மருந்து தனைச்செலுத்திக்
குணமாக் கொடுவே லிலைச் சாற்றில்
கோதி யரைப்பீர் நாண்மூன்று
தனமாய் வழித்து வில்லையதைத்
தபதி முன்வை நாள்மூன்றே.

---

இதில் முன் வெயிலில் வைத்த மருந்தைப் பின் செய்ய வேண்டியவிதஞ் சொல்கின்றார்.

[இ-ள்.] இப்பூமியில் நிலையாயிருக்கப்பட்ட மனிதர்களே! நான் சொல்வதை நினைவாகக் கேளுங்கள் முன் பீங்கானிலிட்டுக் காயவைத்திருக்கிற மருந்தைக் கல்வத்திற்போட்டுக் குணம் பொருந்தும்படியாகக் கொடிவேலியிலைச்சாற்றைவிட்டு மறுபடி யரைத்தபின்பு அதை வில்லைசெய்து மூன்றுநாள் மட்டும் வெயிலில் வைக்கக் கடவாய். எ-று

சூட்சும விளக்கம்:—வெளிப்படை. (64)

சந்த விருத்தம்

பகரத்தினி லேழ்பின்னொடு யகரக்கடைபரிவரன்
மகிழ் கெட்டிடு மலப்போரொடு வடிவாங்ககர் கடையும்
ககரத்தொடு மகரக்கடை கதியானிலைச் சாற்றில்
மிகவுத்தம முடனாட்டிடு வின்வேன்றின மொன்றே!

---

இதில் பின் சேர்த்தரைக்க வேண்டி ஓர் சாறு சொல்கின்றார்.

(இ-ள்) பகரத்தின் ஏழாமெழுத்திற்குப் பின்னெழுத்தோடு யகரத்தின் கடையெழுத்தையும் அழுத்தத்தோடு மகிழ்ச்சியைக் கெடுக்கும்படியாகியமலம் என்ற பதத்தின் பிரதி பதத்தையும், ககரத்தின் கடையெழுத்தையும், ககரத்தையும், மகரத்தின் கடையெழுத்தையும்கூட்டினால் எப்பெயரமையுமோ அப்பெயருள்ள ஓர் பச்சிலைச் சாற்றினாலே உத்தமமாக ஒரு நாள் மட்டும் அரைக்கக் கடவாய். எ-று.

சூட்சும விளக்கம்:...பகரத்தின் ஏழாமெழுத்திற்குப் பின்னெழுத்தாவது (பே.) யகரத்தின் கடையெழுத்தாவது (ய்) மலம் என்ற பதத்திற்குப் பிரதி பதமாவது (பீ) ககரத்தின் கடையெத்தாவது (க்) ககரமாவது (க) மகரத்தின் கடையெழுத்தாவது (ம்) ஆக இந்த ஆறெழுத்துக்களையுங் கூட்ட (பேய்பிக்கம்) என்றானது. இதனோடு சாறு என்பதைக் கூட்டினால் (பேய்பீக்கம்சாறு) என வாரும் இது பேய்பீக்கம் சாறு என விருப்பினும் (பேய்பீர்க்கம் சாறு) எனக் கொள்ளவேண்டியது. ஆகவே மேற்படி மருந்தில் இந்தப் பேய்ப்பீர்க்கஞ் சாற்றைவிட்டு ஒருநாள் மட்டும் அரைக்கவேண்டுமெனவறிக. 65

இதுவுமது

தினமொன்றுட னுடனாட்டிடு செயமான மருந்தைத்
தனமாகவே வழித்தோடுளந் தயங்குமெழிற் பீங்கா
னினில்வைத்துநீ முன்னாக்கிடு நிசியின்பகை தனிலே
தினமொன்றுட னமைத்தேயுயர் செறிகல்வமிற் சேர்ப்பாய்

.........

இதில் முன் அரைத்த மருந்தைப் பின் செய்யும் விதஞ்சொல்கின்றார்.

(இ-ள்) முன் சொன்னபடியே பேய்ப் பீர்க்கஞ் சாற்றை விட்டு ஒருநாள் மட்டும் அரைக்கக்கடவாய். அப்படி யரைத்தவுடன் அதை வழித்தெடுத்துப்பழைய படியும் பீங்கான் பாத்திரத்தில் வைத்து சூரியனுக்கு முன்பாக (அதாவது வெயிலில்) ஒருநாள் காயவைத்து எடுத்து மீண்டும் கல்வத்திற் போடுவாய். எ-று.



சூட்சும விளக்கம்:— வெளிப்படை. (66)

இதுவுமது

மனுதொட்டிட வுடனொட்டியே வளைந்தேசுருங் கிடுவோன்
இனமுட்குல மிடறுற்றது விலையும்வெகு சிறுமைத்
தனமுற்றது விகுபெற்றதுதனியாமொரு பூடு
கனம்வைத் திதன் பெயரானதைக் கரைவேனினிக் கேண்மோ

—

இதுமுதல் பின் சேர்க்கவேண்டிய ஓர் சாற்றின் மூலிகை சொல்கின்றார்.

(இ-ள்) மானிடர்கள் தொட்டால் உடனே ஒன்றோடொன்று ஒட்டிவளைந்து சுருங்குந் தன்மையையுடையது. இது பச்சிலை யினங்களில் மிகவும் பொறுமையற்றது. இதன் இலையோ அதிகமாகச் சிறுத்திருக்கும். இது மகா விலையுயர்ந்தது. மிகுந்த கோபத்தை யுடையது. இது ஓர் பூண்டாகும். உயர்ந்ததரமாக இதனுடைய பெயரையும் இனிச்சொல்வேன் கேட்கக் கடவீர்கள். எ—று

சூட்சும விளக்கம்:—இதினால் ஓர் பச்சிலையை வருணித்தார். இதன்பெயர் முதலியன பின் கூறுவரெனவறிக. (67)

இதுவுமது

தகரத்தினிற் பத்தானதும் டகர்தம்பியுங் கடையுஞ்
சகரத்தினிலைந்தோடுறு தயவாரக ரைந்தே

நகரத்தினிற் கடையோடுட னாமங்ககர் திரியே
செகமுற்றிடப் பேராகிடுஞ் செய்யும்வகை சொல்வேன்

---

இதில் மேற்குறித்த பச்சிலையின் பெயர் கூறு கின்றார்.

(இ-ள்) தகரத்தின் பத்தாமெழுத்தும், டகரத்திற்குத் தம்பியாகிய வெழுத்தும், அதன் கடையெழுத்தும், சகரத்தின் ஐந்தாமெழுத்தும், ரகரத்தின் ஐந்தாமெழுத்தும், ஙகரத்தின் கடையெழுத்தும், ககரத்தின் மூன்றா மெழுத்தும் முறையே சேர்த்தால் மேற்குறித்த பச்சிலையின் பெயராகும். இனிமேற் செய்யவேண்டிய விதத்தையுஞ் சொல்வேன் கேட்பாயாக. எ...று.

சூட்சும விளக்கம்:—தகரத்தின் பத்தாமெழுத்தாவது (தொ) டகரத்தின் தம்பியாகிய வெழுத்தாவது (டா) அதன் கடையெழுத்தாவது (ட்) சகரத்தின் ஐந்தாமெழுத்தாவது (சு) ரகரத்தின் ஐந்தாமெழுத்தாவது (ரு) ஙகரத்தின் கடையெழுத்தாவது (ங்) ககரத்தின் மூன்றாமெழுத்து (கி) ஆக இவ்வேழுழுத்துக்களையும் முறையே கூட்ட [தொட்டா சுருங்கி] என்றானது. இதைத் [தொட்டாற் சுருங்கி] யெனக் கொள்ள வேண்டியது. டகரத்தின் கடையெழுத்தை டாவுக்குப் பின் கூறியிருப்பினும் பெயர் நோக்கி அதை முன்னாக்கப்பட்டது. இதில் பச்சிலையின் பெயர் கூறி முடித்தார். மற்றவைகளைப் பின் கூறுவார். (68)

### கொச்சகக் கலிப்பா

இத்தகையி னியம்புகின்ற விலையிலுறுஞ் சாறதனால்
வெற்றியா யரைத்திடுவாய் விளம்புவேனாளதொன்றே
உத்தமமா வழித்ததனை யொளிபுரவும்
வெயிலின்முன்னே
சுத்தமா வைத்திடுவாய் துலங்கிடவே நாளதொன்றே



இதில் முன் பச்சிலைச் சாற்றாற் செய்ய வேண்டிய விதங் கூறுகின்றார்.

[இ-ள்] இத்தன்மையான இந்தத் தொட்டாற் சுருங்கியிலைச் சாற்றை முன் 66ம் பாட்டிற் சொல்லி யிருக்கின்றபடி கல்வத்திற் போட்டிருக்கிற மருந்தில் விட்டு வெற்றி பொருந்தும்படியாக ஒருநாள் மட்டும் அரைத்து அதைக் கிரமமாக வழித்தெடுத்து பிரகாச மிகுந்த வெயிலின் முன்பாகச் சுத்தம் பொருந்தும்படி யாக ஒருநாள் வரை வைக்கக் கடவாய். எ...று.

சூட்சும விளக்கம்:—வெளிப்படை. (69)

### இதுவுமது

ஒன்றான மருந்துதனை யுயருமெழிற் கல்வமிசை
நன்றாக வாட்டியுட னன்னாரி யிலைச்சாற்றில்
பொன்றாக வாட்டிடுவாய் பொற்புடனே
தினமதொன்றே
வன்றாக வேவழித்து வைப்பாய்பீங் கான்றனிலே.

---

இதில் வேறொரு அரைப்புச் சொல்கின்றார்.

[இ-ள்] முன்சொல்லியபடி ஒருநாள் வெயிலில் வைத்த மருந்தை உயர்ந்த அழகு பொருந்திய கல்வத்திற் போட்டு நன்னாரியிலைச்சாற்றை விட்டு அழுத்தமாக ஒருநாள் வரை அரைக்கக் கடவாய். அப்படி யரைத்தவுடனே அதை வழித்துப் பீங்கானில்

சூக்ஷும விளக்கம்:—வெளிப்படை. (70)

### இதுவுமது

பீங்கானில் வைத்தனைப் பிந்தி வருங் கதிரவன் முன்
மங்காமல் வைத்திடுவாய் வழுத்துவே னாள தொன்றே
சிங்கார முடன்மருந்தைத் திறமுடனீ கல்வமிடு
பொங்கமுடன் வேதையினிப் புகலுவேன் மாந்தர்களே.

---

இதில் முன் அரைத்ததைப் பின் செய்யுமார்க்கங் கூறுகின்றார்.

(இ-ள்) முன்சொன்னபடி பீங்கானில் வழித்து வைத்த மருந்தைச்] சூரியனுக்கு முன்பாக (வெயிலில்) ஒருநாள்வரை வைக்கக்கடவாய். அப்படி வைத்து எடுத்து அழகோடு இந்த மருந்தைப் பழையபடியுங் கல்வத்திற் போடக்கடவாய். இனி வேறு வேதை சொல்கின்றேன். எ...று.

சூட்சும விளக்கம்:- வெளிப்படை. [71]

நொண்டிச்சிந்து

அத்திவிட்டுச் சூரியனும்...வெளியே
　　யன்புடனே வரும்போது தென்புடனே
கத்துகின்ற கடிவாயன்...றாலுவது
　　காட்டினுற்ற மிருகத்தி னீட்டமுடையான்
உத்தியுறுமிகுவீர...னுலகினி
　　லுண்டதனி லிரண்டகங்க ளொன்றுமே செய்யான்
சுற்றியவால் சுருண்டிடுவோன்...அடிக்கடி
　　சூக்ஷியுடன்சுவாசமதுத் தேக்கிவிடுவோன்.

.........

இதில் இம்முறையுடன் சேர்க்கவேண்டிய பின்னொரு மருந்தின் ஸ்தான வருணனை சொல்கின்றார்.

(இ-ள்) சூரியனானவன் பிரியத்தோடு சமுத்திரத்தை விட்டு வெளியே வருங்காலத்தில்(அதாவது உதயத்தில்) தைரியத்தோடு கத்துகின்ற சுபாவத்தையும் கடிக்கின்ற வாயையு முடையது. நாவானது காட்டிலே சஞ்சரிக்கப் பட்ட மிருகங்களைப் போல நீண்டிருக்கப்பட்டது. நல்ல யுக்தியையும் வீரத்தையு முடையது. இந்த வுலகத்தில் உண்ட விடத்தில் எவ்விதமான தீங்குகளையுஞ் செய்யாது. வாலானது சுற்றிச் சுருண்டிருக்கத் தக்கது. அடிக்கடி சூட்சுமமாக சுவாசத்தை அதிகமாய் விடத் தக்கது. எ...று.



சூக்ஷும விளக்கம்:- வெளிப்படை. [72]

இதுவுமது

ககரொடு ரகரிலைந்து...நகர்தம்பி
　　காட்டிடுவா யகர்கடை கதியுடனே
மகிழுட னுறுமமுதில்...நாளொன்று
　　வண்மையுட'னரைத்துநீ வழித்தெடுத்து
தகுமுடன் பீங்கான்றன்னில்...வைத்துத்
　　தபதியன் முன்னில்வைப்பாய் நாளதொன்றே
மிகமகிழ் மருந்துபோல்...சித்தர்களும்
　　விண்டாரோ மேதினியிற் கண்டறிக நீ.

.........

இதில் முன்வருணித்த ஜீவனின் பெயரும் அதிலெடுக்க வேண்டிய மருந்தும் அரைப்புங் கூறுகின்றார்.

[இ-ள்] ககரத்தினோடு ரகரத்தின் ஐந்தாமெழுத்தும், நகரத்திற்குத் தம்பியாகிய வெழுத்தும், யகரத்தின் கடையெழுத்தும் சேர்த்தால் எப்பெயரமையுமோ அப்பெயருள்ள ஓர் ஜீவனின் நாவிலிருந்து ஒழுகப்பட்ட நீரைவிட்டு முன் கல்வத்திற் போட்டிருக்கிற மருந்தை ஒருநாள் வரை வளப்பம் பொருந்தும் படியாக அரைத்து வழித்தெடுத்துப் பழையபடியும் பீங்கானில் வைத்துச் சூரியனுக்கு முன்பாக ஒருநாள் வைக்கக்கடவாய். இந்த மகிழ்ச்சி பொருந்திய மருந்தைப்போல் சித்தர்களும் உலகத்திற் சொன்னார்களோ? [இல்லையென்றபடி] இதைக் கண்டறிந்து கொள்ளக்கடவாய். எ...று.

சூட்சும விளக்கம்:- ககரமாவது [க] ரகரத்தின் ஐந்தாமெழுத்தாவது [ரு] நகரத்திற்குத் தம்பியாகிய வெழுத்தாவது [நா] யகரத்தின் கடையெழுத்தாவது [ய்] ஆக இந் நான்கெழுத்துக்களுஞ் சேர [கருநாய்] என்றானது. இதுவே மேற்குறித்த ஜீவனாம். இந்த

கருநாயின் நாவிலிருந்தொழுகுகின்ற நீரால் அதாவது எச்சிலாலேயே ஒருநாள் அரைக்க வேண்டும். எ...று. (73)

கொச்சகக் கலிப்பா

வயினே தரையி லழுந்திடச் சுமையெடுப்போன்
குயிலி னிறம்போற் கோலமிகு மேனியுள்ளான்
பயினுங் குழையும் பண்புடனே யருந்துகின்றோன்
வயினின் மொழியான் வானினிடி போலிரைவான்.

......

இதில் பின் மருந்தெடுக்க வேண்டிய ஓர் ஜீவனை வருணிக்கின்றார்.

[இ-ள்] இந்தப் பூமியினிடமாக மிகுந்த சுமைகளைச் சுமக்கத்தக்கது, குயிலைப்போல அழகு பொருந்திய நிறங்கொண்ட தேகத்தையுடையது, புல், தழை முதலானவைகளைச் சினேகத்தோடு உண்ணும்படியான தன்மையையுடையது, மிருதுவன்றிப் பெரிய இடியைப் போற் சப்தமிடத் தக்கது. எ...று.

சூக்ஷும விளக்கம்:- இதனால் ஒரு ஜீவனைவருணித்தார். மற்றவைபின் கூறுவார். (74)

இதுவுமது

தையோர் முகரிற் றன்ளிடுநீ ஐந்தினமே
கய்யின் வகையினீ காட்டிடுவாய் முதலெழுத்தை
அய்ய மறவே யமைந்திடு மமுததிலே
நய்ய முடனே நாட்டிடுநீ நாளதொன்றே.

———

இதில் முன்சொன்ன ஜீவனின் பெயர் முதலியன கூறுகின்றார்.

[இ-ள்] தையென்ற எழுத்தையும், முகரத்தில் ஐந்தாமெழுத்தையும், கய் என்ற பதத்தின் முதலெழுத்



தையும் எடுத்துக் கிரமப்படி சேர்த்தால் ஓர் பெயரமையும். இதுவே முற்குறித்த ஜீவனாம். இந்த ஜீவனுடைய மூத்திரத்தில் முன் வெயிலில் வைத்த மருந்தை ஒருநாள்வரை அரைக்கடவாய். எ...று.

சூட்சும விளக்கம்:- தை யென்ற எழுத்தாவது (தை) முகரத்தின் ஐந்தாமெழுத்தாவது (ழு) கய் என்ற பதத்தின் முதலெழுத்தாவது (க) ஆக இம்மூன்றெழுத்துக்களையும் கிரமப்படுத்திச் சேர்க்க. [கழுதை] யென்றானது. இதுவே மேற்குறித்த ஜீவனாம். இந்தக் [கழுதை மூத்திரத்தை] விட்டே ஒருநாள் வரை அரைக்க வேண்டியது. [75]

இதுவுமது

ஆட்டி யடைவா யம்மியுறு மருந்துதன்னைப்
பாட்டி னுரைபோல் பண்பாய்ப்பீங் கானில்வைத்து
மோட்டை விடுத்து வெளிவந்தோன் முன்னில்வைநீ
நாட்ட முடனே நவிலுவே னாளதொன்றே.

இதில் முன் அரைத்த மருந்தைப் பின் செய்ய வேண்டிய விதஞ் சொல்கின்றார்.

(இ-ள்.) முன் சொன்னபடியே கழுதை மூத்திரத்தை விட்டரைத்துக் கல்வத்தி லிருக்கப்பட்ட மருந்தைஇந்தப் பாட்டிற்சொன்ன கிரமப்படியே சிநேகத்தோடு வழித்துப் பீங்கான் பாத்திரத்தில் வைத்து உதயகிரியின் உச்சியைவிட்டு மேலே ஆகாய வெளியில் வரப்பட்டவனாகிய சூரியனுக்கு முன்பாக முன் கிரமங்களின்படியே ஒருநாள் வரை வைக்கக் கடவாய். எ—று.

சூட்சும விளக்கம்:-வெளிப்படை. 76

இதுவுமது

வைத்த மருந்தை வகையுடனே கல்வமிட்டுப்
பொற்றிலையி னாலாட்டு புகலுவே னின்னமதைச்

சுத்த முறவே தினமொன்று துரிதமுடன்
பற்றி வழித்துப் பண்புடன்பீங் கானில்விட்டு.

இதில் முன் வெயிலில் வைத்த மருந்தைப் பின் செய்யவேண்டிய விதஞ் சொல்கின்றார்.

(இ-ள்) முன் சொன்னபடி வெயிலில் வைத்த மருந்தை உபாயத்தோடு எடுத்துப் பழையபடியுங் கல்வத்திலிட்டுப் பொற்றலைக் கையாந்தகரைச் சாற்றை விட்டு வேகமாக ஒருநாள் அரைத்து அதை வழித்தெடுத்துச் சிநேகத்தோடு பீங்கானில் விட்டு—எ...று.

சூட்சும விளக்கம்;—வெளிப்படை. 77

வேறு விருத்தம்

சூரியன் முன்னில்வை துரித நாளொன்று
வீரிய முடனதைக் கல்வ மீதிடு
பாரிற்செம் பருத்தித னிலையின் சாற்றை
ஆரிய முடன்விட்டே யாட்டி டங்ஙனே.

இதில் வேறு அரைப்புச் சொல்கின்றார்.

(இ...ள்) முன்சொல்லியபடி பீங்கானிற் போட்ட மருந்தை ஒருநாள் வரை வெயிலில் வைக்கக்கடவாய். பின்பு அதையெடுத்து வெற்றியோடு கல்வத்திற் போட்டுச் செம்பருத்தியிலைச் சாற்றைவிட்டு அழகோடு அரைக்கக் கடவாய் எ...று.

சூட்சும விளக்கம்:...வெளிப்படை. 78

இதுவுமது

ஆட்டிடு நாளரை யசட கத்திடக்
கீட்டியே வழித்துநீ கிளர்பீங் கானதில்
நாட்டினிற் சூரிய னக்க முன்னில்வை
காட்டிடு நாளொன்று கணக்க தறிந்திடு.

இதில் முன்அரைத்த மருந்தைப் பின் செய்ய வேண்டிய விதஞ் சொல்கின்றார்.



(இ-ள்.) முன் சொன்னபடியே செம்பருத்தி இலைச்சாற்றை விட்டு அரைநாள் அரைக்கக்கடவாய். பின்பு அதை வழித்தெடுத்துப் பிரகாசிக்கும் படியான பீங்கானிற் போட்டு சூரியன் கண் முன்பாக ஒருநாள் வரை வைக்கக் கடவாய். எ—று.

சூட்சும விளக்கம்:—வெளிப்படை. 79

இதுவுமது

கணக்குறு மருந்ததைக் கல்வ மிட்டுநீ
சணக்கவே தூதளைச் சாற்றி னாலரை
இணக்கமா நாளரை யியற்றக் கேளதை
வணக்கமா வழித்துநீ வடிபீங் கானதில்.

இதில் வேறு அரைப்புச் சொல்கின்றார்.

(இ:ள்) முன்சொன்னபடி ஒருநாள் கணக்காகக் காயவைத்த மருந்தைப் பழையபடி கல்வத்திலிட்டுத் தூதுவளைச் சாற்றை விட்டு அரைநாள் அரைக்கக் கடவாய். அப்படி யரைத்தபின் இனிச்செய்ய வேண்டிய விபரத்தையும் சொல்வேன் கேட்பாயாக, அதைப் பக்தியோடு வழித்தெடுத்துப் பீங்கானில் எ...று.

சூட்சும விளக்கம்:...வெளிப்படை. 80

இதுவுமது

வைத்துநீ வெய்யலில் வைநா ளேகமாய்
கத்தன்ற னருளினாற் கல்வ மிட்டிடு
எத்துடன் வேதைக ளியற்றும் வாறினை
பத்தியா யறிந்திடு படியின் மைந்தனே.

இதில் முன் பீங்கானிற் போட்ட மருந்தைப் பின் செய்யும்விதஞ் சொல்கின்றார்.

(இ—று) முன் பாட்டிற் சொன்னபடி பீங்கானில் வைத்து அதை ஒரு நாள் வெய்யலில் வைக்கக்கடவாய்,

அப்படி வைத்தபின் அதைக் கடவுள் கிருபையைக்கருதிப் பழையபடியும் கல்வத்திற் போடக்கடவாய். இனி யித னாற் செய்யவேண்டிய வேதைகளையுஞ் சொல்வேன். பூமியில் வந்த மைந்தனே பக்தியோடு கேட்டறிந்து கொள்ளக்கடவாய்.எ—று.

சூட்சும விளக்கம்:—வெளிப்படை. 81

இதுவுமது

பூவினிற் கசப்பதே பொருந்துங் காயெலாம்
மேவிய பலனெலா மிகுந்த 'வின்பமாம்
தாவிய பிணிகளைத் தகர்த் தெறிந்திடும்
நாவினாற் பெயரினி நவிலக் கேட்டிடு.

இதில் பின் அரைப்புக்காக எடுக்கவேண்டிய ஓர் மருந்துண்டாகு மிடத்தை வருணிக்கின்றார்.

(இ—ள்) பூவெல்லாம் மிகுந்த கசப்பே பொருந்தி யிருக்கும் காய்களும் பழங்களும் மிகுந்த இன்பமுடைய தாயிருக்கும். அதிகக் குதிப்புக்கொள்வதாகிய நோய் களையெல்லாம் நிலைபெறாமல் துரத்திவிடும். இத னுடைய பெயரையும் இனிச் சொல்வேன் கேட்பாயாக. எ...று.

சூட்சும விளக்கம்;...இப்பாட்டினால் ஓர் மரத்தை வருணித்தார். மற்ற விபரங்களையெல்லாம் பின்கூறு வார். 82

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

வேனலென் றுரைத்த பேரின்
விளம்புவேன் றலையோ டன்பாய்த்
தானுறு மகரந் தன்னிற்
றங்கிய கடையும் பூவும்
ஏனமா யெண்ணெய் தன்னி
லியல்புட னரையாய் சாமந்



தானமா மிரண்ட தாகச்
சாற்றுவேன் வேதை வேறு

இதில் முற்குறித்த மரத்தின் பெயரும் அதிலெடுக்கு மருந்தின் விபரமும் அரைப்புஞ் சொல்கின்றார்.

(இ...ள்) வேனல் என்று சொல்லப்படுவதாகிய ஓர் பெயரில் முதலெழுத்தையும், பொருந்திய மகரத் தின் கடையெழுத்தையும், பூவென்ற எழுத்தையும் கூட்டினால் எப்பெயரமையுமோ அப்பெயருள்ள மரத்தி லிருந்துண்டாகப்பட்ட தைலத்தை முன்கல்வத்தில் போட்டு வைத்திருக்கிற மருந்தில்விட்டு இரண்டு சாமம் அரைக்கக் கடவாய். இனி மேற்செய்யவேண்டிய விதத்தையுஞ் சொல்வேன். கேட்பாயாக. எ—று.

சூட்சும விளக்கம்,—வேனல் என்று சொல்லப்படுவ தாகிய பெயரின் முதலெழுத்தாவது (வே.) மகரத்தின் கடையெழுத்தாவது (ம்) பூவென்றஎழுத்தாவது (பு). ஆக இம் மூன்றெழுத்துக்களையுங்கூட்ட (வேம்பு) என்றானது. இந்த வேம்பிலிருந்துண்டாகப்பட்ட தைலமாவது (வேப்பெண்ணெய்) இதையே விட்டு இரண்டு சாமமரைக்க வேண்டியது. பு என்ற எழுத்து பாட்டில் பூவென நீட்டல் விகாரம் பெற்று வந்தது. 83

இதுவுமது

பொங்கிய புரைக ளோடு
புன்புலா லனைத்தும் போக்கும்
பங்கினில் வடித்து வந்த
பொற்புறு மெண்ணெய் தன்னிற்
றுங்கமா யரைப்பீர் சாமந்
தொகையுட னிரண்ட தாயே
சங்கையாய் மருந்து வேறு
சாற்றுவேன் மாக்கள் கேண்மின்.

இதில் வேறு அரைப்புச் சொல்கின்றார்.

(இ—ள்) மானிட தேகத்தில் உஷ்ணத்தினாலதி கரித்த புலால் நாற்றத்தை யுடைய புண், புரை முத லானவைகளையெல்லாம் நீக்கும்படியாகிய புங்கமுத்தி லிருந்து வடித்தெடுத்த அழகுபொருந்திய தைலத்தை விட்டு முன் அரைத்து வைத்திருக்கிற மருந்தை உயர்வு பொருந்தும்படியாக இரண்டு சாமம் கணக்காக அரைக் கக் கடவீர்கள். மனிதர்களே! இனி வேறு மருந்தைச் சொல்வேன். கேட்பீர்களாக. எ—று.

சூட்சும விளக்கம்:வெளிப்படை. 84

இதுவுமது

முத் தெனப் பகர்ந்து முன்னோர்
மொழிகுவ ரதனி லூற்ற
சித்திர மான வெண்ணெய்
தன்னிலே திறம தாக
அத்திர மரைப்பீர் சாம
மடைவுட னிரண்ட தாமே
மற்றொரு மருந்தின் வேதை
வழுத்துவேன் வையத் தோரே.

.........

இதில் மற்றொரு அரைப்புச் சொல்கிறார்,

(இ-ள்.) முத்து என்று சிறப்பினால் உலகத்தில் வழங்கப்படுவதாகிய சிற்றாமணக்கு முத்திலிருந் தெடுந்த எண்ணெயைவிட்டு முன்னரைத்து னவத்திருக் கிற மருந்தைப் பலத்தோடு முன்சொன்னபடியே 6 மணிநேரம் அரைக்கக்கடவீர்கள். இனி இம்மருந்தைச் செய்யவேண்டிய வேறு மார்க்கத்தையுஞ் சொல்வேன் கேட்பீர்கயாக. எ—று.

சூட்சும விளக்கம் ஆமணக்கம் முத்தை முத்தென்றே வழங்குவது உலகத்தியற்கை. முத்தென்றால் ஆமணக்கு



முத்தெனப் பொதுப்படக் கருதவேண்டியதாயினும் இம்முறைக்கு வேண்டியது சிற்றாமணக்கே யாதலி னால் அதையே கொள்ளப்பட்டது. ஆகவே (சிற்றா மாணக்கெண்ணெயை யிட்டே இரண்டுசாம்) மரைக்க வேண்டும்மெல ,வறில். (85)

இதுவுமது

குத்குடங் கருமை தன்னிற்
கொழுப்பதை யுருக்கி நன்றாய்
விக்கவே யரைப்பாய் சாமம்
விகுவுட னிரண்ட தா மே
பக்குவ வேதை யின்னம்
பகரக்கேள் மாணாக் கா நீ
முக்கிய முடனே செய்வாய்
முயங்கொளி யிலங்கத் தானே,

.........

இதிலும் வேறு அரைப்புச் சொல்கின்றார்.

(இ-ள்) முன்சொன்னபடி சிற்றாமணக் கெண் ணெய் விட்டரைத்த மருந்தைக் கருங்கோழியினுடைய கொழுப்பை யுருக்கி அந்த எண்ணெயை விட்டுப் பலத் தோடு இரண்டுசாமம் அரைக்கக் கடவாய். இன்னும் இதனுடைய வேதைகளைச் சொல்வேன் எனது மாணக் கனே கேட்டுக்கொண்டு அவசியமாகப் பிரகாசிக்கும்படி செய்யக் கடவாய். எ—று.

சூட்சும விளக்கம்: —வெளிப்படை. (89)

வேறு விருத்தம்

கொங்குட னுலவியே கொம்மை வாய
தெங்கினி லுறுமெண்ணெய் தன்னிற் சீருறச்

சங்கையா யரைத்திடு சாம மொன்றரை
துங்கமா மருந்தினி வேறு சொல்லுவேன்.

.........

இதிலும் வேறு அரைப்புச் சொல்கின்றார்.

(இ-ள்) வாசனையோடு கூடி அழகு பொருந்தி யிருப்பதாகிய தெங்கின் காயிலிருந் துண்டாகப்பட்ட எண்ணெயை முன்னரைத்து வைத்திருக்கிற மருந்தில் விட்டு நாலரைமணி நேரம் உயர்வு பொருந்தும்படியாக அரைக்கக் கடவாய் இனிவேறு மருந்தையும்சொல்வேன் எ—று.

சூட்சும விளக்கம்:—தெங்கின் காயிலிருந்துண்டாகப் பட்ட எண்ணெயாவது (தேங்காயெண்ணெய்) இதையே விட்டு 4½ மணிநேரம் அரைக்கவேண்டியது. (87)

இதுவுமது

தாவிய படியுட னறலி னுற்றிடும்
ஆவிநெய் தன்னிலே யாட்டு விரதை
மேவிய நாளொன்று விளம்பக் கூறுவேன்
கூவுறு மாந்தரே கூர்ந்து கேண்மினே.

——

இப்பாட்டிலும் மற்றொரு அரைப்புக் கூறுகின்றார்.

(இ-ள்) முன்தேங்கா யெண்ணெய் விட்டரைத்த மருந்தைப் பழையபடி தாவித் திரியும்படியாகிய காராம் பசுவினுடைய நெய்யைவிட்டு ஒருநாள் வரை அரைக்கக் கடவாய் மானிடர்களே இன்னமுஞ் சொல்வேன் கேட்பீர்களாக—எ-று.

சூட்சும விளக்கம்:—வெளிப்படை. (88)

இதுவுமது

கருத்தனை மனத்தினிற் கருதிக் கற்புடன்
பொருந்தியே புகழ்ந்துமா பிரியமுற்றுநீ



திருத்தனைப் போலவுஞ் சேர்க்க நின்றிடு
மருத்துவம் வேறொன்று வழுத்து வேனன்றே

இதில் முன்சொன்னபடி மருந்தையரைத்த பின் செய்யும் மார்க்கங் கூறுகின்றார்.

(இ-ள்) முன் சொன்னபடியே காராம்பசுவினுடைய நெய்யை விட்டரைத்த பின்பு எல்லாம் வல்ல கடவுளை மனதிற்றியானித்து ஒழுக்கத்தோடு பொருந்திப் புகழ்ந்து மிகவுஞ் சிநேகங்கொண்டு இனிமேற் செய்யும் மருத்துவம் வேறுசொல்வேன் கேட்பாயாக—எ-று.

சூக்ஷம விளக்கம்:— வெளிப்படை.. (89)

எண்சீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

கேளப்பா வஞ்சனத்தைக் கல்வ மிட்டுக்
கெடியாக வழித்தெடு பாய் கீர்த்தி யாகச்
சூளப்பா வெள்ளளவும் பிசகி டாமற்
தூபமுடன் றியானித்துத் தொழுது போற்றித்
தாளப்பா தமனியத்தின் செப்புத் தன்னிற்
சற்குருவை மனதிலுன்னித் தியானம் பண்ணு
வேளப்பா வஞ்சனத்தின் வேதை தன்னை
விண்டிடவே நாவரிது வேதை கேளு.

——

இதில் இம்முறையின் முடிவு கூறுகிறார்.

(இ-ள்) அப்பளே கேட்கக்கடவாய் முன் சொன்ன படியே அரைத்த இந்த அஞ்சனமாகிய மருந்தை நன்றாயரைத்துக் கல்வத்திலிருந்து வழித்தெடுக்கக் கடவாய். அப்படி வழித்தெடுத்தவுடன் கீர்த்தியோடு என்னளவும் பிசகாதபடி தூபதீபத்தோடு கடவுளைத் தியானித்து வணங்கித் துதித்து பொன்னினாற் செய்த ஓர் செப்பில் குருவையுந் தியானித்து வைக்கக்

கடவாய். இனி இந்த அஞ்சனத்தினுடைய வேதைகளைச் சொல்வேன் கேட்பாயாக.

சூக்ஷும விளக்கம்: —வெளிப்படை. (90)

கலி விருத்தம்

வேதை கேளும் விபுலையின் மாக்களே
ஓதி டாதுநீ ருய்த்துணர்ந் தோருமின்
பூத மோடு புதைய லுறுமதைக்
கோதி யேயெடு நீர்வகை கூறுவேன்.

.........

இது முதல் மேற்சொல்லிய அஞ்சனத்தின் வேதை சொல்லத் தொடங்கின்றார்.

(இ-ள்) இனி இந்த அஞ்சனத்தினுடைய வேதைகளைச் சொல்வேன். பூமண்டலத்திலுள்ள மனிதர்களே கேளுங்கள். இந்த உண்மையை ஒருவரிடமுஞ் சொல்லாமல் நான் சொல்வதை யெல்லாம் நன்றாக உய்த்துணருங்கள். பூதங்கள் காத்துகொண்டிருக்கப்பட்ட புதையல்களை யெல்லாம் எடுக்கும்படியான மார்க்கத்தையுஞ் சொல்வேன். எ—று

சூட்சும விளக்கம்:—வெளிப்படை. (91)

இதுவுமது

புந்தி கூர்தரப் புந்திய வாரத்தில்
சொந்த மாகவே சூரிய னின்சுடர்
கந்தரத்தி லடைபின் கடிகைகேள்
விந்தையாகவே விள்ளுவன் மூன்றென.

.........

இது முதல் இந்தமையின் சம்பந்தமான பூசை விபரஞ் சொல்கின்றார்.



(இ-ள்) மிகுந்த அறிவுனே புதன்கிழமையில் சூரியனுடைய பிரகாசமானது ஆகாயத்திலடைந்தபின் வேடிக்கையாகச் சொல்வேன் கேட்பாயாக மூன்றுநாழிகையான சமையத்தில். எ—று

சூட்சும விளக்கம்:—சூரியனொளி ஆகாயத்திலடைந்த 9 மணிநேரம் என்றதை விடிந்து 9 மணிநேரம் என்று கொள்ளவேண்டியது. இந்த நேரத்தில்தான் பின் சொல்லும் பூசை ஆரம்பிக்கவேண்டும். அல்லது ராத்திரி 9 மணிநேரம் என்றும் யூகிக்கலாம்.

இதுவுமது

கதலி யின்பழங் கங்கைநூற் றொன்றுடன்
இதம தாகவே விம்பழ மித்தகை
விதம தாகவே வெள்ளிலை தன்னிலே
இதமு டனொரு நூற்றுட னொன்றுமே.

.........

இதில் இந்தமை சம்பந்தமாகச் செய்யும் பூசனைக் குரியசமான்கள் கூறுகின்றார்.

(இ-ள்) வாழைப்பழத்தில் நூற்றொன்றோடுசிநேககமாக எலுமிச் சம்பழம் நூற்றொன்று, வகையாக வெற்றிலையில் நூற்றொன்றும் எ—று.

சூட்சமவிளக்கம்:—இப்பாட்டும்அடுத்தபாட்டுங் குளகமாகையால் மற்றவைகளைப் பின்கூறுவார்.

கொச்சகக் கலிப்பா

கமுகு தனிலே கணக்கெடு கதலியைப்போல்
குமுத மலருங் கோகனக மின்மலரும்
தமுத முறவே சார்புடனீ நூற்றொன்று
அமுத முறவே யறைகுவன் வேறொன்றே;

(இ-ள்) பாக்கில் கணக்கையுடைய வாழைப் பழத்தைப் போல் நூற்றொன்று எடுக்கக்கடவாய். அல்லிப் புஷ்பமும் பொருத்த முறும்படியாக நூற்றொன்றும் சேகரிப்பாய். சுகமாக இன்னும் வேறொரு வகையுஞ் சொல்வேன் கேட்பாய். எ - று.

சூட்சும விளக்கம்:—வெளிப்படை. (94)

இதுவுமது

மகிமை யுறவே வாடையுறு மல்லிகைப்பூ
தகுவிதமாய்ச் சேர்ப்பாய் தத்தியிரு நூற்றொன்று
விகுவாவட் டம்பூவதில் விண்ட மொழிபோல
தகுமா யெடுப்பாய் தாலமிசை யுள்ளோனே.

.........

இதுவுமது

(இ-ள்) சிரேஷ்டம் பொருந்தும்படியாக வாசனை பொருந்திய மல்லிகைப் புஷ்பத்தில் தகுந்த விதமாக இருநூற்றொன்று எடுத்துச் சேர்ப்பாய். மிகுந்த நந்தியாவட்டப் பூவிலும் முன்சொன்னபடியே இருநூற்றொன்று எடுத்துக் கொள்வாய். பூமிசை பொருந்தியவனே! இன்னமுஞ் சொல்வேன் கேள். எ—று.

சூட்சம விளக்கம்:- வெளிப்படை [95]

வேறு விருத்தம்

தமனியந் தன்னை நீ தகட மைத்துடன்
அடிமையாமென் னைம்பத்தோ ரக்ஷரந்தனை
இமையுறத் தகட்டினில் வரைந்தே யின்பமாக
சுமையுறத் தகடதைக் கரமெடுத்திடே.

இதில் முன் சொன்னபடி சாமான்கள் சேகரித்தபின் செய்யவேண்டிய விதஞ் சொல்கின்றார்.

[இ-ள்] முன்சொன்ன பொருள்களைச் சேகரித்த பின் நீ நல்ல பொன்னை யெடுத்துத் தகடுசெய்து



அதில் ஐம்பத்தொரு அக்ஷரத்தைப் பொருந்தும்படியாக எழுதி இன்பத்தோடு அந்தத் தகட்டைக் கையிலெடுத்துக் கொள்ளுவாய். எ...று.

சூட்சும விளக்கம்:- ஐம்பத்தோரக்ஷர விபரம் இந்நூலின் ஏழாவது காண்டத்திற் சொல்லப்பட்டிருப்பதால் அங்கு பார்த்துணர்ந்து யூகித்துக்கொள்க.

இதுவுமது

எடுத்திடு தகட்டினி லியம்பு மஞ்சனம்
தொடுத்திடு பணமொன்று துலங்க மேலிடு
எடுத்திடு புதையலி னியற்கை தன்னையே
அடுத்தினி வேதைவே றறைவன் கேண்மினே.

---

இதில் முன் தகட்டைப் பின்செய்ய வேண்டிய விதஞ் சொல்கின்றார்.

(இ-ள்) முன் சொன்னபடி கையிலெடுத்த பொற்றகட்டில் மேற்சொல்லியிருக்கின்ற அஞ்சனத்தில் ஒரு பணவெடை யெடுத்துப் பிரகாசிக்கும்படியாக மேலே பூசுவாய் இனி புதையல் முதலியவைகளை எடுக்கும்படியாகிய தன்மையாகிய வேறு வேதைகளைச் சொல்வேன் கேட்பீர்களாக. எ—று.

சூட்சும விளக்கம் :—வெளிப்படை. [97]

எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

கேளப்பா வாடவனி லெவனா னாலுங்
கெடியாகக் குந்திருந்து கீர்த்தியாகச்
சூளப்பா விடதுகைமேல் வலது கையைத்
துலங்கிடவே மேலிட்டுச் சூக்ஷமான
கூளப்பா வஞ்சனத்தைக் கையி லெடுத்துக்
கொம்மையுட னரைப்பணத்தைத் திலதம்போடு
வாளப்பா முன்னியற்றுந் தகடு தன்னை
வடிவாக வலதுகையில் வைப்பா யன்றே,

..........

இதில் முன் அஞ்சனம்பூசிய தகட்டை மேற்செய்ய வேண்டிய விதஞ் சொல்கின்றார்.

(இ-ள்) அப்பனே கேட்கக்கடவாய். பூவுலகத்தி லுள்ள மனிதனில் எவனையாகிலும் குந்தியிருக்கும்படி செய்து புகழோடு அவனுடைய இடதுகைமேல் வலது கையைப் பிரகாசிக்கும்படியாக வைத்து மிகவும் தந்திர மான இந்த அஞ்சனத்தைக் கையினாலே ஒரு பண வெடை யெடுத்து அழகுடன் அவன் நெற்றியில் திலத மிட்டு முன் சித்தப்படுத்தி வைத்திருந்த தகட்டைஅவன் வலது கைமேல் வைக்கக் கடவாய். எ...று.

சூக்ஷம விளக்கம்:—வெளிப்படை. (98)

இதுவுமது

வைத்தவுடன் விழியினால் நோககும் போது
வடிவான வசுதைவழி கடிகை காவை
சுற்றிலுறு நான்கெல்கை துறப்ப தாகித்
தொகையுடனே பாதாள மனைத்துத்தோற்றும்
முத்தியுட னவணிலுற்ற முதலாமாசை
முங்கிநின்ற நவலோகப் புதைய லெல்லாம்
பத்தியுட னிவணிவணிற் பதிந்த தென்ன
பண்புடனே தோற்றுமடா பகரக்கேண்மோ.

---

இதில் அஞ்சனம் பார்க்கும் விதஞ்சொல்கின்றார்.

[இ-ள்] முன் சொன்னபடி அவன் வலது கை மேல் தட்டை வைத்தவுடன் அவன் விழியினால் அந்தத் தகட்டைப் பார்ப்பானேயானால் அப்படிப் பார்க்கும் போது பூவுலகத்திலுள்ள நான்கெல்கைகளையும் விளக் குவதாகி கணக்காகப் பாதாளமுதல் யாவுங்காணும், சிரேஷ்டமாக அவ்விடங்களிலுள்ள பொன் மற்ற நவ லோகங்கள் ஆகிய புதையல்களெல்லாம் இந்த இந்த



இடத்தில் புதைந்து கிடக்கின்றதென்று தானே விளங்கும். எ...று.

சூட்சும விளக்கம்:- வெளிப்படை. [99]

இதுவுமது

பகரமுறும் புதையல்தனை யெடுப்பா யாகில்
பக்தியுடன் வேதாளம் பாய்ந்தே கொல்லும்
தகரமுறு வேதாளந் தன்னைப் போக்கச்
சாற்றுகின்றே னாயிரத்திற் சூக்ஷமொன்று
அகரமுறு மைம்பத்தோ ரக்ஷரத்தை
யறையலுற்றே னெழுநூற்றி லறிந்து கொள்ளு
மகரமுறு மிவையெல்லா மனத் தடக்கு
மாணாக்கா வொருவருக்கும் வழுத்தி டாதே.

---

இதில் பைசாச முதலியவைகளின் தொந்தரவை நீக்கு மார்க்கங் கூறுகின்றார்.

[இ-ள்] முன்சொன்னபடியே அஞ்சனத்தினால் தெரிந்துகொண்ட புதையல்களை யெடுப்பாயானால் அவைகளைக் காத்துக் கொண்டிருக்கின்ற பூதங்கள் வேகத்தோடு பாய்ந்து கொல்ல யத்தனிக்கும். ஆதலால் அவ்வேதாளங்களை அவ்வாறு செய்யாமல் துரத்து வதற்கு ஓர் தந்திரத்தைச் சொல்வேன் அறிந்துகொள் வாய். அதாவது இதன் ஏழாவது காண் டத்தில் ஐம்பத்தோரக்ஷரம் சொல்லியிருக்கின்றேன். அதை யெடுத்து ஜெபித்து இவைகளை நீக்கிக்கொள்வாய். மாணாக்கனே இந்த இரகசியங்களை யெல்லாம் ஒருவ ருக்கும் சொல்லாதே. எ...று.

சூக்ஷம விளக்கம்:—ஏழாவது காண்டத்தில் ஐம்பத் தோரக்ஷரத்தை யின்னதெனக் குறிப்பிடுவர். அறை யறிந்து பூசனை செய்துகொள்க.

வேறு விருத்தம்

தேங்குலத் தொடுமரஞ் செறியும் பூவினில்
தாங்குடி யிருந்திடுந் தனுச னென்றிடுங்
காங்குடி கொண்டிடுங் காளை கேளுமோ
நாங்கெனுங் காண்டமு நடந்த மூற்றுமே.

——

இதில் இக்காண்ட முடிவு சொல்கின்றார்.

[இ-ள்] வண்டுகள் தங்கிய மரங்கடளர்ந்த சோலைகள் சூழ்ந்த மண்டலத்தில் தங்கியிருக்கும் மனுட னென்று சொல்லப்பட்ட குமரனே கேட்கக்கடவாய் இந்த நான்காவது காண்டமு முடிந்தது. எ—று.

சூட்சும விளக்கம்:- வெளிப்படை.

நான்காம் காண்டம்

முற்றுப் பெற்றது.

......

# புறநடை

——

கனவான்களே!

முன் இந்த நூலின் இரண்டு காண்டங்களும் விரைவில் அச்சிட்டு வெளியானது போலவே இடைவிடா ஊக்கத்தாலும் நமது அபிமானிகளின் பேருதவியாலும் கடவுள் கிருபையினாலும் பெரியோர்களின் ஆசீர்வாதத்தாலும் இந்த மூன்றாங்காண்டமும் நான்காம் காண்டமும் அதிவிரைவாகச் சில தினங்களுக்குள்ளாகவே முடிவாகி விட்டன. இந்த இரண்டு காண்டங்களிலும் இன்றியமையாத சில அறிய முறைகளடங்கி யிருக்கின்றன. அவைகளை முந்தின காண்டங்களின் கிரமப்படியே ஈற்றில் எவரும் சுலபமாகத் தெரிந்துகொள்ளும் பொருட்டு வசனரூபமாகவும் இங்கெழுதுகின்றோம். முன் தனித்தனியே ஒவ்வொரு காண்டத்தின் ஈற்றிலும் எழுதியிருந்தோம். இதில் இந்த இரண்டு காண்டங்களுக்கும் சேர்த்தே ஓரிடத்தில் எழுதுகின்றோம்.

அம்முறைகளாவன

| | | |
|---|---|---|
| | காந்தக்களங்க செந்தூரம் | 1 |
| மூன்றாங் | அயக்களங்கு | 2 |
| காண்டம் | அயச்செம்பு | 3 |
| | அயச்செந்தூரம் | 4 |
| நான்காம் காண்டம் | பாதாள அஞ்சனம் | 1 |

இவைகளே இந்த காண்டங்களுள் அடங்கிய முறைகளாம். இவற்றுள் காந்தக்களங்க செந்தூரத்தை முதலில் எழுதுகின்றோம்.

காந்தக் களங்க செந்தூரம்

(a) நவச்சாரம் கழஞ்சி-1பூநீறுகழஞ்சி-1-4.4 கிராம் இரண்டாங் காண்டத்திற் சொன்ன துருசுச் சுண்ணம் அரிசியெடை-1,

(b) வீரம்பணவெடை (488மிகிராம்) வெண்காரம், 488மிகி, தாளகம் 488 மிகி, காந்தம் பலம் 2-70 கிராம்.

(c) தங்கம், நாகம், கெந்தகம், இரசம், திருநூற்றுப்பச்சை யிலைச்சாறு, செல்லத்தக்க அளவு.

(d) கெந்தகம் 35 கி, பொற்றலைக் கையாந்தகரைச்சாறு செல்லத்தக்க அளவு, நாவல்பட்டைச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை...முதலில் (a) யிற்சொன்ன நவச்சாரத்தையும், பூநீற்லையும் கல்வத்திற்போட்டுப் பல மாயரைத்து வழித்து வைத்திருக்கிற மருந்தோடு போட்டுக் கலக்கி ஓர் பீங்கான் பாத்திரத்திலிட்டுப் வெயிலில் வைக்கவேண்டும், அப்படி வைத்தால்' அது ஜெயநீராகி விடும். அதையெடுத்துப் பத்திரப்படுத்திக் கொள்ள வேண்டும்.

பின்பு (b) யிலுள்ளவீரம், வெண்காரம், தாளகம் மூன்றையும் கல்வத்தில்போட்டு முன்சொன்ன ஜெய நீரைவிட்டு நன்றாயரைத்து வழித்தெடுத்துக் கொள்ள வேண்டும்,

அதற்குப்பின் மேற்படி (b)யிலுள்ள நான்காவதாகிய காந்தத்தில் மேற்சொன்னபடி அரைத்து வழித்து வைத்திருக்கிற வீரம், வெண்காரம், தாளகக்கூட்டை நன்றாய்ப்பூசி முதற்காண்டடத்திற் சொல்லியிருக்கின்ற கும்பிடுகிளிஞ்சியின்னாற் செய்த மூசையிற் போட்டு உலையில் வைத்தூத வேண்டும். இப்படி ஊதினால் அதில் வைத்த மருந்தானது உருகி மணிமணியாக இருக்கும். அதைப்பக்குவமாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

பின்பு(c)யிற் சொன்ன சரக்குகளில் தங்கத்தையும் நாகத்தையும் முன்மணிக்குச் சமனெடையெடுத்து அம்மணியினோடு சேர்த்து முன் மூசையில் வைத்துப்



பழையபடியும் உலையில் வைத்தூத வேண்டும். அப்படியூதினால் முன்மணியும் இந்த இரண்டு சரக்குகளுஞ் சேர்ந்து மிகுந்த அழகோடு பிரகாசிக்கும்.

இதற்குப்பின் ஷை [c]யிலுள்ள கெந்தகத்தையும், இரசத்தையும் முன்ஊதிப் பிரகாசித்துக் கொண்டிருக்கின்ற மருந்திற்குச் சமனெடை யெடுத்துக் கல்வத்திற் போட்டு மேற்படி (c) யிலுள்ள திருநூற்றுப்பச்சையிலைச்சாற்றைச் சிறுகச் சிறுகவிட்டு நன்றாயரைத்து அதை உருட்டி யெடுத்து முன் மூசையில் வைத்துருக்கிப் பிரகாசித்துக் கொண்டிருக்கின்ற மருந்தோடு சேர்த்து உலையில் வைத்தூதி உருக்கவேண்டும். அப்படி யுருக்கினால் முன் மருந்தானது இப்போது போட்ட மருந்தையெல்லாம் உண்டு நல்லபிரகாசத்தைப் பொருந்திக் களங்கமாகும்.

இந்தக் களங்கத்தை நவலோகங்களி லெதிலேனும் முற்நூற்றிற் கொருபங்கு கொடுத்தால் தங்கமாகும் இன்னும் பலவித வேலைகளையும் செய்யும் அது விபரத்தை உரையிற்கண்டுகொள்க.

'பின்பு இந்த களங்கத்தோடு (d]யிற் சொல்லியிருக்கின்ற 35 கிராம் கெந்தகத்தைச் சேர்த்துக் கல்வத்திற் போட்டு ஷை (d] யிற் சொல்லியிருக்கின்ற பொற்றலைக் கையாந்தகரைச் சாற்றைச் சிறுகச் சிறுகவிட்டு 9 மணி அரைத்து வழித்தெடுத்துப் பில்லை தட்டி ஓட்டில் வைத்து மேலோடு மூடிக்கழிச்சீலையாற் கவசம்பண்ணி காட்டெருவினால் ஒன்றேகால் முழஉயரம் புடம் தயார் செய்து மேற்படி கவசத்தை அதன் மத்தியில் வைத்து நெருப்பிட்டு புடம் எரிந்தடங்கினபின் குளிரஆற விட்டுக் கவசத்தைப் பிரித்துப் பார்த்தால் வெண்மை கலந்த சிவப்பு நிறமாகிய செந்தூரமாயிருக்கும்.

அதையெடுத்துப் பழையபடியுங் கல்வத்திலிட்டு (d)யிற் சொன்ன நாவல்பட்டைச் சாற்றைச் சிறுகச்

சிறுக விட்டுப் பலமாக இரண்டு சாமமரைத்து வழித்தெடுத்துப் பில்லைதட்டி ஓட்டிலிட்டு மேலோடுமூடிச் சீலைமண் செய்து ஒருமுழ உயரம் புடம்போட்டு எரிந்தடங்கினபின் கவசத்தை யெடுத்துப் பிரித்துப்பார்த்தால் நல்ல முருக்கம் பூப்போன்ற சிவந்த நிறமான செந்தூரமாகியிருக்கும். இதை யெடுத்துப் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்...அரிசியெடை 1

அனுபானம்...கீழ்ச் சொல்லியிருக்கும் சீந்திற் சர்க்கரையெடுத்து அதன் மத்தியில் இந்தச் செந்தூரத்தை வைத்து உருட்டி உதயத்திலும் மாலையிலும் சாப்பிட வேண்டும், இந்த மருந்தைச் சாப்பிட்டவுடன் தேவையான அளவு காய்ச்சின பசுவின் பாலை வாயுட்கொண்டு நன்றாய்க் கொப்பளித்து பல்லிடுக்கு முதலியவைகளில் தங்கி யிருக்கும் மருந்தும் உட்செல்லும்படியாக விழுங்கவேண்டும்.

உபயோகம்—மேற்சொன்ன கிரமப்படி இம்மருந்தை ஒரு மண்டலம் சாப்பிட்டால் உலகத்திலுண்டான சகல வியாதிகளும் தீர்ந்து தேகம் பலப்பட்டு எப்போதும் திடகாத்திரமாகும். விருத்தாப்பிய திசையை யடைந்தவனையும் யௌவன திசை யுடையவனாக்குமென இந்நூலில் சொல்லப்பட்டிருக்கிறது அந்த விபரங்களையெல்லாம் உரையில் விரிவாகச் சொல்லப்பட்டிருப்பதால் அங்கு பார்த்துக்கொள்க.

பத்தியம்— எள்ளினுடைய வாசமும் படக்கூடாது. அந்த எள்ளெண்ணெயில் ஓர் துளி சேருமேயானால் கட்டாயம் இறந்துபோக நேரும். எவ்வகை மீன்களும் ஆகாது. ஸ்திரீபோகம் எள்ளத்தனையுங் கூடாது. அப்படி ஸ்திரீ சேர்க்கையை விரும்பினால் இந்த மருந்தினாலேற்படும் பிரயோசனம் ஒன்று மிராது. பசுவின் பால், அரிசி, வெல்லம், பாசிப்பயறு இவைகளைச் சேர்த்துப் பொங்கி இதையே ஆகாரமாகச்



சாப்பிட வேண்டும். தலையீற்றுப் பசுவின்நெய் அதிகமாகச் சேர்க்கவேண்டும். மேற்படி சொன்னவைகளைத் தவிர எதையும் சாப்பிடக்கூடாது, எள்விளைந்த பூமியிலும் நடக்கக்கூடாது. இந்தப் பத்தியங்களிற் கொஞ்சமாவது தவறினால் கட்டாயம் தீங்கு நேரிடும். இந்த மாதிரியே மருந்து சாப்பிடுவதற்குமுன் ஒரு மண்டலமும் மருந்து சாப்பிடும்போது ஒரு மண்டலமும் மருந்து சாப்பிட்டபின் ஒரு மண்டலமும் ஆக மூன்று மண்டலங்கள் பத்தியமிருக்க வேண்டும். இந்த மூன்று மண்டலமுந் தீர்ந்த பின்பு எப்படியும் செய்து கொள்ளலாம். இந்த செந்தூரத்தை மூன்று மண்டலம் சாப்பிட்டால் எப்பொழுதும் காயம் அழியாதெனச் சொல்லப்பட்டிருக்கிறது. இவ்விபரமெல்லாம் உரையில் விரிவாயெழுதியிருப்பதா லங்கு பார்த்துக் கொள்க.

### சீந்திற் சர்க்கரை

வேண்டிய அளவு இரண்டு விரற்கனமுள்ள அதிக முற்றலில்லாததும்இளசில்லாததும் நடுத்தரமானதுமான சீந்திற் கொடிகளைக் கொண்டுவந்து நான்குவிரல் நீளமுள்ள துண்டுகளாக நறுக்கி அதன்மேலுள்ள மேற்புறணிகளை நீக்கிவிட்டு அவைகளை நன்றாய்த்தட்டி ஓர் பெரிய ஜாடியில் போட்டு அதுநிறைய ஜலத்தை விட்டு ஒரு வாரம் வைத்திருக்க வேண்டும். அப்படி வைத்தால் அவைகளெல்லாம் நன்றாய் ஊறிப்பொங்கிக் கொண்டிருக்கும், அந்தச் சமையத்தில் அவைகளை கையினால் நன்றாய்ப் பலமாகக் கசக்கிவிட்டுச் சக்கைகளை யெடுத்து நிழலிலுலர்த்தவேண்டும். பின்பு ஜாடியிலிருக்கின்ற தண்ணீரைக் கொஞ்சங் கொஞ்சமாக மெதுவாய் வடிக்கவேண்டும். இவ்விதம் ஜலத்தையெல்லாம் வடித்துவிட்டால் அடியிற் சர்க்கரை தங்கியிருக்கும், இதை யெடுத்துப் பத்திரப்படுத்திக் கொள்ளவேண்டும்

பின்பு முன் நிழலுலர்த்தி யிருக்கிற சக்கைகளை உரலிற்போட்டு நன்றாயிடித்து அந்தத் தூளையெடுத்

துச் சீலையில் வடிகட்ட அச்சீலையி னடியில் வெள்ளை நிறமாகிய சீந்திற் சர்க்கரை வடியும். பின்பு சீலைக்கு மேலிருக்கும் சக்கைகளை நீக்கிவிட்டு இதில்வடித்தெடுத் ததையும் முன் ஜாடியினடியிலிருந்தெடுத்ததையும் ஒன் றாகக் கலந்து வைத்துக்கொள்ளவும். இதுவே சீந்திற் சர்க்கரையாம்.

### அயக் களங்கு

a) வெடியுப்பு கழஞ்சி 8.8கிராம், நவச்சாரம் கழஞ்சி 8.8, இரண்டாங் காண்டத்திற் சொன்ன துருசுச் சுண்ணம் அரிசியெடை இதற்கு முன் முறை யிற் சொல்லியிருக்கின்ற ஜெயதீர் செல்லத்தக்க அளவு,

b) அரப்பொடி 70கிராம்· நாகம் வேண்டிய அளவு, வீரம் கழஞ்சு 4,4 கிராம்.

செய்முறை... (a) யிற் சொல்லியிருக்கின்ற வெடி யுப்பையும், நவச்சாரத்தையும் கல்வத்திற்போட்டு அதன்மேல் துருசுச் சுண்ணத்தைத் தூவிக் கைவிடாம லிரண்டு சாமம் அரைத்தால் அது கூழைப்போலாகும். அதை வழித்தெடுத்து ஒரு பீங்கான் பாத்திரத்தில் அப்பி மூன்றுநாள் வரை பனியில் வைத்தெடுக்கவேண் டும். பின்பு அதைப்பழையபடியும் கல்வத்திற் போட்டு மேற்படி a) யிற் சொல்லியிருக்கின்ற ஜெயநீரை விட்டுப் பலமாக நன்றாய் மைபோலாகிற வரையில் அரைத்து வழித்தெடுத்து b) யிற் சொல்லியிருக்கின்ற அரப்பொடியிற் போட்டு நன்றாகப்புரட்டிஅதையெடுத் துக் கும்பிடு கிளிஞ்சியினாற் செய்த மூசையிற் போட்டு அந்த மூசையை உலையில் வைத்தூத வேண்டும், அப்போது அது நன்றாயுருகி மருந்தும் அரப்பொடியும் ஒன்றாய்க் கலந்து தங்கத்தைப் போல பிரகாசித்துக கொண்டிருக்கும்.

பின்பு (b) யிற் சொல்லியிருக்கின்ற நாகத்தில் முன் முறையிலிருக்கின்ற மருந்திற்குச் சமனெடையும், வீரத்



தையும் எடுத்து மூசையிலிருக்கின்ற மருந்தோடுபோட் டுப் பழையபடியும் ஊருக்கவேண்டும். இப்படி யுருக் கினால் அந்தக் குகையிலிருந்த மருந்தானது போட்ட இரண்டு சரக்குகளையும் உண்டு தளதளப்பாகக் கொதித்து திவ்யமான களங்கமாகும். இதையெடுத்துப் பத்திரப்படுத்தவும்.

உபயோகம்:—இந்தக் களங்கமானது பலவித உலோ கங்களையும் பேதிக்கச் செய்யுமெனவும் வாதமுறை களுக்குக்கு இன்றியமையாத தெனவும் சொல்லியிருக் கின்றது. இதைப்பற்றி உரையில் விரிவாக எழுதியிருப் பதால் அங்கு பார்த்தறிந்து கொள்க.

### அயச்செம்பு

அயம் 140 கிராம் நாகம் 105 கிராம் துத்தம் 105 கிராம் கெந்தகம் 35 கிராம் இரண்டாங் காண்டத்திற் சொல்லியிருக்கின்ற துருசுச்சுண்ணம்[பணவெடை]4.48 கிராம் வெண்காரம் [கழஞ்சி. 1] 4.4 கிராம்

செய்முறை:—இவைகளில் அயம், நாகம், துத்தம், கெந்தகம் ஆகிய நான்கையும் குகையிற்போட்டு அதன் மேல் துருசுச் சுண்ணத்தையும் தூவி அந்தக்குகையை நெருப்பில்வைத்தூத வேண்டும். அப்படி ஊதினால் மருந்தெல்லாம் ஒன்றாகக் கலந்து நன்றாய் உருகிக் கொதிக்கும். அப்படிக் கொதிக்கின்ற சமயத்தில் வெண்காரத்தையும் அதிற்போட்டு ஊதவேண்டும். அப்படி ஊதினால் அந்தக்குகையிலிருக்கும் மருந்தானது இந்த வெண்காரத்தையும் இழுத்துச் சாப்பிட்டுவிடும். இப்படியானவுடன் யாவும் ஒன்றாகச்சேர்ந்து உருகிக் கொதித்து உயர்வான செம்பாகி விடும். இதுவே அயச் செம்பாம். இதை யெடுத்துப் பத்திரப்படுத்திக் கொள்ள வேண்டும்.

உபயோகம்:— இது வாதத்திற்கே பெரும்பான்மை யும் உபயோகப்படும். இதைப்பற்றி உரையில்

விபரமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அங்கு பார்த்துத் தெரிந்து கொள்க.

## அயச்செம்புச் செந்தூரம்

அயச்செம்பு 35 கிராம் சவ்வீரம் [1 கழஞ்சி] 4.4 கிராம் கெந்தகம் [1கழஞ்சி] 4.4 கிராம் பூநீறு 4.4 கிராம் சிறு பிள்ளை நீர் கறுப்பு வட்டக்கிலுகிலுப்பைச் சாறு, நாவற் பட்டைச்சாறு, இவை செல்லத்தக்க அளவு.

செய்முறை:—இதில் அயச்செம்பு,சவ்வீரம்,கெந்தகம், பூந்து இந்த நான்கு சரக்குகளையும் குகையிற்போட்டு நெருப்பிலிட்டு ஊதவேண்டும். அப்படி யூதினால் அவை யெல்லாம் ஒன்றாய்க்கலந்து கொதித்துக் கொண்டிருக்கும் பின்பு அதை யெடுத்துக் கல்வத்திற் போட்டு சிறு பிள்ளை நீரைவிட்டு ஒருசாமம் அரைக்க வேண்டும். இதற்குப்பின் அதில் வட்டக் கிலுகிலுப்பைச் சாற்றைச் சிறுகச் சிறுகவிட்டு ஒரு நாள்வரை அரைக்க வேண்டும். அதன்பின்பு அதனைவழித்தெடுத்து உருட்டித் தகடு போலச் செய்து ஓட்டிவிட்டு மேலோடு மூடிக் கழிமண்ணினால் ஐந்துசேலை மண் செய்து ஒன்றரைமுழ உயரம் எருப்புடம் தயார் செய்து அதன் மத்தியில் இந்தக் கவசத்தை வைத்து நெருப்பிட்டெரித்து அமர்ந்தபின் அதையெடுத்துக் கவசத்தை நீக்கிப்பார்த்தால் அம்மருந்தானது பொன்போன்ற நிறத்தினையுடைய செந்தூரமாகியிருக்கும்.

பின்பு அதை யெடுத்துக் கல்வத்திற்போட்டு நாவல் பட்டைச் சாற்றைவிட்டு ஒருசாமம் அரைத்து வழித்தெடுத்துப் பழையபடியும் ஓட்டில்வைத்து மேலோடுமூடி பத்துச் சீலைமண்செய்து எருவினால் ஒருமுழ உயரப் புடம் தயார்செய்து அதன் மத்தியில் அந்தக் கவசத்தை வைத்துநெருப்பிட்டு எரிந்தடங்கின பின் எடுத்துக் கவசத்தைப் பிரித்துப் பார்த்தால் முருக்கம்பூப் போன்ற சிவந்த நிறமுள்ள செந்தூரமாக யிருக்கும். இதை யெடுத்துப் பத்திரப்படுத்தவும்.



உபயோகம்—இந்தச் செந்தூரத்தை ஒன்பது வகைப்பட்ட உலோகங்களில் எதில் எதிலனாலும் முந்நூற்றிற் கொருபங்கு, கொடுத்தூதினால் நல்ல பிரகாசமுள்ள தங்கமாகுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. மற்றவிபரங்களை உரையிற் பார்த்துத் தெரிந்து கொள்க.

## நான்காவது காண்டம்

## பாதாள அஞ்சனம்

a] நவமணிக்காக்கை யீரல் 13.2 கிராம் பவளச் சொறி 30.8, கிராம் கருந்தேவாங்கின் ஈரல் 22கி, உடும்புநாக்கு 13.2, கிராம் வெள்ளெலிக்கண் 26.4, கிராம் கரடிப்பித்து 26.4 கிராம் அன்றில் மூக்கு 22கி, கிராம் மனிதன் அஸ்திஒடு 8,8. கிராம் கீரிக் கண் 22 கிராம் வெள்ளைப்புனுகு 13.2, கிராம் குதிரைவலக்காற் குளம்பு 22. கிராம் இந்திரகோபம் 79.2, கிராம் கெருடன்விழி 13.2, கிராம் காண்டா மிருகப்பித்து 22, கிராம் இராஜாளி புயமாமிசம் 158.4, கிராம் கூகைக்கண் 13.2, கிராம் குருவண்டு 4.4, கிராம் புலிமீசை 44 கிராம் முத்து 8.8, லிங்கம் 13.2, கிராம் தாளகம் 13,2, கிராம் கருங்குரங்கின் ஈரல் 13.2, கிராம் கஸ்தூரி 13.2 கிராம் கோரோசனை 13.2, கிராம் பொடித்த கல்மதம் 22 கிராம்

b) சூடன் 17.5 கிராம். திருநூற்றுப்பச்சை யிலைச் சாறு, கையான்தகரைச்சாறு, குப்பைமேனிச்சாறு, கொடுவேலியிலைச்சாறு, பேய்ப்பீர்க்கஞ்சாறு, தொட்டாற் சுருங்கியிலைச்சாறு, நன்னாரியிலைச்சாறு, கருநாயின் நாவிலிருந்தொழுகுகின்ற நீர், கழுதை மூத்திரம், பொற்றலைக் கையாந்தகரைச்சாறு, செம்பருத்தியிலைச்சாறு, தூதுவளைச்சாறு, வேப்பெண்ணெய், புங்கெண்ணெய், சிற்றாமணக்கெண்ணெய்,

கருங்கோழிக் கொழுப்பையுருக்கிய நெய், தேங்காய் எண்ணெய், காரம் பசுவின் நெய் ஆகியவை செல்லத் தக்க அளவு.

செய்முறை:—a) யிற் சொல்லிய சரக்குகளை யெல்லாம் வெயிலில் நன்றாய்க் காயவைத் தெடுத்துக் கொள்ளவேண்டும். பின்பு யாவற்றையும் ஒன்றாகக் கலந்து கல்வத்திற்போடவேண்டும். அதன்பின் b] யிற் சொல்லியிருக்கின்ற சீடனை யெடுத்து மேலே போட்டு திருநூற்றுப் பச்சை யிலைச்சாற்றை விட்டு மூன்று நாள் வரை பலமா யரைக்கவேண்டும். பின்பு அதை வழித் தெடுத்து ஓர் பீங்கான் பாத்திரத்தில் வைத்து மூன்று நாள் வெயிலிற் காயவைக்கவேண்டும். பின்பு அதைப் பழையபடியுங் கல்வத்திலிட்டு கையாந்தகரைச் சாற்றை விட்டு மூன்றுநாள் வரை யரைத்து வழித்துப் பீங்கானில் வைத்து முன் சொன்னபடியே மூன்று நாள் வரை வெயிலிற் காயவைத்தெடுத்துக் கொள்ளவேண்டும். இப்படியே குப்பைமேனிச் சாற்றில் மூன்று நாள் அரைத்து மூன்றுநாள் வெய்யிலிலும் கொடுவேலி யிலைச்சாற்றில் மூன்றுநாளரைத்து மூன்றுநாள் வெயிலிலும், பேய்ப்பீர்க்கஞ் சாற்றில் ஒருநாளரைத்து ஒரு நாள் வெயிலிலும், தொட்டாற்சுருங்கி யிலைச் சாற்றில் ஒரு நாளரைத்து ஒருநாள் வெயிலிலும், நன்னாரி யிலைச் சாற்றில் ஒருநாளரைத்து ஒருநாள் வெயிலிலும், கருநாயின் நாவிலிருந் தொழுகுகின்ற நீரில் ஒருநாள் அரைத்து ஒருநாள் வெயிலிலும், ஒருநாள் கழுதை மூத்திரத்தில் ஒருநாளரைத்து ஒருநாள் வெயிலிலும், பொற்றலைச் கையாந்தகரைச் சாற்றில் ஒரு நாள் அரைத்து ஒருநாள் வெயிலிலும், செம்பருத்தி யிலைச் சாற்றில் அரைநாளரைத்து ஒருநாள் வெயிலிலும் தூதுவளைச் சாற்றில் அரைநாளரைத்து ஒருநாள் வெயிலிலும் வைத்தெடுத்துக் கொள்ளவேண்டும்.

பின்பு அதைக் கல்வத்திற்போட்டு வேப்பெண்ணெயை விட்டு 6 மணி நேரம் அரைக்கவேண்டும். பின்பு



அதில் புங்கெண்ணெயை விட்டு 6 மணி நேரம் அரைக்க வேண்டும். அதற்குப்பின் அதில் சிற்றாமணக்கெண்ணெயை விட்டு இரண்டு 6 மணி நேரம் அரைக்கவேண்டும். அதற்குப்பின் கருங்கோழிக் கொழுப்பை யுருக்கிய நெய்யை விட்டு 6 மணி நேரம் அரைக்க வேண்டும். பின்பு தேங்கா யெண்ணெயைவிட்டு 4-30 மணி நேரம் அரைக்கவேண்டும். முடிவில் காராம்பசுவினுடைய நெய்யை விட்டு ஒருநாள்வரை நான்றாயரைத்து கடவுளை தியானித்து அதை வழித்தெடுத்து தீப தூப முதலாகிய பூசனைகளைச் செய்து பொன்னினாற் செய்த ஓர் செப்பில் பத்திரப்படுத்திக் கொள்ள வேண்டும்.

உபயோகம்:- இதனால் பூமிக்குள் மறைந்து கிடக்கின்ற புதையல் முதலாகிய எல்லா வஸ்துக்களையும் தெரிந்து கொள்ளலாமென்றும் இன்னும் அபாரமான வேலைகளை யெல்லாஞ் செய்யுமென்றும் இந்நூலில் சொல்லப்பட்டிருக்கிறது. இதை உபயோகிக்கும் விதம் மந்திர விபரங்கள் முதலிய யாவற்றையும் உரையில் தெளிவாக எழுதப்பட்டிருப்பதால் அங்கு பார்த்துத் தெரிந்து கொள்ளவேண்டியது.

### விண்ணப்பம்

கனவான்களே! இத்தோடு இந்த மூன்றாம் நான்காம் காண்டங்களும் முடிவு பெற்றன. இவைகளைப் போல இனியுள்ள மற்றக் காண்டங்களும் விரைவில் வெளிப்படுமாறு கிருபை புரியவேண்டுமென கடவுளை நான் பிரார்த்திப்பது போலவே நீங்களும் பிரார்த்திக்குமாறு வேண்டுகின்றேன். சுபம்! சுபம்!! சுபம்!!!

புறநடை முற்றிற்று

கடவுள் துணை

# இலக்க சௌமியசாகரம்

தேர்ந்தெடுத்த செய்யுட்களும்,
தெளிபொருள் விளக்க வுரையும்.
மூன்றாம் பாகம்

———

இதில்
5 வது 6-வது காண்டங்களடங்கியுள்ளன.

இஃது
ஸ்ரீ நாடி வைத்திய
தாருட்ய விருத்தி போதினி முதலிய
பல வைத்தி சாஸ்திர கிரந்தகர்த்தாவாகிய
ஹக்கீம்
பா. முஹம்மது அப்துல்லா சாஹிபு
அவர்களால்

———

சென்னை:
முஸ்லிம் அபிமானி அச்சியந்திரசாலையிற்
பதிப்பிக்கப்பட்டது.

FIRST EDITION

1907௵

Registered Copyright

கை விலை ரூ 0-14-0 வி-பி ரூ. 1-0-0

# முகவுரை

நேயர்களே!

கடவுளனுக்கிரகத்தாலும். பெரியோர்களின் ஆசீர்வாதத்தாலும் இந்த ஐந்தாவது ஆறாவது காண்டங்கள் முந்தின காண்டங்கள் வெளிப்பட்ட சொற்பதினங்களுக்குள்ளாகவே வெளியாக்கப்பட்டன. முந்தின காண்டங்களைப் போலவே இவைகளிலும் பல அருமையான முறைகள் அடங்கியிருக்கின்றன. அம்முறைகளின் பெருமைகள் இவ்வள வினதென நம்மால் எடுத்துச் சொல்லுந் தரமன்று. ஆயினும் இவைகளைச் செய்தனுபவிப்பவர்கள் ஒவ்வொன்றின் அருமை பெருமைகளைத் தாமே விளங்கிக்கொள்ளக்கூடும். இவைகள் முந்தின காண்டங்களைக் காட்டிலும் அதிக விசேஷப்பட்டவைகளென்பதை இவைகளைப் பார்வையிடும் ஒவ்வொருவரும் நன்கு தெரிந்து கொள்வார்கள். இவைகளில் முந்தின காண்டங்களைக்காட்டிலும் அதிக முறைகளடங்கி யிருக்கின்றன; அவைகளாவன:—

1. இரசிதக்குரு, 2. பாஷாணக்கட்டு, 3. தாளகக் கட்டின் மெழுகு, 4. வேங்கைஜெயநீர். 5. தாளகவீரக் கட்டு, 6. வெடியுப்புக்கட்டு, 7. இலிங்கக்கட்டு, 8. முப்புக்குரு முதலியவைகளேயாம். இந்த இரண்டு காண்டங்களும் உயர்ந்த கடிதத்திலச்சிட்டு சுமார் நூற்றெண்பது பக்கங்களுள்ள ஒரு புத்தகமாகப் பைண்டு செய்யப்படுகின்றன. இந்தப் புத்தகமானது வைத்தியர், வைத்தியரல்லாதவர் முதலிய எத்தகையினர்கையிலும் அவசிய மிருக்கத்தக்கது. நாம் அச்சிடும் ஒவ்வொரு கிரந்தங்களையும் நமது அபிமானிகள் ஒவ்வொருவரும் வாங்கி அபிமானித்து வருவதினாலேயே நமக்கு மேலும் மேலும் ஊக்கம் அதிகரித்து இவ்விதம் அரிய கிரந்தங்களை விரைவில் அச்சிட்டு வெளிப்படுத்த விருப்பமேற்

பட்டு வருகின்றது. அதனால் புத்தகங்கள் வெளிப்படவும் ஏதுவாகின்றது. ஆனபடியினால் ஒவ்வொரு கனவான்களும் முன் நாம் அச்சிட்டு வெளிப்படுத்திவந்த கிரந்தங்களை வாங்கி ஆதரித்து நமக்கு ஊக்கத்தையுண்டுபண்ணி வந்ததுபோலவே இதனையும் வாங்கி எம்மைக் கனப்படுத்துவீர்களென நம்புகின்றேன். உலக நலத்தைக் கருதியேயே இதற்குச் செய்த வேலையை யெதிர்ப்பாராது மிகவும் சொற்பவிலையே யேற்படுத்தி யிருக்கின்றோம். இனி மற்ற காண்டங்களையும் இவைகளைப்போற் சீக்கிரத்தில் வெளிப்படுத்துமாறு கடவுள் அருள்புரிவாராக. சுபம். சுபம். சுபம்.

ஹக்கீம் பா-மு-அ.

---

கடவுள் துணை

# இலக்க சௌமிய சாகரம் தேர்ந்தெடுத்த செய்யுட்களும் தெளிபொருள் விளக்க வுரையும்

---

## ஐந்தாங் காண்டம்

### காப்பு

எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

ஒளியாகித் தெளிவாகி யுய்வு மாகி
　　யொன்றாகி மன்றாகி யொப்பி லாத
களிவாகிக் கருவாகிக் கதியு மாகிக்
　　கனமாகிச் சண்டமு தண்ட மாகி
நளியாகி நடியாகி வடிவு மாகி
　　நாதாந்த மெய்ச்சுடரி னளவி லான
களியாகு மைந்நூற்றின் மருந்து சொல்லக்
　　கண்ணோக் குமிடமெங்குங் கர்த்தன்காப்பு

இதில் கடவுள் வணக்கங் கூறுகின்றார்.

(இ-ள்) மிகவுஞ் சந்தோஷத்தை விளைவிக்கத் தக்கதான இந்த ஐந்தாங் காண்டத்தி லடங்கியிருக்கின்ற மருந்துகளைச் சொல்லும் பொருட்டு எங்கும்பிரகாசமாகியும், களங்கமற்றதாகியும், எல்லா வுயிர்களும் ஜீவிப்பதற்காதாரமாகியும், ஏகமாகியும், எங்கும் கூடுகின்ற தெய்வ சபையாகியும், இணையற்றவானந்தமாகியும், எல்லாவற்றிற்கு மூலக்கருவாகியு எவற்றிற்கும் ஆதாரமாகியும், மிகப்பாரமுள்ளதாகியும், மகா வேகமாகியும். பழைய லோகங்களாகியும், மிகவும் பெருமையுள்ளதாகியும், மகா மகத்துவம் பொருந்தியதாகியும், சகல ரூபங்களாகியு முள்ள ஞான நெறிகளிலொன்றான மெய்யா

கிய சுடர் போலாகி நாம் பார்க்குமிடங்களிளெல்லாம் நிறைந்திருப்பவனாகிய கடவுளே காப்பானாக. எ—று.

சூட்சும விளக்கம்:—வெளிப்படை. 1

### குறிப்பு

இதற்கு முந்திய நான்காவது காண்டத்தில் பாதான அஞ்சன மை என்னும் ஓர் அருமையான முறையை கூறிமுடித்தார். இந்த ஐந்தாங் காண்டத்திலோ இரசிதக்குரு, பாஷாணக்கட்டு முதலாகிய பல அரிய முறைகளைச் சொல்கின்றார். அதற்குமுன் இரண்டாங் காண்டத்தின் முதலிற் சொல்லி யிருக்கின்ற தாளகச் சுண்ணத்தின் வேதைகளைக் கூறத் தொடங்குகின்றார் இது முடிந்தவுடன் மற்ற முறைகளை முறையே சொல் வாரென வறிக.

### தாளகச்சுண்ண வேதை

### சந்த விருத்தம்

வெற்றியுற வேயிரண்டு காண்டமதில் விண்ட
தத்தியுறு தாளகத்திற் றங்கியதோர் வேதை
பத்தியுற வேபகர்வன் பார்த்தறிநீ பண்பாய்
புத்தியுறு வோரலது பூவிலறி வாரோ.

———

இதுமுதல் இரண்டாங் காண்டத்திற் சொன்ன தாளகச் சுண்ணத்தின் வேதை சொல்லத் தொடங்குகின்றார்.

(இ-ள்) வீரம் பொருந்தும்படியாக இரண்டாங் காண்டத்திற் சொன்ன பொருத்தமாகிய தாளகச் சுண்ணத்திற் சேர்ந்திருக்கப்பட்ட வேதைகளைச் சினேகத்தோடு சொல்வேன். நீ பிரியத்தோடு பார்த்தறிந்து கொள்வாய். இதன் பெருமையை இந்தப் பூமண்டலத்தில் அறிவுடையோர்களே யல்லாமல்



மற்றப்படி யாரறிவார்கள். எ—று.

சூட்சும விளக்கம்:—வெளிப்படை. (2)

### இதுவுமது

வங்கவகை தன்னிலே வயங்கொளு மருந்தைத்
துங்கமுற நூற்றிலொன்று சூக்ஷியுடன் சேர்க்கில்
பொங்குகிர ணத்தோடு புரண்டது வுழன்று
சங்கையுற வொன்பதது தங்குமெழின் மாற்றே.

——

### இதுவுமது

(இ-ள்) ஈயவகைகளில் மேற்சொல்லிய தாளகச் சுண்ணத்தை உயர்வு பொருந்தும்படியாக நூற்றிற் கொன்று சூக்ஷுமமாகச் சேர்த்தால் மிகுந்த ஒளியி னோடு அது பிரகாசித்த ஒன்பது மாற்றுள்ள பொன் னாகும். எ—று.

சூட்சும விளக்கம்:—வெளிப்படை. (3)

### இதுவுமது

நாகமதி னூற்றிலொன்று நாட்டிட வுழன்று
பூதமுட னேயது புரண்டெழில் சுழன்று
ஏகமய மாகியே யிலங்கியே நுடங்கி
வாகையுறவேழரை வயததுவு மாமே.

.........

### இதுவுமது

(இ-ள்) இன்னும் இந்த மருந்தை நாகத்தில் நூற் றுக்கொன்று கொடுத்தால் அழகோடு அது பிரகாசித் துச் சுழன்று ஒரே நிறமாகித் தோன்றி இளக்கமுடைய தாகி வெற்றி பொருந்தும்படியாக ஏழரைமாற்றுள்ள தங்கமாகும். எ—று

சூக்ஷுமவிளக்கம்—வெளிப்படை. (4)

இதுவுமது,

மீதிநவ லோகமதில் விள்ளுவேனூற் றொன்று
சாதியுறச் சேர்த்திடவே தங்குலங்க ளற்றுப்
போதமுறு வாணியுரை பொற்புடனே யேழரம்
ஆதிதிரு வாணையிது ஆண்மையறி நீயே.

இதுவுமது

(இ-ள்) இதைத் தவிர மற்ற எந்த லோகங்களிலும் நூற்றிற்கொன்று பொருத்தமாகச் சேர்த்தால் அவை களெல்லாம்தங்கள் குல இயற்கை நீங்கி, புத்தியோடு அழகாகிய ஏழு மாற்றுள்ள தங்கமாகும். ஆதி கடவுள் சாக்ஷியாக இது உண்மை, இதை நீ நன்றாய் உய்த்து ணர்ந்துகொள்ளக் கடவாய். எ—று.

சூட்சும விளக்கம்:—ஆதிதிருவாணை யென்றதனால் இது நிச்சயமாக நடக்குமென்பதாயிற்று. (5)

இதுவுமது

இத்தகை யிற்றிட வியம்புவகை யெல்லாம்
முத்தியுட னேயுழன்று முங்குமெழிற் பொன்னாம்
எத்துடனே வேதைக ளியற்றுவகை கேண்மோ
குத்திரமி லூற்றவெழிற் கூவிலுறு மாக்கான்.

.........

இது முதல் வேறுவேதை கூறத்தொடங்குகின்றார்.

[இ-ள்] இந்தவிதமாகச் செய்திட சொல்லப்பட்ட லோகவகைகளெல்லாம் நிலைபெறும்படியாகச் சேர்ந்து மிகுந்த அழகினையுடைய பொன்னாகும். தந்திரமாக இன்னும் இந்தத் தாளகச் சுண்ணத்தாற் செய்யும் வேதைகளையும் சொல்வேன் கேட்பீர்களாக, மலை களாற் சூழப்பட்ட பூவுலகத்திலுள்ள மனிதர்களே எ—று



சூக்ஷும விளக்கம்:—வெளிப்படை, (6)

கலி விருத்தம்

தூத ளையிலைச் சாற்றிற் றுலங்கவே
பாதி யாமரி சியிடை பண்புறக்
கோதி யே நீ புரட்டிக் கொடுத்திடு
தீத கற்றிடு நாளுந் திரியதே.

.........

இது முதல் இச்சுண்ணத்தை வைத்தியத்திற்கு உபயோகிக்கும் விதஞ் சொல்கின்றார்.

(இ-ள்) இந்தத் தாளகச் சுண்ணத்தில் ஒரு அரிசி யெடை யெடுத்து தூதுவளையிலைச் சாற்றிற் பிரகாசிக் கும்படியாகச் சிநேகத்தோடு கலந்து துன்பத்தை நீக்கும் பொருட்டாக மூன்றுநாள் வரை கொடுக்கக் கடவாய். எ—று.

சூக்ஷும விளக்கம்:—இதனால் உண்டாம் பிரயோ சனத்தைப் பின்கூறுவார்.

இதுவுமது

ஆவின் பாலு மமுதொடு சர்க்கரை
மேவி டுதின மே நீ விழுங்குவீர்
தீவி னைப்பிணி தீர்ந்திடும் வாறதைக்
கூவி லூற்றிடு மாந்தரே கூறுவேன்.

.........

இதில் இம்மருந்தைச் சாப்பிடுங் காலத்தில் சாப்பிட வேண்டிய சில வஸ்துக்களைக் கூறுகின்றார்.

[இ-ள்] இந்த மருந்தை மேற்சொன்னபடி சாப் பிடுங் காலத்தில் பசுவின்பாலோடு சர்க்கரையைச் சேர்த்துத் தினமும் சாப்பிடக் கடவீர்கள். தீ வினை யாகிய பிணிகள் தீரும்படியான தன்மையைச் சொல்லு

வேன் பூமண்டலத்திலுள்ள மனிதர்களே கேட்பீர்களாக. எ—று

சூட்சும விளக்கம்:—இந்த மருந்தைச் சாப்பிடுங் காலத்திற் காய்ச்சின பசுவின்பாலில் சர்க்கரை போட்டு அதிகமாகச் சாப்பிட வேண்டுமென அறிய வேண்டியது. இதனாற் றீரும்நோய் விபரத்தை அடுத்த பாட்டிற் கூறுவார் (8)

இதுவுமது

காச மோடு கறுவிய விக்கலும்
பாச மாகப் பயித்திய ரோகமும்
பேசி டாமற் பிரட்டிய குன்மமுங்
கூசிக் கூசிக் குலைகுலைந் தோடுமே.

.........

இதில் மேற்படி மருந்தினாற்றீரும் வியாதி சொல் கின்றார்,

(இ-ள்) முன்சொன்னபடி இந்தமருந்தைச்சாப்பிடு வதனால் காசநோய் முதலியவைகளோடுகொடூரமாகிய விக்கலும் மயக்கமாகிய பயித்தியரோகமும், பேசவொட் டாமற் புரட்டிக் கொண்டிருப்பதாகிய குன்ம நோயும் மனங்கூசி நிலைகெட் டோடிவிடும்,

சூட்சும விளக்கம்:—வெளிப்படை. [9]

இதுவுமது

வாந்தி யோடு வலிப்புறு குன்மமுங்
கீந்த மாகவே கீச்சுமூச் சென்பதுந்
தீர்ந்தி டாத செறியுறு குன்மமுஞ்
சாந்த மாகுஞ் சகத்துறை மாந்தரே.

.........

இதுவுமது

(இ-ள்) இன்னமும் வாந்தி முதலியவைகளோடு வலிப்பைச் செய்யும்படியாகிய குன்மமும், வருத்தத் தோடு கீச்சு மூச்சென்பதாகிய தீர்வதற்கரிய நெருங்கிய குன்மமும் தீர்ந்துபோகும். பூமியிலுள்ள மனிதர்களே இன்னமுஞ் சொல்வேன் கேட்பீர்களாக.



சூட்சும விளக்கம்:—வெளிப்படை. (10)

இதுவுமது

இரத்தமோடு இறுகிய கக்கலும்
பித்த மஞ்சள் பிரட்டிய வீழையும்
தத்து வத்தைத் தணிக்குஞ் சயமெலாஞ்
சுத்த மாகித் துரிதத்தி லேகுமே.

———

இதுவுமது

(இ-ள்.) இரத்தத்தோடு சேர்ந்து கக்குவதாகிய நோயும் பித்தத்தோடு மஞ்சள் நிறங் கலந்து விழுகின்ற ஈழைநோயும், இன்னும் தேகதத்துவத்தைக் கெடுக்கப் பட்ட பலவிதமான க்ஷயநோய்களெல்லாம் விரைவி லோடிப்போகும். எ—று.

சூட்சும விளக்கம் ;—வெளிப்படை. 11

இதுவுமது

மேனி மீதில் வெடிபுரை புண்ணுகள்
யோனி திண்ணிக் கரப்ப னுதிர்ந்திடும்
கானி யாகவே காந்த லெரிச்சலும்
பானு கண்ட பனியெனப் பாறுமே,

———

இதுவுமது

(இ-ள் ) இன்னும் தேகத்தின் பேரில் வெடித்திருக் கப்பட்ட புரை, புண் முதலியவைகளோடு யோனி தின்னிக் கரப்பனுந் தீர்ந்து போய்விடும். குடிகொண் டிருப்பதாகிய காந்தல், எரிச்சல் முதலிய யிவைகளெல்

லாம் சூரியனைக் கண்ட பனியைப்போல நீங்கிப் போகும். எ—று.

சூட்சும விளக்கம் :—வெளிப்படை, 12

இதுவுமது

வாத மோடு வலியுறு சூலையும்
பேத மாகப் பிரிந்திடு நீரொடும்
வாதை யான வலிப்பொ டிசுவுகள்
பாத கமெனப் பாறும் பனியென.

———

இதுவுமது

(இ-ள்.) இன்னும் வாத வகைகளோடு பலம் பொருந்திய சூலை நோய்களும் பேதமாகப் பிரிந்து வரப்பட்ட நீர்ரோகம், ஹிம்சையான வலிப்பு வகைகள், இசிவுகள் யாவும் மிகவும் சுலபமாக நீங்கிப்போகும். எ—று.

சூட்சும விளக்கம் :— 13

இதுவுமது

குட்ட மோடுங் குறித்திடு மேகமுஞ்
சிட்டி போலுஞ் சிலுக்குஞ் சிரங்கொடும்
புட்டி மேனிப் புளப்பும் வெடிப்புகள்
சட்ட மாகவே சாந்தமாங் கண்டறி.

———

இதுவுமது

(இ-ள்.) இவைகளைத் தவிர குட்டவகைகளோடு மேகவகைகளும் சிட்டிகளைப்போல எழுந்து தேகத்திற் சிலிர்க்கும்படியாகிய சிரங்கு, உடம்பிலுண்டாகும்பிளவை வகைகள், வெடிப்புகள் முதலானவை களெல்லாம் தணிந்து போகும். எ—று.



சூட்சும விளக்கம் :—வெளிப்படை. 14

இதுவுமது

கண்ட றிந்திடுங் காசினி மாக்களே
அண்டர் கோனா லறைந்த மருந்திது
விண்டு ரைக்கீர் வெளியுறு வீணர்க்குத்
தொண்டு செய்திடிற் சொல்லுக சூட்சமே.

———

இதில் மருந்தின் பெருமை கூறுகின்றார்.

(இ-ள்.) பூலோகத்திலுள்ள மனிதர்களே! இவைகளெல்லாம் பார்த்துணர்வீர்களாக. இதற்கு மருந்தானது தேவர்களுக்கிறையாகிய ஆதி கடவுளின் திருவாக்காலே சொல்லப்பட்டது. வெளியிலே திரிகின்ற அடக்கமற்ற வீணர்களுக்குச் சாமானியமாக சொல்லிவிடாதீர்கள். தொண்டு செய்யப்பட்டவர்களுக்கு மட்டும் இந்த இரகசியத்தைச் சொல்லக்கடவீர்கள். எ—று.

சூட்சும விளக்கம் :—வெளிப்படை. 15

ஞானம்

16, 17, 18, 19, 20-ம் பாட்டுகள் :—இப்பாடல்களில் ஞானத்தைப்பற்றி விரிவாகச் சொல்லியிருக்கின்றார். இதைப்பற்றித் தெரிந்தவர்களிடம் கேட்டுக்கொள்ளவேண்டிய தாகையால், அப்பாடல்களை யிங்கு சேர்க்கவில்லை. வேண்டியவர்கள் மூல நூலைப் பார்க்க.

இதுமுதல் வேறுமுறை கூறத் தொடங்குகின்றார்.

இரசிதக் குரு

சந்தவிருத்தம்

குடிலமுங் கிடுகிடு வெனமிக வசைந்திடக்
குவடுகள்திடுதி டெனா.

இடியொடு மின்னலு முதையு மோங்கைபி
லிடையினி லணியணி யாய்ப்
படியினில் விழுமது நிறமது பவளமாம்
பரன்வர முடையது வாம்
முடுகியே யதனிறை கிளிநிற மெடுத்திட
முழுச்சுடர ரருட்டா னே.

---

இதில் இம்முறைக்காம் ஓர் சர்க்கும் நிறை யுங் கூறுகின்றார்.

(இ-ள்.) இப்பூமியும் கிடுகிடுவென்று மிகவும் அசைந்திடவும் மலைகள் திடுதிடென வதிரவுஞ் செய்வதாகிய இடியினோடு மின்னலும் வாடையு மோங்கும்படியாகப் பெய்யப்பட்ட மழையோடு சேர்ந்து அதன் மத்தியில் கூட்டங் கூட்டமாகப் பூமியில் விழப்பட்டது. அதனுடைய நிறமானது பவளம் போன்றிருக்கும். இது எல்லாம் வல்ல கடவுளினது வரத்தைப் பெற்றது. இப்பேர்ப்பட்ட சரக்கில் வேகமாகக் கிளியினது நிறத்தினளவு எடுத்துக் கொள்ளக் கடவாய். இதனால் சோதியாகிய கடவுளினுடைய கிருபை கிடைக்கும் எ—று.

சூட்சுமவிளக்கம்:—மேற்குறித்த இலட்சணங்களால் இந்தச் சரக்கு (இந்திரகோப) மென ஏற்பட்டது. முதற்காண்டத்தில் இதைப் பற்றிச் சொல்லியிருக்கின்ற இலட்சணங்களாலுங் காண்க. இது கடவுளாலேயே சொல்லப்பட்ட இந்த இலக்க சௌமிய சாகரத்தின் முறைகளில் ஒரு முதன்மை சரக்காகச் சேரப்பட்டதாகையால் இதைக் கடவுளினது வரத்தைப் பெற்றதுஎன்றார். கிளியினது நிறத்தின் நிறை எடுக்கக் கடவாயென்றதை கிளி நிறம் பஞ்சவருணமாதலால் ஐந்தெனக் கொள்ள வேண்டியது. ஆகவே இந்திரகோபம் அளவு ஐந்து என அறியவேண்டியது.



விபரம்

இந்திரகோபம் பங்கு 5

கொச்சகக் கலிப்பா

அரசனுத லிற்றிலக வெள்ளை யதனிறைநீ
முரசின் வகையே முக்யமுறு மாதர்கரஞ்
சரிசேர் தடினிதனி லுற்ற கருமைக்கதிர்
விரைசா யெடுநீ வேதைசெய வியனுலகில்.

---

இதில் மூன்று சரக்குகளும் நிறையுஞ் சொல்கின்றார்.

(இ-ள்) இராஜாக்களுடைய நெற்றியில் திலகமாக விளங்கா நின்ற வெள்ளைப் புனுகின் முரசைத்தலைமையாகவுடைய வாத்தியங்களினையும், அவசியமாகிய ஸ்திரீகளினுடைய கையில் சேர்ந்து விளங்குவதாகிய ஓர் சரக்கில் முன் புனுகுக்குச் சமனெடையும், ஆறுகளிற் பொருந்திய கறுத்த பிரகாசமானது விளங்கா நின்ற ஓர் சரக்கில் முன் சரக்கினளவும் எடுக்கக்கடவாய். இவைகளால் இந்த ஆச்சரியம் பொருந்திய உலகில் பலவிதமான வேதைகளைச் செய்யலாம். எ—று.

சூக்ஷும விளக்கம்;— வாத்தியங்களி னளவாவது பதினெட்டு ஆனதால் (வெள்ளைப் புனுகின் அளவு பதினெட்டு) என ஆகியது. ஸ்திரீகளினுடைய கையிற் சேர்ந்து விளங்குவதாகிய ஓர் சரக்காவது (கறுவளையல்) இதை முன் சரக்கினள வென்றதனால்இதனளவும் (பதினெட்டெனக்) கொள்ளவேண்டியது. ஆறுகளில் பொருந்திய கறுப்பு நிறம் பிரகாசிக்கும்படியான ஓர் சரக்காவது [கும்பிடு கிளிஞ்சில்] இதையும் முன்சரக்கினள வென்றதனால் [பதினெட்டு] எனவே கொள்ள வேண்டியது. மேற்கண்ட சரக்குகளினுடைய இலக்ஷணங்களையெல்லாம் முதற் காண்டத்தில் விரிவாகச்

சொல்லிவிட்டிருப்பதினால் இங்கு குறிப்பாகச் சில விஷயங்களை மட்டும் காட்டினார். முன் கூறியிருக்கின்ற குறிப்பினாலேயே இவைகளை இன்னதின்னதென நிச்சயிக்கப்பட்டது. ஆகவே (வெள்ளைப்புனுகு அளவு பதினெட்டு) கருவளையல் அளவு பதினெட்டு) (கும்பிடு கிளிஞ்சில் அளவு பதினெட்டு) என ஏற்பட்டது. **(22)**

விபரம்

| | |
|---|---|
| வெள்ளைப் புனுகு பங்கு | 18 பங்கு |
| கருவளையல் பங்கு | 18 ,, |
| கும்பிடுகிளிஞ்சில் பங்கு | 18 ,, |

**கலிவிருத்தம்**

மலரின்பெ யருறு மன்ன ளிறை நீதான்
சலதி சுண்டற் றகடது தன்னிலே
சுழறு கின்றனன் கதிர்மதி கங்குலம்
தவளத் தாமரை தங்கிய வண்டற்கல்.

——

இதில் சில சரக்கு நிறையுங் கூறுகின்றார்.

(இ-ள்) பூவினது பெயரைக்கொண்ட ஓர் சரக்கில் நீ, நான் என்ற அளவும், சமுத்திரச் சுண்டலாகிய தகடு போன்ற ஓர் சரக்கில் கதிர், மதி, கங்குல் என்ற அளவும், அழகிய வெண்டாமரை மலர்கணிறைந்த தடாகங்களிலுள்ள வண்டற்கல்லென்று சொல்லப்படுவதாகிய ஓர் சரக்கில் எ—று.

சூக்ஷம விளக்கம்:—பூவினது பெயரைக் கொண்ட ஓர் சரக்காவது [பூநீறு] நீ, நான் என்ற அளவாவது [இரண்டு] சமுத்திரச் சுண்டலாகிய தகடு போன்ற ஓர் சரக்காவது [கடல் நுரை] கதிர், மதி, கங்குல் என்ற அளவானது [மூன்று] அழகிய வெண்டாமரை மலர்கணிறைந்த தடாகங்களிலுள்ள வண்டற்கல்லென்று சொல்



லப்படுவதாகிய ஓர் சரக்காவது [வெள்ளிநிமிளை] ஆகவே [பூநீறு அளவு இரண்டு] (கடல் நுரை அளவு மூன்று] எனவானது. வெள்ளி நிமிளைக்கு நிறை அடுத்த பாட்டிற் கூறுவார். இந்தப்பாட்டும் அடுத்த பாட்டும் குளகமாதலால் மற்ற விபரங்களும் பின் கூறுவரெனவறிக. [23]

விபரம்

| | |
|---|---|
| பூநீறு பங்கு | 2 பங்கு |
| கடல்நுரை பங்கு | 3 பங்கு |

**இதுவுமது**

செப்பு வேனிறை யானது தான்றிரி
தப்பி லாவெவட் சார நிறைரெண்டு
செப்பு வேன்செங் கழியென மாய்வன
முப்பு வேனிறை யொன்றெடு முக்கியமாய்.

——

இதிலும் சில சரக்கும் நிறையும் கூறுகின்றார்.

[இ-ள்] சொல்வேன் கேட்பாயாக. முன் பாட்டிற் சொல்லியிருக்கின்ற வெள்ளிநிமிளை அளவு மூன்றாகும் குற்றமற்ற எவட்சாரம் அளவு இரண்டு, செங்கழிபோல் மாய்வனவென்று சொல்லப்பட்ட இந்துப்பு நிறையொன்றாகும். ஆக இவைகளையெல்லாம் எடுத்துச் சேர்க்கக் கடவாய். எ—று.

சூக்ஷம விளக்கம்:— செங்கழிபோல் மாய்வனவென்பதை [இந்துப்பு] என்று எமது ஆசான் சொன்னபடியே எழுதியிருக்கின்றோம். இதற்குக் காரணம் மட்டும் இன்னதென விளங்கவில்லை. [24]

விவரம்

| | |
|---|---|
| வெள்ளிநிமிளை பங்கு | 3 |
| எவச்சாரம் பங்கு | 2 |
| இந்துப்பு பங்கு | 1 |

## வேறு விருத்தம்

துங்கினி லியல்புட னியம்புஞ் சரக்கெல்லாம்
துங்கமுறு கல்வமதிற் சூக்ஷியுட னிட்டு
அங்குகுரு மூலியிலைச் சாற்றினா லரைப்பாய்
சங்கையுறச் சாமமது சாற்றிடக்கே ளொன்றே.

---

இதுமுதல் அரைப்பு விபரஞ் சொல்கிறார்.

[இ-ள்] மேலே பொருத்தத்தோடு சொல்லிவந்த சரக்குகளையெல்லாம் உயர்வு பொருந்திய கல்வத்தில் தந்திரமாகப் போட்டு குருமூலியென்ற திருநூற்றுப் பச்சியிலைச் சாற்றைவிட்டு ஒரு சாமம் வரை அரைக்கக் கடவாய். எ—று.

சூக்ஷ்ம விளக்கம்:—வெளிப்படை. [25]

எல்லாச் சரக்குகளின் விபரம்

| | |
|---|---|
| இந்திரகோபம் பங்கு | 5 |
| வெள்ளைப் புனுகு பங்கு | 18 |
| கறுவளையல் பங்கு | 18 |
| கும்பிடு கிளிஞ்சல் பங்கு | 18 |
| பூநீறு பங்கு | 2 |
| கடல்நுரை பங்கு | 3 |
| வெள்ளை நிமிளை பங்கு | 3 |
| எவச்சாரம் பங்கு | 2 |
| இந்துப்பு பங்கு | 1 |

இவைகளையெல்லாம் சேர்த்தே கல்வத்திற்போட்டுத் திருநூற்றுப்பச்சை யிலைச்சாற்றைவிட்டு அரைக்க வேண்டியது.



## இதுவுமது

வழித்ததுவை வில்லையுற வைத்திடு கதிர்முன்
அழுத்தமுற மூன்றுநா ளடுத்ததை யெடுத்து
முழுத்தமுத லந்தமது முன்பிரு தருப்பால்
செழித்திடவே விட்டரைநீ செப்புமிகு சாமம்.

---

இதில் வேறு அரைப்புக் சொல்கின்றார்.

(இ—ள்) முன் சொன்னபடி திருநூற்றுப் பச்சையிலைச் சாற்றைவிட்டரைத்த மருந்தை வழித்தெடுத்துப் பில்லைசெய்து சூரியனுக்கு முன்பாக அழுத்தமாக மூன்றுநாள் வைத்தெடுத்துப் பழையபடியும் இந்நூலின் முதற்காண்டத்திலுள்ள அந்த செந்தூரத்தில் சேர்ந்திருக்கின்ற ஓர் தருவினுடையபாலினால்இரண்டு சாமமரைக்கக் கடவாய்.எ—று.

சூட்சும விளக்கம்—அந்த செந்தூரத்திற் சேர்ந்திருக்கின்ற ஓர் தருவாவது (கள்ளி) இந்தப் பாலையே விட்டரைக்க வேண்டியது.

## எண்சீர்க்கழிநெடி லடியாசிரிய விழித்தம்

இருசாம மரைத்திருந்த மருந்து தன்னை
யியல்பாக வழித்தெடுத்து வில்லை தட்டி
விரைசாகப் பனியின்முன்னின் மூன்றுநாள்வை
மீறியபின் சண்டையுள்ளான் சாற்றாற் சாமம்
பிரியமுட னரைத்திடுவாய் மூன்றதாகப்
பீடுடைய மருந்துதனை யோடுரைத்து
வரிசையுட னந்தத்தின் செந்தூரம்போல்
வண்மையுடன் சீலைசெய்து புடத்தைப் போடேன்.

---

இதில் மேற்படி மருந்தைப் புடம்போடு மார்க்கங் கூறுகின்றார்.

(இ-ள்) முன் சொன்னபடியே இரண்டுசாமமரைத்த மருந்தைப் பொருத்தத்தோடு வழித்தெடுத்து வில்லை தட்டி விரைவாகப் பனியில் முன்போல மூன்று நாள் வைக்கக் கடவாய். பின்பு அதை யெடுத்துசண்டையுள் ளான் என்று சொல்லப்படுவதாகிய ஒர் பச்சிலையின் சாற்றை விட்டுச் சிநேகத்தோடு மூன்று சாமம் அரைக்கக் கடவாய், அப்படியரைத்தபின் அந்தப் பெருமையுடைய மருந்தை வழித்து ஓட்டில்வைத்து மேலோடுமூடி அந்த செந்தூரத்திற்குச் செய்ததுபோற் சீலைமண் செய்து புடத்தைப்போடக் கடவாய். எ—று,

சூட்சும விளக்கம்—அந்த செந்தூரத்திற்குச் செய்ததுபோல சீலைமண்செய். எனவே அந்த செந் தூரத்தின் முதற்புடத்தில் எந்த விதமாகச் சீலை மண் செய்யப்பட்டதோ அந்த விதமாகவே செய்ய வேண்டுமென்பதாக ஏற்படுகிறது. ஆயினும் இவ் விஷயத்தை அனுபவசாலிகளிடம் கேட்டுத் தெரிந்து கொள்வது நலம், சண்டையுள்ளான் என்று சொல்லப் படுவதாகிய ஓர் பச்சிலையாவது (கறுப்பு வட்டக் கிலுகிலுப்பை) இந்தச் சாற்றை விட்டே மூன்று சாமம் அரைக்கவேண்டு மெனவறிக. இங்கு சீலைசெய்வதற் கும் புடம்போடுவதற்கும் விபரம் சொல்லாமல் அந்த செந்தூரத்திற்குச் செய்ததுபோல் செய்து கொள்க வென்றது இதிற் பிரவேசிப்பவர்களின் புத்திக்கூர்மை யையறியும் பொருட்டேயாம். ஆதலினால் ஆராய்ந்து செய்துகொள்க.

போட்டெடுப்பாய் மருந்ததுவும் பணம் போ லாகும்
புன்மைகொடு வேலியிலைச் சாற்றா லாட்டித்
தேட்டமுடன் வில்லைதட்டிக் கழிச்சேறு தன்னாற்
சீலையுறு பனிரெண்டுந் திடமாச் சுற்றிப்
போட்டிடுவாய் புடமதுவு முழமொன் றாகப்
பொற்புடனே செப்பருபொற்றி லையின் சாற்றால்
ஆட்டிடுவாய் சாமமொன்று வில்லை தட்டி
யடவுடனே முன்போல புடத்தைப் போடேன்.

———



இதில் வேறு புடம் சொல்கின்றார்.

(இ—ள்) முன்பாட்டிற் சொன்னபடியே புடத்தைப் போட்டு எடுப்பாய். அப்படி யெடுத்துப் பார்த்தால் அந்த மருந்தானது பணம்போல பிரகாசித்துக் கொண் டிருக்கும். பின்பு அதைக் கல்வத்திற் போட்டுக் கொடி வேலி யிலைச்சாற்றை விட்டு அரைத்துப் பக்குவமாக வில்லை தட்டி ஓட்டில் வைத்துக் கழிமண்ணினால் பனி ரெண்டு சீலை திடமாகச் செய்து ஒரு முழ உயரம் புடம் போடுவாய். பின்பு அதை யெடுத்து அழகாகச் சொல்லு தற்கரிதாகிய பொற்றலைக் கையான்தகரைச் சாற்றை விட்டு 3 மணிநேரம் வில்லைத் தட்டிப் பக்குவமாக முன் போலவே புடத்தைப் போடக்கடவாய்.எ—று.

சூட்சும விளக்கம்;...வெளிப்படை, 28

கேளப்பா மருந்துதனைக் கவசம் வாங்கு
கெடியாகச் செவ்வாம்பல் மலர்போல் தோற்றும்
தாளப்பா விதையெடுத்துப் பதனம் பண்ணிச்
சதாசிவத்தைப் பூசைசெய்து தனிவி லுன்னிச்
சூளப்பா சூதமது நூற்றி லொன்று
துரிதமுடன் போட்டுநீ குகையில் வைத்து
சாளப்பா தீமூட்டு கடிகை ரெண்டு
தயவுடனே நீர்போக்கி வெள்ளி யாமே.

———

இதில் மருந்தின் முடிவு கூறுகின்றார்.

(இ...ள்) அப்பனே கேட்கக்கடவாய். முன் பாட்டிற் சொன்னபடி புடம் போட்ட மருந்தை எடுத்துக் கவசத் தைப் பிரிக்கக் கடவாய். அப்படிப் பிரித்துப் பார்த்தாய் அந்த மருந்தானது செவ்வல்லிப் புஷ்பம் போன்ற சிவந்த நிறமானது பிரகாசித்துக் கொண்டிருக்கும். இப்பேர்ப்பட்ட மருந்தை யெடுத்துப் பத்திரப்படுத்திக்

கொள்வாய். பின்பு சதா சிவத்திற்கு வந்தனை வழி பாடுகள் செய்து மனத்தினியமாகத் தியானித்துச் சூதத்தில் இந்தக் குருவை நூற்றிலொன்று சேர்த்துக் குகையில் வைத்து உயர்வாகத் தீயை மூட்டி 48 நிமிஷ நேரம் ஊதக்கடவாய். அப்படி யூதினால் அந்த இரசத்தினுடைய நிறைப்போக்கி வெள்ளியாகச் செய்து விடும். சிநேகத்தோடு கண்டறிவாய். எ—று.

சூட்சும விளக்கம் :—வெளிப்படை. 29

இதுவுமது

ஆகியதோர் வெள்ளிதனைத் தாம்பூ ரத்தி
லடவுடனே சேர்த்துருக்க வசடே யற்று
யோகமுற வாணியுரை யொன்ப தாகு
மொரகோகோ விதனருமை யுரைக்கொ ணாதே
தாகமுட னவலோகந் தன்னி லிந்தத்
தயவுடைய மருந்ததனை நூற்றி லொன்று
சேகரமா யீயவது வெள்ளி யாகுஞ்
சிவனாணை சிவனாணை செய்து பாரேன்.

———

இதில் மேற்படி இரசிதக் குருவின் வேதை சொல்கின்றார்.

(இ-ள்.) முன்பாட்டிற் சொல்லியபடி உண்டாகிய வெள்ளியை அடைவாக தாம்பூரத்தில் நூற்றுக்கொன்று சேர்த்துருக்க நன்மையுறும் படியாக அது ஒன்பது மாற்றுள்ள வெள்ளியாகும். இதனுடைய அருமைத் திறத்தை யென்னாற் சொல்லிமுடியாது. இன்னும் இந்த இரசிதக் குருவென்ற மருந்தை ஒன்பது வகையுலோகங்களில் எதிலானாலும் நூற்றிற்கொன்று சிநேகமாகப் பொருத்தத்தோடு கொடுத்தூதினால் அவைகளெல்லாம் வெள்ளியாகும். சிவன் மேலாணையாக இம்முறையைச் செய்து பார்க்கக் கடவாய். எ-று



சூட்சும விளக்கம் :—தாம்பூரத்தில் முன்பாட்டிற் சொன்னபடி யுண்டாகிய வெள்ளியை சேர்ப்பது சொன்னபடி யுண்டாகிய வெள்ளியை சேர்ப்பது இத்தனைக் கொன்றென இப்பாட்டிற் சொல்லாவிடினும் முன் பின் கிரமங்களை நோக்கி நூற்றுக்கொன்றென நிச்சயிக்கப்பட்டது.

இதுவுமது

பாரப்பா சூதத்தின் பெருமை தன்னை
பசும்பொன்னில் நூற்றிலொன் றீய்வா யானால்
சேரப்பா செம்மையெல்லா மழிந்து போகித்
திடமுடைய வெள்ளைவன வெள்ளி யாமே
தாரப்பா தாம்பூர மைந்நூற்றி லொன்று
தவளமுறு வெள்ளிதனிற் சேர்ப்பா யாகில்
தேரப்பா வொளிவாகி வெள்ளி யாகுஞ்
செய்யும்வகை செப்பாதே தேசத் தோர்க்கே.

———

இதிலும் மேற்படி வேதையே சொல்கின்றார்.

(இ-ள்.) அப்பனே! இந்த இரசிதக் குருவின் பெருமையைப் பார்க்கக் கடவாய். பசுமையாகிய பொன்னில் இதை நூற்றிற்கொன்று கொடுத்துச் சேர்ப்பாயானால் அந்தப் பொன்னினுடைய செம்மை நிறமென்றதை நீங்கி பலம் பொருந்திய வெள்ளை நிறமானது பிரகாசிக்கும்படியான வெள்ளியாகும். இந்த வெள்ளியைத் தாம்பூரத்தில் ஐந்நூற்றிற்கொன்று சேர்த்தால் மிகுந்த பிரகாசமுள்ள வெள்ளியாகும். இவ்வகையை உய்த்துணர்ந்து கொள்வாய். இதைச் செய்யும் வழியைப் பிறருக்குச் சொல்லிவிடாதே. எ...று.

சூட்சும விளக்கம் :...வெளிப்படை. (31)

## பாஷாணக் கட்டு

### நொண்டிச் சிந்து

மன்றிலுறு மாந்தர்களே...மருந்தொன்று
வழுத்துகி றேன்வெகு திறத்துடனே
நன்றியுடன் கண்டறிந்திடு...நரகருக்கு [பாரோ
நாமுரைத்தல் போலுஞ்சித்தர் தாமுறைப்
பன்றியெனும் பெயர்முன் றம்பியும்...சகர்தம்பி
பகருவேன் மாந்தர்களே விபரமுடன்
ணன்றியெனும் பெயர்முதலும்...மகர்கடை
நண்பாக வறிந்திடு தெம்பாக வே.

.........

இதில் இம்முறைக்காம் ஓர் மருந்து சொல்கின்றார்.

(இ-ள்.) இப்பூமண்டலத்திற் றங்கிய மனிதர்களே! இனிமேல் வேறு ஒரு மருந்து மிகத் திறமையோடு சொல்கின்றேன். கண்டறித்து கொள்ளக் கடவீர்கள், மானிடர்களுக்கு நாம் சொன்னதுபோல சித்தர்களுஞ் சொல்வார்களோ. பன்றியென்ற சொல்லுக்கு முதலி லிருக்கப்பட்ட எழுத்திற்குத் தம்பியாகிய வெழுத்தையும் சகரத்தின் தம்பியாகிய வெழுத்தையும், ணன்றியென்று சொல்லப்படுவதாகிய ஓர் பதத்தின் முதலெழுத்தையும், மகரத்தின் கடையெழுத்தையும் எடுத்துச் சேர்க்கக் கடவிர்கள், அப்படிச் சேர்த்தால் ஓர் சரக்கினுடைய பெயரையும். மனிதர்களே! இதன் விட்ரத்தை இன்னும் சொல்வேன் கேட்பீர்களாக. எ...று.

சூட்சும விளக்கம் :...பன்றியென்ற சொல்லிற்கு முதலிலிருக்கப்பட்ட எழுத்தாவது-ப-இதற்குத் தம்பி யாகிய வெழுத்தாவது (பா.) சகரத்திற்குத் தம்பியாகிய வெழுத்தாவது (சா.) ணன்றியென்ற ஓர் பதந்தின் முதலெழுத்தாவது (ண.) மகரத்தின் கடையெழுத் தாவது (ம்.) ஆக இந்த நான்கெழுத்துக்களையுங் கூட்ட (பாசரணம்) என்றானது. இதுவே மேற்தறிந்த



சரக்காம் இதன் நிறை முதலிய விபரங்களையெல்லாம் அடுத்த பாட்டிற் கூறுவாரெனவறிக. (82)

### இதுவுமது

சாற்றிடக்கேள் சாதிவிபரம்...தவளஞ்
சங்கையுடன் றனிநிறை மங்கையர்விழி
பார்த்திடவே பலம்வகையாம்...வாங்கிப்
பகரக்கேள் வேதையினி விபரமுடன்
பூத்தான முடனதுவைப்...பனியின்முன்
பொற்பாய்ப்பீங் கானிலே மெய்யரகவே
மாற்றேறச் செய்யும்விபரம்...நாளொன்று
மறுந்ததை யெடுத்திடு மாந்தர் களே.

———

இதில் முன் சரக்கின் ஜாதியும் நிறையும் அதைச் செய்ய வேண்டிய சில விபரங்களையுஞ் விபரமாகச் சொல்கின்றார்.

(இ-ள்.) சொல்லக் கேட்பாயாக. மேற்சொல்லிய பாஷாணத்தினுடைய சாதி விபரம் வெள்ளையாகும். இதனுடைய நிறையோ மங்கையர்களுடைய விழியினது விபரமாம். இது பலக் கணக்காகும். இவற்றை புணர்ந்து மேற்கண்ட சரக்கை வாங்கிச் செய்யும்படியாகிய வேதை யைச் சொல்வேன் கேட்பாய். இதை அழகுடனே பீங்கானிலிட்டுப் பெருமையோடு ஒரு நாள்வரை வெயி லில் வைத்துத் திரும்பவும் எடுக்கக் கடவாய் எ...று.

சூட்சும விளக்கம்:—இதனுடைய ஜாதிவெள்ளை யாகும்மெனவே (வெள்ளைப் பாஷாண) மென ஏற்பட் டது. மங்கையர்களுடைய வுழியள வெனவே மங்கையர் களுடைய விழி இரண்டாதலால் அளவு (இரண்டு) எனக் கொள்ள வேண்டியது. இது பலக் கணக்காகு மென்ற தனால் பலமாகக் கொள்ளவேண்டியது ஆகவே (வெள் ளைப் பாஷாணம் பலம் இரண்டு) எடுத்துக் கொள்ள வேண்டுமென ஏற்பட்டது. இதையே பீங்கானிலிட்டு

ஒருநாள்வரை வெயிலில்வைத்தெடுக்கவேண்டியது. (33)

விபரம்

வெள்ளைப் பாஷாணப் பலம்-2.

கொச்சகக் கலிப்பா.

தாயிரத்தி லானவெழில் தானோ னுரைவாக்கு
வாயிரத்தி லங்கமுடன் பொங்கி முதநூற்றின்
பாயிரத்தி னுள்ளிற் பதுங்கியே யடங்கும்
ஈயிரத்தி லானவிலைச் சாற்றைநீ பிழிந்து.

இதில் ஓர் சாறு சொல்கின்றார்.

(இ-ள்) எல்லாவற்றிற்கும் ஆதாரமான அழகு பொருந்திய கடவுளே சொன்ன வாக்காகிய இந்த ஆயிரம் பாக்களைக் கொண்ட இலக்க சௌமிய சாகர மாகிய நூலின் முதற்காண்டத்தின் முன்னுரையில் இரகசியமாகப் பதுங்கிக் கிடக்கின்ற ஈரமுள்ள ஓர்பச் சிலைச்சாற்றை நீ பிழிந்து எ—று.

சூட்சும விளக்கம்,—இந்நூலின் பாயிரத்தின் முன்னு ரையில் இரகசியமாகத் தங்கிக் கிடக்கும் பச்சிலையா வது குருமூலி யென்று சொல்லப் படுவதாகிய (திருநூற் றுப்பச்சை) இந்தத் திருநூற்றுப்பச்சையையே சாறு பிழிந்து கொள்ளவேண்டியது. மற்ற விபரங்கள் பின் சொல்லுவாரெனவறிக. [34]

வேறு விருத்தம்

இற்றையின் முன்புநவி லிலங்குகுரு வெள்ளை
முற்றியுட னேவன முயங்கியசெவ் வாம்பல்
பற்றியுட யேயதிற் பணமரை யெடுத்துத்
தற்றியுடன் சாறதனில் தாட்டியே புரட்டி.

.........



இதில் வேறொரு மார்க்கஞ் சொல்கின்றார்.

(இ-ள்) மேற்சொல்லிய திருநூற்றுப் பச்சையிலைச் சாற்றில் பிரகாசிக்கும் படியான செவ்வாம்பல் போன்றி ருப்பதான இதற்கு முன் சொல்லி யிருக்கின்ற இரசிதக் குருவில் அரைப் பணவெடை யெடுத்துப்போட்டுப் புரட்டி எ—று.

சூட்சும விளக்கம்: வெளிப்படை. புரட்டியென்ற மட்டில் நிறுத்தி யிருப்பதில் மற்றவிபரங்கள் அடுத்த பாட்டுமுதற்கூறுவாரெனவறிக. (35)

இதுவுமது

சொல்லுமெழிற் சட்டியிற் றுலங்கிடவெ பூசு
நல்லியலி னோடதடன மூசைதனில் நாட்டிக்
கல்லியலி லாட்டிடு கடிகையது ஒன்றே
வெல்லியலில் வேதையினி வேறுவகை சொல்வேன்.

.........

இதில் மேலே சித்தப்படுத்திய சாற்றைப்பின் செய்ய வேண்டிய விதஞ் சொல்கின்றார்.

(இ-ள்) மேலே சொன்னபடி இரசிதக்குரு கலந்த திருநூற்றுப்பச்சையிலைச் சாற்றை முன் 33 ம் பாட்டிற் சொல்லியிருக்கின்ற பாஷாணக்கட்டியிற் பிரகாசிக்கும் படியாக மேலேபூசி நல்ல பொருத்தத்தோடு அந்தக் கட்டியை மூசையில் வைத்து ஒருநாழி கைவரை நெருப் பில் வைத்தூதிக் கல்லைப்போல கெட்டிப்படுத்தி விடக் கடவாய், இனி இதனால் நடக்க வேண்டிய வேறு வேதைகளையுஞ் சொல்வேன் கேட்பாய். எ—று

சூக்ஷும விளக்கம்:—வெளிப்படை. [36]

இதுவுமது

மங்கையர்கள் கொங்கைதனில் மாசற வுதித்த
துங்கமுற வேயமுதைச் சொல்லுமொழி வோட்டிற்

சங்கையுடன் குத்தியதிற் கட்டி தனைத் தாட்டி
நங்குறச் சுருக்குறு நவில்கடிகை யொன்றே.

.........

இதில் மேற்படி கட்டியைச் செய்ய வேண்டிய வேறு விதஞ் சொல்கின்றார்.

(இ-ள்) முன் சொன்னபடி குகையில் வைத்தூதிய கட்டியை யொடுத்து ஸ்திரீகளினுடைய தனங்களிலே குற்ற மறப்பொருந்தி வந்த பாலைச் சிரேஷ்ட முறும் படியாக ஒரு ஓட்டிற்குத்தி மேற்சொன்ன பாஷாணக் கட்டியை அதிற்போட்டு அடுப்பேற்றி ஒருநாழிகை சுருக்குக் கொடுக்க வேண்டும்.

சூக்ஷ்ம விளக்கம்:—வெளிப்படை. (37)

கொச்சகக் கலிப்பா

பெருவாயன் றன்னமுதிற்பிரட்டியே யோட்டிலுற்ற
கருவாகுங் கட்டிதனைக் கங்கையுடன் சுருக்கிடுவாய்
திருவாகுங் கடிகைரெண்டு திறமுடனே புரட்டியெமு
மருவாகும் வேதையினி வழுத்துவேன் மாந்தர்களே.

.........

இதில் வேறு சுருக்குக் கொடுக்கும் விதம் கூறுகின்றார்.

(இ-ள்) முன் முலைப்பாலில் சுருக்குக் கொடுத்த பாஷாணக்கட்டியை யெடுத்துப் பழையபடி கழுதையினுடைய பாலில் ஒருநாழிகையும், தண்ணீரில், ஒருநாழிகையும் புரட்டிச் சுருக்குக்கொடுப்பாய். அப்படிப் புரட்டிச் சுருக்குக்கொடுத்தொடுத்துக் கொண்ட பின்பு மேற் செய்யவேண்டிய வேதைகளையுஞ் சொல்வேன் கேட்பாய். எ—று

சூக்ஷ்ம விளக்கம்,—வெளிப்படை. (38)



பன்னுச் சந்த விருத்தம்

வெற்றியென் றோன்பெயர் முதல்ளகர்கடை
வெள்ளையெனும்பெயர் கடையு டன்
தந்தியு டன்சகர் கடையுந் தம்பியுந்
தாட்டிடு வாய்ரக ரொன்றை யே
தற்றவ னாம்ணரவை விட்ட மடையனரம்
நாட்டுவை யேழதைக் கோட்டி யுடன்
உத்தம தாகவே பெயர் விளங்கிடு
முயர்வு டனிலைச் சாற்றினின்

———

இதில் சுருக்குக் கொடுக்க வேண்டியதற் காமோர் சாறு சொல்கின்றார்.

(இ—ள்) வெற்றியென்ற ஓர் பதத்தின் முதலெழுத்தோடு ளகரத்தின் கடையெழுத்தையும், வெள்ளை என்னும் பெயரின் கடையெழுத்தையும், சகரத்தின் கடை யெழுத்தையும், சகரத்திற்குத் தம்பியாகிய வோரெழுத்தையும், ரகரமென்ற எழுத்தையும், ணகர வரியில் ணாவென்ற எழுத்தைவிட்டு நீங்கிய ஒரெழுத்திற்கு ஏழாமெழுத்தையும் எடுத்துச்சேர்ப்பாய். அப்படியெடுத்துச்சேர்ப்பாயானால் ஓர் பெயர் விளங்கும். அப்பெயருள்ள பச்சிலையின் சாற்றில் எ—று.

சூட்சும விளக்கம்—வெற்றியென்ற பெயரின் முதலெழுத்தாவது (வெ,) ளகரத்தின் கடையெழுத்தாவது (ள்). வெள்ளை யென்னும் பெயரிலுள்ள கடையெழுத்தாவது (ளை) சகரத்தின் கடையெழுத்தாவதுச் சகரத்திற்குத் தம்பியாகிய ஒரெழுத்தாவது (சா) ரகரமென்ற எழுத்தாவது (ர) ணகர வரியில்ணாவென்ற எழுத்தைவிட்டு நீங்கிய வோரெழுத்தாவது ணி இதிலிருந்தெண்ணிப் பார்க்கவந்த ஏழாமெழுத்தாவது (ணை) ஆக இந்த ஏழெழுத்துக்களையுங் கூட்ட (வெள்ளைச்சாரணை) என்றானது. இந்தப் பச்சிலையி

லேயே சாறெடுத்துக் கொள்ளவேண்டியது. மேற் செய்யவேண்டிய விபரம் அடுத்த பாட்டிற் கூறுவர். 39

### கலி விருத்தம்

ஓடு தன்னி லொழுங்குடன் குத்தியே
சூட தாகச் சுருக்கிடு வாயிதைக்
காட தாகக் கடிகை யிரண்டதை
நாட றிந்திட வேதை நவிலுவேன்.

---

இதில் மேலே சொல்லிய சாற்றைச் சுருக்குக் கொடுக்கும் விபரம் சொல்கின்றார்.

(இ...ள்] முன்பாட்டிற் குறித்தபடி யெடுத்த வெள்ளைச் சாரணைச் சாற்றைக் கிரமத்தோடு ஓட்டில் விட்டு முன் பாஷாணக்கட்டிக்குச் சூடேறும்படி இரண்டு நாழிகை சுருக்குக் கொடுக்கக் கடவாய். இனி இதனால் நடக்கப்பட்ட வேதையைச் சொல்வேன் கேட்பாய். எ—று.

சூட்சும விளக்கம்—இப்பாட்டிலும் முன்பாட்டுகளிலும் ஓட்டில் குத்தி யென்று சொல்லப்பட்டிருப்பதை பாஷாணக் கட்டியை ஓட்டிற்போட்டு அடுப்பில்வைத்து சாற்றைச் சிறுகச்சிறுக அதன்மேல் விட்டுக் கட்டியைப் புரட்டிக் கொடுத்துச் சாறுசெல்லச் செல்லப் பழையபடியும் விட்டுப் புரட்டிக் கொடுத்துக் கொண்டு வரவேண்டுமெனவறிக. 40

### இதுவுமது

நவிலக் கேட்டிடு நன்குற மாந்தரே
அவுரி யின்னிலைச் சாற்றினி லன்புடன்
துவள மாகச் சுருக்கிடு வாயிதைக்
கழறக் கேளுங் கடிகைமுன் வாறுபோல்

---



இதில்வேறு சுருக்குச் சொல்கின்றார்.

(இ...ள்) நலம் பொருந்திய மனிதர்களே. இன்னமும் சொல்வேன் கேட்பீர்களாக. மறுபடியும் முன் வெள்ளைச்சாரணைச் சாற்றில் சுருககுக்கொடுத்து வைத்திருக்கிற பாஷாணக்கட்டியை அவுரியிலைச் சாற்றில் முன் கிரமப்படி (48 நிமிஷம்) சுருக்குக் கொடுக்கக் கடவாய். எ...று. 41

சூட்சும விளக்கம்:...வெளிப்படை.

### இதுவுமது

வாறு போலும் வலுமை செலுத்திய
தேறு மாந்தரே செப்பிடக் கேண்மினோ
நூறு தூதுளைச் சாற்றிற் சுருக்கிடு
கூறு வேன்கடி கையுமுன் வாறதே.

---

இதில் வேறு சுருக்குச் சொல்கின்றார்.

(இ—ள்) பூவுலகத்தில் இந்த இலக்க சௌமியத்தின் முறைகளைக் கண்டு செய்து வல்லமை செலுத்த விரும்பும் மனிதர்களே! இன்னமும் சொல்வேன் கேட்பீர்கள். முன் அவுரியிலை சாற்றிற் சுருக்குக்கொடுத்து வைத்திருக்கிற கட்டியை மீண்டும் தூதுவளைச்சாற்றில் முன்போலவே [48 நிமிஷம்) சுருக்குக் கொடுக்கக் கடவாய். எ...று.

சூட்சும விளக்கம்...வெளிப்படை. 42

### கொச்சகக் கலிப்பா

தாலின் பெயரிற் றாக்கிடுவாய் மகர்முறையே
நூலின் பெயரி னுடங்கிடக் கடையிலூறுஞ்
சால முறவே தழைத்திடுந் தருவிலூற்ற
மேலிற் சுணங்கில் விகுவுடன்சாறு பிழிந்து.

---

இதில் சுருக்குக் கொடுக்க வேண்டியதற்காம் வேறொரு சாறு கூறுகின்றார்.

(இ—ள்) தாலு என்ற பதத்திற்குப் பிரதிபதமாயுள்ள ஓர் சொல்லோடு மகரத்திற்கு முறையாகிய வோரெழுத்தையும், நூல் என்ற பதத்தின் ஈற்றிலுள்ள வெழுத்தையும் எடுத்துச் சேர்ப்பாய். அப்படிச்சேர்த்தால் ஓர் பெயரமையும். அப்பெயருள்ள மரத்தின் பட்டையை யெடுத்து அதன் சாற்றைப் பிழிந்து.

சூட்சும விளக்கம்--தாலு என்ற பதத்திற்குப் பிரதிபதமாவது (நா) மகரத்திற்கு முறையாகிய வோரெழுத்தாவது (வ.) நூல் என்ற பதத்தின் ஈற்றிலுள்ள வெழுத்தாவது [ல்] ஆக இம் மூன்றெழுத்துக்களையுங் கூட்ட (நாவல்) என்றானது. இதுவே மேற்குறித்த மரமாம். இந்த நாவல் மரத்தினது பட்டையையே யெடுத்துச் சாறு பிழிந்து கொள்ளவேண்டியது. இந்தப் பாட்டும் அடுத்தபாட்டும் குளகமாகையால் இந்தச் சாற்றினாற் செய்யவேண்டிய மற்ற விபரங்களை அடுத்த பாட்டிற் கூறுவாரெனவறிக எ...று.

இதுவுமது

சாற்றில் மருந்தைச் சங்கையுடன் றேய்த்தெடுத்து
போற்றி யுடனே புரட்டிடு வோடதனில்
நேர்த்தியுடனே கடிகையை நிகழ்த்திடக்கேண்
மாற்றியுடனே மூன்றதுவா மாணவனே.

——

இதில் முன் சாற்றிற் சுருக்குக் கொடுக்கும் விதஞ் சொல்கின்றார்.

(இ-ள்) முன் சொன்னபடி பிழிந்தெடுத்துக் கொண்ட நாவற்பட்டைச் சாற்றில் முன் பாஷாணக் கட்டியைத் தேய்த்து அடுப்பில் வைத்திருக்கிற ஓட்டில் புரட்டி புரட்டி 72 நிமிஷம் சுருக்குக் கொடுத்தெடுக்கக் கடவாய். எ—று.



சூட்சும விளக்கம்:—வெளிப்படை. (44)

சந்த விருத்தம்

மனுதின்றிட வெகுசுந்தர வடிவாகி வயங்கும்
தனியுற்றிட மிகுவெற்றிய வவில்வேனிதைக் கேண்மோ
இனமாமிரு தளையானதி லெட்டேயகல் மூன்றுங்
கனமாகிய லகரொன்பதுங் கதியாமித னாமம்.

——

இதில் சாறெடுக்க வேண்டிய ஓர் பச்சிலை சொல்கின்றார்.

(இ-ள்) மானிடர்கள் தின்னும்படியாகப் பொருந்தி மிக அழகு வடிவமாகிப் பிரகாசிக்கும், மிகவும் வெற்றி பொருந்தியது. அதன் விபரத்தைச் சொல்வேன் கேட்பாயாக. கூட்டமாகிய இந்தப் பாட்டின் இரண்டாவதடியில் எட்டெழுத்துக்களுக்குப் பின்னின்ற மூன்றெழுத்துக்களும் மேன்மையான லகரத்தின் ஒன்பதாமெழுத்தும் சேர்ந்தால் அதனுடைய பெயர் விளங்கும். எ—று.

சூட்சும விளக்கம்:—இப்பாட்டின் இரண்டாமடியில் எட்டெழுத்துக் களுக்குப் பின்னின்ற மூன்றெழுத்துக்களாவன (வெற்றி) லகரத்தின் ஒன்பதாமெழுந்தாவது (லை). ஆக இவைகளைச் சேர்க்க (வெற்றிலை) யென்றானது. இதுவே மேற்குறித்த பச்சிலையாம். இது சந்தோஷ முடையவர்களிடத்திற்றான் பொருந்தியிருக்குமாகையால் மிகவும் வெற்றி பொருந்தியதென்றார். (45)

இதுவுமது

இவணுற்றிடு மிலையானதி லியல்பாய்வருஞ் சாற்றில்
சுவமுற்றிடச் சுருக்கானது சொல்வேன்றின மறையே
நவமுற்றொரு கால்நண்டினை நசித்தேயத னீரில்
தவமுற்றிடச் சுருக்கானது தயவாய்த்தின மறையே.

——

இதில் முன்சொன்ன சாற்றாலும் மற்றொன்றாலுஞ் சுருக்குக் கொடுக்குமுறை சொல்கின்றார்.

(இ-ள்) மேலே சொல்லிய வெற்றிலையி லிருந் தெடுத்த சாற்றில் மேற்படி பாஷாணக் கட்டியை அரை நாளும் ஒரு கால்நண்டை நசித்துப் பிழிந்த நீரில் அரை நாளும் சுருக்குக் கொடுக்கக்கடவாய். எ—று.

சூட்சம விளக்கம்:—வெளிப்படை. (46)

இதுவுமது

அறைவாறு சுருக்குண்டிடு மடலாகிய மருந்துங்
குறைவின்றியே மிகுதுண்டமாய்க் கொதிகொண்டதுமீறி
கறையின்றியே யனலானதிற் கடுகாயினும் புகையாக்
கறைகண்டது மிகுதிண்மையாய்க் கட்டுமதுகண்டாய்

இதில் மேற்படி பாஷாணக் கட்டின் முடிவு சொல்கின்றார்.

(இ-ள்) முன் சொன்னபடியே ஒற்றைக்கால்நண்டை நசித்துப் பிழிந்த சாற்றில் சுருக்குக் கொடுக்க அந்தப் பாஷாணக் கட்டியானது குறையாதபடி மிகுந்த துண்டமாய்க் கொதித்து மீறி யாதொரு குற்றமில்லாதபடி கடுகளவும் புகையாமல்அளவு கடந்த மிகுந்தபலத்தோடு கட்டுப்பட்டுப் போகும். கண்டறிந்து கொள்வாய். எ—று.

சூட்சும விளக்கம்:—வெளிப்படை. (47)

கொச்சகக் கலிப்பா

கட்டிதனைக் கையிலெடுத்துக்
கத்தாவைக் கருத்திலுன்னி
நிட்டையுடன் றொழுதேத்தி
நீதிநெறி யொழுங்கதுபோல்
திட்டமுறுங் கட்டதனைச்
செப்பதனிற் பதனம் பண்ணு



வெட்டியுறும் வேதை யின்னம்
விளம்புவேன் மாந்தர்களே.

---

இதுமுதல் மேற்படி கட்டின் வேதை சொல்கின்றார்.

(இ-ள்) முன்பாட்டிற் குறித்தபடி கட்டிக்கெட்டிப் பட்டுப்போன பாஷாணக் கட்டை யெடுத்து எல்லாம் வல்ல கடவுளை மனதினிடமாகத் தியானித்து நிஷ்டையோடு வணங்கித் துதித்து அறத்தின் மார்க்கத்தினது ஒழுங்கைப்போல் ஓர் செப்பில் பலமாகப் பத்திரப் படுத்தக் கடவாய். இன்னும் இதனால் நடக்கத்தக்க வேதைகளையும் சொல்வேன் மனிதர்களே கேட்கக் கடவீர்கள். எ—று.

சூட்சும விளக்கம்:—வெளிப்படை. (48)

அழுக்குறு தாம்பூ ரத்தி லளவுமுந் நூற்றிலொன்று
தழுக்குடன் வைத்து ருக்கத் தன்குலம் வேறுபட்டு
வெழுப்புடன் பேதலித்து மெழுகுபோல் நீண்டுமேவுஞ்
சுழுக்குடன் வயது தானுஞ்சொல்லும்பத் தரையதாமே.

---

இதில் மேற்படி வேதை சொல்கின்றார்.

(இ-ள்) மேற்படி பாஷாணக் கட்டைக் களங்கம் பொருந்திய தாம்பூரத்தில் முன்னூற்றிற் கொன்று தழுக்கோடு வைத்துருக்கினால் அந்தத் தாம்பிரத்தினது குலத்தன்மை வேறுபட்டு வெளுப்பு நிறத்தை யடைந்து மெழுகுபோல் இளகி நீண்டுவரும் இதற்கு மாற்று பத்தரையாகும். எ—று.

சூட்சும விளக்கம்:—இந்தப் பாஷாணக் கட்டானது இரசிதக் குருசம்பந்தமான தாகையால் இதை எந்த லோகங்களில் கொடுத்துருக்கினாலும் வெள்ளியே யாகுமெனக் காண்க. மாற்றுபத்து பத்தரை யெனச்

சொல்லிவருவதெல்லாம் வெள்ளிக்கே எனவறிக. இந்தப் பாட்டில் தாம்பிரம் பத்தரை மாற்றுள்ளதாகு மென்றதும் வெள்ளியென்றே யூகித்தறிய வேண்டியது. (49)

பள்ளுச்சந்த விருத்தம்

பாந்தன் பேர்நவ லோகந் தன்னிலே
பண்புடனே யிதை யீயவும்
காந்த மாகவே கலந்து மீறியே
கற்புட னேமிகு வெண்மைய தாம்
வாந்த மாகவே யாணியெட் டதுவு
மடிக் கில் மேனியுங் கலித்திடா
மாந்த ரின்குழு கேண்மின் வேறு
மருந்து வேதைகள் பொருந்த வே.

.........

இதில் வேறு வேதை சொல்கின்றார்.

(இ-ள்.) இன்னும் இதை பாம்பினது பெயரைக் கொண்ட நவலோகங்களில் ஒன்றாகிய ஓர் லோகத்தில் சிநேகத்தோடு கொடுத்தால் பிரகாசமாக அதனோடு கலந்து அதிகரித்து ஒழுக்கத்தோடு வெண்மையாகும். இதற்கு மாற்று எட்டாகும். இதைச் சுத்தியல் கொண் டடித்தால் தெரிக்கமாட்டாது. மனிதர் கூட்டங்களே, இனி இதனாலுண்டாகும் வேறு வேதைகளையும் சொல் வேன் கேளுங்கள். எ...று.

சூட்சும விளக்கம் :...பாம்பினது பெயரைக் கொண்ட நவலோகங்களி லொன்றாகிய லோகமாவது (நாகம்.) இந்த நாகத்தில் பாஷாணக் கட்டை இத்தனைக் கொன்று சேரு எனச் சொலலாதிருப்பினும் முந்தின கிரமங்களை யனுசரித்து நூற்றிக்கொன்றென யூகித் துணர வேண்டியது. (50)



வேறு விருத்தம்

இத்தனை லோகத்தி லியன்முந் நூற்றினில்
ஒற்றையை யீய்ந்திடி லொளிவு பொங்கியே
வெற்றியா வாணியும் விபரம் மேழரை
கற்றுணர் காளையே கண்ட றிந்திடே

.........

இதில் வேறு வேதை சொல்கின்றார்.

(இ-ள்.) இந்த விதமாக மற்ற லோகங்களிலும் பொருந்தும்படி முந்நூற்றிற் கொருபங்கு கொடுத்தால் அவைகள் பிரகாசமானதுஅதிகரித்து ஜெயம்பொருந்தும் படியாக அழகிய மாற்று ஏழரையாகும். கற்றுணர்ந்த வாலிபனே பார்த்தறிந்து கொள்ளக்கடவாய் எ...று.

சூட்சும விளக்கம் :...வெளிப்படை. (51)

இதுவுமது

கன்னியர் போகத்திற் கலந்து குன்றியே
சன்னியாற் சடமெலாந் தளிர்கள் முற்றிடும்
மின்னிய லாகவே விழிபு ரண்டிடும்
வென்னியல் வேளையில் விபரங் கேண்மினே.

.........

இது முதல் வைத்தியமுறை சொல்கின்றார்.

(இ-ள்.) மேற்சொன்னவைகளைத் தவிர ஸ்திரீக ளினுடைய சேர்க்கையினாலே சன்னியுண்டாகி அத னால் தேகம் குன்றி உடம்பெல்லாம் குளிர்ச்சியியாபித்து மின்னலைப்போல கண்ணானது சுழலுகின்ற அந்தச் சமயத்தில் இந்த மருந்தினால் செய்யவேண்டிய விபரத் தைச் சொல்வேன் கேட்பாய் எ...று.

சூட்சும விளக்கம் :...வெளிப்படை. (52)

இதுவுமது

ஆன்று றுகட்டியி லரை யரிசியைத்
தேன்றனி றோய்த்ததைச் செலுத்து நாவினிற்

றான்குடி யாகிய சன்னி யின்குலங்
கான்கடல் புகுந்திடுங் கழறக் கேண்மினோ.

---

இதில் பாஷாணாக் கட்டை மேற்கண்ட சன்னிக்கு உபயோகிக்கும் விதத்தைச் சொல்கின்றார்.

(இ-ன்) முன் சொன்னபடி பாஷாணக் கட்டில் அரை யரிசியெடையைத் தேனில் உரைத்துக் குழப்பி அதை நாவில்வைத்து உள்ளே செலுத்திவிடக்கடவாய். அப்படிச் செலுத்தி விடுவாயானால் தேகத்திற் குடியிருந்த சன்னிக் கூட்டங்களெல்லாம் நீங்கிக் கடலிற் புகுந்தொளித்து விடும். இன்னும் சொல்வேன் கேட்பாய். எ—று.

சூக்ஷும விளக்கம்:—வெளிப்படை; (53)

இதுவுமது

வறவறப் பாகவே நா வறட்சியும்
புரளுற விழிதனைப் புரட்டி வைத்திடுஞ்
சுரவகை தன்னையே சொல்லு முன்னமே
புறமுறக் கடலிடை புக்கு வாயென்றே.

—o—

இதில் மேற்படி கட்டின் வல்லபஞ் சொல்கின்றார்.

(இ-ள்) இன்னும் இந்தக் கட்டைக் கையில் வைத்துக்கொண்டு வறவற வென்றிருக்கும்படியாகிய நாவறட்சியைச்செய்து அங்கு மிங்கும் புரளும்படியாக விழியைப் புரட்டி வைக்கின்ற சுரவகைகள் எவையானாலும் அவைகளைப் பார்த்து நீ கடலிடை ஓடி ஒளிப்பாயென்று தீரமாகச் சொல்லக் கடவாய் எ—று.

சூக்ஷும விளக்கம்:—இந்தப் பாஷாணக்கட்டைக் கையில் வைத்துக்கொண்டு சுரவகைகளைப் பார்த்து நீ ஓடி கடலினுள் ஒளிக்க கடவாய் என்று சொல் என்றதனால் இந்தக் கட்டினது வாசனை பட்டமாத்திரத்தில் சுரவகைகள் நீங்கி விடுமென்பதை யுறுதிப் படுத்துவ தாயிற்று. இதனால் சுரத்திற்கும் மேற்கண்டபடி கொடுத்தால் நீங்குமென்பது கருத்து! ()



இதுவுமது

காலொடு கைதனைக் கடிந்து லர்த்தியே
மேலொடு கூனியே வெடுவெ டென்றிடுங்
காலொடு கால்தனைப் பின்னுங் காச்சலும்
வேலையிற் புகுந்தது வெளுக்குங் கண்டிடே

......

இதில் மேற்படி கட்டினால் இன்னும் தீரும் வியாதிகளைச் சொல்கின்றார்.

[இ-ள்] கால்களோடு கைகளையும் சினந்து இரத்த ஓட்ட முதலியவைகளை வறளச்செய்து அவைகள் தேகத்தோடு சேர்ந்து கூனலுற்று வெடவெடென்று ஆட காலோடு காலைச் சேர்த்துப் பின்னிவைக்கத் தக்கதாகிய பலம் பொருந்திய சுரமும் இந்த மருந்தின் வல்லபத்தால் கடலிற் சென்றொளித்து நாணத்தால் உடல் வெளுத்துவிடும். எ—று.

சூட்சும விளக்கம் ;—சுரமானது கடலிற் சென்றொளித்து நாணத்தால் உடல் வெளுத்து விடுமென்றது, இந்த மருந்தினால் அந்த வியாதி முழுதும் நீங்கிவிடுமென்பது பற்றியே. [55]

இதுவுமது

குன்மமென் றிடுங்குலங் குலைந்து குன்றியே
வன்மமும் வலுவொடும் வாகை யற்றுமே
சென்மமே தேறிடத் தியங்கித் தீதெனக்
கன்மமாங் கடலிடைப் புக்குங் கண்டிடே.

.........

இதினாலும் தீரும் வியாதி சொல்கின்றார்.

(இ-ள்.) இன்னும் இந்த மருந்தினால் குன்ம மென்று சொல்லப்பட்ட கூட்டங்களெல்லாம் நிலை கெட்டு ஊக்கங்குறைந்து அவைகளின் வம்பினோடு வலிமையும், வெற்றியும் நீங்கி அவ்வியாதிகளை அடைந்தவர்களது ஜென்மமானது கடைத்தேறும் படியாய்த் தியக்கமுற்று இனிமேல் இங்கு தங்குவதால் அளவற்ற தீங்குண்டாமெனக் கருதிக் கன்மஞ் சேர்ந்ததாயுள்ள சமுத்திரத்திற் புகுந்துவிடும் எ—று.

சூட்சும விளக்கம் ;—இம்மருந்தினால் வியாதிகள் நீங்குமென்பதற்குப் பதில கவே வியாதிகளை ஓர் வித ரூபமாக்கிப் போய்விடும், நாணிவிடும் என்பதாகச் சொல்லி வருகின்றார். இந்தக் குன்ம வியாதியானது பற்றினவர்களை அதிகத் துன்பஞ் செய்யக்கூடியதாகையால் கன்மஞ் சேர்ந்த (அதாவது பாவமாகிய) சமுத்திரத்திற் புகுந்துவிடு மென்றார். [56]

இதுவுமது

கண்டிடு மாக்கனே கட்டின் வேதையே
அண்டர்கோ னுரைதனை யறியப் போகுமோ
விண்டியான் மறுத்தொரு வேதை விள்ளுவேன்
மண்டலத் துற்றிடு மாந்தர் கேண்மினோ.

.........

இதில் இக் கட்டின் பெருமை சொல்கின்றார்.

(இ-ள்.) பூவுலகிலுள்ள மனிதர்களே! இன்னுஞ் சொல்வேன் கேட்பீர்களாக. இந்தப் பாஷாணக் கட்டினுடைய வேதைகளைச் செய்து பார்க்கக் கடவீர்கள். தேவர்க்கிறைவனாகிய கடவுளது வாக்கியமாகிய இந்நூலின் பெருமையை எவரால் அறியமுடியும். இனி வேறு வேதைகளைச் செய்வதாகிய இன்னொரு முறையையுஞ் சொல்வேன் என்று.

சூட்சும விளக்கம் ;—வெளிப்படை. (57)



தாளகக் கட்டின் மெழுகு

வேறு விருத்தம்

தகர் தம்பியும் ளாவண்ணனுஞ் சலதிப்பெயர் முன்னோன்
மகரின்கடை மருந்தானதை வகுப்பேனிரு பலமே
பிகரத்துடன் மிகவாகிடும் பிரியத்துடன் வேதை
மிகவுத்தம முடன்விள்ளுவன் விரைவாயிதைக் கேண்மோ.

.........

இதில் இம்முறைக்காம் ஓர் சரக்கின் பெயரும் நிறையுங் கூறுகின்றார்.

(இ-ள்.) தகரத்துக்குத் தம்பியாகிய வோரெழுத்தையும், -ளா-வென்ற எழுத்திற்கு அண்ணனாகிய வோரெழுத்தையும், சமுத்திரத்தின் ஓர் பெயருள் முதலெழுத்தையும், மகரத்தின் கடையெழுத்தையும் எடுத்து முறையே சேர்த்தால் எப்பெயரமையுமோ அப்பெயருள்ள ஓர் கடைச்சரக்கில் (70 கிராம்) வாங்கிக்கொள்ளக்கடவாய். அழகினோடும் சிநேகிதத்தோடும் இதனாலுண்டாக்கப்பட்ட வேதையைக் கிரமத்தோடு சொல்வேன் விரைவாகக் கேட்கக்கடவாய். எ—று.

சூட்சும விளக்கம் :—தகரத்திற்குத் தம்பியாகிய வோரெழுத்தாவது (தா.) ளாவென்ற எழுத்திற்கு அண்ணனாகிய வோரெழுத்தாவது (ள.) சமுத்திரத்தின் பெயர்களுள் இதற்குப் பொருத்தமாயுள்ள ஓர் பெயராவது -கடல்- இதன் முதலெழுத்தாவது [ம்.) ஆக இந்நான்கெழுத்துக்களையும் முறையே சேர்க்க (தாளகம்) என்றானது. இதுவே மேற்குறித்த கடைச்சரக்காம். இதில் இரண்டு பலம் வாங்கிக்கொள்ள வேண்டியது. (58)

விபரம்
தாளகம் பலம் 3

இதுவுமது

மலரேகரி வனமாகிய மதிகெட்டவன் பொல்லான்
சலரேசல சலவென்றிடு தலத்துற்றிடும் பூடு
இலையானதில்வருஞ் சாற்றினிலியலுமெழின் மருந்தை
வலமாகவே தோய்த்தேயதை வைப்பாய்கதி ரவன்முன்

.........

இதுமுதல் செய்முறை சொல்கின்றார்.

(இ-ள்.) கரியைப்போன்ற நிறத்தினை யுடைய புஷ்பங்களையுடையதும், மதிகேடானவன் மூர்க்கன் என்று பரிபாஷையினாற் சொல்லத் தக்கதும், காய்த்திருக்குங் காலத்தில் சரேலென்றும் சலசலவென்றும் சப்தமிடத் தக்கதுமான பூமியில் முளைத்துத் தங்குவதுமான ஓர் பூண்டினது இலையிலிருந்து உண்டாக்கப்பட்ட சாற்றில் மேற்சொல்லிய தாளகக் கட்டியை பலத்தோடு தோய்த்துப் பின் அதையெடுத்து வெயிலில் வைக்கக் கடவாய். எ—று.

சூட்சும விளக்கம் :...மேற்சொல்லிய இலக்ஷணங்களையுடைய பூண்டானது (கறுப்பு வட்டக் கிலுகிலுப்பை) இந்தப் பச்சிலைக்கு மேற்குறித்த இலக்ஷணங்களை முன் பல இடங்களிற் சொல்லி வந்திருப்பதால் இதுதானென நிச்சயிக்கப்பட்டது. இந்தக் கறுப்பு வட்டக் கிலுகிலுப்பைச் சாற்றிலேயே மேற்படி கட்டியைச் செம்மையாகத் தோய்த்து வெயிலில் வைக்க வேண்டியது. (59)

இதுவுமது

உண்டேயுலர்ந் திடும்பின்னதை யொளியாமிலைச் சாற்றில்
பொண்டாமதில் தோய்த்தேகதிர் புகர்நக்கிட வைநீ



உண்டேயுற வார்போலவே யொளியாந் தினமொன்றே
விண்டேபுரி யினிவேதைகள் விள்வேனிதைக் [கேண்மோ.

.........

இதில் முன் வெயிலில் வைத்த கட்டியைப் பின் செய்யவேண்டிய விதஞ் சொல்கின்றார்.)

[இ-ள்.] முன் சொன்னபடியே சாற்றில் தோய்ந்து வெயிலில் வைக்க அந்தக் கட்டியானது சாற்றையெல்லாம் உண்டு காய்ந்திடும். பின்பு அதையெடுத்துப் பழையபடியும் மேற்படி யிலைச்சாரலில் தோய்த்து ஒருநாள் வரை வெயிலில் வைக்கக் கடவாய். இதற்கு மேற் செய்யும்படியாகிய வேதைகளையும் சொல்வேன் கேட்பாயாக. எ...று.

சூட்சும விளக்கம் :...வெளிப்படை. (60)

வேறு வித்தம்

தயவாக்கரி பேரொடு தந்தகரை
நயமாயிலைச் சாற்றினில் நன்குறவே
தொய மாகவே தோய்த்துமுன் வாறதுபோல்
சுய மாகவே சூரியன் முன்னில்வை யே.

.........

இதில் மேற்படி கட்டியைச் செய்யும் வேறு மார்க்கஞ் சொல்கின்றார்.

(இ-ள்) முன் சொன்னபடி ஒரு நாள் வரை வெயிலில் வைத்த கட்டியைச் சிநேகத்தோடு எடுத்து கரியென்ற பெயரோடு தகரையென்ற பெயரைச் சேர்த்தால் என்ன பெயரமையுமோ அப்பெயருடைய ஓர் இலையினது சாற்றில் நலம் பொருந்தும்படியாகத் தோய்த்து முன்போலவே சூரியன் முன்பு (அதாவது வெயிலில்) வைக்கக் கடவாய் எ—று.

சூக்ஷ்ம விளக்கம்:—கரியென்ற பெயரோடு தகரை யென்ற பதத்தைச் சேர்க்க நின்றபெயர் [கரித்தகரை] இதன் சாற்றிலேயே தோய்த்து வைக்க வேண்டியது. (61)

இதுவுமது

தின மொன்றது செப்பிடு வேனியல்பா
நின வோடுநீர் நெஞ்சினி லுற்றறிவீர்
இனம் வேற தியற்றிடு வேனறிவீர்
தன மாகவே தாலமின் மாந்தர்க ளே.

இதுமுதல் வேறு மார்க்கஞ் சொல்லத் தொடங்குகின்றார்.

[இ-ள்] முன் பாட்டிற் சொன்னபடி கரித் தகரையிலைச் சாற்றில் தோய்த்து வெயிலில் வைத்த கட்டியை அப்படியே ஒருநாள் மட்டும் வெயிலில் வைக்கக்கடவீர். பூமியிலுள்ள மனிதர்களே இன்னும் செய்யவேண்டிய வேறு மார்க்கத்தையும் சொல்வேன். மனதில் நினைவாகப் பொருந்தி அறியக் கடவீர்கள்—எ-று.

சூக்ஷ்ம விளக்கம்:—வெளிப்படை. [62]

இதுவுமது

பத மாகவே பந்திட லின்பழத்தின்
இத மாயுறுஞ் சாறதி லின்புறவே
கத மாகவே தோய்த்துட னேகதிர்முன்
முத மாகவே வைத்திடு நாண் மூன்றே.

இதில் மேற்படி கட்டியைச் செய்ய வேண்டிய வேறு விதஞ் சொல்கின்றார்.

[இ-ள்] முன் சொன்னபடி கரித் தகரையிலைச் சாற்றில் தோய்த்து வெயிலில் வைத்த கட்டியைப் பதத்தோடு எலுமிச்சம் பழத்தில் இதமாகப் பொருந்தி வரப்பட்ட சாற்றில்இன்பத்துடனே தோய்த்துடனே மூன்று நாள் மட்டும் வெயிலில் வைக்கக் கடவாய்—எ-று



சூட்சும விளக்கம்:- எலுமிச்சம் பழத்தைப் பதந்திடலென்று சொல்லியது பரிபாஷை. (63)

வேறு விருத்தம்

சோதியின்விருக்ஷ மலரென நாமந் தொகையானோன்
மீதினிற் கருமை மின்மினியெனவே வெறிமத்தம்
ஓதிடுஞ் சாற்றிற் றோய்த்திடு வுலரக் கதிற் முன்னிற்
கோதிய கோதித் தினமது திரியின் நிற மாமே.

......

இதில் முன் தாளகக் கட்டியைச் செய்ய வேண்டிய வேறு மார்க்கஞ் சொல்கின்றார்.

[இ-ள்] சோதியென்ற விருக்ஷத்தின் மலரைப் போன்றதும், புஷ்பத்தின் மேலே கருமை நிறமானது வரிவரியாய் மின்மினியைப் போல் ஓடி யிருப்பதும், மயக்கத்தைத் தரத்தக்கதுமான மத்தம் என்று சொல்லப்படுவதாகிய ஓர் பச்சிலையின் சாற்றில் முன் எலுமிச்சம்பழச் சாற்றில் தோய்த்துக் காய வைத்திருக்கின்ற கட்டியைத் தோய்த்துக் காயும்படியாகச் சூரியனுக்கு முன்பாக மூன்றுநாள் மட்டும் வைக்கக் கடவாய். எ...று.

சூக்ஷ்ம விளக்கம்:- சோதி விருக்ஷத்தின் மலரைப் போன்ற மலருடையதும், புஷ்பத்தின் மேலே கருமை நிறமானது வரிவரியாய் விழுந்திருக்கப்பட்டதும், மத்தம் என்று சொல்லப்படுவதும் (கருவூமத்தை) சோதி மலருக்கும் இதின் மலருக்கும் வித்தியாச மிருக்கமாட்டாது போலும். இந்த கருவூமத்தைச் சாற்றிலேயே தோய்த்து மூன்றுநாள் மட்டும் வெயிலில் வைத்தெடுத்துக் கொள்ள வேண்டியது. (64)

வேங்கை ஜெயநீர்

திருப்புகழ் சந்தவிருத்தம்

வேரியமெனும்பேர் தலையுடன்ஙகரிற் கடைவிள்வேன்
பாரினில் மனுவின் கரப்பெயர்தருவின் பட்டைச்சாறு
வீரியமுடனே பிழிந்தரைப்படியே விரைவாக
ஆரியமுடனே வேதைகளினிவே றறைவேனே.

......

இதுமுதல் மேற்சொல்லிவந்த தாளகக்கட்டின் மெழுகிற்கு சேர்க்கவேண்டிய வேங்கை ஜெயநீரின் முறை கூறுகின்றார்.

(இ-ள்) வேரியம் என்று சொல்லப்பட்ட பெயரின் முதலெழுத்தோடு, ஙகரத்தின் கடையெழுத்தையும், பூவுலகிலுள்ள மனிதர்களுடைய கரத்தின் ஓர் பெயரையும் சேர்த்தால் என்ன பெயரமையுமோ அப்பெயருள்ள மரத்தின் பட்டைச்சாறு 0.672 லிட்டர் பிழிந்தெடுத்துக் கொள்ளக்கடவாய். வேகத்தோடு பிரியமாக இனிச் செய்யவேண்டிய வேறு மார்க்கங்களையுஞ் சொல்வேன் கேட்பாயாக. எ...று.

சூக்ஷம விளக்கம்:- வேரியம் என்று சொல்லப் பட்ட பெயரின் முதலெழுத்தாவது [வே] ஙகரத்தின் கடையெழுத்தாவது [ங்] மனிதர்களுடைய கரத்தின் ஓர் பெயராவது [கை] ஆக இம் மூன்றெழுத்துக்களை யும் சேர்க்க [வேங்கை] என்றானது. இந்த வேங்கை மரத்தின் பட்டையிலேயே சாறெடுக்க வேண்டியது. மற்ற விபரங்கள் பின்கூறுவார். [65]

கொச்சகக் கலிப்பா

பீங்கானி லூற்றியதில் பீடாம்வெள் ளைக்குருவில்
பாங்காகப் பணமதொன்று பண்புடனே போட்டுலக்கி



மூங்கான மிகுபனியின் முன்னேவை நாண்மூன்று
வேங்காரத் துடனேயிது வேங்கையெனுஞ் செயநீரே.

......

இதில் வேங்கை ஜெயநீரின் முடிவு கூறுகின்றார்.

(இ-ள்) முன்பாட்டிற் குறித்தபடி பிழிந்த வேங்கைப் பட்டைச்சாற்றை ஓர் பீங்கானில் ஊற்றி அதில் பெருமை பொருந்தியதாயுள்ள இக்காண்டத்தின் 20ம் பாட்டு முதற்சொல்லி யிருக்கப்பட்ட இரசிதக்குருவில் அழகு பொருந்தும்படியாக ஒரு பணவெடை யெடுத்து சிநேகத்தோடு போட்டுக் கலக்கி மூடல் மிகுவதான பனியின் முன்னே மூன்றுநாள் வரை வைக்கக் கடவாய். அப்படி வைத்தெடுத்தால் உடனே ஜெயநீராகியிருக்கும் இதை வேங்கை ஜெயநீரென்று சொல்லப்படும். எ...று.

சூக்ஷம விளக்கம்:- வெளிப்படை. [66]

இதுவுமது

முனமே நவிலுங் கட்டிதனை முக்கியமுறக்
கனமாகக் கல்வந் தனிலே கடத்திவைத்தே
வினமரக வேங்கை நீர்தனிலே விண்டிடக்கேள்
உனமாப் பணமே யொன்றதன்மே லேயூற்றி

இது முதல் மேற்படி ஜெயநீரை முன் தாளகக் கட்டியோடு சேர்த்துச் செய்யும் விதஞ் சொல்கின்றார்.

[இ-ள்] முன் சித்தப்படுத்தி வைத்திருக்கும் தாளகக் கட்டியை முதன்மை பெறும்படியாக கனம் பொருந்திய தான கல்வத்திற் போட்டு முன் சொல்லிய வேங்கை ஜெயநீரில் ஒரு 488மி. கிராம் எடுத்து நினைவோடு அதில் ஊற்றி மேலுஞ் சொல்வேன் கேட்பாய். எ...று.

சூக்ஷம விளக்கம்:- இப்பாட்டில் ஊற்றி யென்ற வரையில் நிறுத்தி யிருப்பதில் மற்றவைகளை அடுத்த பாட்டு முதற் கூறுவாரென வறிக. (67)

இதுவுமது

கல்வந் தனையே கதித்திடவே யாட்டிடுவாய்
சொல்லுவேன் சாமம் சூக்ஷியுடன் றிரியாமே
வெல்வே னெனவே வீரமுறு மெழுகதுவாம்
கல்வம் விடுத்தே கதியுடன் வழித்திடுவாய்

......

இதில் தாளகக்கட்டு மெழுகின் முடிவு சொல்கின்றார்.

(இ-ள்) முன் தாளகக் கட்டியைப் போட்டு வேங்கை ஜெயநீர் விட்டு வைத்திருக்கிற கல்வத்தைப் பலத் தோடும், சூக்ஷுமமாகவும் மூன்று சாமநேரம் அரைக்கக் கடவாய். அப்படி யரைத்தால் அது பலம் பொருந்திய மெழுகாகும். அவ்வாறு மெழுகானவுடன் அதை வேக மாக வழித்தெடுக்கக்கடவாய். எ...று.

சூக்ஷும விளககம்:- வெளிப்படை. [68]

இதுவுமது

வழித்த மருந்தை வண்மையுறு மேதியின் கோட்
டெழித்த செப்பி லேதா னிசையப் பதனம்பண்ணு
அழுத்த முடனே யாதிதனை மனத்திலுன்னி
வெளுக்கும் படியே வேதையினி விள்வனன்றே,

......

இதுமுதல் மேற்படி மெழுகின் வேதை சொல்லத் தொடங்குகின்றார்.

(இ-ள்) முன் பாட்டிற் குறித்தபடி வழித்தெடுத்த மருந்தை வளப்பம் பொருந்திய எருமைக் கொம்பினாற் செய்த சிமிழில் எல்லாம் வல்ல கடவுளை அழுத்தமாக மனதிலே தியானித்துப் பத்திரப்படுத்தக்கடவாய். இனி இதனால் பல உலோகங்களும் வெளுக்கும்படியான வேதைகளைச் சொல்வேன். எ—று.



சூக்ஷும விளக்கம்:- உலோகங்க ளெல்லாம் வெளுக் கும்படியான வேதைகளைச் சொல்வேன் என்றதனால் இந்த மெழுகால் உலோகங்களெல்லாம் அநேகமாய் வெள்ளியே ஆகுமென ஊகிக்கவேண்டி யிருக்கின்றது.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

வேதைகேள் மாணாக்கா நீ விள்ளுவேனன்ற தாம்பூரத்திற்
போதமுந் நூற்றிலொன்று பொற்புட னீய்வா யாகிற்
சாதியி னிறங்கள் போகித் தளுக்குட னழுக்கு மற்று
ஓதுவே னுயர்ந்த வெள்ளை வயததுமொன்பதாமே.

——

இதில் மேற்படி மெழுகின் வதை சொல்கின்றார்.

[இ-ள்] மாணாக்கனே! நான் சொல்லும் படியான வேதைகளைக் கேட்கக்கடவாய். இந்தத் தாளகக் கட்டு மெழுகைத் தாம்பூரத்தில் முந்நூற்றுக்கொன்று அழகு டனே கொடுப்பாயானால் அதன் ஜாதிக்குரிய நிறங்கள் யாவும் நீங்கி அழுக்கற்றுத் தளுக்குடனே வெள்ளி யாகும். இன்னுஞ் சொல்வேன் கேட்பாய் இந்த வெள் ளிக்கு ஒன்பது மாற்றாகும். எ—று.

சூக்ஷும விளக்கம்:- வெளிப்படை. [70]

இதுவுமது

கருமையின் வங்கந் தன்னிற்
கணக்காமுன் நூற்றி லொன்று
உருமையிற் கொடுப்பா யாகி
லுயங்கியே யொளிவதாகித்
திருமையில் வயது பத்து
சித்தத்தி லடக்கு வாயே
ஒருமையில் வேதை யின்ன
முரைத்திடக் கேட்பா யன்றே,

......

இதில் வேறு வேதை கூறுகின்றார்.

(இ-ள்) இன்னும் இந்த மெழுகைக் கறுப்பு நிறம் பொருந்திய வங்கத்தில் கணக்காக முந்நூற்றிற் கொன்று பொருத்தத்தோடு கொடுப்பாயானால் அந்த வங்கமானது உருகிப் பிரகாசத்தோடு அழகு பொருந்திய பத்து மாற்றுள்ள வெள்ளியாகும். இதை வேறொருவரிடமுஞ் சொல்லாமல் உன்மனதி லடக்கக்கடவாய். இதைத்தவிர இன்னும் இதனாலாக்கப்பட்ட வேறு வேதைகளையுஞ் சொல்வேன் கேட்பாய். எ—று.

சூக்ஷும விளக்கம்:—வெளிப்படை. (71)

கலி விருத்தம்

நாக மீதிதை நாட்டிடு வாயே நீ
மூக மாகமுந் நூற்றினி லொன்றதை
ஏக மாக விலங்கி நுடங்கியே
வாகை யாக வயதது பத்ததாம்

.........

இதில் வேறு வேதை சொல்கின்றார்.

(இ-ள்) இந்த மெழுகை நாகத்தில் முந்நூற்றிற் கொன்று சேர்க்கக் கடவாய். அப்படிச் சேர்த்தால் இரண்டும் ஒன்றாகச் சேர்ந்துருகிப் பிரகாசித்து வெற்றி பொருந்திய பத்து மாற்றுள்ள வெள்ளியாகும். எ-று

சூக்ஷும விளக்கம்;—வெளிப்படை. (72)

இதுவுமது

மெல்லி யலுடன் மீதியு லோகத்தில்
சொல்லும் வாறுபோற் சூக்ஷ மாயீய்ந்திடில்
வெல்லு வெண்மையில் வெள்ளை வனமுடன்
எல்ல தாகவே யெட்டரை யாணியே.

.........



இப்பாட்டில் மற்றுமுள்ள வேதைகளைச் சொல்கின்றார்.

(இ-ள்) மிருதுவான தன்மையோடு மற்ற வுலோகங்களி லெல்லாம் முன் சொல்லி வந்த கிரமப்படியே இந்த மெழுகை முந்நூற்றிற் கொன்று கொடுத்தாதினால் பிரகாசிக்கும்படியான வெள்ளை நிறத்தோடு சூரியனைப்போன்ற எட்டரை மாற்றுள்ள வெள்ளியாகும்—எ-று.

சூட்சும விளக்கம்:—வெளிப்படை. (73)

இதுவுமது

பரனுரைத்த சவுமியப் பான்மையைக்
கரண மாகவே கண்டறி வாமரோ
விரைவ தாவேதை வேறொன்று விள்ளுவன்
தரம தாகவே தானறி மாந்தரே.

.........

இதுமுதல் இந்த மெழுகினது வைத்தியஞ் சொல்லத் தொடங்குகின்றார்.

[இ-ள்] ஆதி கடவுளாலே சொல்லப்பட்ட இந்த இலக்க சௌமிய சாகரமென்னு நூலினுடைய தன்மையை மனமொத்துப் பார்த்தறியக் கடவேமாக. இன்னும் இந்த மெழுகா லுண்டாகப்பட்ட வேறு வேதைகளையும் வேகமாகச் சொல்லுவேன் மனிதர்களே நல்ல தன்மையோடு கேட்டறியக் கடவீர்களாக. எ-று.

சூக்ஷும விளக்கம்:—வெளிப்டை. (74)

இதுவுமது

வெற்றி வெற்றிலைச் சாற்றில் வியனுறப்
பத்தி யாகப் பசும்பய றென்னவே
உத்த மம்பெற வுண்ணு நீ மூன்று நாள்
வித்தை யாக விலகும் வியாதிகேள்,

.........

இதில் மேற்படி மெழுகை வைத்தியத்திற்குப யோகிக்கும் ஓர் விதத்தைச் சொல்கின்றார்.

(இ-ள்) இந்தத் தாளகக் கட்டினது மெழுகை வீரம் பொருந்திய வெற்றிலைச் சாற்றில் ஓர் பச்சைப் பயறளவு அழகு பொருந்தும் படியாகச் சேர்த்துத் தகுதி யோடு மூன்றுநாள் வரை அருந்தக் கடவாய் அப்படி யருந்தினால் அதனாற்றீரும் வியாதிகளையெல்லாம் சொல்வேன் கேட்பாயாக—எ-று.

சூட்சும விளக்கம்:— வெளிப்படை: (75)

இதுவுமது

காச மென்ற குலங்கள் கருகியே
நாச மாகி நடிநடிந் தோடிடும்
பாச மாகப் பயித்திய ரோகமும்
வேச மாறி விரைவினி லோடுமே.

.........

இதில் தீரும் வியாதி கூறுகின்றார்

(இ-ள்) மேற்படி மெழுகை முன் சொன்னபடி மூன்று நாளருந்தினால் காசமென்று சொல்லப் படுவதாகிய நோய்க் கூட்டங்களெல்லாம் கருகி நாசமாகி வெளிப் பட் டோடிவிடும், மயக்கத்தைச் செய்யும்படியான பயித் திய ரோகமெல்லாம் தன்னுடைய மாறுபாடு கெட்டு மிகத் துரிதத்தி லோடிவிடும்—எ-று.

சூட்சும விளக்கம்:—வெளிப்படை. (76

இதுவுமது

வில்லைப் போலே மிகுவளை வாகிடும்
வல்லி யவலி வாத வகை யொடுங்
கொல்லு கின்ற குமரன் வலி யொடும்
நல்லி யலில் நடிநடிந் தோடு மே.

.........



இதிலும் தீரும் வியாதி சொல்கின்றார்.

(இ-ள்) முன்பாட்டில் சொன்னவைகளைக் தவிர தேகத்தை வில்லைப்போல் வளையச்செய்வதாகிய பலம்பொருந்திய வலிப்பு வகைகளும், வாத வகைகளும். கொல்லும்படியான தன்மையையுடைய குமரன் வலிப்பு முதலானவைகளும் நீங்கி யோடிவிடும் எ-று.

சூக்ஷ்ம விளக்கம்:—வெளிப்படை. (77)

இதுவுமது

மெழுகு தன்னை விழுங்கிட மேனியும்
அழகு வாய்ந்தே யருண மிகுத்திடுந்
தொழுதே யாதியைத் தோத்திர மாகவே
செழுமை யாகச் செகத்துறு மாந்தரே.

.........

இதில் மெழுகைச் சாப்பிட்டபின் தேகமிருக்கும் நிலைமையைக் கூறுகின்றார்.

(இ-ள்) இந்தத் தாளகக்கட்டின் மெழுகைக் கிரமப் படி சாப்பிட்டால் தேகமானது பல நோயுமற்று மிக்க அழகைப்பொருந்தி மிகுந்த சிவப்பு நிறத்தையடையும் பூவுலகத்திலுள்ள மனிதர்களே! எல்லாம் வல்ல கடவு ளைத்தொழுது இம்மருந்தை யுபயோகித்துச் செழிப் போடு வாழக்கடவீர்களாக—எ-று.

சூட்சும விளக்கம்:—வெளிப்படை. (78)

வேறு தாளக வீரக்கட்டு

நொண்டிச் சிந்து

தாத்திரியின் மாந்தர்களே—மருந்தொன்று
சாற்றுகி றேன்வெகு நேத்தியுடன்
பார்த்தறிந்து மனத்தடக்கு—மிம்முறை
பண்புடனே வேதைமிக வின்பமுறுமே,

ஏத்தியேமுன் மெழுகான...மருந்தி
லியல்புடன் கட்டியொன்றிற் பலமிரண்டு
தோத்திரமா வாதிதனைத் தொழுது
சுத்தமுடன் வேதையினிச் சொல்லுவேனே.

இதுமுதல் தாளகக்கட்டுச் சொல்கின்றார்.

(இ—ள்) பூமண்டலத்திலுள்ள மனிதர்களே! மிகவும் அழகாக ஒரு மருந்தைச் சொல்கின்றேன், அதை கண்டறிந்து மதிலே அடக்கி வைக்கக் கடவீர்கள் இந்த முறையினா லேற்படும் வேதைகள் சிநேகத்தோடு அதிக இன்பத்தைத்தரும். இதற்குமுன் உயர்வாகச் சொல்லிவந்த மெழுகுண்டான மருந்தில் பொருத்தத்தோடு 70 கிராம் நிறையுள்ள கட்டியொன்று வாங்கிக்கொள்ளக் கடவீர். ஆதிபரனைத் தொழுது சுத்தமாக இதனால் நடக்கப்பட்ட வேதைகளை இனிச் சொல்வேன். கேட்பீர்களாக...எ...று.

சூட்கம விளக்கம்...முன் மெழுகான மருந்தாவது (தாளகம்) இந்தத் தாளகத்திலேயே இரண்டு பலமுள்ள கட்டி யொன்றெடுத்துக் கொள்ளவேண்டியது.

விபரம்

தாளகக்கட்டி பலம் 3 105 கிராம்

கொச்சகக் கலிப்பா

வெண்மை யுறுநற் குன்றியிலை வியன்சாற்றில்
தொண்மை யுடனே தோய்த்தெழிற் சூரியன்முன்
கண்மை யுடனே காட்டிடுவாய் நாளதொன்று
சுண்மை யுடனே சுருக்கிடுமுன் வாறதுபோல்.

இதில் முன் தாள்கக்கட்டியைச் செய்யவேண்டிய விதஞ் சொல்கின்றார்.

(இ...ள்) முன்பாட்டிற் குறித்தபடியெடுத்த தாளகக் கட்டியை வெண்மை நிறம் பொருந்திய குன்றிமணி



யிலைச்சாற்றில் வளப்பம் பொருந்தும் படியாகத் தோய்த்து அழகுபொருந்திய சூரியனுக்கு முன்பாக கண்ணோட்டத்தோடு காட்டிக்காட்டி முந்தியமுறையிற் சொன்னதுபோல சுருக்குக்கொடுக்கக் கடவாய்.எ...று.

சூட்சும விளக்கம்...வெண்மை நிறம்பொருந்திய குன்றிமணியென்றதை வெண்குன்றிமணியென அறிய வேண்டியது. முந்தின முறையிற் சொன்னது போற் சுருக்குக்கொடுக்கக் கடவாயென்றதை இதற்கு முன் சொன்ன தாளகக்கட்டினது மெழுகுமுறையிற் சொல்லியிருப்பதுபோல் கட்டியைச் சாற்றில் தோய்த்துத் தோய்த்துக் காயவைத்துக்காயக்காய மறுபடியும் தோய்த்துச் சூரியனுக்கு முன்பாக வைக்க வேண்டுமெனவறிக. காய வைத்தெடுப்பதே சுருக்குக் கொடுப்பதாம்.

இதுவுமது

முனமே வனமே முயனிறச் சாரணையின்
இனமா மிலையின் சாறதனி லியல்புடனே
கனமாகத் தோய்த்துக் கதிரவன் முன்னில்வைப்பாய்
தினமே முனமே செப்புகின்ற வாறதுபோல்

இதில் மேற்படி கட்டியைச் செய்யவேண்டிய வேறு விதங்கூறுகின்றார்.

(இ...ள்) முன் வெண் குன்றிமணி யிலைச்சாற்றில் சுருக்குக்கொடுத்து வைத்திருக்கிற தாளகக்கட்டியை முன் சொன்னபடியே முயல்போன்ற நிறத்தினையுடைய சாரணையிலையின்சாற்றிற் பொருத்தத்தோடு தோய்த்து முன் கிரமப்படியே சூரியனுக்கு முன்வைத்து ஒருநாள்வரை சுருக்குக்கொடுத்து எடுத்துக் கொள்ளக் கடவாய்.எ...று.

சூட்சும விளக்கம்—சுருக்குக்கொடுப்பது முன்பாட்டிற் சாற்றிற்றோய்த்துத் தோய்த்துக் காயவைத்தெடுத்துக் கொள்வதேயாம்.

சந்த விருத்தம்

விடுகிலன் பெயர்நர ரோர்கள் முன்னிலே
மகர்கடை தகரமுந் தாவெ னும்மொரு
ளகரமுந் தனிலிடு வேங்கைநீரழல்...புகையாதே

கெடியுற வுபயமின் நூற்றி லொன்றிதைக்
கிளருற நாட்டியே பூட்டி மேலொளி
கிளறியே யுளறுவன் கீச்சுமூச்சென—வுயிர்தானும்

மடிகில வுருளனை மூசை யுள்ளிடு
விரலுறு கரமுழ மாக வேபுட
மதியுடன் றீதனை மாட்டி யேயெடு...மகிழ்வாக

அடிபிடி யாகிய வாண்மை போக்கியே
கடிபடு மெழுகெனக் கம்பி நீள்பவன்
அவனியில் வயதவ ணாணி பத்தென...வரனாணை

இதில் இம்முறையைச் சம்பந்தித்த வேறொரு மார்க்கமும் இதின் வேதையுஞ் சொல்கின்றார்.

(இ...ள்) இம்மண்ணிலுள்ள மனிதர்களுக்கு முன்பாகப் போரில் விடுவேனாவென்று சொல்லத்தக்க ஒருவனுடைய பெயரைக்கொண்ட ஓர் சரக்கில், மகரத்தின் கடையெழுத்தையும், ககரத்தையும், தாவென்னு மெழுத்தையும், ளகரத்தையுமெடுத்து முறையே சேர்த்தால் எப்பெயரமையுமோ அப்பெயருள்ள சரக்கைப் போன்ற அளவு எடுத்து அதைப்போலவே சுருக்கு முதலியவை கொடுத்து இவ்விரண்டையும் வேங்கை ஜெயநீரில் புகையாமற் சுருக்குக்கொடுத்து கணக்கோடு எடுத்துக்கொண்டு இவ்விரண்டு கட்டுகளிலெதிலாவது ஒன்றில் யாவர்க்குந் தெரியும்படியாகப் பிரகாசிக்கப்பட்டதும், கீச்சு மூச்சென்று சப்தமிடத் தக்கதும், எவ்விதத்தாலும் உயிர் சாகாததும், உருளப்பட்ட தன்மை யுடையதுமான ஓர் சரக்கிற்கு நூற்றிலொன்று சேர்த்து இவ்விரண்டையு மூசையுட்போட்டு விரல்கள் பொருந்திய தாயுள்ள கைவிரல் ஒருமுழ அளவு புடம்போட்டுப்



புத்தியோடு நெருப்பிட்டு எரிந்தடங்கினபின் புடத்தைப் பிரித்தெடுக்கக்கடவாய். அப்படி யெடுத்துப்பார்த்தால் அந்த இரசமானது அடித்துடைக் கும்படியான கெட்டித்தன்மையில்லாமல் அடித்தால் நீளும்படியானது பதமுள்ள வெள்ளியாகும். இதற்குக் கடவுள் சாட்சியாகப் பத்துமாற்று ஏற்படும். எ...று.

சூட்சும விளக்கம்...இந்த மண்ணுலகத்தில் மனிதர்களுக்கு முன்பாகப் போரில் விடுவேனாவென்று சொல்லத்தக்க ஒருவனுடைய பெயராவது அவன் அஞ்சாத் தன்மையினால் வந்த பெயராகிய [வீரன்.] இது வீரன் என இருப்பினும் பரிபாஷையின் குறிப்பால் [வீரம்] எனக் கொள்ளவேண்டியது. மகரத்தின் கடையெழுத்து [ம்.] ககரமாவது [க.] தாவென்னு மெழுத்தாவது [தா.] ளகரமாவது [ள.] ஆக இந்நான்கெழுத்துக்களையு முறையே கூட்ட [தாளகம்] என ஆனது. இதை இதற்கு முன் சொல்லியிருக்கப்பட்ட தாளகமெனவே கொண்டு அதைப்போலவே வீரத்திலும் [72 கிராம்] வெண்குன்றி மணியிலைச் சாற்றிலும் சாரணைச் சாற்றிலும் சுருக்குக் கொடுத்து எடுத்துக்கொள்ள வேண்டுமென அறிக. இந்த விதமாகச் சுருக்குக் கொடுத்து எடுத்துக்கொண்ட தாளகக் கட்டியையும் வீரக்கட்டியையும் தனித்தனியே இதற்கு முன் முறையிற் சொல்லி யிருக்கின்ற வேங்கை ஜெயநீரில் புகையாமல் சுருக்குக் கொடுத்து வைத்துக் கொள்ளவேண்டும். இதை யிவ்வளவு நேரஞ் சுருக்குக் கொடுக்க வேண்டுமென்பதை அனுபவசாலிகளிடம் கேட்டுத் தெரிந்துகொள்க. யாவர்க்குந் தெரியும்படி பிரகாசிக்கத் தக்கதும், கீச்சு மூச்சென்று சத்தமிடத் தக்கதும், எவ்விதத்தாலும் உயிர் சாகாததும், உருளப்பட்ட தன்மை யுடையதுமான ஓர் சரக்கானது [இரசம்.] இதை இரசமென்ற மேற்கண்ட இலட்சணங்களின் குறிப்பா லுணரப்பட்டது. இந்த இரசத்தையே போதுமான அளவு எடுத்து அதில் நூற்றிலொரு பங்கு மேற்கண்ட தாளகக் கட்டு, வீரக்கட்டு ஆகிய இரண்டி

லொன்றைச் சேர்த்து குகையிலிட்டு மேற்கண்டபடி புடம் போட்டெடுத்தால் பத்துமாற்றுள்ள வெள்ளி யாகும்.

இந்தப் பாட்டின் ஈற்றில் அரனாணை யென்றதி னால் நிச்சயமாக நிறைவேறுமென்பதையுறுதிப்படுத் தினதாயிற்று. முன் சொன்ன தாளகக் கட்டியைப்போல வீரத்தையும் எடுத்துச் செய்துகொள்வாயென்று சொல் லாமல் எத்தகையினரும் மயங்கும்படியாக இலேசான இம்முறையை இவ்வளவு மறைவாகக் கஷ்டத்தோடு கண்டுபிடிக்கும் படியாய்ச் சொன்னது இம்முறையின் உயர்வையும், இரகசியத்தையும் கருதியெனக் கொள்க. [82]

எண்சீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

பத்தென்றேன் பித்தனல்ல பாருள் ளோரே
பரப்பாசு கொண்டடிப்பேன் படிறென்றோரைச்
சுத்தென்றாற் சூட்சமது கிட்டு மோதான்
சுண்ணாம்பு தாவென்கிற் றந்தி டாயே
எத்துடனே கிட்டுமோ வாத மார்க்க
மிறையவனை மனத்தடக்கித் தியானம்பண்ணு
முத்தாகக் குருவின்முறை முறைய தாக
முயவறிந்தோன் தன்னை நீ முடுகிக் கேளு.

———

இதில் இம்முறையின் சம்பிரதாயங் கூறுகின்றார்.

[இ-ள்.] முந்திச் சொன்ன முறைப்படி செய்தால் இரசமானது பத்து மாற்றுள்ள வெள்ளியாகு மென்று சொன்னேன். பூமியில் மனிதர்களே! என்னைப் பித்த னென்று நினைத்து விடாதீர்கள், இதைப்பொய்யென்று சொல்பவர்களைத் தொடுதோலினா லடிப்பேன். நீங்கள் சுண்ணாம்பு கொடுங்க ளென்றாற் கொடுக்க மாட்டீர்கள். அப்பேர்ப் பட்டவர்களுக்கு ஏமாற்றுதலி னாலே இந்த இரசவாத வழியானது கிட்டிவிடுமோ?



இம்மார்க்கத்தை யறியவேண்டுமானால் எல்லாம் வல்ல கடவுளை மனதிற் றியானித்திருந்து குருவுக்குத் தொண்டு புரிந்து முறைப்படி கேட்டறிந்தவனை யடுத்து அவன் மனம்போல் நடந்து கேட்கக் கடவீர்கள் எ—று.

சூக்ஷ்ம விளக்கம் :—சுண்ணாம்பு கொடுங்களென் றாற் கொடுக்க மாட்டீர்க ளென்றது மனிதர்களுடைய கெட்ட சித்தத்தையும் பெரியோரை வழிபடாத் தன்மை யையும் விளக்கும்பொருட்டென்க. இம்முறை வழிப்படியே கேட்டறிந்து செய்தால் தவறமாட்டா தென்னுமுறுதி யால் பொய்யென்று சொன்னவர்களைத் தொடுதோல் கொண்டடிப்பே னென்றும் பெரியோர்களைக் கேட்டுக் கைபாக முதலியவைகளைத் தெரிந்து செய்தா லல்லது இது கைகூடமாட்டாதாகையால் தெரிந்தவரையடுத்துப் பணிவிடை செய்து கேட்டறிந்து கொள்ள வேண்டு மென்றுங் குறித்தார். (83)

இதுவுமது

கேளப்பா மருந்தினரும் பெருமை தன்னைக்
கெடியாகத் தாம்பூரத் திருநூற் றொன்று
தாளப்பா கொடுத்திடவே தளுக்கே யற்றுத்
தவளமுறு வனமாகிக் களிம்பு மற்றுச்
சூளப்பா கவிப்பற்றுச் சுத்த மாகித்
துங்கமுற வடிக்கிலது துவண்டுநீளும்
ஆளப்பா வாணியுரை யெட்டே யாகு
மரனுரைத்த சவுமியத்தை யறியொ ணாதே.

.........

இதில் மேற்படி கட்டுகளின் வேறு வேதை சொல் கின்றார்.

[-இள்.] அப்பனே இன்னும் இந்த மருந்தினுடைய வல்லபத்தைச் சொல்வேன் கேட்பாயாக. இந்தத்

தாளக வீரக்கட்டி லெதையேனும் தாம்பிரத்தில் இரு நூற்றிற்கொன்று கொடுத்தூதினால் அதின்தளுக்கற்று வெண்மை நிறத்தைப் பொருந்தினதாகி களிம்பு முதலியவைகளெல்லா நீங்கிச் சுத்தமாகி அடித்தால் துவண்டு நீளும்படியான எட்டு மாற்றுள்ள வெள்ளியாகும். கடவுளே உரைத்ததான இந்தச் சவுமியமென்ற நூலினது பெருமையை எவருமறிய முடியாது. எ...று.

சூட்சும விளக்கம் :—வெளிப்படை. 84

வேறு செய்யுள்

வகை வங்கமிற் செகை சேர்த்திடு வடிவா யிருநூற்றின்
றொகை யொன்றது துரிசாகவே கரிநீரது வற்றும்
மிகுவெண்மையா வியனாகிய விறல்பெற்றிடும் வெள்ளி
வக மாகவே யுரையானது வரைமாற்றெட் டரையே.

.........

இதில் வேறுவதை சொல்கின்றார்.

(இ-ள்.) இன்னும் மேற்படி கட்டுகளி லொன்றில் வெள்வங்கத்தில் இருநூற்றிற்கொன்று சேர்த்துப் பொருத்தமாக வுருக்கினால் அந்த வங்கமானது கூடிய சீக்கிரத்தில் அதில் அடங்கி யிருக்கப்பட்ட நீர் வற்றி மிகுந்த வெள்ளை நிறம் பொருந்தி அழகுமேவி வீரம் பொருந்திய வெள்ளியாகும். இதற்கு அளவிடும்படியான மாற்று எட்டரையாம் எ...று.

சூட்சும விளக்கம் :—வெளிப்படை. 85

இதுவுமிது

நாகத்திடை நடுவாய்கல் லியல்போல மருந்தைப்
பூகத்தொடு புரண்டேயது பொங்கிக்கொதித் துருகி
வேகத்தொடு மிகுவெண்மையின் வியன்பெற்றிடு [வெள்ளி
வாகத்திடை வயதானது மாணியுரை யெட்டெ



இதில் மற்றொரு வேதை சொல்கின்றார்.

(இ-ள்.) இன்னும் மேற்படி கட்டுகளை நாகத்தில் முன் கிரமப்படியே இருநூற்றிற்கொன்று சேர்த்துருக்க அது உண்டையாகப் புரண்டு பொங்கிக் கொதிப்புற்று மிகவும் வேகத்தோடு மிகுந்த வெண்மை நிறத்தைப் பெற்றதாகிய அழகோடு கூடின வெள்ளையாகிவிடும். இந்த வெள்ளிக்குச் சரியான அளவாகிய மாற்று எட்டாகும். எ—று.

சூட்சும விளக்கம் :—வெளியபடை. 86

வெடியுப்புக் கட்டு

சந்த விருத்தம்

படிக ளெங்கணும் கிடுகி டெனதிடப்
பதறி யேபணி குளறிட
இடிக ளெங்கணும் விழுமவ் வாறுபோ
லிரைச்ச லும்வெகு விரைச்சலும்
அடிகள் குழுவு மலறி விழுகப்
படுபடு கிடுகிடு தொடு தொடு
கடிகள் படவே கடக டெனவே
காட்டு வோன்வலு முட்டு வோன்.

இதில் இம்முறைக்காம் ஓர் சரக்கை வருணிக்கின்றார்.

(இ—ள்.) பூமியெங்கும் கிடுகிடுவென்ற திரும்படியாகவும், பாம்புக ளெல்லாம் பதறிச் சஞ்சலத்தையடையும்படி யாகவும், எவ்விடத்தும் இடிகள் விழுகின்றதுபோல் அதிவேகத்தோடு கூடின சப்தத்தை யுடையதும், திடசித்தத்தை யுடைய இருடிகளும் அலறிவிழுந்தோடும்படியான தன்மையைச் செய்வதும் எதிர்த்தோர்களினுடைய தேகத்திலெல்லாம் காயங்களுண்

டாகும்படி செய்து அரசர்களுடைய கோட்டை முதலிய வைகளில் இருந்து கொடுகொடு வென்றும், கடகட வென்றும் வெடித்துக் காவல் முதலியவைகளைச் செய்வதுமான மகா வல்லபத்தையுடையது.

சூட்சும விளக்கம் :—இந்தச் சரக்குச் சேர்ந்த மருந்தானது மேற்கண்ட ஆடம்பரங்களைச் செய்யுமாகையால் அக்குணங்களையே இந்தச் சரக்கிற்கு வருணித்தார். மேற்கண்ட தன்மைகளைச் செய்வது வெடிமருந்தென அறியவேண்டியது. அந்த மருந்து கீழ்ச்சொல்லப் போகுஞ் சரக்கா லுண்டானது. அச்சரக்கின் பெயர் முதலியன அடுத்த பாட்டிற் கூறுவார். இருடிகள் எதற்கும் கலங்காதவர்களாதலால் அவர்களும் இந்த வெடிமருந்தின் சப்தத்தைக் கேட்டு நடுங்குவார்களென்று மருத்தின் வல்லபத்தைச் சிறப்பித்தார்.

### வேறு விருத்தம்

மகர்மன்னவ னுறவின்முறை மகிழ்வாயெடு வேழைப்
பிரரத்தொடுமுன் செய்யுட்பின் வீடாகவேயொன்றை
நகையரமலே லகரும்வகர் ணதருமகர் கடையே
தொகையாகவே பலமேயரை துகையுள்ளது வாங்கு.

---

இதில் மேற்கண்ட சரக்கின் பெயரும் நிறையுஞ் சொல்கின்றார்.

(இ-ள்.) மகரமென்ற சிறந்த வெழுத்திற்கு உறன் முறையாகிய வோரெழுத்தின் ஏழாவதெழுத்தையும், அழகோடு இதற்கு முந்தின பாட்டின்முதலெழுத்திற்குப் பின் னிருப்பதாகிய வோரெழுத்தையும் பரியாசம் செய்யாமல் லகரத்தையும், வகரத்தையும், ணகரத்தையும், மகரத்தின் கடையெழுத்தையும் எடுத்து முறையே சேர்த்தால் எப்பெய ரமையுமோ அப்பெயருள்ள சரக்கில் அரைப்பலம் கணக்காக வாங்கிக் கொள்ளக்கடவாய் எ...று.



சூக்ஷம விளக்கம்:— மகரமென்ற எழுத்திற்கு உறன் முறையாகிய வெழுத்தாவது வ இதற்கு ஏழாவதெழுத்தாவது (வெ) இதற்கு முந்தின பாட்டின் முதலெழுத்திற் கடுத்த வெழுத்தாவது (டி) லகரமாவது (ல) வகரமானது [வ] ணகரமாவது [ண] மகரத்தின் கடையெழுத்தாவது (ம்) ஆக இவ்வாறெழுத்துக்களையுமெடுத்து முறையே சேர்க்க (வெடிலவணம்) எனவானது. இதுவே மேற்படி சரக்காம். இதை வெடியுப்பு என அறியவேண்டியது. வெடிமருந்து இந்த வெடியுப்பினாலே யுண்டாகக்கூடியதால் அந்த வெடிமருந்தின் செய்கைகளையே இந்த வெடியுப்பின் குணங்களாக முந்தின பாட்டில் வருணித்துக் கூறினார். [88]

### கொச்சகக் கலிப்பா

வாங்கு மருந்தை வண்மையொடு செயும் விபரம்
வேங்கை ஜெய நீர் தனிலே விடுத்தெடுப்பாய்
மூங்கையுடனே மூன்றுவிசை முக்கியமுறக்
காங்கை யுடனே காட்டிடுமே கனதிறமா.

......

இதில் மேற்படி கட்டின் செய்முறை சொல்கின்றார்.

[இ-ள்] முன்சொன்னபடி வாங்கிய வெடியுப்பை வனப்பத்தோடு இனி செய்யவேண்டிய விவரத்தைச் சொல்வேன் கேட்பாயாக. மேற்படி வெடியுப்பை வேங்கை ஜெயநீரில் போட்டுக் காயவைத்தெடுப்பாய். இந்த விதமாக மூன்றுதரம் அவசியத்துடன் செய்தால் மேற்படி வெடியுப்பானது நல்ல சூட்டோடு திறமாகக் கட்டிவிடும், எ...று.

சூட்சும விளக்கம்:- வெளிப்படை. [89]

இதுவுமது

கட்டு மருந்தைக் கரியில்வைத் துருக்கிடக்கண்
விட்டே விரைசா யுருகும் வெகுபுதுமை
பொட்டை வெளியிற் போட்டிடாதே புவிமனுவே
கெட்டி யுறவே கிளத்துவேன் வேதையன்றே.

......

இதில் மேற்படி கட்டைச் செய்யும் வேறுவிதஞ் சொல்கின்றார்.

[இ-ள்] முன் பாட்டிற் குறித்தபடி கட்டிய வெடியுப்பைக் கரிநெருப்பில் வைத்துருக்கிட வெகு விரைவில் இளகி உருகும். இது வெகு ஆச்சரியத்தை விளைவிக்கக் கூடியது. இதை அற்பமாக வெண்ணி பொட்டல் வெளியிற் போட்டு விடாதே. புவியிலுள்ள மனிதர்களே! இந்த வெடியுப்புக் கட்டினாலுண்டாக்கப்பட்ட வேதைகளைக் கெட்டி பொருந்தும்படியாக சொல்வேன் கேட்பாயாக. எ...று.

சூட்சும விளக்கம்:- வெளிப்படை. [90]

இதுவுமது

வேதை தனையே விண்டிடுவேன் மாந்தர்களே
தாதமுறவே தாம்பிரத்தில் நூற்றிலொன்று
போத முடனே பொற்பாக வீயவது
தீதே யகன்று திடமுறு வெள்ளியன்றே.

......

இதில் மேற்படி கட்டின் வேதை சொல்கின்றார்.

(இ-ள்) மனிதர்களே! இந்த வெடியுப்புக் கட்டின் வேதைகளைச் சொல்வேன் கேட்பீர்களாக. இதைத் தாம்பிரத்தில் நூற்றுக்கொன்று அழகுடனே அறிவாகக் கொடுத்தூதினால் அந்தத் தாம்பிரத்தின் அழுக்கு நீங்கி பலம்பொருந்திய வெள்ளியாகும். எ...று.



சூட்சும விளக்கம்:- வெளிப்படை [91]

இதுவுமது

வணிகர் கடையில் மதித்திட நாவரிதே
தணிவான சாதி சமனேடை சேர்த்துருக்கில்
அணியா வயது மறைகுவன் பத்தரையே
பணியின் பணமில் பதிந்திடும் மாந்தர்களே.

இதில் வேறுவேதை சொல்கின்றார்.

(இ-ள்) முன் பாட்டிற் சொன்னபடியே வெள்ளியை வணிகர் கடைகளில் மாற்று விலை மின்னதென நாவினால் மதித்துச் சொல்லுவ தருமையாகும். இந்த வெள்ளியோடு இதற்குத் தாழ்ந்ததான சாதாரண வெள்ளியைச் சமனிறை சேர்த்துருக்கினால் அது அழகான பத்தரை மாற்றுள்ள வெள்ளியாகும். ஆதிசேடனது பணா முடியிலுள்ள பூமியின் மேற்றங்கிய மனிதர்களே! இன்னமுஞ் சொல்வேன் கேட்பீர்களாக. எ—று.

சூக்ஷம விளக்கம்:- வெளிப்படை. [92[

இதுவுமது

வங்கந் தனிலே வகையிரு நூற்றிலொன்று
சங்கை யுடனே சார்புறவே தழுக்ககன்று
துங்க முறவே துலங்கிடும் வெள்ளை வனம்
அங்க முறவே யரணியுரை யெட்டரையே.

இதில் மற்றொரு வேதை சொல்கின்றார்.

[இ-ள்] இதை வங்கத்தில் வகையுடனே இரு நூற்றிற்கொன்று மதிப்போடு சேர்த்துருக்கினால் அந்த வங்கமானது தழுக்கு நீங்கி உயர்வு பொருந்திய வெள்ளை நிறமானது பிரகாசித்த வெள்ளியாகும். இதற்கு மாற்று எட்டரையாகும். எ—று.

சூட்சும விளக்கம்;- வெளிப்படை. [93]

இதுவுமது

அரவின் பெயரைப் பெறுநவ லோகமதில்
விரைவாக வீய்வாய் விளம்பியுமுன்முறைபோல்
இரையா வயது மெழிலுறு மெட்டரையே
தரையில் நிலைமை செலுத்திய தாசர்களே.

இதிலும் வேறு வேதை சொல்கின்றார்.

[இ-ள்] அரவத்தினுடைய பெயரைக் கொண்டதாகிய நவலோகங்களிலொன்றில் இந்தக் கட்டை முன் பாட்டிற் சொன்னது போலவே இருநூற்றிற்கொன்று கொடுத்து விரைவாக ஊதக்கடவாய். அப்படி செய்தால் அந்த லோகமானதுஎட்டரை மாற்றுள்ள வெள்ளியாகும் மண்டலத்தில் நிலைபெற்ற மாந்தர்களே அறியக் கடவீர்கள். எ...று.

சூக்ஷும விளக்கம்:- அரவத்தினுடைய பெயரைக் கொண்ட நவலோகங்களில் ஒரு லோகமாவது (நாகம்) இந்த நாகத்திலேயே வெடியுப்புக் கட்டையிரு நூற்றிற்கொன்று கொடுக்கவேண்டியது.

இதுவுமது

அரிசி எடையே மருந்ததி லங்கமுற
விரைசாய்த் திரியின் றினமது விழுங்கிடவே
துரிசாச் சதிரந் தனையெழில் தொலைந்திடவே
பரிசாய்ப் பறக்கும் பிணிதனைப் பகர்ந்திடுவேன்.

இதுமுதல் வைத்தியம் சொல்கின்றார்.

(இ-ள்) இந்த வெடியுப்புக் கட்டாகிய மருந்தில் ஓர் அரிசியெடை யெடுத்துத் தேகத்திற் பொருந்தும்படியாக வேகத்தோடு மூன்று நாள் சாப்பிட்டவுடன் துரிதத்தோடு தேகத்திலிருந்து கொண்டு அழகு நீங்கும்



படியாகச் செய்து கொண்டிருந்ததான பல துன்பத்தைச் செய்வதாகிய துஷ்ட நோய்கள் நீங்குகின்ற விதத்தைச் சொல்வேன் கேட்பாயாக. எ...று.

சூக்ஷும விளக்கம்:- வெளிப்படை. (95)

இதுவுமது

குன்ம வகையின் குலமது குலைகுலைந்து
தன்மை யுடனே காட்சிசெய் தோடிடுமே
பன்மை யுடனே பார்த்திடு மாந்தர்களே
வன்மை யுடனே யாண்மைமிக வரையரிதே.

......

இதில் மேற்படி மருந்தால் தீரும் வியாதி சொல்கின்றார்.

(இ-ள்) இந்த மருந்தை முன்சொன்னபடி சாப்பிடக் குன்மமென்று சொல்லப்பட்ட நோய்க் கூட்டங்களெல்லாம் நிலை தளர்ந்து மிகவுந் தாழ்மையை யடைந்து ஓடி விடும். மனிதர்களே இம்முறையை நேயத்தோடு செய்து பார்த்தறியக்கடவீர்கள். வலிமை தங்கிய இந்த மருந்தின் பெருமையை அளவிட்டுச் சொல்வதரிதாகும். எ...று.

சூக்ஷும விளக்கம்;- வெளிப்படை. (96)

97 98 99 100ம் பாட்டுகள்: இந்த ஐந்து பாட்டுகளும் ஞானசம்பந்தமானவை. ஞானத்தை விரும்பியோர் நல்ல அனுபவசாலிகளிடம் கேட்டுத் தெரிந்து கொள்வார்களாக. இப்பாடல்களுக்குப் பாட்டிலுள்ளபடி உரையெழுதி விடலாம். அதைப் பிறரும் பார்த்துத் தெரிந்து வாய் ஞானம் பேசிக்கொண்டிருக்கலாம். இவ்விதம் வாய் ஞானம் பேசிக் கொண்டிருப்பதில் எவ்வித பிரயோசனமு மேற்படாது. இதைத் தெரிந்த மட்டில் அனுபவித்துப் பார்க்கவேண்டும். அந்த அனு

பவம் அனுபவிகளிடம் கேட்டுத் தெரிந்தாலல்லது புலப் படாது. ஆதலால் முன்சொன்னபடி விருப்பமுள்ளார் கேட்டுத் தெரிந்து கொள்க.

இம்மட்டோடு இந்த ஐந்தாங்காண்ட முடிவு பெற் றது. இதில் மகா அருமையான சில முறைகளை மிகத் தெளிவாகச் சொல்லிமுடித்தார். இனி ஆறாவது காண் டத்திலும் இவ்வாறே பல சிறந்த முறைகளைச் சொல்லி முடிப்பார்.

இலக்க சௌமிய சாகரம் தேர்ந்நெடுத்த செய்யுட்களும் தெளிபொருள் விளக்க உரையும்

ஐந்தாங்காண்டம்.

முற்றிற்று

---

கடவுள் துணை

# இலக்க சௌமிய சாகரம் தேர்ந்தெடுத்த செய்யுட்களும், தெளிபொருள் விளக்க வுரையும்

.........

## ஆறாவதுகண்டம்

### காப்பு

எண்சீர்க்கழிநெடில யாசிரிய விருத்தம்

மதியாகக் கெதியாக மவுன மாக
வலமாகத் தலமாக வாய்மை யாகப்
பதியாக நதியாகப் பவன மாகப்
பரமாக விரமாகப் பதும மாகத்
துதியாக விதியாகச் சோதி யான
தூயவனின் றிருவுளத்தின் றுங்க மாக
வதியாக வறுநூற்றின் மருந்து சொல்ல
வகண்டவெளி யிடநிறைந்த வாதி காப்பே

.........

இதில் எடுத்த காரியமினிது முடியுமாறு தெய்வ வணக்கங் கூறுகின்றார்.

(இ-ள்) சிறந்த அறிவாகவும், உன்னத பதவியாக வும், மோனமாகவும், வல்லமை யாகவும், பலவிடங்களா கவும், சத்தியமாகவும், பல பதிகளாகவும், பல நதிகளா கவும் தேவருலகு முதலிய பல வுலகங்களாகியும், பர வெளியாகியும், தண்ணென்ற தன்மையாகியும், அடி யார்களுடைய தாமரைப் புஷ்பம் போன்ற மனத்திற் றங்கித் துதிக்கும் ரூபமாகவும், முறைப்படியே சோதி மயமாக நின்ற பரிசுத்தமாகிய கடவுளினுடைய மனதி லிருந்து உயர்வுபெற்று வெளிவந்ததாகிய இந்த

ஆறாவது காண்டத்தி லடங்கியுள்ள மருந்துகளைச் சொல்வதற்கு எங்கும் பரவிய வெளியிடத்தே நிறைந் திருப்பதாகிய எல்லாவற்றிற்கு மூலமாகிய அந்தக் கடவுளே காப்பானாக—எ-று

சூட்சும விளக்கம்:—இதற்கு முன் முதற்காண்டந் தொடங்கி ஐந்தாங் காண்டம் வரையிலும் முதற் காப்புச் செய்யுட்களின் ஈற்றில் கண்ணோக்கு மிடமெங்குங் கர்த்தன் காப்பு என்று சொல்லி வந்து இந்த ஆறாவது காண்டந் தொடங்கி முடியு மட்டும் இந்தப் பாட்டின் ஈற்றிற் சொல்லி யிருப்பது போலலே அகண்ட வெளி யிடை நிறைந்த வாதி காப்பு என்றே காப்புச் செய்யுட் களின் ஈற்றிற் சொல்லி முடிக்கின்றார். இதில் ஏதோ விசேஷ மிருக்கின்றதுபோல் தெரிகிறது. பெரியோர் களும் எமக்கு இப்படியே சொல்லி யிருக்கின்றனர். ஆதலால் இவ்விஷயத்தைத் தெரிந்த மகான்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்க. (1)

## இலிங்கக்கட்டு

### நொண்டிச் சிந்து

வேங்கைமகா ராசனெனுஞ்—செயநீர்
விறண்டபின் வீரன்மகா சூரனும்வந்தான்
தூங்காதே யென்மகனே—சவுமிய
சூட்சமெல்லா மாயிரத்தி நூற்றதுக்குள்ளே
பாங்காகச் சொல்லுகிறன்—தகர்முறை
தம்பியொடு தென்புடன்தி பார்த்தறிந்துநீ
வாங்கா யிருபலமா—மதிலே
வாச்சுதென்று நீசுருக்குப் பேச்சறிந்துகொள்.

———

இதில் லிங்கக்கட்டு முதற்சரக்கிற்குப் பாதிப்பெயர் சொல்கின்றார்



(இ-ள்) மகராஜனென்று சொல்லப்பட்ட வேங்கையி விருந்துண்டான ஜெயநீர் பிறந்த பிற்பாடு வீரனென் றும், சூரனென்றும் சொல்லப் படுவதாகிய வெடியுப்புக் கட்டு உண்டானது. இந்த இலக்க சௌமிய சாகரத்தி னுடைய சூட்சுமமெல்லாம் ஆயிரம் பாட்டுக ளென்னுங் ணக்கைக் கொடுப்பதாகிய பத்தாவது காண்டத்தின் நூறு பாட்டுகளுக்குள்ளே யடங்கி யிருக்கின்றன இது நிற்க லிங்கக் கட்டிற்குமெய் நடக்க வேண்டி யவைகளைச் சொல்லுகிறேன் கேள். தகரத்திற் கின மாகிய வோரெழுத்தின் தம்பியாகிய வெழுத்தோடு தைரியமாக (தி) யென்ற எழுத்தையும் எடுத்துச் சேர்த்து என்ன பெயரமையுதோ அந்தப் பெயருள்ள சரக்கைக் குறிப்பாலுணர்ந்து நீ இரண்டுபலம் வாங்கிக் கொள்ளக் கடவாய். உனக்கு இம்முறை வாய்த்த தென்று சந்தோஷித்து பரிபாஷை யென்று சொல்லப் பட்ட சுருக்கமான பேச்சின் குறிப்பை யுணர்ந்து கொள்ளக் கடவாய்—எ-று.

சூட்சும விளக்கம்—முன் காண்டத்திற் சொன்ன வேங்கை ஜெயநீர் பிறந்து அதனால் வெடியுப்புக் கட்டு உண்டானது. இனிமேல் லிங்கக் கட்டைச்சொல்லப் போகின்றேன் என்று சொல்வதற்குப் பதிலாக சம்பிர தாயமாய் வேங்கை மகாராஜ னெனுஞ் ஜெயநீர் விறண்டபின் வீரன் மகா சூரனும் வந்தான் என்று சொன்னார். சௌமிய சூட்சமெல்லாம் ஆயிரத்தி னூற் றுக்குள்ளே யென்றதனால் இந்த நூல் முழுமைக்குமே ஆதாரமான விஷயம் பத்தாவது காண்டத்தி லடங்கி யிருக்கின்றனபோற் காண்கின்றது. அவ்விஷயம் அந்தக் காண்டத்தைப் பார்வையிடில் தெரியவரும். அவ்விஷ யத்தை இந்த இடத்திற் சொன்னதற்கும் ஏதேனும் விசேஷ மிருக்கவேண்டும். ஆதலின் இவ்விஷயங்களை அறிந்தார்களிடம் கேட்டுணர்க. தகரத்திற் கினமாகிய வோரெழுத்தாவது ச இதற்குத் தம்பியாகிய வெழுத் தாவது (சா). தி யென்ற வெழுத்தாவது (தி). இவ் விரண்டையும் சேர்க்க (சாதி) யென்றானது இது ஜ

சரக்கின் பாதிப்பெயர். இதை அனுபவ சாலிகள் குறிப்பால் இன்ன சரக்கென்றுணர்ந்து கொள்ளலாம். அல்லது அடுத்த பாட்டிற் சொல்லியிருக்கும் குறிப்புப் பாதிப் பெயரையும் இதையும் சேர்த்து இன்னதெனச் சுலபமாகத் தெரிந்து கொள்ளலாம். இது விபரத்தை அடுத்தப் பாட்டிற் களங்கமறத் துலக்கப்படும். இந்தச் சரக்கில் இரண்டு பலம் வாங்கிக் கொள்ளவேண்டும். சுருக்கமான பேச்சின் குறிப்பை யுணர்ந்து கொள்ளக் கடவாயென்றது அடுத்த பாட்டிற் சொல்லும் விஷயங்களை ஆராய்ந்து அதை யின்ன பெயருடைய தென்றறிந்து அப்பெயரையும் இதிற் சொன்ன (சாதி)யென்ற பெயரையும் ஒன்றாகச் சேர்த்தறிந்து கொள்ளும் பொருட்டேயாம். 2

இதுவுமது

அனைத்தையும் படைப்பவனா...மதிலே
யாதியெனும் பேருவைக் கோதியே நடு
பணத்தையும் வரவழைப்போன்...நானெனப்
பாஷைகள் கூறியே மீசை தொடுவோன்
சனத்தையும் வரவழைப் போன்...பூவிற்
றங்குகின்ற மேருவதைத் தங்கமாச்செய்வோன்
இனத்துளர் தனைத்தேடிச்...சொலிச்சொலி
யின்பமுறத் துங்கமுடன் றோன்றினானே.

இதில் முன் சரக்கிற்குக் குறிப்பாற் பிற்பாதிப் பெயரையுணர்த்துகின்றார்.

(இ-ள்.) யாவையுமுண்டாக்கப் பட்டவன், இறைவனுக்கு ஆதியென்று சொல்லப்பட்ட பெயரைச் சூட்டிப் பார்த்தால் முன்பாட்டிற் குறித்த சரக்கின் பாதிப்பெயர் விளங்கும். இந்தச் சரக்கானது பணத்தை யெல்லாம் அதிகமாக வரவழைக்கத் தக்கது. எத்தகைய தொழிலுக்கும் ஆவேனென்று முன்னிற்கத்தக்கது, எல்லா ஜனங்களையும் தன்னுடைய ஆச்சரியமான வேலையினால் கூட்டமிடத் தக்கது, பூலோகத்தில் நிலைபெற்று நிற்கின்ற மகாமேரு கிரியையும் தங்கமாகச் செய்யத்தக்கது, தனக்கு இனத்தாராகிய தேர்ந்த வைத்தியர்களைத் தேடி தன்னுடைய மிகுந்த பிரதாபத்தைச் சொல்லிக் கொண்டு தோன்றியது—எ—று.



சூட்சும விளக்கம்...எல்லாவற்றையும் உண்டாக்கப் பட்டவன் கடவுள். இவனுக்கு ஆதியென்ற பெயரைச் சூட்டினால் எல்லாவற்றிற்கும் மூலம் (அதாவதுலிங்கம்) என்றானது. ஏனெனில் லிங்கமே யாவுமுண்டாவதற்கு மூலகாரணமாதலினால், இந்த [லிங்கமே] முன்பாட்டிற்குறித்த சாதியென்ற பெயரையும் முறையே கூட்டிப் பார்த்தால் (சாதிலிங்கம்) எனவானது. இதுவே இம்முறைக்காம் சரக்கென அறியவேண்டியது. இந்தச் சாதிலிங்கத்திலேயே முன் சொன்னபடி (70 கிராம்] வாங்கிக்கொள்ள வேண்டியது: மற்றப்படி இந்தப்பாட்டிற் சொல்லியவைகளெல்லாம் இந்தச் சாதிலிங்கத்தின் தன்மையைப்பற்றிச் சொன்னாரெனவறிக. 3

விபரம்

சாதிலிங்கம் 70 கிராம்

கலிவிருத்தம்

தீயை விட்ட திருட னொடுபொரு
ரீயை விட்டிடும் நேசனு மத்தகை
சீயை விட்ட திருடனொடுமுயிர்
ஊயை விட்ட வொளிதிகழ் சுண்ணத்தில்

---

இதுமுதல் லிங்கக்கட்டின் செய்முறை சொல்கின்றார்.

(இ...ள்) மேற்சொன்னபடி (70 கிராம்) சாதிலிங்கத்தை வாங்கிக் கொண்டபின், தீ யென்றஎழுத்தை

விட்டு நீங்கிய அதற்குப் பக்கத்திலுள்ள வோரெழுத்தோடு ரீ யென்ற எழுத்தைவிட்டு நீங்கிய அதற்குப்பின்னுள்ள வெழுத்தையும். அதேபோல சீ யென்ற எழுத்தைவிட்டு நீங்கிய அதற்குப் பக்கத்திலுள்ள வோரெழுத்தையும் எடுத்துச் சேர்த்தால் எப்பெயரமையுமோ அப்பெயருள்ள சரக்கிலிருந் துண்டான நீங்கிய வுயிரையும் பழையபடி வரும்படியாகச் செய்கின்ற சுண்ணத்தில் எ-று.

சூட்சும விளக்கம் தீ யென்ற எழுத்தைவிட்டு நீங்கிய அதற்குப் பக்கத்திள்ள வோரெழுத்தாவது (து) ரீயென்ற எழுந்தைவிட்டு நீங்கிய அதற்குப் பக்கத்தித்திலுள்ள வோரெழுத்தாவது (ரு] சீயென்ற எழுத்தைவிட்டு நீங்கிய அதற்குப் பக்கத்திலுள்ள வோரெழுத்தாவது (சு] ஆக இம் மூன்றெழுத்துக்களையுஞ்சேர்க்க [துருசு) என்றானது. இதிலிருந்துண்டாகிய நீங்கிய வுயிரையும் பழையபடி வரும்படியாகச் செய்கின்றசுண்ணமாவது:—இரண்டாங்காண்டத்திற் சொன்ன 'துருசுச் சுண்ணம். சுண்ணத்தில் என்ற மட்டில் நிறுத்தியிருப்பதில் மற்றவைப் பின்சொல்லுவரெறன வறிக. 4

இதுவுமது

அரை யரிசியைத் தூக்கி யடைவுடன்
குருவின் மூலியின் சாற்றிற் குழப்பியே
கரைய தாகக் கவச மிறுக்கியே
புரைய தாயன லோட்டிற் புரட்டிடு

---

இதில் முன் பாட்டிற்சொன்ன துருசுச்சுண்ணத்தைப் பின்செய்யவேண்டிய விதஞ் சொல்கின்றார்.

(இ-ள) முன் பாட்டிற் சொன்ன துருசுச்சுண்ணத்தில் அரையரிசியெடையெடுத்துப் பொருத்தத்தோடு



திருநூற்றுப் பச்சையிலைச் சாற்றில் போட்டுக் குழப்பி முன் சொன்ன லிங்கக்கட்டியின் மேற்பூசி கவசஞ்செய்து பொருந்தும்படியாக அனலோட்டிற் போட்டுப் புரட்டக் கடவாய் எ-று.

சூட்சும விளக்கம்: திருநூற்றுப் பச்சையிலைச் சாற்றில் துருசுச் சுண்ணத்தைப் போட்டுக் குழப்பின குழம்பால் லிங்கக்கட்டிக்கு மேற்பூசிக் கவசித்து அடுப்பில் நெருப்பிட்டு அதில் ஒரு ஓட்டைவைத்துக் காய வைத்து அந்த ஓட்டின்மேல் இந்தக் கவசித்தலிங்கக் கட்டியைப்போட்டுப் புரட்டவேண்டும். (5)

இதுவுமது

தடவு நீரைத் தழலது வுண்கவே
அடவ தாக வனலிடு வாயதைக்
கட லருகிலோர் கால்கொடு வோடியே
நடன முற்றிடு நண்டை நசுக்கியே.

---

இதில் முன் ஓட்டிற்போட்டுப் புரட்டிய லிங்கக்கட்டியைப் பின் செய்யவேண்டிய விதஞ் சொல்கின்றார்.

(இ-ள்) முன் பாட்டிற் சொன்னபடி ஓட்டிற் போட்டுப் புரட்டிய லிங்கக்கட்டியில் பூசியிருக்கும் குழம்பிலுள்ள நீரையெல்லாம் சாப்பிடும்படியாக கணக்காக நெருப்பையெரித்துக் கொண்டு மேற்படி கட்டியைப் புரட்டியெடுத்துக் கொள்வாய். பின்பு சமுத்திரக் கரையினோரங்களில் ஒற்றைக்காலினாலோடி நடனமிட்டுக்கொண்டு திரிகின்ற நண்டைப்பிடித்து நசுக்கி—எ-று.

சூட்சும விளக்கம்:— லிங்கக் கட்டிக்கு முன் பூசின துருசுச் சுண்ணம் திருநூற்றுப் பச்சையிலைச்சாறு கலந்த குழம்பானது காயும்படியாகப் புரட்டி யெடுத்துக் கொள்ள வேண்டியது, ஒற்றைக் காலாலோடப்பட்ட நண்டானது ஒற்றைக் காலோடு திரிவது நடன மிடு

வதுபோ லிருக்கு மாகையால் நடனமிட்டுக் கொண்டு திரிகின்ற நண்டு என்றார். நண்டைப் பிடித்து நசுக்கி யென்றமட்டில் நிறுத்தி யிருப்பதில் மற்றவைகளை யடுத்த பாட்டிற் கூறுவாரென வறிக. (6)

இதுவுமது

தோய்த்துத் தோய்த்துச் சுருக்கிடு வாயதைக்
காய்த்துக் காய்த்துக் கடிகையின் காலத்தைப்
பாய்த்துப் பாயத்துப் பணவெடை சூடனுங்
காய்த்த மாகக் கலக்கிச் சுருக்கிடே

இதில் முன் நண்டைப் பிடித்து நசுக்கியபின் செய்ய வேண்டிய விதஞ் சொல்கின்றார்.

(இ-ள்) முன் சொன்னபடி ஒற்றைக்கால் நண்டைப் பிடித்து நசுக்கிச் சாறுபிழிந்து கொண்டு அதில் முன் சுருக்குக்கொடுத்து வைத்திருக்கிற லிங்கக்கட்டியை தோய்த்துத்தோய்த்து அனலோட்டிற்பேட்டுப் புரட்டிக் காயக்காயப் பழையபடியும் தோய்த்துப் புரட்டிச்சுருக்குக் கொடுக்கக் கடவாய், இந்தப் படி 30 நிமிஷ நேரம் சுருக்குக் கொடுத்தபின் பழையபடியும் அந்தச்சாற்றில் ஒரு 4.88 மி. கிராம் சூடனைச்சேர்த்துக் கலக்கிக் கொண்டு முன்சொன்னபடிசுருக்குக் கொடுக்கக்கடவாய் எ—று.

சூக்ஷும விளக்கம் :—சூடன் சேர்த்துக் கலக்கிய சாற்றிற் சுருக்குக் கொடுப்பதற்கு இவ்வளவுநேரமெனச் சொல்லா விடினும் முன் சொன்னபடி யென்றதனால் இதையும் [30 நிமிஷம்] நேரமென்றே யூகித்தறிந்து கொள்க. 7

வேறு விருத்தம்

அளியின்குல வாயினி லன்பி னுறும்
மொழியி னிக ராக மொழிந்திடுவார்
தெளி வென்றிடும் பேர்முனஞ் சேர்த்திடுவாய்
நளி வின்றிய னகர்கடை யானது வே



இதில் பின் சுருக்குக் கொடுக்க வேண்டியதற்கா மோர் சரக்கின் பெயர் கூறுகின்றார்.

(இ-ள்.) வண்டுக் கூட்டங்களினது வாயிற்பிரியத் தோடு சேரும், அதைச் சொல்லுக்கு நிகராகவுஞ் சொல் வார்கள். தெளிவு. என்ற பதத்திற்கு முன்னே யிருக்கப் பட்ட எழுத்தோடு குறைவில்லாத னகரத்தின் கடை யெழுத்தைச் சேர்க்கக் கடவாய். அப்படிச் சேர்த்தால் முன்சொன்ன சரக்கின் பெயரமையும். எ—று.

சூட்சும விளக்கம் :—தெளிவு என்ற பதத்திற்கு முன்னே யிருக்கப்பட்ட எழுத்தாவது (தெ.) னகரத்தின் கடையெழுத்தாவது [ன்.] இவ்விரண்டையுஞ் சேர்த்துப் பார்க்க [தென்.] என்றானது. இது தென் என இருப் பினும் மேற்சொல்லிய சில குறிப்புகளினால் [தேன்.] எனக் கொள்ளவேண்டியது. இதை வண்டுகள் மிகுதி யாக வுண்ணுந் தன்மையினால் வண்டுகளினது வாயிற் சேருமென்று சொன்னார். தேனைச் சொல்லுக்கு நிகராகச் சொல்வது உலகத்தியற்கை. தேனை தென் என அமைத்தது பரிபாஷைக் கிரமத்தா லென்க. 8

இதுவுமது

சுருக் காகவே தோய்த்ததை யோடதனில்
உருக் காக வுலர்ந்திடு வாய்கடிகை
பெருக் காகவே பேசிடு வேனரையே
திருக் காவேறு வேதைகள் செப்பிடுவேன்.

இதில் முன்குறித்த தேனை இன்னதுசெய்யவேண்டு மெனச் சொல்கின்றார்.

(இ-ள்,)—மேற்பாட்டிற் குறித்த தேனில் முன் சுருக்குக் கொடுத்து வைத்திருக்கிற லிங்கக் கட்டியை தோய்த்துத் தோய்த்து சொல்லிவந்த கிரமப்படி அனலோட்டில் பெருக்கமாக 12 நிமிஷம் வரை

சுருக்குக் கொடுத்தெடுத்துக் கொள்ளக் கடவாய், முனி மாறி சூது சம்பந்தமான வேறு வேதைகளைச் சொல் வேன் கேட்கக் கடவாய் எ—று.

சூட்சும விளக்கம் :—வெளிப்படை, 9

இதுவுமது

கைமுன்னணி காட்டிடு வோரினமே
தைபின்னணி தாக்கிடு நாலினமே
சையின்முறை யானதிற் றன்னொன்றை
ளைமுன்னணி நாட்டிடு நான்கொடு இம்

இதில் பின் சுருக்குக் கொடுக்கவேண்டியதற்குச் சாறெடுக்கவேண்டிய ஓர் செடியின் பெயர் சொல் கின்றார்.

(இ-ள்) கை-என்ற எழுத்தின் கூட்டத்திற்கு முத லெழுத்தையும், தை-யென்ற எழுத்தின் பின் கூட்டத் தில் நான்கா மெழுத்தையும், சை-யென்ற எழுத்தின் கூட்டத்திற்கு முறையான வேரெழுத்தின் கூட்டத்தில் முதலெழுத்தைத் தள்ளி யிரண்டாவ தெழுத்தையும், ளை-யென்ற எழுத்தின் கூட்டத்தில் முதலெழுத்தையும் ஒன்றாகச் சேர்த்து இந்த நான்கெழுத்துக்க ளோடு-ம்- என்ற எழுத்தையுஞ் சேர்த்துக் கொள்ளக் கடவாய். அப்படிச் சேர்த்தால் ஓர் பெயரமையும். அப்பெயரே சாறெடுக்க வேண்டிய செடியின் பெயராம்—எ-று

சூக்ஷும விளக்கம்— கை-என்ற எழுத்தின் கூட்டத் திற்கு முதலெழுத்தாவது (க) தை-என்ற எழுத்தின் பின் கூட்டத்தில் நான்கா மெழுத்தாவது (த்) சை- என்ற எழுத்தின் கூட்டத்திற்கு முறையான வெழுத் தாது-த-இந்தத் தகரவரியில் முதலெழுத்தைத் தள்ளி நின்ற இரண்டாவ தெழுத்தாவது (தா) ளை-என்ற என்ற எழுத்தின் கூட்டத்தில் முதலெழுத்தாவது (ள) இந்த நான்கெழுத்துக்களையும் ஒன்றாகச்சேர்க்க



(கத்தாள) என்றானது இதைக் கற்றாழை யென அறிய வேண்டியது. இதுவே சாறெடுக்கவேண்டிய செடியாம். இந்த நான்கெழுத்தாலாகிய (கத்தாள) என்ற பதத் தோடு (ம்) என்ற எழுத்தையும் சேர்க்க [கத்தாளம்] என்றானது. இதைக் (கற்றாழம்) எனக் கொள்ளவேண் டியது. அடுத்த பாட்டிற் [சாறு] எனத் தொடர்வதால் அதையும் இதையும் சேர்க்க [கற்றாழஞ் சாறு) என வாகும். ஆனது பற்றி இதைக் கற்றாழம் என்ற வகை யில் எச்சமாக நிறுத்தினார். அறிவாளிகள் இரண்டை யுங் கூட்டிப்பார்த்துக் கொள்வார்களாக. ம்-என்ற எழுத் தைக்காட்டுவதற்காகப் பாட்டில்-இம்-என்று பிரயோகித் திருக்கின்றார். (10)

இதுவுமது

சாறானதிற் றாட்டிடு வாய்மருந்தை
வீறாகவே வெந்திட வோடதனிற்
சூறாகச் சுருக்கிடு வாய்கடிகை
கூறாகவே கூறிடு வேனரையே.

.........

இதில் மேற்படி சாற்றில் சுருக்குக்கொடுக்கும் விதஞ் சொல்கின்றார்.

(இ-ள்) முன் குறித்தபடியுள்ள கற்றாழஞ் சாற்றில் மேற்படி லிங்கக் கட்டியை முன் சொன்னபடியே அன லோட்டிலே போட்டு வெற்றியுடனே 12 நிமிடம் விரை வாகச் சுருக்குக் கொடுக்க கடவாய் இன்னும் சொல்வேன் கேட்பாயாக...எ-று

சூக்ஷும விளக்கம்:—வெளிப்படை. [11]

வேறு விருத்தம்

பந்திட லின்பழம் பகருஞ் சாற்றினில்
தொந்தமாய்த் தோய்த்துநீ சுருங்க வோட்டினில்

விந்தையாய்ச் சுருக்கிடு விபரம் விள்ளுவேன்
அந்தரக் கடிகையு மரைய தாகுமே.

.........

இதில் வேறு சுருக்குச் சொல்கின்றார்.

(இ-ள்) முன் சொல்லியபடி சுருக்குக்கொடுத்த லிங்கக் கட்டியை எலுமிச்சம்பழச் சாற்றில் சேரும்படியாகத் தோய்த்து நீர் சுண்டும்படியாக முந்தின கிரமப்படியே அனலோட்டிற் போட்டு வேடிக்கையாக அரை நாழிகை நேரம் சுருக்குக்கொடுத்து எடுத்துக் கொள்ளக் கடவாய்—எ-று

சூக்ஷும விளக்கம்:—எலுமிச்சம் பழத்தைப் பந்து போ லிடப்படுங்காரணத்தாற் பந்திடலின் பழமென்றார். இப்படி இந்த நூலிற் பல விடங்களிலுஞ் சொல்லிக் கொண்டு வருகின்றார். [12]

இதுவுமது

நாரியர் கொங்கையில் நடிந்து பொங்கிய
யாரிய மாகிடு மமுது தன்னிலே
தூரிய மாகவே தோய்த்துத் துங்கமா
வீரிய முடனதை யியற்றும் வேதைகேள்.

.........

இதில் பின் சுருக்குக் கொடுக்க வேண்டியதற்காம் ஓர் சரக்கும் சுருக்குஞ் சொல்கின்றார்.

[இள்] பின் அந்த லிங்கக்கட்டியை ஸ்திரீகளுடைய தனங்களிலிருந் தூறிப்பொங்கி அழகு பெறுகின்ற பாலில் சந்தோஷமாகத் தோய்த்துக் கொள்ளக் கடவாய் அதன்பின்பு அதை மிகுந்த வெற்றி பொருந்தும்படியாகச் செய்யப்பட்ட வேதையையும் சொல்வேன் கேட்பாயாக...எ...று.

சூட்சும விளக்கம்;...வெளிப்படை, [13]



இதுவுமது

ஓட்டினி லுலர்ந்திட வுயங்க வைத்து நீ
வாட்டிடு கடிகையும் வழுத்து வேனரை
நாட்டினி லுற்றிடு நரர்காள் கேண்மினே
வீட்டிய வேதைகள் விளம்பு வேனன்றே.

———

இதில் முன் முலைப்பாலில் தோய்த்த கட்டியைப் பின் செய்யவேண்டிய விதஞ் சொல்கின்றார்.

[இ.ள்] முன் பாட்டிற் குறித்தபடி முலைப்பாலில் தோய்த்த கட்டியை முந்தின கிரமங்களின்படியே அனலோட்டிற் போட்டுப் புரட்டிக் காயக்காயப் பழையபடியும் தோய்த்துப் புரட்டி [12 கிராம்] வரையும் நன்றாய்ச் சுருக்குக் கொடுக்கக் கடவாய். இந்தத் தமிழ் நாட்டின் கண்ணுள்ள மனிதர்களே இன்னும் நெருங்கிய இது சம்பந்தமான வேதைகளைச் சொல்வேன் கேட்பீர்களாக... எ-று

சூக்ஷும விளக்கம்:... வெளிப்படை. [14]

கலி விருத்தம்

மேக மாமழை மேவிய நீரதைத்
தாக மாகவே தானு மருந்திடான்
வாகை யரக வடிவு கெடியுறும்
நாக ரீக விரைந்த நடையினன்.

———

இதில் பின் சுருக்குக் கொடுக்கவேண்டியதற்காம் சரக்குண்டாகும் ஓர் ஜீவனை வருணிக்கின்றார்,

(இ.ள்) மேகத்திலிருந்துண்டாகப்பட்ட மழை ஜலத்தை எவ்வளவு தாகமானாலும் அருந்தமாட்டாது, வெற்றியாகிய நல்ல ரூபத்தைப் பெற்றிருக்கும், அழகு பொருந்திய விரைவான நடையினை யுடையது...எ று.

சூக்ஷுமம விளக்கம்— இந்த மட்டில் ஓர் ஜீவனை வருணித்தார், இதன் பெயர் முதலியன பின் கூறுவார். இது அஃறிணையாக விருந்தபோதிலும் அருந்திடான், நடையினன் என உயர்திணையாக்கி கூறியது வைத்தியப் பரிபாஷையின் கிரம நோக்கி யென்க

இதுவுமது

முத்தி யாக முதற்றளை யானதும்
அத்த மாக யகரொடு வன்புடன்
சுத்த மாக லகர்கடை சூக்ஷமே
வெற்றி யாக விளங்கிடு நாமமே.

---

இதில் மேற்குறித்த ஜீவனின் பெயர் கூறுகின்றார்.

(இ—ள்) உயர்வாக இந்தப் பாட்டின் முதலடியின் முதலெழுத்தோடு வழியாக அன்பினோடு யகரத்தையும் சுத்தி பொருந்தும்படியாக லகரத்தின் கடையெழுத்தையும் சூட்சுமாக எடுத்துச் சேர்ப்பாய். அப்படிச் சேர்ப்பாயானால் மேற்குறித்த ஜீவனுடைய பெயர் விளங்கும்.

சூட்சும விளக்கம்-இந்தப் பாட்டின் முதலடியின் முதலெழுத்தாவது [மு] யகரமாவது (ய) லகரத்தின் கடையெழுத்தாவது [ல்] ஆக இம்மூன்றெழுத்துக்களையுஞ் சேர்க்க (முயல்) என்றானது, இதுவே மேற்குறித்த ஜீவனாம். இனி இதிலெடுக்க வேண்டிய சரக்கின்னதென்பதை அடுத்த பாட்டிற் கூறுவார். 16

கொச்சகக் கலிப்பா

இவணில் நவிலுஞ் சுடுவனி லியல்புறவே
தவமாகத் தோய்த்துச் சார்புற வோடதனில்
துவமாச் சுருக்கு துங்கமுறச் சொல்விடுவேன்
கவமாக் கடிகை கணக்குடன் றிரியாமே.

.........



இதில் மேற்சொன்ன முயலிலிருந்தெடுக்கவேண்டிய சரக்கின்னதென்பதும் அதில் சுருக்குக் கொடுக்க வேண்டிய விதமும் சொல்கின்றார்.

(இ—ள்) மேலே சொல்லிய முயலினதுஇரத்தத்தில் முன் முலைப்பாலிற் றோய்த்துச் சுருக்குக்கொடுத்து வைத்திருக்கிற லிங்கக்கட்டியைத் தோய்த்து முந்தின கிரமங்களின் பிரகாரம் அனலோட்டிலிட்டு உயர்வு பொருந்தும்படியாக 72 நிமிட நேரம் சுருக்குக் கொடுக்கக் கடவாய். எ-று

சூக்ஷுமம விளக்கம்:—வெளிப்படை. 17

சந்த விருத்தம்

மந்தரம் போலுயர் கந்தர மும்மடை
விந்தை கொடுமுடி சுந்தரமாகிய
கோ கோ கோ கோ ல்
அந்தணர் குந்திடு மந்திர வாயினில்
தந்திர மாகவே யுந்தியசுந்தரம்
பூபூ பூபூ பூ
செந்தளி ராம்வனம் பந்த மிகுந்திடு
மிந்திர சாபம்போல் முந்தியேதொங்குவன்
பார்பார் பார்பார் பார்
பந்திட வின்பழ மெந்திட சாறதி
லுந்திற மாகவே தந்தளி ரின்மிசை
வார்வார் வார்வார் வார்...மகிழ்வாக.

.........

இதில் பின் சுருக்குக் கொடுக்க வேண்டியதற்குச் சேரும் ஓர் சரக்கை வருணித்து அதன் சேர்மானப் பக்குவத்தையும் சொல்கின்றார்.

[இ-ள்] மந்தரகிரியைப் போன்றுயர்ந்து ஆகாயமெல்லாம் நிறைந்து ஆச்சரியத்தைக் கொண்ட அழகு

பொருந்திய சிகரத்தையுடைய சிறந்த கோவில்களில் பிராமணர்களிருந்து மந்திரம் ஜெபிக்கும் படியாகிய வாசலினிடத்தே நாகரீகத்தைச் செய்யும்பொருட்டாகக் கட்டித் தூங்கவிட்டிருக்கின்ற ஓர் புட்பம், இதுசெடிகளில் சிவந்த தளிரைப்போன்ற தன்மையும் சேர்க்கை மிகுந்த வான வில்லைப்போன்ற இரத்தத்தையொத்த நிறத்தை யுமுடையதாய் ஆடிக்கொண்டிருக்கும். இந்த இலட்ச ணங்களுள்ள ஓர் பூவை இன்னதெனக் குறிப்பாற் கண்டுணர்ந்து கொள்ளக்கடவாய், இப்பேர்ப்பட்ட புஷ் பத்தைத் தேர்ந்தெடுத்து அதன் இதழ்களைச் சேகரித்து ஓர் பாத்திரத்திற்போட்டு அதில் தேவையான அளவு எலுமிச்சம்பழச் சாற்றை சந்தோஷத்தோடு விடக் கடவாய்...எ-று.

சூட்சும விளக்கம்...மேற்கண்ட இலட்சணங்களை யுடைய பூவானது (செம்பரத்தம்பூ) என அறியவேண் டியது. இதைப்பற்றி முன் பல இடங்களிற் சொல்லி வந்திருக்கின்ற குறிப்பினாலுங் கண்டுணர்க. இப்பூவி னுடைய இதழையேயெடுத்து அதில் எலுமிச்சம்பழச் சாற்றை விட்டுவைக்க வேண்டியது. மற்ற விபரங்கள் அடுத்த பாட்டிற் சொல்லுவார். 18

### வேறு விருத்தம்

வார்த்த மருந்தை வகையுடன் பிழிந்து வடிவாகச்
சூத்திரப்படியே தோய்த்ததை யோட்டிற் சுருக்கிடுவீர்
காத்திர முடனே கடிகையு மைந்து கதியாக
வேற்றொரு வேதை விளம்பிடு வேன்புவி மேலோரே.

———

இதில் முன் செம்பரத்தம்பூவில் எலுமிச்சம்பழச் சாறு விட்டதை யின்னது செய்யவேண்டுமெனக் கூறு கின்றார்.

[இ-ள்] முன்பாட்டிற் சொன்னபடி செம்பரத்தம் பூவில் எலுமிச்சம்பழக் சாறுவிட்ட கலவையைப் பிழிந்து



சாறெடுத்துக்கொண்டு அதில் முன் முயலிரத்தத்திற் சுருக்குக்கொடுத்து வைத்திருக்கிற லிங்கக்கட்டியை முன்சொன்ன தந்திரங்களின்படியே தோய்த்து 120 நிமிட நேரம் ஓட்டிற் சுருக்குக்கொடுத்து எடுத்துக் கொள்ளக் கடவீர்! அறிவாளிகளே! இதை இனிச் செய்யும்படியாகிய வேறொரு வேதையும் சொல்வேன் கேட்பீர்களாக. எ—று.

சூட்சும விளக்கம்- முன் செம்பரத்தம்பூவில் எலு மிச்சம் பழச்சாறு விட்டதைக் கொஞ்சம் ஊற வைத்துப் பின்பு அதைப் பிழிந்தெடுத்துக் கொள்ள வேண்டும். 19

### இதுமவுது

குருவண்டொரு மலருண்டவர் கொதியாமறற் றானம்
மருசுந்தர வமுதானதில் வயனாச்சுருக் கிடுவாய்.
கருவாகவே கனவோட்டினில் கடிகையது கேண்மோ
வருவாகவே சாமம்மது மதிபோன்றது மாக்கான்.

......

இதில் வேறு சுருக்குச் சொல்கின்றார்.

(இ-ள்) கருமணலானது சுடுகையோடு நிறைந் திருக்கும்படியான காட்டகத்திலே தங்கியிருப்பதான குருவண்டு மலரிலிருந்து தேனைக் குடிக்கின்ற ஓர் மரத்திலிருந்துண்டான பாலில் முன் சுருக்குக் கொடுத்து வைத்திருக்கிற கட்டியைத் தோய்த்து அன லோட்டிற் போட்டுப் புரட்டி ஒரு சாமநேரம் அழகாகச் சுருக்குக் கொடுத் தெடுத்துக் கொள்ளக்கடவீர். எ—று.

சூட்சும விளக்கம்:- குருவண்டு மலரிலிருந்து தேனுண்ணும் மரமானது (கள்ளி) இதைப்பற்றி முன் பல விடங்களிற் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தக் [கள்ளிப் பாலிலேயே] சுருக்குக் கொடுக்க வேண்டியது. (20)

சந்த விருத்தம்

மலரின்மிகு வாடையுற்றவன் வடிவாகிய வீகமுற்றவன்
வகையாகமுண் மேலி லுற்றவனாம்
முலரேகுரு தியெழிலானிற முயலிலுறு செக்கர்போலவே
முயல்வேன்வெகு வேதை யுற்றவ னாம்
பலனாமொரு வேகமுற்றிடும் பருகாரதைப்
பாரின்மானிடர்
பலனற்றது பண்புகண்டறி நீ
தலமீததி லேயெழுமபியே தருவாயது தங்குசுந்தரந்
தனிலேதக டானபட்டைய தே.

......

இதில் பின் சுருக்குக்கொடுக்க வேண்டியதற்குச் சாறெடுக்கவேண்டிய ஓர் மரத்தை வருணிக்கின்றார்.

(இ-ள்) மலரினாலே மிக வாசனையைப் பொருந்தியது, நல்ல சுந்தர ரூபத்தைப் பெற்றது, வரை வரையாக அதன் தேகத்திலெல்லா முட்களையுடையது, அதனுடைய மலர்களோ முயலிரத்தத்தைப் போன்ற சிவப்பு நிறத்தைப் பெற்றிருக்கும், இது அநேக விதமாக வைத்தியத்தில் வேதைகளைச் செய்யத்தக்கது, இதிலிருந் துண்டாகப்பட்ட பழம், காய் முதலியவைகள் ஒரு விதமான நாற்றத்தைப் பெற்றிருக்கும், இவைகளிலெதையேனும் மானிடர்கள் அருந்தமாட்டார்கள், அந்தப் பழம் காய் முதலியவைகள் ஜனங்களுக்கு எவ்வித பிரயோசனத்தையும் தரமாட்டாது,இது பூமியில் முளைத்தெழுந்து ஓர் மரமாகத் தங்கி நிற்கும். இத்தரு மேலே தகடு போன்ற பட்டையுடையதாயிருக்கும். ஆனதால் இத்தகைய குணங்களைக் கொண்டு இன்ன மரமென்று ஆராய்ந்து கொள்ளக்கடவாய். எ...று.

சூக்ஷம விளக்கம்:- மேற்குறித்த இலட்சணங்களால் ஓர் மரமென ஏற்பட்டது. புத்திமான்கள் பாட்டிற் சொன்ன குறிப்பின்படி இன்ன மரமென நிச்சயித்த



தறிந்து கொள்வார்களாயினும் மற்றவர்களுக்குத் தெரியாதாகையால் இதன் பெயர் முதலியவற்றை அடுத்த பாட்டிற் கூறுகின்றார். [21]

வேறு விருத்தம்

மை முன்னணி மாட்டிடு வைந்தினமே
ரை முன்னணி நாட்டிடு வத்தகையே
கை பின்னொடு முன்னொடு காட்டிடுவாய்
மை பின்னணி வாகுட னேகடையே.

......

இதில் முன்பாட்டிற் குறித்த மரத்தின் பெயர் சொல்கின்றார்.

(இ-ள்) மகரவரியில் மை என்ற எழுத்திற்கு முன் கூட்டத்தில் ஐந்தாமெழுத்தோடு ரகரவரியில் ரை என்ற எழுத்திற்கு முன் கூட்டத்தில் ஐந்தாமெழுத்தையும், கை-யென்ற எழுத்துச் சேர்ந்திருப்பதாகிய ககரவரியில் கடைசி யெழுத்தையும், அவ்வரியின் முதலெழுத்தையும், மை யென்ற எழுத்துச் சேர்ந்திருப்பதாகிய மகர வரியின் கடையெழுத்தையும் எடுத்து அழகு பெறும் படியாகச் சேர்ப்பாய். அப்படிச் சேர்த்தால் முற்பாட்டிற் குறித்த மரத்தினது பெயர் விளங்கும். எ...று.

சூட்சும விளக்கம்:- மகர வரியில் மை யென்ற எழுத்திற்கு முன்கூட்டத்தில் ஐந்தாமெழுத்தாவது (மு) ரகரவரியில் ரை யென்ற எழுத்திற்கு முன்கூட்டத்தில் ஐந்தா மெழுத்தாவது (ரு) கை யென்ற எழுத்துச் சேர்ந்திருப்பதாகிய ககரவரியில் கடையெழுத்தாவது(க்) அவ்வரியின் முதலெழுத்தாவது (க) மை என்ற எழுத்துச் சேர்ந்திருப்பதாகிய மகரவரியில் கடைசியெழுத்தாவது (ம்) ஆக இவ்வைந்தெழுத்துக்களையும் முறையே யெடுத்துச் சேர்க்க (முருக்கம்) என்றானது. இதுவே முற்பாட்டிற் குறித்த மாமரம். இதை முருக்கமரமென்று சொல்லாது முருக்கம் என்ற அளவில் நிறுத்தினது அடுத்த பாட்டில் இவணுற்றிடுஞ் சாற்றில் என்று

தொடர்வதால் சாற்றில் என்றிருப்பதை முருக்கம் என்பதோடு சேர்த்து முருக்கஞ்சாற்றில் எனக்கூட்டிக் கொள்ளட்டுமென்றேயாம். ஆனதா லந்தபடி கூட்டிக் கொள்க.

இதுவுமது

இவ னுற்றிடுஞ் சாற்றி னிலின்புறவே
தவ முற்றிடத் தோய்த்துநீ சங்கையுறச்
சுவ முற்றிட நீசுருக் கானதுகேள்
அவ மற்றிடச் சாமமு மொன்றாமே.

.........

இதில் மேற்படி சாற்றிற் சுருக்குக் கொடுக்கும் விதம் சொல்கின்றார்.

(இ-ள்) மேலே சொல்லிய [முருக்கஞ் சாற்றில்] முன் கள்ளிப்பாலில் சுருக்குக் கொடுத்து வைத்திருக்கிற லிங்கக் கட்டியைத் தோய்த்து மதிப்போடு முன்கிரமங் களின்படி குற்றமற 3 மணி நேரம் சுருக்குக் கொடுக்கக் கடவாய். எ—று.

சூக்ஷும விளக்கம்:— இந்த முருக்க மரத்திற்கு மேலே தகடு போன்ற பட்டை யிருக்குமென்று 31ம் பாட்டிற் குறித்துக் காட்டியிருப்பதினால் அந்தப் பட்டை யிலிருந்தே சாறெடுக்க வேண்டுமென அறியவேண்டி யது. (33)

வேறு செய்யுள்

நரருடன் மீதினில் நாட்ட லாகிடில்
விரைவினி லழன்றது வெந்து நீறிடும்
தரையுறு தருவினிற் சண்டி வண்டனாம்
தெரிதரப் பெயரினிச் செப்பு வேனன்றே.

.........



இதன் பின் சுருக்குக் கொடுக்கவேண்டியதற்கமோர் சரக்குண்டாகும் ஓர் மரனத்தை வருணிக்கின்றார்.

(இ-ள்.) கீழ்வரப்போகும் ஓர் தருவின்பால் ஜனங் களுடைய உடல்மீது பட்டால் அதிசீக்கிரத்தில் அழிற்சி யுண்டாகி வெந்து நீறிவிடும். பூமியிலுள்ள மரங்களி லெல்லாம் இந்த மரமானது மகா கோரத்தன்மையுள்ள தாம். இதனுடைய பெயரை இனித் தெரியும்படியாகச் சொல்வேன் கேட்கக் கடவீர்களாக—எ-று.

சூட்சும விளக்கம் :...இதன்பால் ஜனங்களுடைய தேகத்திற் பட்டால் உடனே புண்ணாகி உபத்திரவத் தைச் செய்யப்பட்ட தாகையால் இதை மகாகோரத் தன்மையுடையதென்றார். [34]

இதுவுமது

சகரின் முறைதனிற் றாக்கிடு திரி
மகிழ்வுடன் திடல்கடை மகிழ்த் தெடுத்திடு
செகமுறு முளையெனுஞ் சிலையின் பேர்கடை
தகுமுடன் தருவுறு தயங் கமுதினில்

———

இதில் மேற்குறித்த தருவின் பெயர் சொல் கின்றார்.

(இ-ள்.) சகரத்தின் இனமாகிய வெழுத்தின் மூன்றாவ தெழுத்தோடு சந்தோஷத்துடன் திடல் என்ற பதத்தின் கடையெழுத்தையும், பூலோகத்திலே மூங்கிலினாலே யுண்டாக்கப்பட்ட - சிலை - யென்னும் பதத்தின் கடையெழுத்தையும் எடுத்துச் சேர்த்தால் முன்பாட்டிற் சொன்ன மரத்தினது பெயரானது அமை யும். இந்த மரத்தினுடைய பாலில் எ-று.

சூட்சும விளக்கம் : சகரத்தின் இனமாகிய வெழுத் தானது (த.) இந்தத் தகரத்தின் மூன்றாவதெழுத்

தாவது [தி.] திடல் என்ற பதத்தின் கடையெழுத்தாவது [ல்] சிலையென்ற பதத்தின் கடையெழுத்தாவது [லை,] ஆக இம்மூன்றெழுத்துக்களையுஞ் சேர்க்க [தில்லை] யென்றானது. இதுவே முற்குறித்த மரமாம், இந்தத் தில்லை மரத்தினுடைய பாலில் என்ற வரையில் நிறுத்தி யிருப்பதின் மற்லவைகளை அடுத்த பாட்டிற் சொல்லுவாரெனவறிக. சிலை-யென்பது வில்- இந்த வில்லானது பெரும்பான்மையும் மூங்கில் மரத்தாலுண்டாக்கப்பட்ட தாகையால் மூங்கிலினாலே யுண்டாக்கப்பட்ட சிலை யென்றார். [35]

இதுவுமது

சொல்லுவேன் றோய்த்துநீ சுருங்க வோட்டினில்
வல்லிய லாகவே புரட்டி வாட்டிடு
கல்லியல் சாமமுங் கதியொன் றாகவே
வெல்லியல் வேதைகள் விளம்பு வேனன்றே.

இதில் மேற்படி தில்லைப் பாலிற் சுருக்குக் கொடுக்கும் விதஞ் சொல்கின்றார்.

(இ-ள்.) சொல்லுகின்றேன் கேட்பாயாக முன் பாட்டிற் சொன்ன தில்லைமரப் பாலில் மூன் முருக்கஞ் சாற்றில் சுருக்குக் கொடுத்து வைத்திருக்கிற லிங்கக் கட்டியைத் தோய்த்துப் பழைய கிரமப்படியே அனலோட்டிற் புரட்டிப் புரட்டி [3 மணிநேரம் விரைவாகக் கெட்டிப் படும்படியாய்ச் சுருக்குக் கொடுத்துக் கொள்ளக்கடவாய், இனிமேல் நடக்கும் வேதைகளையுஞ் சொல்வேன் கேட்பாயாக எ-று.

சூட்சும விளக்கம்: வெளிப்படை. [26]

வேறு செய்யுள்

சித்தர்மொழி போலிதுவைச் சித்தமதி லுன்னா
கத்தனரு ளாலேயிதைக் கண்டறிந்தேன் காளாய்



சித்தியுட னேசிகிமுன் சேர்முனமே பஞ்சு
பற்றியிடும் வாறதுபோற் பலிக்குமி கண்டாய்.

———

இதில் இக்கட்டின் பெருமை சொல்கின்றார்.

(இ-ள்.) இந்த லிங்கக் கட்டென்னு முறையை சித்தர்களுடைய நூற்களிற் சொல்லப்பட்டவைகளைப் போல் மாறுபாடான தென்று நினைக்காதே. எல்லாம் வல்ல கடவுளுடைய கிருபா கடாட்சத்தினாலே இம் முறையைத் தேர்ந்து தெளிந்தேன். இதைக் கேட்கும் தீரமுள்ள புருஷனே! இந்த முறையானது நிச்சயமான சித்தியோடு நெருப்பின் மூன்பாக பஞ்சானது எவ்விதம் சுலபமாகப் பற்றிக் கொள்ளுமோ, அதுபோல யாதொரு தடையுமின்றிப் பலிக்கும். நீ கண்டறிந்து கொள்ளக்கடவாய் எ-று.

சூட்சும விளக்கம்:—வெளிப்படை, 27

கொச்சகக் கலிப்பா

துள்ளாக நடனமுறுந் தொடுவுறுந் தானமதில்
வெள்ளாட்டி னிணமதிலே விள்ளுகின்ற மருந்ததனைக்
சுள்ளாகத் தோய்த்தெடுத்துச் சுருக்கிடுவனலோட்டில்
கள்ளாகச் சாமமது கழறுவே னொன்றாமே.

இது வேறு சுருக்குச் சொல்கின்றார்.

(இ-ள்.) வயல்கள் சேர்ந்த விடங்களிலே துள்ளித் துள்ளி நடன மிட்டுக்கொண்டு திரியப்பட்ட வெள்ளாட்டினுடைய கொழுப்பிலே முன் தில்லை மரப்பாலில் சுருக்குக் கொடுத்து வைத்திருக்கிற லிங்கக்கட்டியை மெல்லியதாகத் தோய்த்து [ஒரு மணி நேரம்] கிரமப்படி அனலோட்டிற் சுருக்குக் கொடுத்துக் கொள்ளக்கடவாய் எ-று.

சூட்சும விளக்கம்: வெள்ளாட்டுக் கொழுப்பானது கட்டி கட்டியா யிருக்குமானதால் இதில் தோய்த்துச் சுருக்குக் கொடுக் வேண்டுமென் றிருப்பதினால் அந்தக் கொழுப்பை உருக்கி வைத்துக்கொண்டு சுருக்கிட வேண்டியது. [28]

இதுவுமது

ஒன்றானமருந்ததுவை யொளிதிகழவேதை சொல்வேன்
நன்றாக வறிந்திடுவீர் நானிலத்தின் மாந்தர்களே
தன்றாகத் தமனியத்திற் றயவுடனே யிருபணமே
வன்றாக வடித்திடுவீர் வரைகடுதா சியெனவே.

இது முதல் முன் லிங்கக்கட்டியை பின்செய்ய வேண்டிய வேறு மார்க்கங்களைச் சொல்கின்றார்.

(இ-ள்.) முன்பாட்டிற் சொன்னபடி வெள்ளாட்டுக் கொழுப்பில் (3 மணி நேரம்) சுருக்குக் கொடுத்த லிங்கக்கட்டியை இனி ஒளி பிரகாசிக்கும்படி செய்யப் பட்ட வேதையைச் சொல்வேன். உலகத்திலுள்ள மனிதர்களே! நன்றாயறிந்து கேட்கக் கடவீர்கள். நல்ல பிரகாசம் பொருந்திய தங்கத்தில் இரண்டு பண வெடையெடுத்து எழுதும்படியான கடுதாசியைப் போன்றதான தகடடிக்கக் கடவீர்கள் எ—று.

சூட்சும விளக்கம் :—இதிற் சொன்னபடி கடுதாசிக் கனத்தில் அடித்த தங்கத் தகட்டை யின்னது செய்ய வேண்டு மென்பதை அடுத்த பாட்டிற் கூறுவாரென வறிக. [29]

இதுவுமது

ஊதிடப் பறப்பதுபோ லொளிவுடன் றகடாக்கி
கோதியே யெடுத்ததனைக் கூறுவேன் வேதையினி
ஆதியின் றிருவுளத்தா லானவருஞ் சவுமியத்தை
மேதினியின் மாந்தர்களே விண்டிடவு நாவரிதே.

இது முதல் மேற்படி தங்கத்தகட்டை யின்னது செய்யவேண்டுமெனக் கூறுகின்றார்.

(இ-ள்.) மேற்சொல்லிய தங்கத்தகட்டை மீண்டும் நன்றாய் ஊதினாற் பறக்கும்படியாய் அவ்வளவு



இலேசாக தகடுசெய்து யெடுத்துவைத்துக்கொள்ளக் கடவாய். இனி இதனாற் செய்யப்பட்ட வேதையையும் சொல்வேன் கேட்பாயாக. மண்டலத்திற் பொருந்திய மனிதர்களே! கடவுளுடைய திருவாக்கினாலே மனமுவந்து சொல்லிய இந்த இலக்க சௌமிய சாகரத்தின் பெருமையை நாவினாற் சொல்லல் அரிதாகும். எ—று.

சூட்சும விளக்கம்:—வெளிப்படை. (30)

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

தகடா யமைத்த தமனியத்தைச்
சடுதி யுடனே கையிலெடுத்து
அகடா மருந்தின் மேற்பொதிவா
யணுவள விலுமே வெளிதோன்றா
இகடா வமைத்து மெதுவினையா
யிறுக விழைப்பா யியல்புடனே
விகடா மறுத்து வேதைதனை
விள்வேன் கேளாய் விவரமதே.

இதில்முன் அடித்த தங்கத்தகட்டை யின்னது செய்ய வேண்டுமெனச் சொல்கின்றார்.

(இ-ள்.) முன் சொன்னபடி தங்கத்தினாலே செய்த அந்தத் தகட்டை விரைவாகக் கையினாலெடுத்து முன் வெள்ளாட்டுக் கொழுப்பிற் சுருக்குக் கொடுத்து வைத்திருக்கிற லிங்கக்கட்டியின்மேல் அணுவளவாயினும் இடைவெளி தோன்றாமல் பொதிந்து அந்தத் தகட்டை மேற்படி கட்டிக்கு ஒரு கங்கணம் போன்றிருக்கும்படியாக மெருகு கொடுக்குமாயுதத்தால் நன்றா யிறுக்கிவிடக் கடவாய். இனிமேல் இதைச் செய்யும்படியான மார்க்கத்தைச் சொல்வேன் கேட்பாய் எ—று.

சூட்சும விளக்கம்:—கட்டியைத் தகடானது கெட்டியாகப் பிடித்துக்கொள்ள வேண்டுமென்பதற்காகக்

கங்கணம் போன்றிருக்கும்படியாக மெருகு கொடுக்கு மாயுதத்தால் இறுக்கவேண்டு மென்றார். (31)

இதுவுமது

அமைத்த மருந்து தன்மேற்பா
யாவி னமுது தனை தோய்த்துக்
கமைத்த கனலி னோடுதனிற்
கதிக்கச் சுருக்குக் கணக்குடனே
இமைத்த முடனே போட்டெடுநீ
யேமந் தனையே மருந்திழுக்குங்
கமைத்த முடனே யரையரிசி
கழறு வேனே கண்டறிநீ.

---

இதில் முன் தங்கத்தகட்டாற் பொதிந்த லிங்கக் கட்டியை யின்னது செய்யவேண்டுமெனச் சொல்கின்றார்.

(இ-ள்.) முன் சொன்னபடி தங்கத் தகட்டாற் பொதிந்த லிங்கக்கட்டியை பாயப்பட்ட பசுவினது பாலிலே தோய்த்து முந்தின கிரமங்களின்படியே அனலோட்டிற் போட்டுப் புரட்டி விரைவாகக் கணக்குடனே சுருக்குக் கொடுக்கக் கடவாய். அப்படிச் சுருக்குக் கொ[illegible]த்தால் அந்த லிங்கக் கட்டியானது மேலே பொதிந்திருக்கிற தங்கத்தில் அரையரிசி யெடையை யிழுத்துக் கொள்ளும். இதைச் சூக்ஷுமமாகப் பார்த்தறியக் கடவாய் எ—று.

சூட்சும விளக்கம் :—பசுவின் பாலிற் சுருக்குக் கொடுப்பது இவ்வளவு நேரமென்று இந்தப் பாட்டிற் சொல்லப்படவில்லை ஆயினும் தெரிந்த அனுபவசாலிகளிடத்திற் கேட்டுணர்ந்து கொள்க. (32)



வேறு விருத்தம்

புரைபுண்டவை வெகுவாகவே
புரண்டேயடக் கெமனாம்
விரைவாகவே வெகுவேதைகள்
வியனாவியற் றிடுவோன்
உரை முன்றளை யெழிலாகவே
யுயர்தங்கமுன் னடுத்தோன்
குரை யாஙகர் கடையோடுரு
கூறுமத னாமம்.

.........

இதில் வேறு சுருக்குக் கொடுக்க வேண்டியதற்கான ஓர் சரக்குண்டாகுமிடத்தைச் சொல்கின்றார்

[இ-ள்.] புரை, புண் முதலியவைகள் சௌக்கியமாகும்படி வேகத்தோடு அந்நோய்களின் உக்கிரத்தைத் தணிக்கும்படியான எமன் போன்றது, மிகவுஞ் சீக்கிரமாக ஆச்சரியப் படும்படியான பல வேதைகளைச் செய்யத்தக்கது, சொல்லும்படியான இந்தப் பாட்டின் முதலடியின் முதலெழுத்தும், சப்தியாத ஙகரத்தின் கடையெழுத்தும், கு-வென்ற எழுத்தும் அதன் பெயராகும் எ—று.

சூக்ஷுமவிளக்கம்:—இந்தப் பாட்டின் முதலடியின் முதலெழுத்தாவது [பு] ஙகரத்தின் கடையெழுத்தாவது [ங்] கு வென்ற எழுத்தாவது (கு) ஆக இம் மூன்றெழுத்துக்களையுஞ் சேர்க்க [புங்கு] என்றானது. இதுவே மேற்குறித்த மரமாம். இனி இதிலிருந்தெடுக்கவேண்டிய சரக்கின்னதென்பதையும் அதைச் செய்ய வேண்டிய விதத்தையும் அடுத்த பாட்டிற் கூறுவார். (ங்) என்ற எழுத்து உயிரேறியல்லது இயங்கும் வன்மை யுடையதல்லவாகையால் சப்தியாத ஙகரத்தின் கடையெழுத்தென்றார். [33]

இதுவுமது

அமுதானதி லடைவாகவே யமுதாகிய மருந்தைச்
சமுதாகவே தோய்த்தேயன லோட்டிற்சுருக் கிடுவாய்

தமுதாகவே சாமமது தப்பாமலே யொன்று
சமுதாகவே தங்கந்தனைத் தானுண்டது கட்டும்.

———

இதில் மூன்கூறிய புங்குமரத்திலெடுக்க வேண்டிய சரக்கின்ன தென்பதையும் சுருக்குக் கொடுக்கவேண்டிய விதத்தையுஞ் சொல்கின்றார்.

(இ-ள்) முன் சொன்ன புங்கமரத்தினுடைய பாலில் முன் பசுவின் பாலிற் சுருக்கு கொடுத்து வைத்திருக்கிற லிங்கக் கட்டியைத் தோய்த்து 3 மணி நேர சுகமாகச் சுருக்குக் கொடுக்கக் கடவாய். அப்படிச் சுருக்குக் கொடுத்தால் அந்தக் கட்டியானது மேலே பொதிந்திருக்கின்ற தங்கத் தகட்டையெல்லாம் முழுதும் இழுத்துக்கொண்டு கெட்டியான கட்டாகிவிடும். எ—று.

சூட்சும விளக்கம்:—வெளிப்படை. (34)

இதுவுமது

கட்டுங்கன திறமாங்கரி தனிலே கண்விட்டே
திட்டமுட னுருகியது திறம்பெற்றிடும் பரமாத்
தொட்டால்வெகு யோகமதைச் சொல்வேனா வரிதே
அட்டதிரு மாதுமுனக் கடியாளிது கண்டாய்.

......

இதில் லிங்கக்கட்டின் முடிவு சொல்கின்றார்.

[இ-ள] முன் பாட்டிற் சொன்ன இந்த லிங்கமானது கெட்டிப்பட்டு விடும். அந்தக் கட்டைக் கரி நெருப்பில் வைத்தூதிரைல் அது மிகவும் பிரகாசித்து உருகி நல்ல பலமுடையதாகிவிடும். இதை உயர்வு பொருந்தும் படியாகக் கையினாலே எடுத்துக் கொண்டால் உனக்கு நல்ல சுபயோகங்கள் அனந்தமுண்டாகும். இந்த லிங்கக் கட்டினுடைய பெருமையை ஒரு விதத்திற் சொல்லி முடியாது. இதனாலே உனக்கு அஷ்ட லட்சுமிகளும் அடிமையாவார்கள். எ...று.



சூக்ஷும விளக்கம்:- வெளிப்படை. (35)

எண்சீர்க்கழி நெடிலடி யாசிரியவிருத்தம்

பெற்றவரின் பெயரறியா வுலுத்தர் கூடிப்
புதியோன்சொல் சாஸ்திரத்தைப்புரட்டென்பார்கள்
உற்றுடனே குருமுடித்துக் கொடுத்தா லல்லா
தூர்வழியே யுங்கள்புத்தி யூம்பப் பேச்சோ
எற்றுதலா யிறையவனு மியம்ப லுண்டோ
வெரிநரகில் வீழாம லெண்ணிப் பாரு
கற்றுதலாய்ப் பதினெண்பேர் கழறுகின்ற
கருவைப்போ லிக்கருவைக் கண்டிடாதே.

......

இதில் இம்முறையின் பெருமை கூறுகிறார்.

(இ-ள்) தம்மை யீன்றவர்களுடைய பெயரையறிய மாட்டாத வுலோபிகள் கூடிக்கொண்டு புதுமையானவனுடைய சாஸ்திரத்தை யுணராதபடி புரட்டென்று சொல்லுவார்கள். பொருந்திக் குருமுடித்துக் கொடுத்தாலல்லாமல் உங்களுக்கு என்ன காரியமுடியும். அதைச் செய்து கொள்ளாமல் உங்கள் புத்தியை ஊர்வழியே திரியவிட்டு விட்டால் என்ன காரியம் நடக்கும். எல்லாம் வல்ல கடவுளும் மாறுபாடாகச் சொல்வதுண்டோ. இந்த நூலை நீங்கள் நன்றாய் ஆராய்ந்து பாராமல் பொய் யென்று சொல்லி கொடிய நரகத்திற் போய் விழாமல் நன்றாய் உற்று நோக்குங்கள். வீணே மாறுபாடாக பதினெண் சித்தர்கள் சொல்லி வைத்த முறைகளைப் போல் இந்த முறையை நினைக்காதீர்கள். எ—று.

சூசம விளக்கம்:- தாமுண்டானதற்கு மூலமின்ன தென்பதை யுணராதவர்கள் என்பதற்குப் பதிலாக ஈன்றவர்களுடைய பெயரை யறியமாட்டாதவர்களென்றார். குருமுடித்தல் என்னும் விஷயத்தை நல்ல அனுபவிகளிடம் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும். சிலர்

எதையும் நன்றாய் உழைப்பெடுத்துப் பாராமல் சாஸ்திரங்களைப் பொய்யென்று சொல்லிக் கொண்டு திரிவதைப் பற்றியே இங்கு இவ்வளவு கடினமாகச் சொல்லி வைத்தார்.

கலி விருத்தம்

தத்து வத்தின் றவசுசெய் ஞானிகள்
சித்த ரோடு ரிஷிசிவ யோகிகள்
இந்த கைவிதங் கண்டறி யாரின்னங்
கத்த லாகிய கட்டி னருமையே.

இதிலும் மருந்தின் பெருமை கூறுகின்றார்.

(இ-ள்) தேக தத்துவங்களை யின்னதென் றறிந்து தவமுதலியவைகளைச் செய்யப்பட்ட ஞானிகளும், மற்ற சித்தர்களும், இருடியரும், சிவயோகிகளும் இந்த விதமான ஓர் அருமையான கட்டைக் கண்டறியார்கள். எறு.

சூட்சம விளக்கம்:- வெளிப்படை [37]

இதுவுமது

புவியி லுற்ற புருடரே கேண்மினோ
கவியி லுற்றிடுங் கட்டி னருமையே
செவியி லுற்றிடச் செப்பரி தாங்கண்டீர்
சவியி லுற்ற சவுமியப் பான்மையே.

.........

இதிலும் மேற்படி பெருமையே சொல்கின்றார்.

(இ-ள்) பூவுலகத்திற் பொருந்திய மனிதர்களே! இன்னும் சொல்வேன் கேட்பீர்கள். இந்தப்பாட்டுகளிற் சொல்லிவந்த லிங்கக்கட்டின் அருமையை பலர் காதுகளிற் படும்படியாகச் சொல்வது அரிதாகும். எங்கும்



பிரகாசிக்கும்படியான இந்தச் சௌமியமென்னு நூலினது தன்மையும் அவ்வாறேயாம். எ...று.

சூட்சும விளக்கம்:--வெளிப்படை. (38)

இதுவுமது

ஆதிதன்னா லறிவது யானுமே
ஏத மாக வெனிலிருந் தின்பமா
மூத மாக முறைமுறை தீட்சையாய்
ஓது வோனிட முற்றறி வீரரோ.

இதில் நூற் பெருமை சொல்கின்றார்.

(இ-ள்) இந்த நூலின் முறைகள் எல்லாவற்றிற்கு மூலமாகிய கடவுளினாலே நானறிந்தவைகள். இவைகளை என்னிடத்திருந்து இன்பத்தோடு முறைப்படியே தீட்சையாய்க் கற்றுச் சொல்லப்பட்டவர்களிடத்தில் கிரமமாகக் கேட்டறிந்துக் கொள்ளக் கடவீர்கள். எ-று.

சூட்சும விளக்கம்... இதிலுள்ள முறைகள் தம் வழியிலிருந்து படிப்படியாகக் கற்றுக் கொண்டிருப்பவர்களிடத்திற் கேட்டுத் தெரிந்து கொண்டா லன்றிப் பயன்படா தென்பது தோற்ற இவ்வாறு சொல்லினார். 39

இதுவுமது

கண்ட றிந்திடு காசினிக் காளையே
அண்டர் கோன்றிரு வாணையென் னாணையே
தொண்டு செய்பவ னன்றியே சொல்வது
விண்டி டாதே விபுலையின் வீணர்க்கே

.........

இதில் இம்முறையின் அருமையைப் பற்றிச் சொல்கின்றார்.

(இ-ள்) பூமியில் வாழப்பட்ட மைந்தனே! மேற் சொல்லிய லிங்கக் கட்டென்னு முறையைக் கண்டறிந்து கொள்ளக்கடவாய். இதைக் கிரமமாகத் தொண்டு செய் பவர்களுக்கே யல்லாமல் மற்ற வீணருக்கு தேவர்களுக் கிறைவனாகிய கடவுண் மேலாணையாக என் மேலா ணையாகச் சொல்லாதே. எ-று.

சூட்சும விளக்கம்:... இவ்வாறு வீணர்க்குச் சொல் லாதே யெனக் கண்டிப்பான ஆணைவைத்துச் சொன்ன தனால் இம்முறையின் அருமை நன்கு விளங்கு கின்றது. 40

நொண்டிச்சிந்து

கட்டதனைக் கையிலெடுத்து—மனத்திற்
 கர்த்தாவைப் பூசைசெய்து கதியுடனே
துட்டனெனுந் தாம்பூரத்தில் முந்நூற்றிலொன்று
 துரிதமா யீவாய் துங்கமுடனே
சொட்டெனவே தழுக்ககன்று...சுடருறுஞ்
 சோதியொளி மயமெனத் துலங்கிடுமே
கட்டளைக்க லதனில்வயது...கண்ணாலே
 கண்டிடவே பத்தரையாக் காட்டிடுமே.

.........

இதுமுதல் மேற்படி லிங்கக்கட்டின் வேதை சொல் கின்றார்,

(இ-ள்) மேற்படி லிங்கக்கட்டைக் கையினாலே யெடுத்து மனதிடமாகச் சர்வவல்லவனான கடவுளைத் தியானித்து வேகத்தோடு துஷ்டத் தன்மையுடைய தென்று சொல்லப்பட்ட தாம்பிரத்தில் முந்நூற்றிற் கொன்று கொடுத்தூதக் கடவாய், அப்படிச் செய்தால் அந்தத் தாம்பிரமானது களிம்பு நீங்கி மிகவும் உயர்வு பொருந்தினதாக சூரியனிடத்திலே தோன்றுகின்ற பிரகாச ரூபமாகத் தோற்றப்பட்ட தங்கமாகும். இந்தத்



தங்கத்தை உரைகல்லி லுரைத்துப்பார்க்கப் பத்தரை மாற்றுப் பிரகாசிக்கும்.எ—று.

சூட்சும விளக்கம்:— தாம்பிரம் களிம்புடையதாகை யால் துட்டனென்றார். 41

பள்ளுச் சந்த விருத்தம்

அயத்தி லடவா மருந்து தனையே
 பறையு மாறுபோ லீந்திடிற்
கயத்தி னிறங்க ளனைத்தும் போகியே
 கடிபடுமெழு கென்னவே
நயத்தி னுடனே வயது தனையே
 நவிலக் கேடிடு மாந்தரே
பயத்தி னுடனே பதினொன் றெனவே
 பகரு வார்நகர்க் கடையிலே.

——

இதில் வேறுவேதை சொல்கின்றார்.

(இ-ள்) மேற்கண்ட லிங்கக்கட்டை அயத்தில் முன் வேதையிற் குறித்தபடி முந்நூற்றிற் கொன்று கொடுத் தூதினால் அந்த அயத்தினுடைய யானை போன்ற கருப்பு நிறமெல்லா நீங்கி வாசனையுடைய மெழுகைப் போன்ற இளக்கமுடையதாகிய தங்கமாகிவிடும். இந்தத் தங்கத்திற்கு, நலம் பொருந்திய மாற்றானது பதி னொன்றென வணிகர்களுடைய கடைகளிலே சொல் வார்கள். எ—று.

சூட்சும விளக்கம் :...வெளிப்படை. 42

இதுவுமது

வங்க வகையின் மருந்து தனையே
 வழுத்து கின்றமுன் வாறுபோல்
துங்க முறவே யீய வழன்று
 துலக்க மாமஞ்சள் வனமதாய்த்

தங்க மெனவே சாற்று வாராணித்
தடி யுரையது தனிற் பத்தாங்
கங்க முறவே புவியி லுறையுங்
கரளை குழுக்காள் காணுமீன்.

.........

இதில் மற்றொரு வேதை சொல்கின்றார்.

(இ-ள்) இந்தக் கட்டாகிய மருந்தை வங்கமென்று சொல்லப்பட்ட லோக வகையில் முன் சொன்னபடியே முந்நூற்றிற்கொன்று கொடுத்தூதினால், அந்த வங்கமானது காய்ந்துருகி பிரகாசம் பொருந்திய மஞ்சள் வர்ணத்தை யுடையதான தங்கமாகும். இந்தத் தங்கத்தைப் பத்து மாற்றுடையதெனச் சொல்வார்கள். மனிதர் கூட்டங்களே இதைக் கண்டறிந்து கொள்ளுங்கள் எ-று.

சூக்ஷ்மவிளக்கம்—வெளிப்படை. 43

வேறு செய்யுள்

நாகந் தனில் நாட்டிடு நன்குறவே
மூகம் முடன் முன்னிய வாறது போல்
மாகம் முறு மாசையின் றன்வனமாய்
யோகம் முறு முரைதனிற் பத்தரை யே.

.........

இதில் வேறொருவித வேதை சொல்கின்றார்.

[இ-ள்] இன்னும் இந்தக் கட்டை நாகமென்ற வுலோகத்தில் நலம் பொருந்தும்படியாக முன் கிரமங்களின்படியே இரகசியமாக முந்நூற்றிற் கொன்று கொடுத்தூதினால், அந்த நாகமானது தெய்வ லோகத்திலே யுள்ளே தங்கத்தைப்போல் அதிகப் பிரகாசமுடைய தங்கமாகும். இது மாற்று பத்தரை யுடையதாகும் எ-று.



சூட்சும விளக்கம் ;—வெளிப்படை. 44

வேறு விருத்தம்.

தொகை யாகவே வகைலோகமிற்றுரிதாகமுந் நூற்றில்
இக மாகவே யீவீரது மெழிலாகவி லங்கிச்
சகை யாகவே மஞ்சணிறந் தகைமாற்றது பத்து
செக மீதினி லுறு மாந்தரே தெரிவீரக மீதே.

.........

இதில் இன்னுமற்ற வுலோகங்களினுடைய வேதை சொல்கின்றார்.

[இ-ள்] இந்த லிங்கக்கட்டை இன்னுமற்றவகை யுலோகங்களில் எதிலானாலும் விரைவாக முந்நூற்றிற் கொன்று கொடுத்தூதக் கடவீர்கள். அப்படிக் கொடுத்தூதினால் அவைகளெல்லாம் நல்ல அழகுடையதாகப் பிரகாசித்து மிக்க மஞ்சணிறமுடைய தங்கமாகும் இந்த விதமாகி உண்டாகிய தங்கத்திற்கு மாற்றுப் பத்தாகும். பூவுலகிற் பொருந்திய மனிதர்களே தெரிந்து கொள்ளக் கடவீர்களாக—எ-று.

சூக்ஷ்ம விளக்கம்:...வகைலோகமில் என்றது இப்போது சொல்லிவந்த வுலோகங்களைத் தவிர மற்ற வுலோகங்ளை யென அறிய வேண்டியது.

வேறு விருத்தம்

வெண்மையுறு வெள்ளிதனில் வெற்றியுட னிற்றைக்
கண்மையுற நூற்றிலொன்று காட்டிட வழன்று
திண்மையுட னேகொதி கொதித்தது திணிங்கி
அண்மையுறு வாணியுரை யாகும்பதி னாறே

———

இதில் வெள்ளி சம்பந்த வேதை சொல்கின்றார்.

[இ-ள்] இன்னும் இந்த லிங்கக்கட்டை வெண்மை நிறம் பொருந்தியதான வெள்ளியில் கண்ணோட்டமாக

நூற்றிற்கொன்று கொடுத்தூதினால், அந்தவெள்ளி யானது உருகிக் கொதித்து நெருங்கிய பதினாறு மாற் றுள்ள தங்கமாகும்...எ.று.

சூட்சும விளக்கம்:--வெளிப்படை. (46)

இதுவுமது

சாதிசமன் சேர்த்திடவே தன்குணங்க ளற்று
வாதினையி னாலும்வன மஞ்சளெனப் போன்று
மாதியரு ளாலேயுரை யாணியது மெட்டு
வீதியுடன் வேதையினி விண்டிடநா வுண்டோ.

---

இதில் வேறுவேதை சொல்கின்றார்.

(இ-ள்) முற்பாட்டிற் குறித்தபடி பதினாறு மாற்றான் தங்கத்தோடு சாதாரணத் தங்கத்தைச் சரியெடை கூட்டி உருக்கினால், இந்தப் பதினாறு மாற்றுள்ள தங்கத்தின் குணங்களற்று இவ்விரண்டுஞ் சேர்த்து மஞ் சளைப்போன்ற நிறத்தினை யுடையதாகி கடவுளுடைய கிருபா கடாட்சத்தினாலே எட்டு மாற்றுள்ள தங்கமாகி விடும். இனி இவைகளைக் காட்டிலும் வேறு வேதை களை உயர்ந்ததென்று சொல்வதற்கு நாவுளதோ— எ-று

சூக்ஷும விளக்கம்:... இவைகளைக் காட்டிலும் உயர்ந்த வேதைகள் இல்லையென்பதற்குவேறுவேதை களைச் சொல்ல நாவுண்டோ வென்றார். (47)

இதுவுமது

ஏமமிரு நூற்றினிலே யீயவிது வொன்று
தூமமுட னேயொளி துவன்றது மயங்கிச்
சேமமொடு செம்பெனவே சித்தியுடன்றோற்றுந்
தாமமுற வேயெடுத்துத் தாம்பிரத்திலீவாய்.

இதில் பின்னொரு வேதை சொல்கின்றார்.



(இ-ள்) முன் பாட்டிற் குறித்தபடி எட்டு மாற்றான தங்கத்தை மற்றைச் சாதாரணத் தங்கத்தில் நூற்றிற் கொன்று கொடுத்தூத அது புகைச்சலுடனே யுருகிக் கட்டுவிட்டு அதிகப் பிரகாசத்தோடு சுகம் பொருந்திய செம்பைப்போற் பிரகாசிக்கும், இந்தச் செம்பைத் தாம் பிரத்திற் கொடுக்கக் கடவாய்.எ.று.

சூக்ஷும விளக்கம்:...இந்த விதமாக ஆகிய செம் பைத் தங்கச் செம்பென்று சொல்லப்படும். இது செம் பானாலும் தங்கத்திலு மேலான குணத்தை யுடையது. இதனைத் தாம்பிரத்திற் கொடுக்கக் கடவாய் என்ற வரையில் நிறுத்தி யிருப்பதில் மற்ற விவரங்களை யெல்லாம் அடுத்த பாட்டிற் கூறுவாரென வறிக. (48)

இதுவுமது

வெற்றியுடன் முந்நூற்றில் விள்வனிதி லொன்று
தற்றியுட னீந்திடவே தன்குணங்க ளற்று
மற்றியுட னேயிளகி மஞ்சள் வணமாகி
வற்றியுட னாணியுரை வண்மைபனி ரெண்டே.

.........

இதில் முற்குறித்த தங்கச் செம்பின் வேதை சொல் கின்றார்.

(இ.ள்) முன்பாட்டிற் சொன்ன தங்கச்செம்பை அதிற் சொன்னபடியே தாம்பிரத்தில் வெற்றி பொருந் தும்படியாக முந்நூற்றிற்கொன்று கொடுத்தூதினால் அந்தத் தாம்பிரத்தினுடைய தன்மையெல்லா நீங்கி வளப்பத்தோடு உருகி மஞ்சள் நிறத்தையுடையதாகிப் பனிரெண்டு மாற்றுடைய தங்கமாகி விடும் எ,று

சூட்சும விளக்கம்:...வெளிப்படை. (49)

வேறு செய்யுள்

நினை வோடு நெறிஇ யித மாகிடவே
கன லேகியே கட்கடை யேபுரன

சன மாம்பதின் மூன்றெனுஞ் சன்னிதனக்
கின மாகவே யிவ்வகை கண்டறி வாய்,

.........

இதுமுதல் மேற்படி கட்டின் வைத்தியஞ் சொல்கின்றார்.

(இ-ள்) நினைவினோடு மற்ற செய்கையின் வழிகளும் குறைவுபடும் படியாகவும் தேகத்திலுள்ள உஷ்ணமானது நீங்கி கடைக் கண்கள் புரண்டு கொண்டிருக்கும்படியாகவும் செய்கின்ற கூட்டமாகிய பதின்மூன்று வகைகளாயுள்ள சன்னிகளுக்கு இந்த லிங்கக் கட்டைச் சேர்க்கையாகப் பிரயோகிக்கும்படியான மார்க்கத்தைச் சொல்வேன். கேட்டுணர்வாயாக. எ-று.

சூட்சும விளக்கம்:— இந்த மருந்தை சன்னிநோய்களுக்குக் கொடுக்கும் மார்க்கத்தைச் சொல்கின்றேன் என்று இப்பாட்டில் சொல்லி முடிந்திருப்பதில் மற்ற விபரங்களையெல்லாம் அடுத்த பாட்டுமுதற் சொல்வாரெனக் கண்டுணர்க. 50

துஇவுமது

இய லிஞ்சியின் சாறதி லிம்மருந்தை
முய லாகவே மூன்றுரை முக்யமுற
இய லாகவே யீந்திடு லீயவது
பய மாகவே பறந்திடுஞ் சன்னிகளே,

.........

இதில் சன்னிக்கு மேற்படி மருந்தை உபயோகிக்கும் விதம் சொல்கின்றார்.

(இ-ள்) இந்த லிங்கக்கட்டைப் பொருத்தமாக இஞ்சிச் சாற்றிலே முக்கியமாக மூன்றுரை யுரைத்துப் பிரியத்தோடு கொடுக்க சன்னி வகைகளெல்லாம்பயந்து பறந்தோடி விடும், எ-று,



சூட்சும விளக்கம் :...வெளிப்படை. (51)

இதுவுமது

அலை சூழ்கட லாடை யுடுத்த வளின்
றல மீதுறை மாந்தரே தாமறிமின்
கல னேயறக் காட்டுங் கதியுடனே
நல மாவறிமி னாதன் றிருவுளமே,

---

இதில் இந்நூலின் பெருமை கூறுகின்றார்.

[இ-ள்[ கடவுளினுடைய திருவருளினாலே சொல்லப்பட்ட இந்த நூலானது குற்றமற நற்கதியைக் காட்டி வைக்கும், அலைமிகுந்த கடலையே தனக்கு ஆடையாக வுடைய பூமியில் தங்கிய மனிதர்களே! இவ்விஷயத்தை நலமாக]அறியக் கடவீர்கள்.எ—று.

சூட்சும விளக்கம்:—வெளிப்படை. (52)

முப்புக் குரு

கலி விருத்தம்

முப்பு வென்றது முப்பொரு ளிக்குரு
சப்பு வாகவே சாற்றினர் தண்மையோர்
செப்பு வேனிதைச் சித்தத் தடக்குவீர்
இப்பு வாக விறைபுவி மாந்தரே.

---

இதுமுதல் வேறுமுறை சொல்லத்தொடங்குகின்றார்.

[இ-ள்) முப்புவென்று சொல்லப்பட்டது மூன்று பொருளாகும்; இந்த முப்புக்குருவைப் பலபேர் தப்பாக பலவிதமாய்ச் சொல்லிக் கொண்டிருக்கின்றார்கள். இதனுடைய விபரத்தை நன்றாய்த் துலக்கமாகச் சொல்லுவேன், இந்தப்பூமியிலுள்ள மனிதர்களே! இவ்விஷயத்தை வெளிவிடாமல் மனதிலடக்கக் கடவீர்கள். எ-று.

சூட்சும விளக்கம்: வெளிப்படை. 53

சந்த விருத்தம்

முகிலோடவே முரண்டு திரிந்து
முளை யோடவே முரணியே
துகிர்போலவே படியில் விழுகுஞ்
சூழும் வர்ணஞ் சோதியே
அகில்போலவே யிரத்த வன்ன
மரம் போலவலி கெதியுறு
மகியாகவே வதனினிறை
யறிய வேயெடு பெரியவன்.

இதில் இம்முறைக்காம் ஓர் சரக்கும் நிறையும் சொல்கின்றார்.

(இ-ள்) மேகங்களோடு கலந்து திரிந்து புரண்டு மாறுபட்டு பவளம்போல பூமியில் விழுகப்பட்டது. அதனுடைய நிறம் மிகவும் பிரகாசம் பொருந்திய இரத்த வர்ணமாயிருக்கும். அது மிகவும் வலிபொருந்தியது, இப்பேர்ப்பட்ட சரக்கில் பெரியவன் என்ற அளவு மதிப்போடு எடுத்துக் கொள்ளக் கடவாய். எ-று.

சூட்சும விளக்கம்...மேற்கண்ட இலட்சணங்களையுடையது இந்திரகோபம் இதை இதற்கு முன் பல இடங்களில் வருணித் திருப்பதினாலுங் கண்டுணர்க, பெரியன் அளவு என்றதை பெரியவன்: கடவுள். கடவுள் ஒருவனாகையால் நிறை ஒன்றெென அறியவேண்டியது. இது பலமோ விராகனெடையோ என்பதைப் பின் கூறுவார். [54]

விபரம்

இந்திரகோபம் நிறை 1

கொச்சகக் கலிப்பா

சொல்லிடக்கேள் மாந்தர்களே சூட்சமுட னோர்சரக்கு
வெல்லுகின்ற மிகுயோகன் வெற்றியுற்றசுத்தனவன



நல்லியலாந் துருசதிலேநானொடுநீ நன்குறவே
இல்லியலின் வேதை யினி யியற்று வேன் மாந்தர்களே.

---

இதில் இம்முறைக்காம் மற்றொரு சரக்கும் நிறையுங் கூறுகின்றார்.

(இ-ள்.) இன்னமும் இம்முறைக்குச் சம்பந்தமான ஓர் சூட்சுமமாகிய சரக்கைச் சொல்லுவேன்.மனிதர்களே! கேட்பீர்களாக. வைத்தியத்தில் எப்பேர்ப்பட்ட வியாதிகளோடும் போர் பொருந்தியதும். மிகச் சுத்தமும் வீரத் தன்மையும் பொருந்தியதுமாகிய நல்ல இயல்பினையுடைய துருசு என்ற சரக்கிலே, நான் நீ யென்ற அளவு நலம் பொருந்தும்படியாக எடுத்துக்கொள்ளக் கடவீர்கள், இதனாலாகப்பட்ட வேதைகளைச்செய்யும்படியான யார்க்கத்தையும் சொல்வேன். கேட்பீர்களாக.எ-று.

சூட்சும விளக்கம்—துருசு சேர்ந்ததாகிய துருசுச் சுண்ணமானது இறந்த பிணத்தையும் எழுப்பும் வல்லபமுடைய தாகையால் இந்தத் துருசை மகா வல்லமை பொருந்தியதென்றும் வீரத்தன்மை யுடையதென்றும் சொன்னார். நான் - நீஎன்ற அளவு நான் என்பதும் ஒன்று. நீ யென்பதும் ஒன்று ஆக இரண்டாகையால் இதன் நிறை யிரண்டெனக் கொள்ள வேண்டியது.(55)

விபரம்

துருசு நிறை 2

இதுவுமது

முப்புவென்று வெகுகோடி முனையுட னலைகின்றார்
கைப்படுமோ லெகுவாகக் கத்தாவி னருளல்லால்
ஒப்புதலாய்ச் சித்தர்சொல்லை யுற்றுணர்ந் தறிந்ததற்பின்
கப்புடனே கரவெனவே காட்டிவைக்குங் கண்டறிநீ.

இதில்மூப்பூவின் பெருமை சொல்கின்றார்.

(இ—ள்) முப்பு மார்க்கத்தைத் தெரிந்து கொள்வதற்காக வெகுகோடி ஜனங்கள் முப்பு முப்பு வென்று சொல்லிக்கொண்டு ஆத்திரத்தோடு தெரியாமற்றிரிந் தலைகின்றார்கள். இந்த மார்க்கமானது எல்லாம் வல்ல கடவுளருளில்லாதுபோனால் இலேசில் கைவசமாகுமோ. மனம் பொருந்திச் சித்தர்களுடைய சாஸ்திரங்களைப் பொருத்தத்தோடு பார்த்துத் தெரிந்த பிற்பாடு அதிலுள்ள விஷயங்களெல்லாம் மறைவானதென்று வெட்ட வெளிச்சமாகக் காட்டிவைக்கும். ஆதலினாலே, நீ நன்றாய் ஆராய்ந்து பார்ககக் கடவாய்.எ—று.

சூட்சும விளக்கம்- இந்தப் பாட்டினால் இப்பூ மார்க்கமானது சாமானியமான தல்லவென்றும், கடவுளுடைய அருளிருந்தால் மட்டும் சித்திக்குமென்றும், சித்தர்களுடைய சாஸ்திரங்களிற் சொல்லியிருக்கப் பட்ட மார்க்கங்களெல்லாம் மாறுபாடானவைகளென்றும் இந்நூலின் மார்க்கமே கிரமமானதென்றும் குறிப்பித்தார், 56

இதுவுமது

கண்டறிவாய் மாணாக்கா கத்தாவி னருளாலே
விண்டுநீ யறிந்தாயே லிலக்குமியும் விலகாளே
மண்டலத்தி லுன்றனைப்போல் மாந்தரில்லைக்
காந்தமுடன்
தொண்டுசெய்துபார்ப்பாயாற் சுத்தமுடன்சித்தியிதே

---

இதிலும் மேற்படி பெருமையையே சொல்கின்றார்.

(இ...ள்] மாணாக்கனே! நான் சொல்லும்படியான விஷயங்களைக் கண்டறிந்து கொள்ளக்கடவாய். கடவுளுடைய கிருபாகடாட்சத்திலே நீ அந்தவிதம் அறிந்து கொண்டால் மகா லக்குமியும் உன்னைவிட்டு நீங்காதிருப்பாள். பூமியிலுனக்குச் சமமான மனிதர்களாயிருக்கிறார்கள். ஆதலினாலே நீ தெரிந்தவர்களுக்குக்



கிரமத்தோடு தொண்டு செய்து பார்ப்பாயானால் இந்த முறையாவது உனக்குப் பரிசுத்தமாகச் சித்தியாகும்,

சூட்சும விளக்கம்:—வெளிப்படை. (57)

திருப்புகழ்ச் சந்தவிருத்தம்

மிருமழைபோ லுறுபனியும்
வித்தத்து மத்தமுடன்
விரவினது சரவணியாய்
வெத்தித்து முத்தெனவே—விகுவாக
சகமிலுவர் தன்னினிடமா
தத்தித் தறிந்துளுக
தவளமுற விழுங்கியவர்
தட்டுத் தகுட்டெனவே—குழியாகி
மகியுடனே யுள்ளதனில்
மத்தித்து வித்தெனவே
வரைவரையா யட்டுளையிற்
கத்தித்துப் புற்றெனவே—கதிராக
பகுவகில முற்றகிலம்
பற்கத்துப் பக்தியுறப்
பகரரிய தைமாசி
பற்றிப் புறப்படுவன்—வெளியாக

இதில் இம்முறைக்காம் ஓர் சரக்கை வருணிக்கின்றார்.

(இ—ள்.) மிகுந்த மழையைப்போல் பனியானது பெய்யும்போது உண்டாகி வீரத்தோடு பொருந்தியிருக்கப்பட்டது, சரஞ்சரமாய்க் கூட்டமாக முத்துப்போன்று மிகுதியாய்ப் பூமியில் உவர்த்தானங்களிற்றோன்றி தாவித் துண்டு துண்டுகளாக முறிந்தும் புல் முதலியவைகள் உண்டு அவைகளின் அங்கமெல்லாங் குழி விழுந்து அக்குழிகளெல்லாம் நிறைந்து மிருக்கத்தக்கது, ரூபம் வரைவரையாகவும் உள்ளே துளைபொருந்திய தாகவுமுள்ளது, புற்றைப்போல வளர்ந்து கதிர்கதிராகச்

சொல்வதற் கரிதாகிய தை மாசி மாதங்களில் உண்டாகி வெளியாகத் தோன்றத்தக்கது எ—று.

சூட்சும விளக்கம்:—மேற்கண்ட இலட்சணங்களை யுடையது [பூநீறு] இதைமேற் சொல்லிய இலட்சணங் களின் குறிப்பினாலேயே யுணரப்பட்டது. இதைப்பற்றி இந்நூலிற் பல விடங்களிலும் சொல்லியிருப்பதனாலுங் கண்டுணர்க. இதன் நிறை முதலிய விபரங்களை அடுத்த பாட்டிற் கூறுவார். [58]

வண்ணச் சந்த விருத்தம்

இவணவிலு மருந்தி லாணை யெழிலுறவே கேளு நாளை
யியற்றுமதின் வேதை—தன்னையே
சுவமுறவே சொல்வன்கேளு சோதியுரை யேதுகோது
தோய்நிதியு மோது—நானுநீ
தவமுறவே நிறையதாகத் தாக்குமகா யோக்கியமாகச்
சாகரத் தின்றலைமை—யாயிது
மவுனமுற வேதைவேறு வழுத்தியதைக் கேளுநாளும்
வாதையுறு மாந்தர்—கும்மலே.

.........

இதில் முன் சொல்லிய சரக்கின் நிறை முதலியன சொல்கின்றார்.

(இ-ள்.) மேலே சொல்லிய பூநீறாகிய சரக்கில் செய்யும்படியான வேதையை அழகு பொருந்தும்படி யாகச் சொல்வேன் மகனே கேட்கக் கடவாய். கடவுளு டைய திருவாக்காகிய இந்த நூலிற் குற்றமென்பதேது. இந்தச் சரக்கில் சொல்லப்பட்ட நவநிதி. நான், நீ, என்ற அளவு எடுத்து யோக்கியமாகச் சேர்க்கக்கடவாய். இந்த முறையானது இந்த இலக்க சௌமிய சாகரத்தின் பல முறைகளுக்கும் மகா சிரேஷ்டம் பொருந்தியது.



மனிதர் கூட்டங்களே! இனிமேல் இதிற் சொல்லப்பட்ட மற்ற வேதைகளையும் கேட்கக் கடவீர்களாக எ—று.

சூக்ஷுமம விளக்கம் :—நவநிதியின் கணக்காவது ஒன்பது, நான் என்பது ஒன்று, நீ யென்பது ஒன்று ஆக இம்மூவகையானும் பதினொன்றாதலால் பூநீறு நிறை பதினொன்றென அறிய வேண்டியது. இந்த முப்புக்குரு வென்ற முறையைச் சொல்லத் தொடங்கியது முதல் மத்தியில் மத்தியில் அடிக்கடி அது மகா சிரேஷ்டம் பொருந்தியது. இதை நுட்பமாகப் பார்த்தறியக் கடவாய், இதைப்போல் எங்குங் கிடைக்காது என்று சொல்லிக் கொண்டு வருவதெல்லாம் இம்முறையின் உயர்வு நோக்கியேயாம். (59)

விபரம்

பூநீறு நிறை 11

வண்ணச் சந்த விருத்தம் (வேறு)

சிந்துந்துந் துந்துகளலை கந்துந்துந் துந்துகால்விசை
சிந்துஞ்சிந் துந்திவலைகள்-செறிவீசி
பந்துந்துஞ் சுழலின்வகையென வந்தந்தம் [மந்தமருகியே
விந்தந்தஞ் சொந்தம்வியனுடன்-விகடாகி
இந்தின்றன் சொந்தன்சுடரினால் வெந்துந் தந்தன் நிறமுடன்
விந்தங்கங்கங்கலையுடன்-மிதவாகி
எந்தந்தந்தன் றன் றிசைதனில் கந்தந்தங்கந்த [நிகாலொடு
தெந்தந்தஞ் செந்தஞ்சேர்குவன்-செயமாக

.........

இதில் மும்மறைக்காம் ஓர் சர்க்கரைச் சொல்கின் றார்.

[இ-ள்] சதித்திரத்தின் மத்தியில் தள்ளுகின்ற அலைகள் வைக்கோற்றிரனைப் போன்று கூட்டங்

கூட்டமாக காற்றினுடைய உக்கிரத்தினாலே நீர்த்துளிகள் பலவிடங்களிலுஞ் சிதறும்படியாக வீசி நெருங்கிப் பந்துகள் சுழல்வதுபோற் சுழன்று கொண்டிருக்குஞ் சமையத்திலுண்டாகி அழகாகவும் ஆச்சரியத்தோடும் வெள்ளை ரூபத்தைப் பெற்றதாகி சந்திரனுக்குச் சொந்தக்காரனான சூரியனுடைய பிரகாசத்தினால் சூடேறிக் கட்டுப்பட்டுத் திறம்பொருந்தியதாகப் பல சந்திரர்கள் திரிவதுபோல பிரகாசத்தோடு நீரில் மிதந்து தத்தித் தத்திப் பல திசைகளிலும் காற்றினாலேயே கூட்டங் கூட்டமாக வெற்றியோடு போய்ச் சேரப்பட்ட தன்மையை யுடையது எ-று.

சூக்ஷும விளக்கம் :—மேற்சொல்லிய குணங் குறிகளையுடையது (கடல் நுரை) இதை இதற்காண்டத்தில் வருணித் திருப்பதினாலுங் கண்டுணர்க. இதன் நிறை முதலியவைகளைப்பற்றி அடுத்தபாட்டிற் கூறுவாரென் றறிக. (60)

சந்த விருத்தம்

இங்கு நானவின் மருந்தானதி
லியல்பாயெடு நிறைகேள்
சங்கை யாகத்தாத் திரிபோலது
தயவாயெடு விபுலை
தங்கு மாந்தரே துங்கமாகவே
சரக்கொன்றது சொல்வேன்
தங்கு நாயகனின் பொங்கு வாய்மொழி
தப்பாதி ஃதப்பா.

---

இதில் முன்சொன்ன சரக்கின் நிறை முதலியன சொல்கின்றார்.

(இ-ள்) இவ்விடத்தில் நான் இப்பொழுது சொல்லி வந்த கடல் நுரையாகிய மருந்தில் மதிப்பாகப் பூமியின்



வகை அளவு பொருத்தத்தோடு எடுத்துக்கொள்ளக் கடவாய். பூமண்டலத்திற் றங்கிய மனிதர்களே! இனிமேல் இம்முறைக்குச் சேர்க்க வேண்டியதாகிய ஓர் சரக்கையும் சொல்வேன் கேட்டுணர்வீர்களாக. எங்கும் நிறைந்தவனாகிய கடவுளினது திருவாக்காகிய இந்த நூலின் முறையானது ஒருபோதும் தவறமாட்டாதெனவுற்றுணரக் கடவீர்கள் எ—று.

சூட்சும விளக்கம் :—பூமியின் வகை ஐந்தாகையால் இந்தக் கடல் நுரையின் அளவும் ஐந்தெனக் கொள்ள வேண்டியது. (61)

விபரம்

கடல் நுரை திறை 5

கலி விருத்தம்

முப்பு முப்பென முக்கோடி வாதிகள்
ஒப்பி யொப்பி யுரைக்கலுற் றாரரோ
செப்பு சூட்சத் தெரிந்துண ராமலே
மப்புக் கொண்டு மடைய ருளறு வார்.

இதில் முப்புவின் பெருமை சொல்கின்றார்.

(இ-ள்) மூன்றுகோடிக் கணக்கான இரசவாத வித்தைக்காரர் இருக்கும் மர்மத்தை யுணராமல் முப்பு முப்பு வென்று மனம் பொருந்திப் பல விதமாய்க் கண்டவாறு சொல்லிக்கொண்டு திரிவார்கள். மூடத் தன்மை யுடையவர்கள் புத்தி யின்மையால் வாய்க்கு வந்தபடி உளறுவார்கள் (தெரியா தென்றபடி)...எ-று.

சூட்சும விளக்கம் : இவர் இப்படிச் சொன்னதால் மற்றவர்கள் இந்த முப்புக் குரு சம்பந்தமாகச் சொல்லியவைகளெல்லாம் சரியானதல்ல வென்றும் இந்த நூலிற் சொல்லப்பட்டதுதான் சரியான வழியென்றும் ஏற்படுகின்றது.

இதுவுமது

முன்புரைத்த முனிகள் ரிஷிகளும்
நண்புரை யொடு நன்குறைச் சொல்லிலார்
பண்புஞ் இதும் படிற்றுரை யானதைக்
நென்பு டன்றெளி மாந்தரே செப்புவேன்.

இதிலும் இம்முறையின் பெருமை கூறுகின்றார்.

[இ-ள்.] இதற்குமுன் இந்த முறையைப் பற்றிச் சொல்லிய இருடியர்க ளெல்லாம் மெய் வார்த்தையாக உள்ளபடி சொன்னார்களில்லை. அவர்கள் மனமொத்து வஞ்சகமாகவும் பொய்யாகவும் சொல்லி வைத்தமார்க்கங் களை மெய்யென்று நம்பி வீணே கெட்டலைந்து விடாமல் நன்றாக ஆராய்ந்து தெளிந்து இந்நூலின் மார்க்கத்தையே நம்பிச் செய்யக்கடவீர்கள். மனிதர் களே! இன்னமுஞ் சொல்வேன் கேட்கக் கடவீர்களாக எ—று.

சூட்சம விளக்கம்:—வெளிப்படை. (63)

இதுவுமது

அளவி லானுரை யானவிந் நூலதை
வளமை யாகவழுத்தறி யார்சித்தர்
களமை யாகக் கவனம தாகவே
செழுமை யாகச் செகத்துறு மாந்தரே.

—o—

இதில் இந்நூற் பெருமை சொல்கின்றார்.

(இ-ள்) பூலோகத்திற் பொருந்திய மனிதர்களே! அளவிடற் கரிதாகிய திருவிளை யாட்டையுடைய கடவுளுடைய அழகிய வாக்கினாலே சொல்லப்பட்டதாகிய இந்த நூலின் உள்மர்மத்தை சித்தர்களும் கூட அறிந்து சொல்ல மாட்டார்கள். இத்தகைய நூலினது இரகசி



யத்தைத் தெரிந்தது போல சிலர் கள்ளத்தனம் பொருந்தினவர்களாகி. எ—று.

சூட்சும விளக்கம்:—இந்தப் பாட்டினாலும் அடுத்த பாட்டினாலும் இந்த நூலின் மர்மத்தைச் சித்தர்களும் அறியமாட்டார்கள் அப்படி யிருக்கச் சிலர் கள்ளத்தனமாகத் தெரிந்ததுபோல நடிப்பார்கள் என்று சொல்லி முடிக்கின்றார். இச்செய்யுளும் அடுத்த செய்யுளும் குளகமாதலால், கள்ளத்தனம் பொருந்தினவர்களாகி என்ற வரையின் நிறுத்தி யிருக்கின்றார். மற்றவைகளை அடுத்த பாட்டிற் கூறுவார். (64)

இதுவுமது

சித்தர் போல சிரத்திற் சடையொடு
மெத்த வேடமு மெய்யிற் றரித்துடன்
கத்து வார்சவு மியக் கருவெனக்
கத்த னாணை கருதிடு மாக்களே.

———

இதிலும் நூற்பெருமையையே சொல்கின்றார்.

(இ-ள்) முன்பாட்டிற் குறித்தபடியே கள்ளத்தனம் பொருந்தினவர்களாகிச் சித்தர்களைப்போல சிரசில் சடையை வளர்த்துக் கொண்டு காஷாய முதலிய தவ வேடங்களைத் தேகத்திற்றாங்கி இதுதான் இலக்க சௌமிய சாகரத்தினுடைய உண்மையென்று மாறுபாடான விஷயங்களைச் சொல்லிப் பிதற்றுவார்கள். அந்த வார்த்தைகளை யெப்பொழுதும் நம்பாதீர்கள். மனிதர்களே! நான் சொல்வதை நன்றாய்க் கருதிப் பாருங்கள். எ...று.

சூட்சும விளக்கம்:—இவர் இப்படிச் சொன்னதினால் பலபேர் பலவிதமாகச் சொல்வார்கள். ஆனதால் அவைகளை யெல்லாம் நம்மால் முறையாகக் குருவினிடத்தில் வழிவழியே கற்றுணர்ந்தவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டுமென்ப தாயிற்று. (65)

இதுவுமது

மண்ணி லுற்ற மதியொளி விந்தது
தண்ணீ ருற்ற தயங்கொளி விந்தது
கண்ணி ரண்டு கடிந்தது சேர்ந்திடில்
எண்ணு மெண்ணமெல் லாமெழின் மாஷையே.

இதில் இதற்குமுன் சொல்லிய இரண்டு சரக்குகளின் பெருமை சொல்கின்றார்.

(இ-ன்) மண்ணிலே பொருந்திய பிரகாசமுள்ள நாதமும், ஜலத்திலே பொருந்திய மிகுந்த ஒளியையுடைய நாதமும் ஆகிய இவ்விரண்டும் பொருந்தி சேர்ந்தால் நினைக்கின்ற நினைப்பெல்லாம் பொன்னாகும். எ—று.

சூக்ஷம விளக்கம்:— மண்ணிலே பொருந்திய பிரகாசமுள்ள நாதமானது (பூநீறு) ஜலத்திலே பொருந்திய மிகுந்த ஒளியையுடைய நாதமாவது (கடல்நுரை) இவ்விரண்டு சரக்கும் இதற்குமுன் இம்முறையிற் சேர்ப்பதற்காகச் சொல்லப்பட்டிருக்கின்றன. பஞ்ச பூதங்களுள் பிருதிவாகிய மண்ணும், அப்புவாகிய ஜலமும் பிரதான மாகையாலும் எவ்விஷயங்களும் இவ்விரண்டின் சகாயத்தினாலேயே முடியவேண்டிய தாகையாலும் இவ்வளவு சிரேஷ்டம் பொருந்தி இவ்விரண்டின்சம்பந்தமாயுள்ள பூநீறும், கடல்நுரையும் சேர்ந்திருப்பதினால் இம்முப்புக் குருவாகிய முறையினால் பொன்னாவதற்கென்ன தடையிருக்கின்றதென்று சொல்வதற்குப் பதிலாக இவ்விரண்டுஞ் சேர்ந்தால் எண்ணுமெண்ணமெல்லா மெழின் மாஷையே யென்றார். இதைத் தவிரவும் மற்றவர்கள் இந்த முப்புக்குரு வழியிற் சொன்னதெல்லாம் அவ்வளவு சரியானதல்ல வென்பதைக் காட்டுவதற்கரியவும் மேற்கண்ட இரண்டு சரக்குகளின்



உயர்ந்த தன்மையை யெடுத்துச் சொன்னாரெனவும் ஊகிக்கலாம். (66)

கொச்சகக் கலிப்பா

மிகுமா வலிமையுற்ற வெற்றியோ னென்னுமகா
தகுமா வெவட்சாரந் தன்னி னிறை கேளு
தொகையி லடங்காச் சோதியெனச் சூட்சமது
சகமி லுறைந்த தனுசரே தானறிமின்.

இதில் இம்முறைக்காம் மற்றொரு சரக்கும் நிறையுஞ் சொல்கின்றார்.

(இ-ன்) வைத்திய முறைகளிலே மிகவும் வல்லமையைச் செய்யப்பட்டதென்று சொல்வதாகிய மகாவீரம் பொருந்தியதான எவட்சாரமென்று சொல்லப்படுவதாகிய சரக்கி லடங்காச் சோதியென்று சொல்லப்பட்ட கடவுளினளவு எடுத்துக் கொள்ளக்கடவீர்கள். பூமியிலுள்ள மனிதர்களே! இன்னமுஞ் சொல்லப்பட்டவைகளை உற்றுணர்வீர்களாக. எ—று.

சூக்ஷம விளக்கம்:— கடவுள் ஒருவனாகையால் எவட்சாரத்தி னளவு ஒன்றெனக் கொள்ள வேண்டியது. (67

விபரம்

எவட்சாரம் நிறை 1

இதுவுமது

அலந்தை தனிலே யற்புதமாய்ப் பொற்புடனே
கலந்தே யமுங்கும் வண்டலுறுங் கழியதனில்
இலந்தையதன் மீதி லிரசிதத் துளிபோன்று
உலர்ந்த மருந்தி லோதிடக்கே ணிறையதுவே.

இதில் வேறொரு சரக்குச் சொல்கின்றார்.

(இ-ள்) குளங்களிலே அடியில் வண்டலோடு பொருந்திய கழியின் மத்தியிற் கலந்து ஆச்சரியத்தோடு அழகாய் ஆழ்ந்து கொண்டிருக்கும் அந்தக் குளங்களிலேயே நீர் வறண்ட காலத்தில் அதன்மீது வெள்ளித் துளிகள் போன்று புள்ளி புள்ளியாகப் பிரகாசித்துக் காய்ந்து கொண்டிருக்கும் இப்பேர்ப்பட்ட ஓர் சரக்கில் எடுக்கவேண்டிய நிறையைச் சொல்வேன் கேட்பாயாக. எ...று.

சூட்சும விளக்கம்:—மேற்கண்டபடி குளங்களில் வண்டல் சேர்ந்த கழியோடு கலந்து ஆழ்ந்து நீர் வறண்ட காலத்தில் தன்மீது வெள்ளித்துளிகள்போன்று பிரகாசித்துக் கொண்டிருப்பது [வெள்ளி நிமிளை] இதை முதற்காண்டத்தில் வருணித்திருப்பதினாலுங் காணலாம். இதன் அளவை அடுத்த பாட்டிற் சொல்லுவார். (68)

இதுவுமது

வெற்றி யுடனே விளங்கிய முரசின்வகை
உத்த முடனே யெடுத்திடு மொளிதிகழப்
பத்தி யுடனே படியுறு மாந்தர்களே
மத்தமுட னேவேறு மருந்து வழுத்துவனே.

......

இதில் முன்சொன்ன சரக்கின் நிறை சொல்கின்றார்

(இ-ள்) முன்பாட்டிற் சொன்ன வெள்ளி நிமிளை யென்ற சரக்கில் வீரத்தோடு பிரகாசிக்கின்ற முரசைத் தலைமையாகவுடைய வாத்தியங்களினளவு உத்தமமாக எடுக்கக்கடவீர்கள். பூமியிலுள்ள மனிதர்களே! சிநேகத்தோடு இனி வேறோரு மருந்தையுஞ் சொல்வேன் கேட்பீர்களாக. எ—று.



சூட்சம விளக்கம்:- வாத்தியங்களின் வகை பதினெட்டாகையால் இங்கே சொன்ன [வெள்ளி நிமிளையின்] அளவு பதினெட்டெனக் கொள்ள வேண்டியது. [69]

வேறு

வெள்ளி நிமிளை 18

சந்த விருத்தம்

திகழக்கதிர் பிரவையதன் செகமெய்திடு மருந்து
உகழத்தொடு மூவருற்றன னுயர்பெற்றிடும் வலிமை
செகமுற்றமெய் சிவப்பானது செறியுற்றது லவணம்
மகிழ்பெற்றதி னிறையானது மதியின்கதிர் மாக்காள்.

......

இதில் ஓர் சரக்கும் நிறையும் சொல்கின்றார்,

(இ-ள்) தன் மீது மிகுந்த பிரகாசமானது விளங்க பூலோகத்தவர்களெல்லாங் கொண்டாடத்தக்கதான ஓர் மருந்து, அதின் குணம் நேயத்தோடு உவர்த் தன்னை பொருந்தியிருக்கும். இது மகா வல்லமை பொருந்தியது. அதினுடைய ரூபமானது சிவப்பாயிருக்கும். இதை உப்புவர்க்கங்களில் ஒன்றாகச் சொல்வார்கள். இத்தன்மையான குணம்பொருந்திய சரக்கில் சந்தோஷத்தோடு சந்திரர் சூரியர் என்ற அளவு எடுத்துக்கொள்ளக்கடவாய். எ...று.

சூட்சமவிளக்கம்:- மேற்சொல்லிய இலட்சணங்களையுடையது இந்துப்புச் சந்திரர், சூரியர் அளவு என்றதனால் சந்திரன் ஒன்று, சூரியன் ஒன்று ஆக இரண்டாகையால் இந்த இந்துப்பின் நிறை இரண்டென அறிய வேண்டியது. (70)

விபரம்

இந்துப்பு நிறை 2

சந்த விருத்தம் வேறு

கிடுகிடு வெனவே கிளறிடத் தசைகள் கிழியாகத்
தொடுதொடு தொடெனச் சுடரொளி திகழச் சுழியாகப்

படிமனு திரளைப் பருகிட வயிரைப் பரமேக
வெடியிறும் லவணந் தனினிறையதனை வின்வேனே.

.........

இதில் ஓர் சரக்கை வருணிக்கின்றார்.

(இ-) கிடுகிடுவென்னுஞ் சப்தத்தை யுண்டாக்கிப் பூவுலகத்திலுள்ள மனிதர்களுடைய தசைகள் கிழியும்படியாக தொடு தொடு தொடு என்று ஆர்ப்பரித்துப் பிரகாசமானது அதிகரிக்கச்சுழித்துச் சுழித்து மேற்படி ஜனங்களுடைய உயிர்கள் அந்தரத்திற் செல்லும்படியாக வெடிக்கின்ற ஓர் மருந்தையுண்டாக்குகின்ற ஓர் உப்பில் எடுக்க வேண்டிய அளவைச் செல்வேன் கேட்பாயாக...எ-று

சூக்ஷ்ம விளக்கம்...மேற்கண்ட குணங்களோடு வெடிக்கின்ற ஓர் மருந்தாவது வெடிமருந்து. இதை யுண்டாக்குகின்ற ஓர் உப்பாவது (வெடியுப்பு) ஆகையால் மேற்செல்லிய சரக்கு வெடியுப்பெனக் கொள்ள வேண்டியது, இதன் நிறை முதலியன அடுத்தபாட்டிற் கூறுவார். (71)

கலி விருத்தம்

கெட்டி யுற்றிடக் கேட்டு வீர் நிறை
இட்ட மாக வெடுந்திரி யானதே
மட்டி மாந்தரே கண்டறி வாமரோ
பொட்ட லாய்முப்பின் பிடிது பொற்புடன்.

.........

இதில் மேற்செல்லிய சரக்கின் நிறை சொல்கின்றார்.

(இ-ள்) மனிதர்களே மிகவும் உறுதியாகக் கேட்கக் கடவீர்கள்! மேற்கண்ட வெடியுப்பென்னுஞ் சரக்கில் சிநேகத்தோடு மூன்று என்ற அளவு எடுத்துக் கொள்ளக் கடவீர்கள். மடத்தனம் பொருந்திய மனிதர்களே!



இந்தச் சரக்கே முப்புவென்ற முறைக்குப் பெருமையைச் செய்வதாகும். ஆதலினாலே. இதன் விசேஷத்தைத் தெரிந்துகொள்ளக் கடவீர்களாக எ.று

சூக்ஷ்ம விளக்கம்:...முப்புவென்ற முறைக்கு இந்த வெடியுப்பே பெருமையைச் செய்வதாகுமெனவே இம்முறைக்காகச் சொல்லிவந்த மற்ற சரக்குகளிலெல்லாம் இது மிகவும் சிரேஷ்டம் பொருந்திய தென்பது தானே விளங்குகின்றது. (72)

விபரம்

வெடியுப்பு நிறை 3

இதுவுமது

பாள கத்திய பண்பு செறிகின்ற
தாள கத்தி னிறையது தானது
சாள கத்திடத் தாக்கிடு வீர் திரி
கேள கத்தின் விபுலையின் மாந்தரே.

———

இதில் ஓர் சரக்கு நிறையும் கூறுகின்றார்.

(இ...ள்)பூமியிலுள்ள மிகவும் அகத்தியமான சிநேகம் பொருந்திய தாளகமென்று சொல்லப்பட்ட சரக்கில் கேடு நீங்கும்படியாக மூன்று என்ற அளவு எடுத்துச் சேர்த்துக்கொள்ளக் கடவீர்களாக...எ.று

சூட்சும விளக்கம்...வெளிப்படை. 73

விபரம்

தாளகம் நிறை 3

இதுவுமது

குன்றி லுற்றிடுங் கொற்றவ ணற்றவன்
நன்றி ரானகல் நாரத னினிறை
வென்றி யாக விளம்புவ னோடு நீர்
கண்டறிந்திடுங் காசினி மாக்களே.

.........

இதில் மற்றொரு சரக்கும் நிறையும் கூறுகின்றார்.

(இ.ள்) மலைகளினிடமாகப் பொருந்தியதும் நல்ல தவம் பொருந்தியதுமாகிய கல்நார் என்ற சன்ற சரக்கில் எடுக்க வேண்டிய அளவைச் சொல்லேன் மண்டலத்து மாந்தர்களே அறியக் கடவீர்கள். மேற்படி சரக்கில் சொல்லப்பட்டவனோடு நீர் என்ற அளவு எடுக்கவேண்டும்—எ.று

சூக்ஷ்ம விளக்கம்:—சொல்லப்பட்டவன் ஒருவன் நீர் என்பவன் ஒருவன் ஆக இருவராகையால் கணக்கில் இரண்டாச்சு. ஆனதால் [கல்நார் அளவு இரண்டு) எனக்கொள்க.

விபரம்

கல்நார் நிறை 2

வேறு செய்யுள்

கல ருண்டு கதித்த வறலதிலே
மல ருண்டமெய் வானமின் மீனதுபோல்
அலர் கின்றவன் றன்னி னிறையதுகேள்
சலர் கின்றிடத் தாக்கிடு வாயேகம்.

.........

இதில் வேறொரு சரக்கும் நிறையுங் கூறுகின்றார்.

(இ-ள்) வெப்பத்தினாலே காய்ந்து மிகக் கொதிப்புற்ற கருமணல் நிறைந்திருக்கும்படியான காட்டகமாகிய தானத்திலே யுள்ள கள்ளி மரத்தினது பூவினிடத்தேயுள்ள தேனைக் குடித்துத் தேகமானது ஆகாயத்திற்றோன்றும் நக்ஷத்திரக் கூட்டங்களைப் போன்றிருப்பதான ஓர் ஜெந்துவில் ஒன்று என்ற அளவு எடுத்துக்கொள்ளக்கடவாய்...எ-று.

சூக்ஷ்ம விளக்கம்:—மேற்சொல்லிய இலட்சணங்களை யுடைய ஜெந்துவானது [குருவண்டு] இதைப் பற்றி முதற்காண்டத்திற் சொல்லி யிருப்பதினாலுங் காண்க.
[75]



விபரம்

குருவண்டு நிறை 1

நொண்டிச் சிந்து

தமளவெண் குயிலதுவும்...கும்பலொடு
தத்தியுடனெழும்பியே யத்தியிற்சென்று
கவளமாங் கமலமதை—விழுங்கியே
ககளிடை செறிந்தது கடபுடெனச்
சவளமா யாக்கிரமித் தே...ஒன்றோடொன்று
சத்தமுறக்கத்தியது சுற்றியே சுற்றி
மவளமாத் தங்கிடவே...சிகிபோல
மன்னிமன்னி மின்னலுடன் கொன்னியேயது

.........

இதிற் பின் சொல்லப்போகும் ஓர் சரக்குண்டாகும் விதத்தைச் சொல்கின்றார்.

[இ.ள்] மிகுந்த வெள்ளைநிறம் பொருந்திய அன்னங்கள் கூட்டத்தோடு இருந்த இடத்தைவிட்டுத்தாவிப் பறந்து சமுந்திரத்திரத்திற் சென்று அங்கே படர்ந்திருக்கும்படியாகிய தாமரையின் சத்துக்களைக் கவளங்கவளமாக வாயினால் விழுங்கிவிட்டு அப்படியேமேலே கிளம்பி ஆகாயத்தில் நெருங்கிப் பலத்தோடு ஒன்றோடொன்று கடபுட வென்று தாக்கிகொண்டு இனிய நாதமானது உண்டாகும் படியாகக் கத்தி அந்த அன்னக் கூட்டங்கள் சுற்றிப்பறந்து தங்கும்போது அப்பக்ஷிகளின் மலங்கள் அக்கினியைப்போல பொருந்தி மின்னலைச் செய்து வனளவு பெருந்தின வைகளாகி...எ.று

சூக்ஷ்மவிளக்கம்.... அன்னங்கள் சமுத்திரத்திற் சென்று தாமரைச் சத்துக்களை விழுங்கி மேலே பறக்கவென்றதினாலே சமுத்திரத்திலும் ஓர் விதத்தாமரை உண்டென்பதாக ஏற்படுகிறது. இப்பாட்டில் கீழே வரப்

போகும் சரக்கு உண்டாவதற்குக் காரணமாகிய அன்னங்களை வருணித்தார். இனிமற்ற விபரங்கள அடுத்த பாட்டிற் கூறுவார். இப்பாட்டின் கருத்தினால் பின் வரப்போகும் சரக்கு இந்த அன்னங்களினுடைய மலத்திலிருந் துண்டாகுமென ஏற்படுகிறது. (76)

இதுவுமது

படபட படப டென...விண்முகடும்
படியொடு பிளவது பட்டித்தலை போற்
கெடியுட னாக்கிரமிந்துக்...கிளரொளி
கிடுகிடு தொடுதொடு கடகடென
இடியென விழுஞ்சிகியா...மத்தரையி
லேற்றிடவே யிரும்பெனச் சுருண்டிடுவோன்
கொடியவன் மாபாவி...கூவிடத்திற்
கோட்டியுன் வேதையுற்ற நாட்டியனென்பான்,

......

இதில் மூற்பாட்டிற் சொன்ன அன்னத்திற்சரக்குண்டாகும் விதத்தைச் சொல்கின்றார்.

சூக்ஷ்ம விளக்கம்:—இதனால் அன்னப் பக்ஷிகளினுடைய மலமானது ஆகாயத்திலிருந்து கொதிப்போடு அக்கினியைப்போன்ற நிறத்தினை யுடையதாய் வெப்பம் பொருந்திய தரையில் விழுந்து அது இரும்பைப் போல கெட்டிப்பட்டு ஆங்காங்கே சுருண்டு கொண்டிருக்கும் என்றேற் படுகிறது. இப்பேர்ப்பட்ட இலட்சணங்களை யுடையது (பொன்னம்பர்) என்று சொல்லப் படும். இந்தப் பொன்னம்பர் தான் மேற்சொன்னபடி அன்னப் பக்ஷிகளின் மலத்தினாலுண்டாகப்பட்டது. இவ்விஷயத்தைப் பல அனுபவமுள்ள மகான்களிடத்திற் கேட்டுத் தெரிந்திருக்கின்றோம் இதைப் பலர் வேறு விதமாகவும் சொல்லுவர். இது வெப்பம் பொருந்திய தரையிலுண்டாவதால் கொடுஞ் செய்கையை யுடையதென்றும், பல ஆச்சரியமான வேலைகளைச் செய்யப்



பட்ட தாகையால் வேதையுற்ற நாட்டிய னென்றுங் கூறினார். இதன் நிறை முதலியவைகளை அடுத்த பாட்டிற் கூறுவார். (77)

சந்த விருத்தம்

இங்குநவில் கின்றவெழில் பொங்கிய மருந்திற்
சங்கையுட னேநிறையச் சாற்றிடக்கே ளன்றே
பொங்குகட லின்னுரையைப் பொற்புடனெடுப்பாய்
தங்கிய தரையதனிற் சார்ந்திருந்த காளாய்.

.........

இதில் முன்சொன்ன பொன்னம்பரின் நிறை சொல்கின்றார்.

(இ-ள்) மேலே சொல்லிய அழகு மிகுந்ததான பொன்னம்பர் என்று சொல்லப் பட்ட மருந்தில் மதிப்பாக எடுக்கவேண்டிய நிறையைச் சொல்வேன் கேட்பாயாக. அதாவது நிலைபெற்றபூமியிற் றங்கியிருந்து மகனே! இம்முறைக்காக முன் சொல்லியிருக்கப் பட்டகடல்நுரை எவ்வளவோ அவ்வளவு எடுத்துக்கொள்வாய்—எ-று.

சூக்ஷ்ம விளக்கம்:...முன் கடல்நுரை அளவு ஐந்து ஆகையால் (பொன்னம்பரிலும் நிறை ஐந்து) எடுத்துக் கொள்ள வேண்டியது. (78)

விபரம்

| | |
|---|---|
| பொன்னம்பர் நிறை | 5 |

இதுவுமது

இங்குநவி லோர்மருந் தியம்பவகை கேண்மோ
கங்கையெனும் பேரினோடு காட்டுரக ரொன்றே
நன்குற நகர்கடை நவில்பனியோர் மாதம்
சங்கையுடன் சாறதனிற் றாட்டிடுநா ளொன்றே

.........

இதுமுதலிரண்டு பாட்டுகளால் இந்தப் பொன்னம் பரைச் செய்யவேண்டிய விதத்தைச் சொல்கின்றார்.

(இ-ள்) மேலே சொல்லிய பொன்னம்பரை இனி மேற் செய்யவேண்டியதான மார்க்கத்தையுஞ்செல்வேன் கேட்பீர்களாக. கங்கை-யென்ற பெயரின் முதலெழுத் தோடு தெரியும்படியான ரகரவரியின் முதலெழுத்தை யும், நலம் பொருந்தும்படியாக நகரத்தின் கடையெழுத் தையும், சொல்லப்பட்ட பனிபெய்யும்படியான மாதங் களில முதல் மாதத்தின் பெயரையும் சேர்த்து அதனால மைந்த பெயருள்ள ஒர் பச்சிலையின் சாற்றில் மேற் கண்ட பொன்னம்பரை ஒரு நாள்வரை மதிப்போடு ஊறப்போடக் கடவீர்கள்...எ-று.

சூட்சும விளக்கம்:...கங்கையென்ற பெயரின் முத லெழுத்தாது (க) ரகரவரியின் முதலெழுத்தாவது [ர] நகரத்தின் கடையெழுத்தாவது (ந்) பனிபெய்யும் படி யான மாதங்களாவது - தை மாசி - இவைகளில் முதல் மாதமாவது (தை) ஆக இந்நான்கையும் சேர்க்க (கரந்தை) யென்றானது. அதைச் (சிவகரந்தை) யென அறிய வேண்டியது, இந்தச் சிவகரந்தைச் சாற்றிலேயே மேற்படி பொன்னம்பரைப்போட்டு ஒரு நாள்வரை ஊற வைக்க வேண்டும் ()

இதுவுமது

தாட்டிடு மருந்ததைத் தயங்கிட வெடுத்து
வாட்டமுட னேயரத்தால் வன்புட னிழைத்தே
கூட்டிடுவாய் முன்மருந்திற் கூறுமவ்விதம்போல்
நாட்டிலிதைப் போலவு நயப்படுத லுண்டே

— —

இதில்முன் ஊறவைத்த பொன்னம்பரைப் பின் செய்யவேண்டியவிதஞ்சொல்கின்றார்.



[இ-ள்] முன் சொன்னபடி சிவகரந்தைச் சாற்றில் ஒரு நாள்வரை ஊறப்போட்ட பொன்னம்பரைப் பிர காசிக்கும்படியாக வெடுத்து அழகுடனே ஒரு அரத்தால் ரன்றாய் அராவி முன் மருந்துகளோடு சேர்த்துக் கொள் ளக் கடவாய். இந்த நாட்டினிடமாக இதைப்போலும் நலஞ் செய்வதான வேறு சரக்குமுண்டோ...எ-று

சூக்ஷூம விளக்கம்:...இம்பாட்டில் முன் மருந்திற் கூறுமவ்விதம்போற் கூட்டிடு வாயென்றதனால், இந்தப் பொன்னம்பரை அராவின பிற்பாடே முன் சொன்னபடி கடல்நுரை அளவு எடுத்துக் கொள்ள வேண்டுமென்ப தாயிற்று. ஆதலின் அந்தப்படி செய்து கொள்க. [80]

இதுவுமது

முப்புவென்று முன்னுளவர் மூடிவைத்த இதைச்
செப்பிவிட்டேன் சிந்தைதனிற் றேர்ந்தறிவாய் காளை
அப்பனோடு பிள்ளை கட் கறைந்திடுதல் தீது
ஒப்பிடவே தொண்டுசெய்தா லோதிடுவாய் காளாய்.

இதில் இம்முறையின்பெருமை சொல்கின்றார்.

[இள்] ஆதி காலத்திலேயுள்ள சித்தர் முதலியோர் முப்புவென்று சொல்லிக்கொண்டு வெளிவிடாமல் மறைத்துவைத்ததாகிய விஷயத்தை திறந்து சொல்லி விட்டேன். மகனே உன் புத்தியில் இதை நன்றாய் ஆராய்ச்சிசெய்து அறிந்துகொள்ளக் கடவாய். இந்த முறையைத் தகப்பனானாலும் பிள்ளையானாலும் அவர் களுக்கும் வெளிப்படையாகச்சொல்லிவிட்டால் தீதாகும். எவரானாலும் மனம் பொருந்தும்படியாக உனக்குத் தொண்டு செய்தால்மாத்திரம் சொல்லக்கடாய்...எ-று.

சூக்ஷூம விளக்கம்:—வெளிப்படை. (81)

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

இவணி லுரைத்த சரக்கனைத்து
மியல்பாய் விராக னிறையாக்கி

சென்னை-600 008

நவமாய்க் கல்வத் துட்படுத்தி
    நாயனருளால் நவில்வேன் யான்
குவலைக் கருவாங் குருமூலிச்
    சாற்றாற் குமுற வரைத்திடுவாய்
நவமே பெருக முதல்வளர
    நலிவே யகல நாளொன்றே.

---

இதுமுதல் முன்சொன்ன சரக்கிற்கொல்லாம் அளவின்ன தென்பதையும் செய்முறையும் கூறுகின்றார்.

(இ-ள்) இம்முறைக்காக இதுவரை இங்கு சொல்லி வந்த சரக்கிற்கெல்லாம் நிறையை விராகனெடைக் கணக்காக்கி எல்லாச் சரக்குகளையும் அழகாகக் கல்வத் திலுள்ளேபோட்டு இன்னமும் கடவுளுடைய கிருபை யினாற் சொல்வேன் கேட்பாயாக; எல்லாவற்றிற்குங் கருவாயிருக்கப்பட்ட குருமூலியென்று சொல்லப்பட்ட திருநூற்றுப்பச்சை யிலைச் சாற்றை அந்தச் சரக்கு களுடன் விட்டு வனப்பு மிகும்படியாகவும் செல்வம் பெருகும்படியாகவும் துன்பங்க ளெல்லாம் நீங்கும்படி யாகவும் ஒருநாள் மட்டும் அரைக்கக்கடவாய்—எ-று.

சூக்ஷ்ம விளக்கம்:—இதிற் சொல்லிவந்த சரக்கு களுக்கெல்லாம் நிறைநிறையென்று மட்டும் சொல்லி அது இன்னதென்று காட்டாமல் வந்தபோதிலும் இந்த இடத்தில் அவைகளெல்லாம் விராகனெடைக் கணக் கென்பதை நிச்சயமாகக் காட்டிவிட்டார். ஆதலினால் முற்கூறிவந்த சரக்குகளையெல்லாம் விராகனெடைக் கணக் காக்கிக்கொள்ளவேண்டியது இதில் வனப்பு மிகும்படி யாகவும், செல்வம் பெருகும்படியாகவும், துன்பங்க ளெல்லா நீங்கும்படியாகவும் அரைக்கக்கடவாய் என்ற தனால் இந்த முப்புக் குருவென்னு முறையானது மிக்க நலத்தைச் செய்யுமென்பது தானே புலப்படு கின்றது. முன் சொல்லிவந்த சரக்குகளெல்லாம் ஆங்



காகே தனித்தனி யிருப்பதால் அவைகள் பார்ப்பவர் களுக்கு மயக்கத்தைக் கொடுப்பனவாகுமாதலினாலும், இந்த இடத்தில் நிறையின்னதென்பதை விளக்கி யிருப் பதினாலும் இதுமுதல் செய்முறை தொடங்குவதாலும் மேற்படி சரக்குடன் ஓரிடத்திற் குறிக்கின்றோம். இதைப் பார்த்துச் செய்பவர்கள் மயக்கமின்றித் தெளிந்து கொள்வார்களாக. [82]

எல்லாச் சரக்குகளின் விபரம்.

| | | |
|---|---|---|
| 1 | இந்திரகோபம் விராகனெடை | 1— 3.5 |
| 2 | துருக விராகனெடை | 2—7.00 |
| 3 | பூநீறு விராகனெடை | 11—38.5 |
| 4 | களல்நுரை விராகனெடை | 5—17.6 |
| 5 | எவட்சாரம் விராகனெடை | 1— 3.5 |
| 6 | வெள்ளிநிமிளை விராகனெடை | 18—63.00 |
| 7 | இந்துப்பு விராகனெகை | 2—7.00 |
| 8 | வெடியுப்பு விராகனெடை | 3—10.5 |
| 9. | தாளகம் விராகனெடை | 3—10.5 |
| 10. | கல்நார் விராகனெடை | 2—7.00 |
| 11. | குருவண்டு விராகனெடை | 1— 3.5 |
| 12. | பொன்னம்பர் விராகனெடை | 5—17.5 |
| | ஆக 54 விராகனெடை | |
| | | 179 கிராம் |

இதுவுமது

அரைத்த மருந்தி னருமைதனை
    யாதி யறிவான் வேறுண்டோ
கரைத்த லுடனே கலகலெனக்
    கரிபோற் கதித்த மலருடையோன்
விரைத்த லுடைய சாறதனில்
    மேவி யரைப்பாய் தினமொன்று
பரத்தி னருளால் மறுவேதை
    பகரக் கேண்மின் படிமாக்காள்,

......

இதில் வேறு ஒரு அரைப்புக் கூறுகின்றார்.

(இ-ள்) முன்பாட்டிற் குறித்தபடி திருநூற்று பச்சையிலைச்சாறு விட்டரைத்த மருந்தினுடையபெருமையைக் கடவுளே யறிவானன்றி மற்றி யாரறிவார். அவ்விதமாக அரைத்த மருந்தை காயத்திடுகுங் காலத்திற் கலகல வென்னுஞ் சப்தத்தைச் செய்யும் படியானதும் கரியைப் போற் கறுத்த மலருடையதுமாகிய ஓர் செடியிலிருந் துண்டாகிய சாற்றில் ஒருநாள்வரை அரைக்கக் கடவாய். பூமியிலுள்ள மனிதர்களே! இனி கடவுளுடைய கிருபா கடாட்சத்தினாலே வேறு வேதைகளையுஞ் சொல்வேன் கேட்பீர்களாக எ—று.

சூட்சும விளக்கம்:- காய்த்த காலத்திற் கலகல வென்று சப்தமிடத் தக்கதும் கரி போற் கறுத்த மலருடையதும் (கறுப்புவட்டக் கிலுகிலுப்பையாம்) இதை முற்காண்டங்களிற் கூறியிருப்பதினாலுங் காண்க. இந்தக் கறுப்பு வட்டக் கிலுகிலுப்பைச் சாற்றினாலே முன் மருந்தை ஒருநாள்வரை அரைக்கவேண்டும்.

(83)

கொச்சகக் கலிப்பா

நாட்டிலுற்ற மாந்தர்களே
நன்குறவே மருந்துசொல்வேன்
சூட்டின்றலைப் பேரைவிட்டோன்
றுங்கமெனு முதலடுத்தோன்
கீட்டிமுதல் ரகரிலெட்டுங்
கெடியுறு மருந்தின்வனஞ்
செட்டியுடன் செக்கரைப்போற்
றிறமுட னறிந்திடுவாய்.

———

இதில் பின் அரைப்புக்குச் சாறெடுக்க வேண்டிய ஓர் செடியைச் சொல்கின்றார்.



(இ-ள்) இந்தத் தமிழ்நாட்டிற் பொருந்திய மனிதர்களே! நலம் பொருந்தும்படியாக இந்த மருந்தின் அரைப்புக்காம் வேறொரு சாறெடுக்க வேண்டிய பச்சிலையைச் சொல்வேன் கேட்பீர்களாக. சூடு என்ற பதத்தின் முதலெழுத்தை விட்டு நீக்கிய அதற்கடுத்துள்ள வோரெழுத்தையும், துங்கம் என்று சொல்லப்பட்ட பதத்தின் முதலெழுத்திற் கடுத்த வெழுத்தையும், கீட்டி யென்ற பதத்தின் முதலெழுத்தையும், ரகரவரியில் ரகரத்தைத் தள்ளி யெண்ணிவந்த எட்டா மெழுத்தை தையும் எடுத்துச் சேர்த்தால், அந்தப் பச்சிலையின் பெயராமையும், அந்தச் செடியானது செவ்வானத்தைப் போல் மிகவுந் திறமுடன் சிவந்திருக்கும். ஆதலினாலே இதை யின்னதென்று கண்டுணரக் கடவாய். எ—று.

சூட்சும விளக்கம்:-சூடு என்ற பதத்தின் முதலெழுத்தாவது சூ இதை விட்டு நீங்கிய இதற்கடுத்துள்ள வெழுத்தாவது (செ) துங்கம் என்று சொல்லப்பட்ட பதத்தில் முதலெழுத்திற் கடுத்த வெழுத்தாவது (ங்) கீட்டியென்ற பதத்தின் முதலெழுத்தாவது (கீ) ரகரவரியில் ரகரத்தைத் தள்ளி யெண்ணி வந்த எட்டாமெழுத்தாவது (ரை) ஆக இந்நான் கெழுத்துக்களையுங் கூட்ட (செங்கீரை) யென்றானது, இதுவே பின் அரைப்புக்காக சாறெடுக்க வேண்டிய செடியாம். இதைத் தெரிந்து கொள்ளக்கடவீர்களாக. இதன் சாற்றினால் அரைக்க வேண்டிய மற்ற விபரங்களை அடுத்தபாட்டிற் கூறுவாரென வறிக.

இதுவுமது

திடமுடனிவ் விலையிலுற்ற
செறியுமொழிற் சாறதனிற்
கடவுளா லுரைமருந்தைக்
கதியுடனே யரைத்திடுவாய்

அடவுடனே நாளதுமொன்
றறையக்கேள் வேதையொன்று
திடமுடனே செகத்திலுற்ற
செயமதுறுங் காளைகளே.

இதில் முன் மருந்தைச் செங்கீரைச் சாற்றினா லரைக்க வேண்டிய விபரஞ் சொல்கின்றார்.

(இ-ள்) முன் கறுப்பு வட்டக் கிலுகிலுப்பைச் சாற்றில் அரைத்து வைத்திருக்கிற மருந்தை மேற் சொல்லிய செங்கீரை யிலைச்சாற்றில் பலத்துடனே ஒரு நாள் வரை அரைக்கக் கடவாய். மண்டலத்திற் பொருந்திய மாந்தர்களே! பொருத்தத்தோடு இன்னொரு வேதையுஞ் சொல்வேன் கேட்பீர்களாக. எ—று.

சூட்சும விளக்கம் :—வெளிப்படை. (85)

வேறு செய்யுள்

அருவதுணுஞ் சிறுவய தானகாளையின்
நிமுதமென் றிடுஞ்சிறு நீரில் நீங்கிலா
சமுதமா வாட்டிடுஞ் சாம மாந்தரே
கமுதமா நாளொன்று கணக்க தாகவே.

இதில் வேறு அரைப்புச் சொல்கின்றார்.

(இ-ள்) இன்னும் முன்னரைத்த மருந்தை பால் குடிக்கும்படியான சிறுபருவத்தை யுடைய ஆண்பிள்ளை யின் சிறுநீரில் ஒருநாள்வரை கணக்காகப் பலமுடனே அரைக்கக் கடவீர்கள். எ—று.

சூக்ஷுமவிளக்கம்:- சிறுநீராவது மூத்திரம் என வறிக. (86)



இதுவுமது

ஆட்டிய மருந்ததை யம்மி யோடதைக்
காட்டிடிக் கதிரவன் முனிற் கதிக்கவை
நாட்டிய லாகவே நாள தொன்றுமே
வேட்டினில் வேதைபின் விள்வன் கேண்மினோ.

இதில் முன் சிறு ஆண்பிள்ளை சிறுநீரிலரைத்த மருந்தைப் பின் செய்யவேண்டிய விதஞ் சொல்கின்றார்.

(இ-ள்) முன்பாட்டிற் குறித்தபடி சிறு ஆண்பிள்ளை சிறுநீரி லரைத்த மருந்தை அப்படியே அம்மியோடு வெயில் படும்படியாகச் சூரியனுக்கு முன் ஒரு நாள்வரை வைக்கக் கடவீர். இனி வேறு வேதைகளையுஞ் சொல்வேன். கேட்பீர்களாக. (எ-று.)

சூட்சும விளக்கம்;- வெளிப்படை. [87]

வண்ணச் சந்த விருத்தம்

குரும்பை நிகரெனக் குடமெனத் தடமெனக்
குவியல் நீருறு சுழியென வழியெனக் கோங்கின்
குலுங்கு குவடென விளங்கிய சிமிழென-வெழிற்
அரும்பை நிகரென வடிகொக்கின் கனியென
வழகு குடியுறு வட்டெனக் கொட்டென
வரசர் முடியென வலருறு பந்தென... விருகாதின்
இரும்பு கொளுகிய விரத்தினக் கோடென
விலங்கு கமலமென் முகையென நகையென
வினிய கனகமின் சிமிழெனக் குமிழெனச்—சகசோ
கரும்பை நிகரெனக் கருமின் தகமெனக்
கமல வரிதெனுங் கனசக்கர வாகமெனச்
கமமு மலரலர்ச் செண்டென விண்டெனுங்-தழும்திர்

இதில் பின் அரைப்புக்கு வேண்டிய ஓர் சரக்குண் டாகுமிடத்தைக் கூறுகின்றார்.

(இ-ள்] தென்னங் குரும்பைக்குச் சமானமாகவும்' தங்கக் குடத்தைப் போலவும், தடாக முதலியவைகளிற் பொருந்திய நீர்ச் சுழியைப் போலவும், அசையும்படி யான மலையைப்போலவும். பிரகாசிக்கப்பட்ட பொற் சப்பைபோலவும், அழகை யுடைய கோங்கினது பூ வரும் பைப் போலவும், பெரிய அடியை யுடைய மாமரத்தினது கனியைப்போலவும், அழகு மிகுந்த சூதாடு காயைப் போலவும், கைத்தாளத்தைம்போலவும், இராஜாக்களி னுடைய இரத்தினக் கிரீடத்தைப் போலவும், விரிவு பொருந்திய பந்தைப் போலவும், இரண்டு நுனிகளிலும் விழாதபடி இருப்பாணி வைத்துக் கடாவிய இரத்தினக் கிரிகள்போலவும், பிரகாசிக்கப்பட்ட தாமரை யரும்பைப் போலவும். யானையின் மத்தகத்தை நிகர்த்தும் அடைதற் கரிதாகிய சக்கரவாகப் பறவையை யொத் தும், வாசனை வீசுகின்ற புஷ்பச் செண்டைப்போன்று மிருக்கப்பட்ட குமிழை யொத்த நாசியையும், கரும்பை யொத்த சொல்லையு முடைய ஸ்திரீகளினுடைய தன பாரங்களில்எ...று.

சூட்சும விளக்கம்...இப்பாட்டினால் பின் சொல்லப் படும் சரக்குண்டாகு மிடமாகிய பெண்களினுடைய தனங்களை வருணித்தார். இதிலிருந் துண்டாகும் சரக்கின்ன தென்பதை அடுத்த பாட்டிற் கூறுவார். மேற்குறித்த இலட்சணங்களினால் உத்தம ஜாதிப் பெண்ணாயிருக்க வேண்டு மென்றேற் படுகின்றது.

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

ஒழுகிய வமுது தன்னை
யொழுங்குட மருந்திற் குத்திச்
செழுமையா யரைப்பாய் சாமந்
செப்புவே னொன்ற தாக



வளமையாய்க் கதிரோன் முன்னில்
வைத்திடு மம்மி யோடே
முழுமையுந் தினமே யொன்று
மொழிகுவென் வேற தன்றே

இதில் ஸ்திரீகளுடைய தனங்களி லிருந்தெடுக்க வேண்டிய சரக்கின்ன தென்பதும் அரைப்பு விபரமுஞ் சொல்கின்றார்.

(இ-ள்) முன்பாட்டிற் குறித்தபடி ஸ்திரீகளினு டைய தனங்களிலிருந்து ஒழுகின பாலைக் கிரமப்படி முன்சிறு ஆண்பிள்ளை சிறுநீரில் அரைத்து வைத்திருக் கிற மருந்தில் விட்டு வளப்பத்தோடு 3 மணி நேரம் அரைத்து அப்படியே அம்மியோடு வெயிற் படும்படி யாக ஒருநாள் முழுவதும் சூரியனுக்கு முன்பாக வைக்கக் கடவீர்கள். இனி வேறு மார்க்கத்தையுஞ் சொல்வேன் கேட்பீர்களாக.எ...று.

சூட்சும விளக்கம்—ஸ்திரீகளினுடைய தனங்களி லிருந் தொழுகின் பாலாவது (முலைப்பால்). இந்த முலைப்பாலிலேயே மேற்படி மருத்தை ஒரு சாம நேர மரைத்து வெயிலில் வைக்க வேண்டியது. 49

வேறு செய்யுள்

வெற்றியின் குருவண்டு விரைவிற் குந்திய
எத்திற மானதோ ரெருக் கமுதைக்
குத்திநீ யாட்டிடு கூறு வேனினி
நற்றவ மாகவே நாள தொன்றுமே.

---

இதில் வேறு அரைப்புச் சொல்கின்றார்.

(இ-ள்) குருவண்டானது வீரத்தோடு விரைவாகப் போய்த் தங்கி யிருப்பதாகிய பலம் பொருந்திய எருக்கி னுடைய பாலை முன் முலைப்பால்விட்டு அரைத்து

வைத்திருக்கிற மருந்தில்விட்டு ஒருநாள்வரைஅரைக்கக் கடவாய். எ...று.

சூட்சும விளக்கம்...குருவண்டு தங்கிய எருக்கென்றதனாலே இந்த எருக்கம்பாலானது குருவண்டு தங்கியதினாலேயே சிறப்புற்றதென்பது ஏற்படுகின்றது. குருவண்டிருப்பது கள்ளி மரமாயினும் இப்பாட்டினால் எருக்கிலு மிருக்குமென்பதாக ஏற்படுகிறது. 90

இதுவுமது

அரைத்திடு மருந்ததை வழித்து ளன்புடன்
விரைத்துடன் வெங்கலப் பாண்டந் தன்னிலே
பரத்தினை நினைத்துநீ பரப்பும் வாறுகேள்
கரத்துறு விரலிரு கதிப்ப மாகவே

......

இதில் முன் எருக்கின் பால்விட்டரைத்த மருந்தைப் பின்செய்ய வேண்டிய விதஞ் செரல்கின்றார்.

(இ.ள்) முன்சொன்னபடி எருக்கின்பால் விட்டரைத்த மருந்தை வழித்தெடுத்து உள்ளன்போடு விரைவாக ஓர் வெண்கலப் பாத்திரத்தில் கடவுளை மனதிற் றியானித்து இரண்டு விரற்கனம் பரப்பக் கடவாய்.—எ-று.

சூக்ஷம விளக்கம்:— வெளிப்படை. [91]

இதுவுமது

அமைத்திடு மருந்ததை யங்கை யேந்தியே
சமத்தினாற் பூரண சந்தி ரன்முனங்
கமைத்திட வைத்திடு கதிக்க நாளொன்று
பமைத்திடு வேறொன்று பகரு வாமரோ.

———



இதில் முன் வெங்கலப் பாத்திரத்திற் வைத்த அந்த மருந்தை யின்னது செய்ய வேண்டுமெனக் கூறுகின்றார்.

(இ-ள்.) முன் செரன்னபடியே வெண்கலப் பாத்திரத்தில் இரண்டு விரற்கனம் பரப்பிய மருந்தை அழகிய கையினாலே யெடுத்து சமர்த்தோடு பூரணச் சந்திரனுக்கு முன்னாலே ஓரிரவு வரை வைக்கக்கடவாய் இனி செய்ய வேண்டிய விதத்தையுஞ் சொல்வேன். கேட்பாய். எ—று.

சூட்சும விளக்கம்:- பூரணச் சந்திரன் முன்னையென்றதனால் இம்மருந்தைப் பௌர்ணமி முதல் பனியில் வைக்கத் தொடங்க வேண்டுமென ஏற்படுகிறது. ஆதலினாலே, இதைப் பூரணை தொடங்கிப் பனியில் வைத்து வரவேண்டியது. தை மாசி யாகிய பனிமிகுந்த காலத்நிலேயே இம்முறை செய்யத் தொடங்க வேண்டும் மற்ற காலங்களில் தொடங்கினால் பனியேற்படுவதருமை யாதலினாற் பனிகாலத்திலேயே தொடங்க வேண்டும். மற்ற விபரங்கள் பின் கூறுவார். (92)

இதுவுமது

வெற்றியின் மருந்ததை விரைந் தெடுத்துநீ
பற்றிநீ யிரவினிற் பனிமுன் வைத்திடு
அத்தியிற் கதிரவ னலர்ந் தெழும்புமுன்
கத்திர மருந்ததைக் கையி லெடுத்திடே.

.........

அதிலும் மேற்படி மருந்தைப் பனியில் வைக்க வேண்டிய விதமே சொல்கின்றார்.

[இ-ள்] முன் பாட்டிற் சொன்னபடி பூரணச் சந்திரனுக்கு முன்பாக வைத்த மருந்தை விடிந்தவுடன் விரைவாக எடுத்துப் பழையபடியும் மறுஇரவில் பனியில்

வைக்கக்கடவாய் அப்படி வைத்து மறுநாள் சூரியன் கிழக்குச் சமுத்திரத்தை விட்டெழுவதற்கு முன்னாலே கையிலெடுத்துக கொள்ளக்கடவாய். எ—று.

சூக்ஷ்ம விளக்கம்;- விடிவதற்குள் எடுத்துக் கொள்வா யென்பதற்குப் பதிலாக சூரியன் சமுத்திரத்தை விட்டெழுவதற்கு முன்னாலே கையிலெடுத்துக் கொள்ளக்கடவா யென்றனர். (93)

இதுவுமது

இத்தகையாகவே யியற்று பத்துநாள்
முத்திய வேமாய் முயங்கி நின்றிடும்
வெற்றியாய் வேறொரு வேதை விள்ளக்கேள்
பத்தியா கவேலிம்ப ழத்தின் சாற்றினால்

———

இதில் வேறு வேதை சொல்லத் தொடங்குகின்றார்.

[இ-ள்] மேற்படி மருந்தை முன் சொல்லிவந்த கிரமப்படியே பனியில் வைப்பதும் விடிந்தபின் எடுப்பதுமாகப் பத்து நாள்வரை செய்யக் கடவாய். அப்படிச் செய்தால் அந்த மருந்தானது மிகுந்த வேகம் பொருந்தினதா யிருக்கும். வீரம் பொருந்தும்படியாக இனி இதைச் செய்ய வேண்டியதாகிய மற்றொரு வேதையையுஞ் சொல்வேன் கேட்பாயாக. சிநேகத்தோடு எலுமிச்சம்பழச் சாற்றினாலே—எ-று.

சூட்சும விளக்கம்:...இந்த மருந்தைப் பௌரணை தொடங்கி பனியில் பத்துநாள்வரை வைத்துவரவேண்டும். அதில் முன்பாட்டில் விடிவதற்குள் எடுத்துவிட வேண்டுமென்று சொல்வதால் கொஞ்சமும் வெயில் படக் கூடாதென்பது ஏற்படுகின்றது ஆதலின். இம்முறையைச் செய்வோர் கவனித்துக் கொள்க விம்பழமாவது—எலுமிச்சம்பழம், இதை முன் பல விடங்களிற் சொல்லி வந்திருப்பதினாலுங் காண்க. இப்பாட்டில் சாறறில்



என்ற வரையில் நிறுத்தி யிருப்பதில் மற்ற விபரங்களை அடுத்த பாட்டிற் கூறுவாரெனவறிக. 94

பள்ளுச்சந்த விருத்தம்

ஏந்தல் நெற்றியி லிலங்கு வெள்ளையி
னின்ப முடனிறை யரையதில்
காந்தமுடனே கரைத்து லக்கியே
கங்கை மருந்தினிற் றெளித்திடு
வாந்த மாகவே யருந்து மருந்தை
வைத்திடு பனிமுன் பத்துநாள்
சாந்த மாகவே மறுத்தும் பழச்
சாறு வகைபோ லூற்றிடே.

.........

இதில் முன்சொன்ன எலுமிச்சம் பழச்சாற்றால் பின் செய்யவேண்டிய மார்க்கஞ் சொல்கின்றார்.

(இ-ள்) முன் பாட்டிற் சொன்ன எலுமிச்சம்பழச் சாற்றில் அரசர்களுடைய நெற்றியிலே திலதமுதலியவைகளாகப் பிரகாசிக்கின்ற வெள்ளை நிறம் பொருந்திய ஓர் சரக்கில் அரையென்ற அளவு எடுத்துப்போட்டு பொருத்தத்தோடு நன்றாய்க் கரைத்துக் கலக்கி முன் மருந்திற் தெளித்து முன்போலவே பத்து நாள் வரை பனியில் வைக்கக் கடவாய். அப்படி வைத்தபின் பழையபடியும் அந்த மருந்தில் முன்போலவே எலுமிச்சம் பழச்சாற்றை ஊற்றக் கடவாய். எ—று.

சூக்ஷ்ம விளக்கம்:-இராஜாக்களினுடைய நெற்றியிலே திலத முதலியவைகளாகப் பிரகாசிக்கின்ற வெள்ளை நிறம் பொருந்திய ஓர் சரக்காவது (வெள்ளைப்புனுகு) இதை நிறை யின்னதென்று சொல்லாமல் அரையென்ற அளவு என்று சொல்லப்பட்டிருப்பதில் இம்முறைக்காம் சரக்குகளை விராகனெடைக் கணக்காகச் சொல்லப்பட்

டிருப்பதால் இதையும் விராகனெடை யென்றே கொள்ள வேண்டியது. ஆகவே (வெள்ளைப் புனுகு விராக னெடை அரை) எடுத்துப்போட்டுக் கலக்கவேண்டுமென வறிக. ஆயினும் இது விஷயத்தை அனுபவசாலிகளிடம் கேட்டுத் தெரிந்து கொள்க. இதைப் பழையபடியும் எடுத்து எலுமிச்சம் பழச்சாறு விடச் சொல்லி யிருப்பதில் அதற்கு வெள்ளைப் புனுகு சேர்ப்பதா? சேர்ப்பதில் லையா? என்ற சந்தேக மேற்படுகிறது ஆதலின் அது விஷயத்தையும் அனுபவ சாலிகளிடம் கேட்டுத்தெரிந்து கொண்டால் நலமா யிருக்கும். நம்முடைய அபிப்பிரா யம் பழையபடியும் புனுகு சேர்க்கவேண்டுமென்பதே. 95

கலி விருத்தம்

ஊற்றுகின்ற மருந்தை யொளியுடன்
பார்த்து முன்போற் பனிமுனம் வைத்திடு
நேற்றியாக நிகழ்த்துவன் பத்துநாள்
காத்திரத்துடன் கண்டறி காளையே.

---

இதில் முன் எலுமிச்சம் பழச்சாறு ஊற்றிய மருந் தைப் பின் செய்யவேண்டிய விதஞ் சொல்கின்றார்.

(இ-ள்) மகனே முன் பாட்டிற் குறித்தபடி எலுமிச்சம் பழச்சாறு விட்ட மருந்தைப் பிரகாசிக்கும்படி யாக முன்போலவே பத்து நாள் வரை பனியில் வைக்கக் கடவாய், பின் இதைச் செய்யவேண்டிய மார்க்கத்தை யும் அழகாகச் சொல்வேன் தீரத்தோடு கேட்டுணர் வாயாக. எ..று.

சூட்சும விளக்கம் :—வெளிப்படை, 96

இதுவுமது

வைத்தெடுத்த மருந்தை வடிவுடன்
கத்தன் றன்னாற் கதிர்வொளி தோன்றிடும்



தித்தி யாகத் தினையது போன்றுமே
முத்தி யாகவே முப்பென்ற முத்தொழில்

---

இதில் முன் பனியில் வைத்தெடுத்த மருந்து இன்னவித மிருக்குமெனச் சொல்கின்றார்.

(இ-ள்) முன் பாட்டிற் சொன்னபடி பத்துநாள் பனியில் வைத்தெடுத்த மருந்தானது திருப்தியாகத் தினையைப்போன்று பிரகாசிக்கும். கடவுளுடைய கிருபா கடாட்சத்தினாலே இதுவே முப்புவென்று சொல்லப்படும். இது கடவுளுடைய மூன்று தொழிலுக் குஞ் சமானமாகும் எ...று.

சூட்சும விளக்கம்:—இந்த முப்பூவின் பெருமை நோக்கியே கடவுளுடைய மூன்று தொழிலுக்குஞ் சமான மாகுமென்றார், தினையைப்போற் பிரகாசிக்குமென் றது. இந்த மருந்தை முன் சொன்னபடி எலுமிச்சம் பழச்சாறு விட்டுப் பத்துநாள் வரை இரவில் பனியில் வைத்து வந்து பின்பு எடுத்துப் பார்த்தால் அம்மருந் தானது சிறுசிறு உண்டைகளைப் போலாகித் தினை யளவு பருமனா யிருக்குமென்பதாக ஏற்படுகிறது. இதைச் செய்து பார்த்தால் ஒவ்வொருவருக்கும் தானே விளங்கிப்போகும். 97

எண்சீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

கேளப்பா தினையதுபோற் றோற்று கின்ற
கெடியான முப்புவினாற் செய்கை கோடி
சூளப்பா சொல்லிடவே யரிதாங் கண்டீர்
சொல்லுகின்ற சித்தரெல்லா மெத்துகின்றார்
மூளப்பர் முப்பூமுப் பென்று சொன்ன
மூடர்களே யுற்றறிவீர் முக்கிய மாக
ஆளப்பா அந்தமென்ற செந்தூரத்தா
லட்டசித்து மெட்டுமுள்ள வாண்மை தானே.

---

இதில் இந்த முப்பூவின் பெருமை சொல்கின்றார்.

(இ-ள்) மகனே கேட்கக் கடவாயாக. மேலே சொன்ன படி தினையைப் போல பிரகாசித்துக் கொண்டிருக்கின்ற பலம் பொருந்திய முப்பூவென்ற மருந்தினாலே கோடா கோடி ஆச்சரியமான செய்கைகளெல்லாம் நடக்கும் அவைகளை யெல்லாம் நாவினாலெடுத்துச் சொல்வதற்கரிதாகும். சொல்லத்தக்க சித்தர்களெல்லாம் இது விஷயத்தில் எதை யெதையோ சொல்லியே மாற்றுகின்றார்கள்! முப்பூ முப்பூ வென்று சொல்லிக்கொண்டு செய்யத் தெரியாமல் திரிந்த மந்தபுத்தி யுடையவர்களே சற்று கவனித்தறிவீர்களாக இந்த நூலில் முதன்மையாகச் சொல்லி யிருக்கின்ற அந்த செந்தூரத்தினாலே அட்டமா சித்தும் கைகூடும்; மிக்க ஆண்மை முண்டாகும்—எ-று.

சூட்சும விளக்கம்:—இப்பாட்டில் முப்பூவின்பெருமை யெல்லாம் சொல்லிவிட்டு ஈற்றில் அந்தமென்ற செந்தூரத்தால் அட்டமா சித்து முண்டாகும் என்று சொல்லி யிருப்பதின் குறிப்பை நோக்கினால் இம்முறைக்கும் அந்த செந்தூரம் சேர்க்கவேண்டுமோ என்ற சந்தேக மேற்படுகிறது இது விஷயத்தைத் தெரிந்தவர்களிடம் கேட்டுக்கொள்க. அந்த செந்தூரத்தின் சரக்கெல்லாம் இம்முறையிற் பெரும்பான்மையும் சேர்ந்திருப்பதினால் ஒருவாறு அந்தச் சரக்குகளையே அந்த செந்தூரமாகப் பாவித்து இவ்வாறு சொல்லி யிருந்தாலும் சொல்லி யிருக்கலாம், இம்முறையில்அந்த செந்தூரம் சேர்க்கவேண்டு மென்பதாக எவ்விடத்துஞ் சொல்லப் படவில்லை. எப்படியாயினும் இவ்விஷயங்களை யெல்லாம் தெரிந்தவர்களிடம் கேட்டுணர்ந்து செய்வது நலம். (98)

இதுவுமது

தானான முப்புவினாற் செய்கை கோடி
சாற்றாதே தனுசருக்குத் தயவ தாக



தானாண்மை யென் றிடுஞ்சொல் விண்டி டாதே
நல்லோரை மனநோவு கண்டி டாதே
தேனான மொழியாகச் செப்பு வார்கள்
சிந்தைதனில் வேறுவைத்துத் திடம தாக
ஆனாலு மவர்தமக்குச் சொல்லி டாதே
யாதியுட முனிவுண்டா மறிந்து கொள்ளே.

— —

இதிலும் முப்பூவின் பெருமை சொல்கின்றார்.

(இ-ள்) ஒப்பற்றதாகிய இந்த முப்பூவினாலே கோடானகோடி ஆச்சரியமான செய்கைகள் செய்யலாம் இதன் மர்மத்தை அறிவீனமாகிய ஜனங்களுக்கு நேயத்தோடு சொல்லிவிடாதே. இம்முறை உனக்குத் தெரிந்து விட்டதென்று நான்தான் பெரியவனெனத் தற்பெருமை பேசி விடாதே சன்மார்க்க முடையவர்களது மனதைக் கெர்வத்தால் நோகச்செய்யாதே. சிலர் உனக்கு இதத்தைச் செய்வதுபோல காட்டித் தேன்போன்ற வார்த்தைகளைப்பேசி மனதில் வஞ்சகமான நோக்கத்தை வைத்துக்கொண்டு ஏமாற்றப் பார்ப்பார்கள். அவர்கள். அப்படிப் பேசினாலும் நல்லவர்கள் தானென்று மயங்கி இம்முறையைச் சொல்லிவிடாதே. அப்படிக்கண்டவர்க்கெல்லாம் சொல்வாயானால் கடவுளினுடைய கோபமுண்டாகுமென அறிந்து கொள்ளக்கடவாய்...எ-று.

சூக்ஷும விளக்கம்:...இப்படியானால் இம்முறை தெரிந்தாலும் கெர்வங் கொள்ளக் கூடாதென்றும் கேட்டவர்களுக்கெல்லாம். இதைச் சொல்லக் கூடாதென்று மேற்படுகிறது. (99)

கலி விருத்தம்

சொல்லக் கேட்டிடுந் தூய்நல மாந்தரே
வல்லி யலின் மருந்தை மறுத்துமே
நல்லி யலுடன் நாட்டு பனிமுனம்
பல்லி யல்போற்பகர்முனம் பத்துநாள்,

.........

இதில் முன்மருந்தைப் பின் செய்யவேண்டிய விதஞ் சொல்கின்றார்.

(இ-ள்) பரிசுத்த மனதையுடைய மனிதர்களே இன்னமுஞ்சொல்வேன் கேட்பீர்களாக.முன் தினையைப் போல் திரண்டிருக்குமென்ற மருந்தைப் பழையபடியும் முன்போல எலுமிச்சம்பழச் சாற்றைவிட்டுப் பத்துநாள் வரை நல்ல பொருத்தத்தோடு பனியில் வைக்கக் கடவாய்...எ-று.

சூக்ஷும விளக்கம்:—இப்பாட்டில் எலுமிச்சம் பழச் சாறு விடச்சொல்லவில்லை யாயினும் முன்போல் என்ற குறிப்பினால் விடவேண்டுமென்றே யேற்படுகிறது. ஆயினும் இதை அனுபவசாலிகளிடம் கேட்டுத் தெரிந்து கொள்க.

இதுவுமது

பத்து நாளாய்ப் பனிமுனம் வைத்ததைக்
கைத் தலத்தி லெடுப்பாய் கடுகவே
தித்தி யாகத் தினையது போன்றது
சத்தி யாகக்கடுகெனக் காணுமே.

......

இதில் முன்பனியில் வைத்த மருந்து பின்னாகும் விதம் சொல்கிறார்.

[இ-ள்] முன் சொன்னபடி பத்துநாள் வரை பனியில்வைத்த மருந்தை விரைவாகக் கையினாலெடுக்கக் கடவாய். அப்படி யெடுத்துப்பார்த்தால்முன் தினையைப் போன்றிருந்த இந்த மருந்தானது கடுகைப் போல் பிரகாசித்துக் கொண்டிருக்கும்—எ-று.

சூட்சும விளக்கம்:—முன்னிருந்ததைக் காட்டிலும் இப்போது சற்று பெரிதாகவே யிருக்குமென்பதற்குப் பதிலாகக் கடுகைப் போன்றிருக்குமென்றார். ()



இதுவுமது

மாறி லானுரை வாக்கிது மாந்தரே
மூறி வாமற்ல முப்பு விதுவறி
வேறு வாக விதன்வேதை முள்ளுவேன்
ஆறு காண்ட மடைவுடன் முற்றுமே

இதில் இம்முறையின் ஒரு பக்குவமுடிவு சொல்கின்றார்.

[இ-ள்] மனிதர்களே இதுவே களங்கமற்ற முப்புவாகும், வேறுபாடில்லாத கடவுளுடைய திருவாக்காகும். இதனுடைய வேதைகளையுஞ் சொல்வேன். இந்த ஆறாவது காண்ட முடிந்துவிட்டது. ஆனதால் அடுத்த காண்டத்திற் சொல்வேன்—எ-று.

சூக்ஷும விளக்கம்:—இம்முறை இன்னு முடிவு பெறவில்லையெனினும இக்காண்ட முடிந்துவிட்டதால் இம்மட்டோடு நிறுத்திவிட்டார் இனி மற்ற விஷயங்களை அடுத்தகாண்டத்திற் கூறுவாறெனவறிக ()

ஆறாவதுகாண்டம் முற்றுப் பெற்றது.

---

## இலக்க சௌமிய சாகரம்
## ஐந்தாவது ஆறாவது கண்டங்களின்
# புறநடை

.........

**நண்பர்களே!**

கடவுளனுக்கிரகத்தாலும் பல மகான்களின் ஆசீர்வாதத்தாலும் சில பெரியோர்களி னுதவியைக் கொண்டு முந்தின காண்டங்கள் வெளிப்பட்ட சில நாட்களுக்குள்

ளாகவே இக்காண்டங்களுக்கும் எமக்குத் தெரிந்தவரை யில்உரையெழுதி முடித்தொம். முந்தின காண்டங்களைப் போலவே இந்த ஐந்தாம் ஆறாம் காண்டங்களிலும் பல அற்புதமாகிய முறைகளடங்கி யிருக்கின்றன. அம்முறைகளை முந்தின புத்தகங்களில் எழுதி யிருக்கின்றது போலவே இங்கு சுருக்கி ஒவ்வொன்றையும் எளிய வசன நடையில் எழுதிக் காட்டுவாம்.

## இக்காண்டங்களிலடங்கியிருக்கின்ற முறைகளாவன

| | |
|---|---|
| | இரசிதத் குரு<br>பரஷாணக்கட்டு<br>தாளகக்கட்டின் மெழுகு |
| ஐந்தாங் காண்டம் | வேங்கை ஜெயநீர்<br>தாளக வீரக்கட்டு<br>வெடியுப்புக் கட்டு |
| ஆறாங்காண்டம் | இலிங்கக் கட்டு<br>முப்புக்குரு |

புறநடை

இவைகளே மேற்கண்ட இரண்டு காண்டங்களிலுமடங்கி யிருப்பவைகளாம். இனி இவைகளின் செய்பாக முதலியவற்றை விபரமாக எழுதி விளக்குகிறோம்.

### 1. இரசிதக் குரு

a) இந்திரகோபம் பங்கு 5, வெள்ளைப் புனுகு பங்கு 18, கறுவளையல் பங்கு 18, கும்பிடு கிளிஞ்சில் பங்கு 1, பூநீறு பங்கு 2, கடல்நுரை பங்கு 3, வெள்ளி நிமிளை பங்கு 3, எவட்சாரம் பங்கு 2, இந்துப்பு பங்கு 1 b) திருநூற்றுப் பச்சை யிலைச்சாறு, கள்ளிப்பால், கறுப்பு வட்டக் கிலுகிலுப்பைச்சாறு, கொடிவேலி யிலைச் சாறு, பொற்றலைக் கையாந்தகரைச் சாறு, இவை வகை-1-க்கு சொல்லத்தக்க அளவு.



செய்முறை:—a) யிலுள்ள சரக்குகளையெல்லாம் ஒன்றாகக் கல்வத்திற் போட்டு b) யிலுள்ள திருநூற்றுப் பச்சிலைச்சாற்றைச் சிறுகச்சிறுகவிட்டு 6 மணிநேரம் அரைக்கவேண்டும். அப்படி யரைத்தபின் அதை வழித்தெடுத்துப் பில்லை செய்து மூன்றுநாள்வரை வெயிலிற் காயவைத்தெடுத்துக் கொள்ள வேண்டும். பின்பு அந்த பில்லையை யெடுத்து கல்வத்திற் போட்டுக் கள்ளிப் பாலை விட்டு 6 மணி நேரம் அரைக்கவேண்டும். அப்படி யரைத்தபின் அதை வழித்தெடுத்து முன்போல் பில்லை செய்து மூன்று நாள் வரை பனியில் வைத்தெடுத்துக் கொள்ளவேண்டும். பின்பு அந்தப் பில்லையைப் பழைய படியுங் கல்வத்திற்போட்டு கறுப்பு வட்டக் கிலுகிலுப்பை சாற்றைவிட்டு 9 மணி நேரம் அரைத்து அதை வழித்தெடுத்து ஓட்டில் வைத்து மேலோடு மூடி முதற்காண்டத்திற் சொல்லி யிருக்கின்ற அந்த செந்தூரத்திற்குச் சீலைமண் செய்தது போற் செய்து அங்கு சொல்லியிருக்கின்ற கிரமப்படியே புடம் போட்டெடுத்துக் கொள்ள வேண்டும். அப்படிப் புடம் போட்டெடுத்தால் அந்த மருந்தானது நல்ல பிரகாசத்தோடு விளங்கும். பின்பு அம்மருந்தைப்பழையபடியுங் கல்வத்திற் போட்டு கொடிவேலி யிலைச் சாற்றை விட்டு 6 மணி நேரம் வழித்தெடுத்துப் பில்லை செய்து ஓட்டில் வைத்து மேலோடு மூடி பனிரண்டு களிச் சீலைமண் செய்துலர்த்தி ஒருமுழ உயரப் புடம் போட்டுப் பின்னெடுத்து அதனுள்ளிருக்கு மருந்தைப் பழையபடியுங் கல்வத்திற் போட்டு பொற்றலைக் கையாந்தகரைச் சாற்றை விட்டு 3 மணி நேரம் அரைத்து முன்போல் பில்லைதட்டி முன்போற் கவசஞ் செய்து முன்போற் புடம்போட வேண்டும். இவ்விதம் புடம் போட்டெடுத்தால் அந்த மருந்தானது செவ்வல்லி புஷ்பம் போல சிவந்த நிறமானது பிரகாசித்துக் கொண்டிருக்கும். இதை யெடுத்துப் பத்திரப்படுத்திக் கொள்ள வேண்டும்.

பின் மேற்கண்ட மருந்தை இரசத்தில் நூற்றிற் கொன்று கொடுத்தூதினால் அந்த இரசமானது வெள்ளியாகி விடும். இந்த வெள்ளியால் அநேக லோகங்களைப் பேதிக்கலாமென இந்நூலிற் சொல்லப் படுகிறது. அவ்விபரங்களை யெல்லாம் உரையிற் கண்டு தெரிந்து கொள்க.

## 2. பாஷாணக்கட்டு

a) வெள்ளைப் பாஷாணம் 70 கிராம் திருநூற்றுப் பச்சிலைச்சாறு செல்லத்தக்க அளவு, இதற்கு முன் சொல்லியிருக்கின்ற இரசிதக்குரு 244 மி.கி. b) முலைப் பால், கழுதைப்பால், தண்ணீர் வெள்ளைச் சாரணைச் சாறு, அவுரி யிலைச்சாறு, தூதுவளைச் சாறு, நாவல் பட்டைச்சாறு, வெற்றிலைச்சாறு, ஒற்றைக்கால் நண்டுச்சாறு, இவை வகைக்கு செல்லத்தக்க அளவு.

செய்முறை:—a) யிற் சொல்லியிருக்கின்ற திருநூற்றுப் பச்சை யிலைச்சாற்றையும் இரசிதக் குருவையும் ஒன்றாகக் கலந்து குழப்பிக் கொண்டு அந்தக் குழம்பை முன் சொல்லி யிருக்கின்ற வெள்ளைப் பாஷாணக் கட்டியில் (ஒரு விரற்கனம் உலர வுலர) நன்றாகப்பூசி அதை ஒரு மூசைக்குள் வைத்து அந்த மூசையைக் கரிநெருப்பிலிட்டு ஒரு நாழிகை நேரம் ஊத வேண்டும். அப்படி ஊதினால் அந்தக் கட்டியானது நல்ல கல்லைப்போல கெட்டிப்பட்டு விடும். பின்பு அதனை யெடுத்து ஒரு ஓட்டிற் பேரட்டு நெருப்பில் வைத்து அந்தக் கட்டியின்மீது b) யிலுள்ள முலைப் பாலைச் சிறுக சிறுக விட்டுப் புரட்டிக்கொடுத்து கட்டியானது பாலையிழுக்க இழுக்கப் பழையபடியும் விட்டு விட்டு புரட்டிக்கொடுத்து இந்த விதமாக 24 நிமிடம் சுருக்குக் கொடுக்கவேண்டும். அதன் பின்பு அதை யெடுத்துப் பழையபடியும் முன்போலவே கழுதைப் பாலில் 24 நிமிஷம் தண்ணீரில் 24 நிமிஷம் புரட்டி சுருக்குக் கொடுத்தெடுத்துக் கொள்ளவும். அதன் பின்பு இந்த விதமாகவே வெள்ளைச் சாரணைச் சாற்றில் 48 நிமிடம் அவுரி யிலைச் சாற்றில் 48 நிமிடம் தூதுவளைச் சாற்றில் 48 நிமிடம் நாவற்பட்டைச் சாற்றில் 72 நிமிடம் வெற்றிலைச் சாற்றில் அரை நாளும், சுருக்குக் கொடுத்து முடிவில் ஒற்றைக்கால் நண்டுச் சாற்றில் அரைநாள் சுருக்குக் கொடுத்தெடுத்து கொள்ள வேண்டும். இவ்விதம் செய்வதால் வெள்ளைப் பாஷாணமானது உறுதியான கட்டாகி விடும். இதை யெடுத்து ஓர் செப்பில் பதப்படுத்திக் கொள்ள வேண்டும்.



உபயோகம்:- இந்தக் கட்டியினாலே அநேக லோகங்களை யெல்லாம் பேதிக்கலாமென்றும் பல தீராத வியாதிகளையெல்லாம் தீர்க்கலாமென்றும் சொல்லப்படுகிறது. அவ்விவரங்களை யெல்லாம் உறையிற் கண்டு தெளிக.

## 3. தாளகக்கட்டின் மெழுகு

a) தாளகம் 70 கிராம் கறுப்பு வட்டக் கிலுகிலுப்பை சாறு, கரித்தகரைச்சாறு, எலுமிச்சம்பழச்சாறு, கருவூமத்தைச் சாறு இவை வகைக்கு செல்லத்தக்க அளவு. b) கீழே சொல்லப்படும் வேங்கை ஜெயநீர் பண வெடை.

செய்யுமுறை:- a) யிற் சொல்லிய தாளகக் கட்டியை கறுப்பு வட்டக் கிலுகிலுப்பைச் சாற்றில் நன்றாகத் தோய்த்தெடுத்து அதை வெயிலில் வைக்கவேண்டும். அது நன்றாகக் காய்ந்த பின்பு பழையபடியும் அந்தச் சாற்றிலேயே தோய்த்து ஒருநாள் வரை வெயிலில் காய வைத்தெடுத்துக் கொள்ள வேண்டும். சாற்றில் தோய்த்துத் தோய்த்துக் காயவைத்துக் காயக் காயப் பழையபடியும் தோய்த்துத் தோய்த்து வெயிலில் வைக்க வேண்டும். பின்பு மேற்கண்ட கட்டியை கரித்தகரைச் சாற்றில் தோய்த்துத் தோய்த்து முன்போலவே ஒரு நாள்வெயிலில் வைக்கவேண்டும். பின்புஅந்தக் கட்டியை யெடுத்து எலுமிச்சம்பழச் சாற்றில் தோய்த்துத் தோய்த்து மூன்றுநாள் வரையும், கருவூமத்தஞ் சாற்றில் தோய்த்துத் தோய்த்து மூன்று நாள் வரையும் வெயிலிற்

காயவைத் தெடுத்துக் கொள்ள வேண்டியது. பின்பு b) யிற் சொல்லிய வேங்கை ஜெய நீரைக் கல்வத்தில் விட்டு அதில் மேலே சொன்னபடி சுருக்குக் கொடுத்து வைத்திருக்கின்ற தாளகக் கட்டியைப் போட்டு மூன்று சாம நேரம் அரைக்கவேண்டும். அப்படி யரைத்தவுடன் அது மெழுகாகி விடும். இதுவே தாளகக் கட்டினது மெழுகாம். இதை வழித்தெடுத்து எருமைக் கொம்பினாற் செய்த சிமிழில் பத்திரப்படுத்திக் கொள்ள வேண்டியது.

உபயோகம்:—இந்த மெழுகால் வாத மார்க்கங்களும் வைத்தியங்களுஞ் செய்யலாமெனச் சொல்லப்பட்டிருக்கின்றது. அவ்விபரங்களை உரையிற் காண்க.

### 4. வேங்கை ஜெயநீர்

வேங்கைப் பட்டைச் சாறு 0.672 மி.லி. இதற்கு முன் சொல்லியிருக்கப்பட்ட இரசிதக்குரு பணவெடை.

செய்முறை:- மேற்கண்ட வேங்கைப் பட்டைச் சாற்றை ஓர் பீங்கான் பாத்திரத்தில் ஊற்றி அதில் இரசிதக்குருவைப் போட்டு நன்றாகக் கலக்கி அதை மூன்றுநாள்வரை பனியில் வைத்தெடுக்கவேண்டும். அப்படி வைத்தெடுத்தால் அது ஜெயநீராகி விடும். இதுவே வேங்கை ஜெயநீராம். இதை யெடுத்துப் பத்திரப்படுத்திக் கொள்ளவேண்டும். இதையே முன் தாளகக் கட்டினது மெழுகிற்குச் சேர்க்கவேண்டியது.

### 5. தாளக விரக்கட்டு

a) தாளகக்கட்டி 105 கிராம் வெண்குன்றிமணி யிலைச்சாறு, வெள்ளைச் சாரணைச்சாறு, வேங்கை ஜெயநீர் ஆகியவை வகைக்குச் செல்லத்தக்க அளவு.

b) வீரம் 70 கிராம் வெண்குன்றிமணியிலைச் சாறு வெள்ளைச் சாரணைச்சாறு, வேங்கை ஜெயநீர் ஆகியவை வகைக்கு செல்லத்தக்க அளவு.



செய்முறை:- a) யிலுள்ள தாளகக்கட்டியை அதிற் சொல்லியிருக்கின்ற வெண்குன்றிமணி யிலைச் சாற்றில் தோய்த்துத் தோய்த்துச் சாறு செல்லுமட்டும் வெயிலிற் காயவைத் தெடுத்துக் கொள்ளவேண்டும் அதன் பின்பு மேற்படி கட்டியை முன்சொன்ன கிரமப்படியே வெள்ளைச் சாரணைச் சாற்றில் தோய்த்துத் தோய்த்து ஒரு நாள் வரை வெயிலிற் காயவைத் தெடுத்துக்கொள்ள வேண்டும். பின்பு அதனை யெடுத்து வேங்கை ஜெயநீரில் புகையாமற் சுருக்குக் கொடுத்து வைத்துக் கொள்ள வேண்டும். இப்படிச் செய்வதால் மேற்படி தாளகமானது திவ்யமான கட்டாகிவிடும். இதை யெடுத்துப் பத்திரப்படுத்திக் கொள்ள வேண்டியது.

b) யிற் சொல்லியிருக்கின்ற வீரக்கட்டியையும் அதிலுள்ள சாறு வகைகளிலும் வேங்கை ஜெயநீரிலும் முன் தாளகக் கட்டிற்குச் சொன்ன கிரமப்படியே சுருக்கு முதலியவை கொடுத்து எடுக்க அதுவும் நல்ல கட்டாகி விடும், இதையும் எடுத்து முன் தாளகக் கட்டைப் போலவே பத்திரப்படுத்திக் கொள்ள வேண்டியது இவ்விரண்டையும் ஒரே முறையாகச் சேர்த்துச் சொன்னபடியால் இரண்டிற்கும் சேர்த்தே தாளக வீரக சட்டென்று பெயர் கொடுக்கப்பட்டிருக்கின்றது.

உபயோகம்:— இவ்விரண்டு கட்டுகளி லெதையேனும் ஒன்றை இரசத்தில் நூற்றிற்கொன்று சேர்த்து மூசையிற் போட்டுச் சீலைமண் செய்து ஒரு முழப் புடம் போட்டெடுத்தால் அது பத்து மாற்றுள்ள வெள்ளியாகிவிடும். இன்னும் இந்தக் கட்டுகளால் எல்லாலோகங்களும் பேதிக்குமெனச் சொல்லப்படுகிறது. அவ்விபரங்களை யெல்லாம் உரையிற் கண்டுணர்க.

### 6. வெடியுப்புக் கட்டு

வெடியுப்பு 17.5 கிராம், வேங்கை ஜெயநீர் சொல்லத்தக்க அளவு.

செய்முறை...வேண்டிய அளவு வேங்கை ஜெயநீர் மேற்சொல்லிய வெடியுப்பைப்போட்டு ஜெயநீர் முழு

தும் வெடி ப்பிற்செல்லும்படியாகக் காயவைத்தெடுத்துக் கொள்ள வேண்டும். இந்த விதமாக மூன்று தரங்கள் செய்யில் வெடியுப்பானது நன்றாகக் கட்டிவிடும். அதை யெடுத்துப் பத்திரப்படுத்திக் கொள்ள வேண்டியது.

உபயோகம்—இந்தக் கட்டானது வாதத்திற்கும் வைத்தியத்திற்கும் மிகவும் உபயோகப்படுகிறது. அவ் விபரங்களை உரையிற் பார்த்துத் தெளிந்து கொள்க.

7. லிங்கக்கட்டு

(a) சாதிலிங்கம் (70 கிராம்) இரண்டாங் காண்டத்திற் சொல்லிய துருசுச்சுண்ணம் அரிசியெடை. திருநூற்றுப் பச்சை யிலைச்சாறு, ஒற்றைக்கால் நண்டுச்சாறு, இவை வகை 1க்கு செல்லத்தக்க அளவு, சூடன் (488 மி. கி) தேன், கற்றாழஞ்சாறு, எலுமிச்சம் பழச்சாறு, முலைப்பால், முயலிரத்தம், செம்பரத்தம் பூவில் எலுமிச்சம்பழச்சாறு விட்டு ஊறவைத்துப் பிழிந்தெடுத்துக்கொண்டசாறு, கள்ளிப்பால், முருக்கஞ்சாறு, தில்லைப்பால், வெள்ளாட்டுக் கொழுப்பு இவை வகை 1க்கு செல்லத்தக்க அளவு.

(b) தங்கத்தகடு செல்லத்தக்க அளவு [இதைக் கடுதாசி போன்ற கனமுள்ளதாக அடித்துக்கொள்ள வேண்டும்] பசுவின்பால், புங்கம்பால் இவை வகை 1 க்கு செல்லத்தக்க அளவு.

செய்முறை (a) யிலுள்ள துருசுச் சுண்ணத்தையும், திருநூற்றுப் பச்சையிலைச்சாற்றையும் ஒன்றாகக் கலந்து மிஸ்ரமித்துக்கொண்டு அந்தக் குழம்பையெடுத்து அதிற் சொல்லப்பட்டிருக்கிற சாதிலிங்கக் கட்டியிற் பூசிக் கவசஞ்செய்து அதை அனலோட்டிற் போட்டுப் புரட்டவேண்டும். அப்படிப் புரட்டி அதிலுள்ள நீர்ப் பசையெல்லாம் வறண்டபிற்பாடு எடுத்து ஒற்றைக்கால் நண்டுச்சாற்றில் தோய்த்துத் தோய்த்து அனலோட்டிற் போட்டுப் புரட்டிப் புரட்டி 30 நிமிடம் சுருக்குக்



கொடுத்துக் கொள்ளவேண்டும். அதன் பிற்பாடு அந்த ஒற்றைக்கால் நண்டுச்சாற்றில் (a) யிற் சொல்லி யிருக்கின்ற [488 மி கி] சூடனைச் சேர்த்துக் கலக்கிக் கொண்டு முன் சொன்னபடியே அதிலும் சுருக்குக் கொடுத்தெடுத்துக் கொள்ள வேண்டும். இந்த விதமாகவே மேற்படி கட்டியைத் தேனில் [12 நிமிடம்) கற்றாழஞ்சாற்றில் (12 நிமிடம்) எலுமிச்சம்பழச் சாற்றில் [12 நிமிடம்] முலைப்பாலில் [12 நிமிட நேரம்] முயலிரத்தத்தில் 72 நிமிஷம், செம்பரத்தம் பூவில் எலுமிச்சம் பழச்சாறு விட்டு ஊறவைத்துப் பிழிந்துச் சாற்றில் [3 மணி நேரமும்) முருக்கஞ் சாற்றில் 3 மணி நேரமும் கள்ளிப்பாலில் 3 மணிநேரமும். தில்லைப் பாலில் 3 மணி நேரமும். வெள்ளாட்டுக் கொழுப்பில் 3 மணி நேரமும், சுருக்குக் கொடுத்தெடுத்துக்கொள்ள வேண்டும்.

பின்பு அந்த லிங்கக் கட்டியில் (b)யிற் சொல்லியிருக்கின்ற தங்கத்தகட்டைச் சுற்றி நன்றாகப்பொதிந்து மெருகு கொடுக்குமாயுதத்தால் நன்றாக அழுத்திக் கெட்டிப்படுத்தி விட்டு அதை யெடுத்து [a] யிற்சொல்லி சொல்லியிருக்கின்ற பசுவின்பாலில் முந்தின கிரமங்களின்படியே [3 மணி நேரம்] சுருக்குக் கொடுக்க வேண்டும். அப்படிச் சுருக்குக் கொடுத்தால் அந்த லிங்கக் கட்டியானது தங்கத்தில் அரையரிசி யெடையை யிழுத்துக்கொள்ளும் பின்பு அதையெடுத்துப் புங்கம் பாலில் [3 மணி] சுருக்குக்கொடுக்கவேண்டும. அப்படிக் கொடுத்தவுடனே அந்தக் கட்டியானது தங்கத் தகட்டையெல்லாம் உள்ளேயிழுத்துக்கொண்டு பலமான கட்டாகி விடும். இதை யெடுத்துப் பத்திரப்படுத்திக் கொள்ள வேண்டியது.

உபயோகம்—இது முக்கியமாய் வாதவைத்திய மென்னு மிரண்டிற்கு முபயோகமாகிறது. அது விபரங்களை உரையிற் காண்க.

8. முப்புக் குரு

[a] இந்திரகோபம் (3,5 கிராம்) துருசு விராக னெடை 7 கிராம், பூநீறு (3.5 கிராம்) கடல் நுரை [7.5 கி] எவட்சாரம் 3.5 கி வெள்ளிநிமிளை (8 கிராம்) 7 கி, வெடியுப்பு (10.5 கிராம் தாளகம் 17.5 கிராம் கல்நார் 17.5 கிராம் குருவண்டு 3.5 கிராம் பொன்னம் பர் '17.5, கிராம் திருநூற்றுப்பச்சையிலைச் சாறு, கறுப்புவட்டக் கிலுகிலுப்பைச்சாறு, செங்கீரை சாறு, ஆண்குழந்தையின் சிறுநீர், முலைப்பால் எருக்கம்பால் வகை 1 க்கு செல்லத்தக்க அளவு.

(b) எலுமிச்சம்பழச்சாறு செல்லத்தக்க அளவு, வெள்ளைப்புனுகு [1.75 கி)

செய்முறை—[a] யிலுள்ள 12 சரக்குகளையுங் கல்வத்திற்போட்டு திருநூற்றுப் பச்சையிலைச் சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு ஒரு நாள்வரை அரைக்க வேண்டும். பின்பு அதில் கறுப்பு வட்டக் கிலுகிலுப்பைச் சாற்றைவிட்டு ஒருநாள் வரை அரைக்கவேண்டும். பின்பு இந்த விதமாகவே செங்கீரைச் சாற்றில் ஒருநாளும் ஆண்குழந்தையின் சிறுநீரில் ஒருநாளும் அரைத்து அப்படியே கல்வத்தோடு ஒருநாள்வரை வெயிலில் வைத்தெடுத்துக் கொள்ளவேண்டும். பின்பு அதில் முலைப்பாலை விட்டு ஒரு சாமநேரமரைத்து அப்படியே கல்வத்தோடு ஒருநாள்வரை வெயிலில் வைத்தெடுத்துக் கொள்ளவேண்டும். பின்பு அதில் எருக்கம்பாலை விட்டு ஒருநாள்வரை அரைத்து அதை வழித்தெடுத்து ஓர் வெங்கலப் பாத்திரத்தில் இரண்டு விரற்கனம் பரப்பி அதை அப்படியே யெடுத்துப் பூரணச் சந்திர னன்று பனியில் ஓரிரவு வைக்க வேண்டும். பின்பு விடிந்தவுடன் எடுத்துவிட்டு மறுநாளிரவு பனியில் வைக்கவேண்டும். இந்த விதமாகவேமேற்படி மருந்தை



பத்துநாள்வரை பனியில் வைத்தெடுத்துக் கொள்ள வேண்டும்.

பின்பு (b) யிற் சொல்லியிருக்கின்ற எலுமிச்சம் பழச்சாற்றையும் வெள்ளைப் புனுகையும் ஒன்றாகக் கலந்து கலக்கிக்கொண்டு அந்தக் கலவையை முன் மருந்திற் றெளித்து முன்போலவே பத்துநாள்வரை பனியில் வைத்தெடுக்க வேண்டும். அதன்பின்பு மறுபடியும் அந்த மருந்தில் எலுமிச்சம்பழச் சாற்றை விட்டுப் பழையபடியும் பத்துநாள் வரை பனியில் வைத்தெடுக்க வேண்டும். அப்படி வைத்தெடுத்தவுடன் அந்த மருந்தானது தினையைப்போன்று மணிமணியாகிப் பிரகாசித்துக் கொண்டிருக்கும். பின்பு இதிற் பழையபடியும் முன்போல் எலுமிச்சம் பழச்சாற்றை விட்டுப் பத்து நாள் வரை பனியில் வைத்தெடுக்க வேண்டும். அப்படி யெடுத்துப் பார்த்தால் முன் தினையைப் போல பிரகாசித்துக் கொண்டிருந்த மருந்தானது கடுகைப் போன்ற மணிகளாகிப் பிரகாசித்துக் கொண்டிருக்கும். இதையெடுத்துப் பத்திரப்படுத்திக் கொள்ள வேண்டியது. இந்த மட்டில் முப்புக்குருவின் ஒரு பக்குவ முடிவானது. இதனாலேயே அநேகம் வேதைகளைச் செய்யலாம். இதன் மற்ற பாகங்களையும் வேதைகளையும் அடுத்த காண்டத்தில் விபரமாகச் சொல்லுவாராதலினால் அங்கு பார்த்துத் தெரிந்து கொள்க.

இந்த மட்டில் இக்காண்டங்கள் முடிவு பெற்றன. இதுபோலவே அடுத்த காண்டங்களும் விரைவில்வெளிப்படுமாறு கடவுள் அருள்புரிவராக.

சுபம்

கடவுள் துணை

# இலக்க சௌமிய சாகரம்

தேர்ந்தெடுத்த செய்யுட்களும்,
தெளிபொருள் விளக்க வுரையும்.
நான்காம் பாகம்
ஏழாவது எட்டாவது காண்டம்

———

இஃது
யூநாநி வைத்திய
தாருட்ய விருத்தி போதினி முதலிய
பல வைத்திய சாஸ்திர கிரந்தகர்த்தாவாகிய
ஹக்கீம்
பா. முஹம்மது அப்துல்லா சாஹிபு
அவர்களால்

———

சென்னை
முஸ்லிம் அபிமானி அச்சியந்திரசாலையில்
பதிப்பிக்கப் பட்டது.
FIRST EDITION
1907 ஸு
Registered Copyright

கைவிலை ரூ. 0-14-0 வி-பி ரூ. 1-0-0

இலக்க சௌமிய சாகரம் ஏழாவது
எட்டாவது காண்டங்களின்

## முகவுரை

———

நேயர்களே!

இந்த நான்காம் பாகமாகிய ஏழு எட்டாவது காண்டங்களும் கடவுள் கிருபையால் வெகுசீக்கிரமாகவே வெளிப்பட்டன. இதன் ஒன்றிரண்டாம் பாகங்களைப் பார்வையிட்ட ஒவ்வொரு நண்பர்களும், மற்றையருஞ் செய்து வந்த இடைவிடாத் தூண்டுதலாலேயே இந்த மூன்றாம் நான்காம் பாகங்களை மிகவும் ஊக்கத்தோடு எழுதப்புகுந்து ஏககாலத்தில் வெளியிட்டனம். இனி மற்ற காண்டங்களும் இவ்வாறே விரைவில் வெளிப்படும் இந்த நூலின் அருமை பெருமை முதலியவைகளெல்லாம் இதன் முதற்பாகத்தின் முகவுரையினால் ஒவ்வொருவருக்கும் நன்கு விளங்கும்.

இந்த நான்காம் பாகமானது முந்தின பாகங்களைக் காட்டிலும் அதிக விசேஷம் பொருந்திய தென்பது திண்ணம். இந்த ஏழு எட்டாவது காண்டங்களிலுள்ள முறைகளின் பெருமையோ ஒரு விதத்திற் சொல்லி முடியாது. இதில் முந்தின பாகங்களிலுள்ளவைகளைக் காட்டிலும் சற்று அதிகமாகவே முப்புக்குருவின் தொடர்ச்சிமுறை, மனோசிலைச் சுண்ணம், மிருதார் சிங்கிச் சுண்ணம், கல்நார்பற்பம், துருசுச் செயநீர், நாகசெந்தூரம், வங்கசெந்தூரம், இரசசெந்தூரம், ஜாலமை, ஷை வேறு மை, தனிமுறைச் செந்தூரம், லிங்க மெழுகு முதலிய பல அரிய முறைகளடங்கி யிருக்கின்றன. இம்முறைகளையெல்லாம், சாமானியமாக எவர்க்குங் கிடைக்கத் தக்கனவல்ல. இவைகளின் பெருமை கிரமப்படி செய்தனுபவித்துப் பார்த்தால்தான் தெரியும்.

இத்தகைய முறைகளடங்கிய இந்த ஏழாவது எட்டாவது காண்டங்களாகிய நான்காம் பாகமானது சுமார் 160 பக்கங்களுள்ள புத்தகமாக உயர்ந்த கடிதத்தில் அச்சிடப்பட்டிருக்கின்றது. உலக நலத்தைக் கருதியே இதற்குச் செய்த வேலையை யெதிர் பாராது மிகவுங் குறைந்த விலையே யேற்படுத்தி யிருக்கின்றோம். ஆதலால் நமது அபிமானிகளியாவரும் நம்மாலிதற்குமுன் அச்சிடப்பட்டு வெளியிட்ட பல கிரந்தங்களை தருவித்துப் பார்த்து எம்மை மேம்படுத்தினது போலவே இதனையுந் தருவித்துக் கனப்படுத்துமாறு வேண்டுகின்றேன்.

ஹக்கீம்-ப-மு-அ.

கடவுள் துணை

# இலக்க சௌமிய சாகரம் தேர்ந்தெடுத்த செய்யுட்களும் தெளிபொருள் விளக்க வுரையும்

---

## நாலாம் பாகம்

இதில் 7-வது, 8-வது காண்டங்களடங்கியுள்ளன.

## ஏழாவது காண்டம்

### காப்பு

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

பூவோ நீ தேவோ நீ புயலோ நீ மயலோ நீ
 புதுமை யாக
நாவோ நீ நடுவோ நீ நயமோ நீ கயமோ நீ
 நங்கை மேவுந்
தாவோ நீ தயவோ நீ சுவையோ நீ யவையோ நீ
 தந்தர லுற்ற
ஆவோ நீ யெழுநூற்றின் மருந்துரைக்க வகண்டவெளி
 யாதி காப்பே.

---

இதில் எடுத்தகாரிய மினிது முடியுமாறு தெய்வ வணக்கங் கூறுகின்றார்.

(இ-ள்) கடவுளே உன்னை மிகவு மணநிறைந்த மலரென்று சொல்லலாமா? எப்பொருட்கு மிறைவனென்று சொல்லலாமா? சப்தமேகங்களென்று கூறலாமா? நீக்கற்கரிதாகிய விருப்பமென்று சொல்லலாமா? புதுமையாகிய சொற்களைச் சொல்லும்படியாகிய நாவென்று சொல்லலாமா? எவற்றிற்கும் நடுவாயிருக்கப்பட்ட பொருளென்று கூறலாகுமா? சுகத்தைத் தரும்படியாகிய நன்மை ரூபமென்றுசொல்லலாமா? குன

முதலியவைகளாகச் சொல்லலாமா? மகா லக்குமிவாசஞ் செய்யப்பட்ட சிறந்த ஸ்தலங்களாகச் சொல்லலாமா? அன்பு ரூபமென்று சொல்லலாமா? திருச்சபைக் கூட்டமென்று சொல்லலாமா? இப்பூமியிற் பொருந்திய ஜீவ ராசிகளென்று சொல்லலாமா? எவ்விதத்தாலும் அளவிட்டுச் சொல்லுதற்கரிதாகிய யாவுக்கு மூலமான எமதிறைவனே! இந்த ஏழாவது காண்டத்திலுள்ள முறைகளைச் சொல்ல நீயே முன்னின்று இடையூறின்றிக் காக்கக்கடவாயாக—எ—று.

சூக்ஷ்ம விளக்கம்:—கடவுள் எல்லாமாயல்லதுமாயிருப்பவனாதலினாலே எவ்விதத்தாலும் அளவிட்டுச் சொல்லற்கரிய ஆதியென்றார்.

இதற்கு முந்திய ஆறாவது காண்டத்திற் சில அருமைவாய்ந்த முறைகளைச் சொல்லி, ஈற்றில் (முப்புக்குரு) வென்ற ஓர் அருமையான முறையைத் தொடங்கி ஒருவாறாகச் சொல்லி முடித்தாராயினும் முழுதும் முடிவுபெற வில்லையாதலால் அத்தொடர்ச்சியை இந்தஏழாவது காண்டத்தின் தொடக்கத்திலேயே ஆரம்பித்துச் சில பாடல்களினாலே முடிக்கின்றார். அதன்மேல் இதர விஷயங்களைச் சொல்லத் தொடங்குவார்.

## நூல்

### கொச்சகக் கலிப்பா

இவணி னவிலு மருந்ததனி லியல்புடனே
கவன முறவே காட்டிடுவாய் நூற்றிலொன்று
தவன முறவே தாம்பூரத்தின் றழுக்ககன்று
சிவனா வருண நிறமெனத் திகழ்ந்திடுமே.

.........

இதில் முன் ஆறாவது காண்டத்திற் சொன்ன முப்புக்குருவின் வேதை சொல்கின்றார்.



(இ-ள்) முன் ஆறாவது காண்டத்திற் சொல்லிவந்த முப்புக்குருவாகிய மருந்தைப் பொருத்தத்தோடு தாம்பிரத்தில் நூற்றிற்கொன்று கொடுத்தூதினால், அந்தத் தாம்பிரமானது அழுக்கு நீங்கி நல்ல சிவந்த வருணத்தைப் பொருந்திப் பிரகாசிக்கும். எ—று.

சூட்சம விளக்கம்:—இந்தச் சிவப்பு நிறத்தைப் பெற்ற தாம்பிரமானது இன்ன விதமாமென்பதை அடுத்த பாட்டிற் கூறுவார். (2)

### இதுவுமது

திகழும் பிரபை செறியுமெழின் மாசையென
உகளும் வணிகர் கடையதனி லூற்றிடவே
அகள முறவே யாணியுரை யைந்தாகும்
சிகன முறவே செப்பிட நீ கேண்மினோ.

.........

இதில் முன் உருக்கிய தாம்பிரத்தில் முடிவு சொல்கின்றார்.

(இ-ள்) முன்பாட்டிற் குறித்தபடி யுருக்கிய தாம்பிரமானது அதிற்சொன்னபடியே சிவப்பு நிறத்தைப் பொருந்திப் பிரகாசித்து நல்ல தங்கமாயாகிவிடும். இத் தங்கத்தைச் செட்டிகளுடைய கடையிற் காட்டினால் இதற்கு மாற்று ஐந்தெனச் சொல்வார்கள். இன்னும் மற்ற விபரங்களையுஞ் சொல்வேன் கேட்பாயாக.எ—று.

சூட்சும விளக்கம்:—வெளிப்படை. (3)

### வேறு விருத்தம்

அஞ்சென வயது மாணியி னுரையென் றஞ்சாதே
முஞ்செய லுடனே முப்புவினருமை முயலான
மஞ்சுறு மாதி யறிபன் னலது மறுத்துண்டே
ஏஞ்செய லுடனே யியற்றிடக்கேண்மோவியன்மாக்காள்

......

இதில்முன் ஐந்து மாற்றான தங்கத்தின் பெருமை சொல்கின்றார்.

(இ-ள்) முன்பாட்டிற்குறித்த தங்கமானது ஐந்து மாற்றுடையதுதானேயென்று இலேசாக நினைத்துப் பயப்பட்டுவிடாதே. இந்த முப்பூவினது அருமையை மேலுலகத்திற் பொருந்தியிருக்கின்ற கடவுளேயறிவானல்லது மற்றியாரறிவார்கள். இனிமேற் செய்யும்படியான மார்க்கத்தையுஞ் சொல்வேன் மனிதர்களே கேட்பீர்களாக...எ-று

சூக்ஷும விளக்கம்—முற்பாட்டிற்குறித்த தங்கமானது ஐந்து மாற்றுடையதுதானேயென்று பயப்பட வேண்டாமென்று சொல்லிய குறிப்பால் அதில் ஏதோ விசேஷமிருக்கும் போலத் தோற்றுகிறது. ஆதலின் அது விஷயத்தைத் தெரிந்த மகான்களிடம் கேட்டுணர்க.

கலி விருத்தம்

நவிலு கின்றிடு முப்பதை நன்குறக்
கவலு வேன்கல்வத் துள்ளதைக் காட்டியே
சவுரி யத்தின் றகரையின் சாற்றினால்
தவம தாக வரையிரு சாமமே.

---

இதில் மேற்படி முப்பூவை இனிச் செய்யவேண்டிய வேறுமார்க்கஞ் சொல்லத் தொடங்குகின்றார்.

(இ-ள்) முன்னாலே சொல்லிக்கொண்டு வந்த முப்பூவென்ற மருந்தை நலம் பொருந்தும்படியாகக் கல்வத்திற்போட்டுச் சுகம்பொருந்திய தகரையிலைச் சாற்றை அதில்விட்டு பத்தியோடு இரண்டுசாமம் அரைக்கக் கடவாய்...எ-று.



சூட்சும விளக்கம் :...வெளிப்படை. (5)

இதுவுமது

வெற்றி யாக மருந்தை விரைந்துநீ
நற்ற வத்துட னன்குற வேவழி
விற்றி யாகவே வில்லை யமைத்துநீ
உத்தி யாகவே யோட்டினுள் ளேபொதி.

---

இதில் முன் அரைத்த மருந்தைப் பின் செய்ய வேண்டிய விதஞ் சொல்கின்றார்.

(இ-ள்) முன் பாட்டிற் சொன்னபடி தகரையிலைச் சாறுவிட்டரைத்த மருந்தை வீரம் பொருந்தும்படியாக விரைவோடு வழித்தெடுக்கக் கடவாய். அப்படி வழித்தெடுத்தபின் அதை வில்லையாகச் செய்துஒட்டினுள்ளே வைக்கக்கடவாய்...எ-று.

சூட்சும விளக்கம்:--வெளிப்படை. (6)

இதுவுமது

சீலை யிற்கறி சேர்த்துநீ சீருற
மேலுங் கீழுமா மேவ வமைத்திடு
ஒல மாய்விர லைந்தி னுயரமாய்த்
தால மீதி லுரைந்திடு தாசனே.

---

இதில் மேலே குறித்த பில்லைக்குக் கவசஞ் செய்யு மார்க்கஞ் சொல்கின்றார்.

(இ-ள்) முன்பாட்டிற் சொன்னபடிஒட்டிற்பொதிந்த மருந்திற்கு மேலோடு மூடி களிமண் சீலைதயார்செய்து அதை மேற்படி ஒட்டின் மேலுங் கீழுமாக ஐந்துவிரல் உயரம் அழகாகச் சுற்றி சீலைமண் செய்யக் கடவாய் பூமியிற் பொருந்திய தொண்டனே இன்னும் சொல்வேன் கேள்...எ-று.

சூக்ஷுமவிளக்கம்—வெளிப்படை. (7)

இதுவுமது

காட்டெ ருத்தனைக் கற்புட னேபுடம்
ஈட்ட மாக வியற்று முழமொன்று
மாட்ட மாகவே மத்தியில் வைத்துத்தீ
மூட்டு வாயெழி லாகவே முப்பதை.

இதில் மேற்படி மருந்தைப் புடம்போடும் விதஞ் சொல்கின்றார்.

[இ-ள்] காட்டெருவினாலே ஒழுங்கோடு நெருக்கமாய் ஒரு முழ உயரம் புடம் தயார்செய்வாய் அப்படித் தயாரித்தவுடன் முன் கவசஞ் செய்திருக்கின்ற முப்பூவாகிய மருந்தை அதன் மத்தியில் வைத்து அழகாக நெருப்பை மூட்டி விடக் கடவாய்—எ-று

சூட்சும விளக்கம்:...வெளிப்படை. (8)

வேறு விருத்தம்

எரியானது மமாப்புன் னெடுப்பாயுயர் மருந்தை
விரைவாயெடு கையால்வெகுவேதையுறும் பாதை
பெரியோனருள் மருந்தாமிது பிரட்டாகவே சித்தர்
தெரியாவகை வகையாகவே செய்தார்சில நூலே.

இதில் புடம்போட்ட மருந்தைப் பிரிந்தெடுக்கும் விதஞ் சொல்கின்றார்.

(இ-ள்) முன் பாட்டிற் சொன்னபடி போட்ட புடமானது எரிந்து நெருப்பாறின பிறகு அதில் வைத்த மருந்தைக் கவசத்தோடு எடுத்துக் கொள்வாய். இதனால் அநேக விதமான வேதைகளெல்லா முண்டாகும். இந்த மருந்தானது கடவுளுடைய திருவாக்கினாலே சொல்லப்பட்டது. இது சம்பந்தமாகச் சித்தர்களெல்



லாம் பொய்யாகத் தெரியாத் தனமாய்ப் பல நூற்களைச் செய்து வைத்தார்கள்...எ-று.

சூட்சும விளக்கம்:—இப்பாட்டில் இம்முறையானது கடவுளாலேயே சொல்லப்பட்ட தாதலினால் மிகவும் உயர்வு பொருந்திய தென்றும், இது சம்பந்தமாகச் சித்தர்கள் சொன்னதெல்லாம் புரட்டென்றும் குறிப்பித்தார்.

இதுவுமது

நூலான தனைத்துமிந் நூலென்றிட லாமோ
பாலான தனைத்தும்பசுப் பாலென்றிட லாமோ
காலான தனைத்துமெழிற் கடுங்காலரி யாமோ
கோலானதனைத்துமெழிற் குடிலத்திறையாமோ.

இப்பாட்டில் இந்நூலின் பெருமை சொல்கின்றார்.

(இ-ள்) உலகத்திற் பலரால் சொல்லிவைத்த நூல்களையெல்லாம் இந்த இலக்கசௌமிய சாகரமென்னு நூலுக்குச் சமானமாகுமோ. மற்ற பால்களையெல்லாம் பசுவின் பாலுக்கு நிகராகச் சொல்லலாமோ இப்பூமியிற் சஞ்சரிக்கின்ற காற்றெல்லாம் சண்டமாருதமாகுமா? எல்லாக் கோல்களும் அரசனுடைய செங்கோலாகுமா?—எ-று.

சூட்சும விளக்கம்:...கீழே சொல்லியிருக்கின்ற உதாரணங்களைப்போல மற்ற நூல்களெல்லாம் இந்த நூலுக்கு நிகராக மாட்டாதென்பதைக்குறித்தார். இவ்விடத்திற்சொன்ன நூற்பெருமையானது இத்தமுறையை உத்தேசித்தேயாம்.

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

கையா லெடுத்த மருந்துதனைக்
கவினார் கவசந் தனைப்பிரிக்க

வையா வகத்தி மலர்போல
வணங்கின் வனமாய்த் தோற்றுமது
நையா மருந்தை மறுத்துமெழில்
நடுவாய்க் கல்வத் துள்ளதனில்
செய்யா ளுறுகப் பொருள்வளரத்
திறமா வேதை செப்புவனே.

.........

இதில் புடம்பிரித்தெடுத்த மருந்தைப் பின்செய்யும் விதஞ் சொல்கின்றார்.

(இ-ள்) முன்-8-ம் பாட்டிற் சொன்னபடி புடம் பிரித்துத் கையிலெடுத்தமருந்தை அழகுபொருந்திய கவசத்தைப் பிரித்துப்பார்க்கக் கடவாய். அப்படிப் பார்த்தால் அந்த மருந்தானது அகத்திமலரைப்போன்ற வெள்ளை வண்ணமாகப் பிரகாசித்துக்கொண்டிருக்கும். அதையெடுத்துப் பழையபடியும் சிறப்புப்பொருந்திய கல்வத்திலுள்ளே போடுவாய். இனி மகாலக்குமியானவள் உன்னிடத்திற் பொருந்தும்படியாகவும் பொருளானதுஅதிகரிக்கும் படியாகவுமுள்ள பலம் பொருந்திய வேதைகளைச் சொல்வேன், கேட்பாயாக—எ-று.

சூட்சும விளக்கம்:—இந்தப் பாட்டும் அடுத்த பாட்டும் குளகமாதலால், கல்வத்துள்ளதனில் என்ற மட்டோடு நிறுத்தியிருக்கின்றார் மற்ற விபரங்களை அடுத்த பாட்டிற் சொல்லுவாரென வறிக, (9)

வேறு செய்யுள்.

முன்செய்யுளின் கடையின்றனை மொழிவேனெழில் முதலும்
பண்பாகவே வகரின்முறை கடையும்பகர் ரகரி
லன்பாகவே யைந்தானது மறைவேன்தகர் கடையே
தென்பாகவே சகரின்முறை திரியானதுஞ் செயமே.

.........

இதில் பின் அரைப்புக்கு வேண்டிய சாறுண்டாகுமோர் செடி சொல்லுகின்றார்,



(இ-ள்) இதற்கு முந்தின பாட்டின் ஈற்றடியின் முதலெழுத்தையும், அதேனாடு சிநேகமாக வகரத்தின் முறையாகிய வெழுத்தின் கடையெழுத்தையும், பகரமென்ற எழுத்தையும், ரகரவரியில் ஐந்தாமெழுத்தையும், தகரத்தின் கடைவெழுத்தையும், சகரத்திற்கு முறையாகிய யெழுத்தின் மூன்றாமெழுத்தையும் எடுத்து தைரியத்தோடு சேர்க்கக்கடவாய். அப்படிச் சேர்த்தால் ஓர் செடியின் பெயரமையும். அதனாலாகவேண்டிய விஷயத்தையும் சொல்வேன் கேட்பாயாக—எ-று.

சூட்சும விளக்கம்:—இதற்கு முந்தின பாட்டின் ஈற்றடியின் முதலெழுத்தாவது [செ] வகரத்தின் முறையாகிய வெழுத்து ம- இதன் கடையெழுத்தாவது (ம்) பகரமென்ற எழுத்தாவது [ப] ரகரவரியில் ஐந்தாமெழுத்தாவது (ரு) தகரத்தின் கடையெழுத்தாவது (த்) சகரத்திற்கு முறையாகிய வெழுத்து -த. இதன் மூன்றாமெழுத்தாவது (தி) ஆக இவ்வாறெழுத்துக்களையுஞ் சேர்க்க (செம்பருத்தி) யென்றானது. இதுவே மேற்குறித்த செடியாம். இந்தச் செடியினாலாக வேண்டிய விபரங்களையெல்லாம் அடுத்த பாட்டிற் கூறுவாரென வறிக. எழுத்துக்களின் முறையைப் பற்றி முன்னமேயே பல விடங்களிற் கூறியிருப்பதினால் இங்கு சொல்லவேண்டியது அனாவசியமாம். (12)

இதுவுமது

செயமாகிய வலையானதிற் றிகழுற்றிடுஞ் சாற்றில்
நயமாகவே யரைப்பாவெழில் நவில்வேனிரு சாமம்
பயமாகவே வழித்தேயதைப் பரிவாகவே யோட்டில்
தயவாகவைத் திடுவாய்சகந் தனிலேயுறு தாசா.

———

இதில் முன்சொன்ன செம்பருத்தியிலைச் சாற்றினாலரைப்புச் சொல்கின்றார்.

[இ—ள்] முன் 11-ம் பாட்டிற் சொன்னபடி கல்வத்தில்போட்ட மருந்தை இதற்கு முன்பாட்டிற்கூறிய செயம்பொருந்திய செம்பருத்தியிலைச் சாற்றினாலே நலம் பொருந்தும்படியாக 6 மணி நேரம் வரை அரைக்கக்கடவாய். அப்படி அரைத்த பின் அதைப் பயபக்தியோடு வழித்தெடுத்து அன்புடனே ஓட்டில்வைக்கக் கடவாய். தொண்டனே. இன்னும் சொல்வேன் கேள் எ—று.

சூட்சும விளக்கம்:—வெளிப்படை. (13)

கலி விருத்தம்

களியின் சீலை கவச மிறுக்குவாய்
வளியி னின்றிட வைந்து விரலன்றே
ஒளிவ தாகப் புடமுழ மொன்றரை
நளிவ தாக வியற்றிடு நன்குற.

—

இதில் முன் ஓட்டில்போட்ட மருந்திற்குக் கவசம் செய்யும் விதம் சொல்கின்றார்.

(இ—ள்) முன்குறித்தபடி ஓட்டில்போட்ட மருந்திற்கு மேலோடுமூடிக் களிமண்சீலையால் ஐந்து விரல் உயரம் பலமாகக் கவசம் செய்யக் கடவாய். அப்படி கவசம் செய்தபின் விளங்கும்படியாக ஒன்றரை முழ அளவு புடம் தயார்செய்வாய். எ—று.

சூக்ஷம விளக்கம் முன்புடத்தில் மருந்தை பில்லை செய்து ஓட்டில்வைக்கச் சொன்னவர் இதில் ஒன்றும் சொல்லவில்லை. ஆயினும் முன் பில்லை செய்து போடச் சொல்லியிருப்பதால் இதற்கும் அவ்வாறுதான் ஓட்டில்வைத்து சீலைமண் செய்து புடம்போடவேண்டும்.

இதுவுமது

இயற்று வாய்புட மத்தியி லின்புற
மயத்த மான மருந்தை நீ மாட்டியே



கியத்த மாகவே தீயதன் மீதிலே
முயத்த மாகவே மூட்டிடு வாமரோ.

.........

இதில் புடம்போடும் விதம் சொல்கின்றார்.

(இ—ள்) முந்தின பாட்டிற்குறித்தபடியேபுடத்தைத் தயார் செய்து அதன் நடுவே இன்பம் பொருந்தும்படியாக முன் கவசம் செய்து வைத்திருக்கிற மருந்தை வைத்து அப்புடத்தின் மீது நெருப்பைச் சிறப்பாக மூட்டிவிடக் கடவாய்.எ...று.

சூக்ஷம விளக்கம்...வெளிப்படை. 15

இதுவுமது

அன லமர்ந்தபின் னங்கையி னாலெடு
கனல தாகவே கவசமே நீக்கிடி
லுனம தாக வுயங்கி யெழிலுற
வனம தாக வயங்கு மருந்துமே.

இதில் புடம்பிரிக்கும் விதம் சொல்கின்றார்.

.........

(இ...ள்) முன் சொன்னபடி புடத்தில் நெருப்பு மூட்டி எரிந்தடங்கினபின் மருந்தை அழகிய கையினாலே யெடுக்கக் கடவாய், அப்படி யெடுத்தவுடன் அதில் பொதிந்திருக்கின்ற கவசத்தை நீக்கினால் அம்மருந்தானது அழகு பொருந்திய நிறத்தோடு பிரகாசித்துக் கொண்டிருக்கும். எ—று.

சூக்ஷம விளக்கம்:—வெளிப்படை. (16)

இதுவுமது

மருந்து தன்னை மறுத்தெழிற் கல்வத்திற்
பொருந்தி டப்புக ழாகப் புரட்டியே

முருந்த மாகவே முப்பெனு மூர்த்தியைப்
பருந்த மாகவே பண்ணும் பதனமே.

.........

இதில் முப்பூவின் முடிவுச் சொல்கின்றார்.

(இ—ள்) மேற்பாட்டிற் குறித்தபடி புடம் பிரித்தெடுத்த மருந்தைப் பழையபடியும் கல்வத்தில் போட்டுப் புகழ்ச்சியோடு நன்றாயரைத்து இந்த முப்பூவென்று சொல்லப்பட்ட சிரேஷ்டம் பொருந்திய கடவுளுக்குச் சமானமாகிய மருந்தைக் கெட்டியாகப் பத்திரப்படுத்தக் கடவாய்.எ—று,

சூக்ஷும விளக்கம் :—இம்மருந்தின் உயர்வு நோக்கிக் கடவுளுக்குச்சமமானதென்றார். (17)

இதுவுமது

பதனம் பண்ணு மருந்ததிற் பண்புடன்
ததன மாகவே தாம்பூரந் தன்னிலே
நுதன மாகவே நூற்றினி லொன்றென
இதன மாகவே யீந்திடக் கேண்மினோ

.........

இதுமுதல் இம்மருந்தின் வேதை சொல்லத் தொடங்குகின்றார்.

(இ-ள்) மேற்படி மருந்தை முன்சொன்ன கிரமப்படியே பதனம் பண்ணக் கடவாய். அப்படிச் செய்து கொண்டபின் அதில் சிநேகத்தோடு தாம்பிரத்தில் நூற்றிற்கொன்று கொடுத்தூதக் கடவாய். அப்படிச் செய்தால் அதனாலாகும் விதத்தையுஞ் சொல்வேன் கேட்பாயாக. எ...று.

சூக்ஷும விளக்கம்:—வெளிப்படை. [18]



இதுவுமது

தாம்பி ரத்தின் றழுக்கது மற்றுமே
காம்பு ரித்துத் கதிரொளி யாகவே
ஆம்பு ரித்திட வாணி யுரைதனில்
வேம்பு ரித்திட வேழென் றியம்வார்.

———

இதில் முன் சொன்ன தாம்பிரம் இன்ன விதமாகுமென்று சொல்கின்றார்.

(இ-ள்) முன்பாட்டிற் சொன்னபடி ஊதிய தாம்பிரமானது அழுக்கு நீக்கி மிகவும் பரிசுத்தமாகப்பிரகாசித்து ஆச்சரியப் படும்படியாக ஏழு மாற்றுள்ள தங்கமாகும். எ—று.

சூக்ஷும விளக்கம்:—வெளிப்படை. (19)

இதுவுமது

வங்கந் தன்னில் வயங்கு மருந்ததை
மூங்க மாகவே முன்னியல் வாறுபோல்
பொங்க மாகவே பொற்புட னீயவே
துங்க மாகச் சுருக்கிடு நீயதை.

.........

இதில் வேறு வேதைச் சொல்கின்றார்.

(இ-ள்) இன்னும் மேற்படி மருந்தை வங்கத்தில் முன் சொன்ன கிரமப்படியே நூற்றிற்கொன்று அழகாகக் கொடுத்துச் சிறப்புடனே ஊதக்கடவாய். எ—று.

(இ-ள்) இன்னும் இந்த மருந்தை முன் சொன்னவைகளைத்தவிர மற்ற நவலோகங்களி லெதிலானாலும் முந்தின கிரமப்படியே நூற்றிற்கொன்று கொடுத்தூதினால் அவைகளெல்லாம் தங்கள் தங்களுடையகுலத்தின்

இயல்பு மாறி நல்ல சிவந்த நிறமாய்ப் பழுத்து கனகத்தைப் போன்ற வண்ணமுடையவைகளாகும். இவ்வாறாகிய தங்கங்களுக்குக் கடையில் விலை மதிக்கும்படியாக மாற்று ஏழாகும். நீ திண்ணமாக அறியக்கடவாய். எ-று.

சூட்சும விளக்கம்:—இம்முறையின் வேதைகளை இத்தோடு முடித்துவிட்டு இனி வேறு முறை சொல்லத் தொடங்குகின்றார். (23)

பள்ளுச்சந்த விருத்தம்

நவ லோகமில் நவிலும் வாறுபோல்
நாட்டிடு வாயிதைக் கோட்டியுடன்
தவம தாகவே தன் குலத்தின்
றமுக் ககன்றது பழுக்கு மதாய்
கவம தாகவே கனக வனமாய்க்
கதிக்க வேவிலை மதிக்கவே
அவம தாகவே யாணி யுரையது
மன்புட னேழது தென்புடனே.

இதில் இந்த மருந்தால் மற்ற லோகங்களெல்லா மின்ன வாறாகு மென்பதைக் கூறுகிறார்.

இதுவுமது

மஞ்ச ளென்ன வனமது போலவே
வஞ்ச மாகவே யாணி யுரைதன்னில்
இஞ்ச மாகவே யேழரை கண்டிடுந்
தஞ்ச மாகவே தான்வே றுறைகுவேன்.

இதில் முன் குறித்த வங்கம் இன்ன விதமாகு மென்று சொல்கின்றார்.

(இ-ள்) மேலே சொன்ன கிரமப்படி ஊதிய வங்கமானது மஞ்சளைப் போன்ற நிறமுடையதாகிய தங்கத்தினுடைய மாற்றில் இது ஏழரை மாற்றுக் காணும் இனிச் சேர்க்கையாக வேறு வேதையும் சொல்வேன் கேட்கக் கடவாய். எ—று.



சூக்ஷ்ம விளக்கம்;—வெளிப்படை. (24)

மனோசிலைச் சுண்ணம்

நொண்டிச் சிந்து

கூவுறை மாந்தர்களே—மருந்தொன்று
கூறுகி றேன்வெகு வேதையுடன்
வாயின்றலை முறையினத்தின்—முன்னோனும்
வழுத்துவே னிருதளை யகல்பதினால்
தாவின்றலை முறையினத்தின்—றிரியினஞ்
சாற்றிடக்கேள் மலைகடை மருந்ததனில்
மேவியெடு பலமதொன்று—வேதையினி
விள்ளுகி றேனினித் தெள்ளமுற வே.

இதில் இம்முறைக்காம் பிரதமச் சரக்கொன்று சொல்கின்றார்.

(இ-ள்) பூமியிற் பொருந்திய மனிதர்களே! மிகவுஞ் சமர்த்தோடு ஓர் மருந்தைச் சொல்வேன் கேட்பீர்களாக வ-என்ற எழுத்திற்குச் சிரேஷ்டம் பொருந்திய முறையான ஒரெழுத்து வரியில் முதலெழுத்தோடு இந்தப் பாட்டின் இரண்டாவ தடியிற் பதினான்கா மெழுத்திற் கடுத்த வெழுத்தையும்-த-என்ற எழுத்திற்குமுறையான ஒரெழுத்து வரியில் மூன்றாவ தெழுத்தையும், மலையென்ற சொல்லின் கடையெழுத்தையும் சேர்த்தால் எப்பெயரமையுமோ அப்பெயருள்ள சரக்கில் ஓர் பலம் பொருத்தமாக எடுத்துக் கொள்ளக் கடவாய். இதையினிச் செய்ய வேண்டிய மார்க்கத்தையுஞ் சொல்வேன் கேட்பாயாக. எ—று.

சூட்சும விளக்கம் :—வ-என்ற எழுத்திற்கு முறையான ஒரெழுத்தாவது-மகரம் இதன் முதலெழுத்தாவது (ம) இந்தப் பாட்டின் இரண்டாவ தடியிற் பதினான்காமெழுத்திற் கடுத்த வெழுத்தாவது (னோ) த-என்ற எழுத்திற்கு முறையான ஒரெழுத்தாவது-ச-இந்தச் சகரவரியில் மூன்றா மெழுத்தாவது (சி) மலை-மலையென்ற சொல்லின் கடையெழுத்தாவது (லை) ஆக இந்த நான்கெழுத்துக்களையும் முறையே சேர்க்க (மனோசிலை) யென்றானது. இதுவே மேற்குறித்த சரக்காம். இதிலேயே 35 கிராம் எடுத்துக் கொள்ள வேண்டியது.

விபரம்

மனோசிலை 35 கிராம்

வேறு செய்யுள்

வெற்றியுட னேவலுமை மேவுகுரு மூலி
பற்றியுறுஞ் சாறதனிற் பண்புறுமுப் பூவில்
அத்திரம தாகவே யரிசியெடை தூக்கி
மற்றிறமாச் சேர்த்ததை வழித்துமே யெடுத்து

.........

இதில் மேற்படி மனோசிலைக் கட்டியை இனிச் செய்யவேண்டிய விபரஞ் சொல்லத் தொடங்குகின்றார்.

(இ-ள்) மிகவும் வீரத்தோடு வல்லமை யதிகரித்த குருமூலி யென்று சொல்லப்பட்ட திருநூற்றுப்பச்சையிலைச் சாற்றில் முன்னே முடிந்திருக்கின்ற முப்பூவில் ஓர் அரிசியெடை யெடுத்து வளப்பம் பொருந்தும்படியாகப் போட்டுக் குழப்பி அதை வழித்தெடுத்து. எ—று.

சூட்சும விளக்கம்:-இந்தப் பாட்டும் அடுத்த பாட்டும் குளகமாகையால் வழித்தெடுத்து என்ற வரையில் நிறுத்தி யிருக்கின்றார். மற்ற விபரங்களை யெல்லாம் அடுத்தபாட்டிற் சொல்லுவா ரெவறிக.



இதுவுமது

சொல்லுமெழிற் கட்டியின்மேற் றுங்கமுறப் பூசி
நல்லியலில் மூங்கைதனில் நன்குற வியற்றும்
மல்லியலில் மூசைதனில் மாட்டிடு மருந்தை
வெல்லியலில் வேதையினி விண்டிடவே கேண்மின்.

.........

இதில் முன்பாட்டிற் சொன்ன குழம்பை மனோசிலைக் கட்டிக்குப் பூசுகின்ற மற்ற விபரங்கள் சொல்கின்றார்.

(இ-ள்) மேலே சொன்னபடி வழித்தெடுத்த முப்பூ திருநூற்றுப் பச்சை யிலைச் சாற்றுக் குழம்பை அழகு பொருந்திய முன் மனோசிலைக் கட்டியின்மேல் உயர்வாகப் பூசி நல்ல தன்மையை யுடைய கும்பிடுகிளிஞ்சிலினால் செய்யப்பட்ட வளப்பம் பொருந்திய மூசையிற் அக்கட்டியைப் போடக் கடவாய். இனி மேலே நடக்க வேண்டிய வேதைகளையும் வல்லமையாகச் சொல்வேன் கேட்கக் கடவாய். எ—று.

சூக்ஷும விளக்கம்:—கும்பிடு கிளிஞ்சிலினால் மூசை செய்யும் விபரம் முந்தின காண்டங்களிற் பலவிடங்களிற் சொல்லி யிருப்பதினாலே அந்தப்படி செய்து கொள்க. (25)

இதுவுமது

சுண்ணமதில் வெண்கருவைத் தோய்த்தினிதரைத்துத்
திண்ணமுறச் சீலையிற் சிறந்ததைப் புரட்டி
எண்ணமுட னேகவச மேழதை யிறுக்கு
வண்ணமுடன் சீலைகளி லாட்டுவிர லைந்தே

.........

இதில் மனோசிலைக் கட்டிக்குக் கவசஞ் செய்யுமார்க்கஞ் சொல்கின்றார்.

(இ-ள்) சுண்ணாம்பில் முட்டையின் வெள்ளைக் கருவை விட்டு இனிதாக அரைத்து அதை வழித்துப் பலம் பொருந்தும் படியாகச் சீலையிற் றோய்த்துப் புரட்டி மேற்படி மனோசிலைக் கட்டி யடங்கி யிருக்கின்ற மூசையின் மேல் ஏழுசீலை சுற்றிக் கவசஞ்செய்து அதன் மேல் அழகானக் களிமண் சீலை ஐந்து விரற்கனம் செய்து விடக்கடவாய். எ—று

சூக்ஷும விளக்கம்:— முதலில் கோழி முட்டை வெள்ளைக் கருவையும் சுண்ணாம்பையுஞ் சேர்த் தரைத்த குழம்பிற் றோய்த்த சீலையால் ஏழுசீலை செய்து அதன்மேற் களிமண் சீலை ஐந்து விரற்கனஞ் செய்யவேண்டும்.

கொச்சகக் கலிப்பா

புடமே யுடனே பொற்புடனே முழமொன்றரை
திடமா வியற்றிச் சீலைசெய்யு மூசைதன்னை
மடமாப் படமா மற்றிதனில் வைத்திலே
கடமாக் கனலே பரப்பிடுங் கரளைகளே.

———

இதில் மேலே சொல்லிய மூசையைப் புடம்போடு மார்க்கஞ் சொல்கின்றார்.

(இ-ள்) முன் சொன்னபடி கவசஞ் செய்தவுடன் உடனே அழகாக ஒன்றரை முழப்புடஞ் சித்தப்படுத்தி அதன் மத்தியில் மேற்படி மூசையைப் பக்குவமாக வைத்து அதில் நெருப்பை மூட்டிவிடக் கடவீர். மனிதர்களே இன்னமுஞ் சொல்வேன் கேட்பீர்களாக. எ—று.

சூட்சும விளக்கம் : வெளிப்படை. [27]

கலி விருத்தம்

வெந்து நீறி வியனோ டமர்ந்தபின்
எந்த மாத வெடுத்திடு மூசையைக்



கந்த மாகக் கவசத்தை நீக்கிடிற்
சொந்த மாகத் துலங்கு மருந்துமே.

.........

மூசையைப் பக்குவமாகப் பிரித்தெடுக்கக் கடவாய். அப்படிப் பிரித்தெடுத்துக் கொண்டவுடன் அதன் மேலுள்ள கவசத்தை நீக்கிவிட்டால் அதனுள்ளிருக்கு மருந்தானது மிகவும் பிரகாசத்தோடிருக்கும். எ...று.

சூட்சம விளக்கம்:- வெளிப்படை. (28)

இதுவுமது

வெண்மை யாகும் வியனுறு சுண்ணமாந்
தண்மை யாகவே தாம்பிரச் செம்பதிற்
பண்மை யாகப் பதனமே பண்ணிடு
கண்மை யாகவே வேதை கழறுவேன்.

.........

இதில் மேற்படி மருந்தின் தன்மை சொல்கின்றார்.

(இ-ள்) முந்தின பாட்டிற் சொன்னபடி பிரித் தெடுத்த மருந்தானது வெண்மை நிறம் பொருந்திய ஆச்சரியகரமான சுண்ணமாயிருக்கும். அதை நேயத் தோடு தாம்பிரத்தினாற்செய்த ஓர் சிமிழில் பக்குவமாகப் பத்திரப்படுத்தக் கடவாய். இனி இதனாலாகப்பட்ட வேதைகளைச் சொல்வேன் கேட்பாயாக. எ—று.

சூட்சும விளக்கம்:—வெளிப்படை. (29)

இதுவுமது

கரும்பொன் றன்னிலே காட்டிடுநூற்றொன்றை
விரும்பி மேனி மினுமினுப் பாகியே
மரும்ப மாகவே மஞ்சணி யாய்வனம்
.........................

——

இதில் மேற்படி மருந்தின் ஓர்வேதை சொல்கின்றார்.

(இ-ள்) இந்த மனோசிலைச் சுண்ணத்தை கரும்பொன் என்று சொல்லப் படுவதாகிய இரும்பிலே நூற்றிற்கொன்று கொடுத்தூதக் கடவாய். அப்படிச் செய்தால் அந்த இரும்பானது மினுமினுப்பை யடைந்து நல்ல மஞ்சணிற முடையதாகி எட்டுமாற்றுள்ள தங்கமாகும்—எ-று.

சூக்ஷ்ம விளக்கம்:—இரும்பையும் பொன்னாகச் செய்யுமென்றால் இந்த மனோசிலைச் சுண்ணத்தினுடைய பெருமையை யாவரால் சொல்லமுடியும். இதை முறைப்படியே செய்து பார்த்தால் இதனருமை தெரியும்,

இதுவுமது

வெற்றி யாகவே வெள்ளுவ னாகத்தில்
உற்ற மாகவே நூற்றொன்றி லொன்றிதை
நற்ற வத்துட னீயவே நன்குற
மற்றி யாக வரையுரை யேழரை.

.........

இதில் வேறு வேதை சொல்கின்றார்.

(இ-ள்) ஜெயம் பொருந்தும் படியாகச் சொல்வேன் கேட்பீர்களாக இன்னும் மேற்படி மனோசிலைச் சுண்ணத்தை நாகமென்ற லோகத்தில் நூற்றொன்றில் ஒன்று கொடுத்தூதினால் அந்த நாகமானது நலம் பொருந்தும்படியாக ஏழரைமாற்றுள்ள தங்கமாகும்.

சூக்ஷ்ம விளக்கம்:- வெளிப்படை. (31)

கொச்சகக் கலிப்பா

நன்றாக வங்கமதில் நன்குறவே நூற்றிலொன்று
வண்டாக வீய்ந்திடவே வடிவுட னிலங்கிடுமே
மண்டாக மஞ்சணியா வாணியா யுரையதனில்
எண்டாக வெழிலென விலங்கிடு மாந்தர்களே.

.........



இதில் மற்றொருவேதை சொல்கின்றார்.

(இ-ள்) இன்னு மேற்படி சுண்ணத்தை வங்கத்தில் நலமாக நூற்றிலொன்று வளப்பத்தோடு கொடுத்தூதினால், அந்த வங்கமானது நல்ல அழகோடு பிரகாசித்து மஞ்சணிறத்தையுடையதாகி எட்டு மாற்றுள்ள தங்கமாகத்துலங்கும். மனிதர்களே இன்னும் சொல்வேன் கேட்பீர்களாக...எ-று.

சூட்சும விளக்கம்:—வெளிப்படை. (32)

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

தாம்பிரந் தன்னிலந்த தயங்கெழின் மருந்து தன்னை
வீம்புற நூற்றி லொன்று வியப்புட னீவை யாகில்
தேம்புறு தளுக்க கன்று செறிந்திடும் தனித்துவண்டு
வாம்புறு வாணி மாற்று மறையுமே ழரைய தாமே.

.........

இதில் பின்னு மொருவேதை சொல்கிறார்.

(இ-ள்) தாம்பிரமென்ற லோகத்தில் மேற்படி மனோசிலைச்சுண்ணத்தை அதிக உக்கிரத்தோடு நூற்றிற்கொன்று ஆச்சரியத்தோடு கொடுத்தூதினால் அந்தத் தாம்பிரத்தினுடைய அழுக்காவது நீங்கி நன்றாய்த்துவண்டுருகி ஏழரைமாற்றுள்ள தங்கமாகும்.

சூட்சும விளக்கம்—: வெளிப்படை, (33)

இதுவுமது

கசடறுவெள்ளிதன்னிற் கதிக்கமுந்நூற்றிலொன்று
பிசகற வீய்வா யாகிற் பீடுறு வெண்மை யற்று

நசையுடன் மஞ்சளாகி நடுகதிர்ப் பிரபை யெய்தி
வசையற வயதீ ராறு வணிகரி னுரையி லன்றே.

.........

இதில் வேறு வேதை சொல்கின்றார்.

[இ-ள்] குற்றமற்ற வெள்ளியில் மேற்கண்ட சுண்ணத்தை முந்நூற்றிற்கொன்று களங்கமறக் கொடுத்தூதினால் அந்த வெள்ளியினுடைய வெண்மை நிறமானது நீங்கி நேயத்தோடு மஞ்சணிறத்தை யடைந்து சூரியனைப்போன்ற பிரகாசமுள்ளதாகி இழிவற்ற பன்னிரண்டு மாற்றுள்ள தங்கமாகும்...எ-று.

சூட்சும விளக்கம்:—வெளிப்படை. (34)

மிருதார்சிங்கிச் சுண்ணம்

சந்த விருத்தம்

பணியின்படம் பதிமாந்தரே பகர்வேனொரு மருந்து
தணிவின்றிய தகர்தம்பியுந் தயவாய்ரகர் கடையுங்
கணியாகவே சிலைமுன்ஙகர் கடையுங்ககர் திரியே
மினிவென்றிடு பேர்முன்னொடு விள்வேன்ரக ரைந்து.

.........

இதில் இம்முறைக்காம் ஓர் சரக்குச் சொல்கின்றார்:

[இ-ள்] ஆதிசேடனுடைய பணாமகுடத்திற்றங்கிய பூமியிலிருக்கின்ற மனிதர்களே இன்னொருமருந்தைச் சொல்வேன் கேட்பீர்களாக. குறைவற்ற தகரத்திற்குத் தம்பியாகிய வெழுத்தையும்,ரககாரத்தின் கடையெழுத்தையும், சிலையென்ற பெயரின் முதலெழுத்தையும், ஙகரத்தின் கடையெழுத்தையும், ககரத்தின் மூன்றாமெழுத்தையும், மிணிவு என்ற பெயரின்முதலெழுத்தையும், ரகரத்தின் ஐந்தா மெழுத்தையும் எடுத்து முறையே சேர்க்கக்கடவாய். அப்படிச் சேர்த்தால் ஓர் சரக்கினுடைய பெயரமையும் ..எ-று.



சூட்சும விளக்கம்:...தகரத்திற்குத் தம்பியாகிய வெழுத்தாவது (தா) ரகரத்தின் கடையெழுத்தாவது (ர்) சிலை யென்ற பெயரின் முதலெழுத்தாவது (சி) ஙகரத்தின் கடையெழுத்தாவது (ங்) ககரத்தின் மூன்றாமெழுத்தாவது (கி) மிணிவு என்ற பதத்தின் முதலெழுத்தாவது [மி] ரகரத்தின் ஐந்தாமெழுத்தாவது (ரு) ஆக இவ்வேழெழுத்துக்களையு முறையே சேர்க்க(தார் சிங்கி மிரு) என்றானது. இது இப்படியிருந்த போதிலும் சரக்கின் பெயர் நோக்கி (மிருதார்சிங்கி) யென மாற்றிக் கொள்ள வேண்டியது. இதுவே மேற்குறித்த சரக்கின் பெயராம்.இதன் நிறை முதலியவற்றை அடுத்த பாட்டிற் கூறுவாரெனவறிக. (35)

இதுவுமது

இவண்செப்பிய மருந்தானதி லியல்பாயொரு பலமே
கவனத்துடன்வாங்கியதைக் கவினுற்றிடக்கேண்மே.
தவமென்றிடு முன்னோனுற முறையானவன் றம்பி
அவன்மாரர்க சென்றுணகர் தனிலேயக லெட்டே.

———

இதில் முன் சரக்கின் நிறை முதலியன கூறுகின்றார்.

(இ.ள்) மேலே சொல்லிய மிருதார்சிங்கி யென்ற மருந்தில் பொருத்தமாக ஒருபலம் வாங்கிக்கொள்ளக் கடவாய். இம்மருந்தை அழகுபெறச் செய்யும் படியாக ஓர் மார்க்கத்தையுஞ் சொல்வேன் கேட்பாயாக-தவமென்று சொல்லப்பட்ட பதத்தின் முதலெழுத்திற்கு முறையான வெழுத்திற்குத் தம்பியாகிய வெழுத்தையும், அதனோடு ரகரத்தையும், ணகர வரியில் முதலெழுத்தைத் தள்ளி இரண்டா மெழுத்திலிருந் தெண்ணிவந்த எட்டா மெழுத்தையும் சேர்த்து அதனாலமையப்பட்ட பெயருள்ள ஓர் வஸ்துவைக் கண்டுபிடிக்கக் கடவாய்—எ-று.

சூட்சும விளக்கம்:—தவமென்று சொல்லப்பட்ட பதத்திற்கு முதலெழுத்தாவது-த-இதற்கு முறையான வெழுத்தாவது-ச-இதன் தம்பியாகிய வெழுத்தாவது (சா) ரகரமாவது (ர) ணகரவரியின் முதலெழுத்தைத் தள்ளி இரண்டா மெழுத்திலிருந் தெண்ணிவந்த எட்டா மெழுத்தாவது [ணை] ஆக இம்மூன்றெழுத்துக்களைக் யுங் கூட்ட (சாரணை) யென்றானது இதை (வெள்ளைச் சராரணை) யெனக்கொள்ள வேண்டியது. இதுவிவரம் அடுத்த பாட்டிற் கூறுகின்றார், இந்த வெள்ளைச் சாரணையினால் மேலே சொல்லிய மிருதார்சிங்கிக்கு ஆகவேண்டிய காரியத்தைப் பின் சொல்லுவாரென வறிக. (36)

விபரம்

மிருதார் சிங்கி 35 கிராம்

இதுவுமது

வனமானது தவளமதில் வகையாய்வருஞ் சாற்றில்
முனமேகவில் மூப்பானதில் முயல்வேனோர ரரிசி
கனமானதைக் கலந்தேயெழிற் கவினுற்றமுன் மருந்தில்
தனமாகவே கவசமது தயவாகச்செய் நபமாய்

.........

இதில் மேற்குறித்த வெள்ளைச் சாரணையில் மிருதார்சிங்கியைச் செய்யவேண்டிய விதஞ் சொல்கின்றார்.

(இ-ள்) முன் பாட்டிற் குறித்த சாரணையில் வெள்ளை நிறம் பொருந்தியதின் சாற்றிலே இக்காண்டத்தின் முற்பாகத்திலே சொல்லி யிருக்கின்ற முப்புக் குருவில் ஓர் அரிசியெடை யெடுத்துக் கலந்து அந்தக் கலவையை முன்னே சொல்லி யிருக்கின்ற மிருதார் சிங்கிக்கு சிநேகத்தோடு நலம் பொருந்தும்படியாகக் கவசஞ் செய்யக் கடவாய்—எ-று.



சூட்சும விளக்கம்...சாரணையில் வெள்ளை நிறம் பொருந்தியதின் சாற்றினாலேயென்ற வளவில் வெள்ளைச் சாரணையென ஏற்பட்டது. இதை முன் பாட்டிலுங் குறித்துக் காட்டி யிருக்கின்றோம். ஆகவே வெள்ளைச் சாரணைச் சாற்றில் முப்புக் குருவைக் கலந்து அதை மிருதார் சிங்கிக்குக் கவசஞ் செய்ய வேண்டுமென ஏற்பட்டது. இதனால் மிருதார்சிங்கி ஒரே கட்டியா யிருக்கவேண்டு மென்று புலப்படுகிறது. 37

இதுவுமது

நீராளதை மருந்துண்டபின் நினைவோடுநீ மூங்கை
தாராகிய மூசைதனிற் றயவாகவே நடுவாய்
காராகவே கவசமிடு கழல்வேன் முன்வாறாய்ப்
பாராகவே யியற்றுமிப் படியுற்றிடு மாக்காள்.

......

இதில் மேற்படி மருந்திற்குக் கவசம் செய்யும் மார்க்கம் சொல்கின்றார்.

(இ—ள்) முன் சொன்னபடி வெள்ளைச்சாரணை முப்புக்குருக் கலவை பூசிய மிருதார் சிங்கிக் கட்டியானது நன்றாய்க் காய்ந்த பிற்பாடு அதைக் கும்பிடுகி ளிஞ்சிலினாற் செய்யப்பட்ட மூசையினுள்ளே போடக் கடவாய். அப்படிப் போட்டபின் முன் மனோசிலைச் சுண்ண முறையிற் சொல்லி யிருக்கின்ற கிரமப்படி கவசம் செய்யக் கடவீர்கள். பூமியிற் பொருந்திய மனிதர்களே! இன்னும் கேளுங்கள்.எ—று.

சூட்சும விளக்கம்—கவசம் செய்யவேண்டிய விபரம் இதற்கு முன் மனோசிலைச் சுண்ணமுறையில் சொல்லப்பட்டிருப்பதால் அதைப் பார்த்து அதன்படி கவசம் செய்துகொள்க. 38

இதுவுமது

வியனாகவே யெருவின்புடம் விள்வேன்முழமொன்று
கயனாகவே யியற்றியதிற் கருவாகிய மருந்தை
நயமாகவே நடுவாய்முனம் நவில்போல வமைத்துக்
கயமாகவே மனமாகிய கடிகொண்டிடு மாக்காள்.

.........

இதில் மேற்படி மருந்திற்குப் புடம் போடும் விதம் சொல்கின்றார்.

[இ—ள்] மேலே சொன்னபடி கவசம் செய்து கொண்ட பிற்பாடு ஆச்சரியம் பொருந்தும்படியாக எரு வினால் ஒரு முழப்புடம் தயார் செய்து அதில் முன் கவசம் செய்திருக்கின்ற மருந்தை நடுவில் வைக்கக் கடவீர்கள். அப்படி வைத்த பிற்பாடு மனிதர்களே முன் முறையில் சொன்னது போலவே நெருப்பை மூட்டி யெரியுமட்டும் காத்திருப்பீர்களாக. எ—று.

சூட்சும விளக்கம்—இம்மருந்தின் அருமை நோக்கிக் காத்திருக்க வேண்டுமென்று கூறினார். இந்தப் புடத் திற்கு எரு இன்ன எருவென்று சொல்லப்படவில்லையா யினும் முன்போற் செய் என்று அடிக்கடி சொல்லப்பட் டிருப்பதால் முன் மனோசிலைச் சுண்ண முறையில் என்ன எரு சொல்லப்பட் டிருக்கின்றதோ அந்த எரு வையே இதற்குங் கொள்க. 39

இதுவுமது

புடமானதைப் பிரித்தேயெழிற் புறமான மருந்தைக்
கடமாகவே கவசந்தனைக் கையால்நிகழ்த் திடவே
வடமாவெள்ளை வனமாகவே யலர்ந்தேயெழிற் சுண்ணம்
கடவுட்டனை மனமீதினிற் கதியாகவே துதிநீ

......



இதில் இம்மருந்தின் முடிவு கூறுகின்றார்.

(இ—ள்) முன் பாட்டில் குறித்தபடி நெருப்பு மூட்டி யெரிந்தடங்கினபின் புடத்தைப் பிரித்து அழகு பொருந் திய அந்த மருந்தைக் கையாலெடுத்துக் கவசத்தைப் பிரித்துப் பார்க்க அந்த மருந்தானது வெள்ளை நிறத் தைப் பொருந்திய அழகான சுண்ணமாகி யிருக்கும். அதை யெடுத்துப் பத்திரம் பண்ணிக்கொண்டு கடவுளை மனதில் தியானித்துக் கொள்ளக் கடவாய். எ—று.

சூட்சும விளக்கம்...மருந்து இடையூறின்றி நிறை வேற்றுவதைப் பற்றிக் கடவுளை வழிபட வேண்டு மென்றார். (40)

கலி விருத்தம்

வெள்ளி தன்னில் விரைவுட னீவகை
உள்ள மேமகிழ்ந் தோதுவன் மாக்களே
முள்ள மாகமுந் நூற்றினி லொன்றென
நள்ள லாகவே நாட்டுவாய் நன்குற

.........

இதுமுதல் மேற்படி மிருதார்சிங்கிச் சுண்ணத்தின் வேதை சொல்கின்றார்.

(இ...ள்) இந்த மிருதார்சிங்கிச் சுண்ணத்தை வெள்ளியிற் கொடுக்கும்படியான விதத்தைச் சொல் வேன் மனிதர்களே கேட்பீர்களாக. மேற்கண்ட வெள்ளி யில் இந்தச் சுண்ணத்தை நூற்றிற்கொன்று கொடுத்து நன்றாக ஊதக் கடவாய். எ...று.

சூட்சும விளக்கம் :—வெளிப்படை. (41)

இதுவுமது

தன்கு ணங்க டடிந்து வணங்குமே
பொன்கு லம்மெனப் பொங்கி யிலங்கிடும்

வன்கு ணத்தின் வணிகர் கடையினில்
பன்கு லமென வாணி பனிரண்டே

---

இதில் முன் சொல்லிய வெள்ளி இன்னவிதமாகு மென்று கூறுகின்றார்.

[இ—ள்] முன்சொல்லியபடி கொடுத்தூதியவெள்ளி யானது தன்னுடைய கெட்டித்தனமாகிய குணங்க ளெல்லா நீங்கி இணக்கமுடையதாகிப் பொன்வர்க்கத் தைப்போல மிகவும் பிரகாசித்துக் கொண்டிருக்கும். இதைச் செட்டிகளுடைய கடைகளில் பனிரண்டு மாற் றுடைய தங்கமெனச் சொல்வார்கள். எ...று.

சூட்சும விளக்கம்;...இது பன்னிரண்டு மாற்றுத் தங்கமாகு மென்பதற்குப் பதிலாக செட்டிகள் கடை களில் பனிரெண்டு மாற்றுத் தங்கமெனச் சொல்வார்க ளென்று சொல்லாமற் சொன்னார். 42

இதுவுமது

நாட்டு நாகத்தி னன்குற நூற்றொன்று
கோட்டி யாகக் கொதித்தே யுழன்றிடும்
மாட்டி யா நிற மஞ்சளைப் போலுமே
ஊட்டி யாக வுரைதனி லெட்டதாம்.

---

இதில் மற்றொரு வேதை சொல்கின்றார்.

(இ...ள்) இன்னும் இந்த மிருதார்சிங்கிச் சுண் ணத்தை நாகத்தில் நூற்றிற்கொன்று கொடுத்தூதக் கடவாய். அப்படி யூதினால் அந்த நாகமானது மிகவும் இளகிக் கொதித்துப் பிரகாசமாகி நல்ல மஞ்சளைப் போன்ற நிறமுடையதாகி எட்டுமாற்றுள்ள தங்க மாகும். எ-று.



சூட்சும விளக்கம்:—வெளிப்படை. (43)

இதுவுமது

நூற்றி லொன்றென நுண்மை யுடனிதை
நேற்றி யாகவங் கந்தனி னீவிடச்
சாற்றெண் ணாமற் றயங்கி யிலங்கியே
மாற்று யர்ந்து மதிப்பர்க ளேழரை.

......

இதில் வேறொருவேதை சொல்கின்றார்.

(இ...ள்) இன்னும் இந்த மிருதார்சிங்கிச் சுண் ணத்தை வங்கத்தில் நூற்றிற்சொன்று நுட்பமாகக் கொடுக்க அந்த வங்கமானது சொல்லத்தகாத வித மாகப் பிரகாசித்து மாற்றில் உயர்ந்த பொன்னாகும். இதை ஏழரை மாற்றுடையதெனத் தெரிந்தவர்கள் மதிப்பார்கள். எ—று.

சூட்சும விளக்கம்...சொல்லத்தகாத விதமாகப் பிரகாசித்தலாவது அதிகமாகப்பிரகாசித்தல். (44)

இதுவுமது

தழும்ப தாகிய தாம்பிரந் தன்னிலே
கழும்ப தாகவே காட்டிடு நூற்றொன்று
இழும்ப தாகி விலங்கி நுடங்கியே
வழும்ப தாக வயதது மேழரை.

---

இதில் பின்னுமொரு வேதை சொல்கின்றார்.

(இ...ள்) பின்னும் மேற்படி சுண்ணத்தைக் களிம்பு நிறைந்த தாம்பிரத்திலே நூற்றிற்கொன்று கொடுத் தூதினால் அத் தாம்பிரமானது உருகிப் பிரகாசித்து ஏழரை மாற்றுடைய தங்கமாகும். எ...று.

சூட்சும விளக்கம்:- வெளிப்படை [45]

இதுவுமது

வெற்றி யாக வியனுறு லோகத்தில்
இற்ற கைவித மீய விலங்கியே
எற்ற மாக வயதது மெட்டதாம்
பற்றி யாகப் படியுறு மாந்தரே.

......

இதில் மற்ற லோகங்களின் வேதை சொல்கின்றார்.

[இ...ள்) மேற்படி மிருதார்சிங்கிச் சுண்ணத்தை ஜெயம் பொருந்தும்படியாக மற்ற லோகங்களில் மேலே சொல்லிய விதமாகவே நூற்றிற்கொன்று கொடுத்தூதினால் அவைகளில் ஒவ்வொருலோகமும் உருகி எட்டு மாற்றுள்ள தங்கமாகும். பூவுலகிற் பொருந்திய மனிதர்களே இன்னமும் சொல்வேன் கேட்பீர்களாக.எ...று.

சூட்சும விளக்கம் :—வெளிப்படை. [46]

கல்நார் பஸ்பம்
சந்த விருத்தம்

படிமாந்தரே கெடியாகவே பகர்வேனொரு மருந்து
கடியென்றிடும் பெயர்முன்லகர் கடையும்நகர் தம்பி
வடிவாகிய ரகரின்கடை மருந்தானதிற் புகல்வேன்
ஒடியாகவே பலமொன்றதி லொழுங்காகவே வாங்கு.

———

இதில் இம்முறைக்காம் ஓர் சரக்கும் நிறையுஞ் சொல்கின்றார்.

(இ-ள்) பூமியிற் பொருந்திய மனிதர்களே பலமாக ஓர் மருந்தைச் சொல்வேன் கேட்பீர்களாக. கடியென்ற பதத்தின் முதலெழுத்தோடு, லகரத்தின் கடையெழுத்தையும், நகரத்திற்குத் தம்பியாகிய வெழுத்தையும், அழகு பொருந்திய ரகரத்தின் கடையெழுத்தையும் எடுத்துச் சேர்க்க என்ன பெயரமையுமோ அப்பெயருள்ள மருந்தில் கிரமத்தோடு ஒரு பலம வாங்கிக் கொள்ளக் கடவாய். எ—று.



சூக்ஷும விளக்கம்:- கடியென்ற பதத்தின் முதலெழுத்தாவது (க) லகரத்தின் கடையெழுத்தாவது (ல்) நகரத்திற்குத் தம்பியாகிய வெழுத்தாவது (நா) ரகத்தின் கடையெழுத்தாவது (ர்) ஆக இந்நான்கெழுத்களையுஞ் சேர்க்க (கல்நார்) என்றானது. இதுவே மேற்குறித்த சரக்காம். இதிலேயே 35 கிராம் வாங்கிக் கொள்ள வேண்டியது.

விபரம்

கல்நார் 35 கிராம்

இதுவுமது

கூவின்றலை முன்னுமெழிற் குறியாம்பகர் கடையும்
வாவின்றிடு பையோடவை வகரின்முறை தனிலே
நாவின்றிடு விருநான்குட னகரின்றிரி நாமம்
தாவின்றிய புவிமாந்தரே தயவாகவே கேண்மின்.

.........

இதில் இம்முறைக்குச் சாறெடுக்க வேண்டிய ஓர் பச்சிலை சொல்கின்றார்.

(இ-ள்) கூவென்ற பதத்திற்கு முன்னாலேயிருக்கப்பட்ட வெழுத்திற்கு முன்னுள்ள வெழுத்தோடு குறிப்பாக பகரத்தின் கடையெழுத்தையும், அதனோடு (பை) யென்ற எழுத்தையும், வகரத்திற்கு முறையாகிய வெழுத்தின் வரியில் சொல்லும்படியான எட்டாமெழுத்தையும், னகரத்தின் மூன்றா மெழுத்தையும் எடுத்துச் சேர்க்கக் கடவீர்கள். அப்படிச் சேர்த்தால் ஓர் பச்சிலையின் பெயரமையும். பூமியிலுள்ள மனிதர்களே! அதைச்

செய்யும்படியான மார்க்கத்தையுஞ் சொல்வேன் கேட்பீர்களாக. எ...று.

சூட்சும விளக்கம்:- கூவென்ற பதத்திற்கு முன்னாலே யிருக்கப்பட்ட எழுத்தாவது, கூ-இதற்கு முன்னெழுத்தாவது (கு) பகரத்தின் கடையெழுத்தாவது (ப்) பையென்ற எழுத்தாவது (பை) வகரத்திற்கு முறையாகிய வெழுத்தாவது, ம-இதன் எட்டாமெழுத்தாவது (மே) னகரத்தின் மூன்றாமெழுத்தாவது (னி) ஆக இவ்வைந் தெழுத்துக் களையும் முறையே யெடுத்துச் சேர்க்க (குப்பைமேனி) யென்றானது. இதுவே மேற்குறித்த பச்சிலையாம் இதை யின்னது செய்ய வேண்டு மென்னும் விஷயத்தைப் பற்றி அடுத்த பாட்டிற் கூறுவாரென வறிக. (48)

### இதுவுமது

இலையானதி னுள்ளூறிய் வியல்பாகிய சாற்றில்
நலமாகிய முப்பாமதில் நவில்வேனோ ரரிசி
துலையானதைக் கலக்கிமுனஞ் சொலுகின்ற மருந்திற்
கலையாகவே கவசமதிற் கதியுற்றிடச் செய்மின்.

---

இதில் மேற்படி குப்பைமேனியிலிருந்தின்னது செய்ய வேண்டுமென்பதைக் குறிக்கின்றார்.

(இ-ள்) மேற்சொல்லிய குப்பைமேனி யிலையிலிருந்துண்டாகிய சாற்றிலே இம்முறைகளுக்கு முன்னாலே சொல்லியிருக்கப்பட்ட நலம்பொருந்திய முப்பூவிலே ஒரு அரிசியெடை யெடுத்துப்போட்டு நன்றாய்க் கலக்கி இந்தக் கலவையை முன் சொல்லியிருக்கப்பட்ட கல்நார் என்ற மருந்திற் கிரமத்தோடு மேலே பூசிக் கவசஞ் செய்யக் கடவீர்கள். எ—று.

சூக்ஷம விளக்கம்:—இதிற் சொல்லும் விஷயத்தை உற்று நோக்கினால் கல்நார் ஒரே கட்டியாக இருக்க வேண்டுமென ஏற்படுகிறது. (49)



### இதுவுமது

மூங்கைதனி லியல்பாகிய மூசையத னுள்ளே
வீங்காகவே மருந்தானதை வியனாகவே செலுத்திக்
காங்காகவே களிச்சீலையுங் கனமாவிர லைந்து
வேங்காகவே கவசமது வியன்செய்திடு மாக்காள்.

---

இதில் முன் கவசஞ் செய்த மருந்தைப் பின் செய்ய வேண்டிய விதஞ் சொல்கின்றார்.

(இ-ள்) முன் சொன்னபடி கவசஞ் செய்தவுடனே அந்தக் கல்நார் கட்டியை கும்பிடுகிளிஞ்சிலினாற் செய்த மூசைக்குள்ளே போட்டுபலமாகக் களிமண்ணினால் ஐந்து விரற்கனம் சீலைசெய்து விடக்கடவீர்கள். மனிதர்களே! இன்னமுஞ் சொல்வேன் கேட்பீர்களாக. எ—று.

சூட்சும விளக்கம்:- வெளிப்படை (50)

### இதுவுமது

எருவாற்புட முழமொன்றென வியல்பாக விருத்தி
கருவாலுறு மருந்தானதைக் கரிமத்தியில் வைநீ
சருகாமலே தீமூட்டெரி தணிவானபின் மருந்தை
மருவாகவே கையாலேநீ மகிழ்வாயெடு மகனே.

......

இதில் மேற்படி மருந்தைப் புடம்போடும் விதஞ் சொல்கின்றார்.

(இ-ள்) முன்பாட்டிற் சொன்னபடியே களிமண் சீலை செய்தவுடன் எருவினாலே ஒருமுழப் புடந் தயார் செய்து முன் கவசஞ் செய்திருக்கிற மருந்தை அந்தப் புடத்தின் மத்தியில் வைத்து நெருங்காமல்அடுத்திருந்து கொண்டு நெருப்பை மூட்டி யெரிக்கக்கடவாய். அப்படி யெரிந்து நெருப்பெரிந்து அடங்கினவுடன் உள்ளே

யிருக்கப்பட்ட மருந்தைச் சந்தோஷத்தோடு கையி னாலே யெடுக்கக் கடவாய். எ...று.

சூட்சும விளக்கம்:- புடம் எரியும்போது சமீபித்திருந் தால் கை கால் பட்டு புடஞ் சிதைந்து விடுமென்ற எண்ணத்தால் நெருங்காமல் அடுத்திருக்க வேண்டு மென்றார். (51)

கலி விருத்தம்

கவசந் தன்னை நீ கைகொடு நீக்கிட
தவள மாக வனமுந் தயங்குமே
நவம தாகவே நன்குறச் செப்பினில்
பவம தாகவே பண்ணும் பதனமே.

......

இதில் மருந்தின் முடிவு கூறுகின்றார்.

(இ-ள்) முன்சொன்னபடி புடம் பிரித்தெடுத்த மருந்தின் கவசத்தைக் கையினாலே நீக்கிவிடக் கடவாய் அப்படி நீக்கிவிட்டுப் பார்த்தால் அந்த மருந்தானது வெள்ளை வண்ணமாகப் பிரகாசிக்கும். இந்தப் பஸ் பத்தை ஒரு அழகாகிய செம்பிலே பதனம் பண்ணக் கடவாய். எ...று.

சூட்சும விளக்கம்:- இதில் செப்பு இன்ன செப்பெனச் சொல்லப்படவில்லை. ஆயினும் பீங்கான் செப்பு, தென்னங் குடுக்கை முதலியவைகளாம். [52]

இதுவுமது

வெற்றி யாகவே விள்ளுவன் கேண்மினோ
நற்ற வத்துட னே நவ லோகத்தில்
இற்ற மாகவே நூற்றொன்றை யீயவே
சுத்த மாகத் துலங்கிடுஞ் சொர்னமே.

.........



இது முதல் இரண்டு பாட்டுக்களால் இந்த மருந்தின் வேதை சொல்கின்றார்.

[இ-ள்] மனிதர்களே இன்னும் ஜெயம் பொருந்தும் படியான மார்க்கங்களைச் சொல்வேன் கேட்பீர்களாக மேற்கண்ட கல்நார் பற்பத்தை நல்ல தவம் பொருந்திய நவலோகங்களில் எதிலானாலும் நூற்றிற் கொன்று கொடுத்தூதினால் அவைகளெல்லாம் சுத்தமாகிய தங்கமாகப் பிரகாசிப்பனவாகும். எ...று.

சூட்சும விளக்கம்:- வெளிப்படை. (53)

இதுவுமது

லணிக ரின்கடை காட்டில் வரையுரை
அணிய தாக வறைகுவ னேழரை
தணிய தாகச் சவுமியப் பண்பதை
நணிய தாக நவின்றிட நாவுண்டோ

......

இதில் முன்சொல்லிய தங்கத்திற்கு மாற்று முதலியவை சொல்கின்றார்.

(இ-ள்) முன்பாட்டிற் குறித்தபடி ஆகிய தங்கத்தை செட்டிகளுடைய கடைகளிற் காட்டினால் அதை ஏழரை மாற்றுடைய தங்கமாகச் சொல்லுவார். இந்த இலக்க சௌமியத்தினுடைய பெருமையை நாவிற் சொல்லவுங் கூடுமோ. எ...று.

சூக்ஷும விளக்கம்:—இந்தக் கல்நார் பற்பத்தை எந்த லோகத்திற் கொடுத்தாலுந் தங்கமாகின்றதாகை யினால் இந்த முறையைத் தன்னிடத்தேயுள்ள இந் நூலை வியந்து இதன் பெருமையைச் சொல்லவு நாவுண்டோ வெனக் கூறினார். இம்மட்டோடு இந்த முறை முடிந்து விட்டது. இனி இதற்குப் பின் ஐம்பத்

தோரக்ஷரமும் அதை அடைக்கவேண்டிய சக்கர விபர முதலியவைகளுஞ் சொல்கின்றார். எல்லாவற்றிற்கும் இதனுடைய பலம் அவசியம் வேண்டிய தாதலினாலே இந்த அக்ஷர விபரத்தை இங்கு சொல்லத் தொடங்கி னார். [54]

ஐம்பத்தோரக்ஷரம்

கலி விருத்தம்

ஆறு கோடு அடைவுடன் கீண்டிடு
வீற தாகவே விடது மைந்ததாம
மூற தாய்முதல் வீட்டினி லைந்தடை
யீற தாயிரு வீட்டினி லாறடை

......

இதில் சக்கரம் போடு மார்க்கஞ் சொல்கின்றார்,

(இ-ள்) வெற்றி பொருந்தும்படியாக பக்கத்துக்கு ஐந்து ஐந்து வீடுகள் இருக்கும்படியாய் நேரே ஆறு கோடுகளும், குறுக்கே ஆறு கோடுகளும் இழுக்கக் கடவாய். அப்படி யிழுத்தால் மொத்தம் இருபத்தைத்து வீடாக அமையும். அப்படி யமைந்தவுடன் முதல் வரியின் முதல் வீட்டில் ஐந்தையும் இரண்டாவது வீட்டில் ஆறையும் அடைக்க கடவாய்...எ-று.

சூக்ஷம விளக்கம்:...வெளிப்படை. (55)

இதுவுமது

திரியின் வீட்டினிற் றீட்டிடு பத்ததைப்
பரிய மாகப் பனிரண்டு நான்கினில்
புரிய மாகவே பூதமின் வீட்டினில்
தரிய மாகவே தாக்கு பதினெட்டே.

......

இதில் முன் சொன்ன சக்கரத்தில் எழுத்த டைக்கும் விதஞ் சொல்கின்றார்,



(இ-ள்) முன் சொன்னபடி யிரண்டாவது வீட்டில் ஆறை யடைத்தபிற்பாடு மூன்றாவது வீட்டில் பத்தை யும், நான்காவது வீட்டில் பனிரண்டையும், ஐந்தாவது வீட்டிற் பதினெட்டையும் பிரியத்தோடும், தைரியமாக வும் அடைக்கக் கடவாய்—எ-று.

சூட்சும விளக்கம்:...வெளிப்படை. (56)

சந்த விருத்தம்

முதலின்வரி நடுவீட்டினில் முடுக்காகிய வெழுத்தை
இதமாகவே யிரண்டாம்வரி முதல் வீட்டினி லிடுநீ
அதனின்கடை யிருவீட்டையில் யிருவீட்டினிலடைநீ
முதலாகிய விருவீட்டை முயல்வேன்பினி லடைநீ

———

இதுவுமது

(இ.ள்) முன் சொன்னபடி யடைத்தவுடன் அந்த முதல்வரிசையின் நடுவீட்டில் அமைந்திருக்கின்ற வெழுத்தைப் பக்குவமாக இரண்டாவது வரிசையின் முதல் வீட்டிலடைக்கக் கடவாய் அதன் பின் முதல் வரிசையின் கடைசி யிரண்டு வீட்டிலுள்ள வெழுத் துக்களையும் இரண்டாவது வரிசையின் இரண்டாவது வீட்டிலு மூன்றாவது வீட்டிலு மடைக்கக்கடவாய் அதன் பின்பு முதல் வரிசையின் முதல் வீட்டிலு மிரண்டாவது வீட்டிலுமுள்ள வெழுத்துக்களை யிரண்டாவது வரிசை யின் மூன்றாவது வீட்டிலும் நான்காவது வீட்டிலு மடைக்கக் கடவாய்—எ-று

சூக்ஷம விளக்கம்:—வெளிப்படை. (57)

இதுவுமது

இவண்செப்பிய முறைபோலவே யியல்பாவரும் வீட்டில்
தவமாகவே யடைநீயிது தப்பாமலே யொப்பும்
நவமாநகர் மகருஞ்சிகர் வகரும்யகர் நடுவாம்
அவமாகவே யைவீட்டினி லடைவாகவொவ் வொன்றே.

......

இதுவுமது

[இ-ள்] முன்பாட்டிற் சொல்லிய கிரமப்படியே மற்ற மூன்றுவரிசை வீடுகளிலும் முதல் வரிசையின்நடுவீட்டி

லிருக்கு மெழுத்தை அடுத்த வரிசையின் முதல்வீட்டில் மாற்றிமாற்றி ஒழுங்காக அடைத்துக்கொள்ளக்கடவாய். அப்படி யடைத்தால் அந்தச் சக்கரமானது தவறாமற் பொருந்திவிடும். இதன்பின்பு அழகாகிய நகரத்தையும், மகரத்தையும், சிகரத்தையும், வகரத்தையும், யகரத்தையும் முறையே முதல்வரிசையின் ஐந்துவீட்டிலும் கிரமமாக அடைக்கக்கடவாய்—எ-று.

சூக்ஷும விளக்கம்,—முன் முதல்வரிசையிலிருந்து இரண்டாவது வரிசைக்கு எப்படி யெழுத்துக்களை மாற்றிக்கொள்ளப்பட்டதோ அப்படியே மற்றவரிசை வீடுகளுக்கும் நடுவீட்டிலிருந்து மாற்றி யடைத்துக் கொள்ளவேண்டும்.பின்சொல்லிய ஐந்தெழுத்துக்களையும் இந்த வரிசைப்படியே முதல் வரிசையின் ஐந்து விடுகளிலும் அடைத்துக்கொள்ளவேண்டும். [58]

இதுவுமது

ரவில்முன்னிய வகைபோலவே நடுவாயிதை மாறி
அவிலாகவேயெழிலன்பத்தொன்றடைப்பட்டதுகண்டாய்
புவிமீதினி லிதன்வேதைகள் புகலுற்றிட வரிதே
கவிகற்றிடு வியனாகிய கவின்மாந்தரே கேண்மோ.

......

இதுவுமது

[இ-ள்] முன் பாட்டின் ஈற்றிற்சொல்லியபடி முதல் வரிசையின் ஐந்து வீடுகளிலும் அடைத்த நகர முதல் ஐந்தெழுத்துக்களையும் முன் இலக்கங்களுக்குச் சொன்ன கிரமப்படியே நடுவீட்டிலிருந்து நடுவீட்டிலிருந்து மாற்றியடைக்க கடவாய் அப்படியடைத்தால் அழகுபொருந்திய ஐம்பத்தோ ரக்ஷரமென்ற மந்திரமானது மேற்கண்ட இருபத்தைந்து வீடுகளிலும் பொருத்தத்தோடு அடைபடும்இதைக்கண்டுணர்வாயாக பூலோகத்தின்மேலே இந்த ஐம்பத்தோரட்சரமாகிய மந்திரத்தின் வேதைகளை நாவினாலெடுத்துச் சொல்வதரிதாகும். கவிகளைக் கற்றுப்படிக்கும்படியாகிய மனிதர்களே இன்னமுஞ் சொல்வேன் கேட்பீர்களாக... எ-று.



சூட்சும விளக்கம்:...மேற்சொல்லிவந்த ஐம்பத்தோரட்சரமானது இதிற் சொல்லியிருக்கிற கிரமப்படி போட்டுப்பார்த்தால் ஒழுங்காக அமைந்துவிடும். இதனுடைய வல்லபத்தினாலேயே எல்லாவேலைகளும் நடக்கவேண்டு மாதலினால் இதை ஜெபிக்கவேண்டிய முறை முதலிய விபரங்களை யெல்லாம் தெரிந்தமகான்களிடம் கேட்டுத்தெரிந்துகொள்ள வேண்டும் அப்படியின்றித் தாமே யெடுத்தாட்ட முயல்வாரேயாகில் ஒன்றும் நடவாது புத்திக் கூர்மையுள்ளவர்கள் ஒருவரிடமுங் கேட்கவேண்டியதில்லை. தாமேதெரிந்துகொள்வார்கள். (59)

மேற்சொல்லிய சக்கரத்தை யாவரு மெளிதிலுணர்ந்துகொள்ளும் விதமாகக் கீழேபோட்டுக் காட்டுகின்றோம்.

ஐம்பத்தோர் அக்ஷர சக்கரம்

| | | | | |
|---|---|---|---|---|
| 5 ந | 6 ம | 10 சி | 12 வ | 18 ய |
| 10 சி | 12 வ | 18 ய | 5 ந | 6 ம |
| 18 ய | 5 ந | 6 ம | 10 சி | 12 வ |
| 6 ம | 10 சி | 12 வ | 18 ய | 5 ந |
| 12 வ | 18 ய | 5 ந | 6 ம | 10 சி |

இவ்விதமாகவே அமைத்து ஆசானிடம் உபதேசம் பெற்று ஜெபித்து வருவார்களாயின் எல்லாச் சித்தியுங்

கைகூடும். ஆசானிடம் மனப்பூர்வமாக டபதேசம் பெற்றாலல்லது பலிக்காது.

## துருசுச் செயநீர்

கொச்சகக் கலிப்பா

வாதென் றிடுபேர் கடையுடன் வகுப்பனினந்
தீதே யகலச் செப்பிடுவேன் ரகரிலைந்துஞ்
சூதென் றடும்பேர் முன்னுடன் சூட்சமது
பாத முடனே யெடுத்திடு பணமதொன்று.

---

இதில் இம்முறைக்காம் ஓர் சரக்குச் செரல்கின்றார்.

(இ-ள்) வாது என்று சொல்லப்பட்ட பெயரினது கடையெழுத்தோடு ரகரவரியில் - ஐந்தாமெழுத்தையும், சூது என்ற பெயரின் முதலெழுத்திற்கு முன்னுள்ள வெழுத்தையும் எடுத்துச்சேர்க்கக் கடவரய் அப்படிச் சேர்த்தால் என்ன பெயரமையுமோ அந்தப்பெயருள்ள சரக்கில் கிரமமாக ஒரு பணவெடையெடுத்துக் கொள்ளக்கடவரய். தீமை நீங்கும்படியாக இன்னமுஞ் சொல்வேன் கேட்பாயாக-எ-று.

சூட்சும விளக்கம்:...வாது என்று சொல்லப்பட்ட பெயரினது கடையெழுத்தாவது (து) ரகரவரில் ஐந்தாமெழுத்தாவது (ரு) சூது என்ற பதத்திற்கு முதலெழுத்தாவது-சூ-இதற்கு முன்னுள்ள வெழுத்தாவது [சு] ஆக இம் மூன்றெழுத்துக் களையுஞ் சேர்க்க (துருசு) என்றானது. இதுவே மேற்சொல்லிய சரக்காம் இதிலேயே 488 மி. கிராம் யெடுத்துக் கொள்ள வேண்டியது. (60)

விபரம்

துருக 488 மி.கி.

இதுவுமது

கெட்டி யெனும்பேர் சிகரமுங் கிளத்திடுவேன்
நட்டி யெனும்பேர் தலைமுறை கடைநடுவாய்



திட்ட மெனும்பேர் முதலுடன் செயமருந்திற்
பட்ட முறவே யெடுத்திடு பணமதொன்றே.

---

இதில் வேறொரு சரக்குச் சொல்கின்றார்.

(இ...ள்) கெட்டியென்று சொல்லப்பட்ட பெயரின் முதலெழுத்தோடு நட்டியென்னும் பெயரின் முதலெழுத்து வரியில் கடையெழுத்தையும், திட்டமென்று சொல்லப்பட்ட பெயரின் முதலெழுத்தையும் எடுத்துச் சேர்க்கக்கடவரய். அப்படிச் சேர்த்தால் ஒரு பெயரமையும். அந்தப் பெயருள்ள சரக்கில் ஒருபணவெடை யெடுத்துக் கொள்ளக் கடவாய்.எ...று.

சூட்சும விளக்கம்:...கெட்டியென்று சொல்லப்பட்ட பெயரின் முதலெழுத்தாவது (கெ) நட்டி யென்னும் பெயரின் முதலெழுத்தாவது ந இந்த நகரவரியிற் கடையெழுத்தாவது (ந்) திட்டமென்று சொல்லப்பட்ட பெயரின் முதலெழுத்தாவது (தி) ஆக இம் மூன்றெழுத்துக்களையும் சேர்க்க (கெந்தி] யென்றானது. இதைக் கெந்தகமெனக் கொள்ளவேண்டியது. இதிலேயே மேற் சொன்னபடி 488 மிகி யெடுத்துக் கொள்ளவேண்டியது (61)

விபரம்

கெந்தகம் 488 மிகி

வேறு

சகரின்முறை யானவன் றம்பியுடன்
ளகரொன்றுட னன்குற நாட்டிடுவாய்
ககரொன்றுட னேமகரின்கடையும்
மகிழ் வாசவே மாட்டிடு வாய்கழஞ்சி

---

இதில் இன்னொரு சரக்கும் நிறையும் கூறுகின்றார்.

[இ—ள்] சகரமென்ற வெழுத்திற்கு முறையான வோரெழுத்தின் தம்பியாகிய வெழுத்தோடு ளகரமென்ற எழுத்தையும், ககரமென்ற எழுத்தையும், மகரத்தின் கடையெழுத்தையும் சந்தோஷத்தோடு எடுத்துச் சேர்க்கக் கடவாய். அப்படிச் சேர்த்தால் என்ன பெயரமையுமோ அந்தப் பெயருள்ள சரக்கில் 4.4 கிராம் எடுத்துக் கொள்ளக் கடவாய். எ...று.

சூட்சும விளக்கம்:... சகரமென்ற வெழுத்திற்கு முறையாகிய வெழுத்தாவது (த). இதற்குத் தம்பியாகிய வெழுத்தாவது (தா) ளகரமென்ற எழுத்தாவது (ள) ககரமென்ற எழுத்தாவது [க] மகரத்தின் கடையெழுத்தாவது (ம்) ஆக இந்நான்கெழுத்துக்களையும் சேர்க்க [தாளகம்] என்றானது. இந்தத் தாளகத்திலேயே ஒரு கழஞ்சி யெடுத்துக் கொள்ள வேண்டியது. (62)

விபரம்

தாளகம் கழஞ்சு 4.4 கிராம்

மகரென்றிடும்மடையன்முறை மகிழ்வாயெடுநான்கை
ரகரென்றிடும்பெயரொன்றுட னவில்வேன்மகர்கடை
தகையாகிய மருத்தானதிற் றயவாயொருபணமே
செகைசேர்த்திடுசெகமீதினிற் செறியுற்றிடுமாக்கள்

இதில் மற்றொரு சரக்கும் நிறையும் சொல்கின்றார்.

(இ—ள்) மகர என்ற வோரெழுத்திற்கு முறையாகிய வெழுத்தின் வரியில் நான்கா மெழுத்தையும், அதனோடு ரகரமென்ற எழுத்தையும், மகரத்தின் கடையெழுத்தையும் சந்தோஷத்தோடு எடுத்துச் சேர்க்கக் கடவாய். அப்படிச் சேர்க்க என்ன பெயரமையுதோ அந்தப் பெயருள்ள மருந்தில் நேயத்தோடு 488 மிகி



யெடுத்துச் சேர்க்கக்கடவீர்கள். பூவுலகத்தில் நெருங்கியிருக்கப்பட்ட மனிதர்களே இன்னும் சொல்வேன் கேட்பீர்களாக. எ...று.

சூக்ஷம விளக்கம்...மகரமென்ற வோரெழுத்திற்கு முறையாகிய வெழுத்தாவது [வ] இதன் நான்காமெழுத்தாவது (வீ) ரகரமென்ற எழுத்தாவது(ர) மகரத்தின் கடையெழுத்தாவது (ம்) இம் மூன்றெழுத்துக்களையும் முறையே யெடுத்துச் சேர்க்க (வீரப்) என்றானது. இதுவே மேற்குறித்தசரக்காம். (63)

விபரம்

வீரம் 468 மிகி

வேறு

மாசிதை தன்னிலே வரையும் வன்னிபாம்
பூசுர மாகவே பூமி நாதமாம்
நேசமா யெடுபண நிறையொன் றாகவே
காசினி யுறைந்திடுங் கதிகொள் காளையே.

---

இதில் ஓர் சரக்கும் நிறையுஞ் சொல்கின்றார்.

[இ-ள்] மாசி, தை ஆகிய மாதங்களிலே உண்டாகப்பட்ட நெருப்பிற்குச் சமானமாகிய வேகத்தையுடையதும் பூமிநாதமென்று சொல்லத்தக்கதுமாகிய ஓர் சரக்கில் பிரியத்தோடு 488 மி.கி. எடுத்துக் கொள்ளக்கடவாய். பூமியிற் பொருந்திய மகனே! இன்னுஞ் சொல்வேன் கேள். எ—று.

சூட்சும விளக்கம்:— தை. மாசி மாதங்களிலுண்டாகப்பட்டதும், பூமிநாதமென்று சொல்லத்தக்கதுமாகிய சரக்காவது (பூநீறு) இதுவே மேற்குறித்த சரக்காம். (64)

விபரம்

பூநீறு 488 மி.கி.

இதுவுமது

சுட்டிடிற் சுண்ணமுந் தோன்றி டாதவன்
பட்டிடில் வனமது படிக மரனதாம்
கட்டிடில் வாசனை கமழு மேன்மையான்
நெட்டிடில் நிறையது பணம தொன்றுமே.

.........

இதில் வேறொரு சரக்கும் நிறையுஞ் சொல்கின்றார்.

(இ-ள்) நெருப்பிலிட்டுச் சுட்டால் எவ்விதமான சுண்ணமும் தோற்றப்படாதது, பளிங்கைப் போன்ற பிரகாசமான நிறமுடையது, மிகுந்த வாசனையை வீசும்படியான மேன்மையுடையது, இத்தகைய குணங்களையுடைய ஓர் சரக்கில் 488 மி.கி. மெடுத்துக் கொள்ளக்கடவாய். எ—று.

சூட்சும விளக்கம்:— நெருப்பிலிட்டுச் சுட்டால் சுண்ணந் தோன்றாததும், பளிங்கைப் போன்ற நிறத்தினையுடையதும், மிகுந்த வாசனை வீசும்படியானது மான சரக்காவது (சூடன்) இதை முதற்காண்டத்தில் வருணித்திருப்பதினாலுங் காண்க. [65]

விபரம்

சூடன் 488 மி.கி.

இதுவுமது

இத்தகைய மருந்தெலா மெடுத்தி யல்புடன்
வெற்றியாக் கல்வமில் விடுத்து விள்ளுவேன்
முத்திசேர் முப்பதில் மொழிகு வேனிறை
அத்திர மாகவே யரிசி யொன்றதே.

———



இதுமுதல் இம்முறைக்குச் செய்முறை சொல்கின்றார்.

[இ-ள்] மேலே சொல்லிவந்த மருந்துகளையெல்லா மெடுத்துப் பொருத்தத்தோடு கல்வத்திற் போட்டு இன்னமுஞ் சொல்வேன் கேள். இக்காண்டத்தின் முதலிற் சொல்லியிருக்கப்பட்ட உயர்வு பொருந்திய முப்பூவென்ற மருந்தில் ஓர் அரிசியெடை யெடுத்துக் கொள்ளக்கடவாய். எ—று.

சூக்ஷம விளக்கம்:—இப்பாட்டில் மருந்துகளையெல்லாங் கல்வத்திற்போட்டு முப்பூவில் அரிசியெடையெடுத்துக் கொள்ளக் கடவாயென்ற மட்டில் நிறுத்தியிருப்பதில் மற்ற விபரங்களையெல்லாம் அடுத்தபாட்டிற் கூறுவாரெனவறிக. [66]

இம்முறைக்காக இதுவரை சொல்லி வந்த சரக்குகளையெல்லாம் யாவரும் சுலபமாகத் தெரிந்து கொள்ளும்படியாய் இங்கு ஓரிடத்தில் எழுதுகின்றோம்.

எல்லாச் சரக்குகளின் விபரம்.

| | |
|---|---|
| 1—துருசு பணவெடை | 488 மி.கி. |
| 2—கெந்தகம் பணவெடை | 488 மி.கி. |
| 3—தாளகம் கழஞ்சு | 4.4 கிராம். |
| 4—வீரம் பணவெடை | 488 மி.கி. |
| 5—பூநீறு பணவெடை | 488 மி.கி. |
| 6—முடன் பணவெடை | 488 மி.கி. |
| 7—முப்பூ அரிசியெடை | |

இதுவுமது

விடுத்துநீ யரைத்திடு விபரம் விள்ளுவேன்
கடுத்துடன் கடிகையுங் கணக் கிரண்டதாம்

நடித்திடக் குழம்புபோல் நடிந்து நின்றிடும்
படுத்திட மாகவே பனியின் முன்புவை.

.........

இதில் அரைப்பு முதலிய விபரஞ் சொல்கின்றார்.

[இ-ள்] முன்பாட்டிற் குறித்தபடியே கல்வத்திற் போட்ட மருந்துகளின் முன்சொன்ன ஒரு அரிசியெடை முப்பூவைப் போட்டு கணக்குடனே 24 நிமிஷம் அரைக்கக் கடவாய். அப்படி யரைத்தால் அந்த மருந் தானது குழம்பைப் போலாகும். பின்பு அந்தக் குழம்பை யெடுத்துப் பக்குவமாகப் பனியிலே வைக்கக்கடவாய். எ...று.

சூக்ஷும விளக்கம்:—மேற்படி மருந்தை அரைத்த கல்வத்துடனேயே பனியில் வைக்க வேண்டும்.

இதுவுமது

அம்மியின் மருந்தை யடை வுடனே நீ
பம்மியே பொழிந்திடும் பனியின் முன்னமே
தம்மென வைத்திடு சாம மொன்றெனச்
செம்மையாத் திகழ்ந்தது செய நீ ராகுமே

.........

இதில் மருந்தின் முடிவு சொல்கின்றார்.

(இ-ள்) முன் சொன்னபடி பனியில் வைத்த அம்மியி லிருக்கப்பட்ட மருந்தைக் கிரமமாகக் கூடிச் சொரியும் படியாகிய அந்தப் பனியி னிடமாகவே ஒரு சாமநேரம் வைக்கக் கடவாய். வைத்தால் அது செம்மையாகப் பிரகாசித்துச் செய நீராகிவிடும்...எ-று.

சூட்சும விளக்கம்:— வெளிப்படை. [68]



கலி விருத்தம்

செய நீர் தன்னைச் சிறக்கப் பதனமே
பயம தாகவே பண்ணுவீர் மாந்தரே
நயம தாகவே வேதை நவிலுவேன்
கயவர் கும்பலே கண்டறி வாமரோ.

இதில் மேற்படி ஜெயநீரைப் பத்திரப்படுத்தச் சொல்கின்றார்.

(இ-ள்) மனிதர்களே! முன் சொன்னபடி ஆகிய ஜெயநீரைச் சிறப்பினோடும் பயபக்தியோடும் பத்திரப் படுத்தக் கடவீர்கள். இனி இந்த ஜெயநீரினாலாகப் பட்ட வேதைகளையும் சொல்வேன். இந்த நூலின் முறைகளைப் பொய்யெனக்கூறிய கொடிய கூட்டத்தவர் களே இனி உங்களுடைய சமர்த்தையும் நம்முடைய சமர்தையும் பார்ப்போம்.—எ-று.

சூக்ஷும விளக்கம்—இந்த முறையானது மற்ற முறைகளிலெல்லாம் மிகவும் விஷேம் பொருந்திய தாதலினாலும் நிச்சயமாகப் பலிக்கு மாதலாலும். இந்நூலின் முறைகளைப் பொய்யென்று கூறிய கொடி யவர்களே! இனி உங்களுடையசமர்த்தையும் நம்முடைய சமர்த்தையும் பார்ப்போமென்று வெற்றி கூறினாரென வறிக. (69)

## நாகசெந்தூரம்

இதுவுமது

ஆடு கின்றவன் பேர்புனை யானவன்
நாடு கின்ற நவலோக மொன்றிலே
ஏடு கின்ற வெடுநிறை விள்ளுவேன்
கூடு கின்றகைக் கூறெனக் கொள்பலம்.

.........

இதுமுதல் மேற்படி ஜெயநீரினா லுண்டாகும் நாகசெந்தூர முறை சொல்கின்றார்.

(இ-ள்) ஆடுகின்றதாகிய ஓர் ஜீவனுடைய பெயரைக் கொண்ட எண்ணத் தக்கதாகிய நவலோகங்களில் ஒன்றிலே பொருந்திய ஒருபலம் எடுத்துக் கொள்ளக் கடவாய். இன்னமுஞ் சொல்வேன் கேட்பாய்...எ-று.

சூட்சும விளக்கம்—ஆடுகின்றதாகிய ஓர் ஜீவனுடைய பெயராவது பாம்பென்று சொல்லப்படுவதாகிய (நாகம்) இப்பெயரைக் கொண்ட நவலோகங்களில் ஒன்றாவது மேற்படி (நாகம்) என்ற லோகமே. இந்த நாகத்திலேயே 35கிராம் எடுத்துக்கொள்ளவேண்டியது. மற்ற விபரங்கள் பின் சொல்வார். (70)

விபரம்

நாகம் 35 கிராம்

இதுவுமது

மூசை தன்னில் முடுகச் செலுத்தி
வீசை தன்னை விரைந்து முறுக்கியே
பாசை கூறிப் பணவெடை யேயெடு
மாசை யாக வழுத்துஞ் செயநீரே.

———

இதில் முன் எடுத்த நாகத்தை யின்னது செய்ய வேண்டுமெனச் சொல்கின்றார்.

(இ-ள்) முன் சொன்னபடி யெடுத்த நாகத்தை ஓர் மூசையினுள்ளே அழுத்தமாகப் போட்டு விரைவாக நான் எடுத்த காரியத்தை முடித்து விடுகின்றேன் பாரென்று வெற்றி கூறி மீசையை முறுக்கி முன்னே சொல்லி யிருக்கின்ற ஜெய நீரில் ஒரு பணவெடை யெடுத்துக் கொண்டு இதுதான் தங்கமென்று சொல்லக் கடவாய்...எ-று.

சூட்சும விளக்கம்:...இதில் நாகத்தை யெடுத்து மூசையில் போட்டு என்றமட்டில் சொல்லி யிருந்தபோதி



லும் அத்த மூசையை நெருப்பிலிட்டு உள்ளே யிருக்கின்ற நாகமானது உருகும்படி ஊதவேண்டும் அப்படி அது உருகிவருஞ் சமையத்தில் மேற்சொல்லிய ஜெய நீரில் 488 மி.கி. யெடுத்துக் கொள்ள வேண்டும். மற்ற விபரங்களை அடுத்த பாட்டிற் சொல்லுவாரென வறிக. இந்த ஜெய நீரினாலேயே மேற்கண்டசெந்தூரமானது முடிந்து அநேக வேலைகளைச் செய்யப்போகின்ற படியால் ஜெய நீரை யெடுக்கும் போது மீசையை முறுக்கிக்கொண்டு வெற்றிகூறியெடுவென்றார். இந்த ஜெய நீரானது தங்கத்தைச் செய்வதற்கு மிகவும் ஒத்தாசையா யிருப்பதினால் இதையெடுத்துக்கொண்டு இதுதான் தங்கமென்று சொல் என்றார். (71)

இதுவுமது

உபச ரத்தி லுருகுமப் போதினில்
செபம தான செயநீரைத் தான்விடு
கபம தாகவே கண்விட் டுருகியே
அபம தாகவே யாடுங் களங்கமே.

......

இதில் முன் மூசையில் உருகிக் கொண்டிருக்கும் நாகத்தில் ஜெயநீர் விடுமார்க்கஞ் சொல்கின்றார்.

[இ-ள்] முன் சொன்னபடி மூசையில் வைத்துருக்கிய நாகமானது உருகுகின்ற அந்தச் சமையத்தில் மனதில் நினைத்திருப்பதாகிய இந்த ஜெயநீரைவிடக் கடவாய். அப்படி விட்டவுடன் அதிலிருக்கும் நாகமும் ஜெய நீரும் சேர்ந்து பிரகாசித்துருகி உயர்ந்த களங்கமாகி விடும்—

சூட்சும விளக்கம்:—வெளிப்படை. (72)

இதுவுமது

களங்கந் தன்னை நீ கல்வத்தில் விட்டுடன்
பளங்க மாகவே பந்திடல் சாற்றினால்

முளங்க வாக வரைசாம மூன்றென
நளங்க மாவில்லை நன்குறத் தட்டுவாய்

—

இதில் மேல்படி களங்கத்தை அரைக்கும் விதஞ் சொல்கின்றார்.

(இ-ள்) முன் சொன்னபடி ஆகிய களங்கத்தை கல்வத்தில் விட்டு நலமாக பந்திடல் என்று சொல்லப்படுவதாகிய எலுமிச்சம்பழச் சாற்றினால் மூன்று சாமம் பலமாக அரைக்கக் கடவாய். அப்படியரைத்த பிற்பாடு அதை அழகுபெறும்படியான வில்லையாகத் தட்டுவாய் எ-று.

சூக்ஷும விளக்கம்:—எலுமிச்சம் பழத்தைப் பந்திடலின் பழமென்று வழங்குவது வைத்தியப் பரிபாஷையின் கிரமம். இதைப் பற்றி இதற்கு முன்பலவிடங்களில் வந்த விடத்தில் விபரமாக எழுதப்பட்டிருக்கிறது. 73

இதுவுமது

தட்டுகின்ற மருந்தை தயவுடன்
ஒட்டியாகவே யோட்டிற் பொதிந்திடு
திட்டமாகவே சீலை களிவிரல்
மட்டமாகவே யைந்து வழுத்துவேன்

———

இதில் மேற்படி மருந்தைக் கவசஞ் செய்யும் விதஞ் சொல்கின்றார்.

(இ-ள்) முன் சென்னபடி பில்லைதட்டிய மருந்தை நேயத்தோடு ஒரு ஓட்டில் வைக்கக் கடவாய். அப்படி வைத்தவுடன் மேலோடு மூடிப் பலமாக ஐந்து விரற்கனம் களிச்சீலையினால் கவசஞ் செய்வாய். இனிச் செய்யும்படியான விதத்தையுஞ் சொல்வேன் கேள்— எ-று.

சூட்சும விளக்கம்: -வெளிப்படை. (74)



இதுவுமது

காட்டெருப்புடங் காட்டு முழமொன்று
நாட்டமாகவே நாப்பணில் வைத்துத்தீ
மூட்டியாற்றபின் முங்கி யெடுத்துநீ
பீட்டமாகக் கவசம் பிரித்திடே

——

இதிற் புடம்போடு மார்க்கஞ் சொல்கின்றார்.

[இ-ள்) காட்டெருக்களினாலே ஒரு முழப்புடந் தயார்செய்து அதில் முன் கவசஞ் செய்துவைத்திருக்கிற மருந்தை மத்தியில் வைத்து நெருப்பை மூட்டி தீப்பிடித் தெரிந்தாறின பிற்பாடு அதில் வைத்த மருந்தைப் பக்குவமாக எடுத்துப் பெருமையோடு கவசத்தைப் பிரிக்கக் கடவாய்...எ...று.

சூக்ஷும விளக்கம்:...வெளிப்படை. (75)

கொச்சகக் கலிப்பா

கற்றுணர்ந்து மருந்துதனைக் கல்வமதி னுட்படுத்திப்
பொற்றிலையின் சாறதனாற் பொற்புடனே யரைத்திடுவாய்
வெற்றியுடன் சாமமது விண்டிடுவே னிரண்டாமே
சுற்றமுடனேவழித்துத் துலங்கிடவே வில்லைசெய்யே

——

இதில் முன் புடம் பிரித்தெடுத்த மருந்தைப் பின் செய்யவேண்டிய விதஞ் சொல்கின்றார்.

(இ-ள்) நீ முன்னே தெரிந்து கொண்டதாகிய புடம் பிரித்தெடுத்த மருந்தைப் பழையபடியுங் கல்வத்திற் போட்டு பொற்றலைக் கையாந்தகரைச் சாற்றைவிட்டு அழகாக 6 மணி நேரம் வீரத்துடனே அரைக்கக்கடவாய் அப்படி யரைத்தவுடனே அதை ஒழுங்காக வழித்

தெடுத்துப் பிரகாசிக்கும் படியாகப் பில்லை செய்து கொள்வாயாக. எ—று.

சூக்ஷும விளக்கம் :— பொற்றலைக் கையாந்த கரையைப் பொற்றிலை யென்றது பரிபாஷைக் கிரம நோக்கியென்க. இதைப்பற்றி இதற்கு முன் பல விடங் களிலு மெழுதி யிருப்பதினாலுங் காண்க. [76]

இதுவுமது

பொதிந்திடு ஓட்டினுள்ளே பொற்புடனே சீலைகளி
விதிந்திடு விரலைந்தென விரைவினி லமைத்ததனை
முதிந்திடு புடமொன்றரை முழமென வியற்றிநடு
கதிந்திட மருந்தைவைத்துக் கனல்மிகப் பரப்பிடுவாய்

———

இதில் முன் அரைத்த மருந்தைப் புடம் போடும் விதஞ் சொல்கின்றார்.

(இ—ள்) முன் சொன்னபடி பில்லை செய்து வைத் திருக்கிற மருந்தை ஓட்டிற் போட்டு மேலோடு மூடி அழகாக ஐந்துவிரற்கனம் களிமண் சீலை செய்து மிகவும் உயர்வாக ஒன்றரைமுழ உயரம் புடம்போட்டு அதன டுவே இந்தக் கவசத்தை வைத்து நெருப்பையிடக் கடவாய். எ—று.

சூக்ஷும விளக்கம்;—இதில் புடத்திற்கு இன்ன எருவெனச் சொல்லாத போதிலும் இதற்கு முந்திய புடத்திற் காட்டெருவெனச் சொல்லப்பட் டிருப்பதால் அந்த எருவையே இதற்கும் உபயோகிக்க வேண்டியது. [77]

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

எரியெழுந் தமர்ந்த பிற்கற்
யெடுத்திடு மருந்து தன்னை



பிரியதன் கவசம் நீக்கிப்
பீடுள மருந்தின் வன்னம்
அரியென வரிகள் வீசி
யழகுறு மாந்தர் கேண்மோ
விரைவுடன் மருந்து தன்னை
விடுத்திடு கல்வந் தன்னில்
.........

இதில் மேற்படி புடம் பிரிக்கு மார்க்கஞ் சொல் கின்றார்.

(இ-ள்) முன் சொன்னபடி போட்ட புடத்தில் நெருப்புப் பிடித்து எரிந்து அமர்ந்த பிற்பாடு அதனுள் ளிருக்கு மருந்தை யெடுத்து அதன் கவசத்தைப் பிரித் தெடுக்கக் கடவாய். அப்படிப் பிரித்தெடுத்தால் அந்தப் பெருமை தங்கிய மருந்தினது நிறமானது சூரியனைப் போற் பிரகாசித்துக் கொண்டிருக்கும். மனிதர்களே இன்னமுஞ் சொல்வேன் கேட்பீர்களாக. அந்த மருந்தை பழையபடியும் விரைவாகக் கல்வத்திற் போடக்கடவீர் களாக. எ...று.

சூட்சும விளக்கம்:... இப்பாட்டிற் சொல்லியிருப்பது போலவே இந்நூலில் அநேகம் பாட்டுகளில் ஒருமை யைப் பன்மையிலும் பன்மையை ஒருமையிலும் மாற்றிக் கிரமமின்றி முடித்து வருகின்றார். இவைகளையும் வைத்திய பரிபாஷை கிரமங்களென்றே கொள்ள வேண்டியது. [78]

கலி விருத்தம்

நகர மென்றவன் றம்பிமுன் னாட்டுவாய்
மகர மென்ற மடையன் முறையின்முன்
பிகர மாப்பூ வனைந்தோன் பெயர்பின்னும்
பகர மாகிய பட்டையின் சாற்றினால்.

———

இதில் பின் இம்மருந்தை அரைக்க வேண்டிய தற்காம் ஓர் சாறு சொல்கின்றார்.

[இ.ள்] நகரமென்ற வெழுத்திற்குத் தம்பியாகிய வோரெழுத்தை முன்னாலே நிறுத்தி அதனோடு மகர மென்று சொல்லப்படுவதாகிய எழுத்திற்கு முறையான வெழுத்தின், கூட்டத்தில் முதலெழுத்தையும் அழகாகிய இந்தப் பூமியைச் சுற்றி வளைந்திருப்பதாகிய சமுத் திரத்தின் பெயர்களுள் ஓர் பெயரின் கடையெழுத்தை யுஞ் சேர்த்து அதனாலென்ன பெயரமையுமோ அந்தப் பெயருள்ள மரத்தினது பட்டையிலெடுத்த சாற்றினால் எ... று,

சூக்ஷ்ம விளக்கம்:... நகரமென்ற வெழுத்திற்குத் தம்பியாகிய வோரெழுத்தாவது (நா) மகரமென்று சொல்லப்படுவதாகிய எழுத்திற்கு முறையான வெழுத் தின் கூட்டமாவது-வகரக் கூட்டம்-இதின் முதலெழுத் தாவது [வ] இந்தப் பூமியைச் சுற்றி வளைந்திருப்ப தாகிய சமுத்திரத்தின் பல பெயர்களுள் இங்கு எடுக்க வேண்டியதும் இதற்குப் பொருத்தமானதுமான பெய ராவது [கடல்] இதன் கடையெழுத்தாவது [ல்] ஆக இம்மூன்றெழுத்துக்களையுங் கூட்ட [நாவல்] என்றா னது. இதுவே மேற்குறித்த மரமாம். இந்த நாவல் மரத்திலேயே சாறெடுக்க வேண்டியது. இதுவும் அடுத்த பாட்டும் குளகமாதலால் சாற்றினால் எந்ற வரையில் நிறுத்தி யிருக்கின்றார். மற்றவைகளை அடுத்த பாட்டிற் கூறுவாரென வறிக. சமுத்திரத்திற்குப் பல பெயர்களி ருப்பினும் இங்கு வேண்டியது கடல் தானாகையால் அது தெரிந்தெடுக்கப்பட்டது. [79]

இதுவுமது

சாம மொன்று சரியா யரைத்துநீ
வாம மாக வழித்தே யுருட்டியே
ஓம மாகவே யோட்டினுள் ளேடுபாதி
தாம மாகச் சகத்துறு மைந்தனே.

———



இதில் முன் நாவல்சாறு விட்டரைக்கும் விதம் சொல் கின்றார்.

[இ-ள்] முன்சொன்னபடி நாவல்பட்டைச் சாற்றி னால் ஒரு சாமம் வரையிற் சரியாக அரைத்து அதை அழகோடு வழித்தெடுத்து உருண்டை செய்து முன் சொல்லி வந்த கிரமங்களின் படியே ஓட்டில் வைத்து மேலோடு மூடக்கடவாய். பெருமையுடனே பூமியிற்றங் கிய மகனே இன்னுஞ் சொல்வேன். எ...று.

சூட்சும விளக்கம்:—இந்நூலாசிரியருக்கு இவ்வுலகத் தவர்கண்மீது ஏற்பட்டிருக்கும் கருணையினாலேயே பல இடங்களிலும் மைந்தனே கேள். பிள்ளையே கேள் என்று சொல்லிக் கொண்டு வருகின்றார்.

இதுவுமது

சீலை யின்களி செய்விர லைத்தரம்
ஏல மாக வெருப்புட மொன்றரை
வால மாகவே மத்தியில் வைத்துத்தீ
மூல மாகவே மூட்டிடு வாயரோ.

.........

இதில் முன் அரைத்த மருந்தைப் புடம்போடு மார்க்கஞ் சொல்கின்றார்.

(இ-ள்) முந்திக் கூறியபடியே மருந்தை ஓட்டில் வைத்து மேலோடு மூடியபின் களிமண் சீலையினால் ஐந்து விரல்கனம் சீலை செய்யக்கடவாய். அப்படிச் செய்தபின்பு எருவினாலே ஒன்றரைமுழ அளவு புடந்த யார் செய்து அதன் மத்தியில் இந்தக் கவசஞ் செய்த

மருந்தை வைத்து ஆதரவோடு நெருப்பை மூட்டிவிடக் கடவாய். எ—று.

சூட்சும விளக்கம்:—வெளிப்படை. (81)

வேறு செய்யுள்

கனலானத மரப்பின்னெடு கருவாகிய மருந்தை
வனமானது முருக்கினது மலர்போலிலங்கிடுமே
பனமாகவே யிதுவைவெகு பதனமது பண்ணு
கனமாகவே வெகுவேதைகள் கழற்வேனினிக் கேண்மோ

இதில் செந்தூரத்தின் முடிவு கூறுகின்றார்.

(இ-ன்) மேலே சொல்லியபடி புடத்தில் நெருப்பை மூட்டி அது எரிந்தடங்கின பிற்பாடு எல்லாவற்றிற்கு மூலமாகிய இந்த மருந்தைக் கவசத்தை நீக்கியெடுக்கக் கடவாய். அப்படியெடுத்துப் பார்த்தால் அந்த மருந்தானது முருக்கம்பூப்போன்ற நிறத்தோடு பிரகாசித்துக் கொண்டிருக்கும். இப்படிப் பிரகாசிப்பதாகிய மருந்தை வெகு கவனத்தோடு பத்திரப்படுத்தக்கடவாய். இனி இதனாலாகப்பட்ட பல வேதைகளையுஞ் சொல்வேன் கேட்பாயாக. எ...று.

சூட்சும விளக்கம்:...வெளிப்படை. (82)

இதுவுமது

மிகுவெள்ளிமுந் நூற்றொன் றிதை விரைவாகவே யீய
செகமாகமஞ் சணித்துவனஞ் செறியானது பசுமை
அகமாகவே வ்ஃதானது மடைவாய்ப் பதினான்கு
துகையென்றறி யினிவேதைகள் சொல்வேனிதைக்
கேண்மோ

......

இது முதல் முன்முடிந்த மருந்தின் வேதை சொல்கின்றார்.



(இ.ன்) அழகு மிகுந்த வெள்ளியில் மேற்கண்ட மருந்தை முந்நூற்றிற் கொன்று வேகமாகக் கொடுத்தூத அந்த வெள்ளியானது அதிகமாக மஞ்சணிறத்தை யடைந்து பசுமையான தங்கமாகும். இந்தத் தங்கத்திற்கு அந்தரமாக மாற்றுக் கணக்கோடு பதினான்று ஆகும். இதை நிச்சயமென் றறியக்கடவாய். இனி இதனாலாகப்பட்ட மற்ற வேதைகளையும் சொல்வேன் கேட்கக்கடவாய். எ...று.

சூட்சும விளக்கம:—வெளிப்படை. (83)

இதுவுமது

வங்கத்திடை மருந்தானதை வருப்பேனூற் றொன்று
பொங்கத்துட னீயவது புரண்டேகொதித் துருகி
அங்கத்துடன் வயதானது மடைவாகவே பத்துத்
துங்கத்தொடு மாணியுரை தொகையாகுமே வகையா.

---

இதில் வேறு வேதை சொல்கின்றார்.

(இ-ன்) இன்னமும் நான் சொல்வதைக் கேள் வங்கமென்ற லோகத்தில் மேற்படி மருந்தை நூற்றிற் கொன்று அழகாகக்கொடுத்தூத அந்த வங்கமானது இளகிக் கொதிப்புற்றுருகி நல்ல ரூபத்தோடு பத்து மாற்றுக் கொண்ட உயர்வாகிய தங்கமாகும் -எ-று.

சூக்ஷும விளக்கம்—இந்த மருந்தினாலுரைக்கப்பட்ட தங்கங்களுக் கெல்லாம் மாற்று அதிகமாகவே சொல்கின்றார். இதனாலே இந்தமருந்து மற்றவைகளைக் காட்டிலும் மிகவும் விசேஷம்பொருந்தியதென ஏற்படுகிறது. (84)

இதுவுமது

தன்சாதியி லன்பாகவே சருகாமனூற றொன்று
என்சாதியை யீயவது மெழுந்தேகொதித் துருகிப்

பொன்சாதியின் மிகுமேன்மையாய்ப் புரிவற்றது வயங்கி
நன்சாதியி லாணியுரை நவில்வார்பதி னென்றே

---

இதில் மற்றொருவேதை சொல்கின்றார்.

(இ-ள்) இன்னும் இந்தச் செந்தூரத்தைத் தன்னுடைய சொந்தச் சாதியாகிய லோகத்தில் பிரியமாக நூற்றிற்தொன்று கொடுத்தூதினால் அந்த லோகமானது கொதிப்புற்றுருகி உலகத்திற்றோன்றிய எல்லாவகைப் பொன்களிலும் மிகவும் உயர்வுபொருந்திய பொன்னாகப் பிரகாசித்துத் தோற்றும். இதற்கு மாற்று பதினொன்றெனச் சொல்வார்கள்—எ-று.

சூக்ஷும விளக்கம்:...இந்த மருந்தின் சொந்தச் சாதியாகிய லோகமாவது இந்த மருந்துண்டானது நாகத்திலாதலால் அந்த நாகமென்றே யுணாவேண்டியது இந்த நாகத்திலேயே மேற்கண்டமருந்தை நூற்றிற்கொன்று கொடுத்தூதவேண்டியது. [85]

இதுவுமது

கரையுற்றிடுந் தாம்பூரத்திற் கதியா நூற் றொன்று
நிறையுற்றிட வொளிவாகியே நிறமுற்றது வயங்கிக்
க்றையற்றுமஞ் சணியாவுரை பதினொன்றெனப் பகர்வாற்
தரையுற்றிடு மாக்காள்வெகு தாடாண்மைசெய்யாதே.

.........

இதில் வேறொரு வேதை சொல்கின்றார்.

(இ-ள்) அழுக்குமிகுந்த தாம்பிரத்திலே இந்த மருந்தை வேகமாக நூற்றிற்கொன்று கொடுத்தூதினால் அந்தத் தாம்பிரமானது உருகி நிறைந்த ஒளியினையுடையதாகப் பிரகாசித்து நல்ல மஞ்சள் நிறத்தையடைந்து உயர்ந்த தங்கமாகும். இதற்கு மாற்று பதி



னொன்றெனச் சொல்வார்கள். உலகத்திற்றங்கிய மனிதர்களே! இந்த மருந்தானது உங்களுக்குக் கிடைக்குமானால் ஜீவனத்திற்காக வேறொரு முயற்சி செய்யவேண்டியதில்லை—எ-று.

சூக்ஷும விளக்கம்:... உலகத்தில் யாரேனு மொருவாக்கு இந்த மருந்தொன்று மட்டுமிருந்தால் எல்லா நலத்தையுந் தருமாகையால் ஜீவனத்திற்கு வேறு முயற்சி செய்யவேன்டியதில்லை யென்றார். இந்த மட்டில் இம்முறையின் வேதைகளை முடித்துவிட்டு மேலே ஞானத்தைச் சொல்லத் தொடங்குகின்றார். (86)

ஞானம்

87 முதல் 94 வரையுள்ள பாட்டுகள்:— இந்த எட்டுப் பாட்டுகளிலும் ஞான மார்க்கத்தைப் பற்றி விரிவாகச் சொல்கின்றார். இங்குநாமெடுத்துக் கொண்டது வைத்திய வாத சம்பந்தமாத லினாலும் இவ்விஷயத்தை அனுபவசாலிகளான ஞானவான்களிடத்திற் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டிய தாதலினா இப்பாடல்களை யிங்கெடுத்தெழுதாது விடுத்தோம். வேண்டியவர்கள் இதன் மூல நூலைப் பார்த்துத் தெரிந்து கொள்வார்களாக.

இனிமேல் வங்க செந்தூரமென்ற ஓர் சிறந்த முறையைச் சொல்லி இக் காண்டத்தை முடிக்கின்றார்.

வங்க செந்தூரம்

நொண்டிச் சிந்து

படியுறு மாந்தர்களே—மருந்தொன்று
பகருகி றேன்வெகு பரிவுடனே
கடியெனும் பேர்முதலும்—ரகரைந்துங்
கதியுடன் மகர்முறை தனினமுதலுங்

கெடியுடன் ஙகர்கடையுங்—ககரொன்று
கிளத்துவேன் வகர்முறை தனிற்கடையும்
வடிவுடன் பலமதொனறு—நிறுத்துநீ
வகையுடன் மூசையுட் செலுத்திடுவாய்.

———

இதில் இம்முறைக்காம் ஓர் சரக்கும் செய்முறையுஞ் சொல்கின்றார்.

(இ-ள்) பூவுலகத்திற் பொருந்திய மனிதர்களே ஓர் மருந்தைச் சொல்லத் தொடங்குகின்றேன் சிநேகத்தோடு கேட்பீர்களாக. கடியென்று சொல்லப்பட்ட பெயரினது முதலெழுத்தோடு, ரகரத்தின் ஐந்தாமெழுத்தையும், ஆதரவோடு மகரத்திற்கு முறையாகிய வெழுத்தின் கூட்டத்தில் முதலெழுத்தையும், கீர்த்தியோடு ஙகரத்தின் கடையெழுத்தையும், ககரக் கூட்டத்தின் முதலெழுத்தையும், வகரத்திற்கு முறையாகிய வெழுத்தின் கடையெழுத்தையுஞ் சேர்த்து அதனால் வந்த பெயருள்ள சரக்கில் அழகோடு ஒரு பலம் நிறுத்தெடுத்து ஓர்மூசையுட் செலுத்துவாய். மேலுஞ் சொல்வேன் கேட்பாயாக—எ-று.

சூக்ஷ்ம விளக்கம்:...கடியென்று சொல்லப்பட்ட பெயரினது முதலெழுத்தாவது (க) ரகரத்தின் ஐந்தாமெழுத்தாவது (ரு) மகரத்திற்கு முறையாகிய வெழுத்தின் கூட்டமாவது வகரக் கூட்டம். இந்த வகரக் கூட்டத்தின் முதலெத்தாவது (வ) ஙகரத்தின் கடையெழுத்தாவது (ங்) ககரக் கூட்டத்தின் முதவெழுத்தாவது (க) வகரத்திற்கு முறையாகிய வெழுத்தாவது-மகரம் இதன் கடை யெழுத்தாவது (ம்) ஆக இவ்வாறெழுத்துக்களையும் முறையே கூட்ட (கருவங்கம்) என்றானது. இதுவே மேற்குறித்த சரக்காம். இதிலேயே ஒருபலம் எடுத்து மூசையிற் போடவேண்டியது. இனிமேற் செய்யவேண்டிவித்தை அடுத்த பாட்டிற் கூறுவாரென வறிக.



கலி விருத்தம்

ஊதும் போதே யுழன்று கொதிக்குமுன்
ஓது கின்ற வுயங்கு செய நீரில்
பாத மாகப் பணவெடை குத்திடு
வேதை யாக விளங்குங் களங்கமே.

———

இதில் முன் மூசையுட் போட்ட மருந்தைப் பின் செய்யவேண்டிய விதம் சொல்கின்றார்.

[இ...ள்] முன் பாட்டிற் குறித்தபடி மூசையுட் செலுத்திய மருந்தை அப்படியே நெருப்பிலிட்டூதினால் மூசைக்குள் ளிருக்கு மருந்தானது உருகிக் கொதிக்கும். அப்படிக் கொதித்துவரும் சமயத்தில் முன்னே சொல்லி யிருக்கிற துருசுச் செயநீரில் ஆதரவாக 488 மி.கி. யெடுத்து அதில் விடக் கடவாய். அப்படி விட்டால் அது கூடிய சீக்கிரத்தில் களங்கமாகி விடும்.எ—று.

சூக்ஷ்ம விளக்கம்...வெளிப்படை. (96)

இதுவுமது

களங்கந் தன்னைநீ கல்வத்தி விட்டுடன்
முளங்க மாக்குரு மூலியின் சாற்றினால்
இளங்க மாக வரையிரு சாமமே
உளங்க மாகவே யோட்டினுள் ளேபொதி.

———

இதில் முன் களங்கத்திற்கு அரைப்புச் சொல்கின்றார்.

(இ—ள்) மேலே சொல்லிய களங்கத்தைக் கல்வத்திலிட்டு உடனே அதில் குருமூலி யென்று சொல்லப்பட்ட திருநூற்றுப் பச்சை யிலைச் சாற்றினால் இணக்கமாக இரண்டு சாமம் அரைக்கக் கடவாய். அப்படி

அரைத்தபின் அதை வழித்தெடுத்து வைக்கவேண்டிய முறைப்படி ஓட்டில் வைத்து மேலோடு மூடக் கடவாய். எ...று.

சூக்ஷ்ம விளக்கம்:—வெளிப்படை. (97)

இதுவுமது

சீலை செய்யுமுன் வாறுபோற் றீபரம்
ஓல மாகப் புடமுழ மொன்றுடன்
கால மாகவே காட்டி யெரியிடே
தூல மாகத் துலங்குஞ்செந் தூரமே.

.........

இதில் மேற்படி மருந்திற்குப் புடம்போடும் விதம் சொல்கின்றார்.

(இ-ள்) இதற்கு முந்தின பாட்டில் குறித்தபடி களங்கத்தை ஓட்டில் வைத்து மேலோடு மூடியபின் இதற்கு முந்தின முறைகளின் கிரமங்களின் படியே சீலைமண் செய்து ஒருமுழப் புடம் ஏற்படுத்தி அதன் மத்தியிற் கவசத்தை வைத்து நெருப்பிட் டெரிந்தடங் கினபின் எடுத்துப் பார்க்க நல்ல நிறமுள்ள செந் தூரமாகப் பிரகாசிக்கும்.எ—று.

சூட்சம விளக்கம்:— இதற்கு முந்தின நாகசெந் தூர முறை முதலியவற்றில் சொல்லி யிருக்கின்றபடியே கவசம் செய்தல், புடம்போடல் முதலியவைகளைச் செய்துகொள்ள வேண்டியது. (98)

இதுவுமது

இத்த கைவித மாக வியல்புடன்
பொற்றி லையதன் சாற்றினி லாட்டிடு
சுத்த மாகமுன் சொல்லிய வாறுபோல்
எத்த மாகப் புடம்போட் டெடுத்திடே.

.........



இதில் மற்றொரு புடம் சொல்கின்றார்.

(இ-ள்) முன் பாட்டிற் சொய்லியபடி ஆகிய செந் தூரத்தை பொற்றலைக் கையாந்தகரைச் சாற்றினால் முந்தின கிரமப்படியே யரைத்து முன் சொல்லியவாறு போல புடத்தைப் போட்டெடுக்கக் கடவாய்.எ—று.

சூட்சும விளக்கம்:—இந்த முறையின் இரண்டு புடத்திற்கும் அரைப்பு முதலியவைகளுக்கும் விபரம் சொல்லாமலே முன் கிரமப்படியே அரைத்துப் புடம் போடக் கடவீர்கள் என்று சொல்லிவிட்டார். இது சுருங்கச் சொல்லலென்னும் அழகு பற்றி யாதலினால் இதைச் செய்பவர்கள் இங்கு விபரம் சொல்லாவிடினும் முந்தின முறைகளின் கிரமங்களை யனுசரித்துச் செய்து கொள்வார்களாக, (99)

இதுவுமது

புடம் பிரித்திடு பொற்புறு செந்தூரந்
திடம தாகச் சிவந்து மயமுறும்
படம தாகவே பண்ணு பதனமே
கடம தாகவே வேதை கழறுவேன்.

———

இதில் மருந்தின் முடிவு சொல்கின்றார்.

(இ—ள்) மேற்பாட்டிற் குறித்தபடி புடம்போட்ட மருந்தை நெருப்பெரிந் தடங்கினபின் எடுத்துக் கவசத் தைப் பிரித்துப் பார்த்தால் அந்த மருந்தானது நல்ல பலம் பொருந்திய சிவந்த நிறமுள்ள செந்தூரமாகப் பிரகாசிக்கும். இதைப் பிரியத்தோடு பத்திரப்படுத்தக் கடவாய். இனி இந்த வங்க செந்தூரத்தாலாகும்வேதை யையும் சொல்வேன் கேட்பாய். எ-று.

சூட்சும விளக்கம்;- வெளிப்படை. (100)

இதுவுமது

தாழு வான நவலோகந் தன்னிலே
நூல வாகவே நூற்றொன்றை யீயவே
ஆழு வாகவே யாணியும் பத்தொன்றே
ஏழு காண்ட மியல்புடன் முற்றுமே

---

இதில் முன் செந்தூரத்தின் வேதை சொல்லி முடிக்கின்றார்.

(இ-ள்) மேற்கண்ட வங்க செந்தூரத்தை நவலோகங்களுள்ளே தாழ்மை யடைந்த எந்த லோகத்திலானாலும் நூற்றிற்கொன்று கொடுத்தூதினால் அந்த லோகமாவது பதினொரு மாற்றுள்ள தங்கமாகும். இத்தோடு ஏழாவது காண்டமும் முற்றுப் பெற்றது. எ...று.

சூட்சும விளக்கம்:—சாஸ்திரங்களில் லோகங்கள் பஞ்சலோக மென்றும் சத்த லோகமென்றும் இரண்டு வகுப்பாகத்தான் ஏற்பட் டிருக்கின்றது. இவர் இந்த நூலில் பல விடங்களிலும் நவலோக மென்றே சொல்லி வருகின்றார், இவர் உட்பிரிவாயுள்ள சிலலோகங்களையும் சேர்த்துக் கொண்டனர்போலும், இந்த வங்க செந்தூரமானது எதில் கொடுத்தாலும் ஒரே குணத்தையே செய்யப்பட்ட தாகையால் எல்லா லோகங்களுக்கும் சேர்த்து ஒரே பாட்டில் சொல்லி முடித்து விட்டாரென வறிக, இந்தப் பாட்டோடு பலமுறைகளையும் சொல்லி முடித்துவிட்டார். இனி அடுத்த காண்டத்திலும் இவ்வாறே பல அரிய முறைகளைச் சொல்லி முடிப்பாரென வறிக. (101)

ஏழாவது காண்டம்
முற்றுப் பெற்றது.

---

கடவுள் துணை

# இலக்க சௌமிய சாகரம்

தேர்ந்தெடுத்த செய்யுட்களும்,
தெளிபொருள் விளக்க வுரையும்.

---

## எட்டாவது காண்டம்

*காப்பு*

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

திணியாகிக் கிணியாகித் தெளிவாகி யொளியாகித்
தீப மாகி
மணியாகி மயமாகி நயமாகிப் பயமாகி
வயங்கு கின்ற
கணியாகிக் களியாகுங் கர்த்தனதி னருளாலே
கழறு கின்ற
அணியாகெண் ணூறுரைக்க வகண்டவெளி யிடநி
றைந்த வாதி காப்பே.

.........

இப்பாட்டில் தெய்வவணக்கங் கூறுகின்றார்.

[இ—ள்] உலகத்தில் எவற்றினும் பலமுடையதாகி, சப்தரூபமானதாகி, இருளற்ற விடமாகி, எங்கும் பிரகாசமானதாகி, தூண்டா மணிவிளக்காகி, உயர்ந்த இரத்தினங்களின் ரூபமாகி, நன்மையாகி, தீயவழியுடையார்க்குப் பயத்தைத் தருவனவாகி, ஞானவான்களால் கணக்கிட்டறியப்பட்ட எல்லையுடையதாகி விளங்கா நின்ற பொருளென்று சொல்லத்தக்க சந்தோஷமயமான கடவுளினுடைய திருவருளினாலே வெளியிட்ட அழகுபொருந்திய இந்த இலக்க சௌமியசாகரமென்னு நூலினது எட்டாவது காண்டத்தைச் சொல்ல வெளி

யான எவ்விடத்து நிறைந்த அந்தக் கடவுளே காக்கக் கடவன்.எ...று.

சூட்சும விளக்கம்:- கடவுள் ஞானிகளிடமாகவே பிரசன்னமாகி அவர்களைத் தன்மயமாக்கும் குண முடையனாதலினாலே ஞானவான்களாற் கணித்தறியப் பட்ட எல்லையுடைய தாகியென்றார். இந்நூலின் காண்டங்களிலுள்ள முதற் காப்புச் செய் யுட்களுக்கு எவ்வளவு தூரம் உரைவிரித் தெழுதினாலும் இடந் தரும். அவ்விதமெழுதிற் பெருகுமெனக் கருதிச் சுருக் கியே ஒருவாறாய் எழுதி வருகின்றோம். இன்னும் தெரிந்த மகான்கள் இந்தக் காப்புச் செய்யுட்களில் அந்த ரங்கமாகிய விசேஷக்கருத் தொவ்வொன்று இருந்து வருகின்றதென்றும் அதுதான் இந்நூலிற் சொல்லிவரு கின்ற எல்லா விஷயங்களுக்கும் ஆதாரமானதென்றும் அந்த நுட்பங்களை யெல்லாம் பெரியோர்களை யடுத்து அவர்கட்கு வழிபட்டுத் தெரிந்து கொள்ள வேண்டு மென்றும் அப்படித் தெரிந்து கொள்ளாவிட்டால் விசேஷ பலனை யடைய முடியாதென்றுஞ் சொல்லி வருகின்றார் கள். ஆதலின் இவ்விஷயத்தைப் பற்றித் தெரிந்தோர் களிட மடுத்துக் கேட்டுக் கொள்வார்களாக.

நூல்

இரச செந்தூரம்

கலிவிருத்தம்

இரு நான்கெனு நூற்றி லியல்புடன்
பொரு ளோங்கப் புகலுவேன் கேண்மினோ
உரு வாகவே யோடுவ னாடுவன்
கரு வாகக் கயப்படை முன்னவன்.

——

இதில் இம்முறைக்காம் ஓர் சரக்குச் சொல்கின்றார்.



[இ-ள்] பூமியிற் பொருந்திய மனிதர்களே! இந்த எட்டாவது காண்டத்திலுள்ள செல்வமானது அதிகரிக் கும்படியான ஓர் முறையைச் சொல்வேன் கேட்பீர்களாக நல்ல ரூபத்தோடு ஓடுவதும் ஆடுவதுமா யிருக்கப் பட்டது. யானை முதலாகிய நால்வகைச் சேனைகளில் முதற்சேனையின் பெயரைக் கொண்டது. இப்பெயரு டைய சரக்கை ஆராய்ந்து தெரிவீர்களாக. எ—று.

சூட்சும விளக்கம்:- யானை முதலாகிய நால்வகைச் சேனைகளில் முதற்சேனையாவது [இரதம்] இதை இரத கஜதுரக பதாதி யென்பவற்றாற் காண்க. இது இரதமென விருப்பினும் சகரத்துக்குத் தகரம் போலியாக வந்ததெனக் கொண்டு [இரசம்] என நிதானிக்க வேண் டியது. இதுவே மேற்குறித்த சரக்காம். இந்த இரச மானது ஊரித்திரியுஞ் சுபாவமுடையதாகையால் நல்ல ரூபத்தோடு ஓடுவதும் ஆடுவதுமாயிருக்கப்பட்டதென் றார். இதன் நிறை முதலியவற்றை அடுத்த பாட்டிற் கூறுவாறெனவறிக. [2]

இதுவுமது

இங்கு விண்ட மருந்தி லியல்புடன்
துங்க மா நிறை சோதியைப் போலவே
எங்க மாக வெடுத்திடு வாய்மணி
தங்கு கின்ற தலைகரின் குப்பையே.

......

இப்பாட்டில் முன் சொல்லிய சரக்கின் நிறை சொல் கின்றார்.

மேலே சொல்லிய மருந்திற் பொருத்தத்தோடு எடுக்கவேண்டிய உயர்வாகிய நிறையாவது சுடரைப் போன்றதாகும். அந்த நிறையை மேற்சொல்லிய கிரமத் தால் இவ்வளவெனத் தெரிந்து எடுக்கக்கடவீர்கள். ஆதிசேடனுடைய முடி யிற்றங்கிய பூமியிலே வாழ்ந் திருக்கப்பட்ட மானிடர் கூட்டங்களே! இன்னமுஞ் சொல்வேன் கேட்பீர்களாக. எ..று.

சூட்சும விளக்கம்:- சுடர்:—சந்திரன். சூரியன், அக்கினி யென்ற மூன்றாகையால் இந்த இரசத்தினளவு மூன்றெனக் கொள்ளவேண்டியது. இது பலமோ விராகனெடையோ வென்ற விபரம் இதிற் சொல்லப்பட வில்லையாயினும். இதற்கு முந்தின முறையாகிய ஏழாவது காண்டத்தின் ஈற்றிலுள்ள வங்க செந்தூர முறையிற் பலக்கணக்கே சொல்லப்பட்டிருப்பதால் அந்தக் கிரமநோக்கி இதையும் பலமெனவே கொள்ள வேண்டியது. எமக்குச் சொல்லிய ஆசானும் அவ்வாறே சொல்லியிருக்கின்றார். ஆகவே இரசம் பலம் மூன்று எடுக்க வேண்டுமென வறிக. [3]

விபரம்

இரசம் 105 கிராம்

இதுவுமது

மின்னை யென்று விளங்கு நரர்பெயர்
முன்துன விட்டு முயலுவேன் கொங்கையின்
முன்னை முன்னையே மூட்டிடு வாமரோ
பொன்னை யன்னப் புகழு மருந்ததே.

......

இதுமுதல் மூன்று பாட்டுகளால் இம்முறைக்காம் ஓர் சாறு சொல்கின்றார்.

[இ-ள்] மானிடர்களே மின்னையென்று சொல்லப் படுவதாகிய பெயரில் முதலெழுத்தை நீக்கிவிட்டு மற்றப் பாகத்தை யெடுத்துக்கொண்டு அதனோடு கொங்கை யென்ற பெயரின் முதலெழுத்தை யெடுத்து முன் பதத்தின் முதலில் எடுத்த எழுத்திற்குப் பதிலாகச் சேர்த்துப் பார்க்கக் கடவாய். அப்படிப் பார்த்தால் அழகாகியபின் சாறெடுக்க வேண்டிய மருந்தின் பாதிப் பெயரானது விளங்கும். எ...று.



சூட்சும விளக்கம்:... மின்னை யென்று சொல்லப் பட்ட பதத்தின் முதலெழுத்தை நீக்கிவிட நின்றபாக மானது [ன்னை]; கொங்கை யென்ற பதத்தின் முதலெ முத்தாவது [கொ] இந்த எழுத்தை முன்னிருக்கின் றன்னை என்பதோடு சேர்க்க [கொன்னை] என்றானது இதுவே பின் சாறெடுக்கவேண்டிய மரத்தின் பாதிப் பெயராம். இதற்கு அடுத்த பாட்டில் இன்னும் பாதிப் பெயரையுஞ் சொல்லி இதன் முழுப்பெயரையும் பூர்த்தி செய்வார். இப்பெயரானது [கொன்னை] என்பதின் மரூஉ மொழியாதலினால் இதை-கொன்றை யென்றே கொள்ளவேண்டியது. இந்தக் கொன்றையில் அநேகப் பேதங்களிருப்பதால் இது இன்ன கொன்றை யென்னும் விஷயத்தை அடுத்த பாட்டிற் சொல்வதினாற்றான் இதன் முழுப்பெயரைப் பூர்த்தி பண்ணுவாரென வறிக. [4]

இதுவுமது

வண்டு வுண்டு மதுவழிந் தோடிடும்
தென்ற லோடு திகழ்ந்திடும் வாசனை
இன்று ரைத்திடும் பேரி லியல்புடன்
கண்ட மாப்பூ ககர்கடை காட்டிடு.

......

இதுவுமது

[இ.ள்] மேற்சொல்லிய மரத்தில் வண்டுகள் மகரந்தங்களை உண்டுகொண்டிருக்கும், அதன் மலர் களிலிருந்து தேனானது வழிந்து ஓடிக்கொண்டிருக்கும், அம்மலரின் வாசனையானது தென்றலோடு சேர்ந்து வீசிக்கொண்டிருக்கும். இத்தகைய குணங்களையுடைய மேலே சொல்லிய கொன்றை மரத்தினது பெயரோடு முன்னாலே பூ வென்ற எழுத்தையும், ககரத்தின் கடை யெழுத்தையும், சேர்த்துப்பார்க்கக் கடவாய். அப்படிச்

சேர்த்துப் பார்த்தால் மேற்படி மரத்தினுடைய பூரணப் பெயரும் விளங்கும். எ...று.

சூட்சும விளக்கம்;...முன் பாட்டிற் சொன்னபடி மேற்படி மரத்தினுடைய பாதிப்பெயராவது(கொன்றை) பூ வென்ற எழுத்தாவது (பூ) ககரத்தின் கடையெழுத்தாவது (க்) ஆக இவ்விரண்டெழுத்துக்களையும் முன் கொன்றையென்ற பெயரின் முதலில் சேர்க்க [பூக் கொன்றை] என்றானது. இதன் விபரத்தை அடுத்த பாட்டிலும் சொல்கின்றார. இதுவே பின் சாறெடுக்க வேண்டிய மரமாம். இதைப் பூக்கொன்றையெனத் தீர்மானிப்பதற்காகவே இப்பாட்டில் மேற்குறித்த மலருக்குரிய விலட்சணங்களை யெல்லாம் சொன்னார். இனி இதனலாகவேண்டிய விஷயங்களையெல்லாம் அடுத்த பாட்டில் சொல்லுவாரென வறிக. (5)

## இதுவுமது

பின்னின் போதை முன்னிற் புரட்டிடு
வின்ன மாக விளங்கு மருந்துமே
தன்ன மாகத் தருவிலை தன்னிலே
என்ன மாக வெடுத்திடு சாறதே.

.........

## இதுவுமது

(இ-ள்) முன்பாட்டில் குறித்தபடி பின்னாலே யமைந்த பெயராகிய [பூக்] என்றதை 4 ம் பாட்டிலமைந்த [கொன்றை] யென்ற பெயரோடு சேர்க்கக் கடவாய். இப்படிச் சேர்த்தால் மரத்தின் பூரணப் பெயராகிய [பூக்கொன்றை] யென்ற நாமம் விளங்கும். இதையறிந்துகொண்டு இந்த மரத்தின் இலையிலே பக்குவமாகச் சாறெடுக்கக்கடவாய்.எ-று.



சூட்சும விளக்கம்:—இந்தப் பூக்கொன்றை யென்ற மரத்தினது பெயரை முன் பாட்டிலேயே விளக்கியிருக்கின்றது. ஆயினும் சந்தேகமறும்படியாக இப் பாட்டிலும் விபரமாக விரித்துரைத்தாரென வறிக. இதில் சொல்லியபடி யெடுத்த சாற்றை யின்னதுசெய்யவேண்டு மென்னும் விபரத்தைப் பற்றி அடுத்த பரட்டில் துலக்குவாரென வறிக. [6]

## சந்த விருத்தம்

எடுக்குமெழிற் சாறானதை யியல்பாகப்பீங் கானில்
விடுப்பாயொரு தேங்காயினுள் வியனுற்றிடு நீர்போல்
முடுப்பாகமுன் செயநீரதின் முயல்வேனொரு பணமே
தொடுப்பாயதி லூற்றிச்சொரி சூரிசுடர் தனில்வை.

.........

இதில் முன்னெடுத்த சாற்றைப் பின் செய்ய வேண்டிய விதம் சொல்கின்றார்.

[இ-ள்] மேலே சொல்லியபடி யெடுத்த பூக்கொன்றைச்சாற்றைப் பொருத்தமாக ஒரு பீங்கானில் ஒரு தேங்காய்க்குள் ளிருக்கின்ற நீர் எவ்வளவோ அவ்வளவு விடக்கடவாய். அப்படி விட்டபிற்பாடு அதில் இதற்கு முந்தின காண்டத்திற் சொல்லியிருக்கின்ற துருசுச் செயநீரில் 488மிகி யெடுத்துக் கலந்து சூரியனுக்கு முன்பாக வைப்பாய்.எ—று.

சூட்சும விளக்கம்:...ஒரு தேங்காயிலுள்ள நீரினளவு சாற்றைப் பாத்திரத்தில் விடவேண்டும். [7]

## இதுவுமது

வைநீதின மொன்றேயதன் வனமானது மஞ்சன்
கையாலதை யெடுத்துமுனங் கழறும்பல மருந்தை
மையாகவே கல்வம்மதில் மவுல்நீர்கொடு வாட்டு
செய்யாளுறச் செயும்நீரது செயப்பட்டது நயமாம்.

......

இதில் மேலே சொல்லியபடி பக்குவப்படுத்திய சாற்றில் முன் சரக்காகிய இரசத்தை யரைக்கும் விதம் சொல்கின்றார்.

[இ-ள்] முன் சொன்னபடி துருசுச் செயநீர் கலந்த பூக்கொன்றைச் சாற்றை மேலே சொல்லியபடி வெயிலிலே ஒரு நாள்வரை வைக்கக் கடவாய். அப்படி வைத்தால் அந்தச் சாறானது மஞ்சள் நிறமாயிருக்கும் அதையெடுத்து கொண்டு முன் சொல்லிய இரசத்தைக் கல்வத்தில் விட்டு அதில் மேலே சொன்னபடி வெயிலில் வைத்தெடுத்துக் கொண்ட பூக்கொன்றைச்சாறு, துருசுச் செயநீர்க் கலவையை விட்டு நன்றாகப் பலத்தோடு அரைக்கக்கடவாய். அப்படி யரைத்தால் இந்த மருந்தானது மேற்கண்ட செயநீரினது தன்மையினாலே இலக்குமி உன் கைவசமாகும்படியான மார்க்கத்தைச் செய்யும். எ-று.

சூட்சும விளக்கம்:...இரசம் பலக் கணக்குந்தானென்பதை இப்பாட்டில் "கழறும் பலமருந்தை" என்றதனாலுங் காட்டினார். இந்த முறையானதுதுருசுச் செயநீரினாலேயே விசேஷ குணத்தைக் செய்யுமாதலினால் செயநீரினது தன்மையினாலே இலட்சுமி உன் கை வச மாகும்படியான மார்க்கத்தைச் செய்யுமென்றார். [8]

இதுவுமது

நீரானது செலுமத்தையில் நினைவாகவே யரைப்பாய்
மோரானதில் வெண்ணெயது முழுகித்தெழும் வார் போல்
வாராகிய மருந்தானதின் வலுவானது குறைந்து
தீராகிய வுயிரற்றது திரளுமெழு கெனவே.

---



இதில் அரைத்தபின் மருந்திருக்கும் விதத்தைச் சொல்கின்றார்.

[இ-ள்] மேலே சொல்லியபடியே பூக்கொன்றைச் சாறு துருசுச் செயநீர் கலவை செல்லும் வரையிலும் மேற்படி இரசத்தை நன்றாக அரைக்கக் கடவாய். அப்படி யரைத்தால் அந்த இரசமானது மோர்கடையும் காலத்தில் அதிலிருந்து வெண்ணெயானது எப்படி திரண்டு எழுமோ அதைப்போல் தன் வலிமையற்று மடிந்து மெழுகைப்போல திரண்டு வரும். எ-று.

சூட்சும விளக்கம்...இரச மடிதலாவது தன்னுடைய ரூபமாறுதலேயாம். [9]

இதுவுமது

மெழுகாகிய மருந்தானதை விரைவாகவே வழித்து
ஒழுகாகிய மருந்தையுப சரமீதினிற் செலுத்தி
அழகாகவெண் கருவிட்டரைய தனொட்டிய விகடை
எழுகாகவே சீலைபொதி யேழானது வாழ்.

---

இதில் முன் அரைத்த மருந்திற்குக் கவசம் செய்யும் விதம் சொல்கின்றார்.

[இ-ள்] முன்சொன்னபடி யரைத்தால் மெழுகு போலான மருந்தை வேகமாக வழித்தெடுத்து ஒரு மூசையில்போட்டு கோழி முட்டையின் ஓட்டை அதன் வெள்ளைக் கருவைவிட்டு அழகாக அரைத்து அதிற் சீலையைத் தோய்த்து மேற்படி மூசைக்கு ஏழுசீலை செய்யக் கடவாய். எ-று.

சூட்சும விளக்கம்;—:—வெளிப்படை. [10]

இதுவுமது

புடம்போட்டிடு முழமொன்றரை புகழாகிய மருந்தை
திடமாகவே தீமூட்டுபின் சீலைதனை நீக்கில்

வடமாவன மஞ்சளென வகையாகவே தோற்றுங்
கடவுளறி வானல்லது கழறுற்றிட வரிதே.

---

இப்பாட்டில் மேற்படி மருந்தைப் புடம்போடும் விதம் சொல்கின்றார்;

[இ-ள்] ஒன்றரை முழப்புடம் தயார்செய்து மேலே சொல்லியபடி மூசை செய்த மருந்தை மத்தியில் வைத்து தைரியத்தோடு நெருப்பை மூட்டி எரிந்தடங்கின பின் புடத்தைப் பிரித்து மருந்தை யெடுத்துக் கவசத்தை நீக்கிப் பார்த்தால் அந்த மருந்தானது மஞ்சளைப் போன்ற நிறமுடையதாகத் தோன்றும் இம் மருந்தின் பெருமையைச் சொல்வதற்கும் அரிதாகும். இதனருமையைக் கடவுளே யறிவானல்லது மற்றியாரறிய வல்லார்.எ-று.

சூட்சும விளக்கம்:—இம்மருந்தின் பெருமைதோன்ற கடவுளே யறிவானல்லது மற்று யாரறியவல்லார் என்றார். [11

வேறு செய்யுள்.

பஞ்சள்வன மானவெழில் மாமருந்து தன்னை
விஞ்சையுடன் கல்வமதில் விட்டுடன் வியப்பா
பஞ்சினிலைச் சாறதனி லாட்டுபரி வாக
தஞ்சமெனச் சாமமது சாற்றிடுவே னொன்றே.

---

இதில் மேற்படி மருந்தின் மறுஅரைப்புச் சொல்கின்றார்.

(இ-ள்) முன் சொன்னபடி மஞ்சள் நிறமாகத் தோற்றிய மருந்தை அறிவோடு பழையபடியுங் கல்வத்திற் போட்டு சந்தோஷத்தோடு பருத்தியிலைச் சாற்றை விட்டு அன்பாக 3 மணி நேரம் உறுதியுடனே அரைக்கக் கடவாய்—எ-று.



சூட்சும விளக்கம்:...செல்லத்தக்க அளவு பருத்தியிலைச் சாற்றை யெடுத்துக்கொண்டு சிறுகச் சிறுக விட்டு 3 மணிநேரமரைக்க வேண்டும். (12)

இதுவுமது

ஆட்டிய மருந்ததனை யடைவுடன் வழித்து
ஒட்டினுளே வட்டமுட னுச்சிதமாய் வைத்து
காட்டிடுவாய் சீலைகளி லேழுகணக் கென்ன
போட்டிடு புடமது புகலுமுழ மொன்றே.

......

இப்பாட்டில் முன் அரைத்த மருந்திற்கு புடவிபரஞ் சொல்கின்றார்.

(இ-ள்) மேலே சொல்லியபடி யரைத்த மருந்தைக் கிரமப்படியே வழித்தெடுத்து ஒரு ஒட்டில் வட்டமாக உயர்வுடனே வைத்து களிமண் சீலையால் ஏழு சீலை செய்து ஒருமுழப் புடம்போடக் கடவாய்-எ-று

சூக்ஷும விளக்கம்:...வெளிப்படை. (13)

கொச்சகக் கலிப்பா

கனலுறு மருந்ததனைக் கவசமே பிரித்திடவே
வனமதுஞ்சி வப்பாகி வடிவுடனி லங்கிடுமே
இனமுமொருவேதைசொல்வே னிலக்குமி பிரியானே
தனமதுதான்வளர்ந்திடுமே தாத்திரியின்மாந்தர்களே

இதில் புடம்பிரிக்கு மார்க்கஞ் சொல்கின்றார்.

(இ-ள்) இதற்கு முந்தின பாட்டிற் சொன்னபடி புடம் போட்ட மருந்தை நெருப்பாறின பின் எடுத்துக் கவசத்தைப் பிரித்துப் பார்த்தால் அதற்குள்ளிருக்கு மருந்தானது சிவந்த நிறத்தோடு பிரகாசித்துக் கொண்டிருக்கும். இன்னும் இது சம்பந்தமாகிய வேறு வேதையையுஞ் சொல்வேன் கேட்பீர்களாக.பூமியிற்பொருந்திய

மனிதர்களே இம்முறையைக் கிரமப்படிசெய்து முடித்துக் கொண்டால் இலக்குமியானவள் உங்களிடத்திலேயே வாசஞ்செய்து கொண்டிருப்பாள். உங்களுக்குச் செல்வமானது அதிகரித்தோங்கும்—எ-று.

சூட்சும விளக்கம்:—வெளிப்படை. (14)

வேறு செய்யுள்

ஓலை முன்னவன் பின்னவ ரிமுதல்பின்
தலை யின்பெயர் முதலினி லீறதன்பின்
மலை முன்னொடு மாட்டிடு ரகரொன்பான்
இலை யானதின் சாறதி லாட்டிடுவாய்.

——

இதில் பின் அரைப்புக்குச் சாறெடுக்கவேண்டிய பச்சிலையும் அரைப்புஞ் சொல்கின்றார்.

(இ-ள்) ஓலை யென்னும் பெயரினுடைய முதலெழுத்திற்கு பின்னெழுத்தோடு, ரியென்ற வெழுத்தையும் இந்தப் பாட்டின் முதலடியின் முதலெழுத்திற் கடுத்த வெழுத்தையும், தலையென்று சொல்லப்பட்ட பதத்திற்கு முன்னாலே யிருக்கப்பட்ட எழுத்தின் ஈற்றெழுத்தையும். அதற்கடுத்துள்ள வெழுத்தையும், மலையென்ற பதத்தின் முதலெழுத்தையும் சேர்த்து அதனாலென்ன பெயரமையுமே அந்தப் பெயருள்ள பச்சிலையின் சாற்றினாலே மூன்புடம் பிரித்தெடுத்திருக்கின்ற மருந்தைப் பழையபடியுங் கல்வத்திற்போட்டு அரைக்கக் கடவாய்—எ-று.

சூட்சும விளக்கம்:... ஒலையென்னும் பெயரினுடைய முதலெழுத்தாவது-ஒ-இதற்குப் பிந்தின எழுத்தாவது (ஓ) ரியென்ற வெழுத்தாவது [ரி] இந்தப்பாட்டின் முதலடியின் முதலெழுத்தித் கடுத்த வெழுத்தாவது



(லை) தலையென்று சொல்லப்பட்ட பதத்திற்கு முன்னாலே யிருக்கப்பட்டது-த-இதற்கு ஈற்றெழுத்தாவது (த்). இந்தத் தகரத்திற் கடுத்த வெழுத்தாவது [தா] மலையென்ற பதத்தின் முதவெழுத்தாவது (ம) ரகரவரியின் ஒன்பதாமெழுத்தாவது [ரை] ஆக இவ்வேழெழுத்துக்களையும் ஒன்றாகச் சேர்க்க [ஓரிலைத் தாமரை] யென்றானது. இதுவே மேற்குறித்த பச்சிலையாம். இந்த ஓரிலைத் தாமரையின் சாற்றினாலேயே மூன் புடம் பிரித்தெடுத்த மருந்தை அரைக்கவேண்டியது இதை இத்தனை சாமம் அரைக்கவேண்டுமென்னும் விபரம் முதலானவை அடுத்த பாட்டிற்கூறுவாரெனவறிக.

இதுவுமது

நவில் வேனொரு சாமமு நன்குறவே
அவி லாகவே யாட்டி வழித்திடுவாய்
ஒவி லாகவே யோட்டினுள் ளேபொதி நீ
எவி லாகவே சீலையு மேழிடுவாய்

.........

இப்பாட்டில் முன்மருந்தைக் கவசஞ்செய்யுமார்க்கஞ் சொல்கின்றார்.

[இ-ள்] மேற்படி மருந்தை முன் சொன்னபடியே 3 மணிநேரம் பொருந்தும்படியாக அரைத்து வழித்தெடுக்கக் கடவாய்.—அப்படி வழித்தெடுத்தவுடனே ஓட்டில் வைத்து மேலோடு மூடி களிமண் சீலையால் ஏழுசிலை செய்யக்கடவாய்—எ-று.

சூட்சும விளக்கம்:—வெளிப்படை. (16)

கலி விருத்தம்

புட மானது பேரட்டிடு வாய்முனம்
அட வாகவே கூறிடும் வாறதாய்
திட மாகத்தீ மூட்டி யெடுத்திடே
முட மாமுருக் கன்ன வனமதே.

.........

இப்பாட்டில் மேற்படி மருந்தைப் புடம்போட்டெடுக் குமார்க்கஞ் சொல்கின்றார்.

(இ-ள்) மேலே சொல்லியபடி சீலை செய்தவுடன் முன்னாலே சொல்லிவந்த கிரமங்களின்படியே புடத்தைப் பிரித்தெடுத்துக் கவத்தை நீக்கிப் பார்த்தால் அந்த மருந்தானது முருக்கம்பூப்போன்ற நிறமாயிருக்கும்...எ-று.

சூட்சம விளக்கம்:- வெளிப்படை. (17)

இதுவுமது

செந்தூரத்தின் றிறமை யுரைத்திட
என்ற னாலே யியல்வது மாகுமோ
அந்த ரத்திறை யன்றி யறிவது
தந்த சூகத் தனுச ரறிவரோ.

இதில் இச்செந்தூரத்தின் பெருமை சொல்கின்றார்.

[இ-ள்] மேற்கண்டபடி ஆகிய செந்தூரத்தின் வல்லபத்தை யிவ்வளவினதென எடுத்துச்சொல்ல என்னால்முடியுமோ? மேலேயுள்ள கடவுளே இம்மருந்தின் பெருமையை யறிவானல்லது இந்தப் பூவுலகத்திலுள்ள மனிதர்கள் அறிவார்களோ—எ-று.

சூக்ஷும விளக்கம்:—வெளிப்படை. (18)

இதுவுமது

மேரி லுற்று மிகுவறி வாகிய
சீரிலுற்றிடுஞ் சித்த ரிஷிகளும்
பாரி லுற்றிடும் பற்பல் நரர்களுஞ்
சேரி லுற்றிடுஞ் செந்தூரஞ் செய்வரோ.

.........



இதுவுமது

(இ-ள்) மகா மேருகிரி முதலாகிய விடங்களிலே தங்கி விவேக மிகுதலினாலே சிறப்புப் பொருந்திய சித்தர் முதலாகிய ரிஷிகளும் மற்றப்படி உலகத்திற் றங்கிய பற்பல சிறந்த மானிடர்களும் மேற்கண்ட செந்தூரத்தைப் போன்ற ஓர் செந்தூரத்தைச் செய்து முடிப்பார்களோ (முடியாதென்றபடி)—எ-று.

சூட்சும விளக்கம்:—இப்பாட்டினால் எவராலும் இது போன்ற ஓர் செந்தூரத்தை முடிக்க முடியாதென்பதை விளக்கினார். (19)

இதுவுமது

தத்து வத்தின் றவசுறச் செய்திடுஞ்
சித்தர் தன்னைச் செலுத்திடும் விண்ணிலே
புத்தி ஞானக் கடலலை பொங்கிடும்
நற்ற வத்தி னயமுறுஞ் செந்தூரம்.

.........

இதுவுமது

(இ-ள்) இந்தச் செந்தூரமானது தத்துவங்களை யறிந்து செய்யப்படுவதாகிய தவத்தைக் கைகூடச் செய்திடும், சித்தர்களை யெல்லாம் உயர்ந்த பதவியிற் கொண்டுபோய்ச் சேர்க்கும். இன்னும் இதனால் அறிவு மிகுந்த ஞானக்கடலானது அலை திரண்டு பொங்கி வழியும், தவத்தினாலென்ன பிரயோசனங் கிடைக்குமோ அதை யடையச்செய்யும்...எ-று.

சூக்ஷும விளக்கம்:... இத்தச் செந்நூரத்தாற் பல அரிய காரியங்க ளெல்லாங் கைகூடு மென்பதைக் குறிப்பிட்டார். (20)

வேறு

மேவுமெழிவ் மேன்மையுறு செந்தூரத்தின் வேதை
பூ வினுறு மாந்தரே புகன்றிடவே கேண்மோ

தாவமுடன் றாம்பிரத்திற் றாக்கிடுநூற் றொன்று
ஆவமுட னணிபனி ரெண்டாமர னணை.

---

இதுமுதல் மேற்படி செந்தூரத்தின் வேதை சொல்கின்றார்.

[இ-ன்] பூவுலகந்திற் பொருந்திய மனிதர்களே! அழகும் மேன்மையும் தங்கிய இந்தச் செந்தூரத்தின் வேதையைச் சொல்வேன் கேட்பீர்களாக. இதைத் தாம்பிரத்தில் நூற்றிற்கொன்று கொடுத்துப் பொருத்தத்தோடு ஊதக்கடவீர்கள். அப்படியூதினால் அந்தத் தாம்பிரமானது கடவுள்சாக்ஷியாகப் பனிரண்டு மாற்றுள்ள தங்கமாகும்—எ-று.

சூட்சும விளக்கம்:—வெளிப்படை [21]

இதுவுமது

மாசகலும் வெள்ளிதனில் மாட்டுவகை கேண்மோ
ஆசையுடனே யறுநூற் றொன்றடைவ தாக
வாசமுட னீயவன மஞ்சளெனப் போன்றும்
மாசையென வாணிபனி ரண்டென மதிப்பார்.

---

இதில் வேறுவேதை சொல்கின்றார்.

(இ-ள்) இன்னும் இந்தச் செந்தூரத்தை வெள்ளியிற்சேர்த் துருக்கும்படியான விதத்தையும் சொல்வேன் கேட்பீர்களாக. இதை மேற்படி வெள்ளியில் பிரியத்தோடு கிரமமாக அறுநூற்றிற்கொன்று கொடுத்தூதினால் அந்த வெள்ளியானது உருகி மஞ்சளைப் போன்ற நிறத்தையடைந்து பனிரண்டு மாற்றுள்ளதங்கமாகும்... எ-று.

சூட்சும விளக்கம்:—வெளிப்படை. (22)



கலி விருத்தம்

நாகந் தன்னிலே நாட்டிடு நன்குற
ஏக மாயிரு நூற்றிலொன் றீயவே
மாக லோகமின் பாழையைப் போலவே
ஆகு மாணி பனிரண்டே யன்புடன்.

இதில் மற்றொருவேதை சொல்கின்றார்.

[இ-ன்] மேற்கண்ட செந்தூரத்தை நாகமென்று லோகத்திலே இருநூற்றிற் கொருபங்கு நன்மையாகக் கொடுத்தூத அந்த நாகமானது தெய்வலோகத்திலேயுள்ள பொன்னைப்போன்ற பொன்னாகும். இதற்கு மாற்றுப் பன்னிரண்டாகும்—எ.று.

சூக்ஷும விளக்கம்:...வெளிப்படை (23)

இதுவுமது

வங்க மின்வகை யாயதை மாட்டுவாய்
இங்க மாக வியம்பிய வாறுபோற்
பொங்கி லங்கிப் புரண்டு முருகியே
அங்க மாணி பனிரண்டு மாகுமே.

.........

இதில் பின்னு மொருவேதை சொல்கின்றார்.

(இ.ள்) மேலே சொல்லிய கிரமப்படியே இந்தச் செந்தூரத்தை வங்கத்தில் இருநூற்றிற் கொன்று கொடுத்தூதினால் அந்த வங்கமானது பொங்கிப் புரண்டுருகிப் பனிரண்டு மாற்றுள்ள தங்கமாகும்—எ.று.

சூக்ஷும விளக்கம்:...வெளிப்படை. (24)

இதுவுமது

கட்டி யான கரும்பொன்னிற் காட்டுவாய்
திட்ட மாகமுன் செப்பிய வாறுபோல்
சொட்ட மாகத் துலங்கி யிலங்கியே
அட்டமாகவே யாணி பனிரண்டே.

.........

இப்பாட்டில் இரும்பின் வேதை சொல்கின்றார்.

(இ—ள்) இன்னும் இந்த மருந்தை பலம் பொருந்திய கரும்பொன் என்று சொல்லப்படுவதாகிய இரும்பிலே முன் சொல்லியபடியே இருநூற்றிற்கொன்று கொடுத்தூதக் கடவாய். அவ்வாறு செய்தால் அந்த இரும்பானது உருகி நல்ல நிறத்தோடு பிரகாசித்துப் பனிரண்டு மாற்றுள்ள தங்கமாகும் எ—று.

சூட்சும விளக்கம் :—வெளிப்படை. (25)

வேறு செய்யுள்

மாசையில் மருந்ததை மாட்டு வாய்விதம்
ஆசையி லாயிரத் தொன்றே பண்புடன்
காசையிற் றாம்பிர மாகக் கட்டிடும்
பாசமாய் வேதைவேற் பகரு வாமரோ.

.........

இதில் வேறொரு விசேஷ வேதை புகல்கின்றார்.

(இ—ள்) மேற்கண்ட செந்தூரமாகிய மருந்தைத் தங்கத்திற் பிரியத்தோடு ஆயிரத்திலொன்று கொடுத்தூதக் கடவாய். அப்படிச் செய்தால் அந்தத் தங்கமானது பரிசுத்தமாகிய தாம்பிரமாகப் பிரகாசிக்கும், இனி இத்தாம்பிரத்தால் வேறொரு வேதையையும் புகல்வேன் கேட்பாயாக—எ—று.

சூட்சும விளக்கம் :—மேலே சொல்லிய செம்பானது தங்கச் செம்பென்று சொல்லப்படும். இதை தங்கத்தினு மேலானதெனச் சொல்வார்கள். (26)

இதுவுமது

தாம்பிரத் தாயிரத் தொன்று தாக்கவே
வீம்புறு மாசையின் மேன்மை யாகிடும்
ஆம்புட னாணியு மாகும் பனிரண்டு
காம்புறு வேதைவேறு கழறு வேனன்றே



.........

இதில் மேலே சொல்லிய தங்கச் செம்பின் வேதையுரைக்கின்றார்.

(இ-ள்.) முன்பாட்டிற் குறித்தபடி ஆகிய தங்கச் செம்பைச் சாதாரணமாகிய தாம்பிரத்தில் ஆயிரத்திற் கொன்று கொடுத்தூத அந்தத் தாம்பிரமானது உருகித் தங்கங்களிலெல்லாம் உயர்ந்த தங்கமாகி விடும். அப்படியாகிய தங்கத்திற்கு மாற்றுப் பனிரண்டெனச் சொல்லுவார்கள். இனி வேறு முறையைச் சொல்வேன் கேட்பீர்களாக—எ-று.

சூட்சும விளக்கம் :— இந்த மட்டோடு இம்முறையின் வேதைகளை முடித்து விட்டார். இனி அடுத்த பாட்டு முதல் வேறுமுறை சொல்லத் தொடங்குகின்றார். (27)

.........

## ஜாலமை

நொண்டிச் சிந்து

மவுலக்கேண் மாந்தர்களே—மருந்தொன்று
வகையுட னியம்புவேன் றுகையுடனே
கெவுளியின் சினைதனிலே—யீரைந்து
கெடியுட னெடுத்திடு கிளத்திடு வேன்
கவல்கரு நிறத்த வண்டு...தனிலொன்று
கதியுட னெடுத்திடு மதியுடனே
தவளவெண் குக்குடத்தின்...கன்னிமுட்டை
தன்னிலொன்று மெடுத்திடுந் தனுசர்களே.

இதில் இம்முறைக்காம் சில முக்கியமான சரக்குகள் சொல்கின்றார்.

(இ-ள்.) மனிதர்களே! ஓர் மருந்து சொல்வேன் விபரத்தோடு கேட்பீர்களாக. பல்லியினுடைய முட்டையில் பத்தும் வருத்தத்தைச் செய்வதாகிய கறுவண்டில் ஒன்றும், சங்கைப்போல வெண்மைநிறம் பொருந்திய கோழியினது முதற்கருவின் முட்டையில் ஒன்றும் எடுத்துக் கொள்ளக்கடவீர்கள்—எ-று.

சூக்ஷ்ம விளக்கம் :—கறுவண்டானது கொட்டினால் கடுப்பு முதலிய துன்பத்தைச் செய்வதாகையால் வருத்தத்தைச் செய்யுங் கருவண் டென்றார். கோழியானது முதல் முதல் கருக்கொண்டு இடுகிற முட்டையே முதற் கருவின் முட்டையாம். (28)

விபரம்

| | |
|---|---|
| பல்லி முட்டை | 10 |
| கறுவண்டு | 1 |
| வெண்கோழி முதற்கரு முட்டை | 1 |

திருப்புகழ்ச் சந்த விருத்தம்

எடுத்திடு மருந்தை யியல்புடன் கல்வ மிசையாக்கி
அடுத்திடுந் தொலியோ டரைத்திடு சாம மணியாக
விடுத்திடுஞ் சூடன் விராகனு நீநான் வியனாகக்
கொடுத்தரை. சாமஞ் சொல்லுவே னொன்று துதியாக.

.........

இதில் முன் மருந்துகளுக்கு அரைப்பு விபரஞ் சொல்கின்றார்.

(இ-ள்.) முன்பாட்டிற் குறித்தபடி யெடுத்த மூன்று மருந்துகளையும் பொருத்தத்தோடு கல்வத்திற் போட்டு



அவைகளின் தோலுடனே. மூன்று மணி நேரம் அழகு பெறும்படியாக அரைக்கக் கடவாய். பின்பு சூடன் என்ற சரக்கில் 3 5 கிராம் நீ நான் என்ற அளவு முன் அரைத்த மருந்தோடு போட்டு மறுபடியும் 3 மணி நேரம் பக்தியோடு அரைக்கக் கடவாய்—எ-று.

சூட்சும விளக்கம் :—நீ நான் என்ற அளவு நீ யென்பதொன்று, நானென்ப தொன்று ஆக இரண்டாகையால் இரண்டெனக் கொள்ளவேண்டியது. ஆகவே சூடன் இரண்டு விராகன் அல்லது 7 கிராம் போட்டு அரைக்க வேண்டுமென வறிக. (29)

கொச்சகக் கலிப்பா

முனமே நவிலு மஞ்சணத்தின் முயன்றிடுவேன்
கனமா விராகனெடை காட்டிடுவீ ரிரண்டெனவே
தனமா யரைப்பீர் சாமமொன்று தனுசர்களே
இனம்வே றியல்பா யிசைத்திடவே கேட்டிடுவீர்.

———

இதில் முன் மருந்திற்கு வேறு அரைப்புச் சொல்கின்றார்.

(இ-ள்.) மேலே சொன்னபடி யரைத்தவுடன் இதற்கு முன் நான்காவது காண்டத்திலே சொல்லியிருக்கின்ற பாதாள அஞ்சனத்தில் இரண்டு விராகனெடையெடுத்து உறுதியோடு அந்த மருந்திற் போட்டு 3 மணி நேரம் அரைக்கக் கடவீர்கள். மனிதர்களே! இனிமேலாக வேண்டிய வேறு மார்க்கங்களையுஞ் சொல்வேன் கேட்பீர்களாக—எ-று.

சூக்ஷ்ம விளக்கம் : நான்காவது காண்டத்திற் சொன்ன பாதாள அஞ்சனத்தை எடுத்து இதனுடன் சேர்த்தரைக்கச் சொன்னதனால் எல்லா வேலைகளும் அந்த அஞ்சனத்தின் செயலினாலேயே உண்டாகுமென் பதா யேற்படுகின்றது.

செந்தொடை

நன்னா வெனும்பே ரகர்திரி நண்பாக
இன்னிலையின் சாறதனி லியல்புடனே
மன்னா யரைப்பாய் மதியுடன் சாம மொன்று
பின்னால் வேதை பேசிடக் கேண் மாந்தர்களே.

.........

இப்பாட்டில் வேறு அரைப்புச் சொல்கின்றார்.

(இ-ள்.) இன்னு மேற்படி மருந்தை நன்னா வென்னும் பெயரினோடு ரகரத்தின் மூன்றா மெழுத்தைச் சிநேகத்தோடு சேர்த்து அதனாலென்ன பெயரமையுமோ அப்பெயருள்ள பச்சிலையின் சாற்றினாலே பொருத்தத்தோடு ஒரு சாமநேரம் அரைக்கக் கடவாய். இனி பின்னாலாக வேண்டிய வேதைகளையுஞ் சொல்வேன் கேட்பாய்.—எ-று.

சூட்சும விளக்கம் :—நன்னாவெனும் பெயராவது (நன்னா) ரகரத்தின் மூன்றாமெழுத்தாவது (ரி) ஆக இவ்விரண்டையுஞ் சேர்க்க (நன்னாரி.) யென்றானது. இதுவே மேற்குறித்த பச்சிலையாம், இந்த நன்னாரி யிலையின் சாற்றினாலேயே 3 மணி நேரம் அரைக்க வேண்டியது. [31]

இதுவுமது

மேவிய குருளை மேன்மையுடன் முதலீன்ற
ஆவி னமுதி லமர்ந்திடு வெண்ணெய்தனிற்
காவி யுடனே கழஞ்சியு மொன்றெனநீ
தாவி யரைப்பாய் சாமமு மொன்றாமே.

.........

இதில் பின்னுமொரு அரைப்புச் சொல்கின்றார்,

(இ-ள்.) இன்னும் மேற்படி மருந்தை மேன்மையோடு முதல் கன்று போட்ட பசுவினுடைய பாலிலிருந்தெடுத்த வெண்ணெயிலே 4.4 கிராம் எடுத்துப் போட்டு ஒரு சாமம் வரையில் நன்றாயரைக்கக் கடவாய் எ-று.

சூக்ஷும விளக்கம் : முதல் கன்று போட்ட பசுவானது தலையீற்றுப்பசு. இந்தத் தலையீற்றுப் பசுவின் வெண்ணெயிலேயே 4,4 கிராம் போட்டரைக்க வேண்டியது. (32)



கொச்சகக் கலிப்பா

ஒன்றாக வரைத்ததற்பின் னொளிதிகழு மருந்ததனில்
நன்றாக வேம்பின்பிசி னாட்டி யிடுவாய்கழஞ்சி
தின்றாக வரைத்திடுவாய் செப்பிடுவேன் சாமமொன்று
தன்றாகத் தாமரைப்பூத் தாக்கியரை முன்னியல்போல்

.........

இதில் இரண்டரைப்புச் சொல்கின்றார்.

(இ-ள்) முன் சொன்னபடியே தலையீற்றுப் பசுவின் வெண்ணெயில் 3 மணி நேரம் அரைத்த பிற்பாடு இந்த ஒளி பிரகாசிக்கும் படியான மருந்தில் நலம் பொருந்தும் படியாக வேம்பினுடைய பிசினில் ஒரு கழஞ்சி எடுத்துப் போட்டுப் பலமாக 3 மணி நேரம் அரைக்கக் கடவாய். அதன்பின்பு அதில் தாமரைப் பூவைப் போட்டு முந்தின கிரமப்படியே 3 மணி நேரம் அரைத்துக் கொள்வாய். எ—று.

சூக்ஷும விளக்கம்:- தாமரைப்பூ இவ்வளவு போட்டரைக்க வேண்டுமென்னும் விபரம் இதிற் சொல்லப்படவில்லை ஆயினும் 4.4 கிராம் எடை போட்டு அரைத்து கொள்க. [33]

இதுவுமது

துங்கமுடன் முதற்குருளை துலங்கிடவே யாணினும்
மங்கையரின் கொங்கையுறு மதுவிட்டுச் சாமமொன்று
சங்கையுட னாட்டிடுவீர் தாத்திரியின் மாந்தர்களே
தெங்குமுத லீன்ற திகழ்ந்திடு மெண்ணய்தனில்.

———

இதிற் பின்னுமொரு அரைப்புச் சொல்கின்றார்.

(இ.ள்) சிரேஷ்டத்தோடு தலைப்பிள்ளை ஆண் பிள்ளையாகப் பெற்ற தலைப்பிள்ளைத் தாய்ச்சியின் கொங்கையிலேயிருந்து வடியப்பட்ட பாலை முன்னரைத்த மருந்தில் விட்டு மறுபடியும் 3 மணி நேரம் மதிப்புடனே அரக்கக்கடவீர்கள். பூலோகத்திற் பொருந்திய மனிதர்களே! இன்னும் தென்னைமரமானது முதலிற் காய்த்த தேங்காயிலிருந்த எண்ணெயினாலே. எ...று.

சூக்ஷும விளக்கம்:- பெண் பெற்ற பிள்ளைக்குப் பிள்ளையென்று சொல்லாமல் விலங்கினங்களுட் சிலவற்றிற்குப் பொருத்தமான குருளையென்ற பெயரைச் சொன்ன மரபு வழுவாயினும் உபசாரத்தாற் சொன்ன மரபு வழுமமைதியெனக் கொள்க. இப்பாட்டில் எண்ணெயினாலே என்ற வரையில் நிறுத்தியிருப்பதில் மற்றவைகளை அடுத்த பாட்டிற் சொல்லுவாரெனவறிக. [34]

இதுவுமது

ஆட்டுவாய் சாமமொன்று மடைவுடனே மருந்துதன்னை
காட்டிலுற்ற மயினிணத்திற் கழறுவேன் சாமமொன்று
நாட்டிலிதைப் போலுமுண்டோ நாமறிவதிலை மேலும்
ஏட்டிலிதைப் போலுஞ்சித்த ரியம்பியதில்லையன்றே.

.........

இதில் வேறொரு அரைப்பும் மருந்தின் முடிவுஞ் சொல்கின்றார்.

(இ.ள்) முன்பாட்டிற் குறித்தபடியே முதலிற் காய்த்த தேங்கா யெண்ணெயினாலே மேற்படிமருந்தை முறைப்படியே 3 மணி நேரம் அரைக்கக்கடவாய். அதன் பின்பு அந்த மருந்தைக் காட்டில் திரிவதாகிய மயிலினுடைய கொழுப்பினாலேயும் 3 மணி நேரம் அரைக்கக்கடவாய். இதைப் போலும் ஓர் சிறந்த முறையானது



நாட்டினிடமயுள்ளதோ (இல்லையென்றபடி) மேலும் இதைப் போன்ற மருந்தை நாமும் இதுவரை கண்டறியோம். சித்தர் முதலாகிய ரிஷிகளுங்கூட இதைப் போற் சிறந்த ஓர் முறையைச் சொன்னதில்லை. எ...று.

சூக்ஷும விளக்கம்:— இந்த நூல் கடவுளாலேயே சொல்லப்பட்ட தாதலினால், இதுபோன்ற மருந்தை நாமும் கண்டதில்லையென்றார். [35]

கலி விருத்தம்

அஞ்ச னத்தி னடைவா யரைப்பணந்
தஞ்ச மாகவே தாக்கு நுதலிடை
விஞ்சை யாக விளம்பிடு மந்திரந்
தஞ்ச வாயிரந் தன்னி லுரைசெய்வேன்.

———

இதுமுதல் மேற்படி மையின் வேதை சொல்கின்றார்.

(இ-ள்) மேலே சொல்லிவந்த அஞ்சன மாகிய மையில் முறைப்படியே 488 மி.கி. எடுத்து ஆதாரமாக நெற்றியிலே திலதமிட்டுக் கொள்ளக்கடவாய். இந்த மைக்கு ஆதாரமாகிய வித்தையாய்ச் சொல்லப்பட்ட மந்திரத்தை நிலைபெற்ற இந்நூலின் பத்தாவது காண்டத்திலே சொல்லுவேன் அதைப் பார்த்துக் கிரமப்படி ஜெபித்துக் கொள்வாய். எ—று.

சூட்சும விளக்கம்:—இந்த மையை நெற்றியிற்றிலதமிட்டுக் கொண்டாலும் இதற்குரிய மந்திரசாதனையில்லாவிடில் பிரயோசனப்படா தாகையால் அந்த மந்திர சாதனை அவசியம் வேண்டும். அந்த மந்திர விபரத்தையெல்லாம் பத்தாவது காண்டத்திற் சொல்லியிருக்கின்றார். ஆனபடியினாலெ ஆயிரந்தன்னு லுரை செய்வேன் என்றார். இப்படிச் சொன்னதாலே அங்கு

பார்த்துத் தெரிந்து கொள்ள வேண்டுமென்பதாயிற்று. ஆகையினால் அவ்விதமே பார்த்து அங்கு சொல்லியிருக்கின்றபடியே மந்திர சாதனை செய்து இந்த மையின் பிரயோசனத்தை யடைந்து கொள்க.

இதுவுமது

நெற்றி யுற்றிடு மஞ்சனந் தன்னானீ
சுற்றி லுற்றவர் கண்களிற் றோன்றிடாய்
வெற்றி யாக நெருகும்பலாகிலும்
முற்று மேதெரி யாது முகவிழி.

———

இதுவுமது

[இ-ள்] முன்சொன்ன கிரமப்படியே நீ நெற்றியிற் றிலதமிட்டுக்கொண்ட அஞ்சனத்தின் பெருமையினாலே நீ ஒரு கூட்டத்திற் சென்றாலும் சுற்றியிருக்கப்பட்டவர்களுடைய கண்களுக்குத் தோற்றமாட்டாய். நீ போகுமிடம் மிகுந்த கூட்டமாயிருந்தாலும் உன்னுடைய முகம் விழி ஆகிய அவையவங்கள் ஒன்றுமே தெரியாது. எ...று.

சூட்சும விளக்கம்:- இந்த மையை நெற்றியிலிட்டுக் கொண்டு எந்த விடத்திற் சென்றாலும் தன்னுடைய ரூபத்தை ஒருவரும் பார்க்க முடியாதென்றதனால், இது மறைப்புக்கு முக்கிய கருவியாயிருக்குமென ஏற்படுகிறது. [37]

இதுவுமது

பூசல் செய்கையிற் பொற்புறு மையதை
நேச மாகவே நெற்றியி லிட்டு நீ
வீசு வாள்கொடு வீரரைத் தாக்கிடில்
தேச மாந்தர் விழிதெரி யாதன்றே.

.........



இதிலும் மேற்படி மையின் பெருமையே கூறுகின்றார்.

(இ-ள்) பெரிய யுத்தங்களைச் செய்கின்ற காலத்தில் அழகு பொருந்திய இந்த மையைப் பிரியத்தோடு நெற்றியிலிட்டுக் கொண்டு கூட்டத்தினுள்ளே சென்று வாளாயுதத்தைக் கையிற்பற்றி வீரர்களை வீசினாலும் அக்கூட்டத்தி லிருப்பவர்களுக்கு உன்னை யின்னானென்று தெரியாது. எ—று.

சூக்ஷும விளக்கம்:— போர்க்களத்திற் சென்று கூட்டத்தினுள்ளே பிரவேசித்து வீரரை வாள் கொண்டு வீசினாலும் இன்னானெனக் காணமாட்டார்கள் என்றதனால் இந்த மையின் பிரதாபத்தை விளக்கினார். [38]

இதுவுமது

குப்பை யோடுநீ கூடிக் கலக்கையிற்
செப்பி லுற்ற திலதந் தரித்திடில்
தப்பி னானவன் சாகை தெரிந்திடா
தெப்படி யவ னேகினா னென்பரே.

.........

இதுவுமது

(இ-ள்) பெரிய கூட்டங்களோடு நீ பொருந்திக் கலக்கின்றகாலத்தில் சிமிழில் வைத்திருப்பதாகிய இந்த மையின் திலதத்தைப் போட்டுக் கொண்டால் நீ கூட்டத்தினூடே போகும்போது ஜனங்களெல்லாம் இப்பொழுது ஒரு மனிதன் போகிறது போற் றெரிந்தது ஆள் காணப்படவில்லை. நமது கண்ணுக்குத் தெரியாமல் எப்படிச் சென்றானென்று ஆச்சரியமாகச் சொல்லுவார்கள். எ-று

சூட்சும விளக்கம்:—இந்த மையைத் திலதமிட்டுக் கொண்டு கூட்டத்தினூடே போகும்போது மனிதர் போவது போல் மட்டும் தோற்றும் ஆள் உருப்படி தெரி

யாதாகையால் மேலே சொன்னபடி சொல்லி ஆச்சரியப் படுவார்களென்றார். இதைச் சரியாய் முடித்து மேற் கண்டபடி செய்தால் இவ்வித ஆச்சரியங்களைச் செய்யு மென்பதில் எள்ளளவுந் தடையில்லை. மருந்து கிரமமாக முடிந்தாலும் முன்சொன்னபடி மந்திரசாதனையும் வேண்டும். இப்பாட்டில் செப்பிலுற்ற திலதமென்ற தனால் இந்த மையைச் சிமிழில் பத்திரப்படுத்தவேண்டு மென்பதாயிற்று. (39)

இதுவுமது

இத்த கைவித மாக வியனுறு ந்
தத்து வத்தின் றயங்கிய வஞ்சனம்
பத்தி ரமது பண்புடன் கண்டறி
மெத்த வேதைகண் மேவிடு மீததே.

இப்பாட்டோடு இந்த மையின் வேதைகளை முடிக் கின்றார்.

(இ-ள்) மேலே சொல்லிவந்த படியே பல ஆச்சரி யங்களைச் செய்வதாகிய நல்ல தத்துவத்தோடு விளங்கு கின்ற இந்த அஞ்சனமாகிய மையைச் சிநேகத்தோடு பத்திரப்படுத்தக்கடவாய். இதனால் அநேகம் ஆச்சரிய மான வேலைகளை யெல்லாம் செய்யலாம். எ-று.

சூட்சும விளக்கம்:—இந்த மையின் தன்மையினால் கூட்டங்களிற் சென்று ஒருவருக்குத் தெரியாமல் திரிய லாம், போரின் ஒருவருக்குந் தெரியாமல் யுத்தஞ் செய்ய லாமென்று சொன்னதெல்லாம் இந்த மையின் பெரு மையை விளக்குவதற்காகச் சொன்னதே யன்றி அந்தப் படி செய்வதற்கல்ல. இந்த மையை ஒருவருக்குந் தெரியாமலிருந்து கொண்டு தவ முதலியவைகளைச் செய்வதற்கு ஒத்தாசையா யிருக்குமென்று கருதி தன் மார்க்கத்திற்காகவே சொன்னார். ஒருவருக்குந் தெரி யாமலிருந்து தவஞ் செய்தால் தவத்திற் கிடையூறு நேரமாட்டாதென்பதே இந்நூலாசிரியர் கருத்து. (40)



இனி இதுமுதல் வேறொரு மை சொல்லத் தொடங் குகின்றார். அந்த மையானது இதைக் காட்டிலும் அதிக விசேஷ குணத்தைத் தருமென்பது திண்ணம்.

மை [வேறு]

கொச்சகக் கலிப்பா

மண்டலத்தின் மாந்தர்களே
மவுலுவேன் மைவேறு
கண்டறிந்து கருத்தடக்குங்
காட்டிடாதீர் காளைகட்கே
தொண்டுசெய்வோர்க் கன்றியிதைச்
சொல்லவே தோஷமுண்டாம்
புண்டரிக நிணமதிலே
புகலக்கேள் கழஞ்சி யொன்றே.

.........

இதில் ஓர் சரக்கும் நிறையுங் கூறுகின்றார்.

(இ-ள்) மண்ணுலகத்திற் பொருந்திய மனிதர் களே! வேறொரு மையைச் சொல்லுவேன். அதைத் தெரிந்து மனதினிடமாக அடக்கக் கடவீர்கள். வேறே அறிவற்ற மனிதர்களுக்கு இதைச் சொல்லிவிடாதீர் கள். உலகத்திற் பொருத்தத்தோடு அடிமை செய்பவர் களுக்கே யன்றி மற்றையர்க்குச் சொன்னால் மிகுந்த பாவமுண்டாகும், மேலும் சொல்வேன் கேட்பீர்களாக புலியினுடைய கொழுப்பிலே 4 4 கிராம் எடுத்துக் கொள்ளக் கடவீர்கள் எ-று.

சூட்சும விளக்கம்—இந்த மையானது நிச்சயமாக இதிற் சொல்லியபடி வேலைகளைச் செய்யுமாகையால், இது அறிவற்றவர்களுடைய கையில் கிடைத்தால் உலகத்தையே கெடுத்து விடுவார்களாகையினால் அப்பேர்ப்பட்டவர்களுக்குச் சொல்லக்கூடா தென்றும், தொண்டு செய்பவர்களுக்கன்றி மற்றவர்களுக்குச்

சொன்னால் தோஷமுண்டாகு மென்றும் சொன்னார். அறிவில்லாதவர்களுக்குச் சொல்லாம லிருக்கவேண்டியது முக்கியமான கடமையானதால் இம்முறை தொடங்குவதற்கு முன்னாலேயே இதைப்பற்றி அழுத்தமாகச் சொல்லி வைத்தார். ஆனதால் இம்முறையைக் கற்றுக் கொள்பவர்கள் இது விஷயத்தைப் பற்றிக் கவனித்துக் கொள்வார்களாக. (41)

விபரம்

புலிக்கொழுப்பு 4.4 கிராம்

இதுவுமது

கத்துகின்ற முதற்பேரிற் கதியான தம்பியுடன்
கொத்துகின்ற சொண்டுடையோ னிரண்டாந் தனைய தனில்
தத்தியுடன் றள்ளியுடன் றள்ளிக்கொள் ளேழினமே
சித்திரமுறும் பெயரின்முன்போற் சேர்த்திடுவாய் கழஞ்சியொன்று

---

இதில் வேறொரு சரக்கு நிறையுங் கூறுகின்றார்.

(இ-ள்) சொல்லுகின்ற இந்தப் பாட்டினுடைய முதலெழுத்திற்குத் தம்பியான வெழுத்தோடு, இப்பாட்டின் இரண்டா மடியில் முதலெழுத்தையும் அதற்கடுத்த வெழுத்தையும் அவ்விரண்டா மெழுத்திற் கடுத்த வெழுத்தையும் தள்ளிவிட்டு நான்காமெழுத்திலிருந் தெண்ணிவந்த ஏழாமெழுத்தைச் சேர்ப்பாய். அப்படிச் சேர்த்தால் ஓர் ஜீவனுடைய பெயரமையும். அந்த ஜீவனானது கொத்துகின்ற மூக்கையுடையது. இப்பேர்ப்பட்ட ஜீவனிலிருந்து முன்சொன்னதாகிய சரக்கிலேயே 4.4 கி எடுத்துக் கொள்வாய்.எ—று,

சூட்சும விளக்கம்—சொல்லுகின்ற இந்தப்பாட்டினுடைய முதலெழுத்தாவது [க] இதற்குத் தம்பியாகிய



வெழுத்தாவது (கா). இப்பாட்டின் இரண்டாமடியில் முதலெழுத்தையும் அதற்கடுத்த வெழுத்தையும், அவ்விரண்டா மெழுத்திற்கடுத்த வெழுத்தையும் தள்ளி நான்கா மெழுத்தி லிருந்தெண்ணிவந்த ஏழாமெழுத்தாவது (டை). ஆக இவ்விரண்டெழுத்துக்களையுஞ் சேர்க்க (காடை) யென்றானது. இதுவே மேற்குறித்த ஜீவனாம். இதை கொத்துகின்ற சொண்டுடையோன் என்ற குறிப்பினாலுங் காண்க. இந்தக் காடையில் முன் சொன்ன சரக்கிலேயே ஒரு கழஞ்சி யெடுத்துக்கொள் என்றதனால் முன் புலியினிடத்திலிருந் தெடுத்தது கொழுப்பாகையால் இதிலும் கொழுப்பே யெடுத்துக் கொள்ள வேண்டுமென்றறிக. ஆகவே (காடைக்கொழுப்பில் 4.4 கி) எடுத்துக்கொள்ள வேண்டுமென ஏற்பட்டது. (42)

விபரம்

காடைக்கொழுப்பு 4,4 கி

கலி விருத்தம்

நீண்ட தும்பிக்கை நீட்டிய யோகனாங்
காண்ட காகங் கடமுறு கன்னனாந்
தோண்ட லுக்குத் துலங்குவன் கோடின்னம்
ஆண்டுமுன்னோ ரறைகுவ ாத்தியே.

---

இதில் பின் சரக்கெடுக்க வேண்டியதற்காம் ஓர் ஜீவனை வருணிக்கின்றார்.

(இ-ள்) வளர்ச்சியுற்ற துதிக்கையை நீட்டிக் கொண்டிருக்கப்பட்ட மகா யோகம் பொருந்தியது, பார்க்கத்தகுந்த பெருத்த தேகத்தையுடையது, மதமானது அருவிபோல ஒழுகிக் கொண்டிருக்கும் படியான கன்ன பாகத்தை யுடைநது, எத்தகைய கற்பாறை முதலியவைகளையும் குத்திப் பெயர்ப்பதற் கேதுவாகிய

வலிபொருந்திய தந்தங்களை யுடையது, இதற்குப் பெரியோர்கள் அத்தியென்று பெயர் சோல்வார்கள் எ—று.

சூட்சும விளக்கம்: மேற்குறித்த இலட்சணங் களாலும் பெயராலும் (யானை) என ஏற்பட்டது. இதில் எடுக்கவேண்டிய சரக்கு முதலிய விபரத்தை அடுத்த பாட்டிற் கூறுவாரெனவறிக. யானை அஃறிணை யாயினும் உயர்திணையாகக் கூறியது உயர்வு நோக்கி யென்க, (43)

இதுவுமது

இங்கு ரைத்ததின் வாலி னிறக்கையிற்
சங்கை யாக வெடுநிறை தானொன்று
குங்கு மந்தனிற் கூறிடக் கேண்மினோ
துங்க மாகமுன் சொல்லிய வாறுபோல்

——

இதில் இரண்டு சரக்கு நிறையுஞ் சொல்கின்றார்.

(இ—ள்) மேலே சொல்லிய யானையினது வாலி லுள்ள கண்ணியில் மதிப்பாக ஒன்று என்ற நிறை யெடுத்துக் கொள்ளக் கடவாய். இதைத் தவிர குங்கும மென்ற சரக்கிலே முந்தின சரக்கினளவே உயர்வாக எடுத்துக் கொள்வாய். எ—று.

சூட்சும விளக்கம்:—யானைவாற் கண்ணியில் எடுக்கவேண்டிய நிறை ஒன்றென்று மட்டுஞ் சொன்னாரே தவிர அதன் விபரம் ஒன்றும் சொல்லப்படவில்லை- ஆயினும் இதற்குமுன் சரக்குகளையெல்லாம் கழஞ்சிக் கணக்காகவே சொல்லி யிருப்பதினால் இதையும் கழஞ்சிக் கணக்காகவே கொள்ள வேண்டியது. கீழே சொல்லிய குங்குமத்தையும் முன்னளவு எடுஎன்றதனால் இந்தயானைவாற் கண்ணியினளவே யெடுத்துக் கொள்ளவேண்டியது. ஆகவே (யானைவாற் கண்ணியிற் கழஞ்சி ஒன்றும் [குங்குமத்திற் கழஞ்சி ஒன்றும்] எடுக்கவேண்டு மெனவறிக. (44)



விபரம்

| | |
|---|---|
| யானைவாற் கண்ணி | 4.4கி |
| குங்குமம் | 4.4கி |

இதுவுமது

கூவி ளத்திற் கொதித்தே யெழும்பியே
தாவு ளத்தின் பிசினது தன்னிலே
ஏவு ளத்தி லெடுத்திடொன் றின்பமாய்
பாவு ளத்தொடு வேதை பகருவேன்

——

இதில் ஒரு சரக்கு நிறையும் சொல்கின்றார்,

[இ—ள்] வில்வ மரத்திலே உஷ்ணத்தினாற்கொதிப் புற்றுப் பொங்கி உண்டாகி யிருக்கும்படியான பிசினிலே மனம் பொருந்தி ஒன்று என்ற அளவு எடுத்துக்கொள்ளக்கடவாய். பொருந்திய மனத்தினோடு மற்றொரு வேதையையும் சொல்வேன் கேட்பாயாக. எ—று.

சூட்சும விளக்கம்—இதிலும் நிறை விபரம் சொல்லாவிடினும் கழஞ்சிக் கணக்காகவே கொள்ளவேண்டியது. (45)

விபரம்

| | |
|---|---|
| வில்வப்பிசின் கழஞ்சு | 1.44 கி. |

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

தகரின் முறையின் றம்பியொடு
தலைகம் மெனுபேர் கடையுடனே
பிகர சிகர மொடுரகரின்
பின்னோன் பிணியின் புகலொன்றீ

மகிமை யுடலே மிகுமேன்மை
வனமென் றெங்கு மகிழ்கூர்வார்
தொகையு நிறையுங் கழஞ்சியொன்று
சொல்வேன் சாதி தவளமதே.

......

இதில் மற்றொரு சரக்கு நிறையுஞ் சொல்கின்றார்.

[இ.ள்] தகரத்திற்கு முறையாகிய வேரெழுத்திற் குந் தம்பியாகிய வெழுத்தினோடு, சிரசிற்கு வழங்கப் படுவதாகிய கம என்னும் பெயரின் கடையெழுத்தையும், அதோடு பிகரமென்ற பதத்தின் முதலெழுத்தையும், ரகரத்திற்குப் பிந்திய வெழுத்தையும், பிணி யென்ற பதத்திலுள்ள பின்னெழுத்தையும் எடுத்துச்சேர்த்தால் ஓர் சரக்கினுடைய பெயரமையும். அந்தச் சரக்கை யெல் லோரும் மிகவும் பெருமையுடனே மகாமேன்மைபெற்ற அழகினை யுடையதெனச் சொல்வார்கள். இச்சரக்கி னுடைய ஜாதியோ வெள்ளையாகும். இதில் எடுக்க வேண்டிய கணக்கோ 4.4 கிராம் ஆகும.—எ.று.

சூக்ஷம விளம்:— தகரந்திற்கு முறையாகிய வேரெ ழுத்தாவது [ச] இந்த சகரத்திற்குச் தம்பியாகிய வெழுத் தாவது (சா) கம் என்னும் பெயரின் கடையெழுத்தாவது (ம்) பிகரமென்ற பதத்தின் முதலெழுத்தாவது (பி) ரக ரத்திற்குப் பிந்திய வெழுத்தாவது (ரா) பிணி யென்ற பதத்திலுள்ள பின்னெழுத்தாவது (ணி) ஆக இவ்வைந் தெழுத்துக்களையும் ஒன்றாகச் சேர்க்க (சாம்பிராணி) என்றானது இதனுடைய ஜாதிவெள்ளை யென்றதனால் (வெள்ளைச் சாம்பிராணி) யென அறியவேண்டியது. இந்த வெள்ளைச் சாம்பிராணியிலேயே ஒரு கழஞ்சி யெடுக்கவேண்டும். (46)

விவரம்

வெள்ளைச்சாம்பிராணி 4.4 கிராம்

கலி விருத்தம்

கூவின் முன்னொடு கூட்டிடு மக்கடை
மேவ தன்முன்முன் வின்னுகில் லீறுமே



தாவு கின்ற சரக்கது தன்னிலே
ஏவு கின்ற நிறையுமெ டேகமே

——

இதில் ஓர் சரக்கு நிறையுஞ் சொல்கின்றார்.

[இ-ள்] கூ வென்ற எழுத்திற்கு முந்தின வெழுத் தினோடு, அந்தக் கூவென்ற எழுத்தின் கூட்டத்தில் கடையெழுத்தையும், மேற்சொல்லிய கூவென்ற எழுத் திற்கு முந்தின எழுத்தின் முதலெழுத்திற்கு முதலெழுத் தையும், கில் என்ற சொல்லின் கடையெழுத்தையும் எடுத்துச் சேர்க்கக்கடவீர்கள் அப்படிச் சேர்த்தால் ஓர் பெயரமையும். அப்பெயருள்ள சரக்கில் ஒன்று என்ற அளவு எடுத்துக் கொள்ளக்கடவீர்கள்—எ.று.

சூக்ஷம விளக்கம்...கூவென்ற எழுத்திற்குமுந்தின வெழுத்தாவது(கு)கூவென்ற எழுத்தின்கூட்டமாவது:— ககரக் கூட்டம் இந்தக் ககரக்கூட்டத்தின் கடையெழுத் தாவது[க்]அந்த கூவென்ற எழுத்திக்கு முந்தின எழுத் தாவது (கு) இதன் முதலெழுத்தாவது (கீ) இதற்கு முத லெழுத்தாவது [கி] கில் என்ற சொல்லின் கடையெழுத் தாவது (ல்) ஆக இந்த நான்கெழுத்துக்களையு மெடுத் துச் சேர்க்க [குக்கில்]என்றானது. இதுவே மேற்குறித்த சரக்காம், இதிலேயே ஒன்று என்ற அளவு எடுத்துக் கொள்ளவேண்டியது. இதில் விபரஞ் சொல்லாவிடினும் முந்தின கிரமங்களின்படியே கழஞ்சிக் கணக்காகக் கொள்ளவேண்டியது. [47]

விபரம்

குக்கில் கழஞ்சி 1 4.4 கிராம்

கொச்சகக் கலிப்பா

புடவி தனிலே யுற்றிருந்த புதையல்தனைத்
தடவி யெடுக்கச் சாற்றுகின்ற வஞ்சனத்தில்

நடவி யெடுப்பாய் நவில்வேன் கழஞ்சிரெண்டு
அடவா வனைத்து மன்புடனே யரைத்திடுவாய்.

---

இதில் ஒர் சரக்கும் அரைப்பு விபரமுஞ் சொல்கின்றார்.

(இ-ள்) மேலே சொல்லிவந்த சரக்குகளைத் தவிர பூமிக்குள்ளே புதைந்து கிடந்த புதையல் முதலியவைகளைத் தேடியெடுக்கும் பொருட்டாகச் சொல்லியிருக்கின்ற நான்காவது காண்டத்திலுள்ள பாதாள அஞ்சனமென்ற மையில் 8.8 கிராம் விரும்பியெடுத்துக் கொள்வாய். அம்படி யெடுத்துக் கொண்டவுடன் மேற்சொல்லிவந்த எல்லாச் சரக்குகளையுஞ் சேர்த்துக் கல்வத்திற் போட்டு பத்தியுடனே அரைக்கக் கடவாய்...எ-று.

சூக்ஷும விளக்கம்:... மேற்கண்ட அஞ்சனமானது நான்காங் காண்டத்திற் சொல்லப்பட் டிருப்பதனால் அதைத் தெரிந்தெடுத்துக் கொள்க. அரைப்புக்கு இவ்வளவு நேரமென்னும் விபரம் முதலியவைகளை யடுத்த பாட்டிற் சொல்லுவா ரெனவறிக. (48)

## எல்லாச் சரக்குகளின் விவரம்

| | | |
|---|---|---|
| புலிக்கொழுப்பு | 4.4 | கிராம் |
| காடைக்கொழுப்பு | 4.4 | ” |
| யானைவாற் கண்ணி | 4.4 | ” |
| குங்குமம் | 4.4 | ” |
| வில்வப்பிசின் | 4.4 | ” |
| வெள்ளைச்சாம்பிராணி | 4.4 | ” |
| குக்கில் | 4.4 | ” |
| நான்காவது கண்டத்திற் சொன்ன பாதாள அஞ்சனம் | 8.8 | ” |



எண்சீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

கேளப்பா வஞ்சனத்தை யரைக்கும் பாங்கு
கெடியாக மறைப்பு மைக்குக் கிளத்துகின்ற
வேளப்பா விதம்போல வகைய தாக
மேன்மையுட னரைத்திடுவாய் விபரம்போல
தாளப்பா வழித்தெடுத்து மேதிக் கோட்டிற்
றான்கடைந்த செப்பதனிற் பதனம் பண்ணி
வேளப்பா வேதை தனை விள்ளக் கேண்மோ
வீணர்களுக் கிக்கருவை விளம்பி டாதே.

---

இதில் மையின் முடிவு சொல்கின்றார்.

(இ-ள்) மகனே கேட்கக் கடவாய் இந்த மையை முன்சொன்னபடியே அரைக்கும்படியான விதத்தைச் சொல்வேன் கேட்பாயாக. இதற்கு முன்மறைப்பு மைக்கு எவ்வளவுநேரம் சொல்லப்பட்டிருக்கின்றதோ அவ்வளவு நேரமே இதையும் அரைக்கக் கடவாய். அப்படி யரைத்த பின் அதை வழித்தெடுத்து எருமைக் கொம்பினாலே கடைந்தெடுக்கப்பட்ட ஓர் சிமிழில் பத்திரப்படுத்தக் கடவாய். இனி இந்த மையினுடைய வேதைகளையுஞ் சொல்வேன் கேட்பாய். இதன் மர்மத்தை அற்பருக்குச் சொல்லி விடாதே—எ...று.

சூட்சும விளக்கம்:—முந்தின மறைப்பு மைக்குச் சொன்ன அரைப்பு நேரமாவது 3 மணி நேரம் இதையும் 3 மணிநேரம் அரைக்க வேண்டுமெனவறிக. அற்பருக்குச் சொன்னால் அக்கிரமங்களைச் செய்வார்களாகையால் வீணருக்கு விளம்பிடாதே யென்றார். (49)

வேறு செய்யுள்.

வெள்ளிலைச் சாற்றிலே விளம்பு மையதை
நள்ளிய லாகவே நடிந்து நெற்றியிற்
புள்ளிபோற் புரிந்திடப் புகழ் பணமரை
கொள்ளியின் றழலெனக் கொள்வர்மாந்தரே.

---

இதுமுதல் மேற்கண்ட மையின் வேதை சொல்லத் தொடங்குகின்றார்.

(இ-ள்) மேலே சொல்லிய மையில் 244 மி.கி வெற்றிலையின் சாற்றிலே சேர்த்துக் குழப்பி ஒரு சிறு புள்ளியைப்போல நெற்றியிற் றிலதமிட்டுக் கொண்டால். அந்தப்படி திலதமிட்டுக் கொண்ட மனிதன் கொள்ளிக் கட்டையிலுள்ள நெருப்பைப் போன்ற ரூபத்தை யடைவான்...எ-று.

சூக்ஷும விளக்கம்:...இந்த மையை மேற்கண்டபடி திலதமிட்டுக் கொண்டவுடன் அப்படிச் செய்து கொண்டவன் பிறர் கண்ணிற்கு நெருப்பைப்போல தோற்றுவானெனவறிக. [50]

இதுவுமது

கன்னலின் சாறதிற் கதித்த மைதனை
வின்னிய லாகவே விளக்கு நெற்றியில்
தன்னிய லகற்றியே நனுசர் கண்களிற்
கொன்னுனைக் குஞ்சர மெனவுங் கொள்வரால்

......

இதில் மற்றொரு வேதை சொல்கின்றார்.

(இ-ள்) இன்னும் மேற்கண்ட மையைக் கரும்பினுடைய சாற்றிலே முன் கிரமப்படி குழைத்து நெற்றியில் திலதமிட்டுக் கொள்ளக் கடவாய். அப்படிச்செய்தால் அந்த மையானது உன்னுடைய மனித ரூபத்தை மாற்றிவிடும். உலகத்தாரெல்லாம் தங்களுடைய கண்களினாலே உன்னை யானையாகப் பார்ப்பார்கள்—எ-று

சூட்சும விளக்கம்:—இந்த மையை மேற்கண்டபடி திலதமிட்டுக் கொண்டவுடன் மனித ரூபமாறி யானை ரூபமாகி விடுமெனவறிக. (51)



கொச்சகக் கலிப்பா

வேங்கையெனுந் தருவிலுற்ற வியனுறு மிலைச்
[சாற்றில்
தீங்ககல நுதலிலிடச் செறிகும்பல் மருண்டோடும்
பூங்கமுடன் புலியெனவே புரளவிழி தனிற்றோற்றும்
பாங்குடனே வேதைசொல்வேன் பண்புடனீ
[கண்டறிவாய,

.........

இதிற் பின்னுமொரு வேதை சொல்கின்றார்.

(இ-ள்.) வேங்கையென்று சொல்லப்பட்ட மரத்திலேயிருந்துண்டாவதான இலையினது சாற்றிலே இந்த மையை மேற்கண்டபடியே குழப்பி நெற்றியிற் றிலதமிட்டுக் கொண்டால் நெருங்கிய மனுதர் கூட்டங்களெல்லாம் பயந்தோடும்படியான புலியினது ரூபத்தைப் பெற்று அவர் கண்களிற் புலியைப்போல தோற்றுவாய். இன்னும் இது சம்பந்தமாகிய வேறு வேதையையுஞ் சொல்வேன் சிநேகத்தோடு கேட்கக் கடவாய்—எ-று.

சூக்ஷும விளக்கம்:—மேற்கண்டபடி திலதமிட்டுக் கொண்ட மனிதன் புலி ரூபத்தையடைந்து விடுவானென வறிக. (52)

கலி விருத்தம்

வேதை யோடு விளம்பிடு மந்திரம்
வீத மாகவே விள்ளுவே னாயிரம்
ஓதி டாதேநீ யுற்றவ னென்றுடன்
சீத மாசையின் வேதைவேற் செப்புவேன்.

.........

இதில் இந்த மைக்கு மந்திர விபரஞ் சொல்கின்றார்.

(இ-ள்.) இந்த மையினது வேதைகளோடு ஜெபிக் கப்பட்ட மந்திரத்தை விபரமாகப் பத்தாங் காண்டத்திலே சொல்லுவேன். அதைத் தெரிந்து கொண்டு இந்த வேதையைச் செய்யத் தொடங்குவாய். இந்த மர்மங்களையெல்லாம் பிறருக்குச் சொல்லிவிடாதே. இனி தங்கத்தை மிகுதியா யுண்டாக்குவதாகிய ஓர் முறையையுஞ் சொல்வேன் கேட்கக் கடவாய்—எ-று.

சூக்ஷ்ம விளக்கம் :—இந்த மையானது மேற் கண்ட வேதைகளை யெல்லாம் மந்திர பலத்தினாற் செய்யுமே தவிர தானாய்ச் செய்யமாட்டா தாகையால் அந்த மந்திரத்தையும் ஜெபித்துக்கொள்ள வேண்டு மென்றார், அதைப் பத்தாங் காண்டத்திற் சொல்வே னென்றதனால் அங்கு பார்த்துத் தெரிந்து கொள்க. இந்த விஷயங்களையெல்லாம் அடக்கத்தில் வைத்திருக்க வேண்டுமென்பது கருதியே இப்பாட்டிலும் ஒருவருக்குஞ் சொல்லிவிடாதே யென்றார். கீழே தங்கத்தை மிகுதியா யுண்டாக்குவதாகிய ஓர் முறையைச் சொல் வேன் என்றதனால் பின்வரும் முறையானது பெரும் பான்மையும் வாதத்திற்கே உபயோகமாகுமென ஏற் படுகிறது. (53)

சந்த விருத்தம்

தலத்தி னுற்றிடு மாந்தர் குழுக்களே
 தனிய தாய்முறை யொன்று விளம்புவேன்
நலத்தி னுற்ற மருந்தின் விபரமே
 நன்ற தாகவே கண்டறி வீரதை
குலத்தி னுற்றிடுங் காளைக ளேவெளி
 கூறி னாலது வோவெகு தீததாம்
பெலத்தி னுற்றிடு மிம்முறை போலவே
 பேசி டார்முனி வோர்களு நேசமாய்

.........



இது முதல் வேறுமுறை கூறத் தொடங்குகின்றார்.

(இ-ள்.) பூலோகத்திற் பொருந்தியு மனிதர் கூட்டங்களே! தனியாக ஓர் முறையைச் சொல்வேன். நலம் பொருந்திய இம்முறையினாலாகு மருந்தை சுகம் பொருந்தும்படியாகப் பார்த்தறியக் கடவீர்கள். நற் குலத்திற் பொருந்திய பிள்ளைகளே இந்த மருந்தின் இரகசியத்தை வெளிப்படச் சொன்னால் அதனால் மிகுந்த தீங்குண்டாகும். மகா வல்லமை பொருந்திய இந்த முறையைப்போல ஓர் சிறந்த முறையை இருடியருங் கூடச் சொல்லமாட்டார்கள்—எ-று.

சூட்சும விளக்கம் :—இந்த முறையின் மேம்பாட்டைக் குறித்தே தொடக்கத்திலேயே இவ்வளவு விசேஷித்துக் கூறினாரெனவறிக. (54)

சந்த விருத்தம் (வேறு)

மருந்தொன் றினி நவில்வேனிதை வயமாயறி நயமாய்
பருந்தென் றிடும் பெயர்பின்னடு பருதிப்பெயர் முதலே
பொருந்தாமத னிறையானது பூவும்வடு பழமும்
வருந்தாகவே வகைபோலெடு வலுவுற்றிடுங் காளை.

.........

இதில் இம்முறைக்காம் ஓர் சரக்கும் நிறையுங் கூறுகின்றார்.

(இ-ள்.) பலம் பொருந்திய மகனே! ஓர் மருந்தைச் சொல்வேன் இதை ஜெயத்தினோடு நன்மையாக அறிந்துகொள்ளக் கடவாய் பருந்து-என்று சொல்லப் பட்ட பெயரிலுள்ள பின்னெழுத்தையும். அந்தப் பின்னெழுத்தை யெடுத்தவுடன் மீதியாயிருந்த பதத்தின் நடுவெழுத்தையும், சூரியன் பெயர்களுள் ஓர் பெயரிலுள்ள முதலெழுத்தையும், எடுத்துச் சேர்த்து அதனா லென்ன பெயரையுமோ அந்தப் பெயருள்ள சரக்கில்

பூ. வடு-பழம்-என்ற அளவு வகையாக எடுத்துக் கொள்ளக் கடவாய்...எ-று.

சூட்சும விளக்கம் :—பருந்து என்று சொல்லப்பட்ட பெயரிலுள்ள பின்னெழுத்தாவது [து.] மேற்கண்ட பெயரில் பின்னெழுத்தை யெடுத்த பிற்பாடு சேஷமிருந்து பதமாவது-பருந்-இதில் நடுவெழுத்தாவது [ரு.] சூரியனுக்குள்ளே பல பெயர்களுள் இங்கு பொருத்தமான பெயராவது-சுடர்-இதின் முதலெழுத்தாவது [சு] ஆக இம் மூன்றெழுத்துக்களையும் ஒன்றாகச் சேர்க்க [துருசு] என்றானது. இதுவே மேற்குறித்த சரக்காம். இதில் பூ(வடு) பழம் என்ற அளவு எடு என்றதனால் பூ ஒன்று, வடு ஒன்று, பழம் ஒன்று ஆக மூன்றெனக் கொள்ளவேண்டியது. ஆகவே [துருச நிறை மூன்று] எடுக்கவேண்டுமென வறிக. இந்த நிறையின் விபரத்தைப் பின்னோரிடத்திற் சொல்வார். [55]

விபரம்

துருசு நிறை 3

கொச்சகக் கலிப்பா

முனமே நவிலு முத்திபெற்ற மகாயோகன்
கனமே யடையுங் கந்தரத்தி லுறுங்கனத்தோன்
இனமே கரும்பொன் விழுங்கிய விரும்வலியோன்
வனமே கரும்பொன் னந்தமென வலியுடையோன்.

.........

இதில் ஓர் சரக்குச் சொல்கின்றார்.

[இ.ள் ] சரக்குகளிலெல்லாம் முதன்மையாகச் சொல்லப்பட்ட மிகவும் உயர்ச்சியும் நலமும் பொருந்தியது, அதிக வுறுதி வாய்ந்த மலைகளிலே பொருந்தியிருக்கப்பட்ட மேன்மை வாய்ந்தது. அதன் ஜாதியோ இரும்பை யிழுத்து விழுங்கும்படியான சுபாவமுடையது.



நிறமோ இரும்பைப் போன்றிருக்கும். அந்த இரும்பைப் போன்ற வலிமையையு முடையது—எ-று.

சூக்ஷம விளக்கம் :...மேற்கண்ட இலட்சணங்களையுடையது (காந்தம்.) இதைப்பற்றி முதற்காண்டத்திற் சொல்லியிருக்கின்ற விபரத்தாலும் காண்க. இதன் நிறை முதலிய விபரத்தை அடுத்த பாட்டிற் கூறுவார். [56]

இதுவுமது

முரசி னரையே நிறையது முயன்றிடுவேன்
பரிசின் முறையைப் பார்த்தறிநீ பாருலகில்
வரிசை யுறவே மாசைமலை வாயில்நிற்குங்
கரிச முடனே காட்டிடாதே காளைகட்கே.

.........

இதில் முன்சரக்கின் நிறை சொல்கின்றார்.

(இ-ள்.) மேற்குறித்த காந்தமென்ற சரக்கின் அளவாவது முரசைத் தலைமையாகவுடைய வாத்தியங்களினளவில் பாதியாகும். இந்த விபரத்தைக் கிரமமாக நீ கண்டுணரக் கடவாய். இந்த வுலகத்திற் பொன்மலையானது இம்முறையினால் உன் வாசலிலே வந்து தங்கும். இதை மற்ற மனிதர்கட்குச் சொல்லிவிடாதே. எ-று.

சூட்சும விளக்கம் :—வாத்தியங்களி னளவாவது பதினெட்டு. இதிற்பாதியாவது [ஒன்பது.] ஆகவே மேற்சொல்லிய காந்தத்தி னிறையாவது ஒன்பதெனஅறியவேண்டியது. இந்த முறையானது வாதத்திற்கே பெரும்பான்மையும் உதவுமென்பது தோன்ற பொன்மலையானது உன் வாசலிலே வந்து தங்கும் என்றார். [57]

விபரம்

காந்தம் நிறை 9

இதுவுமது

புவிமக ணாதமெனப் புகலுவார் முன்முனிவர்
உவருறுந்தா னந்தனிலே யுள்ளினின்று
விரைந்தெழும்பும்
சவுமியத்தின் வனமியற்றுந் தரணியிலே வணிகருக்கு
கவலுவே னிறையே கதிரொடு கடலிலொன்றே.

---

இதில் மற்றொரு சரக்கும் நிறையுங் கூறுகின்றார்.

(இ.ள்) கீழே சொல்லப்புகும் சரக்காக ஆதிகாலத்திலேயுள்ள முனிவர்கள் பூமிநாதமெனச் சொல்லுவார்கள். அந்தச் சரக்கானது உவர் மிகுந்த விடங்களிலேயிருந்து உண்டாகும். மேற்படி சரக்கானது செட்டிகளுக்கெல்லாம் பொன்னை மிகும்படியான மார்க்கத்தைச் செய்யும், இத்தகைய சரக்கில் எடுக்கவேண்டிய நிறையைச் சொல்வேன் கேட்பாயாக, கதிரும் கடலும் என்ற அளவாகும். எ—று.

சூட்சும விளக்கம்:—மேற்கண்ட இலட்சணங்களையுடைய சரக்காவது (பூநீறு) இதைப் பற்றி முதற்காண்டத்திற் சொல்லியிருக்கின்ற இலட்சணங்களினாலுங் காண்க. இந்தச் சரக்கானது இரசவாத முறைக்கே பெரும்பான்மையும் உதவக் கூடியதாகையால் செட்டிகளுக்கெல்லாம் பொன்னை மிகும்படியானமார்க்கத்தைச் செய்யும் என்றார். இதற்கு அளவு கதிரும்; கடலும் என்றதனால் கதிர் ஒன்று, கடல் ஒன்று. ஆக இரண்டெனக் கொள்ள வேண்டியது ஆகவே (பூநீறு நிறை இரண்டு) எடுக்கவேண்டுமென ஏற்பட்டது.

விபரம்

பூநீறு நிறை 2



கலி விருத்தம்

ஏரி யுற்ற விலங்கு கருமையன்
காரி யுற்ற பசுமை கலந்தவன்
நீரி லுற்ற நிமுல னிறையது
பாரி லுற்ற பரனெனக் கண்டறி.

---

இதில் வேறு சரக்கும் நிறையுங் கூறுகின்றார்.

(இ-ள்) குளங்கள் முதலியவைகளின் நீரிற்பொருந்தி பசுமை கலந்த கருப்பு நிறத்தோடு ஊர்ந்து திரிவதான ஓர் சரக்கில் கடவுளின் நிறையெடுத்துக் கொள்ளக்கடவாய். எ—று.

சூட்சும விளக்கம்: — மேற்கண்ட இலட்சணங்களையுடையது (கும்பிடு கிளிஞ்சில்) இதை முதற்காண்டத்திற் சொல்லியிருக்கின்ற இலட்சணங்களினாலுங் காண்க. இந்தச் சரக்கு கடவுள் நிறையென்றதை கடவுள் ஒருவனாததால் ஒன்றெனக் கொள்ள வேண்டியது. ஆகவே (கும்பிடு கிளிஞ்சில் நிறை ஒன்று) எடுக்க வேண்டுமெனவறிக. [59]

விபர

கும்பிடு கிளிஞ்சி 1

வஞ்சி விரு

விகடாகிய வேலை ல்
தகடாகியே சார்வுசெய்வோன்
அகடாக வதனிறையே
எகடாக வெடுவினையே.

.........

இதில் மற்றொரு சரக்கும் நிறையுங் கூறுகின்றார்.

(இ-ள்) மிகவு மேன்மை தங்கிய சமுத்திரத்தினிடத்திலே தகடு தகடாகப் பொருந்திப் பிரகாசிக்கப்பட்ட ஓர்

சரக்கில் ஆதரவோடு நிறை இரண்டு எடுத்துக் கொள்ளக்கடவாய். எ—று.

சூட்சம விளக்கம்:—மேற்கண்ட இலட்சணத்தையுடையது (கடல் நுரை) இதற்கு முதற்காண்டத்திற் சொல்லியிருக்கின்ற இலட்சணங்களினாலுங் காண்க. இந்தக் (கடல்நுரையிலேயே இரண்டு என்ற நிறை) எடுத்துக்கொள்ள வேண்டும். [60]

விபரம்

கடல்நுரை அளவு 2

கலி விருத்தம்

பந்து போன்ற பழப்பெயர் முன்னுடன்
தந்த வங்கத்திற் றள்ளிடு முன்னதை
அந்த மென்கடை யாகு மருந்திதை
விந்தை யாக வெடுவிய மாகவே.

.........

இதில் ஓர் சரக்கின் பெயர் கூறுகின்றார்.

(இ-ள்) பந்தைப்போன் றிருப்பதாகிய ஓர் பழத்திற்கு இந்த நூலிற் சொல்லி வரப்பட்ட பெயரின் முதலெழுத்தோடு, வங்கம் என்னும் பெயரில் முதலெழுத்தைத் தள்ளிவிட்டு மீதியிருக்கின்ற வெழுத்துக்களை சேர்த்தால் ஓர் சரக்கினுடைய பெயராகும். அந்தச் சரக்கானது இந்த நூலின் முதற்காண்டத்தினிற் சொல்லியிருக்கின்ற அந்த செந்தூரத்தின் சரக்குகளிற் கடைசி சரக்காகும். இந்தச் சரக்கைத் தெரிந்து வேடிக்கையாகப் பன்னிரண்டு என்ற அளவு எடுத்துக் கொள்ளகடவாய். எ—று.

சூட்சும விளக்கம்:—பந்தைப் போன் றிருப்பதாகிய பழமானது எலுமிச்சம் பழம். இதற்கு இந்த நூலில் வழங்கிவரும் பரிபாஷைப் பெயராவது-லிம்பழம்-இதி



லுள்ள முதலெழுத்தாவது (லி) வங்கம் என்னும் பெயரில் முதலெழுத்தைத் தள்ளி நின்ற எழுத்துக்களாவன (ங்கம்) ஆக இவ்விரண்டையும் ஒன்றாகச் சேர்க்க (லிங்கம்) என்றாவது இதுவே அந்த செந்தூரத்தின் சரக்குகளிற் கடைசி சரக்காம், இந்த (லிங்கம்) என்ற சரக்கில் வியமாக எடு என்றதனால் வியம் என்பது சோதிட நூற்பிரகாரம் பனிரண்டாகையால் அந்தப் பனிரெண்டு அளவே யெடுத்துக் கொள்க. (61)

விபரம்

லிங்கம் நிறை 12

இதுவுமது

ஆன நாமம் வணங்கு மருந்துவை
தான தானோன் சமனிறை சேர்த்திடு
ஈன மின்றி யியற்றிடு வேனினி
மான மாக மவுண்டிடா மாக்களே.

இதில் ஓர் சரக்கும் முன்சரக்கின் நிறை முதலியனவுஞ் சொல்கின்றார்.

(இ-ள்) மேற்கண்ட லிங்கமென்னும் பெயரினையுடைய சரக்கானது வணங்கத்தக்க ஓர் மருந்தை மேற்கண்ட லிங்கத்தின் நிறையே யெடுத்துக் கொள்வாய். இனிமேற் செய்யும்படியான மார்க்கத்தையும் குறைவின்றிச் சொல்வேன். மனிதர்களே! அதைக் கேட்டு மனதினிடமாக அடக்கக் கடவீர்களாக. எ—று.

சூட்சும விளக்கம்:— மேற்கண்ட லிங்கமானது வணங்கத்தக்க ஓர் சரக்காவது [கெந்தி] இந்த கெந்திக்கு லிங்கம் வணங்குகின்ற விஷயமாவது வைத்தியர்களாகிய ஒவ்வொருவருக்கும் தெரிந்த விஷயம. இந்தக் கெந்தியை முந்தின சரக்கிற்குச் சமனிறையெடு என்றதனால் முந்தின லிங்கத்தினிறை பன்னிரண்டாகையால் இதையும் பன்னிரண்டெனக் கொள்ள வேண்டியது.

விபரம்

கெந்தி நிறை 12

சந்த விருத்தம்

ஒன்பானெனவயதுள்ள துரைத்தாலுரை யுதிரும்
மின்போலவே மிகுமேன்மையன் வெற்பாம்பர னுப்பாம்
பொன்போலவே வனமானது புகல்வேன்முளைமாசை
என்போலவு மெடுவொன்றரை யியல்பாகிய நிறையே.

......

இதில் ஓர் சரக்கும் நிறையுஞ் சொல்கின்றார்.

(இ.ள்.) பின் சொல்லப்படும் சரக்கானது தங்க மாற்றில் ஒன்பது மாற்றுள்ளது, உரைத்தால் தங்கத் தூள்கள் உதிர்ந்து கொண்டிருக்கும், மின்னலைப் போன்ற பிரகாசத்தைச் செய்யும்படியான மேன்மை யுற்றது, மலைச் சார்புகளில் உற்பத்தியாகத் தக்கது. பொன்னைப் போன்ற நிறத்தினையுடையது, இன்னுஞ் சொல்வேன் கேள். இது பொன்னுக்கு வித்தாகும். இத்தகைய இலட்சணங்களை யுடைய சரக்கில் ஒன்ற ரையென்ற நிறை எடுத்துக் கொள்ளக் கடவாய். எ—று.

சூட்சும விளக்கம்:—மேற்கண்ட இலட்சணங்களை யுடைய சரக்காவது (பொன்னிமிளை) இதை முதற் காண்டத்தில் வருணித்திருப்பதினாலுங் காண்க. இந்தச் சரக்கிலேயே ஒன்றரையென்ற அளவு எடுத்துக் கொள்ள வேண்டியது. [65[

விபரம்

பொன்னிமிளை நிறை 1½

கலி விருத்தம்

ஆட்டு வாய்சாம மொன்றே யடைவுடன்
வேட்டி யாவேறு வேதையும் விள்ளுவேன்



காட்டி டாதே நீ காசினி மாந்தர்க்கு
தாட்டி யான தனிமுறை தன்னையே.

......

இதில் அரைப்பு விபரம் சொல்கின்றார்.

(இ-ள்) இதுவரை சொல்லிவந்த சரக்குகளனைத் தையும் ஒன்றாகச் சேர்த்துக் கல்வத்திற் போட்டு ஒரு சாம அளவு கிரமமாக அரைக்கக் கடவாய். இனிமேற் செய்யும்படியான வேறு மார்க்கத்தையும் சொல்வேன். மிகவும் பலம் பொருந்தியதான இந்தத் தனிமுறைச் செந்தூரத்தின் உண்மையை உலகத்திலுள்ள மற்றைய ஜனங்களுக்குச் சொல்லி விடாதே. எ...று.

சூக்ஷும விளக்கம் :— இதில் இத்தனை சாமம் அரையென்று மட்டும் சொன்னாரே தவிர இன்னது சேர்த்தரைக்க வேண்டுமென்றும் இச்சரக்குகளின் நிறை விபரம் இன்னதென்றுஞ் சொல்லப் படவில்லை. அந்த விபரங்களை யெல்லாம் அடுத்த பாட்டிற் கூறுகின்றார். இந்தப் பாட்டில் அரையென்று சொன்னதற்கு விசேஷ மென்னவென்று ஆராயப் புகின் முன்னர் எல்லாச் சரக்குகளையும் கல்வத்தில் போட்டுப் பொடித்துக் கொள்ள வேண்டுமென்பதாக ஏற்படுகிறது. ஆனதால். அந்தப்படியே செய்து கொள்க. இங்கு சொன்ன ஒரு சாம கணக்கை அடுத்த பாட்டிற் சொல்லுகின்ற சாற்றை விட்டரைக்கும்போது தான் எடுத்துக்கொள்ள வேண்டும். சாறுவிடாமல் தனியாய்ப் பொடிக்கும் போதும் ஒருசாம நேரம் பொடிக்க வேண்டுமென நிதானித்தாலும் நிதானிக்கலாம். இவ்விஷயங்களை யெல்லாம் தெரிந்தவர்களிடங் கேட்டுக் கொள்வது நலம். (64)

சந்தவிருத்தம்

இங்குநவில் கின்றதோ ரெழிலுறு சரக்கை
சங்கையுட னேயானுஞ் சாற்றினன் விராகன்

பொங்குமெழிற் கல்வமதிற் போட்டதி னுடனே
அங்குகுரு மூலியினா லாட்டியெடு காணே.

.........

இதில் முன் சரக்குகளின் நிறை விபரமும் அரைப்பும் சொல்கின்றார்.

[இ...ள்] மகனே! மதிப்போடு சொல்வேன் கேட்பாய். நான் இதுவரை சொல்லிவந்த சரக்குகளெல்லாம் விராகனெடைக் கணக்காகும். இந்தக் கணக்கின்படியே சரக்குகளையெல்லா மெடுத்து மிகவும் அழகு பொருந்திய கல்வத்திற் போட்டு அவைகளோடு முதற்காண்டத்திற் சொல்லியிருக்கின்ற குருமூலியென்ற திருநூற்றுப் பச்சையிலைச்சாற்றைவிட்டு முந்தின பாட்டிற் குறித்தபடியே ஒரு சாமநேரம் அரைத்தெடுத்துக் கொள்ளக் கடவாய். எ-று.

சூட்சும விளக்கம்:... இம்முறையின் சரக்குகளுக்கு நிறை விபரம் சொல்லாது வந்தாலும் இப்பாட்டில் விராகனெடைக்கணக்கெனச் சொல்லிவிட்டார், ஆனதலாந்தப்படி யெடுத்துக்கொள்க. மேற்கண்ட சரக்குகளை யிதிற்சொன்ன கணக்கின்படியே யெடுத்து முந்தின பாட்டிற் சொன்னதுபோற் பொடித்து அதன்மேல் திருநூற்றுப்பச்சை யிலைச்சாற்றைவிட்டு ஒரு சாமநேரம் அரைக்கவேண்டும். [65

இம்முறையின் மொத்தச் சரக்குகளைச் சந்தேகமின்றித் தெரிந்து கொள்ளும்படி இங்கு நிறை விபரத்தோடு எழுதுகின்றோம்.

சரக்குகளின் விபரம்

| | |
|---|---|
| துருசு | 10·5 கிராம் |
| காந்தம் | 10.5 கிராம் |
| பூநீறு | 7 கிராம் |



| | |
|---|---|
| கும்பிடுகிளிஞ்சில் | 3.5 கிராம் |
| கடல்நுரை | 7.00 |
| லிங்கம் | 42 கிராம் |
| கெந்தி | 42 கிராம் |
| பொன்னிமிளை | 5.25 கிராம் |

வேறுசந்தச் செய்யுள்

காவண்ணனும்ராவண்ணனுங் காந்தமுத லடுத்தோன்
ஓவென்றிரை யெவாயனை யோதும்பெயர் கடையே
ஏவின்றிய விலையானதி லியல்பால்வருஞ் சாற்றில்
ஆவின்றிய சாமமது மடைவொன்றரை யறிவாய்.

———

இதில் வேறு சாறும் அரைப்புங் கூறுகின்றார்.

(இ—ள்) முன் சொன்னபடி திருநூற்றுப் பச்சையிலைச் சாற்றினாலரைத்த மருந்தைப் பழையபடியும் காவென்ற எழுத்திற்குத் தலைமையனாகிய வெழுத்தையும். ராவென்ற எழுத்திற்குத் தலைமையனாகிய வெழுத்தையும் காந்தம்-என்ற பதத்தின் முதலெழுத்திற்கடுத்த வெழுத்தைபும், ஓவென்று சத்தமிடும்படியாகிய பெருவாய் னென்று சொல்லப்பட்ட ஓர் மிருகத்தினுடைய பெயரின் கடையெழுத்தையும் எடுத்து ஒன்றாகச் சேர்த்து அதனாலென்ன பெயரமையுமோ அந்தப் பெயருள்ள ஓர் பச்சிலையிலிருந்து உண்டாகப்பட்ட சாற்றினாலே ஒன்றரைச் சாமநேரம் அரைக்கக் கடவாய்.எ-று.

சூட்சும விளக்கம்...காவென்ற எழுத்தின் ந்தலைமையனாகியவெழுத்தாவது (க) ரா-வென்ற எழுத்திற்குத் தலைமையனாகிய வெழுத்தாவது [ர] காந்தம்- என்ற பதத்தின் முதலெழுத்திற்கடுத்தவெழுத்தாவது [ந்] பெருவாயனென்று சொல்லப்பட்ட மிருகத்தினுடைய

பெயராவது-கழுதை-இந்தப் பெயரின் கடையெழுத்தாவது (தை] ஆக இந்த நான்கெழுத்துக்களையும் சேர்க்க [கரந்தை]யென்றானது. இது கரந்தையென விருப்பினும் (சிவகரந்தை)யெனக்கொள்ளவேண்டியது. இந்தச் சிவகரந்தை யிலைச்சாற்றினாலேயே முன் மருந்தைநாலரைமணிநேரம் அரைக்கவேண்டும். [66]

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

அரைத்த மருந்தை வழித்தெடுத்தே
யடைவாய் வில்லை யமைத்துடனே
உரத்த முடைய வோட்டில்வைத்தே
யொளிருங் களியாற் சீலைசெய்வாய்
கரைத்தமுடனே யேழெனவே
களியாற் கனக்க மேற்பூசிப்
பரத்தை மனத்தி லெண்ணிப்புடம்
பகர்வேன் முழமு மொன்றரையே.

இது முதற் புடம்போடு மார்க்கஞ் சொல்கின்றார்.

(இ-ள்) முன் சொன்னபடி சிவகரந்தைச் சாறு விட்டரைத்த மருந்தை வழித்தெடுத்துக் கிரமப்படியே வில்லை செய்து உடனே அதை ஒரு பலம்பொருந்திய ஓட்டில் வைத்து மேலோடு மூடி பிரகாசிக்கும்படியான களிமண்ணினாலே ஏழுசீலை செய்யக் கடவாய் அப்படிச் செய்தவுடனே மேற்படி களி மண்ணினாலே மேலே கனதியாகப் பூசிக்கடவுளை மனதினிடமாகத் தியானித்து ஒன்றரை முழ அளவு புடம் சித்தப்படுத்திக் கொள்ளக் கடவாய்—எ-று.

சூட்சும விளக்கம்;—:—வெளிப்படை. [67]

வேறு செய்யுள்

ஒன்றரை யமைத்துபுடமுள்ளதின் மருந்தை
நன்றெனவே நாட்டியதி னன்குறத்தீ மூட்டு



வென்றியுடன் வெந்தபின் விரைந்ததை யெடுத்து
நன்றியுட னேகவச நன்குறப் பிரிப்பாய்.

---

இதில் புடம் பிரிக்கு மார்க்கஞ் சொல்கின்றார்.

[இ-ள்] மேற்கண்டபடி ஒன்றரை முழ அளவாக அமைத்த புடத்திற் குள்ளே முன் கவசஞ் செய்த மருந்தை நலமாக வைத்து அதில் நெருப்பை மூட்டி விடக்கடவாய். அந்த நெருப்பானது வெற்றியோடுபிடித்தெரிந் தடங்கின பிற்பாடு அந்த மருந்தையெடுத்து நன்மையோடு கவசத்தைப் பிரிக்கக் கடவாய்—எ-று.

சூட்சும விளக்கம்:- வெளிப்படை. (68)

இதுவுமது

பிரித்திடு மருந்தின்வனம் பீடுடைய வெள்ளை
கரித்திடு மருந்ததை மறுத்துமெழிற் கல்வம்
தரித்திடுவெண் சாரணையின் சாறதனி லாட்டு
திருத்தமுடன் சாமமது செப்பிடுவே னொன்றே.

---

இதில் முன் மருந்திற்கு மறுஅரைப்புச் சொல்கின்றார்.

(இ-ள்) முன் சொன்னபடி கவசத்தைப் பிரித்த மருந்தின் நிறமானது பெருமை தங்கிய வெண்மையாயிருக்கும். அப்படிப் பிரகாசிககப்பட்ட அந்த மருந்தைத் திரும்பவும் அழகு பொருந்திய கல்வத்திற்போட்டு நிலை பெற்ற வெள்ளைச் சாரணையின் சாற்றை விட்டுத் திருத்தத்தோடு ஒருசாமம் அரைக்கக் கடவாய்—எ.று.

சூட்சும விளக்கம்;—வெளிப்படை [67[

இதுவுமது

நாவலர்கள் விள்ளுதவி நான்கதிலே மூன்றின்
றாவுகலை யைந்துவகர் சாரித்தினீறும்

கோவுமுதற் பேரின்முன்னோன் கோடியின்பின் வேயே
பாவையர்களுந்திடற் பழப் பெயரின் முன்னோன்.

———

இதிய் பின் அரைப்புக்குச் சாறெடுக்கவேண்டிய ஓர் பச்சிலை சொல்கின்றார்.

(இ.ள்) புலவர்கள் சொல்லும்படியாகிய நால்வகைக் கவிகளுள்ளே மூன்றாவது கவியின் பெயரினது முதலெழுத்திற் கைந்தா மெழுத்தையும், பொருந்திய ஙகரக் கூட்டத்திற் கடையெழுத்தையும், கோவு-என்று சொல்லப்பட்ட வாக்கியத்தின் முதலெழுத்திற்கு முதலெழுத்தையும், கோடி-யென்று சொல்லப்பட்ட வாக்கியத்தின் பின்னெழுத்தையும், வே,யென்ற வெழுத்தையும்,ஸ்திரீகள் கையினால் விளையாட்டாக அடிக்கும் ஓர் பொருளினது பெயரைக்கொண்ட ஓர் பழத்தின் பெயரிலுள்ள முதலெழுத்தையும் எடுத்துச் சேர்க்கக் கடவாய். அப்படிச் சேர்த்தால் ஓர் பச்சிலையின் பெயரமையும். அதை யின்னதெனத் தெரிந்துகொள்வாய்.

சூக்ஷும விளக்கம் :—புலவர்கள் சொல்லும்படியான நால்வகைக் கவிகளாவன :...ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம், இவைகளுள் மூன்றாவது கவியாவது :... சித்திரம். இந்தச் சித்திரமென்ற பெயரின் முதலெழுத்தாவது(சி)சகர வரியில் இதற்கு ஐந்தாமெழுத்தாவது (செ,) ஙகரக் கூட்டத்தில் கடையெழுத்தாவது (ங்.) கோவு என்று சொல்லப்பட்ட வாக்கியத்தின் முதலெழுத்தாவது—கோ இவ்வெழுத்திற்கு முதலெழுத்தாவது (கொ) கொடியென்று சொல்லப்பட்ட வாக்கியத்தின் பின்னெழுத்தாவது (டி.)வேயென்ற எழுத்தாவது, (வே.)ஸ்திரீகள் கையினால் விளையாட்டாக அடிக்கும் ஓர் பொருளாவது-பந்து.இதன் பெயரைக்கொண்ட ஓர் பழமாவது :...எலுமிச்சம்பழம் இதன் விபரத்தை இந்த நூலிற் பந்திடற் பழமென்று வழங்கி வருவதனாற் காண்க. இந்த பந்திடற் பழமென்று சொல்லப்பட்ட எலுமிச்சம் பழத்திற்கு இந்நூலிற் பரிபாஷையாக வழங்கி



வரப்படுவதும் இங்கு நாம் எடுத்துக் கொள்ள வேண்டியதுமான மற்றொரு பெயராவது :...லிம்பழம் இந்தப் பெயரின் முதலெழுத்தாவது (லி.) ஆக இந்த ஆறெழுத்துக்களையும் முறையே ஒன்றாகச் சேர்க்க [செங்கொடிவேலி] யென்றானது. இதுவே மேற்குறித்த பச்சிலையாம். இதினாலாகவேண்டியதைப் பின் சொல்லுவார். [70]

இதுவுமது

மூலியுறு சாறதனின் முக்யமா யரைப்பாய்
சோலியுடன் சாமமது சொல்லிடுவே னொன்று
கோலியுடன் கல்வமதைக் கோதிநீவ ழித்து
ஓலமுட னோடுரைத்தே யுட்பொதிவாய் காளை.

———

இதில் அரைப்பு விபரஞ் சொல்கின்றார்.

[இ-ள்.] முந்தின பாட்டிற் குறித்த செங்கோடிவேலிலைச் சாற்றினாலே முன் வெள்ளைச் சாரணைச் சாற்றில் பழையபடியும் ஒரு சாம நேரம் பலமாயரைக்கக் கடவாய். அப்படி யரைத்த பின் கல்வத்திலிருக்கின்ற அந்த மருந்தைக் கையினாலே கோதி வழித்தெடுத்து ஒரு ஓட்டை வட்டமாக உரைத்து அதற்குள்ளே வைத்து மேலோடு மூடக் கடவாய்....

சூட்சும விளக்கம்:--வெளிப்படை. (71)

இதுவுமது

சீலைகளி யேழெனவே செய்தெழின் மருந்தை
ஓலமுட னேமுழமு மொன்றென வியற்றி
தாலமுறு மத்தியிலே தாட்டிடு மருந்தை
மூலமுடன் றீயதனை மூட்டியெடு காளை

.........

இதிற் புடம்போடு மார்க்கஞ் சொல்கின்றார்.

(இ-ள்.) முன்பாட்டிற் குறித்தபடி ஓட்டினுள்ளே பொதித்த மருந்திற்கு களிமண்ணினால் ஏழுசிலை செய்து அதை ஒரு முழப்புடம் தயார்செய்து அதன்மத்தியிலே வைத்து ஆதாரமாக நெருப்பை மூட்டி எரிந்தடங்கின பின் அதற்குள் வைத்த கவசத்தையெடுத்து கொள்ளக்கடவாய்—எ-று.

சூட்சும விளக்கம் :—வெளிப்படை. (72)

கொச்சகக் கலிப்பா

கவசமே பிரிக்கமருந் தருணனெனக் கதிர்வீசும்
பவுசுறும ருந்தைப்பரி வுடன்கல்வ மதிலாக்கு
தவசமுந்த னமும்வளர்ந் தினிதோங்குந் நாசர்களே
அவசர முடனேயினி வேதைவே றறைவேனே.

.........

இதில் முன்மருந்தைப் புடம் பிரிந்தெடுக்கும் விதஞ் சொல்கின்றார்.

[இ-ள்.] மேற்பாட்டிற் சொல்லியபடி கவசத்தையெடுத்துப் பிரித்துப் பார்க்க அதற்குள்ளிருக்கு மருந்தானது சூரியனைப்போல அதிக ஒளிவாகப் பிரகாசிக்கும். செல்வம் பொருந்திய அந்த மருந்தைப் பழைய படியும் அன்புடனே கல்வத்திற் போடக் கடவாய். இதனாலே தானியங்களும், தனமும் அதிகரித்துண்டாகும். தொண்டர்களே இனிமேல் இதைச் செய்யும்படியான வேதையையுஞ் சொல்வேன் கேட்பீர்களாக எ.று.

சூக்ஷம விளக்கம் :—இந்தப் பாட்டில் மேற்கண்ட மருந்தினால் அதிகச் செல்வமானது அதிகரிக்குமென குறிப்பிட்டார். (73)



கலி விருத்தம்

வாசம் வீசி வயங்கி யிலங்கிடு
மாசி லாதெழின் மங்கையர் மேனிக்கு
நேச மாக நிகரிடு வார்மூனம்
பூச மரகப் புகழுறு புட்பமே.

.........

இது முதல் மூன்று பாட்டுகளால் பின் அரைப்புக்கு வேண்டிய ஓர் சாறு சொல்கின்றார்.

[இ—ள்.] கீழே சொல்லப்போகும் ஓர் மரத்தினுடைய புட்பமானது அதிக வாசனை பரிமளித்துப் பிரகாசித்துத் தோற்றும், இன்னும் அந்தப் புட்பத்தைக் குற்றமற்ற அழகினையுடைய ஸ்திரீகளினுடைய தேகத்திற்குப் பிரியத்தோடு ஒப்பிட்டுச் சொல்வார்கள், இன்னும் அது மகா கீர்த்தியையுமுடையது. எ-று.

சூட்சும விளக்கம் :—இந்த மலரானது ஸ்திரீகளினுடைய தேக முதலானவைகளுக்கு ஒப்பிட்டுச் சொல்லும் பாக்கியத்தைப் பெற்றிருப்பதினாலே மகா கீர்த்தியையுடையதென்றார்.

இதுவுமது

வண்டுண் காத மதுவழிந் தோடிடும்
விண்ட சத்திரப் பேர்முனம் விண்கடை
புண்டு முன்னும் பகர்ககர் பண்பினே
மண்ட லத்தின் மகர்கடை நாமமே.

இதில் மேற்கண்ட பூவையுடைய மரத்தின் பெயர் கூறுகின்றார்.

[இ-ள்.] இன்னும் முன் பாட்டிற் குறித்த மலரில் வண்டுகள் அருந்தக் கூடாத தேனானது பொங்கிப்

பெருக்கெடுத்தோடும், இப்பேர்ப்பட்ட மரத்தினுடைய பெயரானது :... சொல்லும்படியான - சத்திரம்-என்ற என்ற பெயரின் முதலெழுத்தையும், விண்-என்ற பெயரின் கடையெழுத்தையும், பழமையாகக் கருதப் பட்ட மகரமென்ற வெழுத்தையும், ககரமென்ற வெழுத் தையும், பகரத்தின கடையெழுத்தையு மெடுத்துச் சேர்த்தால் விளங்கும்...எ,று.

சூட்சும விளக்கம் :...சத்திரம் என்ற பெயரின் முதலெழுத்தாவது [ச.] விண் என்ற பெயரின் கடை யெழுத்தாவது [ண்.] பகரமென்ற எழுத்தாவது [ப.] ககரமென்ற எழுத்தாவது [க.] மகரத்தின் கடையெழுத் தாவது [ம்.] ஆக இவ்வைந்து எழுத்துக்களையும் ஒன்றாகக் கூட்ட [சண்பகம்.] என்றானது. இதுவே மேற்குறித்த மரமாம். இதனாலாக வேண்டிய விஷயத் தைப் பின்கூறுவாரென வறிக. இந்த மலரிலுள்ள தேனை வண்டு குடிககமாட்டாது; குடித்தால் இறந்து விடும். இது பற்றியே இந்தச் சண்பக மரத்திற்கு வண்டுணா மலர் மரமெனப் பெயர்ஏற்பட்டிருக்கின்றது.

இதுவுமது

இத்தருவி னிலங்கிலைச் சாற்றினை
வெற்றி யாகவே விட்டரை சாமநீ
தத்து வத்துடன் சாற்றுவ னொன்றதாம்
மற்ற தாமொரு வேதை வழுத்துவேன்.

.........

இதில் மேற்படி தருவிலைச் சாற்றினாலே அரைப் புச் சொல்கின்றார்.

[இ-ள்.] மேலே சொல்லிய இந்த சண்பகமென்னும் பெயரினையுடைய மரத்தினது இலையின் சாற்றினாலே முன் கல்வத்திற் போட்ட மருந்தைப் பலத்தினோடு 8 மணி நேரம் அரைத்துக் கொள்ளக் கடவாய். இனி



பின்னொரு மார்க்கத்தையுஞ் சொல்வேன் கேட்பாய்— எ-று.

சூட்சும விளக்கம் :...சண்பகவிலைச் சாற்றினாலே மேற்கண்ட மருந்தை ஒரு சாம நேரமரைக்க வேண்டும் [76]

வேறு

கோடக சாலையின் சாற்றிற் கூறுவேன்
நாடெலா மறந்திட வரைநீ நன்குற
தாடுறு சாமமுஞ் சாற்று வேனொன்று
ஏடுறு மருந்ததை வழித் தெடுத்திடே

.........

இதில் வேறு அரைப்புக் கூறுகின்றார்.

(இ.ள்.) மேலே சொன்னபடி செண்பகவிலைச் சாற்றினா லரைத்து வைத்திருக்கின்ற மருந்தைப் பழையபடியும் கோடகசாலைச் சாற்றைவிட்டுப் பிரகாசிக் கும்படியாக 3 மணி நேரம் அரைக்கக் கடவாய். அப்படி யரைத்த பின்பு அந்த மருந்தை வழித்தெடுத்துக் கொள்வாய். எ-று.

சூக்ஷும விளக்கம்:- வெளிப்படை. [77]

வேறு

ஓடானதி னுட்பொதிவாய் மருந்தை
நாடாகவே சீலையு மேழிடு வாய்
போடாய்முழ மொன்று புடமெனவே
வாடா கவே வைத்தெரி யேயிடுவாய.

......

இதில் முன்னரைத்த மருந்தைப் புடம்போடு மார்க்கஞ் சொல்கின்றார்.

(இ-ள்) முன்பாட்டிற் சொன்னபடி வழித்தெடுத்த மருந்தை ஓட்டினுள்ளே வைத்து மேலோடு மூடி நினை

வோடு ஏழு சீலைமண் செய்து கவசம் பண்ணிக் கொண்டவுடனே ஒருமுழ அளவான புடம் ஒன்று தயாரித்து அதன் மத்தியில் மேற்கண்ட, கவசத்தை வைத்து வாட்டமற நெருப்பை யிடக்கடவாய். எ—று.

சூக்ஷும விளக்கம்:- இதில் சீலைமண் செய்வதற்கு விபரஞ் சொல்லாவிடினும் முந்தின கிரமங்களின்படியே கனிமண் சீலைசெய்து கொள்ள வேண்டியது. [78]

இதுவுமது

எரி யாற்றிப்பின் னேயெடு நீமருந்தைக்
குறி யாவன முங்கவ் கூறிடுவேன்
அரி யோன்றனை யன்புட னேதுதிநீ
பரி வாகவே பண்ணிடு வாய்பதனம.

……

இதில் செந்தூரத்தின் முடிவு கூறுகின்றார்.

(இ-ள்) முன் சொன்னபடி போட்டு நெருப்பிட்ட புடத்தை எரிந்தடங்கினபின் நெருப்பை ஆற்றி அதன் பிறகு எடுத்துக் கவசத்தைப் பிரித்துப் பார்க்கக்கடவாய். அப்படிப் பார்த்தால் மேற்படி மருந்தானது நல்ல சிவந்த வர்ணமாகிய செந்தூரமாகி யிருக்கும். அந்தச் செந்தூரத்தை எல்லாம் வல்ல கடவுளை மனதிற் பிரியத்தோடு தியானித்து அன்பாகப் பத்திரப்படுத்தக் கடவாய். எ-று.

சூக்ஷும விளக்கம்:- கடவுள் கிருபையின்றி எக்காரியமும் கைகூடாததாகையால் இம்மருந்து முடிந்தவுடன் கடவுளைத் தியானிக்கும்படி சொன்னார்.

வேறு செய்யுள்

தாம்பிரந் தன்னிலே தாக்கு வாயிதை
தூம்புர மாகவே நூற்றொன் றாகவே



காம்புறு களிம்பெலாங் கழன்று போகிடும்
ஆம்புறு வயதது மறைவ னேழென

……

இதுமுதல் மேற்படி செந்தூரத்தின் வேதை சொல்கின்றார்.

(இ-ள்) மேற்சொல்லிய இந்தச் செந்தூரத்தை தாம்பிரமென்ற லோகத்திலே நூற்றிற்கொன்று கொடுத்தூத அந்தத் தாம்பிரத்திலுள்ள அழுக்கு முதலியவைகளெல்லா நீங்கிப்போகும். இப்படியான தாம்பிரத்திற்குத் தங்கமாற்று ஏழாகும். எ-று.

சூக்ஷும விளக்கம்:- வெளிப்படை. (80)

இதுவுமது

ஏழென வறைந்திடு மெழில் மருந்ததை
வேழென வெள்ளிபா லீய வின்ளுவேன்
ஆழென வைம்பதி லென்ற தன்புடன்
கோழெனக் கொடுத்திடக் கொதித் துழன்றிடும்.

……

இதில் வேறு வேதை சொல்கின்றார்.

(இ-ள்.) முன் பாட்டிற் குறித்தபடி தாம்பிரத்தை ஏழுமாற்றாக்கிய இந்தச் செந்தூரத்தை அழகு பொருந்திய வெள்ளியில் ஐம்பதிற்கொன்று பிரியத்தோடு கொடுத்தூத அந்த வெள்ளியானது இளகிக் கொதித்துப் பொங்கும். எ.று.

சூக்ஷும விளக்கம்:- வெளிப்படை. [81]

இதுவுமது

ஆணியு மெட்டரை யெனவே யாகிடும்
பேணிடு மாந்தரே பெருமை தன்னையே

சேணுறுங் கிரியெனத் திகழுஞ் செம்பொனே
ஆணுவ மனத்தினி லணுவும் வைத்திடாய்.

......

இதுவுமது

(இ-ள்) முந்தின பாட்டிற் குறித்தபடி யுருகிய வெள்ளியானது எட்டரை மாற்றுள்ள தங்கமாகி விடும். மனிதர்களே! இந்தப்பெருமையான முறையைப் பேணிக் கொள்ளக் கடவீர்களாக. இதனாலே உங்கள் இல்லங் களிலெல்லாம் தூரத்திலேயுள்ள மகாமேருகிரியைப் போல பொன்னானது திரளும். இந்த முறைக்குக் கிடைத்து விட்டதென எள்ளத்தனையும் மனதில் அகங்காரங் கொள்ளாதீர்கள். எ.று.

சூக்ஷ்ம விளக்கம்:— தூரத்திலுள்ள கிரியென்றதனாலே மகாமேருவென நிச்சயிக்கப்பட்டது. மிகுதி பற்றி மேருவைப் போற்குவியுமென்றார். (82)

இதுவுமது

விண்டது மன்றியே மீதி லோகத்திற்
பண்டுபோற் சேர்த்திடப் பாரின் மாந்தரே
இன்றிதின் வேதைவே றியற்று வேனினி
மண்டலத் துற்றிடு மாந்தர் கேண்மினோ.

......

இதுவுமது

(இ-ள்) இன்னும் மேற்படி செந்தூரத்தைஇதுவரை சொல்லி வந்தவைகளைத் தவிர பாக்கியிருக்கின்ற லோகங்களிலெல்லாம் முந்தி தாம்பிரத்திற் சேர்த்தது போல் நூற்றிற்கொன்று கொடுத்தூத அவைகளெல்லாம் மேற்படி தாம்பிரமானது எவ்வாறாகியதோ அவ்வாறே ஆகும். எ.று.



சூட்சும விளக்கம்:- தாம்பிரமானது இந்த செந்தூரத்தை நூற்றிற்கொன்று கொடுத்தூத ஏழு மாற்றுள்ள தங்கமாகுமென்று சொல்லியிருப்பதால் மற்ற லோகங்களிலும் அவ்வாறே நூற்றிற்கொன்று கொடுத்தூதினால் அந்த லோகங்களும் ஏழரை மாற்றுள்ள தங்கமாகுமென வறிக. [83]

இதுவுமது

கன்னியர் கலந்ததிற் கண்கள் சேப்பியே
சன்னியின் வகைதனக் கீயச் சாற்றுவேன்
இன்னிய லிஞ்சிச்சாற் றினி லரைப்பணம்
கொன்னிய லாகவே கொடுக்க வோடுமே.

......

இதுமுதல் மெற்படி செந்தூரத்தின் வைத்தியஞ் சொல்கின்றார்.

(இ-ள்) ஸ்திரிகளுடைய சேர்க்கையினாலே கண்கள் சிவந்து உண்டாகிய சன்னிவகைகளுக்கு இந்தச் செந்தூரத்தை உபயோகிக்கும் படியான மார்க்கத்தைச் சொல்வேன் கேட்பாயாக. இந்தச் செந்தூரத்தில் அரைப்பணவெடையெடுத்து இஞ்சிச்சாற்றிற் குழைத்து கொடுத்தால் மேற்கண்ட சன்னி வகைகளெல்லாம் நீங்கி ஓடிப்போகும். எ-று.

சூக்ஷ்ம விளக்கம்;—வெளிப்படை. [74]

வேறு செய்யுள்

குல குன்ம வகைக்கிது கொள்கையுடன்
தல மீதுறு சாரணைச் சாறதனில்
குல மாமுனங் கூறிய நிறைகொடுக்கின்
வலை கரண்முயல் போலு மகன்றிடுமே.

......

இதுவுமது

[இ-ள்] கூட்டமாகிய குன்ம வகைகளுக் கெல்லாம் இந்த செந்தூரத்தை முந்திச் சொல்லியபடியே அரைப் பணவெடை யெடுத்து பூமியிற் பொருந்தியதான சாரணைச் சாற்றிற் குழைத்துக் கொடுக்க அந்தக் குன்மங்களெல்லாம் வலையைக் கண்ட முயலைப்போல நீங்கி ஓடிவிடும். எ.று.

சூட்சும விளக்கம்:- வெளிப்படை. [85

இதுவுமது

நீரா னது நிந்தையுடன் பொழிவில்
ஆரா கவா வாரையின் சாறதில்
ஈரா கவே யிய்ந்திட நீரகன்று
துாரா கத் துலங்கிடுந் தேகமதே.

இதுவுமது

(இ-ள்) நீரானது அதிகரித்துச் சொரியும்படியாகிய நீர் வியாதியுண்டானால் இந்த மருந்தைப் பொருத்தத் தோடு ஆவரையின் சாற்றிலே நேயமாகக் கலந்து கொடுக்க மேற்கண்ட வியாதியானது நீங்கி தேகமானது நல்ல ரூபத்தோடு பிரகாசிக்கும் எ—று.

சூட்சும விளக்கம்:- இதில் மருந்து இவ்வளவெனச் சொல்லாவிடினும் முந்தின கிரமங்களின்படி 244 கிராம் எடுத்து உபயோகிக்க வேண்டியது. (86)

பள்ளுச்சந்த விருத்தம்

மேக வகைக்கு மருந்து தனையே
விள்வே னாவினெய் தன்னிலே
விக முடனே திரியின் பொழுது
விழுங்கு வாயெங்கு மேனியெலாம்



மாக மதியும் போலு மியங்கி
வடிவு டன்மிகக் கெடியுறும்
மோக முடனே நாக ரீக
முற்றிடு மேவலுப் பெற்றிடு வாய்

......

இதுவுமது

[இ-ள்] மேகமென்று சொல்லப்பட்ட வியாதிகளுக்கு மேற்கண்ட செந்தூரத்தைப் பசுவினெய்யிலே கலந்து தகுதியோடு மூன்றுநாள் சாப்பிடக்கடவாய். அப்படிச் சாப்பிட்டால் அந்த வியாதியானது வெகு சீக்கிரத்தில் நீங்கித் தேகமெல்லாம் ஆகாயத்திற்பொருந்திய சந்திரனைப்போல விளங்கி நல்ல அழகோடு பிரகாசிக்கும். இன்னும் உடம்பானது நல்ல நிலைமையை யடையும். நீ மிகவும் வல்லமையை யடைவாய்—எ-று.

சூக்ஷம விளக்கம்:—வெளிப்படை. (87)

இதுவுமது

சூலை வகைக்குச் சொல்லு மருந்தைத்
துரிதமாப்பொடு தலைச் சாற்றிற்
காலை யுழக்கித் தினமொன் றருந்தக்
கட்டுக ளுந்திடுக் கிட்டுட னே
வேலை யுதிக்குங் கதிரோன் றனையே
விரைந்து காணும் பனி போலே
தால முதித்த றனுசா சடத்தைச்
சடுதி யில்விட் டெடுத்திடு மே.

இதுவுமது

(இ-ள்) சூலையென்ற வியாதிக் கூட்டங்களுக்கு மேற்கண்ட செந்தூரமாகிய மருந்தை வேகத்தோடு பொடுதலைச் சாற்றில் கலந்து காலை நேரத்தில் ஒரு நாள் சாப்பிட அந்தச் சூலை கட்டுகளெல்லாம் திடுக்

கிட்டுப் பயந்து கூடிய சீக்கிரத்தில் கீழச் சமுத்திரத் திலே யுதிக்கும்படியான சூரியனைக்கண்ட பனியைப் போல தேகத்தை விட்டு நீங்கி யோடிப்போகும் எ-று.

சூக்ஷும விளக்கம்:—இத்தோடு இந்தச் செந்தூரத் தின் வேதையை முடிக்கின்றார். இனி ஆறுபாட்டு களால் ஞானத்தைப்பற்றிச் சொல்கின்றார். (88)

89 90 91 92 93 94ம் பாட்டுகள்;...இந்த ஆறு பாட்டுகளிலும் ஞான மார்க்கத்தைப்பற்றிச் சொல்கின் றார். நாம் எடுத்துக்கொண்ட விஷயம் வேறாகையால் அப்பாடல்களை யிங்கு சேர்க்கப் படவில்லை. வேண்டி னோர் மூலநூலைப் பார்த்துக்கொள்க.

## லிங்க மெழுகு

### நொண்டிச் சிந்து

வழுத்துவேன் மாந்தர்களே...வலிகடை
வங்கமுன்னோன் றனைவதை சங்கையுடனே
கழறுவேன் பலமதொன்று—நிறையுடன்
கட்டியாக வெடுத்திடு திட்டமுடனே
குவலையத் தினிலுதித்த...வெழிலுறுங்
குறுவிலைச் சாற்றிலே தோய்த்துக் குத்தி
திவளொளிச் சூரியன்முன்—றினமொன்று
செம்மையுடன் வைத்தெடுப்பாய் தன்மையுடனே

---

இதில் இம்முறைக்கரம் சரக்கும் நிறையுஞ் செய் முறையுஞ் சொல்கின்றார்.

(இ-ன்) மனிதர்களே! ஓர் மார்க்கத்தைச் சொல் வேன் கேட்பீர்களாக. வலியென்ற பதத்தின் கடை யெழுத்தையும், வங்கம் என்ற பெயரில் முதலெழுத்தை நீக்கிவிட்டு மீதியையும், சேர்த்தால் எப்பெயரமையுமோ அப்பெயருள்ள சரக்கில் அளவோடு ஒருபலம் கட்டியாக



எடுத்துக் கொள்ளக்கடவாய் அப்படி யெடுத்துக் கொண் டவுடனே அதை இப்பூமியி லுதித்து அழகோடு பிர காசிப்பதாகிய குருமூலியென்ற திருநூற்றுப் பச்சை யிலைச் சாற்றிலே தோய்த்துத் தோய்த்துப் பிரகாசிக் கின்ற ஒளியினையுடைய சூரியனுக்கு முன்பாக ஒருநாள் வரை அழகுடனே வைத்தெடுக்கக் கடவாய் எ-று

சூக்ஷும விளக்கம்: வலியென்ற பெயரின் கடை யெழுத்தாவது [லி] வங்கம் என்ற பெயரில் முதலெ ழுத்தை நீக்கிவிட நின்ற சேஷமாவது [ங்கம்] இதை யும் முன்னெழுத்தையும் சேர்க்க (லிங்கம்) என்றானது இதுவே மேற்குறித்த சரக்காம். இதைக் கட்டியாக வெடு என்றதனால் ஒரே கட்டியா யிருக்கவேண்டு மென் பதாக ஏற்பட்டது. இதைத் திருநூற்றுப் பச்சையிலைச் சாற்றில் தோய்த்துத் தோய்த்து ஒருநாள்வரை வெயி லிற் காயவைத்துக் காயவைத்தெடுத்துக் கொள்ள வேண்டும். [95]

### சந்த விருத்தம்

கலனக்கல கலனத்தொனி கரிபோலெழின் மலராம்
நலமுற்றிடு மிலையானதி னயமாவருஞ் சாற்றில்
பலமுற்றிட வரமிக்கருள் பரமன்றிரு வருளால்
சொலுகின்றமுன் மருந்தானதைத் திறமாயதையுழக்கி

.........

இதில் முன் கட்டியைச் செய்யவேண்டிய வேறு மார்க்கஞ் சொல்கின்றார்.

(இ-ன்) காய்த்த காலத்திற்கு கலகலவெனச் சப்திக் கும்படியானதும், கரியைப்போன்ற அழகு பொருந்திய மலரை யுடையதுமான ஓர் பச்சிலையிலிருந்து நலத் தோடு வரப்பட்ட சாற்றிலே அடியார்களுக்கெல்லாம் தைரியத்தைத் தரும்படியான வரத்தைக் கொடுக்கின்ற கடவுளுடைய கிருபா கடாட்சத்தினாலே இதற்கு முன்

சொல்லிய மருந்தாகிய தனிமுறைச் செந்தூரத்தை பலத்தோடு தோய்த்துக் கலக்கி. எ.று

சூட்சும விளக்கம்:...காய்த்த காலத்திற் கலகல வெனச் சப்திக்கும்படியானதும் கறுப்பு மலரையுடையதுமான ஓர் பச்சிலையாவது [கறுப்பு வட்டக் கிலு கிலுப்பை) இதை முந்தின காண்டங்களில் வருணித்திருக்கின்ற இலட்சணங்களினாலும் காண்க. இந்தக் கறுப்பு வட்டக் கிலுகிலுப்பைச் சாற்றிலேயே முன் தனிமுறைச் செந்தூரத்தைப் போட்டுக் கலக்கிக் கொள்ள வேண்டியது. மற்ற விபரங்களை அடுத்த பாட்டிற் கூறுவரெனவறிக. [99]

கொச்சகக் கலிப்பா

உழக்கிய மருந்துதனி லொளிருமுன் கட்டிதனைக்
கலக்கியே கவசமிடு கதிரவன் றனிலுலர்த்தி
நலத்துடனே மூன்றுதரம் நயமுறு மருந்ததின்மேல்
கலந்துடனே களிச்சீலை கவசமு மேழிடுவாய்.

---

இதில் முன் சாற்றுக் கலவையைப் பின் செய்ய வேண்டிய விதஞ் சொல்கின்றார்.

[இ.ள்] முன்சொன்னபடி கறுப்பு வட்டக் கிலுகிலுப்பைச்சாற்றில் தனி முறைச்செந்தூரம் போட்டுக்கலக்கிய கலவையில்முந்தி திருதூற்றுப் பச்சையிலைச் சாற்றிலே தோய்த்துக் காயவைத் தெடுத்திருக்கின்ற லிங்கக் கட்டியைத் தோய்த்து மூன்றுதரம் வெயிலிலுலர்த்திக் கொள்ளுவாய் அதன் பிற்பாடு மேற்கண்டகட்டியின்மேல் களிமண்ணாலே ஏழுசீலைசெய்து கவசமிடக் கடவாய்— எ.று

சூக்ஷும விளக்கம்: வெளிப்படை. [97]

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

இட்ட மருந்தின் மேற்களியா
லியலபாக் கனக்கப் பூசியதைத்



திட்ட வயத்தின் கம்பிதனைத்
திறக்க வளைத்து மிகக்கொளுத்தி
கட்டை யெரிப்பாய் கனலாகக்
கதுவுந் துணர்கள் கதித்திடவே
கட்டு மயத்தின் கம்பிதனைக்
கையாற் பிடித்துக் கனலிடுவாய்.

இதில் முன் கட்டியைப் பின்செய்யவேண்டிய விதஞ் சொல்கின்றார்.

(இ-ள்) முன் கவசஞ்செய்த மருந்தின்மேலே களி மண்ணைக்கொண்டு கனதியாகப்பூசி அதன்மேல் ஓர் மெல்லிய இருப்புக்கம்பியை நன்றாய் வளைத்து வளைத்துச் சுற்றிக்கட்டிக் கையினாலே பிடித்துக்கொள்ளும்படியாகக் கொஞ்சநீளந் தொங்கவிட்டு அதைக் கையாற் பிடித்துக்கொண்டு நெருப்பைமூட்டி அதில் இந்தக்கட்டி படும்படியாகச் செய்து கொழுந்து விட்டெரியும்படியாக நெருப்பை யெரிக்கக்கடவாய். எ.று

சூக்ஷும விளக்கம்: முதலில் நெருப்பைமூட்டிக் கொழுந்து விட்டெரியும் படியாகச் செய்துகொண்டு அதன்மேல் இரும்புக்கம்பியாற் சுற்றிக் கட்டிக் கைபிடிக்காகக் கொஞ்சநீளம் தொங்கவிட்டு வைத்திருக்கிற லிங்கக்கட்டிக் கவசத்தைக் கையினாலெடுத்துத் தொங்கவிட வேண்டும்.

வேறு செய்யுள்.

கையானதி லேகன லானதுவுந்
தியயாமலே தீண்டிடா வாறதுபோல்
பையாகவே தானெரிப் பாய்கடிகை,
ஐயமுற வறைகுவ னைந்தாமே.

இதில் முன் தொங்கவிட்ட கட்டிக்கு நெருப்பெரிக்கும் விதஞ் சொல்கின்றார்.

[இ-ள்.] முன்பாட்டிற் சொன்னபடி மேற்படி சட்டியைத் தொங்கவிட்டு நெருப்பெரிக்கும்போது அந்த நெருப்பானது கையில் பிடித்திருக்கிற கம்பியில் தாக்கிக் கையில் சுட்டுவிடாதபடி மிகவுஞ் சிறு தீயாக 15 மணி நேரம் எரிக்கக் கடவாய்....எ-று.

சூட்சும விளக்கம் :...கையில் பிடித்திருக்கின்ற கம்பியானது சுடாத விதமாக நெருப்பை அமரிக்கையாக எரிக்கவேண்டும். [99]

எண்சீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

கேளப்பா கடிகை யைந்து மெரிந்தபின்பு
  கெடியாக வாறவிட்டுக் கவசம் வாங்கு
சூளப்பா மருந்ததுவும் வெந்து மூன்று
  துங்கமுடன் குளகுளென்று மெழுகு மாமே
தாளப்பா சதாசிவத்தைப் பூசை செய்து
  தாம்பூரச் செப்பதனிற் பதனம் பண்ணு
ஏளப்பா விதன்வேதை யியற்றொண் ணாது
  இருநான்கு காண்டமது முற்றுந் தானே.

.........

இதில் மருந்தின் முடிவு கூறுகின்றார்.

[இ-ள்.] மகனே! கேட்கக் கடவாய். முந்தின பாட்டிற் குறித்தபடியே ஐந்து சாமமும் எரிந்த பிற்பாடு மருந்தை எடுத்து ஆறினபின் கவசத்தைப் பிரிக்கக் கடவாய். அப்படிப் பிரித்துப் பார்த்தால் அதற்குள்ளிருந்த லிங்கக்கட்டியானது வெந்து கொதித்துப் பொங்கி குளகுளத்து சிரேஷ்டம் பொருந்திய மெழுகாயிருக்கும். அந்த மெழுகையெடுத்துச் சதாசிவனென்ற கடவுளைத் தியானித்துப் பூசனை புரிந்து ஓர் தாம்பிரச் சிமிழில் பதனம் பண்ணக் கடவாய். இந்த லிங்க மெழுகினது வேதையை ஒருவிதத்திற் சொல்லிமுடியாது. இம்மட்டோடு இந்த எட்டாவது காண்டம் முற்றுப்



பெற்றது. [இல்லாவிடில் ஒருவாறு சொல்வேன்....] எ-று.

சூட்சும விளக்கம் :...இந்த லிங்க மெழுகினது வேதையை ஒருவிதத்திற் சொல்லிமுடியாது. இக்காண்டம் இந்த மட்டோடு முடிந்துவிட்டது இல்லாவிட்டால் ஒருவாறு சொல்வேன் என்றதனால் இனி இடமில்லாததினால் வேதை சொல்லப்படவில்லை யென்றும், அடுத்த காண்டத்திற் சொல்வாரென்றும் ஏற்படுகிறது.

எட்டாவது காண்டம் முற்றுப்பெற்றது.

.........

கடவுள் துணை

# இலக்க சௌமிய சாகரம் ஏழாவது எட்டாவது காண்டங்களின் புறநடை.

.........

கனவான்களே !

கடவுள் அருளாலும் பெரியோர்களின் ஆசீர்வாதத்தினாலும் இந்த ஏழாவது, எட்டாவது காண்டங்கள் முடிவு பெற்றன. இவைகளில் எவரும் வியக்கத்தக்க சில அருமை வாய்ந்த முறைகளடங்கி யிருக்கின்றன. அம்முறைகளாவன :...

| | |
|---|---|
| | 6.வது காண்டத்திற் சொன்ன முப்புக் குருவின் தொடர்ச்சி முறை மனோசிலைச் சுண்ணம். |
| ஏழாவது காண்டம் | மிருதார்சிங்கிச் சுண்ணம்<br>கல்நார் பற்பம்<br>துருசுச் செய நீர்<br>நாக செந்தூரம்<br>வங்க செந்தூரம் |
| எட்டாவது காண்டம் | இரச செந்தூரம்<br>ஜாலமை<br>ஜாலமை [வேறு]<br>தனிமுறைச் செந்தூரம்<br>லிங்க மெழுகு |

ஆகிய இவைகளேயாம். இம் முறைகளை முந்தின காண்டங்களிலுள்ள கிரமப்படியே யாவரும் எளிதிலுணர்ந்து கொள்ளும் விதமாக தெள்ளிய வசன நடையில் எழுதுகின்றோம்,



## 6-வது காண்டத்திற் சொன்ன முப்புக்குருவின் தொடர்ச்சிமுறை.

முன் 6 வது காண்டத்தின் ஈற்றில் முடிந்திருக்கின்ற முப்புக்குருவைக் கல்வத்திற் போட்டுத் தகரையிலைச் சாற்றைவிட்டு 6 மணிநேரம் அரைத்து வழித்தெடுத்துப் பில்லைசெய்து ஓட்டில் வைத்து மேலோடுமூடி ஐந்து விரல்கனம் களிமண் சீலைசெய்து காட்டெருவினாலே ஒரு முழப்புடம் போடவேண்டும். புடம் எரிந்தடங்கின பின்னெடுத்துப் பார்க்க அந்த மருந்தானது அகத்தி மலரைப்போன்ற வெள்ளை நிறத்தையுடையதாயிருக்கும். பின்பு அதை யெடுத்துப் பழையபடியுங் கல்வத்திற்போட்டுக் செம்பருத்தியிலைச்சாற்றை விட்டு 6 மணி நேரம் அரைத்து வழித்தெடுத்து ஓட்டில்வைத்து மேலோடுமூடி ஐந்து விரற்கனம் சீலைசெய்து ஒன்றரை முழப்புடம் போட்டெடுத்துக் கொள்ளவேண்டும் இவ்விதமெடுத்த மருந்தைப் பழையபடியுங் கல்வத்திற்போட்டு நன்றாயரைத்துப் பொடித்தெடுத்துப் பத்திரப்படுத்திக் கொள்ளவேண்டும்.

உபயோகம்: இது பெரும்பான்மையும் வாத வகைகளுக்கும் இன்னும் பலவிதமான விஷயங்களுக்கும் ஆகும். இந்த விபரங்களையெல்லாம் உரையில் துலக்கமாக எழுதப்பட்டிருப்பதால் அங்கு பார்த்துணர்ந்து கொள்க.

### மனோசிலைச் சுண்ணம்,

மனோசிலைக்கட்டி 35 கிராம் இதற்குமுன் சொல்லியிருக்கின்ற முப்புக்குரு அரிசியெடை 1 திருநூற்றுப் பச்சை யிலைச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை: திருநூற்றுப்பச்சை யிலைச்சாற்றில் முப்புக்குருவைப் போட்டு நன்றாகக் குழப்பி அதை வழித்து மனோசிலைக் கட்டிக்குப்பூசி அந்தக் கட்டியைக்

கும்பிடு கிளிஞ்சிலினாற் செய்யப்பட்ட மூசையிற்போட்டு மேற் சில்முடி சுண்ணாம்பில்முட்டை வெள்ளைக் கருவைவிட்டு அரைத்து அதனால் மேற்கண்ட மூசைக்கு ஏழு சீலைசெய்து அதன்மேற் களிமண் சீலை ஐந்து விரற்கனஞ் செய்து ஒன்றரை முழப்புடம் போட்டெடுக்க நல்ல வெண்மைநிறம் பொருந்திய சுண்ணமாயிருக்கும். இதையெடுத்துப் பத்திரப்படுத்திக்கொள்ளவேண்டியது.

உபயோகம் இது பெரும்பான்மையும் வாதத்திற்கே யுதவுகின்றது அவ்விபரங்களை யொல்லாம் உரையிற் கண்டுணர்க.

### மிருதார்சிங்கிச் சுண்ணம்

மிருதார்சிங்கி 35 கிராம் இக்காண்டத்தின் முதலிற் சொல்லியிருக்கின்ற முப்புக்குரு அரிசியெடை 1, வெள்ளைச் சாரணைச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை: வெள்ளைச் சாரணைச் சாற்றில் முப்புக்குருவைப் போட்டுக் கலக்கி அந்தக் குழம்பையெடுத்து மிருதார்சிங்கிக்குக் கவசஞ்செய்து நன்றாகக் காயவைத்தெடுத்து அந்தக் கட்டியைக் கும்பிடுகிளிஞ்சில் மூசையிற்போட்டு அந்த மூசைக்கு முன் மனோசிலைச் சுண்ணமுறையிற் சொன்னபடி கவசஞ்செய்து ஒரு முழப் புடம்போட்டெடுக்க நலம் பொருந்திய வெண்மை நிறமான சுண்ணமா யிருக்கும், இதையெடுத்துப் பத்திரப்படுத்திக் கொள்ளவேண்டும்.

உபயோகம்: இது வாதவைத்திய மென்னும் இருவகைகளுக்குமாம். உரையில் தெளிவாக எழுதி யிருக்கின்றபடியால் அங்கு பார்த்துக்கொள்க.

### கல்நார் பற்பம்.

கல்நார் 35 கிராம் இக்காண்டத்தின் முதலிற் சொல்லி யிருக்கின்ற முப்புக்குரு அரிசியெடை 1,குப்பைமேனிச் சாறு செல்லத்தக்க அளவு.



செய்முறை: முப்புக்குருவைக் குப்பைமேனிச் சாற்றிற்போட்டு நன்றாகக் கலக்கி அந்தக் கலவையையெடுத்துக் கல்நார்க் கட்டியிற் பூசிக் கவசஞ்செய்து உலர்த்தி அந்தக் கட்டியைக் கும்பிடு கிளிஞ்சில் மீசையிற்போட்டு மேற்சில்லிட்டு அதன்மேல் களிமண்சீலையால் ஐந்து விரற்கனம் சீலைசெய்து ஒரு முழப்புடம் போட்டெடுக்க நல்ல வெண்மைநிறம் பொருந்திய பற்பமா யிருக்கும் இதை யெடுத்து ஓர் செப்பிலே பத்திரப் படுத்திக் கோள்ளவேண்டும்.

உபயோகம்:...இது வாதவழியில் மிகுந்த பிரயோசனத்தைத் தருவதாகும், அவ்விபரங்களை உரையிற் கண்டுகொள்க.

### துருசுச் செய நீர்

துருசு 488 மி.கி கெந்தகம் 488 மி:கி தாளகம் 4.4கி வீரம் 488மி.கி பூநீறு 488மி.கி சூடன் 488 மி.கி. முப்பூ அரிசி யெடை 1.

செய்முறை:...மேற்கண்ட சரக்குகளையெல்லாம் கல்வத்திற்போட்டு 48 நிமிடம் அரைக்கவேண்டும். அந்தப்படி யரைத்தால் மேற்படி மருந்தானது குழம்பைப் போலாகும். அந்தக் குழம்பையெடுத்துப் பக்குவமாகப் பனியில் 3 மணி நேரம் வைக்கவேண்டும். அப்படி வைத்தால் அம்மருந்தானது ஜெய நீராகிவிடும். அதை யெடுத்துப் பத்திரப்படுத்திக் கொள்ளவேண்டும்.

உபயோகம்: இந்தஜெய நீரினால் அநேக மருந்துகள் முடிகின்றன. அவ்விபரங்களை யுரையிற் காண்க.

### நாக செந்தூரம்

நாகம் 35 கிராம் இதற்கு முன் சொல்லிய துருசுச் செய்நீர் 488 மி.கி எலுமிச்சம் பழச்சாறு செல்லத்தக்க அளவு, பொற்றலைக் கையாந்தகரைச்சாறு செல்லத்தக்க அளவு நாவல் பட்டைச் சாறு.

செய்முறை. மேற்சொல்லிய நாகத்தை ஒருமுசை யிற்போட்டு உலையில்வைத்தூதி அது உருகிவருஞ் சமையத்தில் துருசு ஜெயநீரை அதில் விட்டுவிடவேண் டும் அப்படி விட்டவுடன் நாகமும் துருசு ஜெயநீருஞ் சேர்ந்து நல்ல களங்கமாகும்.

அந்தக் களங்கை யெடுத்துக் கல்வத்திற் போட்டு எலுமிச்சம்பழச் சாற்றைவிட்டு 9 மணிநேரம் அரைத்து அதை வழித்தெடுத்துப் பில்லைசெய்து ஓட்டில் வைத்து மேலோடுமூடி ஐந்து விரற்கனம் களிமண்ணினால் சீலை செய்து காட்டெருவினாலே ஒரு முழப்புடம் போட் டெடுக்க வேண்டும்.

பின்பு அந்த மருந்தைப் பழையபடியுங் கல்வத்திற் போட்டு பொற்றலைக் கையாந்தகரைச் சாற்றைவிட்டு அரைமணி நேரம் அரைத்துப் பில்லை செய்து முன் போல் ஓட்டில் வைத்துக் கவசித்து ஒன்றரை முழப்புடம் போட்டெடுக்க அம்மருந்தானது நல்ல பிரகாசத்தோடு கூடியிருக்கும்.

பின்பு அதைத் திரும்பவும் கல்வத்திற் போட்டு நாவல்பட்டைச் சாற்றை விட்டு 3 மணி நேர மரைத்துப் பில்லை செய்து முந்தின கிரமங்களின்படியே ஓட்டில் வைத்துக் கவசித்து ஒன்றரை முழப்புடம் போட்டு எடுக்க அந்த மருந்தானது முருக்கம் பூப் போன்ற செந்தூரமாகி யிருக்கும். இதை யெடுத்துப் பத்திரப்படுத்திக் கொள்ளவேண்டும்.

உபயோகம்:- இது பெரும்பான்மையும் வாதத் திற்கே உபயோகமாகின்றது. வைத்தியத்திற்கும் மிகவும் பிரயோசனப்படும். அவ்விபரங்களைத் தெரிந்த மகான்களிடம் கேட்டுக்கொள்க.

## வங்க செந்தூரம்

கருவங்கம் 35 கிராம் இக்காண்டத்திற் சொல்லி யிருக்கின்ற துருசுச் செயநீர் 488 மி.கி. திருநீற்றுப் பச்சையிலைச்சாறு, பொற்றலைக் கையாந்தகரைச் சாறு, இவை செல்லத்தக்க அளவு.



செய்முறை:- கருவங்கத்தை ஒரு மூசையுட் போட்டு அந்த மூசையை நெருப்பில் வைத்தூதினால் அந்த வங்கமானது உருகிக்கொதிக்கும். அப்படிக் கொதிக்குஞ் சமயத்தில் துருசுச் செயநீரை யெடுத்து அதில் விடவேண்டும். அப்படி விட்டால் அது களங்க மாகும். அந்தக் களங்கத்தை யெடுத்துக் கல்வத்தி விட்டு திருநீற்றுப் பச்சையிலைச் சாற்றைவிட்டு 6 மணி நேரம் அரைத்து வழித்தெடுத்து ஓட்டில் வைத்து மேலோடு மூடிச் சீலைமண் செய்து ஒரு-முழப் புடம் போட்டெடுக்க நல்ல நிறமுள்ள செந்தூரமாகி யிருக் கும்.

பின்பு அந்த செந்தூரத்தைப் பழையபடியுங் கல்வத்திற் போட்டுப் பொற்றலைக் கையாந்தகரைச் சாற்றை விட்டு முந்தின கிரமத்தின்படியே 6 மணி நேரம் அரைத்து முன் சொன்னபடியே புடம் போட் டெடுக்க நல்ல சிவப்பு நிறம் பொருந்திய செந்தூரமாகி யிருக்கும். இதை யெடுத்துப் பத்திரப்படுத்திக் கொள்ள வேண்டியது.

உபயோகம் :- இது எல்லா லோகங்களையும் பேதிக்கச் செய்யுமெனச் சொல்லப்பட்டிருக்கிறது. அவ் விவரங்களை உரையிற் கண்டு கொள்க.

## இரச செந்தூரம்

இரசம் 105 கிராம் பூக்கொன்றைச்சாறு ஒரு தேங்காய் நீரளவு, இதற்கு முந்தின காண்டத்திற் சொல்லி யிருக்கின்ற துருசுச் செயநீர் 488 மி.கி. பருத்தியிலைச்சாறு, ஓரிலைத் தாமரைச்சாறு, ஆகியவை செல்லத்தக்க அளவு.

செய்யுமுறை:- பூக்கொன்றைச் சாற்றை ஒரு பீங்கான் பாத்திரத்தில் விட்டு அதனோடு துருசுச் செய நீரையிட்டுக் கலந்து சூரியனுக்கு முன்பாக ஒருநாள் வரை வெயிலில் வைக்க வேண்டும். அப்படி வைத்தால் அது மஞ்சள் நிறமாயிருக்கும். இதை யெடுத்துக் கொண்டு இரசத்தை கல்வத்தில் விட்டு இதனோடு மேற்படி பூக்கொன்றைச்சாறு துருசுச் செயநீர் கலவையை விட்டு மேற்படி கலவை செல்லும் வரையிலும் நன்றாயரைக்க வேண்டும். அப்படி யரைக்க இரசமானது மடிந்து வெண்ணெய்போல திரண்டுவரும்.

பின்பு அதை வழித்தெடுத்து ஒரு மூசையிற் போட்டு மேற்சில்மூடி முட்டையோட்டை அதன்வெள்ளைக்கருவிட்டு அரைத்து அதிற் சீலையைத் தோய்த்து அதனால் மேற்படி மூசைக்கு ஏழு சீலைசெய்து ஒன்றரை முழப்புடம் போட்டெடுக்க அம்மருந்தானது மஞ்சணிறமா யிருக்கும், பின் அதைப் பழையபடியுங் கல்வத்தில்போட்டுப் பருத்தி யிலைச்சாற்றைவிட்டு ஒரு சமநேரமரைத்து வழித்தெடுத்து ஓட்டில் வட்டமாக வைத்து மேலோடுமுடி களிமண்ணினால் ஏழுசீலை செய்து ஒரு முழப்புடம் போட்டெடுக்க மேற்படி மருந்தானது சிவந்த நிறத்தோடு பிரகாசித்துக் கொண்டிருக்கும்.

பின்பு அதைப் பழையபடியுங் கல்வத்தில்போட்டு ஓரிலைத் தாமரைச் சாற்றைவிட்டு 3 மணி நேரம் அரைத்து வழித்தெடுத்து ஓட்டிலிட்டு ஏழுசீலைமண் செய்து முந்தின கிரமங்களின்படியே புடம்போட்டெடுக்க முருக்கம்பூப் போன்ற நிறத்தினையுடைய செந்தூரமாகியிருக்கும். இதை யெடுத்துப் பத்திரப் படுத்திக் கொள்ளவேண்டியது.

உபயோகம்:—இது வாதம், வைத்தியமென்னும் இருவகைகளுக்குமாம். அவ்விபரங்களை யுரையிற் காண்க.



## ஜாலமை

பல்லிமுட்டை 10, கருவண்டு 1, வெண்கோழி முட்டை 1, சூடன் 7 கிராம், நான்காவது காண்டத்தில் சொல்லியிருக்கின்ற பாதாள அஞ்சனம் 7 கிராம், நன்னாரி யிலைச்சாறு செல்லத்தக்க அளவு, முதல் கன்றுபோட்ட பசுவின் வெண்ணெய் 4.4 கி, வேம்பின் பிசின் 4.4 கிராம் தாமரைப்பூ செல்லத்தக்க அளவு தலைப் பிள்ளைத் தாய்ச்சியின் முலைப்பால் செல்லத்தக்க அளவு, முதலில் காய்த்த தேங்காயெண்ணெய் செல்லத்தக்க அளவு.

செய்முறை—பல்லிமுட்டை, கருவண்டு, வெண்கோழி முதல்கருமுட்டை ஆகிய மூன்றையும் கல்வத்தில் போட்டுத் தோலோடு நன்றாக அரைத்துக் கொண்டு பின்பு சூடனைப்போட்டு 3 மணி நேரம்அரைக்க வேண்டும். பின்பு பாதாள அஞ்சனத்தைப் போட்டு 3 மணி நேரம், நன்னாரி யிலைச்சாற்றில் 3 மணி நேரம், பசுவின் வெண்ணெயில் 3 மணிநேரம்,வேம்பின் பிசினில் 3 மணி நேரம், தாமரைப்பூவில் 3 மணி நேரம் முலைப்பாலில் 3 மணிநேரம், தேங்கா யெண்ணெயில் 3 மணி நேரமும் அரைத்து வழித்தெடுத்துப் பத்திரப் படுத்திக்கொள்ள வேண்டும்.

உபயோகம்:—இது மறைப்பு முதலியவைகளைச் செய்வதில் மிகவும் சிரேஷ்டம் பொருந்தியது. அவைகளை உரையிற் கண்டுணர்க.

புலிக்கொழுப்பு 4.4 கி. காடைக் கொழுப்பு 4.4 கி, யானைவாற்கண்ணி 4.4 கி, குங்குமம் 4.4 கி வில்வப்பிசின் 4.4 கி, வெள்ளைச் சாம்பிராணி 4.4கி குக்கில் 4.4 கி நான்காவது காண்டத்தில் சொல்லியிருக்கின்ற பாதாள அஞ்சனம் 8,8,

செய்முறை:— இவைகளையெல்லாம் ஒன்றாகக் கல்வத்தில்போட்டு 3 மணி நேரம் நன்றாயரைத்து வழித்தெடுத்து எருமைக்கொம்புச் சிமிழில் பத்திரப் படுத்திக் கொள்ளவேண்டும்.

உபயோகம்...இந்த மையானதுபல ஆச்சரியமான வேலைகளைச் செய்யுமெனச் சொல்லப்பட்டிருக் கின்றது. அவ்விபரங்களை உரையில் கண்டுகொள்க

## தனிமுறைச் செந்தூரம்

துருசு 3.5 கி, காந்தம் 3.5 கி, பூநீறு 7 கிராம், கும்பிடு கிளிஞ்சில் 3.5 கி, கடல்நுரை 7 கி, லிங்கம் 42கி, கெந்தி 42கி, பொன்னிமிளை 10.75 கி, திரு நூற்றுப் பச்சை யிலைச்சாறு, சிவகரந்தை யிலைச் சாறு, வெள்ளைச்சாரணைச்சாறு, செங்கொடிவேலிச் சாறு, செண்பகவிலைச்சாறு, கோடக சாலைச்சாறு ஆகியவை செல்லத்தக்க அளவு.

செய்முறை—துருசு முதல் பொன்னிமிளை ஈறாக வுள்ள சரக்குகளையெல்லாம் கல்வத்தில்போட்டு திரு நூற்றுப் பச்சை யிலைச்சாற்றை விட்டு 3 மணி நேர மரைத்துப் பின்பு அதில் சிவகரந்தைச் சாற்றைவிட்டு நாலரை மணி நேர மரைத்து வழித்தெடுத்துப் பில்லை செய்து ஓட்டில்வைத்து மேலோடுமூடி ஏழுகளிமண் ணைப்பூசி ஒன்றரை முழப்புடம் போட்டெடுக்க அந்த மருந்தானது வெண்மை நிறமாயிருக்கும்.

பின்பு அதை யெடுத்துப் பழையபடியும் கல்வத்தில் போட்டு வெள்ளைச்சாரணைச்சாற்றில் 3 மணிநேர மும், செங்கொடிவேலிச்சாற்றில் 3 மணிநேரமும் அரைத்து வழித்தெடுத்து ஓட்டில்வைத்து மேலோடு மூடி, ஏழு சீலைமண் செய்து ஒரு முழப்புடம் போட் டெடுக்கவேண்டும்!



பின்பு அதைப் பழையபடியும் கல்வத்தில்போட்டுச் செண்பகவிலைச் சாற்றினாலே 3 மணி நேரம், கோடக சாலைச்சாற்றினாலே 3 மணிநேர மரைத்து வழித் தெடுத்து ஓட்டிலிட்டு மேலோடுமூடி, ஏழுசீலைமண் செய்து ஒரு முழப்புடம் போட்டெடுக்க நல்ல சிவந்த வர்ணமுள்ள செந்தூரமாகி யிருக்கும். இதையெடுத்துப் பத்திரப்படுத்திக் கொள்ளவேண்டும்.

உபயோகம்:—இந்தச் செந்தூரமானது வாதம் வைத்திய மென்னும் இருவகைகளுக்குமாம். உரையில் தெளிவாயெழுதி யிருக்கின்ற படியாலங்கு பார்த்துக் கொள்க.

## லிங்க செந்தூரம்

லிங்கக்கட்டி 35கிராம், திருநூற்றுப்பச்சை யிலைச் சாறு செல்லத்தக்க அளவு, இதற்குமுன் சொல்லியிருக் கின்ற தனிமுறைச் செந்தூரம் வேண்டிய அளவு, கருப் பு வட்டக் கிலுகிலுப்பைச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை—மேற்படி லிங்கக்கட்டியைத் திருநூற் றுப் பச்சையிலைச்சாற்றில் தோய்த்துத் தோய்த்து ஒரு நாள்வரை வெயிலிற் காயவைத் தெடுத்துக் கொள்ளவேண்டும். பின்பு தனிமுறைச் செந்தூரத் தைக் கருப்புவட்டக் கிலுகிலுப்பைச்சாற்றில் போட்டுக் கலக்கி அந்தக் கலவையில் நூன் லிங்கக்கட்டி யைத் தோய்த்துத் தோய்த்து மூன்றுதரம் வெயிலுலர்த் திக்கொண்டு அதன்பின் மேற்படி கட்டியின்மேல் களி மண்ணினால் ஏழுசீலைசெய்து கவசமிட்டு அந்தக் கவசத்தின் மேலுங் களிமண்ணைக் கனதியாகப் பூசி அந்தக் கவசத்தின்மேல் ஒரு மெல்லிய இரும்புக்கம்பியை நன்றாக வளைத்துச்சுற்றிக் கையினாலே பிடித்துக் கொள்ளும்படியாகக் கொஞ்சநீளந் தொங்கவிட்டு அதைக் கையினால் பிடித்துக்கொண்டு நெருப்பை மூட்டி அதில் இந்தக் கட்டி படும்படியாகச்செய்து சிறு தீயாக எரிக்கவேண்டும். அப்படியே நெருப்புக்கையிற்

சுடாத விதமாக ஐந்துசாமமெரித்தெடுத்து ஆறினபின் கவசத்தைப் பிரித்துப்பார்க்கத் திவ்யமான மெழுகாகி யிருக்கும். அதையெடுத்துத் தாம்பிரச்சிமிழிற் பத்திரப் படுத்திக் கொள்ளவேண்டும்.

உபயோகம்...இந்த மெழுகினுடைய உபயோகத்தை அளவிட்டுச் சொல்லமுடியாது. அவ்விபரங்களெல்லாம் அடுத்த ஒன்பதாவது காண்டத்திற் சொல்லப்பட்டிருப் பதால் அங்கு பார்த்துத் தெரிந்துகொள்க.

கடவுள் கிருபையாலும் பெரியோர்களின் ஆசீர் வாதத்தினாலும் இந்த ஏழு எட்டாவது காண்டங்களும் வெகு சீக்கிரமாகவே முடிவு பெற்றன. இனிமற்ற இரண்டு காண்டங்களும் வெளிப்படுமாறு கடவுள் பூரண அருளைத் தருவாராக. சுபம்!

ஏழாவது, எட்டாவது காண்டங்களின்
புறநடை முற்றுப் பெற்றது.

192831

LD
N95